Digitization by eGangotri-South Center

உ

சிவமயம்

சித்தாந்த அட்டகம்

திருவாவடுதுறை ஆதீன

சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம்

திருவிடைமருதூர்.

1998

(முதலாண்டு)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மைய வெளியீடு: 6 – 13.

உ

சிவமயம்

எண் = 2865

சித்தாந்த அட்டகம்

உரையாசிரியர்

''சித்தாந்த வித்தியா சாகரம்''
''செந்நெறிச் செல்வர்'', ''மெய்ஞ்ஞான வள்ளல்''

திரு.கு.வைத்தியநாதன்,

இயக்குநர்

திருவாவடுதுறை ஆதீன
சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம்
திருவிடைமருதூர்
1998

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ
சிவமயம்

ஸ்ரீ உமாபதிதேவ நாயனார் துதி

அறுசீர்விருத்தம்

இங்கற்ப முங்குறைவின் றுகமங்கள்
எடுத்துரைசெய் சித்தாந் தத்தைச்
சங்கற்ப நிராகரணம் செயுமுகத்தாற்
சாதித்தோன் தில்லை சார்ந்தே
நங்கர்ப்ப வாசமெலாம் நாசஞ்செய்
நோக்குடையோன் குரவர்ச் செம்மல்
துங்கப்பொற் பதமுதவும் உமாபதிதாள்
சுமந்தின்பம் பொருந்தி வாழ்வாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அருள்திரு உமாபதி சிவாசாரியர்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

– ஸ்ரீ மாதவ சிவஞான முனிவர்

பதிப்பகம்

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி ஆஃப்செட் அச்சகம்,
திருவாவடுதுறை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

குருமுதல்வர்

அருள்திரு நமசிவாய மூர்த்திகள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ
சிவமயம்

முன்னுரை

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள், உமாபதிசிவம் அருளிச் செய்த எட்டுச் சாத்திரங்கள், ''சித்தாந்த அட்டகம்'' என்று அழைக்கப்படுகின்றன. அவை வருமாறு:

1. சிவப்பிரகாசம், 2. திருவருட்பயன், 3. வினா வெண்பா, 4. போற்றிப் பஃறொடை, 5. கொடிக்கவி, 6. நெஞ்சுவிடு தூது, 7. உண்மைநெறி விளக்கம், 8. சங்கற்ப நிராகரணம்.

ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சைவ சித்தாந்த நுண்பொருளை விளக்குகிறது. இந்த எட்டு நூல்களும் சேர்ந்த ஒரு புத்தகமாக இவ் வெளியீடு அமைகிறது.

இந்நூல்களைப் பற்றியும், இவற்றின் நூலாசிரியரின் வரலாறு குறித்தும், இந்தப் பயிற்சி மையத்தின் வெளியீடாகிய ''சைவ சமய வரலாறு'' என்னும் நூலில் கூறப்பட்டுள்ளன.

இந்நூல்களுக்குப் பல உரை நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் இவ்வுரைநூல், இன்றையச் சூழ்நிலையில் உள்ள மாணவர்கள், எளிதில் புரிந்து கொள்ளும் பொருட்டு, எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது. நூலில் உள்ள பாடல்களுக்குப் பொழிப்புரை செய்யப்பட்டுள்ளது. அரும் பதங்கள் சிலவற்றிற்குப் பொருளும் கூறப்பட்டுள்ளன.

''ஒன்றும் போதா நாயேனை உய்யக்கொண்ட நின்கருணை
இன்றே இன்றிப் போய்த்தோதான்? ஏழைபங்கா எம்கோவே,
குன்றே அனைய குற்றங்கள் குணமாம் என்றே நீ கொண்டால்,
என்தான் கெட்டது? இரங்கிடாய், எண்தோள் முக்கண்
எம்மானே'' –(496)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்னும் மணிவாசகப் பெருந்தகையின் மணிவார்த்தைக்கு ஏற்ப, அடியேனின் ''ஞானத்தந்தை'' ஆகிய திருவாவடுதுறை ஆதீனத்தின் இருபத்து மூன்றாவது பட்டத்தில் எழுந்தருளிச் சிவஞானச் செங்கோல் ஓச்சி வரும் குரு மகாசந்நிதானம் **சீர்வளர்சீர் சிவப்பிரகாச பண்டாரச் சந்நிதி அவர்கள்,** உலகியலில் உழன்று கொண்டிருந்த எளியேனையும் பொருட்படுத்தி, இத்தகு சீரிய சிவப்பணியில் ஈடுபடுமாறு செய்தருளிய பெருங்கருணைத் திறத்தை நினைந்து, அவர்கள் பொன்னார் திருவடி மலர்களைப் போற்றி வழிபடுகிறேன்.

மாணவர்கள், சீர் வளர் சீர் குரு மகாசந்நிதானம் அவர்களது அருளாசியோடு இந்நூல்களைக் கற்றுத் தெளிந்து, திருவருள் இன்பத்தை துய்க்குமாறு விழைகிறேன்.

திருவிடைமருதூர்.
28.6.1995

அடியேன்,
கு.வைத்தியநாதன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ
சிவமயம்

நூலடக்கம்

1. சிவப்பிரகாசம்
2. திருவருட்பயன்
3. வினாவெண்பா
4. போற்றிப் பஃறொடை
5. கொடிக்கவி
6. நெஞ்சுவிடு தூது
7. உண்மை நெறி விளக்கம்
8. சங்கற்ப நிராகரணம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

சிவமயம்

1. சிவப்பிரகாசம்

காப்பு

ஒளியான திருமேனி உமிழ்தானம் மிகமேவு
களியார வரும் ஆனை கழல் நாளும் மறவாமல்
அளி ஆளும் மலர்தூவும் அடியார்கள் உளமாற
வெளி ஆகும் வலிதாய வினைகூட நினையாவே.

தெளிவுரை:

ஒளிமிகுந்த திருமேனியில் உள்ள முகத்திலிருந்து பொழிகின்ற மதநீரும் பெருகிவரும் ஆனந்தமும் பொருந்த வழிபடும் அடியவர் முன்பு, எழுந்தருளி வருகின்ற ஆனை முகத்தினை உடைய விநாயகப் பெருமானின் திருவடிகளை, எந்நாளும் மறவாமல், வண்டுகள் ஆளும் மலர்களைத் தூவி வழிபடுகின்ற அடியார்களின் உள்ளம், அஞ்ஞான இருள் நீங்கப் பெற்று ஞானஒளி உடையது ஆகும். ஆகவே கொடிய வினைகள் அவர்களைச் சாரமாட்டா.

யானையின் தலை மட்டுமே விநாயகப் பெருமானுக்குப் பொருத்தப் பட்டுள்ளது. எனவே விநாயகப் பெருமானின் திருமுகத்திலிருந்து பொழிகின்ற இருமதங்களும் ஞானசத்தி கிரியாசத்தி எனக் கொள்ளப் பட்டன. நீர் அருளுக்கு உவமை; எனவே மத நீர் என உரை செய்யப் பட்டது.

முழுமையான வடிவினை உடைய விநாயகப் பெருமானின் கழல் ஆகிய திருவடிகள், பின்பு ஞானசத்தி, கிரியாசத்தியின் வடிவங்கள் ஆயின. ஞானசத்தி ஆன்மாக்களின் ஆணவ மலத்தை நீக்கி, ஞானத்தை வழங்கு கின்றது; கிரியாசத்தி உயிர்களின் வினைகளைப் போக்குகின்றது. வலிதாய வினை என்பது இங்குச் சஞ்சிதம் ஆகாமியம் என்னும் இருவினைகளைக் குறிக்கும்.

சிவப்பிரகாசம் என்னும் இந்நூலினைப் பயில்வதனால் வரும் பயன், மலநீக்கமும் சிவப்பேறும் ஆகும். எனவே அவ்விரு பயன்களும் இடையூறு இன்றி ஆன்மாக்களுக்குச் சித்திக்கும் பொருட்டுக் காத்து அருளும்படி, விநாயகப் பெருமானை வழிபட்டு, இந்தக் காப்பு செய்யப்பட்டது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பொது அதிகாரம்
பாயிரம்
மங்கல வாழ்த்து
கூத்தப் பெருமான்

ஓங்கு ஒளியாய் அருள் ஞான மூர்த்தி ஆகி
உலகம் எலாம் அளித்து அருளும் உமையம்மை காணத்
தேம் கமழும் மலர் இதழி திங்கள் கங்கை
திகழ் அரவம் வளர்சடைமேல் சேர வைத்து
நீங்கல் அரும் பவத்தொடர்ச்சி நீங்க மன்றுள்
நின்று இமையோர் துதிசெய்ய நிருத்தம் செய்யும்
பூங்கமல மலர்த்தாள்கள் சிரத்தின் மேலும்
புந்தியினும் உற வணங்கிப் போற்றல் செய்வாம். 1

தெளிவுரை:

பேரொளிப் பிழம்பாய்த் திருவருளே வடிவு ஆகிய ஞான சொரூபம் ஆகி, உலகத்தை எல்லாம் வழங்கி அருளிய பராசத்தி காணும்படி, மணம் வீசும் விரிந்த கொன்றை மாலையையும் சந்திரனையும் கங்கையையும், விளங்குகின்ற பாம்பினையும் நீண்ட சடையின்மேல் வைத்தருளி,

நீங்குதற்கு அரிய பிறவித் தொடர்ச்சி உயிர்களை விட்டு நீங்கும்படி, திருச்சிற்றம்பலத்துள்ளே நின்று தேவர்கள் வணங்கத் திருநடனம் செய்தருளும் கூத்தப் பெருமானது தாமரை மலர்போன்ற திருவடிகள், எங்கள் சிரத்தின் மேலும் அறிவிலும் பொருந்தும் பொருட்டு போற்றி வழிபடுவோமாக.

பராசத்தியின் வடிவம் ஞானம். அந்த ஞானம் பேரொளியை உடையது. எனவே ''ஓங்கு ஒளியாய்'' என்றார்.

சிவகாமி அம்மை

பரந்த பரா பரை, ஆதி பரனது இச்சை
பரஞானம் கிரியை, பர போக ரூபம்
தருமு கருணை உரு ஆகி, விசுத்தா சுத்தத்
தனுகரண புவன போகங்கள் தாங்க
விரிந்த உபாதானங்கள் மேவி, ஒன்றாய்,
விமலமாய், ஐந்தொழிற்கும் வித்தாய், ஞாலத்து
அரந்தை கெட, மணி மன்றுள் ஆடல் காணும்
அன்னை அருள் பாதமலர் சென்னி வைப்பாம். 2

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

முழுநிறைவு உடைய மேலான பராசத்தி, ஆதிசத்தி ஆகிய திரோதான சத்தியாக நிற்கிறாள். அவளே சிவபெருமானின் இச்சா சத்தி, ஞானசத்தி, கிரியா சத்தியாகவும் நிற்கிறாள். ஆன்மாக்களுக்கு மேலான போகத்தையும் வடிவத்தையும் கொடுத்தருளும் கருணை வடிவாகி சுத்தமாயை அசுத்த மாயை ஆகிய தனு கரண புவன போகங்களைத் தாங்கும் பொருட்டு, விரிந்த முதற் காரணங்கள் ஆகிய விந்து, மோகினி, மான் என்னும் மூன்று மாயைகளையும் பொருந்தி நிற்கிறாள்.

இவ்வாறு பல்வேறு நிலைகளைத் தான் கொண்டு இருந்தாலும் ஒரு பொருளே ஆய், நின்மலமாய், சிவபெருமானது ஐந்தொழில்களுக்கும் தானே காரணமாய் நிற்கிறாள்; நின்று உலகத்தில் உள்ள உயிர்களின் பிறவித் துயர் ஒழியும்படி, பொன்னம்பலத்திலே அம்பலவாணன் செய்யும் திருநடனத்தைக் கண்டு அருள்கிறாள் நம் சிவகாமி அம்மை. அருளே வடிவாகிய அவளது திருவடித் தாமரை மலர்களை நம் தலைமேல் வைத்து வழிபடுவோமாக.

'பரந்த பராபரை' என்பது, பரமேசுவரனைப் போன்று அங்கிங்கு எனாதபடி எங்கும் வியாபித்து நிற்கும் பராசத்தியைக் குறிக்கும். எனவே, சிவ பெருமானுக்கு உள்ள சொரூப இயல்பு பராசத்தியே ஆகும்.

ஆன்மாக்களின் ஆணவமலம் பக்குவமாகும் பொருட்டு ஆன்மாக்களுக்கு போகத்தைத் தருவது ஆதி சத்தி ஆகும். அந்த ஆதி சத்தியே, திரோதான சத்தி எனப்படும். சிவபெருமானின் இச்சா சத்தி என்பது, ஆணவமலத்தைப் பற்றி அறிவையும் செயலையும் இழந்து கிடக்கும் உயிர்களுக்கு, அந்த மலத்தை நீக்கிச் சிவானுபவம் வழங்கும் பொருட்டு, சிவபெருமான் கொண்ட பெருங்கருணையே ஆகும். மலத்தை நீக்கிச் சிவானுபவம் பெறும் பொருட்டு, உயிர்களுக்குச் செய்யவேண்டிய உபாயங்கள் அனைத்தையும் செய்வது ஞானசத்தி ஆகும். கன்மத்துக்கு ஈடாக உயிர்களுக்கு வினைப் பயன்களை ஊட்டும் பொருட்டு, தனுகரண புவன போகங்களை உண்டாக்குவது கிரியாசத்தி ஆகும்.

''பர போக ரூபம்'' என்பது, உயிர்களுக்கு மல பரிபாகம் ஏற்படும் காலத்தில், உயிர்களைப் பேரின்ப வடிவினன் ஆகிய சிவபெருமானுடன், தான் இருப்பதுபோல் பிரிப்பின்றி நிற்கச் செய்யும் திருவருளைக் குறிக்கும்.

விசுத்தம் – மேலான சுத்தம், உபாதானம்–படைப்புக்குக் காரணமாய் இருக்கும் முதற்காரணம். சுத்தமாயா புவனத்தில் உள்ள ஆன்மாக்களுக்குத் தனுகரண புவன போகங்களாக இருப்பது விந்து தத்துவம். சுத்தாசுத்த புவனவாசிகளுக்குரிய தனுவாதிகளுக்குக் காரணமாய் இருப்பது மோகினி எனப்படும்; பிரகிருதி மாயையில் வசிக்கும் சகலர்க்குரிய தனு முதலியவற்றிற்கு காரணமாய் இருப்பது மான் எனப்படும். பின்வே விந்து – சுத்தமாயை; மோகினி – அசுத்தமாயை; மான் – பிரகிருதிமாயை:

திருவருள் ஒன்றே பல்வேறு சத்தி வடிவங்களாக உள்ளது. எனவே சிவ பெருமான் ஒருவனே கடவுள் என்றாற் போன்று, சிவகாமியம்மை ஒருத்தியே திருவருள் ஆவள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விநாயகக் கடவுள்

நலம் தர நூல் இரும் தமிழின் செய்யுள் குற்றம்
நண்ணுமை, இடையூறு நலியாமை கருதி
இலங்கும் இரு குழை அருகு பொருதுவரி சிதறி
இணை வேல்கள் இகழ்ந்த கயற்கண்ணி யொடும் இறைவன்
கலந்து அருள வரும் ஆனை முகத்தான் மும்மைக்
கடம் அருவி எனநிலவும் கணபதியின் அருளால்
அலர்ந்து மது கரமுனிவர் பரவவளர் கமலம்
அனையதிரு அடியிணைகள் நினைதல் செய்வாம். 3

தெளிவுரை:

இந்நூலைக் கற்றுத் தெளிபவர்க்கு எல்லா நன்மைகளையும் வழங்கும்; பெருமைக்குரிய தமிழ் மொழியில் உள்ள செய்யுள் குற்றம் கற்போரை வந்து சேராது; இந்நூலைச் செய்து முடிப்பதற்கு எந்தவித இடையூறும் வந்து சேராது. இத்தகு பயன்களை நினைந்து, விளங்கும் இரு காதுகளில் மகரக்குழை சென்று மோதி, செவ்வரி பரந்து இரண்டு வேல்களைப் பழித்த கயல் போன்ற கண்ணினை உடைய உமையம்மையோடு, பரமேசுரன் கூடி அருள எழுந்தருளியுள்ள ஆனை முகத்தினை உடையவரும், மும்மதங்களும் அருவிபோல் விளங்கப் பெற்ற கணத் தலைவரும் ஆகிய விநாயகப் பெருமானின் திருவருளால் மலர்ந்து வண்டுகள் ஆகிய முனிவர்கள் பரவி வழிபட, வளர்கின்ற தாமரை மலரை ஒத்த திருவடிகள் இரண்டையும் உள்ளத்தில் சிந்திப்போமாக.

'இருந்தமிழின் செய்யுள் குற்றம்' என்பது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் இலக்கணங்களைப் பற்றி வரும் குற்றங்களைக் குறிக்கும்.

முருகக் கடவுள்

வளம் நிலவு குலம் அமரர் அதிபதியாய் நீல
மயில் ஏறி வரும் ஈசன் அருள்ஞான மதலை
அளவில்பல கலை அங்கம் ஆரணங்கள் உணர்ந்த
அகத்தியனுக்கு ஒத்துஉரைக்கும் அண்ணல்விறல் எண்ணுது
உளம் மருவு சூரம் உரம் எனது இடும்பை ஓங்கல்
ஒன்று இரண்டு கூறுபட ஒளிதிகழ்வேல் உகந்த
களபம் மலி குறமகள்தன் மணிமுலைகள் கலந்த
கந்தன் மலர் அடி இணைகள் சிந்தை செய்வாம். 4

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

புதுமைப் பொலிவுடன் விளங்குகின்ற தேவர்கள் கூட்டத்திற்குத் தலைவன் ஆகிய சேனாபதியாய், நீலமயில் வாகனத்தின் மேல் ஏறிவருபவனும். சிவ பெருமான் அருளிய ஞானமே வடிவான குழந்தையும், அளவு இறந்த பல நூல்களையும் ஆறு அங்கங்களையும் நான்கு வேதங்களையும், அறிந்த அகத்திய மாமுனிவருக்கு வேதாகமத்தின் உட்பொருளை, உபதேசித்து அருளும் சற்குருவும் ஆகிய, பிறர் வலியை ஒரு பொருளாக எண்ணாத ஊக்கத்தை உடைய சூரனுடைய மார்பும், எளியேனது பிறவித் துன்பமும், அசுரர்கள் ஒதுங்கிய கிரவுஞ்ச மலையும் ஆகிய இம்மூன்றும், ஒவ்வொன்று இரண்டு கூறு படும்படி, ஒளி விளங்கும் வேலை அருள்கூர்ந்து செலுத்திய, குறமகள் ஆகிய வள்ளியம்மையின் களபச் சாந்து செறிந்த அழகிய தனங்களைக் கூடி அருளிய, முருகக் கடவுளின் செந்தாமரை மலர்போன்ற திருவடிகள் இரண்டனையும் சிந்தையில் கொள்வோமாக.

நீலமயில் – பிரணவ வடிவம் – திருவாசி, ஆறு அங்கங்கள் ஆவன: மந்திரம், வியாகரணம், நிகண்டு; சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம் என்பன ஆகும். முருகப் பெருமான் சிவபெருமானின் குமாரன் என்பதுஉபசாரம்; சிவபெருமானின் குழந்தை வடிவமே முருகப் பெருமான். ''ஈசன் தன் ஆடலால் மதலை ஆயினன்'' என்பது கச்சியப்ப சிவாசாரியர் வாக்கு. சேனாபதி – சேனைகளுக்குத் தலைவன். 'கிரவுஞ்சம்' என்பது, சூரனின் இரண்டாவது தம்பி ஆகிய தாருகாசுரன், அவனது அசுரர் கூட்டத்தோடு ஒதுங்கிய மாயைமலை. விறல் – வலிமை.

சந்தான குரவர் மரபு

தேவர் பிரான் வளர்கயிலைக் காவல் பூண்ட
திரு நந்தி அவர் கணத்தோர் செல்வர் பாரில்
பாவிய சத்திய ஞான தரிசினிகள் அடிசேர்,
பரஞ்சோதி மாமுனிகள் பதியா வெண்ணெய்
மேவிய சீர் மெய்கண்ட திறலார், மாறு
விரவு புகழ் அருணந்தி விறலார் செல்வத்
தாவில் அருள் மறைஞான சம்பந்தர் இவர் இச்
சந்தானத்து எமை ஆளும் தன்மையோரே. 5

தெளிவுரை:

தேவர்களுக்கு கர்த்தா ஆகிய சீகண்ட பரமேசுவரன் எழுந்தருளி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இருக்கின்ற திருக்கயிலாய மலையைக் காவல் செய்கின்ற ஸ்ரீ நந்தி பெருமான் அவர் கூட்டத்தைச் சேர்ந்த மா முனிவர்களுள் ஒப்பற்ற ஞானச் செல்வத்தை உடைய சனற்குமார முனிவர், அவரது திருவடியைப் பெற்றுப் பூமியில் எழுந்தருளியுள்ள சத்தியஞான தரிசினிகள், அவருடைய திருவடியைச் சேர்ந்த பரஞ்சோதி மாமுனிவர், திருவெண்ணெய் நல்லூரே திருப்படை வீடாகக் கொண்டு எழுந்தருளியுள்ள பெரும் ஞான வீரர் ஆகிய மெய்கண்ட தேவ நாயனார், அவரது திருவடியைப் பெற்று ஒழியாப் புகழ் நிறைந்த அருணந்தி தேவ நாயனார், அவரது திருவடியைப் பெற்று மும்மலங்களையும் வென்ற அருட் செல்வர் ஆகிய மறைஞான சம்பந்த நாயனார் இவர்கள் ஏழு பெருமக்களும் இந்தச் சைவசித்தாந்தச் சந்தானத்தை உடையவர்கள் ஆவர்; இவர்கள் எளியேனை அடிமையாக ஏவல் செய்வித்து ஆட்கொள்ளும் முறைமையை உடையவர் ஆவார்.

பிரகிருதி மாயா புவனத்திற்குத் தலைவர் ஆகிய சீகண்ட ருத்திரரையே, ''தேவர் பிரான்'' என்கிறார். இவர் இந்த புவனத்தில் உள்ள அயன், மால் உள்ளிட்ட அனைத்து தேவர்களுக்கும் கர்த்தா ஆவர்; இவரே கயிலாயபதி. மாதேவன் எனப்படுபவர்.

''திருநந்தி'' என்பவர், சிலாத முனிவரின் புதல்வர் ஆவர். இவர் கோடி ஆண்டு கடும் தவம் செய்து, சிவனுக்கு வாகனமாகவும், கயிலை மலை துவாரபாலகராகவும் வரம் பெற்றவர். சந்தான குரவருள் முதல் குரு ஆகவும் சிவபெருமானுக்கு முதல் மாணவர் ஆகவும் சிறப்புப் பெற்றவர்.

''சனற்குமாரர்'' பிரமாவின் மானச புத்திரருள் ஒருவர் ஆவர்; ''சத்திய ஞான தரிசினி'' பரஞ்சோதி முனிவரின் குரு ஆவர். ''பரஞ்சோதி மாமுனிகள்'' திருக்கயிலையிலிருந்து பூமியிலே வந்து, மெய்கண்ட தேவருக்கு ஞான உபதேசம் செய்தருளிய குரு நாதர் ஆவர். இவர்கள் நால்வரும் அகச் சந்தான குரவர்கள் (குருமார்கள்) எனப்படுவர்.

மெய்கண்ட தேவர், அருணந்தி சிவனார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவனார் ஆகிய நால்வரும் புறச்சந்தான குரவர்கள் ஆவர். சிலர், ஆராய்ச்சி என்ற பெயரால், அகச் சந்தான குரு பரம்பரையை ஏற்க மறுக்கிறார்கள். உமாபதி சிவனாரின் சிவப்பிரகாச நூலில் அகச்சந்தான பரம்பரை பிரமாணமாக உள்ளதால், அதனை ஏற்க மறுப்பது முறையன்று. எனவே, அவர் கருத்து பொருந்தாது.

சிலாத முனிவரைச் சில நூல்கள் 'சிலாதர முனிவர்' என்றும் கூறும். திருக்கயிலாய பரம்பரை என்று திருமடத்திற்கு அடைகொடுத்துப் பரவிப் போற்றுவதற்குக் காரணம், இந்த அகச் சந்தான குரு பரம்பரையினைக் கருத்தில் கொண்டே ஆகும். நந்தி மரபில் வந்ததால் இது சயிலாதி மரபு எனப்படுகிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மறைஞானசம்பந்தர் – குருவணக்கம்

பார் திகழ வளர் சாம வேதம் மல்கப்
பராசர மா முனி மரபு பயில ஞானச்
சார்பு தர வந்து அருளி எம்மை ஆண்ட
சைவ சிகா மணி மருதத் தலைவன் அந்தண்
கார் மருவு பொழில் புடைசூழ் மதில்மீதே மதியம்
கடவாமை நெடும் கொடியின் கரம் தகையும் கடந்தைச்
சீர்நிலவு மறைஞான சம்பந்தன் எந்தை
திருவளரும் மலர் அடிகள் சென்னி வைப்பாம். 6

தெளிவுரை:

உலகத்தில் உள்ள அனைத்து ஆன்மாக்களுக்கும் ஞான விளக்கம் உண்டாகும் பொருட்டும், வேதத்தின் உட்பிரிவு ஆகிய சாகைகள் ஆயிரம் உடைய சாமவேதம் பொலிவு பெறும் பொருட்டும், பராசர முனிவரின் கோத்திரம் தழைத்தல் பொருட்டும், ஒன்றுக்கும் பற்றுத எளியேன் போல்வார்க்கு ஞான ஒழுக்கம் உண்டாகும் பொருட்டும், எழுந்தருளி வந்து, எளியேனை அடிமையாக் கொண்டருளிய சித்தாந்த சைவத்தின் ஓர் அபிடேக மாணிக்கம், மருத நகர்த் தலைவர் ஆவர். அழகும் குளிர்ச்சியும் பொருந்தி மேகங்கள் படிகின்ற சோலைப் பக்கங்களிலே சூழ்ந்த மதிலின் மேல், சந்திரன் கடந்து செல்லாதபடி, நெடும் கொடிகள் ஆகிய கைகள் தடுக்கின்ற சிறப்பு விளங்கும் திருப்பெண்ணுகடம் என்னும் திருநகரை உடையவரும், மறைஞான சம்பந்தர் என்னும் திருப்பெயரை உடையவரும் ஆகிய எளியேனின் ஞானத் தந்தையின் அருட் செல்வம் நிறைந்த மலர்போன்ற திருவடிகளைத் தலைமேல் வைத்து வழிபாடு செய்வோமாக.

மறைஞான சம்பந்தர், பராசர முனிவர் கோத்திரத்தில் சேர்ந்தவர்; பராசர முனிவர் வசிட்டருடைய பேரர் (பௌத்திரர்); வேதங்களைத் தொகுத்த வியாசருடைய தந்தையார்; சுக முனிவருடைய பாட்டனர். பராசர முனிவர் குடியில் அவதரித்த சுமார்த்த பிராமணர் ஆகிய மறைஞான சம்பந்தர், சிவாகமங்களைத் தமது குடி சிறக்க உபதேசித்தார் என்று உமாபதி சிவம் கூறுவதால், பண்டைக் காலத்தில் சுமார்த்த பிராமணர்கள் சிவாமங்களைச் சிரமேற்கொண்டு போற்றி வாழ்ந்திருந்தனர் என்பது பெறப்படுகிறது.

சாமவேதம் ஆயிரம் சாகைகளை உடையது என்பதற்குப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பரமபிரமாணமாகச்

''சாகை ஆயிரம் உடையார் சாமமும் ஓதுவது உடையார்''
(2–94–1)

என்னும் சம்பந்தப் பெருமான் அருள்வாக்கு உள்ளது. வடமொழியில் இருக்கும் ரிக், யசுர் சாம அதர்வண வேதங்களில் ஒன்ருகிய சாமவேதம், சிவபெருமாஞல் ஓதப் பெற்றது என்றதால், சிவாகமச் செய்திகளே அவ்வேதங்களில் இருந்திருக்கவேண்டும் என்பது பெறப்படுகிறது.

கருப்பொருள்

புறச் சமயத் தவர்க்கு இருளாய், அகச்சமயத்து ஒளியாய்ப்,
புகல் அளவைக்கு அளவாகிப், பொற்பணிபோல் அபேதப்
பிறப்பு இலதாய், இருள் வெளி போல் பேதமும், சொற் பொருள் போல
பேதாபேதமும் இன்றிப், பெருநூல் சொன்ன
அறத்திறஞல் விளேவதாய், உடல் உயிர் கண் அருக்கன்
அறிவு ஒளி போல், பிறிவு அரும் அத்துவிதம் ஆகும்
சிறப்பினதாய், வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறன், இங்குத் தெரிக்கல் உற்ரும். 7

தெளிவுரை:

புறச்சமயிகள் ஆகியுள்ள உலோகாயதன் முதல் பாஞ்சராத்திரி ஈருகச் சொல்லப்பட்ட சமயிகளுக்குத் தெரியாததாய், உட்சமயமாய் உள்ள சைவம் முதல் வைரவம் ஈருகச் சொல்லப்பட்ட சமயங்கள் ஆறுக்கும் சைவத்தில் பேதமாய் உள்ள சமயிகள் எட்டுப் பேருக்கும் அறியப்படுவதாய், எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படத் தக்க காண்டல் கருதல் உரை என்னும் அளவைப் பிரமாணங்களால் அளவிட்டு அறியப்படுவதாய் உள்ள (சைவசித்தாந்தத்தின் உண்மையை இந்நூலில் விளங்கும்படி கூறுகிறேன்).

பொன், பல அணிகலன்களாய் இருக்கும் தன்மைபோல, பிரமமும் பல ஆன்மாக்களாகத் தோன்றி நிற்கும் – இவ்வாறு அபேதவாதிகள் கூறுவர். இக்கூற்று சைவசித்தாந்த உண்மைக்குப் புறம்பானது.

இருளும் வெளியும் போல இறைவனும் உயிர்களும் வேருய் இருக்கும் – இவ்வாறு பேதவாதிகள் கூறுவர்; இக்கூற்றும் சித்தாந்த சைவத்திற்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உடன்பாடன்று.

சொல்லும் பொருளும் போல, இறைவனும் உயிர்களும் தன்னில் ஒன்றுமாய் இரண்டுமாய் இருக்கும் – இவ்வாறு பேதா பேத வாதிகள் கூறுவர்; இதுவும் சித்தாந்த சைவத்திற்கு முரணான கொள்கை ஆகும்.

அவ்வாறுயின் சைவ சித்தாந்தத்தின் உண்மைதான் யாது என்னும் தடை எழும்; அந்தத் தடைக்கு விடையாக மேலும் கூறுகிறார்;

சிறப்பு நூல் ஆகிய சிவாகமங்கள் சொன்ன சரியை, கிரியை யோகம், ஆகிய அறங்களைக் கடைப்பிடித்து ஒழுகுவதால் விளைகின்ற உடலும் உயிரும் போல் கலப்பால் ஒன்றும் கண்ணும் சூரியனும் போல் பொருளின் தன்மையால் வேறும், ஆன்மபோதமும் கண்ணொளியும் போல உயிர்க்கு உயிராதல் தன்மையால் உடனாகியும் நிற்பது போன்று, இறைவனும் உயிர்களும் பிரித்தற்கு அரிய அத்துவிதமாகும் சிறப்பினை உடையதே சைவ சித்தாந்தத்தின் உண்மை ஆகும். அஃதாவது அஃதே அதன் இயல்பு ஆகும்.

எனவே, வேதங்களின் முடிவு ஆகிய வேதாந்தம் என்னும் உபநிடதங்களின் தெளிவை எடுத்துரைக்கும் சைவ சித்தாந்தத்தின் உண்மையினை இந்நூலில் விளங்கும்படி கூறுகிறேன்.

சிவப்பிரகாசம் என்னும் இந்நூலின் கருப்பொருளாக (நுதலிய பொருள்) இந்தப் பாட்டு அமைந்திருப்பதால், இதன் நுண்பொருளைத் தெளிவாகச் சிந்தித்துப் புரிந்து கொள்வது இன்றியமையாததாகும்.

சமயிகளை இந்நூல், புறச்சமயி, அகச்சமயி என்று இரண்டாக மட்டுமே வகுத்துள்ளது நுணுகி நோக்குதற்குரியது. வேதாந்தத்திற்குச் சைவ சித்தாந்தப் பொருள் கொள்ளாதவன் "புறச்சமயி" என்றும், வேதாந்தத்திற்கு சைவசித்தாந்த பொருள் கொள்பவன் "அகச்சமயி" என்றும் இந்நூலாசிரியர் வகுத்துள்ளார் என்பது நுதலிய பொருளிலிருந்து பெறப்படும். நுதலிய பொருள் என்பது கருதிய பொருள் ஆகும்; அஃதாவது, நூலின் கருப்பொருளைக் குறிக்கும்.

சிவஞான மாபாடியத்துள் சிவஞான சுவாமிகள் இவ்விரு வகை சமயிகளை நான்கு வகையாகப் பகுத்து, புறப்புறச்சமயி, புறச்சமயி, அகப்புறச்சமயி, அகச் சமயி என்று விளக்கம் செய்தருளியுள்ளார்கள். பாடியக்காரரின் கருத்தில் அடிப்படையிலேயே உரைநூல்கள் அமைந்துள்ளன. ஆகவே புறச் சமயத்தார் மூன்று வகைப்படுவர். அந்த மூன்று வகையினர் வருமாறு.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

1. புறப்புறச் சமயத்தார்: உலோகாயதர், மாத்தியமிகர், யோகாசாரர், சௌத்திராந்திகர், வைபாடிகர் என்னும் நால்வகை பௌத்தர்கள், சமணர் (ஆருகதர்) ஆகிய அறுவரும் ஆவர். இவர்கள் வேதங்களையும் ஆகமங்களையும் நிந்திப்பவர்கள்.

2. புறச் சமயத்தார்: தார்க்கிகர், மீமாஞ்சகர், ஏகான்மவாதிகள் (மாயாவாதிகள்) சாங்கியர், யோக மதத்தினர்; பாஞ்சராத்திரிகள் என்னும் அறுவரும் ஆவர். இவர்கள் வேதங்களைப் பொதுவாகக் கொண்டு சிவாகமங்களை நிந்திப்பவர்கள். மீமாஞ்சகர் வேதத்தின் கன்ம காண்டத்தைப் பிரமாணமாகக் கொண்டு ஞான காண்டத்தை இகழ்வர். ஏகான்ம வாதிகள், வேதத்தின் ஞானகாண்டத்தை மட்டும் பிரமாணமாகக் கொண்டு கன்ம காண்டத்தை இகழ்வார்கள்.

3. அகப்புறச் சமயத்தார்: பாசுபதர், மாவிரதர், காபாலர் வாம மதத்தினர், வைரவமதத்தினர், ஐக்கிய வாத சைவர் என்னும் அறுவரும் ஆவர். இவர்கள் வேதம், ஆகமம் இரண்டையும் பொது வகையால் பிரமாணமாகக் கொண்டு, இவற்றின் வேறாகிய பாசுபதம் முதலிய நூல்களைச் சிறப்பு வகையாகக் கொள்வர். ஐக்கியவாத சைவர் மட்டும் வேதம் சிவாகமம் இரண்டையும் சிறப்பு வகையாகக் கொள்ளினும், ஆணவமலம் என்னும் பொருள் ஒன்று உண்டு என்பதை மறுத்து, அதன் உண்மையைச் சாதிக்கும் சிவாகமங்களை இகழ்வர்.

இவ்வாறு இந்த மூவகைச் சமயத்தாரும், வேதங்களையும் சிவாகமங்களையும் முழுமையாக ஏற்காமல் நிந்திப்பதால், இவர்களுக்குச் சைவசித்தாந்தம் கொள்ளும் பதி,பசு,ஆணவ மலம், கன்மமலம், சுத்தமாயை, அசுத்தமாயை என்னும் ஆறு உண்மைப் பொருள்களின் இயல்பைத் தெரிவித்தாலும், உணரமாட்டார்; எனவே, ''புறச்சமயத்தவர்க்கு இருளாய்'' என்றார்.

அகச் சமயத்தார்: பாடாணவாத சைவர், பேதவாத சைவர், சிவ சமவாதசைவர், சிவ சங்கிராந்தவாத சைவர், ஈஸ்வர அவிகார வாதசைவர், சிவாத்துவிதசைவர் எனும் அறுவருமாவர். இவர்கள் சித்தாந்த சைவம் கொள்ளும் மேற்குறிப்பிட்ட ஆறு பொருள்களின் பொது இயல்பை மட்டுமே ஏற்றுக்கொண்டு, அவற்றின் உண்மை இயல்பு பற்றி மாறுபட்ட கொள்கை உடையவர். ஆகலின், சித்தாந்த சைவத்தின் கொள்கையை முழுவதும் ஏற்காதவர் ஆவர்.

அபேதவாதிகள் என்றது மாயாவாதிகளையும் பேதவாதி என்றது மாத்துவரையும், பேதாபேத வாதி என்றது பாஞ்சராத்திரி (வைணவர்)யையும் குறிக்கும்; மாயாவாதியும் ஏகான்ம வாதியும் ஏறத்தாழ ஒரே கொள்கை உடையவரே ஆவர். இவர்கள் புறச் சமயத்தவர் ஆகலின், இவர்கள் கூறும் அத்துவிதக் கொள்கை, சித்தாந்த சைவத்திற்குப் பொருந்துவது இல்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''பெருநூல் சொன்ன அறத்தின் விளைவதாய்'' என்னும் தொடரில் உள்ள ''பெருநூல்'' என்பது, வேதாகமங்களைக் குறிக்கும்; ''அறம்'' என்பது, சரியை, கிரியை, யோகம் என்னும் சைவ ஒழுக்கங்களைக் குறிக்கும்.

''வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்'' என்னும் தொடர், வேதங்களின் உள்ள பூர்வபக்கப் பொருளை நீக்கிச் சித்தாந்தப் பொருள் இஃது என்று தெளித்து எடுத்துரைக்கும் சிவாகமக் கருத்தைக் குறிக்கும். வேதாந்தம் – உப நிடதம். சித்தாந்தம் – முடிந்த பொருள். அஃதாவது உபநிடதங்களின் துணிபு ஆகிய சைவசித்தாந்தம் என்பது இத்தொடர்க்குப் பொருளாகும்.

கேட்போரும் பயனும்

மூவகை ஆர்உயிர் வர்க்கம் மலத்தார் கன்மம்
மூல மலத்தார் மூன்றும் உடையார் அன்றே
தீவகமாம் என உருவாய் வந்து, நாதன்
திரு நோக்கால், பரிசத்தால், திகழும் வாக்கால்,
பாவனையால், மிகு நூலால், யோகப் பண்பால்,
பரவி வரும் அவுத்திரியால், பாச நாசம்
மேவ அருள் உதவும் அவுத்திரி இரண்டு திறனும்;
வியன் கிரியை ஞானம் என விளம்பு மாறே. 8

தெளிவுரை:

நிறைந்த ஆன்ம வர்க்கம் மூன்று வகைப்படும். ஆணவ மலம் ஒன்றினை உடைய விஞ்ஞானகலர், கன்ம மலமும் உடைய பிரளயாகலர், ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலம் உடைய சகலர் எனப்படுவர். அவர்களுக்கு இந்த மலங்கள் எந்த நிலையில் ஏற்பட்டன என்றால், அவை அநாதியே உண்டானவை ஆகும். அவர்களுக்கு இந்த மலங்கள் எப்படி நீங்கும் என்றால், அதற்கு விளக்கம் வருமாறு:

ஏதேனும் ஒருவகைப் பறவைகளை அல்லது மிருகங்களைப் பிடிக்கவேண்டியவர்கள், அதற்கு ஏற்ற பார்வையைக் காட்டி பிடிப்பதுபோல, ஒருமலம் உடைய விஞ்ஞானகலருக்கும், இருமலம் உடைய பிரளயாகலருக்கும், மூன்று மலத்தை உடைய சகலருக்கும் அவரவர், நின்ற நிலைக்குத் தக்க திருமேனியைக் கொண்டு அருள் செய்து, அவரவர்க்குள்ள மலங்கள் நீங்கும்படி இறைவன் செய்தருள்கிறான்.

விஞ்ஞானகலரும் பிரளயாகலரும் இந்த பூத சம்பந்தமாக தேகம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அற்றவர்களாக நிற்பதால், அவர்களை நிராதாரம் ஆகிய திருமேனியைக் கொண்டு இறைவன் அருள்கிறான்; சகலர் பூததேகம் உடையவர் ஆகலின், அவர்களைப் போல மானுடச் சட்டை சாத்தி வந்து அருள்கிறான்.

இவ்வாறு அருளும்போது, சட்சு தீக்கையாலும் பரிச தீக்கையாலும், வாசக தீக்கையாலும், மானத தீக்கையாலும் சாத்திர தீக்கையாலும், யோக தீக்கையாலும் இந்த ஆறு தீக்கைகளையும் அங்கமாகக் கொண்டு வரும் அவுத்திரி தீக்கையாலும் சகலருக்கு மும்மலங்களும் ஒழியும்படி அருளிச் செய்கிறான். அவுத்திரி தீக்கை என்பது, வியப்பு அடையத்தக்க கிரியாவதி ஞானவதி என்று இரு வகைப்படும்.

இந்த நூலைக் கேட்பதற்கு உரிய அதிகாரம் உடையவர் இவர் என்றும் அவர் எய்தும் பயன் இது என்றும் இந்தச் செய்யுளாலும் பின்வரும் இரண்டு செய்யுளாலும் தெரிவிக்கிறார். எனவே, சித்தாந்த சைவம் எனப்படும் சிவாகமம் பயிலும் மாணவர்கள், சிவதீக்கை பெற வேண்டுவது இன்றியமையாதது என்பது இனிதே பெறப்படும்.

விஞ்ஞானகலர், ஆணவமலம் என்னும் ஒரு மலம் உடையவர். விஞ்ஞானத்தாலே கலா பந்தம் அற்றவர் விஞ்ஞானகலர். (விஞ்ஞானம்– மேலான அறிவு உடைமை). இவர்களுள், அநாதியே ஆணவமலம் மட்டும் உடைய விஞ்ஞானகலரும், பிரளயாகலர் சகலரிலிருந்து இடையே மாயா பந்தம் கன்ம பந்தம் முழுவதும் நீங்கி, மலபந்தம் ஒன்றே உடைய விஞ்ஞான கலரும் என இருவகையினர் உளர்.

இவர்களுக்கு உரிய புவனங்கள், சுத்த வித்தைக்கும். அசுத்த மாயைக்கும் இடையே உள்ளன. இவர்களுக்குக் கன்மமும் மாயையும் இல்லை என்றாலும், சுத்த மாயா புவன தனு கரண புவன போகம் உண்டு. இவர்கள் மாயா பந்தத்தில் மயங்காதவர்கள் என்பதால், மாயையும் கன்மமும் இல்லை என்று உபசாரமாகக் கூறப்படுகிறது. இவர்களுக்கு வினை இல்லாமையால், இருவினை–ஒப்பும் இல்லை. இவர்களுக்கு உரிய சத்திநிபாதம், தீவிரம் தீவிரதரம் என்னும் இரண்டும் ஆகும்.

இவர்க்கு ஆகாமிய கன்மம் ஏறாமையால், இவர்கள் எடுத்த ஒரு பிறப்பிலேயே முத்தி அடைவர். சிவபெருமான், இவர்களது அறிவுக்கு அறிவாய், உள் நின்று உணர்த்துவதன் மூலம் இவர்களுக்கு அருளினை வழங்குகிறான்.

பிரளயாகலர், ஆணவமலம் கன்மமலம் என்னும் இருமலம் உடையவர். பிரளயத்திலே கலாதி தத்துவங்கள் நீங்கப்பட்டவர் ஆகலின், பிரளயாகலர் எனப்படுவர். (பிரளயம் என்பது பேரூழிக் காலத்தில் ஏற்படும் ஒடுக்கத்தைக் குறிக்கும்) இவர்கள், அநாதியே மல கன்மங்கள் மட்டும் உடைய பிரளயாகலரும், சகலரிலிருந்து இடையே பரிபக்குவச் சிறப்பு காரணமாக,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மாயா பந்தம் நீங்கி ஏனைய இரண்டு மலங்களும் உடைய பிரளயாகலரும் என இருவகைப்படுவர்.

இவர்களுக்கு உரிய புவனங்கள் அசுத்த மாயை முதல் அராக தத்துவம் ஈறாக உள்ள தத்துவங்கள் ஆகும். இவர்களுக்கு மாயை இல்லை என்று கூறுவதற்குப் பொருள், முக் குணங்களின் மயக்கமும் இன்ப துன்ப மோகங்களும் இல்லை என்பதே ஆகும். இவர்க்கு ஆகாமிய கன்மம் ஏறுவதால், ஒரு சில பிறவிகளில் இவர்கள் முத்தியைப் பெறுவர். சிவபெருமான், மான் மழு நாலு தோள் நீலகண்டம் முக்கண் முதலிய வடிவங்களோடு வெளிப்பட்டு வந்து இவர்க்கு அருள் செய்வான்.

சகலர், ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களையும் உடையவர் (நாம் சகலர் வகை ஆன்மாக்கள்) கலாதியான தத்துவங்களோடு கூடியவர் ஆகலின், சகலர் எனப்படுவர். (கலாதி என்பது கலை முதலிய தத்துவங்களைக் குறிக்கும். இவை ஆன்மாவின் அறிவு இச்சை செயல்களை எழுப்பும் தன்மையன) இவர்கள் தேவர், மக்கள் முதலாகப் பல்வேறு உயிரினத்தவர் ஆவர்.

இவர்க்கு உரிய புவனங்கள், மூலப்பகுதி முதல் பிருதிவி தத்துவம் ஈறான தத்துவங்கள் ஆகும். இவர்கள் மும்மல மயக்கத்தோடும் கூடினவர் ஆகலின், எண்ணற்ற காலம் முடிவில்லாத பிறப்புக்களை எடுத்து, மேலும் மேலும் வினைகளைச் செய்து பிறந்தும், இறந்தும் உழல்வர். மலபரிபாகம், இருவினை ஒப்பு சத்திநிபாதம் ஆகியன நிகழ்வதற்கு ஏற்ப, இவர்களுக்குச் சிவபெருமான் குருமூர்த்தமாய் எழுந்தருளி வந்து அருள் பாலிப்பான்.

இருவினை ஒப்பும் மலபரிபாகமும் உண்டாகும் நிலையில் சத்திநிபாதம் விளையும்; அந்நிலையில் பக்குவப்பட்ட ஆன்மாக்களைச் சிவபெருமான் மானைக் காட்டி மானைப் பிடிப்பவர்போல, (தீவகமாம்–உரு) மானுடச் சட்டை தாங்கி எழுந்தருளிவந்து அத்தகு ஆன்மாக்களுக்கு உண்மை ஞானத்தை வழங்கியருளி பாசத்தை நீக்குவான்.

இனி தீக்கை வகைகளைக் குறித்துக் காண்போம்.

1. மீன் தனது முட்டையைப் பார்ப்பதுபோல், குருநாதர் தம் சீடனை அருட் பார்வையால் பார்ப்பது, 'சட்சு தீக்கை' அல்லது 'நயன தீக்கை' எனப்படும்.

2. பறவை தனது முட்டையைச் சிறகினால் தொட்டு அணைப்பதுபோல, குருநாதர் தம் சீடனைத் தமது திருக்கரத்தால் பரிசிப்பது 'பரிச தீக்கை' எனப்படும்.

3. பட்டுப்போட்டு மறைத்துச் சீடனின் வலக்காதில் திருவைந்தெழுத்து மந்திரத்தை உபதேசிப்பது, 'வாசக தீக்கை' எனப்படும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

4. ஆமை கரையில் இருந்தவாறே, தனது முட்டையைத் தனது மனத்தில் பாவிப்பதுபோன்று, குரு நாதர் தம் சீடனை அருள் உருவாய் பாவிப்பது, 'மானத தீக்கை' எனப்படும்.

5. பதி பசு பாசம் என்னும் முப்பொருளின் உண்மையையும் இயல்பையும், ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களும் நீங்கப்பெற்று முத்தி அடையும் முறைமையினையும் சிவாகமங்களின் வழியில் நின்று தெளிவாகப் போதிப்பது 'சாத்திர தீக்கை' எனப்படும்.

6. சிவ யோகத்தைப் பயிலும்படி உபதேசிப்பது 'யோக தீக்கை' எனப்படும். (சிவயோகம் பற்றிய விளக்கத்தை 'உண்மைநெறி விளக்கம்' என்னும் நூலில் காணலாம்).

7. குண்ட மண்டலம் இட்டு, அக்கினி காரியம் செய்து பாசத்தை நீக்குவது 'அவுத்திரி தீக்கை' எனப்படும். (அவுத்திரி என்பது ஓமத்தோடு கூடச் செய்வது ஆகும்).

அவுத்திரி தீக்கை இருவகைப்படும். ஒன்று கிரியாவதி; மற்றொன்று ஞானவதி (வதி – உடையது. கிரியாவதி – கிரியையினை உடையது; ஞானவதி – ஞானத்தை உடையது) கிரியாவதி என்பது, குண்ட மண்டலங்களைப் புறத்தே இட்டு, விதிப்படி புறம்பே ஆகுதி முதலிய கிரியைகளைச் செய்வது ஆகும். (ஆகுதி – ஓமாக்கினியில் நெய் முதலியவற்றைப் பெய்வது) 'ஞானவதி' என்பது குண்ட மண்டலங்களை மனத்தால் கற்பித்து ஆகுதி முதலிய கிரியைகளை அகத்தே செய்வது ஆகும்.

நயன தீக்கை, பரிச தீக்கை, வாசக தீக்கை, மானத தீக்கை, சாத்திர தீக்கை, யோகதீக்கை என்னும் ஆறனையும் தனித்தனியாகச் சுதந்தரமாகவும் செய்யலாம்; அவுத்திரி தீக்கைக்கு அங்கமாகவும் செய்யலாம். (அங்கம்– துணைக்கரணம்) ஆக அவுத்திரி தீக்கையினையும் சேர்த்துத் தீக்கைகள் ஏழுவகைப்படும்.

மேலும் தீக்கை பற்றிய விளக்கம்

விரும்பிய மந்திர அதிகாரம், அர்ச்சனை அதிகாரம்,
மேவும் யோக அதிகாரம், எனச் சமயம், விசேடம்,
வரும் பொருவுஇல் நிருவாணம், மந்திரங்கள், பதங்கள்,
வன்னங்கள், புவனங்கள், தத்துவங்கள், கலைகள்,
இரங்கு அடைவில் தொகை பதினொன்று, எண்பத்து ஒன்று
ஐம்பத்து ஒன்று
இருநூற்றேடு இருபத்து நாலு ஆறுறு ஐந்தில்
பரந்தநெறி அறுவகையும் ஒருவி நினைவு அரிதாம்
பரபதத்துள் உயிர் விரவப் பயிற்றும் அன்றே. 9

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

சிவபுண்ணியத்துக்கு உரியவர்கள், எக்காலத்தும் விரும்பி இச்சிக்கப்படும் மந்திரங்களுக்கு அதிகாரம், அர்ச்சனை முதலிய சிவபூசைக்கு அதிகாரம், பொருந்திய யோகங்களைச் செய்வதற்கு அதிகாரம் என்று சொல்லப்படும் மூன்று உரிமைகளும், 'சமய தீக்கை' 'விசேட தீக்கை' பெற்றவர்களுக்கே உண்டு. அஃதாவது, சமயதீக்கை பெற்றவர்க்கு மட்டுமே, குருநாதர் உபதேசித்த மந்திரத்தை ஜெபிக்கும் உரிமை உண்டு; விசேட தீக்கை பெற்றவர்களுக்கு மட்டுமே சிவபூசை செய்வதற்கும் சிவயோகப் பயிற்சி செய்வதற்கும் உரிமை உண்டு.

ஒப்பற்ற 'நிருவாண தீக்கை' என்பது, மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என்னும் ஆறுக்கும், கூறும் முறையில் தொகைகள் வருமாறு

மந்திரம் – பதினொன்று; பதம் – எண்பத்து ஒன்று; வன்னம்– ஐம்பத்து ஒன்று; புவனம் – இருநூற்று இருபத்து நாலு; தத்துவம் – முப்பத்து ஆறு; கலை ஐந்து ஆக இவ்வாறு விரிந்த அத்துவாக்கள் ஆறு கூறுகளையும் நீக்கி, உள்ளத்தால் நினைத்தற்கு அரிய மேலான சிவபதம் ஆகிய சாயுச்சியத்திலே, ஆன்மாவைப் பொருந்தும்படி செய்விப்பது ஆகும்.

முந்தைய செய்யுளில் கூறிய ஞானவதி, கிரியாவதி என்னும் இரண்டு தீக்கைகளும், தனித்தனி சமய தீக்கை, விசேட தீக்கை, நிருவாண தீக்கை என மூன்று வகைப்படும். ''சமய தீக்கை'' என்பது, மந்ததர பக்குவம் உடையவருக்கு, அதற்கு அநுகூலமாக மந்ததர சத்திநிபாதத்தை அனுசரித்துச் செய்யும் தீக்கை ஆகும். சமய தீக்கை பெற்றவர்கள், குருநாதர் உபதேசித்த மந்திரத்தை எண்ணும் உரிமை உடையவராவர். ''விசேட தீக்கை'' என்பது, மந்த பக்குவம் உடையவருக்கு, அதற்கு இயைந்த முறையில் மந்த சத்திநிபாதத்தை வழங்கச் செய்யும் தீக்கை ஆகும். விசேட தீக்கை பெற்றவர்கள், மந்திரம், சிவபூசை, யோகம் என்னும் மூன்றுக்கும் உரிமை உடையவர் ஆவர். சமய தீக்கை, விசேட தீக்கை, இரண்டும் நிருவாண தீக்கைக்கு அங்கமாகவும் சுதந்தரமாகவும் செய்யப்படும்.

''நிருவாண தீக்கை'' என்பது பாசபந்தம் அனைத்தையும் நீக்கிச் சிவபெருமானுடைய திருவடியை அடையும்படி செய்யும் தீக்கை ஆகும். அதுவும் சத்தியோ நிருவாணம், அசத்தியோ நிருவாணம் என இருவகைப்படும். ''சத்தியோ நிருவாணம்'' என்பது, தீக்கை செய்யப்பெற்ற அப்பொழுதே முத்தியைத் தருவது ஆகும்; ''அசத்தியோ நிருவாணம்'' என்பது, பிராரத்த தேகம் ஒழிந்த பின்னர் முத்தியைத் தருவது ஆகும்; தீவிர பக்குவருக்கு அசத்தியோ நிருவாண தீக்கையும், தீவிரதர பக்குவருக்குப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சத்தியோ நிருவாண தீக்கையும் செய்து வைக்கப்படும்.

நிருவாண தீக்கை, மாணவனுடைய பக்குவத்திற்கு ஏற்ப, ஞானவதியாகவும் கிரியாவதியாகவும் செய்யப்படும். இந்தத் தீக்கையால், குருநாதர் அத்துவசுத்தி செய்தருளி, சீடனது மலத்தை நீக்கி ஞானத்தை வழங்கிப் பிறவியை ஒழிப்பார். "அத்துவ சுத்தி" என்பது, ஆறு அத்துவாக்களிலும் சஞ்சிதமாய் இருந்த கன்மங்களை எல்லாம் நசிப்பித்தல் ஆகும். அக்கன்மங்கள் நசியவே, மாயையும் நீங்கும்; அதன் பயனாக ஆணவமலத்தின் மறைப்பும் ஒழியும்.

"அத்துவ சுத்தி" செய்வது எப்படி என்றால், மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என்னும் ஆறுவகை அத்துவாக்களுள், மந்திரம் பதத்திலும், பதம் வன்னத்திலும், வன்னம் புவனத்திலும், புவனம் தத்துவத்திலும், தத்துவம் கலையிலும் அடங்கும்படியாக ஒடுக்கிக், கலையைத் திரோதான சத்தியிலும், திரோதான சத்தியைச் சிவத்திலும் ஒடுக்குவது ஆகும்.

ஆறு அத்துவாக்களுள், மந்திரம், பதம், வன்னம் ஆகிய மூன்றும் சொற்பிரபஞ்சம் எனப்படும்; புவனம், தத்துவம், கலை ஆகிய மூன்றும் பொருட்பிரபஞ்சம் எனப்படும். இவற்றுள் புவனங்கள் தத்துவங்களைப் பற்றி நிற்கும்; தத்துவங்கள் கலைகளைப் பற்றி நிற்கும்; மந்திரங்கள், பதங்கள், வன்னங்கள் என்னும் மூன்றும் புவனங்களில் தோன்றிய சரீரங்களைப் பற்றி நிற்கும்.

மந்திரம் பதம் வன்னம் ஆகிய மூன்றும் சுத்த மாயா காரியம் ஆகலின், சுத்தாத்துவா எனப்படும்; தத்துவம், சுத்தமாயை அசுத்த மாயைகளின் காரியம் ஆகலின் மிச்சிராத்துவா எனப்படும்; புவனம், சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதி மாயைகளின் காரியம் ஆகலின், சுத்தாத்துவா, மிச்சிராத்துவா, அசுத்தாத்துவா எனப்படும். மந்திரம் பதம் முதலிய ஆறும் ஆன்மாக்களுக்குக் கன்மம் ஏறுவதற்கும், கன்மம் நீங்கித் திருவடியை அடைவதற்கும் "வழி" யாக இருப்பதால் "அத்துவா" எனப்படுகிறது. (அத்துவா—வழி) ஆகவே, நிருவாண தீக்கையினால், ஆறு அத்துவாக்களும் நீங்கப் பெற்று, ஆன்மா சிவபெருமானின் திருவடியைச் சென்று அடையும் என்பது உறுதி செய்யப்பெற்றது.

அபரஞான, பரஞானங்களின் விளக்கம்

கிரியை என மருவும் அவை யாவும் ஞானம்
கிடைத்தற்கு நிமித்தம் எனக் கிளக்கும் உண்மைச்
சரியை கிரியாயோகத் தன்மை யோர்க்குச்
சாலோக சாமீப சாரூ பங்கள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மருவியிடும் உயர் ஞானம் இரண்டாம் மாறு
மலம் அகல அகலாத மன்னு போதத்
திருவருள் ஒன்று ஒன்று அதனைத் தெளிய ஓதும்
சிவாகமம் என்று உலகு அறியச் செப்பும் நூலே. 10

தெளிவுரை:

கிரியை எனப்பட்டு, ஆன்மாக்களோடு பொருந்தி இருப்பன அனைத்தும், ஞானம் வருவதற்குக் காரணம் என்று சிவாகமங்கள் பேசுகின்றன. உண்மைச் சரியை கிரியை யோகங்களின் நெறியில் நின்றவர்களுக்கு, முறையே சாலோக சாமீப சாரூப பதங்கள் வந்து சேரும். இவை மூன்றுக்கும் மேலானது ஞானம் ஆகும். இந்த ஞானம் இருவகைப்படும்.

அநாதியே ஆன்மாக்களைப் பந்தித்து, நீங்காதிருக்கும் ஆணவமலம் நீங்குதல் பொருட்டு, ஆன்மாக்களை விட்டுத் தான் ஒருபொழுதும் நீங்காது இருக்கும் நிலையான ஞானம் ஆகிய திருவருள் ஒன்று; மற்றொன்று அந்த ஞானத்தை ஆன்மாக்கள் தெளிந்து பெறுதல் பொருட்டுச் சொல்லப்பட்ட சிவாகமங்கள். இவ்வாறு உயர்ந்தோர் அறியும்படி சிவாகமங்கள் கூறுகின்றன.

சிவபெருமானை வழிபடும் முறைகள் ஐந்து வகைப்படும். அவை வருமாறு.

கன்ம யாகம், தவ யாகம், செப யாகம், தியான யாகம், ஞான யாகம் என்பனவாகும். அவற்றுள் ''கன்ம யாகம்'' என்பது, சிவசிந்தனை முதல் சிவபூசை அக்கினி காரியம் ஈறுகச் செய்யும் செயல்கள் ஆகும். ''தவ யாகம்'' என்பது, சாந்திராயண விரதம் முதலியவற்றால் சரீரத்தை மெலிவித்தலாகும்; ''செப யாகம்'' என்பது, மந்திரங்களை வாசகம், இரகசியம், மானதம் என்னும் முறையில் செபித்தல் ஆகும். ''தியான யாகம்'' என்பது இருதயம் முதலிய இடங்களில் சதாசிவன் முதலிய மூர்த்திகளின் திருமேனிகளைத் தியானித்தல் ஆகும். ''ஞானயாகம்'' என்பது, என்றும் ஆன்மாவைவிட்டுப் பிரிப்பில்லாத திருவருளையே நினைந்து இருத்தல் ஆகும். ''யாகம்'' என்ற சொல்லுக்கு ''வழிபாடு'' என்பது பொருளாகும்.

சரியை முதலியன உபாயம், உண்மை என இருவகைப்படும். இதன் விரிவான விளக்கத்தைச் சிவஞான போதம் எட்டாம் சூத்திரத் தெளிவுரையில் காண்க .

அபர ஞானத்திற்குப் பயன் பதமுத்திகள் ஆகிய சாலோக, சாமீப, சாரூப முத்திகளைப் பெறுதல் ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிவப்பிரகாசச் செய்யுள்கள் 8,9 மற்றும் 10 ஆகிய மூன்றும், சிவதீக்கை பெறுவதன் இன்றியமையாமையையும் அதனுல் பெறப்படும் உயர்ந்த பயனையும் கூறுகின்றன.

முதல் நூல், வழிநூல், சார்பு நூல்

தெரித்தகுரு முதல்வர், உயர் சிவஞான போதம்
செப்பினர்; பின்பு அவர் புதல்வர் சிவஞானசித்தி
விரித்தனர்; மற்று அவர்கள் திருவடிகள் போற்றி
விளம்பிய நூல் அவை இரண்டும் விரும்பி
நோக்கிக்,
கருத்தில் உறை திருவருளும் இறைவன் நூலும்
கலந்து, பொது உண்மை எனக்கருதி யானும்
அருத்தி மிக உரைப்பன்; வளர் விருத்த நூறு
மாசு இல் சிவப்பிரகாசம் ஆகும் அன்றே. 11

தெளிவுரை:

முன்பு கூறிய முதல் குரவர் ஆகிய மெய்கண்ட தேவ நாயனுர், மேலான சிவஞானபோதம் என்னும் நூலை அருளிச் செய்தார். பின்பு அவருடைய மாணவர் ஆகிய அருணந்தி சிவாசாரியார், சிவஞான சித்தியார் என்னும் நூலை, அதன் வழி நூலாக விரித்துக் கூறினுர். அந்த இரு குரவர் பெருமக்களின் திருவடிகளையும் வணங்கி, மேலே சொன்ன இரு நூல்களையும் அன்பொடு ஆராய்ந்து பார்த்து என்னுடைய அறிவில் பொருந்தி இருக்கும் திருவருளையும் சிவாகமங்களின் மெய்ப்பொருளையும் இணைத்துப் ''பொது'' என்றும் ''உண்மை'' என்றும் இரண்டாக வகுத்து, யானும் சிறப்பு மிக்க விருத்தச் செய்யுள் நூற்றினையும் ஆர்வம் மிகுதலாலே சொல்கின்றேன். இந்நூலின் பெயர் ''சிவப்பிரகாசம்'' ஆகும். (அன்று – அசை).

சிவாகமங்களின் சாரம் ஆகிய சிவஞானபோதம் முதல் நூல் ஆகும்; சிவஞான சித்தியார் வழிநூல் ஆகும். சிவப்பிரகாசம் சார்பு நூல் ஆகும்; இதனைப் புடைநூல் என்றும் கூறுவர். '':கருத்தில் உறை திருவருள்'' என்னும் தொடர், அறிவில் பொருந்தி இருக்கும் திருவருள் அனுபவத்தைக் குறிக்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

19

அவை அடக்கம்

தொன்மையவாம் எனும் எவையும் நன்று ஆகா; இன்று
தோன்றிய நூல் எனும் எவையும் தீது ஆகா; துணிந்த
நன்மையினுர் நலம்கொள் மணிபொதியும் அதன் களங்கம்
நவை ஆகாது; என உண்மை நயந்திடுவர் நடுவாம்
தன்மையினுர் பழைமை அழகு ஆராய்ந்து தரிப்பர்;
தவறு நலம் பொருளின்கண் சார்வு ஆராய்ந்து அறிதல்
இன்மையினுர் பலர்புகழில் ஏத்துவர் ஏதிலர் உற்று
இகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர் தமக்கு என ஒன்று இலரே. 12

தெளிவுரை:

பழமையானவை என்று சொல்லப்படும் எல்லா நூல்களும் நல்லன ஆகா; தற்காலத்தில் தோன்றினவை என்று கூறப்படும் எல்லா நூல்களும் தீயன ஆகா; தெளிவான சிந்தனையை உடைய உத்தமர்கள், நல்ல இரத்தினத்தை மூடி இருக்கும் களங்கத்தை, அஃது அதன் களங்கம் என்று விலக்கிவிட்டு அந்த இரத்தினத்தின் உண்மைத் தன்மையை விரும்புவர்; அது போல இந்த நூலில் மிகுந்து இருக்கும் சொற்குற்றம் முதலானவற்றை நீக்கிவிட்டுப், பதி, பசு பாசங்கள் ஆகிய முப்பொருள்களின் உண்மையை மதித்து ஏற்றுக்கொள்வர்.

நேர்மையான இயல்பினை உடையவர்கள், பழமையான சிறப்புகள் அமைந்து இருப்பதை ஆராய்ந்து நோக்கி, எந்த ஒரு பொருளையும் கொள்வர்; அதுபோல, இந்த நூலையும் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் சிறப்புகள் பல அமைந்து இருப்பதைக் கண்டு ஆதரிப்பார்கள்.

எந்த ஒரு பொருளிலும் குற்றமும் இருக்கும், குணமும் இருக்கும் என்பதை ஆராய்ந்து அறியும் திறமை இல்லாத புல்லறிவுடையவர்கள், மற்றவர்கள் புகழ்ந்தால் தாமும் புகழ்வர்; சிலர் சேர்ந்து இகழ்ந்து பேசினுல், தாமும் இகழ்ந்து பேசுவர். எனவே, அவர்கள் தமக்கு என நிலையானதோர் அறிவு இல்லாதவரே ஆவர்.

இந்த இடத்தில்,

''குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல்'' (504)

என்னும் திருக்குறள் சிந்திப்பதற்கு உரியது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பொது அதிகாரம் / முதல் சூத்திரம்

பதி இலக்கணம் -
பதியின் சொரூப இலக்கணம்

பலகலை ஆகமம் வேதம் யாவையினும் கருத்துப்
பதி பசு பாசம் தெரித்தல், பதி பரமே, அதுதான்
நிலவும் அரு உரு இன்றிக், குணம் குறிகள் இன்றி,
நின்மலமாய், ஏகமாய், நித்தம் ஆகி,
அலகில் உயிர்க்கு உணர்வு ஆகி, அசலம் ஆகி,
அகண்டிதம் ஆய், ஆனந்த உருவாய் அன்றிச்
செலவு அரிதாய்ச், செல்கதியாய்ச், சிறிதாகி, பெரிதாய்த்
திகழ்வது தற்சிவம் என்பர், தெளிந்து ளோரே.

தெளிவுரை:

வேதம், ஆகமம், அவற்றின் வழி நூல், சார்பு நூல் ஆகிய எல்லாவற்றிலும் உள்ள கருத்து, இறை உயிர் தளை என்னும் முப்பொருளின் உண்மையையும் இயல்பையும் தெரிவித்தல் ஆகும். அவற்றுள் ''இறை'' என்பது ஏனை இரண்டுக்கும் மேலாய் இருப்பது ஒன்று ஆகும்.

இறைவன், நமது அறிவுக்கு எட்டுகின்ற அருவமும் உருவமும் அல்லாதவனாய் உள்ளான். சத்துவம், இராசதம், தாமசம் என்னும் உயிர்க்குணங்களோ எந்தவித அடையாளங்களோ இல்லாதவன். இறைவனுக்கு ஆணவ மலத் தொடக்கு இல்லை. ஒருவன் என்னும் ஒருவனாய் இருக்கிறான். அவன் என்றும் உள்ளவன்; எனவே அவனுக்கு அழிவு இல்லை. எண்ணில்லாத உயிர்களின் அறிவுக்கு அறிவாயும் சலனம் அற்றவனாயும் இருக்கிறான். இடத்தால் வரையறுக்கப்பட முடியாத வியாபகம் உடையவன். பேரின்ப வடிவினனாய் இருக்கிறான்.

மாறுபட்ட உணர்வுடன் நினைப்பவருக்கு அவன் அரியன்; ஒருநெறிய மனத்துடன் வழிபடுபவர்கள் சென்று அடையும் முத்திப் பெரு நிலையாய் இருப்பவன். அணுவுக்கு அணுவாய் மகத்துக்கு மகத்தாய், அதுவதுவாய் விளங்கி நிற்பவன். இத்தகு இறைவனை மெய்ஞ்ஞானத்தால் தெளிந்தவர்கள் ''சிவம்'' என்று சொல்கிறார்கள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அநாதி முத்த சித்துருவாக நிற்கும் சிவபெருமான் புறப்பொருளை நோக்காது, ஒன்றிலும் தோய்வு இன்றி, தாமே சுயம் பிரகாசமாய் நிற்பவன். இந்நிலையில் அவன் ''சிவம்'' எனப் பெயர் பெறுகிறான். புறப் பொருளை நோக்கிப் படைத்தல் முதலிய ஐந்தொழிலை ஆற்றும் நிலையில் ''பதி'' என்னும் பெயரைப் பெறுகிறான். புறப்பொருள் என்பது மாயையினைக் குறிக்கும்.

பதி–காப்பவன்; பா–காத்தல்; தி – வினைமுதல் பொருள் விகுதி.

இறைவன் சூக்கும சித்து; உயிர் தூல சித்து; இறைவன் பற்றற்றவன்; உயிர் மலப்பற்றுடையது; இறைவன் பிறப்பிறப்பு அற்றவன்; உயிர் பிறப்பிறப்பில் படுவது. உணர்த்த உணர்வது உயிர்; உணர்த்தாமலே உணர்பவன் இறைவன். இறைவன் சுதந்திரம் உடையவன்; உயிர் பரதந்திரம் உடையது. சச்சிதானந்தமாய் விளங்கும் இறைவனது சொரூப இலக்கணம் இவ்வாறு இப் பாடலில் கூறப்படுகிறது.

பதியின் தடத்த இலக்கணம்

நீடு பரா சத்தி நிகழ் இச்சா ஞானம்
நிறை கிரியை தர அதனை நிமலன் மேவி
நாடரிய கருணை திரு உருவம் ஆகி
நவின்று பல கலை விந்து ஆதி
கூடும் ஒளி வளர் குடிலை மாயை மேவிக்
கொடு வினை கொள் தனுகரண புவன போகம்
பீடு பெற நிறுவி அவை ஒடுக்கும் மேனி
பிறங்கிய நிட்கள சகளப் பெற்றி ஆமே.

தெளிவுரை:

நிலைபேறு உடைய மேலான சிவசத்தி, தனது வியாபகத்தில் இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி என்னும் மூன்று ஆற்றல்களாக நிற்கும். நின்மலன் ஆகிய சிவபெருமான் அந்த ஆற்றல்களைப் பொருந்தி, போற்றுதற்கு உரிய திருவருளே திருமேனியாகக் கொண்டு நிற்பன்; அத்தகு திருமேனியோடு நாதம் விந்து முதலிய தத்துவங்கள் வந்து கூடுகின்ற, ஒளி மிகுந்த சுத்த மாயையினைப் பொருந்தி நிற்பன்.

வேதம், ஆகமம், பல்வேறு கலைகள் முதலானவற்றை அருளிச் செய்வன்; அசுத்த மாயை, பிரகிருதி மாயைகளில், கொடிய வினைகளைக்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கொண்டிருக்கும் தனு கரண புவன போகங்களை உயிர்கள் பெறும் பொருட்டு, அவற்றைப் படைத்து நிறுத்துகின்றான்; தனு கரணம் முதலியன தோன்றிய முறையிலேயே அவற்றை ஒடுங்கச் செய்வன். இவ்வாறு அவற்றை ஆக்கி ஒடுக்கும் திருமேனி, மேலாய் விளங்குகின்ற உருவம், அருவுருவம், உருவம் என்னும் தன்மையே ஆகும்.

உயிர்களுக்கு அருளுதல் பொருட்டு, பொதுவகையால் அறிவித்தும் அறிந்தும் நிற்பதாகிய ஞானம் ஒன்றே சிவ சத்தியின் சொரூபம் ஆகும். அதுவே பராசத்தி எனப்படும்.

உயிர்களுக்கு மலபரிபாகம் வருதல் பொருட்டு, அந்தப் பராசத்தி ஐந்தொழில் ஆற்றுகின்றது. அந்நிலையில் சிறப்பு வகையால் அது வியாபரிக்கும்பொழுது, இச்சா ஞானக் கிரியா சத்திகளாக மூவகைப்பட்டு நிற்கிறது. இந்தச் சத்திகளைச் சிவபெருமான் பொருந்தி நிற்கும் நிலையில் நிட்களத் திருமேனி ஆகிய அருவம் உண்டாகிறது; அந்நிலையில் சிவம் அல்லது சத்தர் என்னும் பெயரைப் பெறுகிறான். இதனை இலயசிவம், நிட்களசிவன் என்றும் கூறுவர். நிட்களம் – அருவம். இலயத்தானம் – சிவதத்துவம். "நிறைகிரியை" ஐந்தொழில் ஆற்றும் பொழுது கிரியா சத்தி மற்றிரு சத்திகளைவிட மேம்பட்டு நிற்பதால் நிறை கிரியை எனக் கூறினர்.

சிவபெருமான் ஞானசத்தியையும் கிரியா சத்தியையும் சமமாகப் பொருந்திய நிலையில், நிட்கள சகலத்திருமேனி உண்டாகும். அந்நிலையில் அவன் சதாசிவன் எனப் பெயர் பெறுகிறான். இந்த மூர்த்தியை உத்தியுத்தர், போகசிவன், நிட்களசிவன் என்று கூறுவர். போர்கத்தானம் – சாதாக்கிய தத்துவம். நிட்கள சகளம் – அருவுருவம்.

ஞானசத்தி குறைந்தும் இச்சாசத்தி ஏறியும் இருக்கும் நிலை சகளத்திருமேனி ஆகும். அந்நிலையில் அந்த மூர்த்தி "மகேசுவரன்" என்னும் பெயரைப் பெறுகிறது. இதனை பிரவிருத்தர், அதிகார சிவன், சகளசிவன் என்றும் கூறுவர். அதிகாரதானம் – ஈசர தத்துவம். சகளம் – உருவம்.

சிவம், சதாசிவம், மகேசுவரம் ஆகிய இந்த மூன்று மூர்த்தங்களும் தம்முள் பேதம் இல்லை; ஏற்றத்தாழ்வும் இல்லை. சத்திகளின் தொழில் வேறுபாட்டினால் இப்பேதங்கள் உண்டு என்று உபசாரமாகக் கூறப்படும். உயிர்களின் பற்றும் தன்மை வேறுபாட்டுக்கு ஏற்ப, சத்திகளின் தொழில் வேறுபாடுகள் நிகழ்கின்றன.

அருவுருவத் திருமேனியை உடைய சதாசிவ மூர்த்தி ஐந்து திருமுகங்களை உடையவர்; அவற்றுள் தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்னும் நான்கு திருமுகங்களிலிருந்து நான் மறைகள்ஆகிய வேதங்களையும் ஈசானத் திருமுகத்திலிருந்து காமியம் முதலிய இருபத்தெட்டு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆகமங்களையும் அருளிச் செய்தார்; இந்தவேதாகமங்களிலிருந்து புராணம், கலை முதலியன தோன்றின. இவையே "சொல் பிரபஞ்சம்" எனப்படும்.

சிவபெருமானின் ஞானசத்தி, சுத்தமாயையினைப் பொருந்துவதால் நாதம் தோன்றுகிறது; கிரியாசத்தி சுத்த மாயையினைப் பொருந்துவதால், விந்து தோன்றுகிறது; ஞான சத்தியும் கிரியா சத்தியும் சமமாகச் சுத்தமாயையினைப் பொருந்துவதால், சாதாக்கிய தத்துவம் தோன்றுகிறது; கிரியா சத்தி ஏறி ஞானசத்தி குறைந்து பொருந்துவதால் ஈசுவர தத்துவம் தோன்றுகிறது; ஞானசத்தி ஏறி கிரியாசத்தி குறைந்து பொருந்துவதால் சுத்த வித்தை தோன்றுகிறது; இவையே "பொருட் பிரபஞ்சம்" எனப்படும்.

இந்த தத்துவங்களுள், அதிகார தானம் ஆகிய ஈசுவர தத்துவத்தைப் பொருந்தி நிற்கும் மகேசுவரன், அநந்தேசுவரரை அதிட்டித்து, அவர் வாயிலாக அசுத்த மாயையில் உள்ள தனு கரண புவன போகங்களை, அந்த புவனத்தில் உள்ள உயிர்களது வினைக்கு ஈடாகத் தோற்றுவித்து நிலைபெறச் செய்வர். அநந்தேசுவரர் சீகண்ட ருத்திரரை அதிட்டித்துப் பிரகிருதி மாயையில் உள்ள தனு கரண புவன போகங்களை, அந்த புவனத்தில் வாழும் உயிர்களது வினைக்கு ஈடாகத் தோற்றுவித்து நிலைபெறச் செய்வர்.

சொல் பிரபஞ்சம் பொருள் பிரபஞ்சம் என்னும் பிரபஞ்சம் முழுவதையும் ஒடுக்கும் திருமேனி நிட்களம் எனப்படும்; அவற்றைத் தோற்றும் திருமேனிகள் நிட்கள சகளம், சகளம் எனப்படும். இந்த மூன்று திருமேனிகளும் சிவபெருமானின் தடத்த திருமேனிகள் ஆகும்.

"தடத்தம்" என்பது பிறிதோர் பொருளின் சார்பு பற்றி, இலக்கியப் பொருளில் இருக்கும் இலக்கணம் ஆகும்; அதாவது தடத்தம் என்பது அயல் இடத்தில் இருப்பது ஆகும். "அதிட்டித்தல்" என்பது இருக்கும் இடத்தை நிலைக்களமாகக் கொண்டு செலுத்துவதைக் குறிக்கும்.

சிவபெருமான் உருவம் கொள்வதால் வரும் குற்றங்களை முற்றும் நீக்குதல்

ஈங்கு இது என்றது, கடந்த இயல்பினானும்,
ஈறு முதல் நடு ஒன்றும் இலாமையானும்,
ஓங்கி வளர் ஞானம் மயன் ஆதலானும்,
உண்மை பிறர்க்கு அறிவு அரிய ஒருமையானும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தாங்கு அரிய வெறுப்பிெைடு விருப்பும் எல்லாம்
சார்வு அரிய முதல்வன் ஆதலானும்,
நீங்கல் அரும் உயிர்க்கு உயிராய் நிற்றலானும்,
நிறுத்திடுவன் நினைந்த உரு நிமலன் தானே. 15

தெளிவுரை:

இந்த உலகத்திலே உயிரின் அறிவைக் கொண்டு, சுட்டி அறியப்படும் பொருள் எல்லாம் அசத்துப் பொருள்கள் ஆகும்; எனவே உயிரின் அறிவினுல் சுட்டி அறியப்படும் நிலையைக் கடந்த இயல்பினை உடையவன் இறைவன். உலகில் உள்ள பொருள்கள் எல்லாம் தோன்றி நின்று அழியும் தன்மை உடையன. சிவபெருமான் தோற்றம் ஒடுக்கம் இல்லாதவன்; அதாவது ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ் சோதி. எல்லாவற்றிலும் மேம்பட்டு விளங்கும் ஞானமே வடிவாக இருப்ப ன். எந்த உயிராலும் முழுமையாக அறிய முடியாத அதிசூக்கும சித்துப் பொருளாயிருப்பவன்; எனவே அவன் உண்மை இயல்பை எவரும் மு முமையாக அறிந்து அனுபவிக்க முடியாது.

விருப்பு வெறுப்பு காரணமாக உயிர்களுக்கு நிகழும் சுகதுக்க மோகங்கள் இல்லாதவன். எனவே, ஒப்பற்ற ஒரு தனிப் பொருளாய் இருப்பவன்; எல்லா உயிர்களிடத்தும் நீக்கமற நிறைந்து நிற்கும் பரமான்ம சொரூபியாய் இருப்பவன். உயிர்க்குள்ள இயல்பு ஏதும் இல்லாத இறைவன், சச்சிதானந்த சொரூபியாய் இருப்பதால், தான் நினைந்த வடிவத்தைத் தானே அமைத்து நிறுத்திக் கொள்பவன். அவன் உயிர்களின் பக்குவத்திற்கு ஏற்ப அருளுதல் பொருட்டு வடிவம் கொள்வதாலும், அவ்வாறு அவன் வடிவம் கொள்ளாவிடில் உயிர்கள் அவனை வழிபட்டு உய்யும் வழியை அறியா ஆதலாலும், அவ்வாறு வடிவம் கொள்வதால் அவனுக்கு எந்தப் பயனும் இல்லாததாலும், வடிவம் கொள்வதால் இறைவனுக்கு எந்தக் குறையும் நேராது என்பது கருத்தில் கொள்ளத்தக்கது.

''வெறுப்பிெைடு விருப்பு எல்லாம் சார்வரிய தனி முதல்வன்'' என்பதையே திருவள்ளுவர், ''வேண்டுதல் வேண்டாமை இலான்'' என்று அருளிச்செய்தார்.

பதி உண்மைக்குப் பிரமாணம்

உலகம் எலாம் ஒருவெைடு ஒருத்தி ஒன்று என்று
உளதாகி நின்று அளவில் ஒடுங்கும்; பின்னும்
மலம் அதனுல் உளது ஆகும்; உருவம் மாறி
வருவது போவது செல்வது ஆதலானும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

அலைவு இல் அசேதனம் மாயை ஆதலானும்,
அணுக்கள் உரு அடையும் அறிவு இலாமையானும்,
நிலவு தொழில் மருவி உரு நிற்றலானும்,
நின்று எவையும் அளித்திடுவன் நிமலன் தானே. 16

தெளிவுரை:

உலகம் ஓர் இயல்பு உடையதாய் இல்லாமல், ஆண் வடிவமாகவும், பெண் வடிவமாகவும், சட வடிவமாகவும் தோன்றி நின்று அழிவதைக் காண்கின்ருேம். உயிர்களின் அறிவையும் செயலையும் மறைத்த ஆணவமலம் நீங்காமல் இருப்பதனுலேயே, இவ்வுலகம் மீண்டும் மீண்டும் தோன்றிக் கொண்டிருக்கிறது. அவ்வாறு தோன்றும் பொழுது உயிர்கள் கன்மத்துக்கு ஈடான உடல்கள் உயிர்களுக்கு ஏற்படுகின்றன; அந்த உடல்கள் பூவுலகில் வாழும் உயிர்களுக்கு பூதபரிணாம தூல சரீரமாகத் தோன்றுகின்றன; பின்பு அழிகின்றன; அந்த உயிர்கள் சுவர்க்கத்திற்குச் செல்லும் பொழுது பூதசார தூல சரீரங்களையும், நரகத்திற்குச் செல்லும்பொழுது பூத தூலசரீரங்களையும் எடுக்கின்றன.

மாயை தனக்கு என ஒரு செயல் இல்லாத சடம் ஆகும்; உயிர்கள் தமக்கு உரிய தேகத்தைத் தாமே எடுத்துக் கொள்வதற்கு ஏற்ற சுதந்திர அறிவு உடையன அல்ல. உடல் இன்றி எந்த அறிவும் விளங்காத நிலையில் உயிர்கள் உள்ளன. எனவே, நின்மலன் ஆகிய சிவபெருமான் ஒருவனே நிமித்த காரணனுய் நின்று, உயிர்கள் உய்யும் பொருட்டு மாயையிலிருந்து தனு கரண புவன போகங்களைத் தோற்றுவிக்கிருன். சுதந்திரம் உடைய ஒருவன் இன்றி இவற்றுள் எதுவும் நடைபெருமையினுல், இறைவன் ஒருவன் இன்றியமையாது இருக்க வேண்டும் என்பது பெறப்படும்; இந்தச் செய்யுள் கடவுள் உண்மையை இவ்வாறு நிலை நாட்டுகின்றது.

படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழிலையும் செய்யும் உரிமை சிவபெருமானுக்கே உள்ளது. அதனுல் அவன் விகாரம் அடையான் என்பதை விளக்குகின்றது.

கந்த மலர் அயன் படைக்கும் உலகம் எலாம்;
கண்ணன் அளித்திடும்; அவை எம் கடவுள் தானே
அந்தம் உற அழித்திடுவன்; ஆதலாலே
அயன் அரியும் அவனது உயர் அதிகாரத்து
வந்தமுறை, தன் தொழிலே மன்னுவிப்பன்; எல்லாம்
வருவிப்பன்; விகாரங்கள் மருவான்; வானின்
முந்து இரவி எதிர் முளரி அலர் உறும் ஒன்று; அலர் வான்
முகையாம் ஒன்று; ஒன்று உலரும் முறைமையின் ஆமே. 17

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

இந்த உலகம் முழுவதையும் வாசனை மிகுந்த தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவன் படைப்பன்; இதனைத் திருமால் காப்பன்; எங்கள் சிவபெருமானே இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் இறுதி பெறும்படி அழித்திடுவன். பிரமதேவனும் திருமாலும் சிவபெருமானிடம் அதிகாரத்தைப்பெற்று அந்தத் தொழில்களைச் செய்து வருகின்றனர் என்பது இதனால் பெறப்படும். எனவே, சிவபெருமான் ஒருவனே படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழிலையும் தன்னிடத்து நிகழச் செய்பவன். மூன்று தொழில்களையும் ஒருவனே செய்வதால், சிவபெருமான் விகாரம் அடைவது இல்லை.

இது எதுபோல எனின், வானில் விளங்கும் கதிரவன் சந்நிதியில் ஒரு தாமரை மலரும்; ஒரு தாமரை மலர்வதற்குப் பக்குவமான அரும்பாய் இருக்கும்; ஒரு தாமரை வாடி உலரும்; இந்தவாறே கதிரவன் சந்நிதியில் தாமரை மூவகைத் தொழில்களுக்கு உட்பட்டாலும், கதிரவன் விகாரம் அடையாமல் இருப்பது போலப் பிரபஞ்சம் முழுவதும், சிவசந்நிதியில் முத்தொழிற்படும் பொழுது, சிவபெருமான் நிர்விகாரியாக இருக்கிறான்.

இந்தச் செய்யுளில் சொன்ன முத்தொழில்கள் பிரகிருதி மாயையில் மத்திம சிருட்டியில் நிகழ்வன ஆகும். இது போலவே அசுத்த மாயையில் நிகழ்வன அவாந்தர சிருட்டி எனப்படும்; சுத்தமாயையில் நிகழ்வது மகாசிருட்டி ஆகும். மத்திம சிருட்டி இடையில் நிகழும் படைப்பு. அவாந்திர சிருட்டி நடுவில் உள்ள மாயையில் நிகழ்வது. சுத்தமாயையில் நிகழும் ஐந்தொழிலைப் ''பதி'' தாமே செய்தருள்வர். அசுத்த மாயையில் நிகழும் ஐந்தொழில் தம் கிரியா சத்தியில் அநந்தேசுரரை அதிட்டித்து அவர் வாயிலாகச் செய்வர்; பிரகிருதி மாயையில் நிகழும் முத்தொழிலையும் அந்த அநந்தேசுரர் வாயிலாகச் சீகண்ட உருத்திரரை அதிட்டித்து நின்று செய்வர்.

எல்லாத் தொழில்களையும் சிவபெருமான், சிவசத்தியைக் கொண்டே செய்விக்கிறான். அந்தச் சத்தி செநநி ஆக நின்று பிரமனிடத்து நின்று உற்பத்தியைச் செய்யும்; ரோதயித்திரியாக விட்டுணுவிடத்து நின்று காத்தல் தொழிலைச் செய்யும். ஆரணி என்னும் சத்தி, சங்காரத் தொழிலைச் செய்யும் எனவே, சிவபெருமான் சந்நிதியில் எல்லாத் தொழில்களும் நடைபெறுவதால் அவன் விகாரம் அடைவது இல்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிவபெருமான் ஐந்தொழில் செய்வதற்குக் காரணம்

ஏற்ற இவை அரன் அருளின் திருவிளையாட்டாக
இயம்புவர்கள்; அணுக்கள் இடர்க் கடல்நின்றும் எடுத்தே
ஊற்றம் மிக அருள் புரிதல் ஏதுவாக
உரை செய்வர்; ஒடுக்கம் இளைப்பு ஒளித்தல்; மற்றைத்
தோற்றம் மலபாகம் வர; காத்தல் போகம்
துய்ப்பித்தல்; திரோதாயி நிறுத்தல் ஆகும்;
போற்றல் அரும் அருள் அருளே; அன்றி மற்றுப்
புகன்றவை அருள் ஒழியப் புகழ் ஒண்ணுதே. 18

தெளிவுரை:

சிவபெருமான் ஏற்றுக் கொண்ட இந்தத் தொழில்களை திருவருளின் திருவிளையாட்டாகப் பெரியவர்கள் கூறுவார்கள். உயிர்களைத் துன்பத்திற்குக் காரணமான பிறவிக் கடலிலிருந்து மீளும்படி செய்து, நிலைபேறு உடைய பேரருளை வழங்கும் பொருட்டே இந்த ஐந்தொழில் நடைபெறுகிறது என்றும் சொல்வார்கள்.

இஃது எவ்வாறு என்றுல், பிறப்பு இறப்பில் பட்டு வருந்துகின்ற உயிர்களுக்கு வினைகளால் ஏற்படும் களைப்பு நீங்கும் பொருட்டு அழித்தல் தொழில் நடைபெறுகிறது. உயிர்களின் அறிவையும் செயலையும் மறைத்து நிற்கும் ஆணவமலம் பக்குவப்பட்டு உயிர்கள் மலநீக்கம் பெறுதல் பொருட்டு படைத்தல் தொழில் நடைபெறுகிறது. உயிர்களுக்குள்ள வினைகளைத் தொலைப்பதற்காக வினைப்பயன்களை ஊட்டுதல் பொருட்டு, காத்தல் தொழில் நடைபெறுகிறது. வினைப்பயனைத் துய்க்கும் பொழுது அந்த போகங்களில் உயிர்க்குச் சுவை ஏற்படும்படி செய்தலே மறைத்தல் தொழில் ஆகும். எவராலும் புரிந்து போற்றுதற்கு அரிய திருவருளே அருளல் தொழில் ஆகும். இஃதன்றி, மேலே சொல்லப்பட்ட படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் என்பவைகளும் அருட்செயல்களே என்று கூறப்படுவதன்றி வேறேதும் கூறுவதற்கு இல்லை.

''திருவிளையாடல்'' என்பது, சிறுவர் செய்யும் மண் விளையாட்டு முதலியன போலப் பயன் இல்லாத செயலைக் குறிக்காது. பயனற்ற செயலைச் சிவபெருமான் செய்யமாட்டான். எனவே, இறைவன் ஐந்தொழில் ஆற்றுவதற்கான காரணத்தை இந்தச் செய்யுளில் கூறினுர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இரண்டாம் சூத்திரம்

பசு இலக்கணம்

எண் அரிதாய், நித்தமாய் இருள் மலத்தில் அழுந்தி
இருவினையின் தன்மைகளுக்கு ஈடான யாக்கை
அண்ணல் அருளால் நண்ணி, அவை அவராய் அதனுல்
அலகு இல் நிகழ் போகங்கள் அருந்தும் ஆற்ருல்,
புண்ணிய பாவம் புரிந்து, போக்கு வரவு உடைத்தாய்,
புணரும் இருள் மலபாகம் பொருந்தியக்கால், அருளால்
உள் நிலவும் ஒளி அதனுல் இருள் அகற்றி, பாதம்
உற்றிடும் நல் பசுவர்க்கம் என உரைப்பர், உணர்ந்தோரே.
19

தெளிவுரை:

நன்மையைப் பெறுதற்கு உரிய உயிர் இனத்தின் இயல்பு எத்தகையது என்ருல், அது வருமாறு:

1. எண்ணிக்கையால் அளந்து அறிவதற்கு அரியது;

2. தொன்று தொட்டு என்றும் உள்ளது.

3. ஆணவ மலம் எனப்படும் அக இருளில் அமிழ்ந்து நல்வினை தீவினைகளுக்கு ஏற்ற உடலை இறையருளால் பெறுவது.

4. ஆண், பெண், அலி என்னும் உயர்திணை, அஃறிணைகள் ஆகி, அதன் காரணமாக அதற்கு ஏற்ற உடல்களைக் கொண்டு அளவிட முடியாத போகங்களை அனுபவிக்கும்; அந்த அனுபவம் வாயிலாகவே மீண்டும் மீண்டும் நல்வினை தீவினைகளைச் செய்யும்.

5. அதனுல் சுவர்க்கலோகத்திற்கும் நரக லோகத்திற்கும் போய்ப் போய் வரும்.

6. இருள் போன்ற ஆணவமலம் பரிபாகம் அடைந்த பொழுது, குருவருள் வாய்க்கப் பெற்று, அதனுல் ஆன்மா அறிவின் உள்ளே விளங்கும் ஞான ஒ ளி காரணமாக, அந்த மல மறைப்பு நீங்கப் பெறும்.

7. அந்நிலையில் இறைவன் திருவடி நீழலை அடையும் என்று வேதாகமங்களில் உண்மையை உணர்ந்த பெரியவர்கள் கூறுவர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பாசத் தொடர்பால் ஆன்மா, 'பசு' எனப்பட்டது. பச்—பந்தித்தல்; உ- செயப்படுபொருள் விகுதி, உயிர்க்கு மலபரிபாகம் ஏற்படும்பொழுது, உடம்பைத், தான் என்றும், போகங்களை அனுபவிப்பவன் தானே என்றும் எண்ணும் விபரீத உணர்வு உண்டாகாது. அதனால், யான்— எனது என்னும் செருக்கு அறவே நீங்கும். அவ்வாறு நீங்கி நிற்பதே ஆன்ம பரிபாக குணம் ஆகும். பரிபாகம் என்பது முழுப் பக்குவம். பரி – முழுமையாக; பாகம் - பக்குவம்; ஆக "பரிபாகம் அடைதல்" என்பது ஆன்மா முத்திக்கு உரிய முழுமையான பக்குவத்தைப் பெற்று இருப்பதைக் குறிக்கும். அந்நிலையினை ஆன்மாவிடத்து எதிர் பார்த்திருக்கும் இறைவன், குருவடிவாய் எழுந்தருளி வந்து, சஞ்சித வினையைத் தீக்கையால் நீக்கி, உண்மைப்பொருள் ஆகிய ஐந்தெழுத்தை உபதேசிப்பன். இந்த உபதேசம் ஆன்மா அறிவிலே ஞான ஒளியைத் தோற்றுவிக்கும். அதனால் ஆன்மா ஆணவமல நீக்கம் அறவே பெற்றுத், திருவடி நீழலை அடையும். இதனையே பாச நீக்கமும் சிவப்பேறும் ஆகிய முத்தி நிலை (வீறு பேறு) என்பர்.

பாச இலக்கணம்
ஆணவமும் திரோதாயியும்

ஏகமாய்த் தம் கால எல்லைகளின் மீளும்
எண்ணரிய சத்தியதாய் இருள் ஒளிர இருண்ட
மோகமாய்ச் செம்பில்உறு களிம்பு ஏய்ந்து, நித்த
மூலமலமாய், அறிவு முழுதினையும் மறைக்கும்,
பாகமாம் வகை நின்று திரோதான சத்தி
பண்ணுதலான், மலம் எனவும் பகர்வர்; அது, பரிந்து
நாகம் மா நதி மதியம் பொதி சடையான் அடிகள்
நணுகும் வகை, கருணை மிக நயக்கும் தானே. 20

தெளிவுரை:

ஆணவமலம் பொருளால் ஒன்றாய் உள்ளது; ஆன்மாக்களுக்குப் பக்குவம் ஏற்படுகின்ற தத்தம் காலத்திலே, ஆன்மாவை விட்டு நீங்கும். எண்ணில் அடங்காத ஆற்றல்களை உடையதாய் இருக்கிறது; இருளையும் ஒளி என்று கருதக் கூடிய அளவுக்கு, மிகுந்த பேரிருளாய் நின்று உயிர்க்கு அறியாமையை விளைவிக்கிறது. செம்பில் களிம்பு எப்படித் தொன்று தொட்டுப் பொருந்தி உள்ளதோ, அப்படியே உயிரோடு தொடக்கமில் காலந்தொட்டு, உடனாய் நிற்கும் மூல மலமாய் உள்ளது; உயிர்களின் உண்மை அறிவு ஆகிய வியாபக அறிவு முழுவதையும் விளங்க ஒட்டாமல் மறைத்து நிற்கிறது. ஆணவமலத்தின் இயல்பு இந்நூலில் இவ்வாறு கூறப்படுகிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

திரோதான சத்தி எனப்படும் மறைப்பாற்றல் ஆன்மாக்களோடு நின்று, மேலே சொன்ன ஆணவமலம் பரிபாகம் அடையும்படி, 'உயிர்க்குத் தேவையான உபாயங்களைச் செய்கிறது. எனவே, திரோதான சத்தியைத் திரோதான மலம் என்று உபசாரமாகக் கூறுவார்கள். ஆணவமலம் பரிபாகம் ஆனபிறகு, அந்த திரோதான சத்தி தானே, பாம்பையும் பெரிய கங்கையையும் சந்திரனையும் அணிந்த சடையினை உடைய சிவபெருமானது திருவடிகளை, ஆன்மாக்கள் பொருந்தும்படி இரக்கப்பட்டு ஆன்மாக்கள் மீது மிகுந்த அருளைப் புரியும். அஃதாவது மறைப்பாற்றலே உயிர்க்குப் பக்குவம் வாய்க்கும் பொழுது அருளாற்றலாக மாறும் என்பது கருத்தில் கொள்ளத்தக்கது.

ஆன்மா என்ற சொல்லுக்கு வியாபகம் என்பது பொருளாகும். வியாபகமான ஆன்மாவை அணுத்தன்மைப்படுமாறு செய்வதால் ஆணவமலம் என்னும் பெயரை அது பெற்றது. அணு என்ற சொற்குப் பொருள் சிறுமை என்பதாகும். ''அணுத்தன்மைப் படுமாறு செய்தல்'' என்பது ஆன்மாவைச் சிற்றறிவும் சிறு தொழிலும் உடையதாக ஆக்குவதைக் குறிக்கும்.

ஆணவமலம் ஒரே பொருள்; ஆயினும் அதன் ஆற்றல்கள் எண்ணில்லாதன ஆகும். ஆகவே, அந்த ஆற்றல்களைக் கொண்டு அஃது எண்ணில்லாத உயிர்களை மறைக்கும். அஃதன்றி, ஒவ்வோர் உயிரையும் ஒவ்வோர் ஆணவமலம் மறைக்கும் என்று கருதிவிடக் கூடாது. ''பரிபாக காலம்'' என்பது, ஆணவ மலத்தின் ஆற்றல் ஆன்மாவை மறைக்க முடியாதபடி ஆன்மா பக்குவப்பட்டு நிற்கும் நிலையைக் குறிக்கும். ஆணவமலம் அநாதியே ஆன்மாவோடு உள்ளமையால் சகசமலம் எனப்படும். மாயையும் கன்மமும் இடையில் வந்து கூடியதால், ஆகந்துகமலம் எனப்படும். (ஆகந்துகம் – வந்து கூடியது).

ஆணவமலம் உயிர்களை மறைக்கும்பொழுது, திரோதான சத்தியும், ஆணவமலத்திற்கு அநுகூலமாக நின்று உயிர்களை மறைக்கும். அஃதாவது ஆணவமலத்தின் ஆற்றல், சட ஆற்றல் ஆகலின், அதனை இயக்கும் பொருட்டு திரோதான சத்தி, ஆணவமல ஆற்றலுக்கு வலிகொடுத்து நிற்கிறது. மேலும், ஆணவ மல மறைப்பு உயிரை விட்டு நீங்கும் பொருட்டு, திரோதான சத்தி கலை முதலானவற்றைத் தோற்றுவித்தும், கன்மங்களை உயிர்கள் நுகருமாறு செய்வித்தும் உயிர்க்குப் பக்குவம் வருமாறு செய்கிறது. உயிர்களின் பிறப்பு நிலையில் இவ்வாறெல்லாம் உதவி செய்துவரும் திரோதான சத்தி தானே திருவருளாய் மாறி நின்று உயிர்க்கு வீடுபேற்றினை வழங்குகின்றது. எனவே, திரோதான சத்தியை மலம் என்று கூறுவது உபசாரமே; உண்மை அன்று. இத்திரோதான சத்தியே ''ஆதி சத்தி'' எனப் பெயர் பெறும். இஃதே ஐந்தொழிலும் செய்கிறது. அந்நிலையில் வியாபித்து நிற்கும்; அதற்கு ஏற்ப இச்சா சத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி எனப் பெயர் பெற்று நிற்கும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆணவமலபரிபாகம் உயிர்க்கு ஏற்பட்ட பிறகு இந்த திரோதான சத்தியே அருட்சத்தியாய் மாறிச் சிவபெருமானின் திருவடிகளை ஆன்மாக்கள் அடையும்படி திருவருள் புரிகின்றது.

ஆணவமலம் உயிரறிவை மறைப்பதால், அந்த மறைப்புக்கு ஏற்ப உயிர்க்கு அறியாமை ஏற்படும். அந்த அறியாமையைப் போக்கும் பொருட்டு இறையருள் இவ்வாறு மறைந்து நின்று உயிர்க்கு உதவுகிறது.

மாயை

சுத்த மாயை

உன்னல் அரும் பரசிவன்தன் அருளாலே, நாதம்
உதிக்கும், மிகும் குடிலை தனில்; விந்து வரும் நாதம்
தன்னில்; அதின் ஒளி வளரும் சதாசிவர் ஆம்; அவரில்
தயங்க வரும் ஈசர்; வித்தைதனை அளிப்பர்; அதனுல்
மன்னுவர் இவகை ஐவர்; வாய்மையினுல் முன்னே
வந்திடும் என்று உரைசெய்த விந்து, வழா வகையே
முன் உதவும், சூக்குமாதி ஒரு நான்கும் என்று
மொழிந்திடுவர்; அருங்கலைகள் முதிர்ந்துளோரே. 21

தெளிவுரை:

மனத்தினுல் நினைத்துப் பார்ப்பதற்கும் அரிதான சிவபெருமானின் சத்தி தொழிற்படும் பொழுது, மேலான சுத்தமாயை எனப்படும் குடிலையில் நாத தத்துவம் தோன்றும். அந்த நாத தத்துவத்தில் விந்து தத்துவம் தோன்றும், அந்த விந்து தத்துவத்தில் ஒளி மிகுந்த சாதாக்கிய தத்துவம் தோன்றும், அந்த சாதாக்கிய தத்துவத்திலே மகேசுவர தத்துவம் விளங்கித் தோன்றும், அந்த மகேசுவரத் தத்துவம் சுத்த வித்தியா தத்துவத்தைத் தோற்றுவிக்கும். அவ்வாறு தோன்றுவதால் அந்தந்த தத்துவங்களின் பெயரே, தத்தம் பெயராய்த் தோன்றிய கர்த்தாக்கள் ஐவரும், அந்த தத்துவங்களைப் பொருந்தி நிற்பர்.

சத்தி பொருந்தி தொழிற்படும் காரணத்தால், முன்னே நாதத்திலே தோன்றும் என்று சொன்ன விந்து தத்துவம், தவறுமல் நின்று முதற்கண் சூக்குமை வாக்கு முதலிய வாக்குகள் நான்கினையும் தோற்றுவிக்கும் என்று நம்மால் அறிதற்கு அரிய சிவாகமங்களை கற்று அறிந்த பெரியவர்கள் கூறுவார்கள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மாயை பொருளால் ஒன்றே ஆகும். மாயை – சுத்தமாயை, அசுத்த மாயை என இருவகைப்படும். சுத்தமாயையினைப் போல அசுத்தமாயையும் அநாதியே உள்ளது என்றும், சுத்தமாயையின் காரியமே அசுத்த மாயை என்றும் பலவாறுகக் கூறப்படுகிறது. குடிலை என்பது சுத்தமாயையைக் குறிக்கும். சுத்த மாயையினை விந்து என்றும் மகா மாயை என்றும் கூறுவர். மல கன்மங்களோடு விரவாமல் சுத்தமாய் இருப்பதால், இது சுத்தமாயை எனப்படுகிறது. சுத்தமாயையிலிருந்து சொல் வடிவும் பொருள் வடிவும் ஆகிய இருவகைப் பிரபஞ்சமும் தோன்றும்.

பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கும் பொருட்டு, ஆதிசத்தி தொழிற்படும் பொழுது, இச்சா சத்தி, ஞான சத்தி, கிரியா சத்தி என மூவகைப்படும். அவற்றுள் ஞான சத்தி சுத்தமாயையில் பொருந்தி தொழிற்படுவதால், அந்த மாயையிலிருந்து நாத தத்துவம் தோன்றும். அந்த நாத தத்துவத்தில் கிரியா சத்தி பொருந்தி தொழிற்படுவதால், சாதாக்கிய தத்துவம் தோன்றும். சாதாக்கிய தத்துவத்தில் கிரியாசத்தி மிகுந்தும் ஞான சத்தி குறைந்தும் தொழிற்படுவதால், மகேசுவர தத்துவம் தோன்றும். மகேசுவர தத்துவத்தில் ஞான சத்தி மிகுந்தும் கிரியாசத்தி குறைந்தும் தொழிற்படுவதால், சுத்த வித்தை தத்துவம் தோன்றும்.

பரமேசுவரன் ஆகிய பரம்பொருள் (இறைவன்) ஞான சத்தியைப் பொருந்துவதால் சிவம் தோன்றுகிறது; கிரியா சத்தியைப் பொருந்துவதால் சத்தி தோன்றுகிறது; ஞான சத்தியையும் கிரியா சத்தியையும் சமமாய்ப் பொருந்துவதால் மகேசுவரர் தோன்றுகிறுர். ஞான சத்தியை மிகுத்துக் கிரியா சத்தியைக் குறைத்துப் பொருந்துவதால் சுத்த வித்தை தோன்றுகிறது. இவ்வாறு இறைவன் ஐந்து நிலைகளில் நின்று தொழில் செய்கிறுன்.

சுத்த மாயையிலிருந்து சாந்தியதீதை, சாந்தி, வித்தை, பிரதிட்டை, நிவிர்த்தி என்னும் ஐந்து கலைகளும் இருநூற்று இருபத்து நான்கு புவனங்களும் தோன்றுகின்றன.

சுத்த மாயையில் தோன்றும் தனு கரண புவன போகங்களுக்குக் காரணமாகக் கலை முதல் பிருதிவி ஈருக முப்பத்தொரு தத்தவங்கள், அந்த சுத்த மாயையிலிருந்தே தோன்றிச் செயல்படும், இவை அசுத்த மாயையிலிருந்து தோன்றும் கலை முதலிய தத்துவங்களின் வேருய்ச் சுத்தமாயா காரியமாகவே இருக்கும்.

சுத்த மாயை அதிகார முத்தர்க்கும், அபர முத்தர்க்கும் இருப்பிடம் ஆகும். அதிகார முத்தர் என்பவர், விஞ்ஞான கலர் ஆன்மாக்களுள் மலபரிபாகம் எய்தப் பெற்ற நிலையிலும் அதிகாரம் செய்யவேண்டும் என்னும் இச்சையால் அற்ப மலத்தன்மை இருந்தமையால், சுத்தவித்தை, மகேசுவரம், சாதாக்கியம் என்னும் தத்தவங்களில் அதிகாரம் செய்து கொண்டு இருப்பவரைக் குறிக்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சாதாக்கியத்தில் அணு சதாசிவரும், மகேசுவரத்தில் அனந்தேசர் முதலிய அட்ட வித்தியேசுரரும், சுத்த வித்தையில் சப்தகோடி மகாமந்திரர், நந்தி முதலாய கணநாதர் எண்மர், இந்திரர் முதலிய அட்ட திக்கு பாலர்களும் இருப்பர். அபர முத்தர் என்பவர், ஞானத்தில் சரியை, ஞானத்தில் கிரியை, ஞானத்தில் யோகங்களில் நின்றவரும், ஞானத்தில் ஞானம் ஆகிய முடிந்த ஞானம் எய்தும் பெருமையால் பரமுத்தி அடையாமல் இருப்பவரும் ஆவர்.

இந்த சுத்தமாயை சிவபெருமானது, இலய போக அதிகார வடிவங்களின் தொழிலுக்கு இடமாய் இருக்கும். சிவம் ஞானமே வடிவாய் இருப்பதால், மல கன்மங்களோடு விரவி அசுத்த மாயையிலே நேரடியாகத் தொழில் செய்வதில்லை. இலயத் தானமாய் இருக்கும் சிவதத்துவம், சத்தி தத்துவங்களில் சிவபெருமானே நேரடியாக ஐந்தொழில் ஆற்றுகிறான்; இவற்றில் வேறு யாரும் பஞ்சகிருத்தியம் செய்வதில்லை.

அசுத்த மாயை

உரு ஆதி சதுர் விதமாய், ஒன்று ஒன்று ஒவ்வா
உண்மையதாய், நித்தமாய் ஒன்றாய், என்றும்
அரு ஆகி கன்மாந்தம் அணுக்கள் யார்க்கும்
ஆவாரம் ஆய், அசித்தாய், அசலம் ஆகி,
விரிவு ஆய தன் செயலின் வியாபி ஆய், எல்லாம்
விரிந்த வகை புரிந்து, அடைவின் மேவி அவை ஒடுங்க
வருகாலம் உயிர்கள் எல்லாம் மருவு இடமாய், மலமாய்,
மன்னியிடும் அரன் அருளால், மாயை தானே. 22

தெளிவுரை:

அசுத்த மாயை செயல்படும் நிலையில் கீழ்க்காணுமாறு இருக்கும்.

தனு கரண புவன போகம் என்னும் நால்வகைப் பொருளாய் இருக்கும்; ஒன்றுக்கு ஒன்று உதவாத தூல சூக்கும இயல்பினை உடைய தத்துவங்களாய் இருக்கும்; காரண வடிவத்தில் நித்தமாயும், பொருளால் ஒன்றாயும் இருக்கும்; எப்பொழுதும் அருவமாய் நிற்கும். கன்மம் நீங்கும் வரையில், எல்லா உயிர்கட்கும் மயக்கம் செய்யும்; அஃது ஒரு சடப்பொருள்; சலனம் அற்றது; தன்னிடத்தின் நின்றும் விரிந்த காரியப் பொருள்களில் தான் நிறைந்து நிற்கும்; அந்தக் காரிய பொருள்கள் எல்லாம் விரிந்து தோன்றச் செய்யும் முறையில், அவை அனைத்தும் பொருந்தி ஒடுங்கி வருகின்ற ஊழிக் காலத்தில், ஆன்மாக்கள் அனைத்தும் பொருந்தி இருப்பதற்கு இடமாய் நிற்கும்; மும்மலங்களுள் ஒன்று ஆகிய இந்த அசுத்த

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மாயை, சிவபெருமானது மறைப்பாற்றல் ஆகிய திரோதான சத்தியினால் காரியப்படுத்தப்படுவதாய் என்றும் நிலைபெற்று இருக்கும்.

''மாயா'' என்னும் வடமொழி, தமிழில் ''மாயை'' என்று விகாரமாயிற்று. மாய் – ஒடுங்குதல்; ஆ – வருதல். மல கன்மங்களோடு விரவி, அசுத்தப்படுவதால் இஃது அசுத்த மாயை ஆயிற்று.

''தனு'' என்பது, பஞ்ச பூதங்களின் காரியம் ஆகிய பௌதிக தேகத்தைக் குறிக்கும். ''கரணம்'' என்பது, புறக்கரணம், அகக்கரணங்களைக் குறிக்கும். ''புவனம்'' என்பது, உயிர்கள் இன்பத் துன்பங்கள் அனுபவிப்பதற்கு இடம் ஆகிய உலகத்தைக் குறிக்கும். ''போகம்'' என்பது, இன்பத் துன்பங்கள் அனுபவித்தற்கு ஏது ஆகிய பொருள்களைக் குறிக்கும். மாயையிலிருந்து கலை முதல் பிருதிவி ஈறுகத் தோன்றும் தத்துவங்களால், தனு கரண புவன போகங்கள் உண்டாகின்றன.

தூல சூக்கும முறையில் நோக்கும்பொழுது, பஞ்ச பூதங்கள் தூலம்; தன் மாத்திரைகள் சூக்குமம்; அகங்காரம் அவற்றினும் சூக்குமம்; புத்தி அதனினும் சூக்குமம்; இப்படியே மேலே செல்லச் செல்ல தத்துவங்கள் அனைத்தும் ஒன்ரேடு ஒன்று பொருந்தாமல் தூல சூக்கும முறையில், வியாபக வியாப்பிய நிலையில் நிற்கும். இவற்றின் தன்மையும் ஒன்றுக்கு ஒன்று வேறுபடும். இந்திரியங்கள் புறத் தொழிலை மட்டுமே செய்யும்; அந்தக் கரணங்கள் அகக் கருவிகளாய் மட்டுமே நின்று இயங்கும்; உள் அந்தக் கரணங்கள் ஆகிய கலை, வித்தை, அராகம் என்பன முறையே, ஆன்மாவின் செயல், அறிவு, இச்சைகளை எழுப்பிப் புருடனைப் போகத்தில் செலுத்தும்.

மாயை உயிர்களுக்குள்ள வினைகளைச் செய்து, அவற்றின் பயன்களை நுகர்தல் பொருட்டே உள்ளது. ஆணவ மலப்பற்று கொண்டு உயிர்கள் கன்மம் செய்யவில்லை என்றால், மாயா காரியங்கள் உயிர்களுக்கு வேண்டப்படுவது இல்லை. எனவே கன்மம் இல்லாத பொழுது மாயை உயிர்க்கு மயக்கத்தைத் தருவது இல்லை. ஆன்மாக்களுள் சகலர்க்கு மட்டுமே, முக்குண மயக்கம் இருப்பதால், மாயை மயக்கத்தைச் செய்யும்; விஞ்ஞானகலருக்கும் பிரளயாகலருக்கும் முக்குண மயக்கம் இல்லாமையால், அவர்களிருவருக்கும் மாயை மயக்கம் செய்வதில்லை.

மாயையிலிருந்து தனு கரண புவன போகங்களாய் விரிந்த மாயை ஒடுங்கும் முறை வருமாறு:

தனு கரண புவன போகங்கள் பஞ்சபூதங்களில் ஒடுங்கும், பூதங்கள் தன்மாத்திரையில் ஒடுங்கும்; தன் மாத்திரை பூதாதி அகங்காரத்தில் ஒடுங்கும்; ஞானேந்திரியங்களும் மனமும் தைசத அகங்காரத்தில் ஒடுங்கும்;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கன்மேந்திரியங்கள் வைகரி அகங்காரத்தில் ஒடுங்கும்; அகங்காரம் புத்தியிலும், புத்தி அவ்வியத்தத்திலும், அவ்வியத்தம் பிரகிருதியிலும் ஒடுங்கும். பிரகிருதி அராகம் வித்தை மூன்றும் கலையில் ஒடுங்கும். கலை நியதி, காலம் மூன்றும் மாயையில் ஒடுங்கும். இதுவே ஒடுங்கும் முறை ஆகும்.

''அவ்வியத்தம்'' என்பது வெளிப்படாமல் இருக்கும் பிரகிருதி மாயை ஆகும்; ''பிரகிருதி'' என்பதும் மூலப் பிரகிருதி என்பதும் ஒன்றே ஆகும். இஃது அசுத்தமாயையில் தோன்றி அசுத்தப் பிரபஞ்சத்திற்குக் காரணமாயிருப்பது. ''சித்தமாம் அவ்வியத்தம்'' என்று சித்தியார் கூறுவதால் சித்தம் என்பதும் அவ்வியத்தம் என்பதும் ஒன்றே ஆகும்.

மாயை ஒடுங்கிய நிலை, கேவல நிலை எனப்படும். அந்நிலையில், மாயையின் காரியப்பாடு இல்லாமையால், ஆணவ மலம் உயிரின் அறிவை முழுவதையும் மறைத்து நிற்கும். கன்மம் சஞ்சிதமாய்ப் பயன்தராமல் மாயையில் இருக்கும். மாயை உயிர்களுக்குத் தாரகமாய் மட்டும் (ஆதாரமாய்) இருக்கும்.

மாயை, கலை முதலிய தத்துவங்களால் ஆன்மாவின் அறிவை விளக்கும்; ஆயினும் போக நுகர்ச்சியின் பொருட்டு உயிர்க்கு மயக்கத்தைச் செய்வதால் மலம் எனப்படுகிறது. மாயை சடம் ஆகலின், இறைவனது அருளாகிய திரோதான சத்தியின் செயலால் காரியப்படுகிறது.

உலகுக்கு முதல் காரணம் மாயை

என்னை இது எனின், உலகுக்கு உபாதானம் இல்லை
இறைவன் அலதுஎனின், அசித்துச் சித்தின் இடத்து உதியா;
மன்னி உளதேல், முதல்வன் என் கொல் என்னின்
மாயை தான் அசித்து; உருவாய் மருவ மாட்டாது;
அன்னவனும் இது ஒழிய ஆக்க மாட்டான்;
அசத்தனும் எனின், அதுவும் அவன் போல் நித்தம்;
முன்னவன் அவ் அசித்தை விரித்து எவையும் ஆக்கும்;
முதன்மை அது கொடுத்தது என மொழிந்திடாரே. 23

தெளிவுரை:

மாயை என்னும் ஒரு பொருள், காரணப் பொருளாய் உள்ளது என்று கூறுவதற்குப் பொருள் என்ன என்றால், இந்த உலகம் தோன்றுவதற்கு மாயை முதற்காரணமாய் இருப்பதே ஆகும். இந்த உலகத்திற்குப் பிரமத்தை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அன்றி வேறு ஒரு முதற் காரணம் இல்லை என்று நீ சொல்வாய் ஆயின், அது பொருந்தாது. ஏனென்றால், உலகம் சடப்பொருள்; பிரமம் சித்துப் பொருள். இதிலிருந்து சடம் தோன்றுது என்பதாலேயே ஆகும்.

மாயையே உலகுக்கு முதற்காரணமாய்ப் பொருந்தி உள்ளது என்று கூறினால், உலகம் தோன்றுவதற்கு பிரமம் எதற்கு என்று நீ கேட்பாய். அதற்கு விளக்கம் வருமாறு:–

மாயை சடப்பொருள் ஆதலால், சித்து ஆகிய இறைவனால் இயக்கப்படாமல், அது தானே தனு முதலியனவாக காரியப்படமாட்டாது; இறைவனும் இந்த மாயை இன்றிப் பிரபஞ்சத்தைப் படைக்க மாட்டான். எனவே, இறைவனும் மாயை போன்று அசத்தனே அஃதாவது என்றும் ஒரே நிலையில் நிற்பவன் அல்லனே என்று நீ வினவுவாய் ஆயின், அஃது அவ்வாறு அன்று. இறைவன் என்றும் உள்ளவன்; அவனைப் போன்று மாயையும் என்றும் உள்ள பொருளே ஆகும். சித்து ஆகிய இறைவன், அசித்து ஆகிய மாயையை விரித்து பிரபஞ்சம் அனைத்தையையும் படைக்கிறான். (சித்து – அறிவுடைப்பொருள், அசித்து – அறிவில்லாத பொருள்) எனவே, உலகத்தை மாயை தானே தோற்றுவிக்கும் தலைமை உடையது என்று அளவை நூல் அறிந்த பெரியவர்கள் கூறமாட்டார்கள். மாயையைக் கொண்டு அன்றி இறைவன் உலகத்தைப் படைக்க மாட்டான் என்று கூறியதால் இறைவன் வல்லமை இல்லாதவன் என்று கருதிவிடக்கூடாது. ஏனென்றால், சடப்பொருளாய் இருக்கும் உலகம், ஒரு சடப்பொருளிலிருந்தே தோற்றுவிக்கப்படவேண்டும்; மேலும் தோன்றி நின்று அழித்தல் ஆகிய செயற்பாடு, சடத்தின் இயல்பே அன்றி சித்தின் இயல்பு அன்று, எனவே, மாயையே பிரபஞ்சத்திற்கு முதற்காரணம் ஆகும்.

உயிர்களின் வினைக்கு ஏற்ற உடம்பைக் கொடுப்பவன் இறைவனே

படைத்தது ஒருபடி இன்றிப்பறவை, பசு, நரராய்
பண்ணியது என்? முன்னை வினைப் பான்மை என்பர்;
அடுத்த வினை உளது ஆயின், இறைவன் ஏன் என்னில்,
அசேதனம்; மற்றவை ஆவிக்கு அமைத்தது ஆகும்;
எடுத்த வினை உரு உறுவது உயிரேல், தானே
இருவினைக்குத் தக்க உடல் எய்தும் என்னில்,
சடத்திரளும் கர்த்தாவாய் அறிவு ஒன்று இல்லாத்
தன்மையனும் கூட ஒரு சங்கை இன்றே. 24

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

இறைவனே படைப்புத் தொழிலைச் செய்வானுயின் படைக்கப்பட்ட இந்த உலகத்தை ஒரு தன்மையதாகப் படைக்காமல், பறவை பசு மனிதர் என்று பலவாருகப் படைத்ததற்குக் என்ன காரணம் என்று கேட்டால், உயிர்கள் முற்பிறவிகளிலே செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்றபடி படைக்கிருன் என்று பெரியவர்கள் கூறுவார்கள். உயிர்கள் முற்பிறவிகளில் செய்த வினைகள் எல்லாம் கூடி சஞ்சித வினை உள்ளமையால், அந்த வினையே, உயிர்களின் வினைப் பயன்களுக்கு ஏற்ற உடல்களைக் கொடுக்குமே, இறைவன் படைக்கிருன் ஏ்ன்று கூறுவது ஏன் என்ருல், அந்த சஞ்சித வினை அறிவு இல்லாத சடம் ஆகும். ஆகவே, அவரவர் செய்த வினைகளுக்கு ஏற்ற வெவ்வேறு உடல்களை உயிர்கட்கு இறைவனே அமைக்கிருன். செய்த வினைகளுக்கு ஏற்ற உடல்களை உயிர்கள், தாமே எடுத்துக் கொள்ளுமே, இறைவன் எதற்கு என்று கேட்பாய் ஆயின், அதுவும் பொருந்தாது. ஏனென்ருல் வினைகளும் சடம், மாயையும் சடம்; ஆன்மாவும் தனக்கென ஒரு செயலும் அறிவும் இல்லாதது. எனவே, உயிர்கள் தாமே வினைப்பயனைக் கூடி அதற்கேற்ற உடலை எடுத்துக்கொள்ளும் என்பதற்கு வேருேர் ஏது இல்லை. ஆகவே உயிர்களின் வினைக்கு ஏற்ற உடம்பைக் கொடுப்பவன் இறைவனே என்பது பெறப்படும்.

உயிர்கள், தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்னும் எழுவகைப் பிறப்புகளையும் எண்பத்து நான்கு நூருயிரம் யோனி பேதங்களையும் உடையன.

மும்மலங்களும் அநாதி

அல்லல் மிக உயிர்க்கு, இவைதான் அணைத்தது, ஈசன்
அருவினைகள் அருந்துதற்கோ, வினையோ அன்றிச்
சொல்லி வரும் மாயையோ, அணுவை முந்தச்
சூழ்ந்தது எனும் உரை முதல் ஓர் தொடக்கு இலார்பால்
ஒல்லை வரும் எனின், உளதாம்; உயிர் உண்டாவே,
உளது மலம்; மலம் உளதாய் ஒழிந்த எல்லாம்
நெல்லின் முளை தவிடு உமிபோல் அநாதியாக
நிறுத்திடுவர்; இது சைவம் நிகழ்த்துமாறே. 25

தெளிவுரை:

இறைவன், உயிர்களுக்கு மிகுந்த துன்பத்தை உண்டாக்கும் இந்த உடல்களைக் கூட்டியது, அனுபவிப்பதற்கு அரிய வினைப் பயன்களை நுகருதல்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பொருட்டோ? அப்படியானால், இந்த வினையோ அல்லது பெரிதாகப் பேசப்படும் மாயையோ உயிரை முதன் முதலில் கூடியது? என்னும் கேள்வி எழுகிறது. இதற்கு விடை வருமாறு:-

அநாதியே ஒரு தொடர்பும் இல்லாதவரிடத்தில் இந்த மாயையும் வினையும் இடையில் வந்து கூடின என்றால், இந்தக் கேள்வி பொருந்தும் என்று கூறலாம். இந்த உயிர் என்று உள்ளதோ அன்றே ஆணவ மலமும் அதனோடு சகசமாய் இருப்பதால், உயிர்க்கு ஆணவமலத்தோடு கூடிய தொடர்பு அநாதியே உள்ளது. ஆணவமலம் என்று உள்ளதோ அன்றே மாயையும் கன்மமும் உள்ளனவாகும். ஆகவே இந்த மூன்று மலங்களும், நெல்லின் இடத்தில் உள்ள முளையும் தவிடும் உமியும் போல, அநாதியே உயிரின் இடத்தில் தொடர்பு உடையனவாக உள்ளன. இதுவே சிவாகமங்கள் சொல்லும் முறைமை ஆகும்.

நெல்லில் உள்ள முளை, கன்மத்துக்கு உவமை; தவிடு மாயைக்கு உவமை; உமி ஆணவத்துக்கு உவமை; அரிசி உயிர்க்கு உவமை, நெல்லில் உள்ள முளைத்தல் சத்தி, முளையைத் தோற்றுவிப்பது போலக் கன்ம மலம், உயிரினிடத்து சுகதுக்கங்களை முதற்காரணமாய் நின்று தோற்றுவிக்கும். தவிடு, நெல் முளைப்பதற்கு அனுகூலம் செய்து உடன் நிற்பது போல மாயாமலம், அந்த சுக துக்கங்கள் தோன்றுவதற்குத் துணைக் காரணமாய்த் தன் காரியம் ஆகிய தனு கரணம் முதலியவற்றையும் உயிரையும் இயைவித்து நிற்கும். உமி அந்த முளை தோன்றுவதற்கு நிமித்த காரணமாய் இருப்பதுபோல, ஆணவமலம் அந்த சுக துக்கத் தோற்றத்திற்கு நிமித்த காரணமாய் நின்று, அவற்றை முறுகு வித்து உயிர் நுகருமாறு நிலை பெறுத்தும்.

குறிப்பு:

அநாதியே ஆணவமல மறைப்புக்கு உட்பட்ட உயிர்மீது இரக்கம் கொண்டு, பரம கருணாநிதி ஆகிய இறைவன், அநாதியே தனு கரண புவன போகங்களைக் கூட்டுவித்தான் என்பது இதனால் இனிதே பெறப்படும்.

மாயேயம்

தத்துவங்கள் தோன்றும் முறை

அருத்தி மிகும் கலை, காலம், நியதியுடன் வித்தை,
அராகம் இவை, அனந்தரால் மாயை தனில் ஆகும்;
உருத்திரரால் கலை அதனில் பிரகிருதி குணங்கள்
உளவாகும்; அகங்காரம் புந்திதனில் உதிக்கும்;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெரித்த இது திரிவிதமாம் தைசத, வைகரி
திகழ்தரு பூதாதி என; திருந்திய சாத்துவிகம்
விரித்த குணம், மனம் புத்தி இந்திரியம் என்று
விளம்பிய சோத் திராதி முதல், விளங்கியிடும் விரிந்தே. 26

தெளிவுரை:

அனந்த தேவரின் அருளால், அசுத்த மாயையின் இடத்திலே உயிர்க்குப் போகத்திலே இச்சையை மிகுதிப்படுத்தும் கலை, காலம், நியதி, என்னும் தத்துவங்களும், கலையிலிருந்து வித்தை அராகம் என்னும் தத்துவங்களும் ஆக இந்த ஐந்து தத்துவங்களும் தோன்றும்.

சீகண்ட ருத்திரரின் அருளால், மேற்சொன்ன கலையிலிருந்து மூலப்பிரகிருதியும், அதிலிருந்து குண தத்துவமும் தோன்றும், குண தத்துவத்தில் புத்தி தத்துவம் தோன்றும்; புத்தி தத்துவத்திலிருந்து அகங்கார தத்துவம் தோன்றும்; இவ்வாறு கூறப்பட்ட இந்த அகங்கார தத்துவம், விளக்கத்தை உடைய தைசத அகங்காரம், வைகரி அகங்காரம், பூதாதி அகங்காரம் என மூவகைப்படும்.

முதலில் சொல்லப்பட்ட தைசத அகங்காரத்திலிருந்து சிறந்த சாத்துவித குணம் சம்பந்தப்பட்ட மனமும், ஞானேந்திரியம் என்று கூறப்படும் செவி, மெய், கண், வாய் (நாக்கு) மூக்கு என்னும் கருவிகளின் இடமாக நின்று முறையே உயிர்க்கு அறிவை விளக்கும் சோத்திரம், தொக்கு, சட்சு, சிங்நுவை, ஆக்கிராணம் என்னும் இந்திரியங்கள் விரிவாகத் தோன்றும்.

''மாயேயம்'' என்பது, மாயா காரியங்கள் எனப்படும் தனு கரண புவன போகங்களைக் குறிக்கும். ''அருத்திமிகும்'' என்பது, அநாதியே உயிர்க்கு ஏற்பட்ட ஆணவ மல இருளைச் சற்றே நீக்கிப் போகங்களை அறியும் அறிவைக் கொடுத்து, அந்த போகங்களை அனுபவிக்கும் காலத்தை நியமனம் செய்து போகங்களில் இச்சையை உண்டாக்குவித்து, கலை முதலியவற்றால் போக நுகர்ச்சியை வருவித்தலைக் குறிக்கும்.

காலம், நியதி, கலை என்று தத்தவங்கள் வரிசைக் கிரமத்தில் இருக்கும் பொழுது, கலை, காலம், நியதி, வித்தை அராகம் என்று இங்குக் கலையை முதலில் வைத்துக் கூறியதற்குக் காரணம், தத்துவங்களைத் தொழிற்படுத்தும் முறை ஆகிய பிரவிருத்திக் கிரமத்தில் வைத்து, உயிர்களுக்குப் போக நுகர்ச்சியைச் செய்தல் பொருட்டே ஆகும். உலகத்தைத் தோற்றுவிக்கும் பொழுது, மாயை காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் சிருஷ்டிக் கிரமத்தில் தத்துவங்கள் அமைந்துள்ளன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''அனந்த தேவர்'' என்பவர், வித்தியேசுரர் எண்மரில் ஒருவர்; இவர் ஈசுவர தத்துவத்தில் இருப்பவர். இவர் ஏனைய வித்தியேசுரர்க்கும் சுத்த வித்தியாதத்துவ வாசிகளுக்கும் தலைவராய் இருந்து, மாயையைக் கலக்கி பிரகிருதி தத்துவத்திற்கு மேற்பட்ட மாயா தத்துவ புவனங்களைத் தோற்றுவிப்பவர். இவர் பரமசிவனுக்கு வேறாய், அதிகார மலம் உடையவராய் இருப்பர். அந்த அதிகார மலம், பாகம் வந்த காலத்தில் பரம சிவம் அருளால் பரமுத்தியை அடைவர்.

''சீகண்ட ருத்திரர்'' என்பவர், பிரளயாகலருள் மலபரிபாகம் உடையவராய்ச், சிவபெருமானுல் அனுக்கிரகம் செய்யப் பெற்ற நூற்றுப் பதினெட்டு உருத்திரர்களுள் ஒருவர் ஆவர். இவர் மத்திய பிரளய முடிவில், பிரகிருதி தத்துவத்திற்குக் கீழ்ப்பட்ட தத்துவங்களையும், புவனங்களையும் தோற்றுவித்து, சகலருள்ளே சிறந்தவர்களை பிரமபதம், விட்டுணு பதங்களில் இருத்துவார். இவர் படைப்புக் காலத்தில் அசுத்த அத்துவாக்களைப் படைத்து, பிரமாவும் விட்டுணுவும் செய்யும் சிருட்டிகளை அதிட்டித்து நின்று, கீழ்ப்பட்ட புவனேசுவரரையும் முப்பத்து முக்கோடி தேவர்களையும், பிரமாண்டம் முதலிய அண்டங்களையும் தோற்றுவிப்பவர். மத்திய பிரளயம் வரை, பிரம விட்டுணுக்கள் கூடவே இருந்து, குண தத்துவத்தில் அதிகாரம் செய்துகொண்டு இருந்தது, பின்பு அந்த பிரம விட்டுணுக்களையும் ஒடுக்கிக் கொண்டு அராக, தத்துவத்தில் இருப்பர்.

''மூலப் பிரகிருதி'' என்பது, அரும்பினிடத்து மணம் விளங்காமல் அடங்கி நிற்பது போல, தன்னிடத்தில் உள்ள குணங்கள் சற்றும் விளங்காமல், கலை தத்துவத்திலிருந்து தோன்றுவது ஆகும். இஃது அவ்வியத்த குண வடிவாய் உள்ளது. (அவ்வியத்தம் – வெளிப்படாமல் இருப்பது) ஆகவே, முக்குணங்களும் விளங்கித் தோன்ருமல் சமமாய் அடங்கி இருக்கும் நிலையே குணதத்துவம் எனப்படும். மூலப் பிரகிருதியில் தோன்றும் புத்தி முதல் பிருதிவி ஈருன தத்துவங்கள் எல்லாம் முக்குணங்களால் வியாபிக்கப்பட்டு இருக்கும். எனவே உலகம் முக்குண வயப்பட்டது என்கிறோம். மூலப் பிரகிருதிக்கு மேல் முக்குண மயக்கம் இல்லை.

முக்குணம் என்பது சாத்துவிகம், இராசதம், தாமதம் எனப்படும். தைசதம் சாத்துவிக குணம் சம்பந்தம் உடையது; வைகரி இராசத குண சம்பந்தம் உடையது; பூதாதி தாமத குண சம்பந்தம் உடையது. மனமும் ஞானேந்திரியங்களும் ஒளி வடிவம் உடையன ஆகலின், சாத்துவிகங்கள் ஆகும். (தைசதம் - பிரகாசம் உடையது). அஃதாவது மனத்தின் இயல்பு எப்போதும் சாத்துவிக குணத்துடன் இருப்பதே ஆகும். மனம் இராசத குணவயப்பட்டும் தாமத குணவயப்பட்டும் இருப்பது, அதற்குச் செயற்கையே ஆகும், ஆகவேதான் திருவள்ளுவர்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன்''

என்றருளிச் செய்தார்.

''திருந்திய சாத்துவிதம்'' என்பது, இராசத குணக் கலப்போ தாமதக் குணக் கலப்போ இன்றி, இயற்கையான தூய சாத்துவிகக் குணத்துடன் இருப்பதைக் குறிக்கும், அதுவே பரந்த மனப்பான்மை ஆகலின், ''சாத்துவிதம் விரிந்த குணம்'' என்றார் உமாபதி சிவம்.

இதுவும் அது

மன்னிய கன்மேந்திரியம் ஆன இராசதம் சேர்
வாக்கு ஆதி வைகாரி மருவி வரும்; சத்தம்
தன்னை முதலாகிய தாமதம் மிகும் மாத்திரை பின்
தரும்; அதனில் வான், அநிலம், அனல், புனல், மண், சத்தம்.
முன் அதனில் வெளி ஆதி ஒன்று ஒன்று ஆகும்
முறையில் உறும்; இருமை அயன் முடிவாம் முன்னே
உன்னு சதாசிவர் ஆதி அதிபதிகள், ஒடுக்கம்
உதித்த அடைவு என உரைப்பர், உணர்ந்துளோரே. 27

தெளிவுரை:

இராசத குணம் சம்பந்தம் உடைய வாய், கால், கை, எருவாய் கருவாய் என்னும் கன்மேந்திரியங்கள் ஐந்தும், வைகாரி அகங்காரத்தைப் பொருந்தித் தோன்றும். ஓசையை முதலாக, உடைய தாமத குணம் தன்மாத்திரைகள் ஆகிய ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் ஐந்தினையும், வைகாரி அகங்காரத்திற்குப் பின் உள்ளது ஆகிய பூதாதி அகங்காரம் தரும். ஓசை முதலிய அந்த தன்மாத்திரையிலிருந்து வெளி, வாயு, நெருப்பு, நீர், மண் என்னும் பூதங்கள் ஐந்தும் முறையே தோன்றும். ஆகாயம்(வெளி) முதலிய பூதங்கள் ஓசை முதலிய குணங்களில், ஒவ்வொரு குணங்களை ஏற்றமாக முறைப்படி பொருந்தும். பெருமைக்குரிய பஞ்ச மூர்த்திகளுக்கும் முதன்மையான, எண்ணப்படும் சதாசிவன் முதலாக பிரமன் ஈறாக உள்ளவர்கள், அந்த பூதங்களுக்குத் தலைவராய் இருப்பர். தத்துவங்கள் ஒடுங்கும் முறையும், தோன்றிய முறைப்படியே ஆகும் என்று சிவாகம நூல் அறிந்தவர் கூறுவர்.

வைகாரி–விகாரம் உடையது. வைகரி அகங்காரத்தைப் பொருந்திச் செயல்படும் ஆகலின், கன்மேந்திரியங்கள் இராசத குணம் உடையன ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தன்மாத்திரை, காரண தன்மாத்திரை, விடய தன் மாத்திரை என இரு வகைப்படும். இந்த செய்யுளில் கூறப்பட்டவை காரண தன்மாத்திரைகளே ஆகும் . ஓசை , ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் ஐந்தும் தத்தம் குணச் சிறப்புக்களை காட்டாமல் குண சமூகமாய்ச் சூக்குமமாய் இருக்கும் நிலையில் காரண தன் மாத்திரை என்றும் சூக்கும பூதங்கள் என்றும் சொல்லப்படும்.

மேற்கூறிய, ஓசை, ஊறு முதலிய பூதகுணங்கள், குணம் – குணி எனப் பிரிவுபடாமல், குண சமூகமாய் நிற்கும் நிலையில் சூக்கும பூதங்கள் எனப்படும். அவை குணம் என்றும் குணி என்றும், ஒரு குணம், இரு குணம், முக்குணம், நான்கு குணம், ஐந்து குணம் என்றும், இக்குணங்கள உடைய குணிப்பொருள்கள் என்றும், வெளிப்பட்டுத் தூல வடிவில் விளங்கும் பொழுது பஞ்சபூதம் எனப்படுகிறது. அப்பொழுது அவை தூல பூதங்கள் எனப்படும். (விடய தன்மாத்திரை பற்றிய விளக்கத்தை செய்யுள் 44ல் காணலாம்.) தூல பூதங்கள் புலனுக்கு உட்படாமல் , நுண்மைப்பட்டு மறைந்து நிற்கும்பொழுது, சூக்கும பூதம் எனப்படும்; எவர்க்கும் புலனுகும்படி தூலமாய் வெளிப்பட்டு நிற்கும்பொழுது, தூல பூதம் என்று சொல்லப்படும். புலப்படாமல் இருப்பதும் புலப்படுவதும் ஆகிய வேறுபாடுகளே, முறையே சூக்கும தூல பூதங்களுக்கு உள்ள வேற்றுமையாகும்.

பஞ்சபூதங்கள் தோன்றும் முறை வருமாறு;–

சத்தத்திலிருந்து	ஆகாயம்	தோன்றும்;	(சத்தம்–ஓசை)
பரிசத்திலிருந்து	வாயு	தோன்றும்;	(பரிசம்–ஊறு)
உருவத்திலிருந்து	தேயு	தோன்றும்;	(உருவம்–ஒளி)
இரதத்திலிருந்து	அப்பு	தோன்றும்;	(இரதம்–சுவை)
கந்தத்திலிருந்து	பிருதிவி	தோன்றும்;	(கந்தம்–நாற்றம்)

ஆகாயம்,(வெளி) ஓசை என்னும் ஒரு குணம் உடையது; வாயு,(காற்று) ஓசை ஊறு என்னும் இரு குணம் உடையது; தேயு(நெருப்பு) ஓசை, ஊறு, ஒளி, என்னும் முக்குணம் உடையது; அப்பு(நீர்) ஓசை, ஊறு, ஒளி, சுவை என்னும் நான்கு குணம் உடையது. பிருதிவி(மண்) ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் ஐந்து குணம் உடையது.

மாயாவாதிகள், ஆகாயத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து தேயுவும், தேயுவிலிருந்து அப்புவும், அப்புவிலிருந்து, பிருதிவியும் ஆகப் பூதங்கள் ஒன்றிலிருந்து ஒன்று தோன்றும் என்பர். அவர்கள் கூற்று பொருந்தாது. ஏனென்றுல், சத்த குணம் ஒன்றே உடைய ஆகாயத்திலிருந்து, சத்தம், பரிசம் என்னும் இரண்டு குணங்களை உடைய வாயுவுக்குக் காரணம் ஆக முடியாது என்பதாலேயே ஆகும். காரணத்தில் குணமும் குணியும் அடங்கிச் சூக்குமமாய் இருந்து, காரியத்தில் தூலமாய் வெளிப்பட்டுத்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தோன்றும் என்பதே பகுத்தறிவுக்குப் பொருந்துவதாகும். எனவே, தன் மாத்திரைகளிலிருந்து பூதங்கள் தோன்றும் என்பதே உண்மை ஆகும். மற்றப் பூதங்களின் தோற்றத்தையும் இந்த குண – குணி இயல்பு வைத்துக் கண்டு கொள்க.

கன்மம்

கன்ம மலத்தின் இயல்பு

நண்ணியிடும் உரு அதனுக்கு ஏது ஆகி
நாளு போகங்கள் ஆய், நாசோற் பத்தி
பண்ணி வரும் ஆதலால், அநாதி ஆகிப்,
பல ஆகி, அணுக்கள் தொறும் படர்வது ஆகி,
எண்ணி வரும் மன வாசகன்மத்தால் இயற்றும்
இயல்பினதாய், மதி கதமாய், இருபயனும்பாவ
புண்ணியமாய், புலர் காலை, மாயை மேவிப்
பொருந்தும்; இது கன்ம மலம் புகலும் ஆறே.

உஅ

தெளிவுரை:

கன்ம மலம், உயிர்கள் கூடுகின்ற உடம்புகளுக்கு காரணமாய் உள்ளது; அந்த உடம்புகளால் அனுபவிக்கப்படும் பலவிதமான போகங்களைத் தருவதாய் உள்ளது; அழிந்தும் தோன்றியும் வருவதால், பிரவாக அநாதியாய் உள்ளது. கன்மம் பலவிதப்படும்; ஒவ்வோர் உயிரிலும் செரிந்து இருந்து, நினைக்கின்ற மனத்தினாலும் வாக்கினாலும் காயத்தினாலும் செய்யப்படும் இயல்பினை உடையது; புத்தி தத்துவத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டு, இன்பமும் துன்பமும் ஆகிய இரு பயன்களைத் தரும் நல்வினை தீவினை வடிவாய் உள்ளது; தத்துவங்கள் அனைத்தும் ஒடுங்கும் ஊழிக் காலத்தில் கன்ம மலம் மாயையினை அடைந்து அதில் பொருந்தி நிற்கும். கன்ம மலத்தின் இயல்பு குறித்துச் சிவாகமங்கள் இவ்வாறு கூறுகின்றன.

உயிர்கள் பெறும் உடல்களுக்குக் காரணமாகிய கன்மம், ''சஞ்சித கன்மம்' எனப்படும். எடுத்த பிறவியில் உயிர்களினால் அனுபவிக்கப்படும் இன்ப துன்ப அனுபவங்கள், 'பிராரத்த கன்மம்' எனப்படும்.

சஞ்சித கன்மம், பிராரத்த கன்மம் ஆகி, இன்பத்துன்பங்களை உயிர் நுகரும்பொழுது, முன்பு செய்த கன்மம் அழியும்; ஆயினும், கன்ம

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நுகர்ச்சியின் பொருட்டுச் செய்யும் முயற்சியினால், உயிர் பிறர்க்கு நன்மை தீமைகளைச் செய்யும். இந்த நன்மை தீமைகள், நல்வினை தீவினை என்னும் பெயரைப் பெறும். இந்த நல்வினை தீவினைகளே 'ஆகாமிய வினை' எனப்படும்.

பிராரத்த வினை அழியும்பொழுது, ஆகாமியம் வந்து ஏறி, இவ்வாறு பிரவாகம் போல் தொடர்ச்சியாய்த் தொன்று தொட்டு வருவதால், கன்மம் ''பிரவாகா நாதி'' எனப்படும்.

சஞ்சிதம் பிராரத்தம் ஆகாமியம் என்னும் மூவகை வினைகளும் ''காரிய கன்மம்'' எனப்படும்; இவற்றிற்குக் காரணமாய் இருக்கும் கன்மம், ''காரண கன்மம்'' அல்லது ''மூல கன்மம்'' எனப்படும்.

நல்வினை தீவினைகள் பலவிதமாகச் செய்யப்படுவதால் 'பல ஆகி' என்றார். ஆன்மாக்கள் அநாதியே ஆணவமலத்தோடு இருப்பதுபோல, கன்மமும் அநாதியே ஆன்மாக்களோடு பொருந்தி இருக்கும். அணுக்கள் – ஆணவமலத்தோடு பொருந்திய ஆன்மாக்கள்.

மனம் வாக்குக் காயங்களினால் செய்யப்படும் கன்மம் ஆகாமியம் எனப்பெயர் பெறும். பின்பு அந்த ஆகாமிய கன்மம் அனுபவத்திற்கு வருவதற்கான பக்குவம் ஆகும் வரை சூக்குமமாய்ப் புத்தி தத்தவத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டு, மாயையில் கிடக்கும். அந்நிலையில் அது சஞ்சிதம் எனப் பெயர் பெறும். நல்வினை தீவினைகள் ஆகிய ஆகாமியத்தின் பயன்கள், இன்ப துன்பங்களாக உயிரை வந்து பொருந்தும் பொழுது, அது பிராரத்தம் எனப் பெயர் பெறும். ஊழிக் காலத்தில் உயிர்கள் மாயையில் ஒடுங்கும் பொழுது, கன்மமும் உயிர்களை விட்டு நீங்காமல், மாயையில் ஒடுங்கும்.

''பிரவாகாநாதி'' என்பது இடைவிடாமல் ஓடுகின்ற நீர்ப் பெருக்குப் போலத், தொடர்ச்சியாத் தொன்று தொட்டு வருவதைக் குறிக்கும். (பிரவாகம்+ அநாதி = பிரவாகாநாதி)

சஞ்சிதமும் பிராரத்தமும்

கன்ம நெறி திரி விதம்; நல்சாதி ஆயு போகம்
கடன் அது என வரும்; மூன்றும் உயிர் ஒன்றில் கலத்தல்
தொன்மையது; ஊழ் அல்லது உணவு ஆகா; தானும்
தொடங்கு அடைவின் அடையாதே தோன்றும் மாறி;
தன்மை தரு தெய்விகம் முன்பவுதிகம் ஆன்மிகமாம்;
தகையில் உறும் அசேதன சேதனத்தாலும் சாரும்;
நன்மையொடு தீமை தரு சேதனனுக்கு இவண் ஊண்
நாடில் அதன் ஊழ் வினையாய் நணுகும் தானே. 29

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

கன்மம் பயன் தரும் முறை மூன்று விதமாகும். அது நற்குலத்தில் தோன்றுதல், ஆயுளோடு இருத்தல், அனுபவம் பெறுதல் என்னும் முறைமையை உடையதாக வரும். இவை மூன்றும் பழவினை காரணமாக, ஓர் ஆன்மாவில் கூடுவன ஆகும். முன்வினைப் பயன் ஆகிய ஊழ் அல்லாத வேறு எதுவும், ஆன்மாவுக்கு அனுபவமாய் வரமாட்டாது. அந்த வினைப்பயனும், செய்த முறைமையில் அன்றிப், பக்குவமான முறையில் முன் செய்தன பின்னும், பின் செய்தன முன்னும் ஆக மாறி வரும்; இயல்பாக வருகின்ற தெய்விகத்தாலும், ஆதி பௌதிகம் ஆதியான்மிகம் என்னும் தன்மையோடு, உயிரற்ற சடப் பொருள்களாலும் பிற உயிர்களாலும் வரும். நல்வினை, தீவினைகளைச் செய்து வரும் உயிருக்கு இந்தப் பிறவியில் ஊழ் எப்படி அமையும் என்றால், அந்த உயிர் முற்பிறவியில் செய்த வினையின் பயனாகப் பொருந்தும்.

சஞ்சித வினை இன்றிப் பிராரத்த அனுபவம் வராது. எனவே ''ஊழ் அல்லது உணர்வு ஆகா'' என்றார். ஒருவன் செய்த பயிர்களுள், கீரை, கத்திரி, வாழை, தென்னை, பனை என்பன செய்த முறையில் அன்றி, விளைவு பெற்ற முறையில், முன்பு செய்த பயிர் பின் பயனையும், பின்பு செய்த பயிர் முன் பயனையும் தருவது போல், வினைப்பயன் முன் பின்னாகப் பயன்தரும்.

ஆகாமியம்

மேலைக்கு வருவினை ஏது என்னில், அங்கண்
விருப்பு வெறுப்பு என அறி; அவ்விளைவும் எல்லாம்
மூலத்த வினைப்பயில்வாம் என்னின், நாம் என்
முற்றி, அதன் பயன் உனக்கு முளைக்கும் என்பர்;
ஞாலத்து வினைகள் இரு திறன் ஆகும் புந்தி
நண்ணாதவினை, நணுகும்வினை எனை; ஒன்று இரண்டாய்
ஏலத்தான் இதம் அகிதம் ஆம்; இதனால் வழுவாது
எய்தியிடும், புண்ணிய பாவங்கள் என்றே. 30

தெளிவுரை:

இந்தப் பிறவியில் வருவன எல்லாம், முந்திய பிறவியில் செய்த ஊழ் வினையின் பயன் ஆயின், இனிவரும் பிறவிக்கு ஏதுவாய் வரும் ஆகாமிய வினை விளைவது எப்படி என்றால், அந்த வினைப் பயனை நுகரும் காலத்தில், அந்தப் பயன்களில் வைத்த விருப்பு வெறுப்புக்களால் , அடுத்த பிறவிக்கு உரிய ஆகாமியம் விளைகின்றது என்பதை அறிவாயாக.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அந்த விருப்பு வெறுப்புக்கள் எல்லாம் ஏற்படுவது கூட ஊழ்வினையின் பயன் ஆகும் என்று கருதினால், அது பொருந்தாது; ஏனென்றால், விருப்பு வெறுப்புக்கள் ஊழ்வினையின் பயனாக ஏற்படுகின்றன என்று கருதாமல், ''நான் செய்கிறேன்'' ''நான் அனுபவிக்கிறேன்'' என்னும் தன் முனைப்பு மிகுதியாகி, அந்த முனைப்பின் பயனே உனக்கு ஆகாமியமாய் வந்து ஏறுகிறது என்று பெரியவர்கள் கூறுவார்கள்.

தெரியாமல் செய்யும் வினை, தெரிந்துசெய்யும் வினை, என இந்த உலகில் நாம் செய்யும் வினைகள் இரண்டு வகை ஆகும். செய்யும் வினைகள் ஒவ்வொன்றும் இந்த இரண்டு வகையாய்ப் பொருந்த நன்மை தீமைகள் ஆகிய நல்வினை தீவினைகள் உண்டாகும். இவ்வாறு செய்யப்படும் நல்வினை தீவினைகளாலே தப்பாமல் புண்ணிய பாவங்கள் என்று நின்று உயிர்களைப் பொருந்தும்.

முற்பிறவியில் செய்த நல்வினை தீவினைப் பயன்களை இப்பிறவியில் அனுபவிக்கும்பொழுது, இவை நாம் செய்த வினைகளின் பயன்கள் தாமே நாம்தாமே அனுபவிக்க வேண்டும் என்று அனுபவித்துத் தொலைத்துவிட்டால், பிற் பிறவிக்கு ஆகாமியம் ஏறாது; அஃதன்றி, நல்வினைப் பயனாகிய இன்பத்தை அனுபவிப்பதில் விருப்பமும், தீவினைப் பயனாகிய துன்பத்தை அனுபவிப்பதில் வெறுப்பும் கொள்வோம் ஆயின், அந்த விருப்பு வெறுப்புகள் ஆகிய ஆகாமியம் ஏறிப் பிற்பிறவியில் பயனாக வரும். அந்த விருப்பு வெறுப்புக்கள் மனத்தின் நினைவில் நிகழ்வன மட்டும் அன்றி, வாக்கின், செயலாலும் காயத்தின் தொழிலாலும் நிகழ்வன என்பதை உணர்த்தவே ''வினைவும் எல்லாம்'' என்றார். மூலத்த வினை – முன்புள்ள வினை – ஊழ்வினை புந்தி நண்ணாத வினை – அபுத்தி பூருவம் – தெரியாமற் செய்யும் வினை; புந்தி நணுகும் வினை – புத்தி பூருவம் – தெரிந்து செய்யும் வினை, ஏலுதல் – பொருந்துதல், இதம் – நன்மை, அகிதம் – தீமை, பிராரத்தம் – பிறவிக்குத் தொடக்கம் உடையது.

புண்ணிய பாவங்கள் வரும் வழியும், பாவம் போகும் வழியும்

உற்ற தொழில் நினைவு உரையில், இருவினையும் உளவாம்;
ஒன்று ஒன்றால் அழியாது; ஊன் ஒழியாது உன்னில்,
மற்று அவற்றின் ஒருவினைக்கு ஓர் வினையால் வீடு
வைதிக சைவம் பகரும் மரபில் ஆற்றப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பற்றியது கழியும்; இது விலையால் ஏற்கும்
பான்மையும் ஆம்; பண்ணுது பலிக்கும்; முன்னம்
சொல்தருநூல் வழியின் வரின், மிகுதி சோரும்;
சோராது அங்கு அது மேலைத் தொடர்ச்சி யாமே. 31

தெளிவுரை:

காயத்தின் தொழிலாலும், மனத்தின் நினைவினுலும், வாக்கின் செயலாலும் நல்வினை தீவினைகள் வருகின்றன. நல்வினை தீவினையாலும், தீவினை நல்வினையாலும் அழியாது. ஆராயும்பொழுது, அவ்வினைகளின் பயனை அனுபவிப்பது தவிராது, ஆயினும் அவ்விருவினைகளுள், தீவினை ஆகிய பாவத்துக்கு, நல்வினை ஆகிய பிராயச் சித்தத்தால் நிவிர்த்தி செய்தால், பற்றிய அந்தப் பாவம் நீங்கும். இந்தப் பிராயச்சித்தம், தானுகச் சாந்தி செய்துகொள்ள இயலாதபொழுது, பொருள் கொடுத்து வல்லவர்களைக் கொண்டு செய்யும் முறைமை உடையதும் ஆகும். ஆகவே ஒரு பிராயச் சித்தமும் செய்யாமலே பாவத்தைப் போக்கிக் கொள்ள வழியுண்டு. அஃது எப்படி என்ருல் முன்னே சொன்ன வேதாகமங்களில் விதிக்கப்பட்டபடி சரியை, கிரியை, யோக நெறிகளில் நின்று ஒழுகிவந்தால், எவ்வளவு பாவம் செய்தாலும் அவ்வளவும் நீங்கிவிடும். அந்த நெறிகளில் நின்றும் நீங்காமல் நிற்கும் எஞ்சிய பாவங்கள், மேல்வரும் பிறவிகளில் தொடர்ந்து வந்து பயனைத் தரும். (மற்று – அசை).

இந்தச் செய்யுளில் புண்ணியம் பாவத்தால் அழியாது. பாவம் புண்ணியத்தால் அழியாது என்னும் முக்கியமான சைவசித்தாந்தக் கொள்கை கூறப்பட்டுள்ளது. அஃதாவது புண்ணியப் பயனுகிய இன்பத்தையும் பாவப்பயனுகிய துன்பத்தையும் அனுபவித்துத் தான், இருவினைகளையும் அழிக்க முடியும் என்பது இனிதே பெறப்பட்டது.

மலங்களின் தொகை

மோகம் மிக உயிர்கள் தொறும் உடனுய் நிற்கும்
மூல ஆணவம் ஒன்று; முயங்கி நின்று
பாகம் மிக உதவு திரோதாயி ஒன்று;
பகர் மாயை ஒன்று; படர் கன்மம் ஒன்று;
தேகம் உறு கரணமொடு புவன போகச்
செயல் ஆரும் மாமாயைத் திரட்சி ஒன்று; என்று
ஆகமலம் ஐந்து என்பர்; ஐந்தும் மாருது
அருள் என்பது அரிது என்பர், அறிந்துளோரே. 32

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

அஞ்ஞானம் மிகும்படி ஆன்மாக்கள் தோறும் சகசமாய் அறிவை மறைத்து நிற்கும் மூலமலம் ஆகிய ஆணவமலம் ஒன்று, அந்த ஆணவமலத்தைப் பொருந்தி நின்று, பெரிதும் பக்குவத்தை உண்டாக்குகின்ற திரோதான சத்தி ஒன்று, முன்னே சொன்ன மாயாமலம் ஒன்று; உயிர்கள்தோறும் செறிந்திருக்கும் கன்மமலம் ஒன்று; தனு கரண புவன போகங்கள் ஆகிய மாயா காரியங்கள் பொருந்தி இருக்கும் மாயையின் கூட்டம் ஆகிய மாயேயம் ஒன்று; இவ்வாறாக மலம் ஐந்து என்று சொல்லுவார்கள். இந்த ஐந்து மலங்களும் நீங்கப் பெறுமல், திருவருளைப் பெறுவது அரிது என்று அறிவுடையோர் கூறுவார்கள்.

மாயை வேறு, மாயேயம் வேறாக வைத்து எண்ணப்பட்டதற்குக் காரணம், மாயை உயிரின் அறிவோடு சேர்ந்து அவ் அறிவை மயக்கும்; மாயேயம் அந்த மயக்கத்திற்கு முன்னிலைப் பொருளாய் இருக்கும் என்பதாலேயே ஆகும்.

அவத்தை இலக்கணம்

கேவலாவத்தை

ஓங்கி வரும் பல உயிர்கள் மூன்று அவத்தை பற்றி
உற்றிடும்; கேவல சகல சுத்தம் என உணர்வர்;
ஈங்கு வரும் கலாதியொடு குறி உருவம் ஒன்றும்
இன்றி, மலம் அன்றி ஒன்றும் இல்லை என்னும்
இயல்பாய்
ஆங்கு அறிவை அறிவரிதாய், அறிகருவி அணையா
ஆதலினல், இருள் மருவும் அலர் விழிபோல் அதுவாய்,
நீங்கும் வகை இன்றி, நித்த வியாபகமாய், அங்ஙண்
நிற்பது கேவலம் என்று நிகழ்த்தும் நூலே. 33

தெளிவுரை:

பக்குவம் பெறும் நிலையில் உயர்ந்துவரும் எண்ணில் அடங்காத உயிர்கள் மூன்று காரண அவத்தைகளைப் பொருந்தி நிற்கும். அவற்றைக் கேவலாவத்தை, சகலாவத்தை, சுத்த அவத்தை என்று அறிஞர்கள் கூறுவர். அவற்றுள் கேவலாவத்தை என்பது எப்படி இருக்கும் என்றால் அது வருமாறு:

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தற்சமயம் நாம் இருக்கும் இந்தச் சகலாவத்தையில் நிகழ்கின்ற கலை முதலிய தத்துவங்களும், பர உடம்பு, சூக்கும உடம்பு, தூல உடம்புகளும் கேவலாவத்தையில் இருக்காது. ஆணவமலம் ஒன்றே அன்றி வேறு ஒன்றும் இல்லை என்னும் தன்மை உடையதாய் இருக்கும்; உயிர்களின் அறிவு விளங்குவதற்காக வழங்கப்பட்ட கருவிகள் அந்நிலையில் கூடாமல் இருந்ததனால், உயிர் எந்த ஒரு பொருளையும் அறியமுடியாததாய் இருந்தது. இருளில் விழித்து இருக்கும் கண், இருளை மட்டுமே காணும்; அதுபோல ஆணவமலத்தைப் பற்றி நின்ற உயிர் ஆணவமலத்தை உடையதாக அந்த மல இருளில் அழுந்தி நின்றது. ஆணவமலத்தை விட்டு நீங்கும் வகை அறியாமையால், பிறப்பு இறப்பும் ஏகதேச தன்மையும் இன்றியிருந்தது. இவ்வாறு ஆணவமலத்தோடு மட்டும் கூடி நிற்கும் நிலையே, கேவல நிலை என்று ஆகமங்கள் கூறுகின்றன.

குறி – சூக்கும சரீரம். உருவம் – தூல சரீரம். 'பர உடம்பு'' என்பது, காரண சரீரம், கஞ்சுக சரீரம், குண சரீரம் என்னும் மூன்றும் ஆகும்.

கேவல நிலையில், மனம் முதலிய அறிகருவிகள் இல்லாமையால், ஆன்மா போகங்களை அறிந்து அனுபவிக்க இயலாது இருக்கும். அந்நிலையில் ஆன்ம அறிவுக்கு எந்த விதக் கேடும் இன்றி, மல மறைப்பு காரணமாக ஆன்ம அறிவு நிகழாமல் இருக்கும். அவ்வளவே, இஃது எது போல எனின், கண் இருளோடு கூடி விழித்திருக்கும் நிலையில், கண்ணின் ஒளிக்கு எந்தக் கேடும் இன்றிக், கண்ணின் ஒளி நிகழாமல் இருந்ததைப் போலாகும்.

குறிப்பு: ஆன்மாவின் அறிவு இச்சை செயல்களுள், அறிவையும் செயலையும், கேவல நிலையில் ஆணவ மலம் மறைத்தது என்று சாத்திரங்கள் கூறுகின்றன. ஆன்மா ஆணவ மலத்தைப் பற்றியதாலேயே, ஆணவ மல மறைப்பு ஆன்மாவுக்கு ஏற்பட்டது. அந்தப் பற்றும் செயல் ஆன்மா தன் இச்சையைக் கொண்டே செய்திருக்க வேண்டும் என்பது உய்த்து உணரத்தக்கது.

ஆணவமலம் பற்றிய ஐயப்பாடு

இன்மை மலம்; மாயை கன்மம் என்று இரண்டே; இறைதான்
இலங்கு பல உயிர்களும் முன் புரிந்த இருவினையின்
தன்மைகளால், எவர்களுக்கும் தனு கரண புவனம்
தந்திடும் இங்கு; இதனாலே, இரு பயனும் சார்ந்து
கன்மம் எலாம் நேராக நேராதல் மருவக்,
கடவுள் அருளால் எவையும் கழித்திடுவன்; அதனால்
பின் மலமானவை அணுகா; பெருகு ஒளிமுன்பு உளதே
பெற்றிடும் என்று இத்திறம் ஏன் பேசுமாறே. 34

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

ஆணவ மலம் என்று ஒரு பொருள் இல்லை. மாயை, கன்மம் என்று இரண்டு மலங்களே உள்ளன என்று சில மதவாதிகள் கூறுவர். அவ்வாறாயின் கீழ்க்காணுமாறு நடைபெறுவதற்கு என்ன காரணம் என்பது சிந்திப்பதற்கு உரியது.

உயிர்கள் முன் செய்த நல்வினை தீவினைகளுக்கு ஈடாக, எல்லா உயிர்களுக்கும் இறைவன் தனு கரண புவன போகங்களை வழங்குகிறான். இப்படி இறைவன் உயிர்களுக்கு இவற்றைக் கொடுத்ததால், உயிர்கள் இன்பத் துன்பங்களை அனுபவித்து, எல்லாக் கன்மங்களும் நேர் ஒத்து வரும் பொழுது, இறைவன் குரு மூர்த்தியாய் எழுந்தருளி வந்து, திருவருள் புரிந்து அந்த வினைகளை எல்லாம் நீக்கியருள்கிறான், இறைவன் செய்யும் தீக்கையினால் பின்பு அந்த மாயா கன்மங்கள் வந்து பொருந்தமாட்டா. ஆன்மாக்களும் முன்பு உள்ளதாகிய பேரறிவையே பெற்றிடும். (இந்தச் செய்யுள் ஐக்கியவாதிகள் கொள்கையை மறுப்பதற்காக எழுந்தது).

ஆணவமலம் உண்டு என்பதற்குப் பிரமாணம்

மாயை முதல் என வினையின் பான்மை முதல் எனவே
மன்னு பனை விதை மரபின் மயங்கும்; மலம் சுத்தற்கு
ஏயும் நெறி என்கொல்? அதன் இயல்பு ஆயின், முத்தி
என்பது என்? மற்று இவை நிற்க; இருங்கலாதி உணர்வாய்
மேயபினர், தன் உருவம் விளங்காமை விளக்கும்
மிகும் உலகம் தனில் என்னில், இவை விடுங்கால் உணர்வுள்
தோயும் நெறி இலதாதல், அறியாமை என நீ
சொல்லியது மலம் என்பர் துணிந்துளோரே. 35

தெளிவுரை:

மாயை முந்தியதா வினை முந்தியதா என்னும் தடை எழும்பொழுது, முந்தியது பனையோ விதையோ என்று வினவுவது போல, மயங்க நேரும், மேலும் முன்பு சுத்தனாய் இருந்த ஆன்மாவுக்கு, மாயா கன்மங்கள் வந்து பொருந்திய முறை எவ்வாறு? அஃது அந்த மலங்களின் இயற்கை என்று

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கூறிஞல், முத்தி அடைந்த பிறகும் அவை ஆன்மாவை வந்து கூடும்; ஆதலால் முத்தி என்பது ஒன்று உண்டு என்று சொல்வதற்கு என்ன இருக்கிறது? இவை நிற்க.

கலை முதலிய தத்துவங்கள் ஆன்மாவுக்கு அறிவைத் தருதல் பொருட்டு பொருந்திய பிறகு, ஆன்ம அறிவு விளங்காதபடி மறைத்து, பிரபஞ்ச ரூபத்தையே காட்டி நிற்கும் என்று சொன்ஞல், இந்தக் கலை முதலியன நீங்கிய கேவல நிலையில், ஆன்ம அறிவு விளங்காமல் இருந்ததற்கு என்ன காரணம்? அதற்குக் காரணம் அறியாமையே என்று நீ சொன்னதையே, உண்மையை உணர்ந்த பெரியவர்கள் ''அஃதே ஆணவமலம்'' என்கிருர்கள்.

பனை விதை வழக்கு. தால பீச நியாயம் எனப்படும். தாலம் – பனை. பீசம் – விதை.

இதுவும் அது

அந்நியம் ஆனவை உணர்த்தி, அநந்நியமாய் நிறைந்த
அறிவு அறியாமையிஞனும், அருள் நிலவும் காலம்
தன்னில் அவனே யாவுமாய் நின்ற தொன்மை
தாம் உணர்தலானும், உயிர்தான் என ஒன்று இலதாய்
மன்னியிடும்; மலம் மாயை கன்மங்கள் மாறி
வந்திடும்; இங்கு இது வழுவாது; ஆதலிஞல் மனத்தால்
உன்னரிய திருவருளை ஒழிய மலம் உளது என்று
உணர்வு அரிதாம்; அதன் உண்மை தெரிவரிதாம்
உனக்கே. 36

தெளிவுரை:

ஆணவமலம், உயிர்களுக்கு வேருய் இருக்கும் இந்தப் பொய்யான உலகத்தை, மெய்ப்பொருள் என அறிவித்து நிற்கிறது; உயிர்களோ தமக்கு வேறின்றிப் பரி பூரணமாய் நிற்கும் பேரறிவுடைப் பொருள் ஆகிய சிவத்தை அறியாமல் இருக்கின்றன; திருவருள் ஒளி ஆகிய சுத்த நிலையில், சிவமே எல்லாமாய் நின்ற பழமையினை உயிர்கள் அறியவில்லை. எனவே ஆணவ மலம், ஆன்மா என ஒரு பொருள் இல்லை என்னும்படி அந்த ஆன்மா தானேயாய் நிலைபெற்று நிற்கிறது. மாயையும் கன்மமும் சகல நிலையில் உயிரைப் பற்றுவதும், கேவல நிலையில் விடுவதுமாய், ஆகந்துகமாய் நிற்கின்றன. இந்த ஆணவ மலமோ கேவல நிலையிலும் சகல நிலையிலும் உயிரை விட்டு நீங்காது, சகசமாய் நிற்கிறது. ஆகவே, மனத்திஞல்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நினைப்பதற்கு அரிய திருவருளின் சகாயத்தால் அன்றி, ஆணவமலம் உண்டு என்று அறிய முடியாது. திருவருள் நோக்கு இல்லாத உனக்கு, மலத்தின் உண்மையை அறிவது அரிது ஆகும்.

இந்தச் செய்யுள் ஆணவ மல உண்மையை, ஆன்மா அறியாமல் இருப்பதற்குக் காரணம் கூறுகிறது. பிற மதத்தவர்கள் திருவருள் நோக்குப் பெருதவர்கள்; எனவே ஆணவ மலம் என ஒரு பொருள் உண்டு என்பதை அறியாமல் இருக்கிறார்கள்.

சகல அவத்தை

சகல அவத்தை நிகழும் முறையும் சூக்குமை வாக்கின் தொழிலும்

புகலும் மலம் ஒழித்தற்குக் கலாதி முதல் மாயை
பொருந்தியிடும், அரன் அருளால்; போதம், தீபம்,
சகலம் எலாம் உடனுய ஆறு போலும்;
தரும் அருளை, மலம் உயிர்கள் சாராமல் மறைக்கும்;
இகலி வரும் இவை உணரின் இருள் வெளியாம் தன்மை;
எய்தும் வகை தன் செய்தி; இலங்கும் விந்துப்
பகர்வு அரிய உணர்வு ஆகி, ஒளிஆய், உள்ளப்
பான்மையினுல், ஒரு நாதம் படரும் தானே. 37

தெளிவுரை:

மேலே சொன்ன ஆணவ மல மறைப்பை நீக்குதல் பொருட்டு, சிவபெருமான் அருளால், சுத்தமாயா காரியம் ஆகிய வாக்குகளும், கலை முதலிய தத்துவங்களும், உயிரை வந்து பொருந்தும். தீபம் அதைச் சேர்ந்த தண்டு, தகழி, நெய்திரி முதலிய பகுதிகள் எல்லாவற்றுடனும் கூடிப் பிரகாசித்து எரிவது போல ஆன்மாவின் அறிவு இந்த வாக்குகளோடும் தத்துவங்களோடும் கூடி விளக்கம் உறும். அவ்வாறு வாக்கு, கலை முதலியவற்றுல் ஆன்மாக்களுக்கு அறிவை விளங்கச் செய்கின்ற திருவருளை, ஆன்மாக்கள் அறிந்து சேராதபடி ஆணவமலம் ஆன்ம அறிவை மறைத்து நிற்கும்.

இப்படி மாறுபட்டு வரும் மல மாயைகளின் இயல்பை அறியும்பொழுது, இருளும் ஒளியும் போன்ற தன்மை உடையன ஆகும். ஆன்மா அறிவைப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பொருந்தும் முறையும் மாயா காரியங்களும் எவ்வாறு உள்ளன என்றால், மூலாதாரத்தில் விளங்கும் விந்து தத்துவத்திலிருந்து சொல்லுதற்கு அரிய ஞானத்திற்கு மட்டும் காரணம் ஆகியும், பர சரீரத்தின் உள்ளாகப் பிரகாசமாக விளங்கியும், ஆன்மா அறிகின்ற அறிவுக்கு ஈடாக ஒப்பற்ற சூக்குமை வாக்குத் தோன்றி, உந்தி தானத்திற்குச் செல்லும்.

''இருள் வெளியாம் தன்மை'' என்பது, ஆணவமலம் உயிரோடு ''கலந்து நின்று'' அதன் அறிவு இச்சை செயல்களை மறைப்பதையும், மாயை தனு கரண புவன போகங்களாய் உயிர்க்கு வேறாய் நின்று, அதன் அறிவு இச்சை செயல்களை விளக்குவதையும் குறிக்கும்.

''விந்து'' என்பது இந்த இடத்தில் அபர விந்துவைக் குறிக்கும். பரநாதம் எனப்படும் ஞான சத்தியும் பரவிந்து என்னும் கிரியா சத்தியும், சுத்த மாயையினைப் பொருந்துவதால், முறையே அபரநாதமும் அபரவிந்துவும் உண்டாகும். அந்த அபரவிந்துவிலிருந்து அக்கரங்கள் (எழுத்துக்கள்) தோன்றும், அபரநாதம் ஒலி வடிவாய் உள்ளது. அபரவிந்து சங்கற்ப ரூபமாய் உள்ளது. அக்கரம் வன்னரூபமாய் உள்ளது. வன்னம் – எழுத்து.

சூக்குமை வாக்கு மூலாதாரத்தில் விந்துவிலிருந்து தோன்றித் தோன்றி உந்தி தானத்திற்குச் செல்லும். இந்த சூக்குமை வாக்கு ஞானத்துக்கு ஏது ஆகிறது. அதுவே பர சரீரத்தின் உள்ளாக நாதமாத்திரையாக விளங்குகிறது. மூலாதாரம் துரியாதீதம் எனவும், உந்திதானம் துரியம் எனவும் பேசப்படும்.

சகல அவத்தையில் இவ்வாறு சூக்குமை வாக்கின் தொழில் நடைபெறுகிறது.

பைசந்தி, மத்திமை, வைகரி வாக்குகளின் தொழில்

வந்து அடைந்து பின்னமாய் வன்னங்கள் தோற்றம்
வரும் அடைவு பட ஒடுக்கி, மயில் அண்டசலம் நேர்
சிந்தைதனில் உணர்வு ஆகும் பைசந்தி; உயிரில்
சேர்ந்து வரும் அவை மருவும் உரு எவையும் தெரித்து,
முந்தியிடும் செவியில் உறுது, உள் உணர்வாய், ஓசை
முழங்கியிடும் மத்திமைதான்; வைகரியில் உதானன்
பந்தம் உறும் உயிர் அணைந்து வந்த மொழி, செவியின்
பால் அணைய, நினைந்த பொருள் புகரும் தானே. 3[illegible]

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

மேலே சொன்ன சூக்குமை வாக்கு உந்தி தானத்தைச் சென்று அடைந்து, அக்கரங்கள் வேறுவேருகப் பிரிந்து தோன்றும் முறைமை, சேர்ந்து இருக்கும்படி ஒடுக்கி, மயிலின் முட்டையினுள் இருக்கும் நீர்போல, இருதய தானத்தில் சிந்தையில் நிருவிகற்ப உணர்வுக்கு ஏதுவாய் நிற்கும். அப்பொழுது சூக்குமை வாக்கு, பைசந்தி வாக்கு எனப்படும்.

பின்பு சூக்கும வாக்கு, பிராண வாயுவோடு கூடிவருகின்ற அக்கரங்கள் பொருந்த சூக்கும ரூபங்கள் எல்லாவற்றையும் வேறு வேருகப் பிரித்து, முற்பட்டு வரும் செவிக்குக் கேளாமல், தான் மாத்திரம் உணர நிற்கும் சவிகற்ப உணர்விற்கு ஏதுவாய், மெல் ஓசையாய், கண்டத்தில் ஒலிக்கும். அந்நிலையில் சூக்குமை வாக்கு, மத்திமை வாக்கு எனப்படும்.

வைகரி வாக்கு எனப்படும் நிலையில், உதான வாயு அகங்கார தத்துவத்தால் செலுத்தப்படும் பிராண வாயுவைக் கூடுவதால் வந்த சூக்குமை வாக்கு ஆகும். அது தன் செவிக்கும் பிறர் செவிக்கும் கேட்கும்படி, மனத்தில் நினைத்த ஒருபொருளை, சொல்பவனுக்கும் கேட்பவனுக்கும் சவிகற்ப உணர்வு உண்டாவதற்கு ஏதுவாய்ச் சொல்லும், பைசந்தி, மத்திமை, வைகரி வாக்குகள் மூன்றும் சூக்கும வாக்கின் விருத்திகள் ஆகும்.

மயிலின் முட்டையில் உள்ள நீர், ஐந்து நிறங்களையும் சூக்கும ரூபமாக அடக்கி இருக்கும்; அதுபோல, எழுத்துக்கள் பிரிந்து தோன்ருமல் மிகவும் சூக்கும ரூபமாய் இருக்கும். அந்நிலையில் சூக்கும வாக்கு, பைசந்தி என்னும் பெயரைப் பெறும். சில கருத்துக்கள் சித்தத்தில் தோன்றும்; ஆனால் அவற்றை எப்படிக் கூறுவது என்பது அறியாமல் இருப்போம். அவ்வாறு சொல்ல முடியாமல் நிற்கும் வாக்கு, பைசந்தி வாக்கு எனப்படும்.

பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் வாக்குகள் மூன்றும் தோன்றி நின்று அழியும் தன்மையன ஆகும். சூக்குமை வாக்கு சுத்த மாயா ரூபமாய் அழிவு இன்றி, நிலை பெற்று இருக்கும்.

ஆன்ம அறிவு விளங்கும் முறையும் கலை, வித்தைகளின் தொழிலும்

இத்தகைமை இறை அருளால் உயிர் அறியும் அறிவுக்கு
ஈடாக, வாடாதே ஈர்இரண்டின் உரைத்த
வித்தை முதல் ஐவரான், விளங்கும் ஞானம்
மேவியிடும் என உரைப்பர்; அசுத்த மாயை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வைத்த கலைதான் மூலமலம் சிறிதே நீக்கி
மருவும் வகைதெரிவிக்கும்; வாயில்களின் பயனைப்
புத்தி தர, வித்தை இடைநின்று, அறிவை உயிர்க்குப்
பொருந்தியிடும் வகை புணரும், புனித சத்தி புணர்ந்தே. 39

தெளிவுரை:

இந்த முறையிலே, சிவபெருமான் அருளால், உயிர் அறியும் அறிவுக்குத் தக்கபடி, தவிராமல் வரும் நான்கு வாக்குகளினாலும், முன்னேசொன்ன சுத்த வித்தை முதலிய தத்துவகர்த்தாக்கள் ஐவராலும் விளங்குகின்ற விடய ஞானம் உயிரைப் பொருந்தும் என்ற அறிவுடையோர் கூறுவர். அஃது எப்படி என்றால், அசுத்த மாயையிலிருந்து வந்த கலை, ஆணவ மலத்தைச் சிறிதே நீக்கி, விடயங்களைப் பொருந்தும்படி, ஆன்மாவின் கிரியாசத்தியை விளக்கி நிற்கும்.

வித்தை, இந்திரியங்களின் வாயிலாக வரும் விடயங்களைப் புத்தி நிச்சயித்துத் தன்னிடத்துக் கொடுக்க, தான் ஆன்மாவுக்கும் புத்திக்கும் இடையில் நின்று, அந்த விடயங்களை ஆன்மா பொருந்தும்படி, ஆன்மாவுக்கு அறிவைக் கூட்டி நிற்கும். சிவசத்தி இவற்றின் உடன் நின்றே இவை நிகழ்வன ஆகும்.

ஆணவ மலத்தைச் சிறிதே நீக்கி, ஆன்மாவின் கிரியா சத்தியை விளக்குவதும், விடய போகங்களில் ஆன்மாவைச் செலுத்துவதும் கலை தத்தவத்தின் தொழில் ஆகும். ஆன்மாவின் ஞான சத்தியைச் சிறிதே விளக்கி, ஆன்மாவை போகத்தில் செலுத்துவது வித்தை தத்துவத்தின் தொழில் ஆகும்.

அராகம், நியதி, காலம் என்னும் தத்துவங்களின் தொழில்

பேசஅரிய அராகம், தன் கன்மத்துக்கு ஈடாகப்
பெற்றதனில் ஆசைதனைப் பெருகுவிக்கும், நியதி,
தேசம் மிகும் அரசர் தரும் ஆணை; செய்தி
செய்தவரைத் துய்ப்பிக்கும் செய்தி போல,
நேசம் உறும் தம் கன்மம் நிச்சயித்து நிறுத்தும்;
நிகழ்காலம், கழிகாலம், எதிர்காலம் என்றே
ஓசைதர வரும் காலம், எல்லை பலம் புதுமை
உறுவிக்கும், இறை சத்தி உடனாய் நின்றே. 40

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

சொல்லுவதற்கு அரிய அராக தத்துவம், உயிர்கள் தத்தம் கன்மத்துக்கு ஈடாகப் பெற்ற போகங்களில் இச்சையை மிகுவிக்கும். மிகுந்த பரப்பளவு கொண்ட தேசத்தை ஆளும் ஓர் அரசனது ஆணை, அவனது நாட்டில் உள்ள மக்கள் செய்யும் செயலுக்கு ஏற்ற பயனை அனுபவிக்கச் செய்வது போல, மிகுந்த விருப்பத்துடன் உயிர்கள் செய்த வினைகளுக்கு ஏற்ற பயன்களை அந்தந்த உயிரே அனுபவிக்கும்படி, நியதி தத்துவம் நிச்சயம் பண்ணி நிறுத்தும்.

இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் எனச் சொல்லப்பட்டுவரும் காலதத்துவம் இறந்த காலத்தின் எல்லையினையும் நிகழ்காலத்துப் பயனையும் எதிர்காலத்து புதுமையினையும் வரையறை செய்து நிற்கும். இறையருள் உடன் நின்றே இவை அனைத்தும் நிகழ்கின்றன.

வித்தை தத்துவத்தின் வாயிலாக ஆன்மா அறிந்த போகத்தில் அராகம் இச்சையை மிகுவிக்கும். இறைவனின் இச்சா சத்தி ஈசுவர தத்துவத்தை எழுப்ப ஈசுவர தத்தவம் அராகத்தை எழுப்ப அராக தத்துவம் ஆன்மாவுக்கு இச்சையை எழுப்பும்.

இறைவனின் கிரியா சத்தி, சத்தி தத்துவத்தை எழுப்ப சத்தி தத்துவம் காலத்தையும் நியதியையும் செலுத்த கால தத்துவம் ஆன்மாவுக்குக் கன்மத்தைக் கூட்டி நிற்கும்; நியதி தத்தவம் கன்மத்தை வரையறை செய்து, அதன் பயனை ஆன்மா தப்பாமல் அனுபவிக்கச் செய்யும். அஃதாவது அந்தந்த உயிர் செய்த கன்மத்தின் பயன், வேறோர் உயிரை அடையாமலும், அந்தந்த உயிரை விட்டு நீங்காமலும், ஏறுமலும் குறையாமலும் பொருந்தச் செய்வதாகும்.

''கழிகால எல்லை'' என்பது, அனுபவித்துத் தொலைந்த விடய போகத்தைக் குறிக்கும். ''எதிர்காலப் புதுமை'' என்பது இனிமேல் அனுபவிக்க இருக்கும் விடய போகத்தைக் குறிக்கும். ''நிகழ்காலப் பலன்'' என்பது, இப்பொழுது அனுபவித்துக் கொண்டிருக்கும் வினைப்பயன் ஆகிய விடய போகத்தைக் குறிக்கும்.

நியதி தத்துவம் இல்லையாயின், ஒருவன் செய்த கன்மத்தின் பயனை வேறொருவன் அனுபவிக்க வேண்டிவரும். அது பொருத்தம் அற்றது ஆகலின், நியதி தத்துவம் வேண்டியதாயிற்று.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

புருட தத்துவமும் பிரகிருதியும்

ஐவகையால் உறுபயன்கள் நுகரவரும் காலம்
அது புருடதத்துவம் என்று அறைந்திடுவர், அறிந்தோர்;
மெய் வகைய கலாசுத்திதனில் இதற்கும் சுத்தி
மேவியிடும் வகைதானும் விரும்பிய நூல் விளம்பும்;
செய்வகையின் தொடர்ச்சி இங்குத் தோற்றுவிக்கும் குணத்தின்
சேர்வு புரி பிரகிருதி திரிகுணமாம்; அவைதாம்
இவ்வகையால் சாத்துவிக ராசத தாமதமாய்
இயம்புவார்கள்; ஒன்று இரண்டு குணம் ஏற்கை
உடைத்தே. 41

தெளிவுரை:

கலை, வித்தை, அராகம் என்னும் ஐந்து தத்துவங்களின் உதவியால், தன்னிடத்து வந்து பொருந்தும் வினைப் போகங்களை ஆன்மா அனுபவிக்கக் கருதும் நிலையிலே, அது புருட தத்துவம் ஆகும் என்று அறிந்தவர்கள் கூறுவர்.

சரீரத்தில் ஐந்து வகையான கலாசோதனை செய்யும் பொழுது, இந்த புருட தத்துவத்திற்கும் சுத்தி செய்யும் முறைமையினை ஆகமங்கள் சொல்லுகின்றன. முன்பு செய்த நல்வினை தீவினைகளின் பயனுய் வரும் இன்பத் துன்ப மயக்கங்களை இப்பிறவியில் உண்டாகும் குணங்களின் கூட்டம் ஆகிய பிரகிருதி, மூன்று குணம் ஆகும். அந்த மூன்று குணங்களும் செயல் வகையால், சாத்துவிக குணம், தாமத குணம் என்று கூறுவர். அவற்றுள் ஒவ்வொன்றும் இந்த இரண்டு குணங்களைப் பொருந்தும் இயல்பினை உடையதாகும்.

புருடன், பஞ்ச கஞ்சுகன், புருட தத்துவம் என்பன, ஒரே பொருளை உடைய பல பெயர்கள் பும்ஸ்த்துவ மலம்' எனப்படும். பும்ஸ்த்துவம் என்பது, பிரகிருதி சம்பந்தமாக புருடத் தன்மை பெற்றிருப்பதைக் குறிக்கும். இந்நிலை கலாதி பந்தம் வருவதற்கு முன்பு இல்லை; எனவே சகலர் வகை ஆன்மாக்களுக்கு மட்டும் பும்ஸ்த்துவ மலம் உண்டு.

''கலாசோதனை'' என்பது, தீக்கை செய்யும்பொழுது குருநாதர், நிவிர்த்திகலை முதலிய ஐந்து கலைகளையும் மாணவனது சரீரத்திலே ஐவகைப்படுத்தி, சரீர சுத்தி செய்வதைக் குறிக்கும். அவ்வாறு கலாசோதனை செய்யும் பொழுது உடலில் உள்ள பாகங்கள் கீழக் காணுமாறு பிரித்து ஆகமங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நிவிர்த்தி கலை	–	முழந்தாள் முதல் பாதம் வரை;
பிரதிட்டா கலை	–	நாபி முதல் முழந்தாள் வரை;
வித்தியா கலை	–	இருதயம் முதல் நாபி வரை;
சாந்தி கலை	–	புருவம் முதல் இருதயம் வரை;
சாந்தியதீத கலை	–	சிகை முதல் புருவம் வரை.

பிரகிருதி தத்துவம், அவ்வியத்த குண வடிவாய் உள்ளது. ''அவ்வியத்தம்'' என்பது, வெளிப்படாமல் இருப்பது; அஃதாவது பிரிந்து தெரியாமல் இருப்பது ஆகும். பொன்னில், அணிகலன்கள் அடங்கி இருப்பது போல, முக்குணங்களும் பிரகிருதியில் அடங்கி இருக்கின்றன. எனவே, பிரகிருதி அவ்வியத்தம் எனப்படுகிறது.

முக்குணங்களின் தொழிலும், புத்தியின் தொழிலும்

அலகு இல்குணம், பிரகாசம் லகுதை, வியாபிருதி
அடர்ச்சி, மிகும் கௌரவம் நியமம் இவை அடைவே
நிலவியிடும்; மும்மூன்றும் உயிர் ஒன்றில் கலந்தே
நிற்கும்; இவை நிறை புலனின் பயன் எவையும் கவரும்;
குலவி வரும் போகம் கொள் இடமாம்; மாறுக்
குறைவில் ஒளியாம்; அலகு இல் புலனிடத்தில் ஒருமை
பலவகையும் உடையதாய்ப் பரன் அருளால் புந்தி
பஞ்சாசத் பாவகமும் பண்ணுவிக்கும் தானே. 42

தெளிவுரை:

குணங்கள் எண்ணிக்கையில் அடங்காதன ஆகும். சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் முக்குணங்களும் ஒரு காலத்திலும் ஒத்து விளங்குவதில்லை. ஒரு குணம், மற்றைக் குணங்கள் இரண்டையும் அடக்கித் தான் மேலிட்டு நிற்கும். அவ்வாறு நிற்கும் பொழுது, ஒரு குணத்தில் இரண்டு குணம் தோன்றிப் பிரதான குணத்துடனே கூட, மூன்று குணம் ஆகும். இப்படியே மூன்று குணமும் ஒன்பது குணம் ஆகும். அவையாவன, சாத்துவிதத்தில் சாத்துவிகம், சாத்துவிகத்தில் இராசதம், சாத்துவிகத்தில் தாமதம்; இராசதத்தில் இராசதம், இராசதத்தில் தாமதம், இராசதத்தில் சாத்துவிகம், தாமதத்தில் தாமதம், தாமதத்தில் இராசதம், தாமதத்தில் சாத்துவிகம் என்பன ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இவற்றுள், சாத்துவிக குணம், இராசத தாமத குணங்களை அடக்கித் தான் மேலிட்டு இருக்கும் பொழுது, பிரகாசம் இலகுதை என்னும் இரண்டு குணங்கள் தோன்றும். ''பிரகாசம்'' என்பது ஞானம் ஆகும், 'இலகுதை'' என்பது மனவாக்குக் காயங்களில் எளிமையாக இருப்பதைக் குறிக்கும்.

இராசத குணம், தாமத சாத்துவிக குணங்களை அடக்கித் தான் மேலிட்டு இருக்கும்பொழுது, வியாவிருத்தி, அடர்ச்சி என்னும் இரண்டு குணங்கள் தோன்றும். ''வியாவிருத்தி'' என்பது, சலனம் அல்லது அசைவு ஆகும். ''அடர்ச்சி'' என்பது, சிந்தனை, உரை, செயல்களில் குரூரம் இருப்பதைக் குறிக்கும்.

தாமத குணம், இராசத சாத்துவிக குணங்களை அடக்கித் தான் மேலிட்டு இருக்கும்பொழுது, கௌரவம், அநியமம் என்னும் இரண்டு குணங்கள்தோன்றும். ''கௌரவம்'' என்பது, தற்பெருமை ஆகும். ''அநியமம்'' என்பது, தகாத செயலைச் செய்ய வேண்டும் என்னும் எண்ணத்தைத் தோற்றுவிப்பதைக் குறிக்கும்.

இவ்வாறு ஆறு குணங்களும் தோன்றி, பிரதான குணங்களோடு கூடி ஒன்பது குணங்கள் ஆகும். இந்த குணங்கள் ஒன்பதும் புத்தி தத்துவத்துடன் கூடி ஆன்மா விடயங்களை அறிவதற்கு உபகாரம் செய்து நிற்பனவாகும். இந்த ஒன்பது குணங்களும் ஒவ்வொரு உயிரிலும் கூடி நிற்கும். இந்த முக்குணங்களும் எதிர் நிரல் நிறையாக, நிறைந்த இந்திரியங்களால் வரும் விடயங்கள் எல்லாவற்றிலும் ஆசையை உண்டாக்கும். அந்நிலையில் ஆன்மா கொண்டாட்டத்துடன் போகங்களில் இச்சை மீதூர்ந்து நிற்கும்.

ஒருபோது நீங்காத பூரணமான பிரகாசமாக இருக்கும் புத்தி தத்துவம், அளவற்ற விடயங்களில் பெரும்பான்மையும் ஒற்றுமை உடையதாகி, சிவபெருமான் அருளால் ஐம்பது குணங்களைச் செய்து நிற்கும். (பஞ்சசரத் – ஐம்பது) புத்தியில் வாசன ரூபமாய் இருக்கும் குணங்கள் ஆன்மக் குறியைப் பாவிக்கின்றமையால், பாவங்கள் ஆகும். (பாவகம் – குணம்).

அறிவு எட்டு, மயக்கம் ஒன்பது அறிய இயலாத புத்தி ஆகிய அசத்தி இருபத்தெட்டு, ஒன்றை வேறொன்றாகக் காணும் விபரீத புத்தி ஐந்து ஆக குணங்கள் ஐம்பது ஆகும். (அறிவு – சித்தி; மயக்கம் – துஷ்டி; அறியா புத்தி – அசத்தி; விபரீதம் – விபர்யயம்).

தமோ குணம் விடய போகங்களில் உயிர்க்கு இச்சையை உண்டாக்கும்; இராசத குணம் விடய போகங்களைப் பற்றச் செய்யும்; சாத்துவிக குணம் அந்த போகங்களை அறியச் செய்யும். புத்தி தத்துவம், முக்குண சொரூபமாய் இருந்து, இந்திரியங்கள் வாயிலாக வரும் விடயங்களைப் பகுத்து உணர்ந்து நிச்சயிக்கும். மேலும் அஃது ஐம்பது பாவகங்களைச் செய்து நிற்கும். (பாவகம் – குணம்).

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அகங்காரம், மனம், சித்தம் என்னும் தத்துவங்களின் தொழில்

ஆனதனு அதனில் உறும் அநிலனையும் இயக்கி,
ஆங்காரம் நீங்காத அகந்தைக்கு வித்தாய்,
யான் அலது பிறர் ஒருவர் எனை ஒப்பார் புவியில்
இல்லை எனும் இயல்பினதாய், இந்திரியம் புலன்கள்
தாம் நுகரும் அளவில், அதின் முந்தி உறும்; இச்சை
தான் உருவாய்ச் சங்கற்ப சதாகதியும் தந்து
மானத மானது நிற்கும்; சிந்தை நினைவு; ஐயம்
வந்து தரும் மனம் ஒழிய வகுப்பு ஒணுதே. 43

தெளிவுரை:

அகங்கார தத்தவம், வினைக்கு ஈடாக உண்டான உடம்பில் பொருந்தி இருக்கும் பிராணன் முதலிய வாயுக்களை இயங்கச் செய்து, விட்டு நீங்காத 'நான்' என்னும் செருக்குக்கு மூலமாய், ''என்னை ஒப்பவர் பூவுலகில், என்னை யல்லது பிறர் ஒருவரும் இல்லை'' என்னும் இயல்பு உடையதாய், இந்திரியங்கள் விடயங்களை நுகரும்பொழுது, அந்த விடயங்களில் முற்பட்டுப் பொருந்தும்.

மனம், இச்சையினையே தனக்கு வடிவமாய் ஒன்றை நினைப்பதையும் ஓயாத சஞ்சலத்தையும் செய்யும். சித்தம், நினைவ மாத்திரையாய் நிற்கும். சந்தேகத்தை ஏற்படுத்தும் மனத்தைத் தவிர, சித்தத்தை வேறாக வைத்துக் கூற முடியாது. மனத்தின் சந்தேக நிலையே சித்தம் என்பது இந்த ஆசிரியரின் கருத்து.

ஞானேந்திரியம் கன்மேந்திரியங்களின் தொழில்

சொன்ன முறை, செவி, துவக்கு, நோக்கு, நாக்குத்,
துண்டம் இவை ஐந்திற்கும் தொகு விடயமாக
மன்னிய சத்தப், பரிச, ரூப, ரச, கந்தம்
மருவியிடும் இவை அடைவே; வாக்குப் பாதம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பின்னர் வரு பாணி, மிகு பாயுவிஞேடு உபத்தம்
பேசலுறும் ஐந்திற்கும், பிறங்கு ஒலிகொள் வசனம்,
உன்னரிய கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம்
உற்ற தொழில் பெற்றிடுவது உண்மையே. 44

தெளிவுரை:

முன்பு சொன்னபடி, செவி, மெய், கண், நாக்கு, நாசி என்னும் அறிகருவிகள் (ஞானேந்திரியங்கள்) ஐந்துக்கும், நெருங்கிய விடயங்களாக நிலைபெற்ற சத்தம், பரிசம், உருவம் இரதம், கந்தம் என்னும் ஐந்தும் பொருந்தும். சத்தம் – ஓசை; பரிசம் – ஊறு; உருவம் – ஒளி; இரதம் – சுவை; கந்தம் – நாற்றம்.

வாக்குப், பாதம், பின்வரும் பாணி (கை) மிக்க பாயு (எருவாய்), உபத்தம் (கருவாய்) என்று கூறப்படும் செயற் கருவிகள் (கன்மேந்திரியம்) ஐந்துக்கும், விளங்குகின்ற ஓசை பொருந்திய வசனம், (பேசுவது) நினைத்தற்கு அரிய கமனம் (நடை–போவதும் வருவதும் செய்வது) தானம் (கொடுத்தலும் பெறுதலும்), விசர்க்கம் (மலசலம் கழித்தல்), ஆனந்தம் (மகிழ்வுறுதல்) என்னும் ஐந்தும் முறையே பொருந்திய தொழில்களாகும். இந்தத் தொழில்களை அந்தக் கருவிகள் பெற்றிருப்பது உண்மை ஆகும்.

ஞானேந்திரியங்கள் ஐந்தும் ஆன்மாவின் ஞான சத்தி தொழிற்படுவதற்குத், துணைக் கருவிகளாக இருப்பதால், அவை ஞானேந்திரியம் எனப்படுகின்றன. கன்மேந்திரியங்கள் ஐந்தும் ஆன்மாவின் கிரியா சத்தி தொழிற்படுவதற்குத், துணைக் கருவிகளாக இருப்பதால், அவை கன்மேந்திரியம் எனப்படுகின்றன. ஞானேந்திரியம் கன்மேந்திரியத்திற்குத் துணையாய் இருக்கும்; கன்மேந்திரியம் ஞானேந்திரியத்திற்குத் துணையாய் இருப்பதில்லை.

சத்தம் முதலிய ஐந்தும் விடய தன் மாத்திரை என்றும், காரிய தன் மாத்திரை என்றும், பூத குணம் என்றும் கூறப்படும். காரண தன் மாத்திரைகள் ஐந்தும் பஞ்ச பூதங்கள் தோன்றுவதற்குக் காரணமாய் இருக்கின்றன. காரண தன் மாத்திரை வேறு; காரிய தன்மாத்திரை வேறு காரிய தன்மாத்திரை பஞ்ச பூதங்களின் தோற்றத்திற்குக் காரணமாய் இருப்பதாகும்; காரிய தன் மாத்திரை இந்திரியங்களின் விடய அனுபவத்திற்குக் காரணமாய் உள்ளன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஞானேந்திரியங்கள் தொழிற்படும் முறை வருமாறு:

சுரோத்திரம் (செவி), ஆகாயம் பற்றுக் கோடாகச் செவிகளைப் பொருந்தி நின்று ஓசையை அறியும்; தொக்கு (தோல்), வாயு பற்றுக் கோடாக சரீரத்தைப் பொருந்தி நின்று பரிசத்தை (ஊறு) அறியும்; சட்சு (கண்), தேயு பற்றுக் கோடாகக் கண்களைப் பொருந்தி நின்று உருவத்தைக் காணும்; சிங்நுவை (நாக்கு), அப்பு பற்றுக் கோடாக நாக்கைப் பொருந்தி நின்று சுவையை அறியும்; ஆக்கிராணம் (மூக்கு), பிருதிவி பற்றுக் கோடாக மூக்கைப் பொருந்தி நின்று மணத்தை அறியும்.

கன்மேந்திரியங்கள் தொழிற்படும் முறை வருமாறு:

வாக்கு (வாய்) ஆகாயத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டு நின்று பேசும்; பாதம் (கால்) வாயுவைப் பற்றுக் கோடாகக் கொண்டு நின்று நடத்தலைச் செய்யும்; பாணி (கை) தேயுவைப் பற்றுக் கோடாகக் கொண்டு நின்று இடுவதையும் ஏற்பதையும் செய்யும். பாயு (எருவாய்) அப்புவைப் பற்றி நின்று மலசலம் கழிக்கும்; உபத்தம் (கருவாய்) பிருதிவியைப் பற்றி நின்று இன்பத்தை உண்டு பண்ணும்.

இந்திரியம் வேறு; கருவி வேறு. ''இந்திரியம்'' என்பது உணர்வுக்கு இடமாக இருப்பதைக் குறிக்கும்; ''கருவி'' என்பது, அந்த உணர்வைச் செயல்படுத்துவதற்கு உதவும் பொறியைக் குறிக்கும். இந்திரியம் – Sensual organ (i.e) perceptive organ. – கருவி – organs of action பல இடங்களில் இந்திரியம், கருவி என்னும் பொருளில் பேசப்படுவதைக் கொண்டு, இந்தவேறுபாட்டினை மறந்துவிடலாகாது.

பஞ்சபூதங்களின் தொழில்

முந்திய ஐம்பூதங்கள் வான் ஆதியாக
முயங்கிய நற்செவி, நாசி, கண், நா, மெய்ம் முறையால்
இந்த வயின் நின்று, வரும் ஐம்புலனும் உயிர்தாம்
எய்தும் வகை தம் உருவின் இல்ங்கியிடும்; புறத்தும்
வந்து அடைய இடம் கொடுக்கும்; நிரந்தரமாய் வானம்,
வாயு மிகச் சலித்து எவையும் திரட்டும்; தீ வெம்மை
தந்து அவை சுட்டு ஒன்றுவிக்கும்; நீர் குளிர்ந்து பதமே
தரும்; உரத்துத் தரிக்கும், முந்து தரணி தானே. 45

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

முன்பு சொல்லப்பட்ட ஐந்து பூதங்களும், ஆகாயம் முதலாக சரீரத்தில் பொருந்தி இருக்கும் நல்ல செவி, மெய், கண், நாக்கு, மூக்கு என்னும் இந்த இடங்களில் நின்று, இந்திரியங்களின் இடமாக வருகின்ற ஓசை முதலிய விடயங்கள் ஐந்தையும், உயிர் அறியும்படி தத்தம் சொரூபத்தோடு விளங்கும்.

ஆகாயம், புறத்தில் உள்ள மற்றைப் பூதங்கள் எல்லாம் தன்னிடத்தில் வந்து அடைவதற்கு, வெளியாய் இடம் கொடுத்து நிற்கும். வாயு, மிகவும் சலனம் உடையதாய் எல்லாவற்றையும் திரட்டும். நெருப்பு, வெப்பத்தைக் கொடுத்து அவற்றைச் சுட்டு ஒன்றுபடுத்தும். நீர், குளிர்ந்து பதம் செய்து நிற்கும். பிருதிவி, கடினமாகி எவற்றையும் தாங்கி நிற்கும்.

பஞ்ச பூதங்கள், அகப்பூதம், அகப்புறப் பூதம், புறப்பூதம் என மூவகைப்படும். அவற்றுள், இந்திரியங்களுக்குப் பற்றுக் கோடாய் உள்ளவை அகப் பூதங்கள் ஆகும். உயிர்க்குள்ள சரீரமாய் இருப்பவை, அகப்புறப் பூதங்கள் ஆகும். ''சரீரம்'' என்பது, உயிர்க்குப் போகம் தோன்றுவதற்குக் கருவியாய் இருந்து, இன்பத் துன்பங்களைப் புலப்படுத்துவதைக் குறிக்கும். உயிர்களால் பற்றப்படும் பொருள் ஆகிய விடயமாய் இருப்பது புறப் பூதங்கள் ஆகும். அவையே புறத்தே உலகில் காணப்படும் மண் நீர் நெருப்பு காற்று ஆகாயம் என்பனவாகும்.

உயிர், தத்துவங்களோடு கூடிப் பிறந்து இறந்து, வினைப்பயனை அனுபவிக்கும் வகை

இந்நிலையில், ஐந்து சுத்தம், ஏழ் சுத்தாசுத்தம்,
எண்மூன்றும் அசுத்தம் எனும் இவை முப்பத்து ஆறும்;
மன்னிய தத்துவங்கள் இடைமயங்கி, நெடுந்துயர் தாம்
மருவும்; உருநிலை அழிய வரும்பொழுது, வரிஆர்
பன்னகம், அண்டசம், கனவு படர்வகையே முன்னம்
பகரவரும் கலாதிநிலை பரவிய சூக்குமம் ஆம்;
தன் உருவின் அணைந்து பயன் அருந்தி, அரன் அருளால்
தரையின் இடைவரும் என்று சாற்றும் நூலே. 46

தெளிவுரை:

இவ்வாறு சொல்லி வருகின்ற முறையிலே, சுத்தவித்தை முதலிய ஐந்தும் சுத்த தத்துவம் எனப்படும்; கலை முதலிய ஏழும் சுத்தாசுத்த தத்துவம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எனப்படும். பிருதிவி முதலிய இருபத்து நான்கும் அசுத்த தத்துவம் எனப்படும்; ஆக தத்துவங்கள் முப்பத்து ஆறு ஆகும். இவ்வாறு பொருந்திய தத்துவங்களின் வழியே ஆன்மா மயங்கி, பெரும் துன்பத்தை அனுபவிக்கும் சரீரம் நிலைகுலைய நேரும்பொழுது, இறந்தும் பிறந்தும் உழலும். அஃது எப்படி என்றால், வரியை உடைய பாம்பு முன்னைத் தோலை உரித்துவிட்டுப் போவது போலவும், நனவில் கண்டவற்றைக் கனவு காணும்பொழுது மறந்து, உயிரறிவு வேறுபட்டு நிற்பது போலவும் ஆகும்.

முன்பு சொல்லப்பட்ட கலை முதலிய தத்துவங்கள் கூடிய நுண்ணுடலோடு, உயிர் சுவர்க்கம், நரகங்களை அடைந்து, பூதாசார உடம்புகளைப் பெற்று, இன்பத் துன்பங்களை அனுபவித்து சிவபெருமான் திருவருளால் இந்தப் பூவுலகில் மீண்டும் வந்து பிறக்கும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

அசுத்த தத்துவங்களைச் செலுத்துவதால், சுத்த தத்துவம் ''பிரேரக காண்டம்'' எனப்படுகிறது. (பிரேரகம் – செலுத்துதல்) சிவசத்தி, சுத்த தத்துவங்கள் வாயிலாக, அசுத்த தத்துவங்களைக் காரியப்படுத்தி, அங்குள்ள ஆன்மாக்களுக்குக் கன்மம் ஏறுவதற்கும், அந்த ஆன்மாக்கள் பரகதி அடைவதற்கும் ஆகிய வழிகளைச் செய்வதால், சுத்த தத்துவம் ''சுத்தாத்துவா'' எனவும் படும்.

சுத்த மாயைக்குக் கீழ் உள்ள 'மாயை' முதலிய ஏழு தத்தவங்கள், சுத்தா சுத்த தத்துவம் என்றும், போக காண்டம் என்றும், போசயித்திருகாண்டம் என்றும், வித்தியா தத்துவம் என்றும், மிச்சிராத்துவா என்றும் பேசப்படும். உயிர்களுக்கு போகத்தைக் கொடுப்பதால் போக காண்டம் எனப்படும். ஆன்மாக்கள் விரும்பியவாறெல்லாம் சகாயமாய் நின்று போகத்தைப் புசிப்பிக்கையால் போசயித்திரு காண்டம் எனப் படுகிறது. (போசயித்திரு – புசிப்பிப்பது). வழங்குவது வேறு; அனுபவிக்கச் செய்வது வேறு. ''பொன்னும் மெய்ப் பொருளும் தருவது'' – போகத்தை வழங்குவது; ''போகமும் திருவும் புணர்ப்பது'' – போகத்தை அனுபவிக்கச் செய்வது, உயிர்க்குச் சிற்றறிவை எழுப்பும் தத்தவம் ஆகலின், வித்தியா தத்துவம் எனப்படுகிறது.

உயிர்க்கு அறிவு விளங்குமாறு செய்வதால் சுத்தமும், சூக்கும தேகமாக அமைவதால் உயிர்க்கு இன்ப துன்ப மயக்கம் ஏற்படுவதற்குக் காரணமாக இருப்பதால் அசுத்தமும் ஆகி, சுத்தாசுத்த தத்துவம், மிச்சிராத்துவா என்னும் பெயர்களை உடையதாகிறது.

பிரகிருதிக்குக் கீழ் ஆகிய குணதத்துவம் முதலிய இருபத்து நான்கு தத்துவங்களும், உயிர்க்குள்ள முக்குண வயமாய் நிற்பதால், இன்பதுன்ப

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மயக்கங்களை ஏற்படுத்துகின்றன. எனவே, இஃது அசுத்த மாயை எனப்படுகிறது. உயிர்களால் அனுபவிக்கப்படும் உலகப் பொருள்கள் அனைத்துமாய் இந்த தத்துவம் உள்ளமையால், இது போக்கிய காண்டம் எனப்படுகிறது. (போக்கியம் – அனுபவிக்கப்படும் பொருள்). போகம் வேறு; போக்கியம் வேறு. ''போகம்'' என்பது, அனுபவத்தைக் குறிக்கும்; ''போக்கியம்'' என்பது அனுபவிக்கும் பொருளைக் குறிக்கும்.

முப்பத்தாறு தத்துவங்களுள், சுத்த தத்துவம் ஐந்தும் சடமே ஆகும்; ஆயினும் சிற்சத்தி ஆகிய அருளாற்றலுக்கு அது சுதந்திர வடிவாக இருப்பதால், ''சைதன்னியம்'' எனப்படும். (சைதன்யம் – அறிவுடைமை). ''புருட தத்துவம்'' சித்துடன் கூடி அறிந்தும், அசித்துடன் கூடி அறியாமலும் நிற்றலால், ''சிதசித்து'' எனப்படும. சுத்த தத்துவம் ஐந்தும் புருட தத்துவமும் உபசாரமாக 'சித்து' எனப்படும்; ஏனைய முப்பது தத்துவங்களும் 'அசித்து' எனப்படும்.

உயிர்க்குள்ள புண்ணியம் மிகும் பொழுது சுவர்க்கத்திற்குச் செல்லும்; பாவம் மிகும் பொழுது நரகத்திற்குச் செல்லும்; பாவ புண்ணியம் இரண்டும் சமமாக ஆவதற்கு உரிய இடம் பூவுலகமே ஆகும். ஆகவே, சுவர்க்க லோகத்திலிருந்து ஆன்மா மோட்சம் அடைய முடியாது. இந்த பூவுலகில் பிறந்து இருவினை ஒப்பு ஏற்பட்டு, மலபரிபாகம் எய்தப் பெற்று, சத்திநிபாதம் வாய்க்கப் பெற்று, நற்குருவின் உபதேசத்தினுலேயே மோட்சம் ஆகிய வீடுபேற்றினைப் பெற முடியும் என்பது தெளிவாகும்.

யோனி பேதம்

தோற்றிடும் அண்டசங்கள் சுவேசதங்கள் பாரில்
துதைந்து வரும் உற்பிச்சம், சராயுசங்கள் நான்கின்,
ஊற்றம் மிகு தாவரங்கள் பத்தொன்பது என்றும்,
ஊர்வ பதினைந்து அமரர் பதினென்ரேடு உலவா
மால்தரு நீர் உறைவன, நல்பறவைகள் நால்காலி
மன்னியிடும் பப்பத்து, மானுடர் ஒன்பதின்மர்
ஏற்றி ஒரு தொகை அதனில் இயம்புவர்கள் யோனி
எண்பத்து நான்கு நூறுயிரம் என்று எடுத்தே. 47

தெளிவுரை:

உயிர்கள் உலகில் பிறக்கும் பொழுது, முட்டையில் தோன்றுவன, வேர்வையில் தோன்றுவன, வேர், வித்து முதலியவற்றில் தோன்றுவன, கருப்பையில் தோன்றுவன என்று நான்கு வகைகளில் பிறவி எடுக்கின்றன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்நான்கு வகைகளில் தோன்றும் உயிர்கள், எழுவகைப் பிறப்புக்களை எய்துகின்றன. அப்பிறப்புக்களும் அவற்றின் பேதங்களும் எண்ணிக்கைகளும் வருமாறு:

பிறவி பேதங்கள்	எண்ணிக்கை
தாவரங்கள்	1900,000
ஊர்வன	1500,000
தேவர்கள்	1100,000
நீரில் வாழ்வன	1000,000
பறவைகள்	1000.000
மிருகங்கள்	1000,000
மனிதர்கள்	900,000
மொத்தம்	84,00,000

இவற்றைக் கூட்டிப் பார்க்கையில் உயிர்களின் யோனி பேதம் எண்பத்து நான்கு நூறாயிரம் என்று பெரியவர்கள் கூறுவார்கள்.

1. அண்டசம் – முட்டையில் தோன்றும் பாம்பு, தவளை, முதலை, ஆமை, அரணை, உடும்பு, மீன், ஓந்தி, பறவை, பல்லி, முதலியன, (அண்டம் – முட்டை; சம் – தோன்றுவது).

2. சுவேதசம் – வேர்வையில் தோன்றும் கிருமி, பேன், விட்டில் முதலியன. (சுவேதம் – வேர்வை).

3. உற்பிச்சம் – வித்து, வேர் முதலியவைகளில் தோன்றும் மரம் செடி, கொடி, புல், பூண்டு முதலியன (உத்பித் – மேலே பிளந்து; சம் – தோன்றுவது).

4. சராயுசம் – பெண்ணின் கருப்பையில் தோன்றும் நாற்கால் மிருகங்கள், மனிதர், தேவர் முதலானோர். (சராயு – கருப்பாசயப் பை).

"யோனி" என்பது வடிவம் அல்லது தேகத்தைக் குறிக்கும்.

உயிர்கள் தோன்றுவதற்குக் காரணமாய் இருக்கும் யோனி பேதங்கள் ஏழு ஆகும். அவை தோன்றுவதற்கு இடம் தரும் பொருள்கள் நான்கு ஆகும். இவற்றின் வேறுபாட்டை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இருவினை ஒப்பும் சத்திநி பாதமும்

இனைய பல பிறவிகளின் இறந்து பிறந்து, அருளால்
இருவினைகள் புரிந்து, அருந்தும் இது சகலம்; அகலா
முனம் மருவும் இருபயனும் ஒரு காலத்து அருந்த
முந்து நுகர்உந்து பயன் அந்தம் உறவந்த
வினையும் எதிர்வினையும் முடிவினை உதவு பயனால்
நேராக நேர் ஆதல் மேவுங்கால், முன்
சினம் மருவு திரோதாயி கருணை ஆகித்
திருந்திய சத்திநிபாதம் திகழும் அன்றே. 48

தெளிவுரை:

சிவபெருமானின் திருவருளால் இத்தகைய பல பிறவிகளிலே பிறந்து இறந்து, நல்வினை தீவினைகளைச் செய்து, இன்பத் துன்பங்களை அனுபவித்து வரும் இந்நிலை, உயிர்க்குச் சகல அவத்தை ஆகும். அனுபவித்துத் தொலையாது, முன் பிறவிகளில் குவிந்த சஞ்சித வினையின் பயன் ஆகிய இன்பத் துன்பங்களும், ஒரே காலத்தில் அனுபவிக்கத் தக்க முறையில் வரும். அந்நிலையில் முன்பிறவிகளில் அனுபவிக்கும் பிராரத்தப் பயன் அனுபவித்து ஒழியும் பொழுது, வந்து ஏறி விளைந்த சஞ்சித வினையும் ஆகாமிய வினையும், சிவபுண்ணியப் பயனால் சம நிலையை அடையும். அஃதே இருவினை ஒப்பு ஆகும். இவ்வாறு உயிர்க்கு, இருவினை ஒப்பு வரும்பொழுது, உயிர்களைக் கடைத்தேற்றும் பொருட்டு, முன்பு கோபத்துடன் ஆன்மாவில் பொருந்தி நின்ற திரோதான சத்தி, இப்பொழுது அருட் சத்தியாக மாறி, ஆன்மாவின் பக்குவத்திற்கு ஏற்ப, சத்திநிபாதமாக விளங்கும்.

முந்து – முற்பிறவியில் ; நுகருந்து – நுகரும். சஞ்சித வினையின் பயன் – பிராரத்தம்.

''இருவினை ஒப்பு'' என்பது, ஆகாமியம் ஆகிய நல்வினை தீவினைகளிலும், அவற்றின் விளைவாகிய இன்பத் துன்பங்களிலும் (பிராரத்தம்), ஒன்றில் விருப்பும் ஒன்றில் வெறுப்பும் இன்றி, ஆன்ம அறிவில் அவை ஒத்து நிகழ்வதைக் குறிக்கும்.

வினைகளுக்கு முடிவே இல்லை; அவை எப்படி முடியும்? சரியை, கிரியை, யோகம் என்னும் சிவ புண்ணியங்களைச் செய்துவரும் பொழுது, ஆன்மா இறையருளில் அழுந்தி நிற்கும் அந்நிலையில் ஆன்ம அறிவில் ஒருவகைத் தெளிவு ஏற்படும். அந்தத் தெளிவே இருவினை ஒப்பை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஏற்படுத்தும். இவ்வாறு வினைகளுக்கு முடிவை ஏற்படுத்தி உயிர்க்கு உதவுவதால் சரியை முதலிய இறைச் செயல்களை, ''முடிவினை உதவு பயன்'' என்றார் ஆசிரியர்.

''மலபரிபாகம்'' என்பது, ஆணவ மலத்தின் ஆற்றல் ஆன்மா அறிவை மயக்க இயலாமல் நிற்பதைக் குறிக்கும். ஆணவ மலத்தின் இந்த இயலாமையையே, நூல்களில் ''ஆணவமலம் வலிகுன்றி நிற்கும் அவதரம்'' என்பர். மலம் – ஆணவமலம்; பரி – உபசர்க்கம் (முற்றாக) பாகம் – பக்குவம், ஆணவமலம் முழுவதும் பக்குவம் ஆகும் பொருட்டு, அதற்கு அனுகூலமாய் நின்று, அதனை இயக்கிய திரோதான சத்தி, மலம் பரிபாகம் ஆனபொழுது, அருட் சத்தியாக மாறி, ஆன்மாவில் பதிகிறது. எனவே, மலம் பக்குவம் ஆவது என்பது, உயிர்க்குள்ள ஆணவ மலப்பற்று அறவே நீங்கும் பொழுது, இறைவனின் மறைப் பாற்றல் அருளாற்றலாக மாறி, ஆன்மாவினிடத்து அருளைப் பதிவு செய்வதையே குறிக்கும்.

அஃதன்றி, ''ஆணவமல பரிபாகம்'' என்பது, ஆணவமலம் தானே மறைப்பு நீங்குவதன்று; உயிர்க்குள்ள பற்றும் தன்மையில் உள்ள வேறுபாடே, பக்குவம் உள்ள உயிர்க்கும் பக்குவம் இல்லாத உயிர்க்கும் உள்ள வேறுபாடு ஆகும். இருவினை ஒப்பு ஏற்பட ஏற்பட மலபரிபாகம் நிகழும். மலபரிபாகம் ஏற்பட ஏற்பட, சத்திநிபாதம் வாய்க்கப் பெறும். இந்த சத்திநிபாதம் நான்கு வகைப்படும், அவற்றுள் தீவிரதர சத்தி நிபாதமே, திருந்திய ''சத்திநிபாதம்'' எனப்படும். இதனை அடுத்த செய்யுளில் காணலாம்.

சத்திநிபாதம் வகையும், தீவிரதரபக்குவர் அடையும் பேறும்

நாடிய சத்தி நிபாதம், நாலு பாதம்;
நண்ணும் வகை; எண்ணரிய ஞான பாதம்
கூடும் அவர் தமக்கு உணர்வாய் நின்ற ஞானக்
கூத்தன் ஒரு மூர்த்தி கொடு குறுகி, மோகம்
நீடிய கேவல சகலம் நிகழாதவாறு
நிறுத்தி, மலம் அறுக்கும்; இது நிலையார் சுத்தம்;
கேடு இல் புகழ்தரும் சரியை கிரியா யோகக்
கேண்மைய ரேல், இவை உணர்த்தக் கிளர்க்கும் நூலே. 49

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

முன்பு ஆய்வு செய்யப்பட்ட சத்திநிபாதம் ஆன்மாவிற்கு வாய்க்கும் விதம், மலபரிபாகம் ஏற்படுவதற்கு ஏற்ப, மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நான்கு வகைப்படும். நினைத்தற்கு அரிய தீவிரதர சத்திநிபாதம் வாய்க்கப் பெற்றவர்களுக்கு, இதுவரை அவர்களது அறிவுக்கு அறிவாய் நின்று உணர்த்தி வந்த சிவபெருமான், ஒரு குருநாதர் வடிவம் கொண்டு எழுந்தருளி வந்து, மயக்கம் நிறைந்த கேவல நிலையும், விகற்பத்தை உடைய சகல நிலையும், ஏற்படாதபடி அவர்களை அருளில் நிறுத்தி மலங்களைப் போக்குவன். இதுவே நிலையான சுத்தநிலை ஆகும். கெடுதல் இல்லாத புகழைத் தருகின்ற சரியை, கிரியா யோக சம்பந்தம் உடையவர்களாய் இருந்தால், மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என்று சத்திநிபாதத்தின் நாற்பாதங்களின் முறைமையையும் அவர்களுக்கு அறிவிக்கும்படி ஆகமங்கள் கூறுகின்றன.

குருநாதரின் உபதேச மொழிகள், சீடர்கள் அனைவருக்கும் ஒரே தன்மையில்தான் அருளிச் செய்யப்படுகின்றன. ஆயினும், அந்தந்த சீடரின் பக்குவத்திற்கு ஏற்ப, ஞானம் ஒரு படித்தாய் ஏறுது. எனவேதான், "சத்திநிபாதம் நண்ணும் வகை நாலு விதம் ஆகும்" என்றார்.

உண்மை முத்தி

அரிவையர் இன்பு உறும் முத்தி, கந்தம் ஐந்தும்
அறும் முத்தி, திரி குணமும் அடங்கும் முத்தி,
விரவு வினை கெடும் முத்தி, மலம் போம் முத்தி,
விக்கிரகம் நித்தம் முத்தி, விவேகம் முத்தி
பரவும் உயிர் கெடும் முத்தி, சித்தி முத்தி
பாடாண முத்தி, இவை பழிசேர் முத்தி;
திரி மலமும் அகல, உயிர் அருள் சேர் முத்தி
திகழ் முத்தி; இது முத்தித் திறத்தது ஆமே. 50

தெளிவுரை:

உலோகாயதர், மகளிர் இன்பத்தை அனுபவிப்பதே முத்தி என்கின்றனர்; உருவம் முதலிய ஐந்து கந்தங்களும் அறுவதே முத்தி என்கின்றனர், பௌத்தரில் சௌந்திராந்திகர், சமணர்களில் நிகண்டவாதி என்பவர், மூவகைக் குணங்களும் அடங்குவதே முத்தி என்கின்றனர். பிரபாகரன் கன்மம் கெடுவதே முத்தி என்று கூறுகிறான். ஆணவமல

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கெடுவதே முத்தி என்று பேதவாதிகள் கூறுகின்றனர். உருவ சிவசமவாதிகள், சரீரம் நித்தியமாய் இருப்பதே முத்தி என்கின்றனர். சாங்கியர், பிரகிருதியையும் புருடனையும் விவேகித்து அறிவதே முத்தி என்கிறார்கள். பாற்கரியர், வியாபித்து இருக்கின்ற ஆன்மா கெடுவதே முத்தி என்பர். சித்தர்கள் அட்டமா சித்திகளைப் பெறுவதே முத்தி என்பர். பாடாணவாதி, உயிர் கல்போலக் கிடப்பதே முத்தி என்பர். இந்தப் பத்து வகையான முத்திகளும் குற்றம் உடையன ஆகும்.

ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களும் நீங்கப் பெற்று ஆன்மா, சிவபெருமான் திருவருளைச் சார்ந்து நிற்கின்ற முத்தியே நிலைபெற்று விளங்கும் உண்மை முத்தி ஆகும்.

உண்மை அதிகாரம்

இந்த அதிகாரத்தில் உணர்த்தப்படும் செய்திகள்

இங்கு இவை பொது இயம்பும் என்பர்கள்; இதன்மேல் ஆன்மா
தங்கிய அஞ்சு அவத்தை தன் உண்மை, உணர்த்தும் தன்மை
பொங்கு ஒளி —ஞான வாய்மை, அதன் பயன், புனிதன்நாமம்,
அங்கு அதில் அணைந்தோர் தன்மை, அறைகுவன் அருளினுலே. 51

தெளிவுரை:

இதுகாறும் கூறப்பட்ட ஐம்பது – செய்யுள்களும், பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் பொது இயல்பைக் கூறுகின்றன என்று கூறுவர் அறிவுடையவர்கள். இதற்கு மேல் "உண்மை" என்று வகுக்கப்படும் ஐம்பது செய்யுள்களில்

1. ஆன்மாவின் இலக்கணம்.
2. ஐந்து அவத்தையின் இலக்கணம்.
3. உணர்த்தும் தன்மை.
4. ஞான வாய்மை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

5. ஞானத்தால் வரும் பயன்.

6. புனிதன் நாமம் – (ஸ்ரீ பஞ்சாக்கரம்).

7. அணைந்தோர் தன்மை.

என்னும் இவற்றை இறைவன் அருள்வழியில் நின்று கூறுவோம்.

மூன்றும் சூத்திரம்

ஆன்மா சகல கேவலப்படும் இயல்பினது

செறிந்திடும் உடலுள் மன்னி
சேர்புலன் வாயில் பற்றி
அறிந்து அதில் அழுந்தும்; ஒன்றும்
அறிந்திடாது அறியும் தன்மை
பிறிந்து அடை அஞ்சு அவத்தை
பெருகிய மலத்தால் பேணி
உறும் தனி அதீதம்; உண்மை
உயிர்க்கு என உணர்த்தும் அன்றே. 52

தெளிவுரை:

உயிர், வினைக்கு ஈடாகப் பெற்ற பருவுடலில் உள்ள புருவ நடுவில் நின்று, வினைப்பயன் ஆகிய சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் புலன் உணர்வுகளைப், பொறிகளின் வாயிலாக அறிந்து, அவற்றுள் அழுந்தி நின்று அனுபவிக்கும். அந்நிலையில் அவ்வாறு அனுபவிக்கும் தன்னையும், அனுபவிக்குமாறு தன்னைச் செலுத்தி நிற்கும் திருவருளையும் அறியாது.

(இக்கருத்து சிவஞான போதத்தின் ஐந்தாம் சூத்திரத்தில் விளக்கப்பட்டுள்ளது.)

ஐந்தவத்தைப்படும் பொழுது, இவ்வாறு அறிந்து வரும் தன்மை நீங்கி வருவதை, உயிர் உணரும். இதற்குக் காரணம் கருவி கரணங்களின் துணை இன்றி உயிர் அறியமுடியாது என்பதே ஆகும். கருவி கரணங்கள் ஒவ்வொன்றாக நீங்கி, உயிர் துரியாதீத நிலையை அடையும் பொழுது, அஃது ஆணவ மலத்தைப் பொருந்தி அறியாமைப் பட்டு நிற்கும். எனவே, கருவி கரணங்கள் இல்லா நிலை உயிர்க்குக் கேவல நிலை என்றும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கருவிகரணங்களோடு கூடிய நிலை உயிர்க்குச் சகல நிலை என்றும், இதுவே ஆன்மாவின் பொது இயல்பு என்றும் ஆகமங்கள் கூறுகின்றன.

''சகல நிலை'' என்பது நாதம் முதல் பிருதிவி ஈறாக உள்ள முப்பத்தாறு தத்துவங்களும் தாத்துவிகங்கள் அறுபதும் ஆகத் தொண்ணூற்று ஆறு கருவிகளோடு கூடிப் புருவ நடுவில் நின்று விடயங்களை உயிர் அனுபவித்து வருவதைக் குறிக்கும். இவற்றை நீங்கி நிற்பது ''கேவல நிலை'' எனப்படும்.

ஆன்மா அறிவிக்க அறியும் இயல்புடையது

உரு உணர்வு இலாமையானும்,
ஓர் ஒரு புலன்களாக
மருவி நின்று அறிதலானும்
மனுதிகள் தம்மில் மன்னித்
தருபயன் நுகர்த லானும்,
உயிர் சடம் ஆதலானும்
அருவினை உடலுள் ஆவி
அறிவினால் அறியும் அன்றே. 53

தெளிவுரை:

உடம்பு சடம். எனவே அதற்கு அறிவு இல்லை. சொப்பனம், சுழுத்தி முதலிய அவத்தைகளிலும், பிணம் ஆன பொழுதும் உடம்புக்கு உணர்ச்சி இல்லை. எனவே உடம்பு அறிவற்ற சடப்பொருளே ஆகும்.

இந்திரியங்கள் தனித்தனியே புலன்களைப் பற்றி அறியும். ஓர் இந்திரியம் உணருவதைப் பிறிதொன்று உணராது; ஆகவே ஐந்தும் ஒக்க உணர மாட்டா. இந்த ஐந்து இந்திரியங்களையும் பொருந்தி நின்று இவற்றின் வேறாக உள்ள ஆன்மாவே ஒருசேர உணரும். எனவே இந்திரியங்களும் அறிவுடையன அல்ல.

அந்தக்கரணங்களும் இந்திரியங்களைப் போல சடம் ஆகலின் ஒன்று அறிந்ததைப் பிறிதொன்று அறியாது; சித்தம் மனத்தை அறியாது; மனம் புத்தியை அறியாது; புத்தி அகங்காரத்தை அறியாது. இந்நான்கையும் துணையாகக் கொண்டு இவற்றின் வேறாக நின்று ஆன்மா அறியும். எனவே அந்தக்கரணங்களும் அறிவற்ற சடமே ஆகும்.

பிராணவாயு உயிர் என்பது பொருந்தாது. (இந்தச் செய்யுளில் வரும் ''உயிர்'' என்ற சொல்லுக்குப் ''பிராணவாயு'' என்று பொருள். உயிர் –

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உயிர்ப்பு.) உறக்கத்தின் போதும் பிராணவாயு இயங்குகிறது. நனவில் இருக்கும் போதும் பிராணவாயு இயங்குகிறது. நனவில் உயிர்க்கு உள்ள இன்பத்துன்ப நுகர்ச்சியும் தொழிலும் உறக்கத்தில் இல்லாமையால், பிராணவாயு சடம் என்பதும் பிராண வாயுவின் வேருகவுள்ள ஆன்மாவே அறிவுடைப் பொருள் என்பதும் புலப்படும்.

''ஆவி'' என்பது நுண்ணுடலோடு கூடிய உயிரைக் குறிக்கும். இஃது அருவமானது. இறக்கும் போது ''ஆவி'' பிரிந்து விட்டது என்கிருேம். அஃதாவது உயிர்க்குள்ள முப்பத்தொரு கருவிகளில், பூதாகாரியம் ஐந்து கன்மேந்திரியம் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து என்னும் பதினைந்து கருவிகளோடு கூடிய பருவுடல் நீங்குவதே இறப்பு ஆகும். எஞ்சியுள்ள பதினறு கருவிகளோடு கூடிய காரண சரீரம், கஞ்சுக சரீரம், குண சரீரம், சூக்கும சரீரம் என்பவற்றின் தொகுப்போடு கூடிய உயிரே. ''ஆவி'' எனப்படும்.

இறைவனே உயிர்க்கு உடம்புகளைக் கூட்டியும் குறைத்தும் பிறப்பையும் இறப்பையும் ஏற்படுத்தி வருகிருன். எனவே, இறைவன் அறிவிக்கை உயிர் அறியும் இயல்பு உடையதாகும். வினைக்கு ஈடான உடல்களை இறைவனே உயிர்க்குத் தருகிருன். அந்த உடலின் வாயிலாகவே உயிர் அறிகிறது. ஆகவே, அறிவிக்க அறிவது ஆன்மா என்கிருேம்.

ஆன்மா அறிவுடைப் பொருள்

அறிவு எனில் வாயில் வேண்டா;
அன்று எனில் அவைதாம் என்னை?
அறிவதை உதவும் என்னில்,
அசேதனம் அவைதாம் எல்லாம்;
அறிபவன், அறியும் தன்மை
அருளுவன் என்னில், ஆன்மா
அறிவு இலது ஆகும்; ஈசன்
அசேதனத்து அளித்தி டானே. 54

தெளிவுரை:

ஆன்மா தானுகவே எல்லாவற்றையும் அறியும் தன்மை உடையது என்று சொன்னல், இந்திரியங்கள் வேண்டுவதில்லை. ஆன்மா அறியும் தன்மை உடையதன்று என்று கூறினுல், அத்தன்மையுடைய ஆன்மாவுக்கு இந்திரியங்களால் என்ன பயன் ஏற்படப் போகிறது? எனவே, இயல்பாகவே அறியும் தன்மை ஆன்மாவுக்கு இல்லை என்று கூற முடியாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்திரியங்களே ஆன்மாவுக்கு அறிவைக் கொடுக்கின்றன என்று சொன்னுல், அது பொருந்தாது. ஏனென்ருல் இந்திரியங்கள் அறிவற்ற சடம் ஆகும். அப்படியானுல், எல்லாவற்றையும் ஒருசேர அறியும் சிவபெருமான், ஆன்மாவுக்கு அறியும் தன்மையைக் கொடுப்பான் என்று கூறலாமோ என்ருல் அதுவும் பொருந்தாது. அப்படியானுல், இயற்கையிலேயே ஆன்மா அறிவில்லாத சடப் பொருளாய் இருந்திருக்க வேண்டும் என்று எண்ண வேண்டிவரும்; மேலும் அறிவற்ற சடப் பொருளுக்கு இறைவன் அறியும் தன்மையைக் கொடுக்க வேண்டிய தேவையும் இல்லை. எனவே, உண்மைதான் என்ன என்ருல், இயல்பாகவே ஆன்மா அறியும் தன்மை உடையது என்பதே ஆகும்; ஆகவே ஆன்மா அறிவுடைப் பொருள் எனப்படுகிறது.

ஆன்ம அறிவினுல் சுட்டி அறியப்படும் பொருள் அனைத்தும் அசத்தே

அறிவினுல் அறிந்த யாவும்
அசத்து ஆதல்அறிதி என்றும்,
அறிவினுல் அறிய ஒண்ணுதேல்,
ஆவது ஒன்று இன்மை; தொன்மை
அறிவுதான் ஒன்றை முந்தி
அது அது ஆகக் காணும்
அறிவுகாண்; அசத்தும் மற்று அது
அறிவினுக்கு அறிய ஒண்ணுதே. 55

தெளிவுரை:

உயிரின் அறிவினுல் அறியப்படும் அனைத்தும் சுட்டுப் பொருள்களாகும்; ஆகவே அவை அனைத்தும் அசத்தாய் அழிந்து போவனவே என்பதைத் தெளிவாக அறிவாயாக. எந்தக் காலத்திலும் உயிரின் அறிவைக் கொண்டு இறைவனை அறிய முடியாது. அவ்வாருயின், ஆன்ம அறிவால் ஏற்படும் பயன் ஒன்றுமே இல்லை என்று கருத வேண்டி வரும் அல்லவா? அப்படி இல்லை, இயல்பாகவே ஆன்மாவுக்குள்ள அறிவு, எந்த ஒன்றையும் இந்திரியங்களின் உதவியாலேயே முற்பட்டு அவற்ரேடு பொருந்தி, அந்தந்தப் பொருளில் சார்ந்ததன் வண்ணமாய் நின்று, சுட்டி அறியும் அறிவு ஆகும். அவ்வாறு இந்திரியங்களில் அழுந்தி நின்று அறியும் அறிவே சுட்டறிவு எனப்படும்; படவே, அந்த அறிந்த அனுபவமும் உயிர்க்கு நிலையில்லாத் தன்மை ஆகிய அசத்தே ஆகும். என்றும் மாறுபடாத ஒரே தன்மையில் இருக்கும் இறைவனை இந்த நிலையற்ற அறிவினுல் அறிய முடியாது என்பதனுலேயே, இறைவன் சுட்டி அறியப்படும் உயிரறிவால் அறிய முடியாதவன் எனப்படுகிருன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

"சுட்ட அறிவு" என்பது அளவையறிவு கருவியறிவு பாச ஞானம் என்று கூறப்படுவதாகும்.

"அசத்து" என்பது, தோன்றி நின்று அழியும் தனுகரண புவன போகங்களைக் குறிக்கும்.

தொன்மை அறிவு – ஆன்மாவின் இயற்கையறிவு.

காணும் அறிவு – சுட்டி அறியும் அறிவு.

முந்தி – முற்பட்டு – முனைந்து – தன்முனைப்புடன்.

ஆன்மா சத்தையும் அசத்தையும் அறியும் இயல்பினை உடையது

எவ்வறிவு அசத்து அறிந்தது
எனில், உயிர் அறியாது; ஈசன்
அவ்வறிவு அறியான்; அல்லது
அசேதனம் அறியாது; ஆவி
செவ்விய கருவிகூடின்
தெரிவு உறுது; அருளில் சேராது;
உவ்இரு வகையது என்னில்
ஒளி இருள் ஒருங்கு உருவே. 56

தெளிவுரை:

பிரபஞ்சத்தை அசத்துப் பொருள் என்று அறிந்தது எந்த அறிவு என்றால், அறிவித்தால் அன்றி அறிய மாட்டாத உயிர், தானாகவே அசத்தை, அசத்து என்று அறியாது. சிவபெருமான் வியாபகப் பொருள் ஆகலின், அவனது அறிவும் வியாபக அறிவே ஆகும். ஆகவே, சிவம் எல்லாவற்றையும் ஒருங்கே அறிந்து நிற்குமே அன்றி, ஏகதேசமாய்ச் சுட்டி அறிவதில்லை. (சுட்டி அறிவது என்பது இது குடம், இது ஆடை என்று ஒவ்வொன்றாகச் சுட்டி அறிவதாகும்) உயிரும் சிவமும் அல்லாத பாசம் சடப் பொருளாகும்.

எனவே அஃது எதையும் அறியாது உயிரின் அறிவு விளங்கும் பொருட்டு உள்ள கருவிகளோடு கூடினால், உயிர் அறியும் என்று கூறினால் அது பொருந்தாது. ஏனென்றால், கருவிகளோ சடம்; எனவே அவை அறிவற்றவை; உயிரோ தானாக எதனையும் அறியமாட்டாதது. (அறிவித்தால் மட்டுமே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறியக்கூடியது) எனவே கருவிகளோடு தானுகக் கூடினுலும், உயிர் அறிவு விளக்கம் பெறுது.

அருளோடு கூடி நின்று உயிர் அறியும் என்று கூறிஞல் அதுவும் பொருந்தாது. ஏனென்ருல், பெத்த நிலையாகிய பிறப்பு நிலையில் உயிர் அருளோடு கூடி நிற்பது இல்லை; எனவே அந்நிலையில் உயிர் அறிவது இல்லை.

அறிவுடைப் பொருளாகிய அருளும் அறிவற்ற பொருளாகிய கருவிகளும் கூடி அறியும் என்று கூறிஞல் அதுவும் பொருந்தாது; ஏனென்ருல், ஒளியும் இருளும் ஆகிய இரண்டும ஓரிடத்தில் கூடி நிற்பது இல்லை. அப்படியாஞல் உயிர் எப்படித்தான் அறியும் என்பதை அடுத்த செய்யுளில் விளக்குகிருர்.

இதுவும் அது

சத்து இது என்று அசத்துத்
தான் அறியாது; அசத்தைச்
சத்து அறிந்து அகல வேண்டா;
அசத்து இது சத்து இது என்று ஓர்
சத்து, இருள் ஒளி அலாக் கண்
தன்மை யதாம்; அசத்தைச்
சத்துடன் நின்று நீக்கும்
தன்மையால் சதசத்து ஆமே. 57

தெளிவுரை:

அசத்து ஆகிய பாசம், அறிவு இல்லாத சடம்; எனவே, சத்து ஆகிய சிவத்தை, இது சத்து என்று அசத்து அறியாது. சத்து ஆகிய சிவம், வியாபக அறிவை உடையது; எனவே அஃது அசத்து ஆகிய பாசத்தைப் பகுத்து அறிந்து நீங்க வேண்டியதில்லை. ஆகவே, அசத்து ஆகிய பாசம் இஃது என்றும், சத்து ஆகிய சிவம் இஃது என்றும் அறிவது ஆன்மா ஒன்றே ஆகும். இத்தகைய ஆன்மா, இருளோடு கூடிய பொழுது இருளாகாமலும் ஒளியோடு கூடிய பொழுது ஒளியாகாமலும், இவ்விரண்டின் வேருய் நிற்கும் கண்ணின் தன்மையை ஒத்தது ஆகும். ஆகவே, சத்தாகிய சிவத்தோடு கூடி நின்று, அசத்தாகிய பாசத்தை நீக்கும் இயல்பினை உடைய ஆன்மா, ''சதசத்து'' எனப்படும்.

சத்தாகிய சிவம், அசத்தை அனுபவிக்காது; அசத்தாகிய பாசம் சிவத்தை அறியாது; இவ்விரண்டையும் அறிந்து அனுபவிப்பது ஆன்மா ஒன்றே ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மேலே கூறியதனை உவமை முகத்தால் விளக்குதல்

கண் ஒளி விளக்கு அளித்துக்
காட்டிடும் என்னின், முன்னம்
கண் ஒளி ஒன்றும் இன்றாம்;
விளக்கு ஒளி கலந்த வற்றைக்
கண் ஒளி அகல நின்றே
கண்டிடும்; வேறு காணா;
கண் ஒளி விளக்கின் சோதி
கலந்திடும் கருத்து ஒன்று அன்றே. 58

தெளிவுரை:

கண்ணுக்கு ஒளியைக் கொடுத்து, விளக்கு பொருள்களைக் காட்டும் என்று சொன்னால், விளக்கு காட்டுவதற்கு முன்பு கண்ணுக்கு ஒளியே இல்லை என்பதாக முடியும். விளக்கின் ஒளி எந்தப் பொருளோடு கலந்து நின்று காட்டுகின்றதோ, அந்தப் பொருளைக் கண்ணின் ஒளி, அந்தப் பொருளின் வேறாக நின்றே காணும். அவ்வாறு கண் ஒளி, காணும் பொருளின் வேறாக நின்று அப்பொருளைக் கண்டாலும், விளக்கின் ஒளியோடு கூடி நின்றே அப்பொருளைக் காணும்; அஃதன்றிக் கண்ணின் ஒளி எந்த ஒன்றையும் தனித்து நின்று காணமாட்டாது. கண் ஒளி, விளக்கு ஒளியோடு கலந்தே நிற்கும். அவ்வாறு கலந்து நின்றாலும், சிந்தித்துப் பார்த்தால் கண்ணொளியும் விளக்கொளியும் ஒன்றல்ல; இரண்டும் வெவ்வேறு பொருள்களே ஆகும்.

விளக்கொளி இறையருளுக்கு உவமை; கண்ணொளி ஆன்ம அறிவுக்கு உவமை. திருவருளின் உதவியின்றி, ஆன்மா அசத்தாகிய பாசத்தையும் அறியாது; சத்தாகிய சிவத்தையும் அறியாது. எனவே உலகில் நாம் அறிந்து அனுபவிக்கின்ற ஒவ்வொன்றும் இறையருளாலேயே நடைபெறுகின்றது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆன்மா சார்ந்ததன் வண்ணமாய் அறியும் இயல்பை உடையது

ஓர் இடத்தில் இருத்தல், மாயா
உரு நிறைந்திடுதல், ஒன்றும்
பேரிடத்து உறைதல், தானே
பிறங்கு அறிவாகி நிற்றல்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சோர்வுடைச் சடம் நிகழ்த்தல்
எனும் இவை சொல்லார் நல்லோர்;
ஓர் இடத்து உணரும் உண்மை
ஒளி தரும் உபலம் போலும். 59

தெளிவுரை:

உயிர், இந்த உடம்பில் ஓர் இடத்தில் இருந்து அறிகிறது, என்பது பொருந்தாது. ஏனென்றால் எந்த ஒரு பொருளும், ஓர் இடத்தில் இருக்குமாயின், அஃது உருவம் உடையது ஆகி, அழிந்து விடக்கூடியதாய் இருக்கும், மேலும் ஆன்மா என்ற சொல்லுக்கு வியாபகம் என்று பொருள்; அஃதே அதற்குக் குணமும் ஆகும். எனவே, வியாபித்து நிற்கும் குணத்தை உடைய குணி ஆகிய ஆன்மா, ஓர் இடத்தில் இருந்து அறியும் என்பது பொருந்தாது.

உயிர், மாயா காரியம் ஆகிய தேகம் முழுவதும் நிறைந்து நின்று அறிகிறது என்பதுவும் பொருந்தாது, ஏனென்றால், உறக்கத்தின்போது உடலின் பொறிகள் ஓய்வுற்றிருக்கின்றன; அந்நிலையில் உயிர் கனவு காண்கிறது; கனவிலும் உயிரின் அறிவு செயல்படுவதால், உடல் முழுவதும் உயிர் நிறைந்து நிற்கிறது என்பது பொருந்தாது. மேலும், அப்படியானல் சிறிய உடலில் உள்ள உயிரின் அறிவு சிறிதாகவும், பெரிய உடலில் உள்ள உயிரின் அறிவு பெரியதாகவும் இருப்பதாகக் கொள்ள வேண்டி வரும். உடம்பில் ஓர் அங்கம் குறைந்தால், உயிரின் அறிவிலும் ஒரு பங்கு குறைவதாக அமையும். உடம்பு அழியும் பொழுது உயிரும் அழிந்து விடுவதாகக் கருத நேரும். எனவே உடல் முழுவதும் உயிர் நிறைந்து நிற்கிறது என்பது பொருந்தாது.

இறைவனல் அறிவிக்கப்படாமல் உயிர் தானே அறியும் இயல்புடையது என்று கூறினல் அதுவும் பொருந்தாது. ஏனென்றால், உயிர்க்குப் பிறப்பு இறப்புக்கள் நிகழ்வது தன்னிச்சையால் நிகழ்வனவல்ல; நனவு, கனவு முதலிய ஐந்து நிலைகளையும் உயிர் தன் அறிவைக் கொண்டு நிகழ்த்துவது இல்லை. ஐம்புலன்களையும் உயிர் அறிகிறது என்றாலும், ஒவ்வொரு புலனுகவே அறிகிறது. இவற்றிலிருந்து உயிரின் அறிவு தானே அறியும் தன்மை உடையதன்று என்பது புலப்படும்.

மனம் முதலிய கருவிகளின் உதவியால் உயிரின் அறிவு நிகழ்கிறது என்பதும் பொருந்தாது. மனம், புத்தி முதலியன சடம், உயிரும் ஆணவமலத்தைப் பற்றி, அதன் அறிவும் செயலும் தொழிற்படாமல் இருந்தன. கருவி கரணங்களை இறைவன் உயிர்களோடு கூட்டுவித்தமையாலேயே உயிரின் அறிவு கருவிகளால் ஓரளவு விளங்குகிறது. இவ்வாறு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பொருத்தமற்ற கொள்கைகளை நல்லவர்கள் ஆகிய சைவ சித்தாந்திகள் சொல்லமாட்டார்கள்.

அவ்வாறாயின், உயிரின் அறியும் தன்மை தான் யாது என்றால், அதற்கு விளக்கம் வருமாறு.

படிகம் தன்னைச் சார்ந்த பொருளின் வண்ணமாய் விளங்குவது போல, ஆன்மாவும் அசத்தோடு சார்ந்தபொழுது அசத்தாயும், சத்தோடு சார்ந்த பொழுது சத்தாயும், இவ்வாறு சார்ந்ததன் வண்ணமாய் நின்று அறியும் இயல்பு உடையது ஆகும்.

நான்காம் சூத்திரம்

ஐந்து அவத்தை இலக்கணம்

காரிய கேவலம்

எண்ண ஒன்றும் இலாத அதீதம்
எய்திய துரியத்து ஒன்று
நண்ணிடும்; சுழுத்தி தன்னில்
நயந்து உளது ஒன்று; பின்னும்,
அண்ணிடும்; கனவு தன்னில்
ஆறு ஏழ் ஆம்; சாக்கிரத்தின்
கண் உறும் அஞ்சு ஆறு ஆய
கருவிகள் மருவும் தானே. 60

தெளிவுரை:

துரியாதீதத்தில் எண்ணுவதற்கு ஒரு கருவியும் இன்றி, புருடன் மட்டும் இருக்கும். துரியத்தில் புருடனோடு, பிராண வாயுவும் பொருந்தி நிற்கும். சுழுத்தியில் அந்த இரண்டனோடு சித்தம் என்னும் ஒரு கருவி பொருந்தி இருக்கும். சொப்பனத்தில், சத்தாதி ஐந்தும், வசனாதி ஐந்தும், மனம் புத்தி அகங்காரம் மூன்றும். ஆகப் பதின்மூன்று (ஆறு ஏழ்) கருவிகளும், எஞ்சிய ஒன்பது வாயுக்களும், (பிராண வாயு நீங்கலாக) அவற்றோடு புருடன், பிராணன், சித்தம் என்னும் மூன்றும் சேர இருபத்தைந்து கருவிகள் தொழிற்படும். சாக்கிரத்தில் ஞானேந்திரியம் ஐந்தும் கன்மேந்திரியம் ஐந்தும் பொருந்த, மேற்சொன்ன இருபத்தைந்தோடு இந்தப் பத்துக் கருவிகளும் சேர்ந்து முப்பத்தைந்து (அஞ்சு ஆறு) கருவிகள் தொழிற்படும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்தச் செய்யுளில் காரிய கேவலம் எனப்படும் கீழால் அவத்தை ஐந்தும் கூறப்பட்டுள்ளன. இதுவே ''சகலத்தில் கேவலம்'' எனவும் பேசப்படும்.

காரிய சகலமும் காரிய சுத்தமும்

இவ்வகை அவத்தை தன்னில்
எய்திடும் கரணம் எல்லாம்
மெய்வகை இடத்தில் உற்று
மேவுமா கண்டு மிக்க
பொய்வகைப் பவம் அகற்றப்
புரிந்திடில், அருளால் ஆங்கே
ஐவகை அவத்தை உய்க்கும்
அறிவினுல் அறிந்து கொள்ளே. 61

தெளிவுரை:

இந்த ஐந்து வகையான அவத்தைகளில் பொருந்துகின்ற கருவிகள் அனைத்தும், சரீரத்தின் கூறுபாடான புருவ நடுவில் ஐந்து அவத்தையும் அடைந்து விடயங்களை கிரகிக்கும் முறைமையினை நீ அறிவாயாக. பின்னர் பெரிதும் பொய்யான இந்த விடயங்களைப் பற்றுவதும் விடுவதும் ஆக இடை விடாமல் நிகழும் நினைப்பையும் மறப்பையும் ஒழிக்கும்படி, ஞானசிரியர் அருளிச் செய்த முறையில் சாதனை செய்வாயாக. அவ்வாறு செய்தால் திருவருளின் உதவியால் புருவ நடு ஆகிய அந்த இடத்தில் நின்மல சாக்கிரம் முதலிய சுத்தாவத்தைகள் ஐந்தும் செலுத்தப்படும். இவ்வாறு நிகழ்வனவற்றை ஞானசிரியன் உபதேசத்தால் பெறப்படும் அனுபவ அறிவால் அறிக.

இலாடத்தானம் என்னும் புருவ நடுவில் ஆன்மா, சாக்கிர சாக்கிரம், சாக்கிர சொப்பனம் சாக்கிர சுழுத்தி, சாக்கிர துரியம், சாக்கிர துரியாதீதம் என்னும் ஐந்து அவத்தைகளையும் படும். இவை ''காரிய சகலம்'' என்றும், ''சகலத்தில் சகலம்'' என்றும், ''மத்தியாலவத்தை'' என்றும், ''நிலையில் படும் அவத்தை'' என்றும் சொல்லப்படும்.இந்த மத்தியாலவத்தையில் உயிரின் அறிவு. ஐம்புலன்களையும் பற்றுவதும் விடுவதுமாக இடைவிடாது சுழலும், பற்றுவதும் விடுவதும், நினைப்பு மறப்பு ஆகிய சகல கேவலங்கள் ஆகும். இவ்வாறு சகல கேவலப்படுவது, உயிர்க்கு இயற்கைக் குணம் அன்று. எனவே, கருவிகரணங்களைப் பற்றிய போது தோன்றும் விடய போதம் தாக்காவண்ணம், தனது அறிவை மடக்கிப் புருவ மத்தியில் நிறுத்தி, அஞ்செழுத்து ஆன்மாவின் ஞானத்தை விளக்கிப் பூரணநிலையில் செலுத்தும்; அவ்வாறு ஆன்மாவைச் செலுத்துவதே சுத்தாவத்தை ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சுத்தாவத்தையில் ஆன்மாவுக்குக் கேவல சகல நிலைகள் நிகழாது. அந்நிலையில் ஆன்மா சிவனருட் சார்பில் நிலைபெற்று நிற்கும். இது ''காரிய சுத்தாவத்தை'' என்றும் ''நின்மலாவத்தை'' என்றும் கூறப்படும். இந்த நின்மலாவத்தையில், நின்மல சாக்கிரம், நின்மல சொப்பனம், நின்மல சுழுத்தி, நின்மல துரியம், நின்மல துரியாதீதம் என்னும் ஐந்து அவத்தைகள் உண்டாகும். இவற்றுள், ஆன்மா அருளாலே தன்னை அறிவது''நின்மல சாக்கிரம்'' ஆகும்.

அருளாலே தன்னை அறிந்த பிறகு, தனக்கு ஒரு சேட்டை இன்றி, அந்த அருளே தனக்கு ஆதாரமாய் உள்ளது என்பதைத் தெளிந்து, அந்த அருளிலே ஆன்மா, அசைவற நின்று அருளையே காண்பதுதான் ''நின்மல சொப்பனம்'' ஆகும். ஆன்மாவின் அறிவு இச்சை செயல்கள் தோன்றாமல், அவ்வருளே தானாகி எதிர் ஈடு சிறிதும் இன்றி இருக்கும் நிலையே ''நின்மல சுழுத்தி'' ஆகும். மலவாசனை சிறிதும் இன்றி ஆன்மாவுக்கு ஆனந்த ஒளி (சுக பிரபை) தோன்றும் நிலை, ''நின்மல துரியம்'' ஆகும். அதன் பிறகு ஆனந்த அனுபவத்தைப் பெற்று, அந்த ஆனந்த அனுபவத்தை அறிந்த தானும் இன்றி, ஆனந்தமாய் நின்ற முதலும் இன்றி, அந்த ஆனந்தமே தானாய் அதீதப்பட்ட நிலை, ''நின்மலதுரியாதீதம்'' ஆகும். மேற்கண்ட இரண்டு செய்யுள்களில் காரிய கேவலம், காரிய சகலம், காரிய சுத்தம் என்னும் நிலைகளில் நிகழும் ஐந்தவத்தைகளைக் குறித்துக் காணப்பட்டது.

காரண அவத்தைகளின் இயல்பு

நீக்கம் இல் அததும் மாசு
நிறைந்த கேவலமாம் நீர்மை;
சாக்கிரம், கலாதி சேர்ந்த
சகலமாம் தன்மை ஆகும்;
ஊக்கம் இல் இரண்டும் கூடாது
ஒழிய ஓர் நிலையில் நீடும்
சாக்கிராதீதம்; சுத்தத்
தகைமையது ஆகும் தானே. 62

தெளிவுரை;

''காரிய கேவலம்'' எனப்படும் கீழால் அவத்தையில், கருவிகள் சுழன்று அஞ்ஞானம் நீங்காத நிலையில், அந்நிலை துரியாதீதம் எனப்படும்; அந்தத் துரியாதீத நிலை ஆணவமலம் மிகுந்துள்ள காரண கேவலத்தின் தன்மையை ஒத்திருக்கும். ''காரண கேவலம்'' என்பது, அநாதி கேவலத்தில் ஆன்மாவின்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறிவும் செயலும் சிறிதும் தொழிற்படாமல், ஆணவமலத்தால் முழுவதும் மறைக்கப்பட்டு நிற்கும் நிலையைக் குறிக்கும்.

''காரிய சகலம்'' எனப்படும் மத்தியால் அவத்தையில் நிகழும் சாக்கிராவத்தை, கலை முதலிய தத்துவங்கள் சேர்ந்து காரண சகலத்தின் தன்மையை ஒத்து இருக்கும். அந்நிலையில் ஆன்மா, படைப்புக்காலம் தொடங்கிக் கன்மத்திற்கு ஈடான பல்வேறு யோனிகளில் புகுந்து, சுவர்க்க நரகங்களை அனுபவித்து, சர்வ சங்கார காலம் வரை, பிறப்பு இறப்புட்பட்டுத் திரியும். காரண சகலத்தில் ஆன்மா தன் வினைப்பயன்களைப் பல்வேறு பிறவிகளில் நுகரும்; காரிய சகலத்தில் அவ்வாறு நுகர்வதை அறியும் இதன்றி இரண்டு நிலைகளுக்கும் வேறுபாடு இல்லை.

''சாக்கிராதீதம்'' என்பது, மயக்கத்தைச் செய்கின்ற கேவல நிலையையும், விகற்பத்தைச் செய்கின்ற சகல நிலையையும் கருத்தில் கொள்ளாமல், ஆன்மா பெருமைக்குரிய அருளையே நினைந்த அந்நிலையினை நீங்காது இருப்பதைக் குறிக்கும். அப்போது ஆன்மாவுக்குத் தற்போத முனைப்பு இருக்காது; சிவத்தோடு ஏகனாகி நிற்கும். இவ்வாறு நிற்கும் நிலை, காரண சுத்தாவத்தையின் தன்மையை ஒத்து இருக்கும். இதுவே பரமுத்தி எனப்படுவது.

''காரண சுத்த அவத்தை'' என்பது, கேவல சகலப்பட்டுப், பிறந்து இறந்து திரியும் நிலையில், ஆன்மாக்களுக்கு ஆணவமல பாகம் வந்து, இருவினை ஒப்பும் சத்திநிபாதமும் வாய்க்கப் பெற்றிருக்கும் தருவாயில், சிவபெருமான் ஆசாரிய மூர்த்தமாய் எழுந்தருளி வந்து, கேவல சகலங்கள் நிகழாதபடி ஆன்மாவை அருளில் நிறுத்தும் நிலையைக் குறிக்கும்.

காரிய கேவலத்தில் துரியாதீதம், காரண கேவலத்தைப் போல் இருக்கும்; காரிய சகலத்தில் சாக்கிரம், காரண சகலத்தைப்போல் இருக்கும்; காரிய சுத்தத்தில் சாக்கிராதீதம், பரமுத்தியில் நிகழும். சுத்தாவத்தையின் தன்மையைப் போல் இருக்கும்.

ஐந்தாம் சூத்திரம்
உணர்த்தும் தன்மை
ஆன்மா விடயங்களை அறியும் முறைமை

மருவிய பொறியில் ஒன்றும்,
மா பூதம் ஐந்தில் ஒன்றும்,
கருவிகள் நான்கும் நீங்காக்
கலாதிகள் ஐந்தும் கூடி,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒரு புலன் நுகரும் இந்த
ஒழுங்கு ஒழிந்து உயிரும் ஒன்றைத்
தெரிவுறுது; அவன் ஒழிந்து, அத்
திரள்களும் செயல் இலாவே. 63

தெளிவுரை:

ஆன்மா, விடயங்களை அறியும் பொழுது, ஞானேந்திரியங்களைத் துணையாக் கொண்டு அவற்றை அறியும்; ஆயினும் அந்த இந்திரியங்கள் ஐந்தும் ஒரே சமயத்தில் ஒரு விடயத்தை அறிவன அல்ல. தனித்தனியே அந்தந்த விடயத்திற்கு ஏற்ற அந்தந்த இந்திரியமே, அந்தந்த விடயத்தை அறிவதற்குத் துணையாய் நிற்கும்.

''மா பூதம்'' என்பது அகப்பூதங்களைக்குறிக்ககும்; பூதங்களுக்குப்பற்றுக் கோடாய் இருப்பன அகப்பூதங்கள் ஆகும்(45–ஆவது செய்யுளைப் பார்க்கவும்) அகப்பூதங்களுள் ஒவ்வொன்றும், அந்தந்தப் பூதங்களுக்கு உரிய இந்திரியங்கள் ஒவ்வொன்றுக்கும், பற்றுக்கோடாக நின்று விடயங்களை அறியும்படி செய்யும். பூதங்களின் துணை இல்லாத வழி, இந்திரியங்கள் விடயங்களை அறிவதில்லை, எடுத்துக்காட்டாக செவி இந்திரியம், ஆகாயம் என்னும் பூதத்தின் இடமாக நின்று, சத்தம் என்னும் விடயத்தை அறியும். ஆகாயத்தின் துணை இன்றி, சத்தம் என்னும் விடயம் செவிக்குப் புலப்படுவது இல்லை.(விடயம்–புலப்படுவது)

''கலாதிகள்'' எனப்படும் கலை, நியதி, வித்தை அராகம் என்னும் நான்கும், சித்தம், புத்தி, அகங்காரம், மனம் என்னும் அந்தக்கரணங்களை விட்டு நீங்காமல் நின்று, ஆன்மா விடயங்களை (புலன்களை) நுகருமாறு செய்யும். அதன் விவரம் வருமாறு;

கலை, சித்தத்திற்கு உட்கருவியாக நின்று உயிர்க்குப் போகங்களில் நினைவை எழுப்பும்; நியதி புத்திக்கு உட்கருவியாய் நின்று, உயிர்க்குரிய போகங்களை நிச்சயித்து உறுதிப்படுத்தும்; வித்தை, அகங்காரத்திற்கு உட்கருவியாய் நின்று, உயிரின் அறிவைப் போகங்களில் எழச் செய்யும்; அராகம், மனத்துக்கு உட்கருவியாய் நின்று, உயிர்க்குப் போகங்களில் விருப்பத்தை ஏற்படுத்தும்.

ஆன்மா விடயங்களை நுகரும் முறை வருமாறு;

இறைவனின் இச்சா ஞான கிரியா சத்திகள் என்னும் சிவசத்திகள், சிவ தத்துவங்களைச் செலுத்தும்; சிவ தத்துவங்கள் கலாதிகளைச் செலுத்தும்; கலாதிகள் ஆன்மாவின் இச்சா ஞான சத்திகளை எழுப்பும், அந்நிலையில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆன்மாவின் இச்சை அந்தக் கரணங்களிடத்து நின்று, விடயங்களை அறிந்து பற்றி புலன்களில் அழுந்தும்; ஆன்மாவின் ஞானம் ஞானேந்திரியங்களிடத்தும், கிரியை கன்மேந்திரியங்களிடத்தும் நின்று, விடயங்களை அறிந்து பற்றிப் புலன்களில் அழுந்தும்.

சிவசத்திகள் சிவ தத்துவங்களைச் செலுத்தும் முறை வருமாறு;

சிவபெருமானின் இச்சா சத்தி, ஈசுவர தத்துவத்தைச் செலுத்தும்; கிரியா சத்தி, சத்தி தத்துவத்தையும் சாதாக்கிய தத்துவத்தையும் செலுத்தும்; ஞான சத்தி, சிவதத்துவத்தையும் சுத்த வித்தையையும் செலுத்தும்.

சிவதத்துவங்கள் கலாதிகளைச் செலுத்தும் வகை வருமாறு;

நாத வடிவாகிய சிவதத்துவம், புருடனைச் செலுத்தும் (பிரேரிக்கும்); விந்து வடிவாகிய சத்தி தத்துவம் காலத்தையும் நியதியையும் கலையையும் செலுத்தும்; சாதாக்கிய தத்துவம் மூலப் பிரகிருதியைச் செலுத்தும்; ஈசுவர தத்துவம், அராகத்தைச் செலுத்தும்; சுத்த வித்தை தத்துவம், வித்தையைச் செலுத்தும்.

கலாதிகள் ஆன்மாவின் இச்சா ஞானக் கிரியைகளை எழுப்பும் முறை வருமாறு;

கலை, ஆன்மாவின் செயலை எழுப்பும்; வித்தை அறிவை எழுப்பும்; அராகம் இச்சையினை எழுப்பும்; காலம் ஆன்மாவிற்குரிய கன்மத்தைக் கூட்டி நிற்கும்; நியதி அந்தக் கன்மத்தினை வரையறுத்து நிற்கும்; புருடன், உயிர் விரும்பும் பொருள்களில் மயங்கி நிற்கும்; மாயை(பிரகிருதி) உயிரைப் போகங்களில் அழுத்துவிக்கும். இவ்வாறு வித்தியா தத்துவங்களின் இன்றியமையாமையைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஆன்மா ஐம்புலன்களையும், ஞானேந்திரியங்களால் அறிந்து கன்மேந்திரியங்களால் பற்றி, அந்தக்கரணங்களால் அவற்றில் அழுந்தி நிற்கும் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த முறையை விட்டு ஆன்மா ஒன்றையும் அறியமாட்டாது; ஆகவே, ஆன்மாவின் பொருட்டு இந்த தத்துவங்கள்(திரள்கள்) தொழிற்படுகின்றனவே அன்றி, வேறு எந்தக்காரணமும் இல்லை என்பது புலப்படும். இவ்வாறு ஆன்மா விடயங்களை அறியும் முறைமை இந்தச் செய்யுளில் கூறப்பட்டுள்ளது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிவன் அறிவிக்க ஆன்மா அறியும் என்றது

தனக்கு என அறிவு இலாதான்;
தான் இவை அறிந்து சாரான்;
தனக்கு என அறிவு இலாத
வாயில் தான் அறியா, சார;
தனக்கு என அறிவு இலாதான்,
தத்துவ வன்ன ரூபன்;
சகலமும் நுகரும் தானே. 64

தெளிவுரை:

தானாக எதையும் அறிய இயலாத ஆன்மா, தானே இந்த தத்துவங்களை அறிந்து கூட முடியாது. தமக்கு என ஓர் அறிவும் இல்லாத சடம் ஆகிய இந்திரியம் முதலானவைகளும், தாமாக ஆன்மாவைச் சேர்வதற்கு அறியமாட்டா. தானாக எதையும் அறிய இயலாத ஆன்மா, தத்துவங்களின் வடிவமே தன் வடிவமாகக் கொண்டு நிற்பவன். ஆகவே, எல்லாவற்றையும் தானே ஒருசேர அறியும் சிவபெருமான், கருவி கரணங்களை ஆன்மாவுடன் கூட்டியதால், அவன் அருளால் ஆன்மா அவற்றோடு கூடி நின்று எல்லாவற்றையும் அனுபவிக்கிறான். ''தத்துவ வன்ன ரூபன்'' என்பது, பஞ்ச வர்ணங்களை அடுத்த படிகம் போல, ஆன்மா தன்னை அடுத்த கருவிகளின் மயமாய் நிற்கும் இயல்பு உடையவன் என்பதைக் குறிக்கும்.

சிவன் அறிவிக்க அறியும் ஆன்ம இயல்பை வலியுறுத்தல்

கண்டு அறிபுலன்கள் காணும்
கருத்தினால்; ஒருத்தன் ஞானம்
கொண்டு உளம் அறியும் என்னில்,
கொள்பவன் முதலி ஆகும்;
மண்டிய உணர்வு உயிர்க்கா
மன்னி நின்று அறியும் என்னில்,
உண்டிட வேண்டுவானுக்கு
ஒருவன் வேறு உண்டல் ஆமே. 65

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை;

இந்திரியங்கள் வாயிலாகக் கண்டும், கேட்டும், உண்டும், உயிர்த்தும், உற்றும் அறியப்படும் ஐந்து விடயங்களையும் (புலன்களையும்), ஆன்மா மனத்தினைத் துணையாகக் கொண்டு அறியும்; அதுபோல, ஒப்பற்ற சிவபெருமானுடைய ஞானத்தைத் துணையாகக் கொண்டு ஆன்மா விடயங்களை அறியும் என்று கூறினால் அது பொருந்தாது.ஏனென்றால், சிவபெருமான் விகாரமின்றி நிற்பவன்; அத்தகைய சிவபெருமானைத் துணையாகக் கொண்டு, ஆன்மா அறியும் என்று சொன்னால், அவ்வாறு அறியும் ஆன்மாவே கருத்தா ஆவான் என்று கருதும்படி ஆகிவிடும். இவ்வாறு கருதுவது குற்றமாகும்.

சிவபெருமானுடைய பரிபூரண ஞானம், ஆன்மாவில் பொருந்தி நின்று ஆன்மாவுக்காக அது அறியும் என்று கூறினால் , அது பசியால் உண்ண விரும்பிய ஒருவனுக்காக, வேறொருவன் உண்ணுவதுபோல் ஆகும். ஆகவே, அதுவும் குற்றம் ஆகும். இந்தச் செய்யுள், ஆன்மா கருவிகரணங்களின் துணைக் கொண்டு, சிவபெருமானால் அறிவிக்கப்பட அறியும் என்பதை வலியுறுத்துகிறது.

அறிவிக்க அறியும் வகையை உவமை முகத்தால் விளக்குதல்

இருள் நனி இரவிதான் வந்து
இரித்தலும் இரவில் எண்ணும்
பொருள் நிலை கண்டு மாந்தர்
பொருந்திடு மாறு போல
மருள் நிலை எங்கும் நீங்க
மகிழ்ந்து உயிர் தன்னுள் மன்னும்
அருளையும் ஒழிய, ஞாலத்து
அறிந்த வாறு அறியும் அன்றே. 66

தெளிவுரை;

இரவு நேரத்தில் எந்த ஒரு பொருளையும் கண்டு அடைய முடியாது; இராக் காலத்த இருள்,. மனிதனின் கண்ணொளியையும், காணவேண்டிய பொருளையும் மறைத்து நிற்கும். அந்த இராக்காலம் கழிந்து சூரியன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உதித்தவுடன் சூரியனின் உதவியால் கண், ஒளியைப் பெறும்; காணவேண்டுவனவற்றையும் காணும் , சூரிய ஒளியின் உதவியால் கண்ணின் ஒளி விளங்கியது என்பதை மனிதன் நினைத்துப் பார்ப்பது இல்லை; தன் ஒளித்திறனுல்தான் எல்லாவற்றையும் காண்பதாக நினைக்கிருன்.

இந்த உவமை, உயிரின் கேவல சகல நிலைகளில், இறைவன் அறிவிக்க ஆன்மா விடயங்களை அறியும் என்பதைக் காட்டுகிறது.

இராக்காலத்து இருள். கேவல நிலையில் ஆன்மாவின் அறிவையும் செயலையும் மறைத்து நிற்கும் ஆணவ மலத்திற்கு உவமை; சூரிய ஒளி, திருவருளுக்கு உவமை; சூரிய ஒளியின் உதவியால் கண் ஒளி விளங்குவது, இறையருளின் உதவியால் ஆன்மாவின் அறிவும் செயலும் சகல நிலையில் பொருளைக் கண்டு அனுபவிப்பதற்குவமை; தன் ஒளித்திறனுல் காண்பதாக அறிவது, உயிரின் தன்முனைப்புக்கு உவமை; இராக்காலம் கேவல நிலைக்கு உவமை; சூரியன் உதிப்பது, சகலநிலைக்கு உவமை.

இதுவும் அது

அறிந்திடும் மனுதி வாயில்
ஆனவை அவன் தனுலே,
அறிந்திடும் என்றும், ஒன்றும்
அறிந்திடா; அவை போல் யாவும்
அறிந்திடும்; அறியும் தன்மை
அறிந்திடா; கன்மத் தொன்மை
அறிந்து அவை நுகருமாறும்
அருளுவன் அமலன் தானே. 67

தெளிவுரை:

மனம் முதலிய அந்தக் கரணங்களும், இந்திரியங்களும் ஆகிய கருவி கரணங்கள், எப்பொழுதும் விடயங்களை ஆன்மாவினுலேயே அறிகின்றன. ஆயினும் அவ்வாறு ஆன்மாவினுல் அறிவதை அவற்றில் ஒன்றும் அறியமாட்டா. அக் கருவிகரணங்களைப் போலவே, ஆன்மாக்களும் சிவ பெருமானுலேயே எல்லாவற்றையும் அறியும். ஆயினும், அவ்வாறு சிவபெருமானுலேயே அறிகிருேம் என்பதை ஆன்மா அறியமாட்டாது. உயிர்கள் முன்பு செய்த வினைகளுக்கு ஏற்ப, கருவி கரணங்களைக் கூட்டுவித்து, அவ்வுயிர்களே அவ்வினைப் பயன்களை அனுபவிக்கும்படி, நின்மலன் ஆகிய சிவபெருமான் அருளிச் செய்கிருன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆறாம் சூத்திரம்

ஞான வாய்மை

ஞானம் வரும் முறைமை

காட்டிடும் கரணம் ஒன்றும்
இல்லையேல், காண ஒண்ணுதாம்;
நாட்டிய இவற்றால் ஞானம்
நணுகவும் ஒண்ணு; முன்னம்
ஈட்டிய தவத்தினாலே
இறையருள் உருவாய் வந்து
கூட்டிடும் இவற்றை நீக்கிக்
குரைகழல் குறுகு மாறே. 68

தெளிவுரை:

பெத்த நிலையில் உயிர்க்கு அறிவை விளக்கும் அறிகருவிகள் ஆகிய கரணங்கள் ஒன்றும் இல்லையானால், உயிரினால் ஒன்றையும் அறிய முடியாது.

இங்குக் கூறப்பட்ட கருவிகளால் உயிர், உண்மை ஞானத்தைப் பெறவும் முடியாது. முற்பிறவிகளில் செய்த சரியை கிரியா யோகங்களின் பயனால், இருவினை ஒப்பும், சத்திநிபாதமும் உயிர்க்குக் கிட்டும். அதுவரை உள் நின்று உணர்த்திய சிவபெருமான், திருவருளையே திருமேனியாகக் கொண்டு குரு மூத்தியாய் எழுந்தருளி வந்து, பக்குவம் உடைய ஆன்மாக்களுக்குத் தீக்கை செய்து, இக்கருவிகளை நீக்கிச் சிவபெருமானின் திருவடியை அடையும்படி, ஞானத்தைப் பற்றச் செய்தருள்வன்.

சிவபெருமான் குருமூர்த்தியாய் அருளிச் செய்ததும், கருவிகளையே ஆதாரமாக நின்ற ஆன்மா, இறைவன் திருவடியை ஆதாரமாகத் தலைப்பட்டு நிற்கும். சிவபெருமான் வடிவம் கொள்ளும் முறை இருவகைப்படும்; ஒன்று அதிட்டான பக்கம் (பட்சம்); மற்றொன்று ஆவேச பக்கம், அநந்தேசர், ஸ்ரீகண்டருத்திரர் முதலிய கிருத்திய கர்த்தாக்களை நிலைக்களமாகக் கொள்வது, அதிட்டான பக்கம் அல்லது சம்புபட்சம் எனப்படும்; திருஞானசம்பந்தர், மெய்கண்டார் முதலிய குருமூர்த்திகளை நிலைக்களமாகக் கொள்வது ஆவேச பக்கம் அல்லது அணுபட்சம் எனப்படும். வழிபடு வடிவங்கள் ஆகிய இருபத்தைந்து மூர்த்தங்களும் சம்பு பட்சமே ஆகும். (அணு- ஆன்மா) ஆன்மாக்களை அதிட்டித்து நின்று அருளுவது அணுபட்சம் ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஏழாம் சூத்திரம்
ஞானத்தின் இயல்பு

பல் நிறம் கவரும் தொன்மைப்
படிக நீடு ஒளியும் பன்மை
மன் இலங்கு இயல்பும் தந்த
வளர் ஒளி போல வையம்
தன்னகம் பயிலும் நல்சித்
சடங்களின் தன்மை தாவா
நல் நலம் பெற நிறைந்த
ஞானமே ஞானம் என்பர். 69

தெளிவுரை:

படிகம், தன்னை அடுத்த பல பொருள்களின் நிறங்களையும் தன் நிறமாகக் கொள்ளும்படி செய்கிறது; மேலும் அந்நிறங்களை விட்டுத் தனது சொந்த நிறத்தையே கொள்கிறது. இவற்றைப் படிகம் பெறும்படி செய்வது சூரியனது ஒளியே ஆகும். ஆயினும் சூரிய ஒளியில் அவற்றின் தன்மைகளைப் பொருந்துவது இல்லை. அதுபோலவே, உலகத்தில் காரியப்படும் சித்தும் சடமும் ஆகிய பொருள்கள், சிவஞானத்தைப் பொருந்தியே தொழிற்படுகின்றன. ஆயினும் சிவஞானம் இவற்றின் தன்மைகளைப் பொருந்துவது இல்லை. இந்தச் சிவஞானமே உயிர்கள் முத்தியின்பம் பெறுமாறு எங்கும் பரிபூரணமாய் விளங்குகின்றது.

இதுவும் அது

மாயை மாமாயை மாயா
வரும் இரு வினையின் வாய்மை
ஆய, ஆர் உயிரின் மேவும்
மருளினில் இருளாய் நிற்கும்;
மாயை மா மாயை மாயா
வரும் இருவினையின் வாய்மை
ஆய, ஆர் உயிரின் மேவும்
அருளினில் ஒளியாய் நிற்கும். 70

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

அசுத்த மாயையும், சுத்த மாயையும் ஒழியாமல் வரும் புண்ணிய பாவங்களும் ஆகிய இவற்றின் உண்மையேயாய் நின்று போகங்களை அனுபவிக்கும் அரிய உயிரினிடத்தில் பொருந்திய பெத்த நிலையில், ஞானம் வெளிப்படாமல் மறைந்து நிற்கும். அசுத்த மாயையும் சுத்த மாயையும் ஒழியாமல் வரும் புண்ணிய பாவங்களும் ஆகிய இவற்றின் உண்மையை அறிந்து, அவற்றிலிருந்து நீங்கி நிற்கும் பக்குவம் உடைய உயிரினிடத்தில் பொருந்திய முத்தி நிலையில், அந்த ஞானம் வெளிப்பட்டு ஒளிமயமாய் நிற்கும்.

பெத்த நிலையில் உயிர் ஆணவமலப் பற்றுக் கொண்டு நிற்பதால், ''மருளினில் இருளாய் நிற்கும்'' என்றார்.

முத்தி நிலையில் உயிர் தன் இயல்பையும் இறை இயல்பையும் மலமாயா கன்மங்களின் இயல்பையும் அறிந்து, அவற்றினின்றும் நீங்கி இறையருளையே, பற்றி நிற்கும். அந்நிலையில் ஆன்மா சிவஞானம் மேலிட்டுப் பிரகாசித்து நிற்கும். எனவே, ''ஒளியாய் நிற்கும்'' என்றார்.

எட்டாம் சூத்திரம்

ஞானத்தால் வரும் பயன்

பயன் வகுத்துக் கூறல்

தேசு உற மருவும் ஆன்ம
        தெரிசனம், ஆன்ம சுத்தி
ஆசு இலா ஆன்ம லாபம்
        ஆக மூன்று ஆகும்; மூன்றும்
பாசம் அது அகல ஞானம்
        பற்றல், தான் பணியை நீத்தல்,
ஏசு இல் நேயத்து அழுந்தல்
        எனும் இவற்று அடங்கும் அன்றே. 71

தெளிவுரை:

ஆன்ம ஞானத்தைப் பெறுவதனால் ஏற்படும் பயன்கள் மூன்று ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அவை ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, குற்ற மற்ற ஆன்ம லாபம் என்பனவாகும். இந்த மூன்றும், பாசம் நீங்கப் பெற்று அருளைத் தரிசித்தல், தனக்கு என எந்த ஒரு செயலும் இன்றி இருத்தல், நின்மலன் ஆகிய சிவபெருமானிடத்து அழுந்தி நிற்றல் என்று பேசப்படும் இந்த மூன்று பயிற்சிகளில் அடங்கும்.

ஆன்ம தரிசனம்

தன் அறிவு அதனால் ஏதும்
தனக்கு அறிவு இல்லை ஏனும்,
தன் அறிவாக எல்லாம்
தனித்தனி பயன் அருந்தும்;
தன் அறிவு அறியும் தன்மை
தன்னாலே தனை அறிந்தால்,
தன்னையும் தானே காணும்
தான் அது ஆகி நின்றே. 72

தெளிவுரை:

தன்னுடைய இயற்கை அறிவினால் எதனையும் அறியும் இயல்பு உயிர்க்கு இல்லை. ஆயினும் தன் அறிவினாலேயே எல்லாவற்றையும் அறிந்து அனுபவிப்பதாகக் கருதி, கருவிகள் வாயிலாக வரும் போகங்கள் அனைத்தையும், ஒவ்வொன்றாக உயிர் அனுபவிக்கிறது. சிவபெருமானின் திருவருளால், ஆன்மா ஞானத்தை அறியுமாயின், தனது அறிவு கருவிகளோடு கூடி நின்று விடயங்களை அறியும் முறைமையையும், தனது இயல்பையும் ஆன்மா, அந்தச் சிவஞானத்தோடு கூடி நின்று தெளிவாக அறியும். அவ்வாறு அறிவதே ஆன்ம தரிசனம் எனப்படும்.

சிவபெருமான், நால்வகை வாக்குகளானும் கலை முதலிய தத்தவங்களானும், ஆன்ம அறிவை விளங்கச் செய்து, விடய போகங்களை ஆன்மா நுகருமாறு செய்தருள்கின்றான். இவ்வாறு நுகரும்பொழுது, இவற்றைத் திருவருளாலேயே அறிந்து அருந்துகிறேன் என்பதை ஆன்மா அறிவதில்லை. இவற்றை ஆன்மா அறியாமலிருப்பதற்குக் காரணம், ஆன்மா ஆணவமலத்தைப் பற்றி நிற்பதால், அதன் அறிவு மறைக்கப்பட்டு இருப்பதனாலேயே ஆகும்.

மலபரிபாகம் எய்தியபொழுது, திருவருள் உணர்வு ஆன்மாவுக்குத் தலைப்படும். அந்நிலையில் ஆன்மா, தன் அறிவு கருவிகளால் நிகழ்ந்தது என்றும், அது சட அறிவு என்றும், அது தனக்கு அந்நியமானது என்றும், தனது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆணவமலப் பற்றுக்கு ஏற்பத் திருவருளே தனக்கு அவ்வாறு அறிவித்தது என்றும் உணரும். அவ்வாறு உணரும் நிலை வலுப்பெறும் பொழுது, தான் சடமும் அன்று, திருவருளைப் போல் பேரறிவுடைப் பொருளும் அன்று என்பதைத் தெளிந்து, திருவருளிலேயே எந்நேரமும் அழுந்தி நிற்கும். அந்நிலையில், தன்னையும் திருவருளாலேயே காணும். அவ்வாறு காண்பதுவே 'ஆன்ம ரூபம்' எனப்படும். இதனை ''நின்மல சாக்கிரம்'' என்று கூறுவர். இந்நிலையையே மணிவாசகப் பெருந்தகை,

'' அவனருளாலே அவன்தாள் வணங்கி''

என்று அருளிச் செய்கின்றார்.

இவ்வாறு கருவிகள் முப்பத்தாறும் தான் அல்ல என்றும், தனது அல்ல என்றும் அருளால் அறியும் ஆன்மா; தனக்கெனச் செயல் ஒன்றும் இன்றி, அந்த அருளோடு கூடி நிற்பது, ''ஆன்ம தரிசனம்'' ஆகும். இதனை ''நின்மல சொப்பனம்'' என்று கூறுவர்.

ஆன்ம சுத்தி

தத்துவம் ஆன வற்றின்
தன்மைகள் உணரும் காலை,
உய்த்து அறிந்திட உதிப்பது
ஒளி வளர் ஞானம் ஆகும்;
அத்தன்மை அறியுமாறும்
அகன்றிட அதுவாய் ஆன்மாச்
சுத்தமாம்; சுத்த ஞானத்து
ஒரு முதல் தோன்றும் அன்றே. 73

தெளிவுரை:

தத்துவங்களின் இயல்பை ஆராய்ந்து அறியும்பொழுது அவை உயிர்க்கு அந்நியமான சடப்பொருள் என்பது ஆன்ம அறிவில் தோன்றும். அவ்வாறு தோன்றுவதே ஒளிமிகுந்த சிவஞானம் ஆகும். அவ்வாறு அறிகின்ற சுட்டறிவும் ஆன்மாவை விட்டு நீங்கும் பொழுது, அந்தச் சிவஞானமே வடிவாய் ஆன்மா தூய்மை உறும். அந்நிலையிலேயே நின்மலமாய் உள்ள ஞானத்திற்கு முதலாய் உள்ள ஞேயம் தோன்றும்.

(ஞானம் – திருவருள் – ஆன்மாவுக்கு அறிதலைச் செய்வது; ஞேயம் – சிவம் – ஆன்மாவால் அறியப்படும் பொருள்.)

CC-0. In Public Domain. Chinmaya Collection. TN.

Digitization by eGangotri-South Center

''உய்த்து அறிதல்'' என்பது, புத்தியைச் செலுத்தி ஆராய்ந்து அறிவதைக் குறிக்கும்.

சுட்டறிவினால் அறியப்படும் ஏகதேசக் காட்சி ஆகிய உலகப்பற்று, திருவைந்தெழுத்தை விதிப்படி உச்சரிக்கும் பொழுது பற்றறக் கழியும். அந்தப் பற்று அறவே கழியும் பொழுது ஆன்மா தனக்கென ஒரு செயலும் இல்லாததாய்த் தற்போத நிகழ்ச்சி இன்றித், திருவருளையே ஆதாரமாகக் கொண்டு, அந்த அருளில் அடங்கி அவ்வருளே தான் ஆகி நிற்கும். அந்நிலையே ''ஆன்ம சுத்தி'' ஆகும். இதனை 'நின்மல சுழுத்தி'' என்று கூறுவர்.

''ஒருமுதல் தோன்றும்'' என்பது சிவதரிசனம் ஆகும். ''சிவதரிசனம்'' என்பது, சிவபெருமானுடைய திருவடி, திருமுகம், திருமுடி ஆகியவற்றின் உண்மையை, ஐயம் திரிபு அற அறிந்து தெளிந்து, கேவல நிலையையும் சகல நிலையையும் நீங்கி, ''நான் பிரமம்'' என்னும் பசு ஞானத்தோடும் பொருந்தாமல், தன் செயல் அற்று ஆன்மா, எல்லாம் திருவருளின் செயலேயாய்க் கண்டு தெளிந்து அனுபவிப்பதைக் குறிக்கும். ''எல்லாம் அவன் செயல்'' என்னும் உணர்வில் உறைத்து நிற்பதும் இஃதே ஆகும்.

யான் எனது என்னும் தற்போத முனைப்பு இன்றி நிற்கும் ஆன்மாவினிடத்து அருளாற்றல் பிரகாசித்து நிற்கும் நிலையே ''திருவடி'' ஆகும்; எங்கும் சிவமாய்க் காண்பதே ''திருமுகம்'' ஆகும்; சிவானந்தம் ஆகிய பேரின்பப் பெருநிலையில் திளைத்து நிற்பதே ''திருமுடி'' ஆகும்.

ஞேயத்தைப் பற்றிய தெளிவு

உறை தரும் உணர்வும் அன்றி,
அதன் முதல் உள்ளது என்று இங்கு
அறைவது என் என்னில், அண்ணல்
அருள் எனும் அதுவே அன்றி,
நிறை ஒளி முதல் அது அன்றி
நின்றிடா; நிமலன் ஆகும்
இறையவன் முதல்; அவன்தன்
இலங்கு அருள் சத்தி யாமே. 74

தெளிவுரை:

ஆன்மாவோடு பொருந்தி இருக்கும் ஞானம் இல்லாமல் அந்த ஞானத்திற்கு முதல் ஆகிய ஞேயம் உண்டு என்று இந்த இடத்தில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சொல்வதற்கு என்ன காரணம் என்றால், அந்த ஞானமே சிவபெருமானின் அருள் என்பதனாலேயே ஆகும். மேலும், எங்கும் பரந்து இருக்கும் பகல் ஒளி அதன் முதலாகிய சூரியனை விட்டு நீங்கி நிற்பது இல்லை. அதுபோல ஞானம் ஆகிய குணமும், குணியாகிய முதல்வனை அன்றி நில்லாது. எனவே, நின்மலன் ஆகிய சிவபெருமான் ''முதல்'' ஆகும்; அவனிடத்தில் விளங்குகின்ற ''அருள்'' அவனுடைய சத்தி ஆகும்.

ஞானமே ஞேயத்தைக் காட்டும்

சுத்தமாம் சத்தி ஞானச்
சுடர் ஆகும்; சிவம் ஒழிந்து, அச்
சத்திதான் இன்றாம்; முன்னைத்
தகவு இலா மலங்கள் வாட்டி
அத்தனை அருளும்; எங்கும்
அடைந்திடும் இருள் அகற்றி
வைத்திடும் இரவி காட்டும்
வளர் ஒளி போல் மகிழ்ந்தே. 75

தெளிவுரை:

தூய நிலையில் நின்மலமாய் நிற்கும் இறையருள், ஞானப் பிரகாசமாய் இருக்கும்; அந்தத் திருவருள் சிவத்தைப் பிரிந்து, தனி ஒரு முதலாய் நிற்க மாட்டாது. எங்கும் பரவி இருக்கும் இருளை நீக்கி விடுகின்ற சூரியனை அதன் ஒளி காட்டுகிறது. அதுபோல அநாதியே ஆன்ம அறிவை மறைத்து நின்ற இழிவான மும்மலங்களையும் போக்கி அந்தத் திருவருள், ஆன்மாவைத் தூய்மைப் படுத்தித் தனக்கு முதல் ஆகிய சிவபெருமானை, அந்த ஆன்மாவுக்கு அருளுடனே மகிழ்ந்து காட்டும்.

ஒன்பதாம் சூத்திரம்

சிவசமவாதிகளின் மறுப்பு

புகல் அரும் அசத்தர், தம் பால்
பொருந்திய அலகையே போல்,
அகிலமும் உணரும் ஈசன்
அருள் உயிர் மேவ லாலே,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சகலமும் நிகழ வேண்டும்;
தலைவன் ஐந்தொழிலும் தானே
இகல் அற இயற்றல் வேண்டும்;
என்றது நன்றி இன்றே. 76

தெளிவுரை:

தமக்கு என அறிவும் செயலும் உண்டு என்று சொல்லுவதற்கு அரிய திறன் இல்லாதவரிடத்தில், பொருந்திய பிசாசின் குணம், செயல்கள் எல்லாம், அந்தத் திறன் இல்லாதவரிடத்தில் நிகழும். அதுபோல, எல்லாவற்றையும் ஒரு சேர உணரும் சிவபெருமானுடைய அருள், ஆன்மாவின் இடத்தில் பொருந்துவதால், சிவனுக்கு உரிய சர்வஞ்ஞத்துவம் (எல்லாவற்றையும் ஒருசேர அறியும் தன்மை) முதலிய குணங்கள் எல்லாம் அந்த ஆன்மாவினிடத்திலும் நிகழ வேண்டும்; சிவபெருமானுக்கே உரிய ஐந்தொழில்களை, முத்தி பெற்ற ஆன்மாவும் மாறுபாடு இன்றிச் செய்தல் வேண்டும் என்று சிவசமவாதிகள் கூறுகிறார்கள். அவர்கள் இவ்வாறு கூறுவது நன்றி கொன்ற செயலுக்கு ஒப்பாகும்.

''நன்றி கொன்ற செயல்'' என்பது, அநாதி பெத்த சித்துருவாய் நின்ற ஆன்மாவுக்கு, இறைவன் தனு கரண புவன போகங்களைத் தந்து, ஆன்மா திருந்தும் பொருட்டு, பிறப்பு வாய்ப்புக்கள் பலவற்றை வழங்கி, இறுதியில் அந்த ஆன்மாவைத் தானாகச் செய்த உதவியை மறந்து, இறைவனுக்குச் சமமாகத் தன்னைக் கருதுவதைக் குறிக்கும்.

சிவசமவாதியின் மறுப்புக்கு விளக்கம்

இன்று, நோக்கு உரை நடக்கும்
இயல்பு இலோர்க்கு இனைய வாய்ந்து
நின்றதோர் அலகை சேர்ந்தால்
நிகழ்வது என்? அதுபோல் உள்ளத்து
ஒன்றிய உணர்வு தம் பால்
உள்ளது நிகழ்த்தும் ஈசன்
தன் தொழில் நடாத்தும் மேனி
தனக்கு எனக் கொண்டு தானே. 77

தெளிவுரை:

பார்வையும் பேச்சும் நடக்கும் திறனும் இல்லாத முறையே குருடு, ஊமை, முடம் எனப்படும் அங்கக் குறைபாடுள்ள ஒருவனிடத்திலே,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்நிலையில் இவையெல்லாம் குறைவற்றுப் பொருந்தி நிற்கும் ஒரு பேய் சேர்ந்தால், அவனிடத்தில் உணடாவது எ ன்ன? அவன் குருடு நீங்கி, அவனுல் எதையாவது பார்க்க முடியுமா? அவன் ஊமை நீங்கி, அவனுல் அந்தப் பேய் போல் பேச முடியுமா? அவன் முடம் நீங்கி, அவனுல் நடந்துசெல்லத்தான் முடியுமா? இஃதெல்லாம் நடைபெருதன்றே? ஆகவே, பேயின் செயல்கள் அனைத்தையும், பேய்பிடி உண்டவன் செய்ய முடியாது என்பது தெளிவாகும். பேய்பிடி உண்டவனிடத்தில் இயல்பாகவே என்ன உள்ளதோ அதுவே பேய் பிடித்த பிறகும் அவனிடத்து விளங்கும்.

அதுபோலவே, முத்தி நிலையில் ஆன்மாவினிடத்திலே பொருந்திய அருளும், அந்த ஆன்மாவினிடத்தில் உள்ள அறிவு இச்சை செயல்களைப் பாசத்தினின்றும் நீக்கி, அவற்றை விளக்கம் உறச் செய்து, சிவத்தைக் காட்டும், அஃது அன்றி வேறேதும் செய்வதில்லை, சிவபெருமான் ஐந்தொழிலை எப்படிச் செய்கிருன்? தனக்கென்று ஒரு திருமேனியைத் தானே கொண்டு, ஆன்மாக்கள் உய்யும் பொருட்டே சிவபெருமான் ஐந்தொழில் ஆற்றுகிருன். அப்படி இருக்கும் போது, முத்தி பெற்ற ஆன்மா, தனக்கென ஒரு திருமேனியைத் தானே அமைத்துக் கொள்ள முடியாத நிலையில், அஃது எப்படி ஐந்தொழில் ஆற்றும் என்று கூற முடியும்? எனவே, சிவசம வாதிகளின் மறுப்பு பொருந்தாது.

ஆன்ம சுத்தியின் பயன்

இந் நிலை தன்னில் மன்னி
 எய்திடும் கலாதி போதம்
தன் அளவு அறிந்து நிற்கும்
 தகவு இலா மலங்கள் நீத்த
அந்நிலை கரணம் ஆகா
 வகை அதில் அறிவு அடங்கி
மன்னிட வியாபி யாய
 வான் பயன் தோன்றும் அன்றே. 78

தெளிவுரை:

இந்தச் சகல நிலையில், கலை முதலிய தத்துவங்களால் வரும் ஏகதேச அறிவைப் பொருந்தி ஆன்மா தொழிற்படுகின்றது. அந்த ஏகதேச அறிவின் இயல்பை உணர்ந்து, அவ்வறிவைச் செய்து நிற்கும் இழிந்த மலங்களை நீக்கிய அருள் நிலையில் ஆன்மா நிற்கிறது. அந்நிலையில் அம் மலங்களின் வாசனை தாக்காதபடி, அந்த அருள் வியாபகத்தின் உள்ளாக ஆன்மா அடங்கி நிற்கிறது. அப்போது தோன்றும் சிவத்தில் நிலைபெற்று நிற்க, ஆன்மாவின் வியாபக

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறிவு ஆகிய பயன் தோன்றும்.

மும்மலங்களின் தொடர்பே ஆன்மாவுக்கு ஏகதேச அறிவை தோற்றுவிக்கிறது. மலங்கள் நீங்கப் பெறும் நிலையில், ஆன்மா ஆகிய தனது இயல்பையும், கலை முதலிய தத்துவங்களால் வரும் ஏகதேச அறிவையும் ஆன்மா உணர்கிறது. ''ஏகதேச அறிவு'' என்பது, ஒரு சிலவற்றை மட்டுமே அறிவதைக் குறிக்கும். அதுவே ''சிற்றறிவு'' எனப்படும்.

''மலங்கள் நீத்த நிலை'' என்பது, மும்மலங்களும் நீங்கப் பெற்ற துரிய நிலை எனப்படும் அருள் நிலையைக் குறிக்கும்.

''கரணம் ஆகாவகை, அதில் அறிவு அடங்கி மன்னிட'' என்பதற்கு விளக்கம் வருமாறு:

மும்மலங்களும் நீங்கிய நிலையிலும் அவற்றின் வாசனை தாக்காது ஒழியாது. அந்த வாசனை தாக்காது இருத்தல் பொருட்டு, ஆன்மா ''ஏகனாகி, இறைபணி நிற்றல்'' வேண்டும். ''ஏகன் ஆதல்'' என்பது, ஆன்மா தான் என வேறு காணப்படுமாறு இன்றிச் சிவனோடு ஒற்றுமைப்பட்டு நிற்றலைக் குறிக்கும். ''இறைபணி நிற்றல்'' என்பது ஆன்மாவின் இச்சா ஞானக் கிரியைகளின் தொழிற்பாடுகள் தன்னிச்சையில் நிகழாமல், நிகழ்வன எல்லாம் சிவ பெருமானின் இச்சா ஞானக் கிரியைகளின் நிகழ்ச்சியே எனக் கண்டு, திருவருள் வியாபகத்துள் ஆன்மா அடங்கி, நிற்றலைக் குறிக்கும். இதனையே மணிவாசகப் பெருந்தகை,

> '' வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்
> அதுவும் உன்தன் விருப்பன்றே''

என்று அருளிச் செய்துள்ளார்கள். பாச நீக்கத்தின் மேலானது, வியாபக அறிவு விளங்கித் தோன்றுவதாகும். இதனை ''வான்பயன்'' என்றார் ஆசிரியர்.

சுத்த நிலையில் ஞான உணர்வு

அடைபவர் சிவமே ஆகும்
அது அன்றித் தோன்றும் என்ற
கடன் அது ஏது என்னில், முன்னம்
கண்டிடார் தம்மைப், பின்னும்
தொடர்பு அரும் அருளினாலும்
தோன்றுமா காணா ராயின்,
உடையவன் அடிசேர் ஞானம்
உணர்தல் இன்று, அணைதல் இன்றே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

திருவருளை அடையும் ஆன்மா, சிவமாகி விடுதலோடு மட்டும் அன்றி, அந்நிலையில் மற்றும் ஒரு பயன் தோன்றும். இவ்வாறு கூறுவதற்கு என்ன காரணம் என்றால், அதன் விளக்கத்தைக் கீழே காண்க.

பெத்த நிலையில் மல மறைப்பு காரணமாக, வியாபகம் ஆகிய தமது சொரூபத்தை (உண்மை இயல்பு) ஆன்மாக்கள் அறியாமலிருந்தன. ஆனால், இந்த சுத்த நிலையிலும், பெறுதற்கு அரிய அருளின் பேருதவி பெற்ற பொழுதும், ஆன்மாக்கள் தமது வியாபக அறிவு விளங்கும்படி காணவிட்டால், சிவபெருமானின் திருவடி ஆகிய சிவாநந்தத்தைப் பெறுவதற்கு ஏது ஆகிய சிவஞானத்தை அறிவதும் இல்லை; அந்தத் திருவடியைக் கூடுவதும் இல்லை ஆகும்.

ஆகவே, பெத்த நிலையில் காணப் பெறாத தமது உண்மை நிலையை ஆன்மாக்கள், இந்த முத்தி நிலையில் காணப் பெறும் என்பதுவே, சிவமாகி விட்ட பின்பும் ஆன்மாவுக்கு வாய்க்கப் பெறும் பயன் என்று இந்தச் செய்யுள் கூறுகிறது. ''அருள் சேர் ஞானம்'' என்பதும் ஒன்றே ஆகும்.

பத்தாம் சூத்திரம்

சாக்கிராதீதம்

பொற்பு உறு கருவி யாவும்
புணராமே அறிவிலாமைச்
சொல் பெறும் அதீதம் வந்து
தோன்றுமே, தோன்றி நின்ற
சிற்பரம் அதனால் உள்ளச்
செயல் அறுத்திட உதிக்கும்
தற்பரம் ஆகி நிற்றல்
சாக்கிராதீதம் தானே. 80

தெளிவுரை:

பொலிவினை உடைய கருவிகள் முப்பத்தாறும் பொருந்திய நிலையில், ஆன்மா அவற்றோடு கூடிச் சகலப் படாமலும் (சேராமலும்) அறியாமை என்று சொல்லப்படுகின்ற கேவல நிலை வந்து ஆன்ம அறிவு மறைக்கப்பட்ட நிலையில், ஆன்மா அதனால் மயங்காமலும் நிற்பது எப்படி?

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆன்மாவினிடத்தில் தோன்றி நின்ற மேலான ஞான சத்தியின் அருளால், ஆன்மா தற்போத சேட்டை ஒழித்து நிற்கையில் ஆன்ம அறிவில் தோன்றும் சிவத்தோடு ஆன்மா ஏகன் ஆகி நிற்பது எதுவோ, அதுவே சாக்கிராதீதம் ஆகும். அஃதாவது, ஆன்மா சகல கேவலங்களில் பொருந்தாமல், ஆணவ மல வாசனை நீங்கப் பெற்று, தற்போத முனைப்பு இன்றிச் சிவத்தோடு ஏகன் ஆகி நிற்கும் நிலை ஆகும். ''தற்போத சேட்டை ஒழிதல்'' என்பது ஆன்மா தன்செயல் அற்று இறைபணி நிற்றலைக் குறிக்கும்.

கருவிகளை ஒடுக்குதற்கு வழி

ஒடுங்கிடா கரணம் தானே
ஒடுங்குமாறு உணர்ந்து ஒடுக்க
ஒடுங்கிடும் என்னில், நின்றது
ஒடுங்கிடா; கரணம் எல்லாம்
ஒடுங்கிட ஒடுங்க, உள்ள
உணர்வுதான் ஒழியும் வேறாய்
ஒடுங்கிடின் அன்றி மற்று அவ்
உண்மையை உணர் ஒணுதே. 81

தெளிவுரை:

கருவிகள் தாமாகவே ஒடுங்க மாட்டா. அவை ஒடுங்கும் வழியை அறிந்து, ஆன்மாவே ஒடுக்கினால் ஒடுங்கும் என்று கூறினால் அது பொருந்தாது. ஏனென்றால், இச்சா ஞானக் கிரியைகளாய் நின்ற ஆன்மாவின் தற்போதம் ஒடுங்காததாலே, ஆன்மா தன்னிச்சையால் கருவிகளை ஒடுக்க நினைத்தால் அவை ஒடுங்க மாட்டா.

கருவிகள் எல்லாம் ஒடுங்க ஒடுங்க ஆன்மாவின் தற்போதமும் ஒடுங்கும் என்று சொன்னால், அதுவும் பொருந்தாது. ஏனென்றால், கருவிகள் ஒடுங்க ஒடுங்க, ஆன்மாவுக்குள் அறிவு விளக்கம் மறைந்து, கேவல நிலை வந்து ஆன்மாவை ஆணவமலம் மூடிவிடும். விடவே, ஆன்மாவின் தற்போதம் ஒடுங்குவதற்கும் இது வழி அன்று. அவ்வாறாயின் கருவிகளை ஒடுக்குவதற்கு வழிதான் யாது என்றால், கருவிகளை அந்நியமாகக் கண்டு ஆன்மா திருவருளில் ஒடுங்கி நிற்பதே அதற்கு வழியாகும். அஃதன்றி ஆன்மா சிவத்தை அறிந்து அனுபவிக்க முடியாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆன்மா திருவருளில் அடங்கி நிற்கும் பொழுது அந்தக் கருவிகளை ஆன்மாவுடன் பொருந்தச் செய்த திருவருள், அக்கருவிகளை அடக்கும்; அப்போது ஆன்மா கருவிகளை விட்டு நீங்கி நிற்கும் நிலையைப் பெறும்; எனவே தற்போதத்திஞல் ஆன்மா கருவிகளை அடக்க முடியாது என்பது பெறப்படும்.

தற்போதம் ஒழிவதற்கு வழி

பற்றிடும் கருவி யாவும்
படர்ந்து உணர்வு அளிக்கும் காலை,
உற்று அறிந்திடுவது ஒன்றின்
உணர்வினின் உண்மை ஆகும்;
மற்று அது பகல் விளக்கின்
மாய்ந்திட வருவது உண்டேல்,
பெற்றிடும் அதனை மாயப்
பிறப்பினை அறுக்க லாமே. 82

தெளிவுரை:

விடயங்களைப் பற்றும் ஞானேந்திரியங்கள் எல்லாம், புறத்தே சென்று ஆன்மாவுக்கு, அறிவைக் கொடுக்கும் காலத்தில், அந்த விடயங்களில் (புலன்களில்) ஒன்றைப் பொருந்தி, அதனைச் சுட்டி அறிவது, ஆன்ம போதத்தின் இயல்பு ஆகும்.

பகலில் எரியும் விளக்கு, தான் கெடாமல் அதன் ஒளி கெட்டு நிற்கும். அதுபோல ஆன்மாவும் தான் கெடாமல், தன் இச்சா ஞானக் கிரியைகள் ஆகிய போதும் கெட்டு நிற்குமாயின், அந்நிலையில் ஆன்மா சிவத்தை அடையும்; மயக்கத்தைத் தரும் பிறவியையும் அறுக்கலாம்.

''இச்சா ஞானக் கிரியைகள் கெடுவது'' என்பது – ஆன்மா, தான் நுகரும் பொருட்டு ஒன்றையும் விரும்பாமலும், தனது பெருமையைக் காட்டும் பொருட்டு ஒன்றையும் அறியாமலும், தனக்குப் புகழ் ஏற்பட வேண்டும் என்பதற்காக ஒன்றையும் செய்யாமலும் இருப்பதைக் குறிக்கும், அவன் அருளால் அன்றித், தன் இச்சா ஞானக் கிரியைகள் தொழிற்படா என்பதை உணர்ந்து, அதில் உறைப்புடன் நின்ருல், தற்போதம் கெடும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆன்ம லாபம்

ஞானத்தின் வகையும், வீடு பேற்றிற்கு உரிய சிறந்த சாதனங்களும்

முந்திய ஒருமை யாலே
மொழிந்தவை கேட்டல், கேட்டல்
சிந்தனை செய்தல், உண்மை
தெளிந்திடல், அது தான் ஆக
வந்தவாறு எய்த நிட்டை
மருவுதல், என்று நான்காம்
இந்தவாறு அடைந்தோர் முத்தி
எய்திய இயல்பி னரே. 83

தெளிவுரை:

முன் பிறவியில் செய்த சரியை முதலிய தொண்டுகளின் விளைவால் ஏற்பட்ட ஒற்றுமை காரணமாக, ஆசாரியர் உபதேச மொழிகளைக் கேட்டலும், கேட்ட பொருளைச் சிந்தித்தலும், அந்தப் பொருளின் உண்மையைத் தெளிந்து அறிதலும், சிவம் தானாக வந்த அத்துவித நிலை பொருந்துமாறு நிட்டை கூடுதலும் என, ஞானம் நான்கு வகையாகும். இந்நான்கு நெறிகளில், முறைப்படி கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடியவரே, முத்தியைப் பெறுதற்கு உரிய இயல்பினை உடையவராவர்.

ஆன்ம லாபம் – சிவப்பேறு – நிட்டை – சுவானுபூதி.

கேட்டல்:

பதி பசு பாசங்களின் இயல்புகளை ஆசாரியர் வாயிலாகக் கேட்டல், தனு கரணம் புவனம் போகம் என்னும் மாயா காரியங்கள் அனைத்தும் சடப்பொருள்கள்; அவை ஆன்மாவுக்கு அந்நியப் பொருள்கள்; ஆணவமலப் பற்று காரணமாக அறியாமைக்கு உட்பட்டு, ஆன்மாக்கள் தத்துவங்களின் வயப்பட்டுத் துன்புறுகின்றன, ஆன்மா தூலசித்து; இறைவன் சூக்கும சித்து; அங்கு இங்கு எனாதபடி எங்கும் வியாபித்து இருப்பவன்; எல்லாவற்றையும் ஒருங்கே அறியும் இயல்பு உடையவன்; உயிர் ஏகதேச அறிவு உடையது, இத்தகைய சிவாகமச் செய்திகளை ஆசாரியர் கூறுவதைக் கேட்கும் மாணாக்கருக்கு, கேட்டல் அறிவு உண்டாகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்தக் கேட்டல் அறிவு பெற்ற ஆன்மாக்களுக்கு அனுபவ ஞானம் ஏற்படும். ''அனுபவ ஞானம்' என்பது, உயிர்க்கு உயிராய் இருக்கும் இறைவன் எங்கும் வியாபித்திருக்கிருன் என்பதையும், அந்த வியாபகத்துள் ஆன்மா என்றும் அடங்கி வியாப்பியமாய் இருக்கும் என்பதையும், அந்நிலையில் இந்த பிரபஞ்சம் ஆன்மாவுக்கு வியாப்பியமாய்த் தோன்றும் என்பதையும் உள்ளூர உணர்வதைக் குறிக்கும்.

சிந்தித்தல்:

ஆசாரியரிடத்தில் அவ்வாறு கேட்டவற்றை பிரபஞ்ச விருப்பு வெறுப்பு இன்றிச் சிந்திக்கும் பொழுது, ஆன்மாவிற்குச் சிவபெருமானிடத்தில் மீதூர்ந்த அன்பு உண்டாகும். அந்நிலையில், சூரிய ஒளியோடு கலந்து இருக்கும் கண் ஒளி போல, பேரறிவுடைய சிவபெருமானிடத்துச் சிற்றறிவுடைய ஆன்மா அத்துவிதமாகக் கலந்து நிற்கும், இதுவே, கேட்டலைச் சதா சிந்தித்துக் கொண்டு இருப்பதால் ஏற்படும் பெரும் பயன் ஆகும்.

தெளிதல்:

சிந்திக்கும் பொழுது, இறைவனின் பேரறிவும், தனது சிற்றறிவும் ஆன்மாவுக்கு வேறு வேருகத் தோன்றும். அந்தச் சிந்தனை தெளிவுறும் நிலையில், அந்த வேறுபாடு ஒழிந்து, ஆன்மா சிவத்தோடு ஒற்றித்து நின்று, வேறென்றிலும் பற்றில்லாமல் இருக்கும். கேட்டலில் பொருளின் தன்மை பற்றி பேதமாய் நிற்கும் ஆன்மா, சிந்தித்தலில் கலப்பு பற்றி அபேதமாய் நின்று, தெளிதலில் அவ்விரண்டும் ஒழிந்து சிவ பெருமானேடு உடனுய் நிற்கும், இதுவே ''ஞான அனுபவம்'' ஆகும்.

பரமுத்தியும் அபர முத்தியும்:

கேட்டல் சிந்தித்தல் தெளிதல் ஆகியனவற்றில் நின்று, அந்த அளவில் உடலைப் பற்றிய நினைவு அறவே நீங்கப் பெற்றவர், ''அபர முத்தி'' யை அடைவர். அவற்ரேடு நிட்டையும் கைவரப் பெற்றவர், இந்தப் பிறவியிலேயே சீவன் முத்தராய் விளங்குவர்; விளங்கி, தேகம் விடும் பொழுது, ''பரமுத்தி''யை அடைவர்; ''நிட்டை கூடுதல்'' என்பது, கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து துணிந்த பிறகு, அந்தத் துணிந்த பொருள் ஆகிய சிவத்தோடு கூடிப் பிரிவின்றி உறைப்புடன் நிற்றலைக் குறிக்கும், (நி–நிச்சயம் ஸ்தா – நிற்றல்; நி + ஸ்தா = நிட்டை. நிச்சயமாக – உறுதியாக – உறைப்புடன், நிற்றல் – மாருது இருத்தல்)

ஞான நிட்டை செய்துகொண்டு, வாசனுமலம் காரணமாக ஏற்பட்ட தேகத்தோடு பயிலும் சிவஞானிகள், ''சீவன் முத்தர்'' எனப்படுவர்; தேகம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நீங்கும்போது இவர்கள் பர முத்தி அடைவர். ஆகவே, சீவன் முத்தர்கள் இருவகைப்படுவர் என்பது பெறப்படும். பயிற்சி வசத்தால் சகலராய் இருப்பவரும், சிவஞானிகளும் ஆக சீவன் முத்தர்கள் இரு திறப்படுவர்.

அபர முத்தி பெற்றவர்களுக்கு இடம் வருமாறு: சுத்த வித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்னும் தத்துவங்களாகும். கேட்டல் ஞானம் உடையவர், ஈசுவர தத்துவத்தை அடைவர்; தெளிதல் ஞானம் உடையவர், சாதாக்கிய தத்துவத்தை அடைவர். ஞானத்தில் ஞானம் ஆகிய நிட்டை முழுமை பெருமல், பிறவி முடிவதற்கு முன்பு இடையே தேகம் நீங்கப் பெற்றவர், சத்தி சிவ தத்துவங்களை அடைவர். நிட்டை முழுமையாகக் கூடப் பெற்று, ஞானத்தில் முடிந்த ஞானம் கை வரப் பெற்ற சிவானுபூதிச் செல்வர்கள், முப்பத்தாறு தத்துவங்களைக் கடந்து, ''பரமுத்தி''யைப் பெறுவர். இவர்கள் மீண்டும் பிறவிக்கு வரமாட்டார்கள்.

அபர முத்தி நிலையில் அங்குள்ள பெரும் போகத்தை விரும்பாமல், சிவபெருமான் திருவடியையே விரும்பி (பற்றி) நிற்பவர், அங்கு இருந்தவாறே ''பரமுத்தி''யை அடைவர். இவ் உண்மையை நமக்குத் தெருட்டும் பொருட்டே சுந்தரர் பெருமான்,

''மற்றுப் பற்று எனக்கின்றி நின் திருப்பாதமே
மனம் பாவித்தேன்''

என்றருளிச் செய்தார்.

ஞான நிட்டை

பாசம் ஆம் ஞானத் தாலும்,
படர் பசு ஞானத் தாலும்,
ஈசனை அறிய ஒண்ணுது;
இறையருள் ஞானம் நண்ணித்
தேசுறும் அதனுல் முன்னைச்
சிற்றறிவு ஒழிந்து, சேர்ந்து
நேசமோடு உயர் பரத்து
நிற்பது ஞான நிட்டை. 84

தெளிவுரை:

கருவிகளால் வரும் பாச ஞானத்தாலும், அந்தக் கருவிகள் நீங்கிய பொழுது, ''வியாபகம் அடைந்த நான் பிரமம்'' என்று கருதும் பா

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஞானத்தாலும், சிவபெருமானை அறிய முடியாது. எனவே, சிவபெருமானுடைய திருவருள் ஆகிய ஞானத்தைப் பொருந்தி, ஒளிமிகுந்த அந்தப் பதிஞானத்தினுலே பழைய ஆன்மபோதம் ஆகிய சிற்றறிவு அறவே நீங்கப் பெற்று, அந்த ஞானத்திற்கு மேலான சிவ பெருமானிடத்திலே அத்துவிதமாய்க் கலந்து, அன்பு மீதூர்ந்து சிவானந்தத்தை அனுபவித்து நிற்பதுவே, ஞான நிட்டை ஆகும். ''ஞான நிட்டை'' என்பது, திருவருளில் அடங்கி அழுந்தி உறுதியாகப் பற்றி நிற்பதாகும்.

''பாச ஞானம்'' என்பது, சொற் பிரபஞ்சம், பொருட் பிரபஞ்சம் ஆகிய இருவகைப் பிரபஞ்சங்களின் வாயிலாக, ஆன்மாவில் நிகழும் ஏகதேச ஞானம் ஆகும். ''ஏகதேச ஞானம்'' என்பது, ஒரு சிலவற்றை மட்டும் அறியும் சிற்றறிவைக் குறிக்கும்.

''பசு ஞானம்'' என்பது, பாசங்களின் இயல்பை உணர்ந்து, தன்னை அவற்றின் வேருகக் கண்டு, அவை எல்லாம் தனக்குக் கீழ் அடங்கும் வியாப்பியம் என்பதை அறிந்து அவற்றிலிருந்து நீங்கித் தான் மேற்படும் பொழுது, அவற்றிற்கு மேலலாகிய ''பிரமம் நானே'' என்று வரும் ஞானம் ஆகும். இந்த ஞானம் ஆன்ம போதத்தால் வருவது; இதுவே ''நானே கடவுள்'' என்னும் ஞானம் ஆகும்.

''பதி ஞானம்'' என்பது, திருவருளையே பற்றி நின்று, வேறு பற்று இன்றி, திருவருளின் பேருதவியால், சிவபெருமானை அறியும் ஞானத்தைக் குறிக்கும். ஞானம் – அருள், பதிஞானம் – திருவருள். திருவருளின் உதவியாலேயே சிவபெருமானின் திருவடியைப் பெற்று, அதனுள் அடங்கி நிற்க முடியும் என்பதை அறிவதே ''பதிஞானம்'' எனப்படும். இதனையே மணிவாசகப் பெருந்தகை,

''அவன் அருளாலே அவன் தாள் வணங்கி''

என்று அருளிச் செய்தார். இந்தத் தொடரில் வரும் ''வணங்கி'' என்ற சொற்குப் பொருள், ''அடங்கி'' என்பதாகும். '' அவன்தாள் வணங்கி'' என்ருல், சிவபெருமானின் திருவடி வியாபகத்துள் வியாப்பியமாக அடங்கி நிற்றல் என்று பொருள்.

''ஞான நிட்டை'' என்பதன் பொருள் வருமாறு:

பெத்த நிலையில் ஆன்மாவின் அறிவிச்சை செயல்கள், பொறி புலன்களில் அழுந்தி நின்றன; அதுபோல முத்தி நிலையிலும் அவை தொழிற்பட்டு நிற்கும். அஃது எப்படியென்ருல், சிவபெருமான் ஆன்மாக்களோடு அத்துவிதமாய்க் கலந்து நின்று, அறிவித்தும் அறிந்தும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நின்று உதவிவரும் பெருங்கருணைத் திறத்தை நோக்குவது, முத்தியில் ஆன்ம அறிவின் தொழில் ஆகும்; அவ்வாறு அறிந்து சிவபெருமானிடத்தில் பற்றுமிகுந்து அன்பு மீதூர்ந்து நிற்றல், ஆன்ம இச்சையின் தொழில் ஆகும்; அந்த அன்பு மிகுதி காரணமாக சிவபெருமானின் திருவடி ஆகிய சிவானந்தத்தை அனுபவித்தல், ஆன்ம செயலின் (கிரியையின்) தொழில் ஆகும். இதுவே ஞான நிட்டை எனப்படும்.

உபாய நிட்டை

விளம்பிய வகையில் நிட்டை
மேவிடல் அரிதேல், முன்னம்
அளந்து அறிவு அளித்த வற்றின்
அளவும், மற்று அவற்றினாலே
உளம் கொளும் தனையும், உள்ள
படியும், உற்று உணர்ந்து, செவ்வே
தளந்திடாது உவப்ப, மற்று அத்
தன்மையது ஆகும் தானே. 85

தெளிவுரை:

முந்திய செய்யுளில் கூறப்பட்ட முறையில் நிட்டை கூடுவது இயலாது போனால், பிறப்பு நிலையிலே விடயங்களை அறிந்து, ஆன்மாவுக்கு அறிவித்து நின்ற கருவிகளின் இயல்பையும் அந்தக் கருவிகளின் வாயிலாக அறியும் ஆன்மா ஆகிய தனது இயல்பையும், ஆன்மாவோடு கலந்து நின்று, அறிவித்தும் அறிந்தும் பேருதவி செய்து வரும் சிவபெருமானின் அத்துவித நிலையையும் திருவருளோடு கூடி நின்று அறிந்து, ஆன்மா அந்த அத்துவித நிலையை மறவாமல், கடைப்பிடித்துத் திருவடியையே விரும்பி நிற்குமாயின், முன் செய்யுளில் சொன்ன நிட்டை முறை வந்து கைகூடும் உபாயம் – சித்தி அடையும் வழி; உபாய நிட்டை – எளிதில் சித்தி அடையும் வழியைக் காட்டும் முறை.

காணும் இயல்பினை உடைய கண்ணுக்கு, உருவத்தைக் கண் காணும்படி காட்டுவதோடு மட்டுமன்றி, ஆன்மா அக் கண்ணோடு கலந்து நின்று அவ்வுருவத்தைக் காணவும் செய்கிறது. அதுபோல, அறிவிக்க அறியும் இயல்பினை உடைய ஆன்மாவுக்கு, விடயங்களை ஆன்மா அறியும்படி அறிவிப்பதோடு மட்டுமன்றி, இறைவன் அந்த ஆன்மாவோடு கலந்து நின்று விடயங்களைத் தானும் அறிந்து நிற்கிறான். இவ்வாறு ஆன்மாவுக்குக் காட்டும் உபகாரமும், ஆன்மாவோடு தானும் நின்று காணும் உபகாரமும், ஆகிய இரு பேருபகாரங்களை இறைவன், பெத்தம் முத்தி என்னும் இரு நிலைகளிலும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

செய்துவருகிருன். இறைவன் பெருங்கருணை கூர்ந்து இவ்வாறு அத்துவிதமாய் நின்று ஆன்மாவுக்கு உதவி வருவதை, ஆன்மா ஒருபோதும் மறவாது நின்று, நன்றி உணர்வோடு இறைவன் மீது அன்பு மீதூர்ந்து அவனையே நினைந்து இருக்குமாயின், சிவானந்த அனுபூதி ஆகிய நிட்டை நிச்சயம் கைகூடும் என்பதை இச்செய்யுள் வலியுறுத்துகின்றது.

உற்றுணர்தல்	–	கலந்து நின்று அறிதல் – சேர்ந்தறிதல் – பொருந்தியறிதல். அழுந்தி அறிதல் – அனுபவித்தல்.
செவ்வே	–	நேரே – உறுதியாய்ப் பற்றி – உறைப்புடன் –கடைப்பிடித்து – செம்மையாக.
தளர்ந்திடாது	–	சோர்வு இன்றி – மறவாமல் – இடை விடாமல் – எந்நேரமும் – சஞ்சலமின்றி.

இந்த இடத்தில்,

"அயரா அன்பின் அரன் கழல் செலுமே"

என்னும் சிவஞான போதக் கருத்து, ஆழ்ந்து சிந்திப்பதற்குரியது.

பாவனையால் சிவத்தைப் பெற இயலாது

பாவிக்கின் மனுதி வேண்டும்;
பயன் இலை; கரணம் நீத்துப்
பாவிப்பன் என்னில், என்ன?
பழுது உள; பாவகத்தால்
பாவிக்க ஒண்ணுது என்று
பாவிப்பன் என்னின், நீ என்?
பாவிக்க வேண்டா, ஆண்ட
பரன் அருள் பற்றி னேர்க்கே. 86

தெளிவுரை:

சிவபெருமானைக் கருவி கரணங்களின் பயிற்சியினுல் பெறலாம் என்று கூறினுல், அந்தப் பயிற்சிக்கு (அப்பியாசம்) மனம் முதலிய கருவிகள் தேவைப்படும். சிவபெருமான் கருவி கரணங்களுக்கு எட்டாதவர்; ஆதலால் பாவனை எனப்படும் பயிற்சியால் பயன் இல்லை. கருவி கரணங்களின் நின்றும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நீங்கி நின்று பாவிப்பேன் என்று கூறுவாய் ஆயின், கருவி கரணங்கள் நீங்கிய நிலையில் ஆன்மா ஒன்றையும் அறிவது இல்லை; எனவே அந்நிலையில் எப்படி பாவனை நிகழும்? அது மட்டுமன்று; அப்போது ஆன்மா ஆணவமல மறைப்புக்கு உட்பட்டு கேவல நிலை வந்துவிடும்.

பாவனையால் பாவிக்க எய்தாதவன் சிவபெருமான் என்று எண்ணி பாவனை செய்வேன் என்று நீ சொல்வாயானால், நீ செய்யும் பாவனைதான் யாதோ? எனவே, கருவி கரணங்களோடு கூடிய எந்தவிதப் பயிற்சியாலும் (பாவனையாலும்) சிவபெருமானைப் பெறமுடியாது, அவ்வாறாயின், சிவபெருமானை எப்படித்தான் பெறுவது என்று கேட்டால், சிவபெருமான் ஒருவனே தனக்கு ஆண்டவன் என்றும், தான் என்றும் அவனுக்கு அடிமை என்றும் நினைந்த அவனருளைப் பெற்றவர்களுக்கு பாவனை வேண்டியதில்லை. அவனருளே அவர்களுக்குச் சிவபெருமானைப் பெறும்படி செய்யும்.

''பாவனை'' என்பது தன் முனைப்புக் கொண்டு, பயிற்சிகள் வாயிலாகப் பரம்பொருளைப் பெறுவேன் என்னும் ''தியான பாவனை''யைக் குறிக்கும். அஃதாவது யோக நூலில் கூறிய பாவனைகள் பயன்தரா என்பதாகும்.

அத்துவித நிலை

ஒன்று இரண்டு ஆகி ஒன்றின்
ஒருமையாம்; இருமை ஆகி
ஒன்றின் ஒன்று அழியும்; ஒன்றாது
என்னின், ஒன்று ஆகா; தீயின்
ஒன்று இரும்பு உறழின் அன்றாம்;
உயிரின் ஐந்தொழிலும் வேண்டும்;
ஒன்றி நின்று உணரும் உண்மைக்கு
உவமை, ஆணவத்தொடு ஒன்றே. 87

தெளிவுரை:

பிரமம் ஆகிய ஒரு பொருளே, கடவுளும் உயிர்களும் என்று இரண்டாக எண்ணப்பட்டு இருந்து, முத்தி நிலையில் அந்த இரண்டும் ஒன்றாகி விடும் என்று கூறினால், அது பொருந்தாது. அப்படியானால் இறைவனும் உயிர்களும் ஒரே தன்மை உடையவர் ஆதல் வேண்டும். இறைத்தன்மை வேறு; உயிர்த்தன்மை வேறாக இருப்பதால், இரண்டும் முத்தி நிலையில் ஒன்றாகி விடும் என்னும் வாதம் செல்லாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அநாதியிலே ஆன்மாவும் சிவமும் வேறு வேருய் இருந்து, முத்தியில் ஆன்மா சிவத்தோடு ஒன்ருகிவிடும் என்று கூறினுல் அதுவும் பொருந்தாது. அப்படியானுல், அநாதியில் வேறு வேருய் இருந்த இரண்டு தனிப் பொருள்களில் ஒன்று, முத்தியில் அழிந்து விடும்படி நேரும். ஆகவே, அவ்வாறு இறைவனேடு உயிர் முத்தியில் சங்கமமாகிவிடும் என்று கூறும் வாதமும் செல்லாது.

முத்தி நிலையில் சிவமும் ஆன்மாவும் ஒன்ருகாமல் வேறு வேருயிருக்கும் என்று கூறுவது, அத்துவித நிலை ஆகாது; ஆகவே அதுவும் பொருந்தாது. நெருப்போடு சேர்ந்த இரும்பு, நெருப்பு ஆவது போல், சிவத்தோடு பொருந்திய ஆன்மாவும் சிவத்தின் குணங்கள் அனைத்தையும் பெறும் என்று கூறினுல் அதுவும் பொருந்தாது. ஏனென்ருல், அப்படியானுல் சிவபெருமானுக்கு உரிய ஐந்தொழில்களையும் ஆன்மாவும் செய்யும் என்று கொள்ள வேண்டிவரும். வரவே, அதுவும் பொருந்தாது. அவ்வாருயின், முத்தி நிலையில் சிவமும் ஆன்மாவும் எப்படி இருக்கும்? அதற்கு விளக்கம் வருமாறு:

சிவத்தோடு கூடி நின்று, ஆன்மா பேரானந்தத்தை அனுபவிக்கின்ற முத்தி நிலைக்கு உவமை கூறுவது என்ருல், பிறவிக்கு வருவதற்கு முன்பு உயிர் ஆணவ மலத்தோடு கூடி நின்று, அந்த ஆணவமலமாகவே இருந்த நிலையையே கூற வேண்டும். அவ்வாறே முத்தி நிலையில் ஆன்மா சிவத்தோடு கூடி நின்று சிவமாகவே நிற்கும். இதுவே சைவ சித்தாந்தம் கூறும் அத்துவித நிலை ஆகும்.

இந்த முத்தி நிலையில் ஆன்மா சிவத்தோடு கூடி, அந்தச் சிவத்தில் வேறு அற நின்று, சிவமே ஆகிச் சிவானந்தத்தை நுகர்ந்து நிற்கும். அநாதி கேவல நிலையில், மலமும் உயிரும் ஒன்று ஆகாமல், இரண்டு ஆகாமல் ஒன்றும் இரண்டும் அன்று ஆகாமல் இருக்கும் தன்மை போலவே, பரமுத்தி நிலையிலும் ஆன்மா சிவத்தோடு கூடி நிற்கும். இவ்வுண்மையையே தாயுமான அடிகள்,

> "ஆணவத்தோடு அத்துவிதம் ஆனபடி மெய்ஞ்ஞானத்
> தாணுவினேடு அத்துவிதம் சாரும் நாள் எந்நாளோ?"

என்று "எந்நாட்கண்ணி – 45 – 14 – 28" ல் அருளிச் செய்தார்கள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆணவமல நீக்கம் பற்றிய தெளிவு

அழிந்திடும் பாசம் என்னின்,
நித்தம் என்று உரைத்தல் வேண்டா;
அழிந்திடாது என்னின், ஞானம்
அடைவது கருத வேண்டா;
அழிந்திடும் சத்தி; நித்தம்
அழிந்திடாது; ஒளியின் முன்னர்
அழிந்திடும் இருளும், நாசம்
அடைந்திடா, மிடைந்தி டாவே. 88

தெளிவுரை:

முத்தி நிலையில் ஆணவமலம் அழிந்து விடும் என்று சொன்னால், பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களும் என்றும் உள்ளவை என்று ஆகமங்கள் சொல்ல வேண்டுவதில்லை. முத்தியில் ஆணவமலம் அழியாமல், முன்போலவே ஆன்மாவை மறைத்துக் கொண்டு இருக்கும் என்று சொன்னால், ஆன்மா ஞானத்தைப் பெறும் என்பதைப் பற்றி நினைக்க வேண்டுவதில்லை. அப்படியானால் முத்தியில் ஆணவமலம் அழியும் என்று சொல்வதற்கு என்ன பொருள்? அதன் விளக்கம் வருமாறு:

சூரியனது ஒளியின் முன்னர், இருள் நில்லாது; ஆனால் இருள் இல்லாமற்போய்விடவில்லை. சூரிய ஒளி தோன்றாத பொழுது இருள் இருப்பது தெரியவரும். அஃதாவது சூரிய ஒளியின் முன்னர், இருள் முனைத்து நில்லாதே அன்றி இல்லாமற் போய்விடுவது இல்லை. அதுபோலவே முத்தி நிலையில் ஆணவமலத்தின் காரியம் ஆகிய மறைப்பாற்றல், முத்தி பெற்ற ஆன்மாவினிடத்து முனைத்துத் தோன்றாது; இவ்வாறு ஆணவமலத்தின் ஆற்றல் முனைப்புறாமல் இருப்பதையே, முத்தியில் ஆணவமலம் அழிகிறது, அதன் ஆற்றல் ஒடுங்குகிறது என்றெல்லாம் கூறப்படுகிறது. எனவே, ஆணவமலத்தில் நித்தியத் தன்மை என்றும் அழிவது இல்லை.

இவ்வுண்மையைத் தெருட்டும் பொருட்டுச் சிவஞான சுவாமிகள்,

''வியாபகப் பொருளுக்கு ஒருவுதல் ஆவது
உணர்ச்சி விசேடமே''

என்று சிவஞான போதச் சிற்றுரை, ஒன்பதாம் சூத்திரம், இரண்டாம் அதிகரணத்தில் விளக்கியருளியுள்ளார்கள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

"வியாபகப் பொருள்" என்பது, இந்த இடத்தில் ஆன்மாவைக் குறிக்கும். ஒருவுதல் – நீங்குதல், "உணர்ச்சி விசேடம்" என்பது, ஆன்மா திருவருளில் அழுந்தி அறிதலைக் குறிக்கும். அஃதாவது, முத்தி நிலையில் ஆன்மா, ஆணவ மலத்தை விட்டு நீங்கி நிற்கிறது என்பதற்குப் பொருள், அஃது திருவருளைப் பற்றித் திருவருளை அனுபவிக்கிறது என்பதாகும். திருவருள் ஒளி மிகுந்தது. ஒளியின் முன், இருள் முனைத்துத் தோன்றாது, திருவருளைப் பற்றி நிற்கும் ஆன்மாவினிடத்து, சார்ச்சிச் சிறப்பு பற்றி ஆணவ மலத்தின் மறைப்பாற்றல் செல்லுபடி ஆவது இல்லை. இவ்வுண்மையை இன்னும் தெளிவுறுத்தும் பொருட்டுச், சிவஞான போதம் பதினொராம் சூத்திரம், இரண்டாம் அதிகரணத்தில்,

"மலம் நசித்தல் ஆவது, தனது மறைத்தல் சத்தி, மடங்கிக் கீழ்ப்படுதல் மாத்திரையே; பிறிது அன்று என்பதூஉம் உவமையால் பெறுதும்"

என்று சிவஞான சுவாமிகள் அருளிச் செய்துள்ளார்கள், சைவ சித்தாந்தத்தின் மூலக் கொள்கை ஆகிய சற்காரியவாத அடிப்படையில் இவ்வுண்மை நிலை நாட்டப்படுவதால் இக்கருத்து நினைவிற் கொள்ளத் தக்கது.

கன்ம மல நீக்கம்

எல்லையில் பிறவி நல்கும்
இருவினை எரிசேர் வித்தின்
ஒல்லையின் அகலும்; ஏன்ற
உடல் பழவினைகள் ஊட்டும்
தொல்லையில் வருதல் போலத்
தோன்று இருவினைகள் உண்டேல்,
அல் ஒளி புரையும் ஞானத்
தழல் உற, அழிந்து போமே. 89

தெளிவுரை:

எண்ணற்ற பிறவிகளைத் தருகின்ற நல்வினை தீவினைகள் ஆகிய சஞ்சித வினை, அக்கினியில் சேர்ந்த வித்துப் போல, தீக்கை செய்து வைக்கும் ஆசாரியரது திருநோக்கினால் விரைவில் நீங்கிவிடும். ஞான தீக்கையில், உடல் பொருள் ஆவி மூன்றும் ஞானாசிரியருக்குத் தானம் செய்யப்பட்டமையால், இந்த உடம்பு இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட உடம்பினை இடமாகக் கொண்டு நிகழும் பிராரத்த வினை எனப்படும் ஊழ் வினையை, உடம்பு உள்ள வரை ஆன்மா அவ்வுடலில் நின்று அனுபவிக்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முன் பிறவிகளில் ஏற்பட்ட ஊழ் வினையைப் புசிக்கையில், ஆகாமிய கன்மம் ஏறும், அதுபோலவே, இந்தப் பிறவியிலும் ஆகாமியம் தோன்றும்; அவ்வாறு இப்பிறவியில் ஆகாமியம் உண்டாகுமாயின், ஞானுக்கினி அதனை அழித்துவிடும். இஃது எதுபோல எனின், இருளைப் போக்கும் சூரியனைப் போன்றது ஆகும். (புரையும் – புரைத்தல் –ஒத்தல்) சஞ்சிதம் ஞான ஆசிரியரின் திருநோக்கால் விரைவில் அழியும்; பிராரத்தம் உடம்பு உள்ளவரை அனுபவிக்கப்பட்டு நீங்கும்; ஆகாமியம் ஞானுக்கினியால்(திருவருளால்) ஒழியும்.

புனிதன் நாமம் (ஸ்ரீ பஞ்சாக்கரம்)

மல வாசனை தாக்காமல் இருப்பதற்கு வழி

பந்தம் ஆனவை அறுத்துப்
பவுதிகம் உழலும் எல்லை,
சந்தியாது ஒழியாது; இங்குத்
தன்மை போல் வினையும் சாரும்;
அந்தம் ஆதிகள் இலாத
அஞ்செழுத்து அருளினுலே
வந்தவாறு உரை செய் வாரை
வாதியா பேதி யாவே. 90

தெளிவுரை:

ஞானுசாரியரது தீக்கையாலே மும்மல பந்தங்களும் நீங்கப் பெற்று, பூத சம்பந்தமான இந்த உடலில் சஞ்சரிக்கும் பொழுது, மல வாசனை தாக்காமல் போகாது.

ஆதலால், பெருங்காயம் வைத்து எடுக்கப்பட்ட பாத்திரத்தில், அதன் மணம் மங்கலாக, மெலிதாக வீசுவதுபோல, ஊழ்வினையும் மிகவும் மெலிதாக வந்து தாக்கும். அந்நிலையில், தோற்றமும் ஒடுக்கமும் இல்லாத என்றும் உள்ள திருவைந்தெழுத்தை, அருளே திருமேனியாகக் கொண்டு எழுந்தருளி வந்த ஞானுசிரியராலே உபதேசிக்கப் பட்டவாறு உச்சரிப்பவரை, அந்த மலவாசனை தாக்க மாட்டாது; அதுமட்டுமன்று, அவரது நிலையின் நின்றும் அவரை மாறுபடவும் செய்யாது.

சிவபெருமான் திருவைந்தெழுத்து வடிவமாகவே இருக்கிறுன்; எனவே சிவபெருமானின் திருநாமமும் ஐந்தெழுத்து; அவனது வடிவமும் ஐந்தெழுத்து மந்திரம் ஆகும். நாமமாக வரும் பொழுது ''நமச்சிவாய''

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்றும், மந்திரமாக வரும்பொழுது, ''நமசிவாய'' என்றும் அமையும். தீக்கை செய்து வைக்கும் ஞானாசிரியர் எந்த முறையில் மந்திரத்தை ஓதும்படி அருளிச் செய்தாரோ, அந்த முறையிலேயே அதனை ஓதி வரவேண்டும். இறைவன் உள்ள அன்றே ஐந்தெழுத்தும் உள்ளது. எனவே ஐந்தெழுத்து அநாதியே இருக்கிறது.

திருவைந்தெழுத்தை ஓதிவரும் ஆன்மா, சார்ந்ததன் வண்ணமாம் தன்மை ஆதல் பற்றி, ஐந்தெழுத்து வடிவைப் பெறும்; அந்நிலையில் அந்த ஆன்மா திருவருளில் ஆழுந்தி நிற்கும்; எனவே, ஆணவ மலப்பற்று படிப்படியாக அந்த ஆன்மாவை விட்டு நீங்கும்; நீங்கவே, பிராரத்த வாசனை ஒழியும்; ஒழியவே, மேல் பிறவிக்கு வித்தாக வினை இல்லாமையால், எடுத்த இந்தப் பிறப்பிலேயே முத்தி கிட்டும் வாய்ப்பு ஏற்படும். எனவே திருவைந்தெழுத்தை எந்நேரமும் மறவாது ஓத வேண்டுவது இன்றியமையாததாகும்.

சூக்கும பஞ்சாக்கரத்தின் பொருள்

திரு எழுத்து ஐந்தில் ஆன்மாத்
திரோதம், ஆசு, அருள், சிவம் சூழ்
தர, நடு நின்றது ஒன்றும்
தன்மையின், தொன்மை ஆகி,
வரும் மனம் மிருதியாலே
வாசியில் ஆசை இன்றிக்
கருவழிச் சுழலும்; மாறும்
காதலர்க்கு ஓத லாமே. 91

தெளிவுரை:

சூக்கும பஞ்சாக்கரம் ஆகிய ''சிவாயநம'' என்னும் எழுத்துக்கள் ஐந்தனுள், மறைப்பாற்றலும் ஆணவமலமும், பின்னும், திருவருளும் சிவமும் முன்னும் ஆகச் சூழ்ந்து நிற்க, நடுவே நின்றது ஆன்மா ஆகும். இவ்வாறு இருவகைக்கும் நடுவாகி ஒன்றாய் இருக்கும் தன்மையோடு, அநாதியாய் வரும் ஆணவமலத் தொடர்பாலும் மறைப்பாற்றலினாலும் ஆன்மா விடய போகங்களில் அழுந்தி நிற்கும். அந்நிலையில் அருளிலும் சிவத்திலும் விருப்பம் இன்றி, கருவழிப் பட்டுப் பிறந்து இறந்து உழலும். விடய போகங்களில் அழுந்தாமல் முத்தி இன்பத்தில் விருப்பம் உடையவருககு இந்தத் திருவைந்தெழுத்து உபதேசிக்கப்படுகிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

"சிவாயநம" என்னும் சூக்கும பஞ்சாக்கரத்தில் நடுவில் நிற்கும் "ய" காரம், ஆன்மாவைக் குறிக்கும். சார்ந்ததன் வண்ணமாம் தன்மை பற்றி, ஆன்மா உலகப் பொருள்களில் பற்று வைத்தால், உலக விடயங்களில் அனுபவம் கிட்டும்; ஆன்மா முத்தி இன்பத்தில் பற்று வைத்தால் உலகில் வாழும் காலத்தில் துன்பம் இன்றி வாழவதோடு, இந்தப் பிறப்பிலேயே முத்தி இன்பம் கிட்டும். இதுவே சூக்கம பஞ்சாக்கரத்தின் பொருள் ஆகும்.

பஞ்சாக்கரத்தின் மகிமை

ஆசு உறு திரோதம் மேவாது
அகலுமா, "சிவ" முன் ஆக,
ஓசை கொள் அதனின் நம்மேல்
ஒழித்து அருள் ஓங்கும்; மீள
வாசியை அருளும்; மாய
மற்றது பற்று; உற்று அங்கு
ஈசனில் ஏகம் ஆகும்;
இது திரு எழுத்தின் ஈடே. 92

தெளிவுரை:

ஆணவமலமும், அதனோடு கூடி நின்று பரிபாகம் வரச் செய்யும் திரோதாயியும், உன்னைப் பொருந்தாமல் நீங்கும்படி, 'சி' கார 'வ' காரங்களை முதலாக வைத்து ஓதப்படும் சூக்கும பஞ்சாக்கரத்தை ஓதுவாயாக. அவ்வாறு ஓதுவாய் ஆயின் 'ந' காரமாகிய திரோதான சத்தி, 'ம' காரமாகிய ஆணவமலத்தை ஒழித்து, அதுவே 'வ' காரமாகிய அருட்சத்தியாக மாறச் 'சி' காரமாகிய சிவத்தை ஆன்மா அடையுமாறு செய்யும். இஃது எப்படி என்றால், மகத்தான தன்மையை உடைய ஆன்மா, அருளையே பற்றுக் கோடாக நின்று, அந்த அருளிலே அடங்கி, அருளே ஆகி, சிவத்தில் ஒன்றுபடும். இதுவே ஐந்தெழுத்தின் மகிமை ஆகும்.

"நம் மேல்" என்பது, "ந" காரத்திற்குப் பின்வரும் "ம" காரத்தைக் குறிக்கும்.

"மாய" என்பது, மா + ய, மா – மகத்தான ய–ஆன்மா; மகத்தான ஆன்மா எனப்பட்டது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பதினொராம் சூத்திரம்
அணைந்தோர் தன்மை

சீவன் முத்தர் நிட்டைகூடி ஞேயத்து அழுந்துதல்

தீங்குறு மாயை சேராவகை
வினை திரி விதத் தால்
நீங்கிட, நீங்கா மூல
நிறை இருள் இரிய நேயத்து
ஓங்கு உணர்வு அகத்து அடக்கி
உளத்துள் இன்பு ஒடுங்க, நேரே
தூங்குவர், தாங்கி ஏகத்
தொன்மையில் துகள் இலோரே. 93

தெளிவுரை:

சஞ்சிதம் தீக்கையாலும், பிராரத்தம் அனுபவத்தாலும், ஆகாமியம் ஞானத்தாலும் நீங்கும். சஞ்சிதமும் ஆகாமியமும் நீங்கியதால், மறுபிறப்பு இல்லை. அடுத்த பிறவிக்கு வேண்டப்படும் மாயாகாரியங்கள் ஆகிய தனு கரண புவன போகங்களும் அத்தகு ஆன்மாக்களுக்குத் தேவைப்படா. பிராரத்தம் காரணமாக வரும் இன்பத் துன்பங்களை அனுபவிக்கும்பொழுது மாயை ஆன்மாவை அவற்றில் மயங்கச் செய்யும், இந்த மாயா காரியம் ஆகிய மயக்க வாசனையும், தன் பணி நீத்து அருள் வழி நிற்பவரை மயக்காது.

அந்நிலையில், சிவத்தின் ஒளி ஆகிய அருளில் ஆன்மா அடங்கி நிற்குமாயின், எளிதில் உயிரை விட்டு நீங்கா மூலமலம் ஆகிய ஆணவமலம் அந்த ஆன்மாவை விட்டு நீங்கிவிடும். அப்போது அந்த ஆன்மா சிவபெருமானால் தாங்கப்பட்டு, தன் அறிவின் உள்ளே பேரின்பம் தோன்ற, மலவாசனை சிறிதும் தாக்காமல் இறைவனோடு ஏகமாகி, பாசத்தின் நீங்கியமையால், ஆனந்தம் அடையும்.

''ஏகன் ஆகி இறைபணி நிற்க மும்மலங்களும் நீங்கும்'' என்று சிவஞானபோதம் பத்தாம் சூத்திரம் கூறும் கருத்து இங்குச் சிந்திப்பதற்கு உரியது. சீவன் முத்தர், நிட்டை கூடி சிவத்தில் அழுந்துவதை இந்தச் செய்யுள் இவ்வாறு கூறுகிறது.

ஞேயம் – சிவம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சீவன் முத்தர் சிவமே கண்டிருப்பர்

குறிப்பிடம், காலம், திக்கு, ஆசனம்,
கொள்கை, குலம், குணம், சீர்
சிறப்புறு விரதம், சீலம்,
தவம், செபம், தியானம் எல்லாம்
மறுத்து அற ஒழிதல் செய்தல்
மருவிடா; மன்னு செய்தி
உறக்கு உறுபவர் போல், வாய்மை
ஒழிந்தவை ஒழிந்து போமே. 94

தெளிவுரை:

சிவபெருமானோடு கூடி உறைப்புடன் நிற்பதற்கு உரியனவாகக் குறிக்கப்படும் புண்ணிய சிவத்தலங்கள், இன்ன காலம் இது செய்ய வேண்டும் என்னும் காலத்தைப் பற்றிய எண்ணம், இன்ன திக்கு நல்லது, இன்ன திக்கு உதவாது என்னும் திசை பற்றிய கருத்து, இன்ன ஆசனத்தில் இருந்து நிட்டை கூடவேண்டும் என்னும் இருக்கை பற்றி நியமம், இதுவே சைவ சமயக் கொள்கை என்னும் பிடிப்பு, இனப் பற்றுக் காரணமாகக் காட்டும் அபிமானம், சமய ஆசாரம், குல ஆசாரம் பற்றிய விருப்பு வெறுப்புகள், சிவ வேடம், வடிவம் முதலிய சிறப்புகளில் வைக்கும் பற்று, இவையெல்லாம் கடைப்பிடிக்கப்பட வேண்டிய விரதங்கள் என்னும் நம்பிக்கை, பஞ்சாக்கினி வித்தை முதலிய தவங்களில் நிற்றல் இத்தனை எண்ணிக்கை உடைய உருத்திராக்கத்தினைக் கொண்டுதான் செபம் செய்யவேண்டும் என்பது பற்றிய கண்டிப்பு, ஆறு ஆதாரங்களில் நின்றே தியானம் செய்ய வேண்டும் என்னும் கட்டுப்பாடு ஆகிய இவற்றை எல்லாம், சீவன் முத்தர்கள் மறுப்பதும் இல்லை; செய்யாமல் அறவே விட்டு விடுவதும் இல்லை.

சீவன் முத்தர்கள், எந்நேரமும் உண்மைப் பொருளாகிய சிவத்தையே சிந்தையில் கொண்டு இருப்பதை அன்றி, வேறு நியமங்களை எல்லாம் கடைப்பிடிப்பதில் அக்கறை காட்டுவது இல்லை. உறங்குபவர் கையில், இருந்த பொருள் அவர்கள் அறியாமல் தானாகவே நழுவி விழுவது போல இந்த நியமங்கள் எல்லாம் அவர்கள் அறியாமலே அவர்களிடமிருந்து ஒழிந்து போகின்றன. இவ்வுண்மையை நமக்கு அறிவுறுத்தும் பொருட்டே மணிவாசகப் பெருந்தகை,

"பற்று நான் மற்று இலேன் கண்டாய்" (8–28–1)

என்றும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''மற்று நான் பற்று இலேன் கண்டாய்'' (8–28–4)

என்றும் அருளிச் செய்திருக்கிறுர்கள். சிவத்தை மட்டும் பற்றி நின்று வாழ்வதே, சைவ வாழ்வாகும்.

சீவன் முத்தரின் பேரானந்தம்

அகம் புறம் என்றும் இரண்டால்
அருச்சனை புரியும் இந்தச்
சகம் தனில், இரண்டும் இன்றித்
தமோ மயம் ஆகி எல்லாம்
நிகழ்ந்திட, மகிழ்ந்து வாழும்
நீர்மையார் போல ஞானம்
திகழ்ந்து அகம் புறம் எனுத
செம்மையார் நன்மை யாரே. 95

தெளிவுரை:

அகப்பூசை, புறப்பூசை என்று இரண்டு வகையான பூசைகளால் அருச்சனை செய்து உலக போகத்திலும் வீடு பேற்றிலும் பற்றுக் கொண்டு, தாம் விரும்பியதை இறைவனிடம் கேட்டுப் பெற்றுக் கொள்பவர் வாழ்கின்ற இந்த உலகத்தில், அந்த இருவகை பூசைகளும் இன்றி, அஞ்ஞானமே தமக்கு வடிவமாகி, தம் வினைக்கு ஈடாக நிகழ்வன எல்லாம் நிகழும்போதும், தாம் அவற்றைக் கண்டு கொள்ளாமல், தாம் இச்சித்த பொருளிலேயே உலகத்தவர்கள் மகிழ்ச்சியுற்று வாழ்கிறுர்கள். இவர்களைப் போலவே, சீவன் முத்தரிடத்திலே அருள் விளங்கும் பொழுது அதனை அகம், புறம் என்று பிரித்து அறியாமல், அந்த அருளை எங்கும் ஒரு தன்மையதாகக் கண்டு, அந்த அருளையே தமக்கு வடிவமாய்க் கொண்டு, பிராரத்த வாசனைக்கு ஈடாக நிகழ்வன எல்லாம் நிகழ்ந்தாலும், தாம் அவற்றைக் குறித்துச் சிறிதும் எண்ணுமல், தாம் இச்சித்த சிவம் ஒன்றிலேயே ஏகமாகி நின்று சிவானந்தத்தைச் சிறப்பாக அனுபவிப்பர், அருளைப் பெற்ற சீவன் முத்தர்.

தமோ மயம் – அஞ்ஞான வடிவு. தமம் – ஆணவமலம். மயம் – வடிவம்.

உலகத்தவர் தாம் இச்சித்த உலகப் பொருளைப் பெற்று அதனை அனுபவித்து மகிழ்வர்; சீவன் முத்தர் தாம் இச்சித்த சிவபரம் பொருளைப் பெற்று அதனை அனுபவித்து மகிழ்வர். இச்சிக்கும் பொருள் வேறுபாடு அன்றிச் செயல் வேறுபாடு இருவருக்கும் இல்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சீவன் முத்தர் செய்யும் ஞானயோகம்

அண்டம் மேவிட அனைத்தும்,
அனைத்தையும் அண்டம் மேவிக்
கொண்டல் போல் எவையும் ஞானக்
குறைவிலா நிறைத லாலே
கண்டதோர் பொருளை அந்தக்
கருத்தினால் காணில், தானே
அண்ட நாயகனார் மேனி
ஆனதேல் ஐயம் இன்றே. 96

தெளிவுரை:

மண் முதலாக உள்ள நான்கு பூதங்களும் ஆகாயத்தைப் பொருந்தி நிற்க, அந்த ஆகாயம் அவை எல்லாவற்றையும் கவளீகரித்துக் கொண்டு நிற்கும். அதுபோல, சராசரங்கள் அனைத்திலும் திருவருள் முழுமையாக நிறைந்து இருக்கிறது. எனவே, தோன்றிய ஒரு விடயத்தை அந்தத் திருவருள் வடிவாகக் கண்டால், தானும் உலக நாயகன் ஆகிய சிவ பெருமானின் திருமேனியாய் நிற்பன். அவ்வாறு நின்றால், ஞான நிலையை அடைவதற்கு ஐயம் இல்லை. அஃதாவது உலகம் முழுவதும் இறைவனின் திருமேனியாகும். ஆகவே, உலகில் உள்ள எந்த ஒரு பொருளையும் அவன் அருளாகவே காணவேண்டும் என்பது கருத்து. அப்படிக் காணும்போது, உலகப் பொருளில் வைக்கும் பற்றும் அருள் பற்றாகவே கருதப்படுகிறது, உலகின் ஒரு பகுதி ஆகிய இந்த உடலும் அருள் வடிவாகிறது. ஆகவே, அவ்வாறு காண்பதுவே அருளோடு கூடி நிற்கும் ''ஞானத்தில் யோகம்'' எனப்படும்.

சீவன் முத்தர் செய்யும் ஞானக்கிரியை

மண் முதல் கரணம் எல்லாம்
மறு அசத்து ஆக்கி, ஞானக்
கண்ணினில் ஊன்றி, அந்தக்
கருத்தினால் எவையும் நோக்கி,
எண்ணி அஞ்செழுத்தும் மாறி
இறை நிறைவு உணர்ந்து போற்றல்,
புண்ணியன் தனக்கு ஞான
பூசையாய்ப் புகலும் அன்றே. 97

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

பிருதிவி முதலிய தத்துவங்கள் எல்லாம், தனக்கு வேறான சடப்பொருள் எனக் கண்டு, அவற்றை விட்டு நீங்கி, தன்னை இந்நிலைக்கு உயர்த்திய திருவருளில் நிலைத்து நின்று, அந்தத் திருவருளையே கண்ணாகக் கொண்டு, காணும் பொருள் அனைத்தையும் பார்த்துத் திருவைந்தெழுத்தை ''ந'' கார ''ம'' காரங்களை மாற்றிச் ''சிவயசிவ'' என்று செபித்து, சிவ பெருமானின் அத்துவித நிலையை முழுநிறைவாக நினைந்து போற்றி வழிபடுவது சிவபெருமானுக்கு உரிய ''ஞான பூசை'' என்று ஆகமங்கள் பேசுகின்றன. பிரபஞ்ச வாசனையை நீக்குதல் பொருட்டுச் சீவன் முத்தர்கள் செய்யும் வழிபாடு இஃது என்று இச்செய்யுள் கூறுகிறது. இது ''ஞானத்தில் கிரியை ''எனப்படும்.

பன்னிரண்டாம் சூத்திரம்

சீவன் முத்தர் செய்யும் ஞானச் சரியை

தொண்டர்கள் தாமும், வானோர்
தொழும் திருமேனி தானும்,
அண்டரும் கண்டி லாத
அண்ணலே என வணங்கி,
வெண் தரளங்கள் சிந்த
விழி, மொழி குளற, மெய்யே
கண்டு கொண்டு இருப்பர் ஞானக்
கடல் அமுது அருந்தினோரே. 98

தெளிவுரை:

சீவன் முத்தர்கள் ஆகிய சிவஞானிகள், சிவனடியாரைச் சிவன் எனக் கருதி வழிபடுவதற்குக் காரணம் அந்த அடியார்களின் வேடத்தின் தன்மையை எண்ணியே ஆகும். அந்தத் திருவேடத்தில் சிவபெருமானுக்குரிய திரு நீறு, உருத்திராக்கம் முதலியன இருக்கும்; அந்த அடியார்கள் எந்நேரமும் சிவோகம் பாவனையில் இருப்பர்; அவர்கள் இதயத்தில் எந்நேரமும் சிவபெருமானையே எண்ணிக் கொண்டிருக்கும் செயல் நிகழ்ந்த வண்ணம் இருக்கும்; தம்மை மறந்து சிவமாம் தன்மை பெற்று நிலைத்து நிற்பர். இத்தகைய அடியார் வேடத்தையே சிவஞான போதம் பன்னிரண்டாம் சூத்திரமும் கூறுகின்றது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விண்ணுலகில் சிவபூசை நிகழாமையால், அயன், மால், இந்திரன் முதலிய தேவர்கள் இந்தப் பூவுலகில் வந்து சிவபெருமானை வழிபடுகிறார்கள். இவ்வாறு தேவர்களாலும் காண்பதற்கு அரிய சிவபெருமானைப் ''பெருமானே, பெருமானே'' என்று, சீவன் முத்தர்கள் திருக்கோயிலில் உள்ள சிவலிங்க வடிவைக் கண்டு வழிபடுகிறார்கள். அவ்வாறு வழிபடும் பொழுது அவர்களது கண்களில் வெண்மையான முத்துப் போல நீர் ததும்பும்; நாக்குத் தழுதழுத்து நிற்கும்; அந்நிலையில் உண்மைப் பொருளாகிய சிவத்தையே அவர்கள் கண்டு கொண்டிருப்பர்; இவ்வாறு சீவன் முத்தர், ஞானக் கடலிலே விளைந்த பேரின்பமாகிய அமுதத்தைப் புசித்தவண்ணம் இருப்பர். இது ''ஞானத்தின் சரியை'' எனப்படும்.

நூற்கருத்து

நிலவு உலோகாயத ஆதி
நிகழ் சிவாத்துவித அந்தத்துள்
குலவினர் அளவு அளாவாக்
கொள்கையது ஆகி, வேதத்
தலை தரு பொருளாய், இன்பாய்த்
தாவு இல் சற்காரியத் தாய்,
மலைவு அறும் உணர்வால், பெத்த
முத்திகள் மதித்தாம் அன்றே. 99

தெளிவுரை:

உலகத்தில் விளங்குகின்ற உலோகாயுதம் முதல் சிவாத்துவித சைவம் ஈறாக உள்ள மதங்களைச் சார்ந்து இருப்பவர்கள், முறையான பிரமாணங்களைத் தழுவாத கொள்கைகளை, உடையவர்களாக இருக்கிறார்கள். அத்தகைய மதத்தவர்களின் சமயங்களைப் புறப்புறச் சமயம், புறச் சமயம், அகப்புறச் சமயம், அகச் சமயம் என நான்காக வகுத்துள்ளனர். (அவற்றைக் குறித்துச் சிவஞான சித்தியார் – பரபக்கம், சங்கற்ப நிராகரணம் என்னும் நூல்களில் விரிவாகக் காணலாம்)

சித்தாந்த சைவம் இவற்றின் வேறாய் உள்ளது. அஃதாவது வேதத்தின் சிரம் ஆகிய உபநிடதங்களில் கூறப்படும் பொருளை உடையதாய், பேரின்பத்தை விளைவிப்பதாய், கேடில்லாத சற்காரிய இயல்பு கூறுவதாய், மலைவு இன்றி இருக்கின்ற சைவ சித்தாந்த அறிவினால் உயிர்களின் பிறப்பு நிலைகளையும் வீடுபேற்று நிலைகளையும் வரையறுத்து இந்நூலில் இதுவரை கூறினோம். இஃதே இந்நூலின் கருப் பொருள் ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அளவு அளவா – பிரமாணங்களை முறையாகத் தழுவாது. அளவு – பிரமாணம்; அளாவா – தழுவாது. சற்காரியத்தாய் – சற்காரிய வாதம் – இல்லது தோன்றாது, உள்ளதே சிறக்கும் என்னும் கொள்கை.

நூல் உபதேசிக்கும் முறை

திருவருள் கொடுத்து மற்று இச்
சிவப்பிரகாச நல்நூல்
விரிவது தெளியும் ஆற்றல்
விளம்பிய ஏது நோக்கி,
பெருகிய உவமை நான்கின்
பெற்றியில் நிறுவிப், பின் முன்
தரும் மலைவு ஒழியக் கொள்வோன்
தன் வயின் சாற்றலாமே. 100

தெளிவுரை:

ஞான தேசிகருடைய தீக்கை ஆகிய திருவருளைக் கொடுத்துச் சிவம் பிரகாசிக்குமாறு செய்த ''சிவப்பிரகாசம்'' என்னும் இந்த நல்ல நூலில் சுருக்கமாகச் சொல்லப்பட்ட சிவாகமப் பொருளின் விளக்கத்தை ஐயம் திரிவு நீங்கும்படி விரித்துக் கூறும் முறையில், இயல்பு ஏதுக்களை ஆராய்ந்து நோக்கி, நூல்களில் சொல்லப்படும் விரிவான உவமைகள் நான்கினாலும் பெறத்தக்க விதத்தில் கருத்துக்கள் நிறுவப்பட்டுள்ளன. முன்னுக்குப் பின்னும், பின்னுக்கு முன்னும் முரண்படாதவாறு அமைந்துள்ள இந்நூற் கருத்துக்களைக் கேட்டு, இனிது உணர்ந்து கொள்பவரே நல்ல மாணக்கர் ஆவர். அத்தகையவர்க்கு இந்நூலைக் கூறுவது பொருத்தம் உடையதாகும்.

மூன்று வகை ஏதுக்கள் வருமாறு:

அவை, இயல்பேது, காரிய ஏது, அனுபலத்தி ஏது என்பனவாகும். ''இயல்பு ஏது'' என்பது, மா முதலிய சொற்கள் மரம் முதலிய பொருள்களை உணர்த்தும் பொழுது, வேறு காரணம் இன்றி, அந்தச் சொற்களின் இயல்பாய் உள்ள ஆற்றலைக் குறிக்கும். ''காரிய ஏது'' என்பது புகை முதலிய ஏத்துக்கள் நெருப்பு முதலிய தத்தம் காரணங்களை உணர்த்துவதைக் குறிக்கும். ''அனுபலத்தி ஏது'' என்பது, குளிர் இன்மை முதலிய காரியங்களின் இன்மைகளையும் பனி இன்மைகள், பனி இன்மை முதலிய காரணங்களின் இன்மைகள், குளிர் வாராமை முதலிய இன்மை முதலிய காரணங்களின் இன்மைகள், குளிர் வாராமை முதலிய காரியங்களின் இன்மைகளையும் உணர்த்துவதைக் குறிக்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இயல்பு ஏது – இயற்கையான காரணம்;

காரிய ஏது – ஆக்கப்படும் காரணம்;

அனுபலத்தி ஏது – அறியாமை காரணமாக வருவது.

நான்கு வகை உவமைகள் வருமாறு:

அவை, வினை உவமை, பயன் உவமை, மெய் உவமை, உரு உவமை என்பனவாகும். ''வினை உவமை'' என்பது, தொழில் காரணமாக வரும் உவமை ஆகும். அஃதாவது, புலி போலப் பாய்ந்தான் என்பது; இது பாய்தல் ஆகிய தொழில் காரணமாக வரும் உவமை. ''பயன் உவமை'' என்பது, பயன் காரணமாக வரும் உவமை ஆகும். அஃதாவது பயன் என்பது செயல் காரணமாகத் தோன்றும் காரியம், எடுத்துக் காட்டு; ''மாரியன்ன வண்மை'' என்பது, இது பயன் காரணமாக வந்தது. இங்கே மாரி (மேகம்) யால் வரும் பயனும் வண்மையால் (கொடை) வரும் பயனும் ஒத்து இருப்பது காணத்தக்கது. ''மெய் உவமை'' என்பது வடிவம் காரணமாக வரும் உவமை ஆகும். எடுத்துக் காட்டு: ''துடி இடை'' என்பது. மெய் – வடிவம். துடி – உடுக்கு இங்கே உடுக்கின் வடிவமும், பெண்ணின் அழகிய இடை ஆகிய உறுப்பின் வடிவமும் ஒத்து இருப்பது காணத்தக்கது. ''உரு உவமை'' என்பது நிறம் காரணமாக வரும் உவமை ஆகும். உரு – நிறம்; வண்ணம், எடுத்துக் காட்டு: ''கார் குழல்'' என்பது, இது, கருமை என்னும் நிறம் காரணமாக வந்தது, கார் – மேகம்; குழல் – பெண்ணின் முடி. ஆசாரியர் கூறும் பொருளை, மாணுக்கர் மேற்கண்ட ஏதுக்களாலும் உவமைகளாலும் நிச்சயித்து, மலைவு அறக் கொள்ளும் பக்குவம் பெறவேண்டும். அத்தகு பக்குவம் உடைய மாணவருக்கு இந்நூல் திருவருளால் கிடைக்கப் பெறும் என்பதே கருத்து.

சிவப்பிரகாசம் – தெளிவுரை முற்றுப் பெற்றது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

2. திருவருட்பயன்

காப்பு

நற்குஞ் சரக்கன்று நண்ணில், கலைஞானம்
கற்குஞ் சரக்குஅன்று காண்.

தெளிவுரை:

நல் அருளைப் பொழிவதும், பிரணவ ரூபம் ஆகிய யானை முகத்தைப் போன்றதும் ஆன திருமுகத்தை உடையவரும், எப்போதும் இளமையாய் உள்ளவரும் ஆகிய விநாயகக் கடவுளை, ஒருவர் மனத்தினுலும், சொல்லினுலும் உடம்பினுலும் வழிபடுவார் ஆயின், அவருக்கு ஞானசாத்திரம், வருந்திக் கற்க வேண்டிய பொருள் அன்று.

ஆதலால் அவருடைய திருவடியை வழிபடும் அடியேன் செய்யும் ஞான நூல் ஆகிய திருவருட் பயன் எவ்வகையாலும் தவறு இன்றி இனிது நிறைவேறுக.

முதல் அதிகாரம் – பதிமுது நிலை

இறைவனது மேலான பொது இயல்பு

கடவுளின் பொது இயல்பு

1. அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறை நிற்கும் நிறைந்து.

தெளிவுரை:

அகரம் ஆகிய உயிர் எழுத்தின் ஒலி, மற்றைய எழுத்துக்களுக்கு முதலாய், அவற்றில் கலந்து இருப்பது போல,

தனக்கு ஓர் உவமன் இல்லாத் தலைவன் ஆகிய கடவுள்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறிவுள்ளனவும், அறிவில்லாதனவும் ஆகிய பொருள்கள் எல்லாவற்றிலும் நிறைந்து,

அறிவே உருவம் ஆகித் தொடக்கமும் ஒடுக்கமும் இன்றி நிற்பர்.

வாயைத் திறந்த உடன் உண்டாவது ஆகிய அகர ஒலி, மற்றை எழுத்துக்கள் எல்லாவற்றிலும் கலந்து இருக்கிறது. அது போல கடவுள் எல்லாப் பொருள்களிலும் கலந்து இருக்கிறார்.

வாயைத் திறந்ததும் உண்டாகும் 'அ' என்ற ஒலி இல்லாமல் எழுத்துக்கள் தோன்றமாட்டா; அதுபோலக் கடவுள் இல்லாமல் உலகங்கள் தோன்றமாட்டா.

நிகரில் இறை – இன்ன தன்மையன் என்று முழுமையாக விளக்கப்பட முடியாத இறைவன்.

'நிற்கும்' என்ற சொல், 'என்றும் உள்ளவர்' என்னும் பொருளை உடையது.

சிவ சத்தியின் இயல்பு

2. தன் நிலைமை மன்உயிர்கள் சாரத் தரும்சத்தி
பின்னம் இலான் எங்கள் பிரான்

தெளிவுரை:

மனம் வாக்குக்கு எட்டாததும்,

மலபந்தம் இல்லாததும்,

பேரானந்தம் ஆனதும் ஆகிய

தமது ஒப்பற்ற நிலையை, நிலைபெற்ற ஆன்மாக்கள் யாவும் பொருந்தும்படி அருளுகின்ற பராசக்தியுடனே, வேறாகாமல் நிற்பர் எங்கள் இறைவர் ஆகிய சிவபெருமான்.

மன் உயிர்கள் – என்றும் உள்ள உயிர்கள்.
சத்தி பின்னமிலான் – நெருப்பும் சூடும்
பிரிவு அற நிற்றல் போல, சிவமும் சத்தியும் பிரிவற நிற்பர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிவத்தின் பெருமை

**3. பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின்
அருமைக்கும் ஒப்புஇன்மை யான்.**

தெளிவுரை:

நிறைவினாலும், அறிதற்கு அருமையினாலும், மிகுந்த அருளினாலும், ஒருவரால் பெறுதற்கு அருமையினாலும், சிவபெருமான் தனக்கு ஒப்பில்லாதவர் ஆவார்.

இந்தப் பூமி மிகப் பெரியது. சூரியன், பூமியின் பதின்மூன்று லட்சம் மடங்கு பெரியது. சூரியனிலும் பெரிய எண்ணில்லாத நட்சத்திரங்கள், ஆகாயத்தில் விளங்குகின்றன. இவை முதலானவைகள், பூத அண்டங்களைச் சேர்ந்தவை. பூதத்துக்கு மேலான தத்துவங்களால் ஆக்கப்பட்டவைகள், இவைகளிலும் மிக அதிகமானவை.

இவைகள் எல்லாம் ஒருங்கு சேர்ந்தும் சிவபெருமானுக்கு முன்னே, அணு அளவாகவும் நிற்கமாட்டா. இவற்றிலிருந்து சிவபெருமான் எவ்வளவு பெரியவன் என்பதை ஒருவாறு ஊகித்து அறியலாம்.

சிவத்தின் அருட் செயல்கள்

**4. ஆக்கி எவையும் அளித்து, ஆ சுடன்அடங்கப்
போக்கும்அவன் போகாப் புகல்.**

தெளிவுரை:

அனைத்து உயிர்களுக்கும் தூல, சூக்கும உடம்புகளைத் தோற்றுவித்தும், அவற்றை நிலைபெறச் செய்தும், சர்வ சங்காரத்தில் உயிர்கள் ஆணவமலத்தோடு கேவலமாய் நிற்கும்படி, அவ்வுடம்புகளை ஒடுக்கியும், ஆணவமலத்தோடு மற்ற மலங்களை ஒருங்கே போக்கி அருளைச் செய்தும்,

உதவுகின்ற கடவுள், நம் சிவபெருமானே ஆவார்.
உயிர்களுக்கு எக்காலத்தும் நீங்காத ஆதாரமாய் உள்ளவர், அவர் ஒருவரே ஆவார்.

ஆசு – ஆணவம் – உயிர்க்குற்றம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

போகாப்புகல் – அவனே விட்டால் நமக்கு புகலிடம் வேறு இல்லே.

சர்வசங்காரம் – முற்றும் ஒடுக்குதல்.

சிவபெருமானின் திருமேனிகள்

5. அருவும் உருவும் அறிஞர்க்கு அறிவாம்
உருவும் உடையான் உளன்.

தெளிவுரை:

சிவம், சத்தி, நாதம், விந்து ஆகிய நான்கு அருவத் திருமேனிகளும்,

மகேசுரன், உருத்திரன், மால், அயன் ஆகிய நான்கு உருவத் திருமேனிகளும்,

சதாசிவன் என்னும் அருவுருவத் திருமேனியும் ஞானமார்க்கத்தார்க்கு உரிய, ஞானரூபம் ஆகிய, பஞ்சாட்சர வடிவமும் உடையவர், எங்கள் தலைவர் ஆகிய சிவபெருமான்.

அருவுருவம் – இலிங்கம் – ஆன்மாக்களும், உலகங்களும் ஒடுங்குதற்கும் தோற்றுதற்கும் ஆன இடம். ல + கம் = லிங்கம்;

லி – லயம் – ஒடுங்குதல்
கம் – போதல் – தோன்றுதல்

அருவம் – நிஷ்களலிங்கம்; உருவம் – சகள லிங்கம்.

அத்திருமேனிகளேத் தோற்றுவித்தவர் அவரே.

சூ. பல்ஆர் உயிர்உணரும் பான்மைஎன மேல்ஒருவன்
இல்லாதான் எங்கள் இறை.

தெளிவுரை:

அளவு இல்லாதவனுக எங்கும் நிறைந்து இருக்கும் ஆன்மாக்கள், அவற்றிற்குத் தலைவர் ஆகிய கடவுள் அருளிய உட்கருவி, புறக்கருவிகளேக்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கொண்டு அறியும் தன்மைபோல்,

எங்கள் பதியாகிய சிவபெருமான்,

தமக்குக் கருவிகளைக் கொடுத்தற்கு, ஒரு தலைவன் இல்லாதவர்; அன்றியும் கருவிகள் இல்லாமலே எல்லாம் அறிபவர்;

எனவே, சிவபெருமான் தமக்கு உரிய திருமேனிகளைத் தாமே, தம் அருளைக் கொண்டே தோற்றுவித்துள்ளர் என்க.

பான்மை – தன்மை.

சிவபெருமான் அடியார்க்கு எளியன்

7. ஆனு அறிவாய் அகலான், அடியவர்க்கு
வான்நாடர் காணுத மன்.

தெளிவுரை:

தேவர்கள், நிறைந்த இன்பத்தை அனுபவித்தற்கு வேண்டிய 'பசு நல்வினை' செய்தவர்கள்; ஆயினும் சிவபெருமானிடத்துப் பேரன்பு இல்லாதவர்கள்; ஆதலால், அவர்களாலும் காணமாட்டாதவன் எங்கள் இறைவன்.

அவன், எவ்விடத்தும் நிறைந்து, நீங்காத ஞான சொரூபமாய் நின்றாலும், அவனிடம் பேரன்பு உடைய அடியவர்களுக்கு, மறையாமல் வெளியாக நின்று, பேரின்பத்தைக் கொடுப்பவன்.

வான் நாடர்	–	தேவர்கள்
ஆனா(து)	–	நீங்காத
மன் - மன்னன்	–	சிவபெருமான்
பசு நல்வினை	–	பசுப்புண்ணியம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிவத்தின் வியாபகம்

8. எங்கும் எவையும் எரியுறுநீர் போல்ஏகம்
தங்கும்அவன் தானே தனி.

தெளிவுரை:

சிவபெருமான் எல்லா உலகங்களிலும் எல்லா உயிர்களிலும், சூடு பொருந்திய நீர் போல, அவற்ருேடு கலந்து நிற்பன்;

அவைகளோடு அவ்வாறு வேறறச் சேர்ந்து நின்ருலும், அவற்றின் தன்மை, தன்னேச் சாராமல், அவற்றைக் கடந்தும் நிற்பன்.

கலந்து நிற்பது, இறைவனின் பொது இயல்பு.

கடந்து நிற்பது, இறைவனின் சிறப்பு இயல்பு.

'எரியுறு நீர்போல்' என்ற தொடர், இறைவனின் பொது இயல்பைக் குறிக்கின்றது. அந்தந்தப் பொருளுக்கு அந்தந்த பொருளாய் நிற்பது அவனது பொது இயல்பாகும். அவன் முழு நிறைவு உடைய்வன் என்பதாலேயே, அவ்வாறு நிற்க அவனுல் மட்டுமே முடிகிறது.

திருவருளே நுகரும் முறை

9. நலம்இலன் நண்ணுர்க்கு; நண்ணினர்க்கு நல்லன்
சலம்இலன் பேர்சங் கரன்.

தெளிவுரை:

சிவபெருமான், தன்னே அடைந்து வழிபடாதவருக்குத் தமது பேரின்பத்தைக் கொடுப்பதில்லே. அவனே அன்போடு வழிபடுபவருக்கு முத்தி இன்பத்தைக் கொடுப்பவன்.

அவனே வழிபடாமையால் வெறுப்பேனும், வழிபடுதலால் விருப்பேனும் இல்லாதவன். எல்லா உயிர்களுக்கும் சுகத்தையே செய்பவன்; எனவே 'சங்கரன்' என்னும் திருநாமத்தை உடையவன்.

குளிர் உள்ளவர்கள், நெருப்புக்கு அருகில் சென்ருல்தான் குளிர்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நீங்கப் பெறுவர்; தூரத்தில் நின்ருல் குளிர் நீங்கப் பெருர். இவர்கள் நெருப்புக்கு அருகில் சென்ருலும், தூரத்தில் நின்ருலும், நெருப்புக்கு நயமேனும் நட்டமேனும் இல்லே.

அவ்வாறே, அவனே வழிபட்டு நண்ணுபவர்க்கு மட்டுமே ஆணவமல நீக்கம் நிகழும். எனவேதான், 'நண்ணார்க்கு நலம் இலன்' என்ருர்.

பிறவிப்பிணிக்கு மருந்து

10. உன்னும் உளது, ஐயம்இலது, உணர்வாய் ஓவாது,
மன்னுபவம் தீர்க்கும் மருந்து.

தெளிவுரை:

சிவபெருமான், ஞானமயமாய் நின்று, அனுதியான பிறவிக்குக் காரணம் ஆகிய, ஆணவம் என்னும் வியாதியைத் திருவருள் என்னும் மருந்தை ஊட்டித் தீர்க்கும் மருத்துவன் ஆவான்; ஆகவே, 'வைத்தியநாதன்' எனப்படுகிருன்.

அம்மருத்துவனே, இடையருமல் அன்போடு நினைந்து வழிபடுங்கள். அதனுல் வரும் முத்தி இன்பம் நிலேயான செல்வம். அத்தகு செல்வத்தை விரைவில் அடைதற்குச் சந்தேகம் இல்லே.

மன்னுபவம் – படைத்தல் முதலிய ஐந்தொழில்களும் அநாதியே நடைபெறுவதால் உயிர்களுக்கு உள்ள பிறப்பும் அநாதியே உள்ளது.

ஓவாது உன்னும் – இடைவிடாமல் வழிபட வேண்டும். இடையிலே விட்டால், நோய் மீண்டும் மிகுதிப்படும் என்றதால் என்க.

இரண்டாம் அதிகாரம் – உயிர் அவை நிலே

'பல' ஆகிய உயிர்களது தன்மை
ஆன்மாக்கள் எண்ணில்லாதன

11. பிறந்தநாள், மேலும் பிறக்கும்நாள் போலும்,
துறந்தோர், துறப்போர் தொகை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

ஆன்மாக்களுள் முத்தி அடைந்தோர் தொகை, ஆன்மாக்கள் பல பிறவிகளில், பிறந்து வாழ்ந்த நாட்களின் தொகைக்குச் சமம் ஆகும்.

முத்தி அடையாமல் இருக்கும் ஆன்மாக்களின் தொகை, ஆன்மாக்கள் இனிப் பல பிறவிகளில் பிறந்து வாழும் நாட்களின் தொகைக்குச் சமம் ஆகும்.

படைப்புத் தொழில், தொடக்கமில் காலந்தொட்டு நிகழ்வதால், பிறந்த நாட்கள் எண்ணில. எனவே, உயிர்களும் எண்ணில.

மூவகை ஆன்மாக்கள்

12. திரிமலத்தார் ஒன்று, அதனில் சென்றூர்கள் அன்றி
ஒருமலத்தா ராயும் உளர்.

தெளிவுரை:

ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலத்தை உடைய சகலர், மும்மலங்களில் ஒன்று ஆகிய சுத்தமாயை நீங்கி, ஆணவம், கன்மம் என்னும் இரு மலங்களையும் உடைய பிரளயாகலர்.

இவர்கள் இருவகையினரைத் தவிர அசுத்தமாயையும் கன்மமும் இன்றி, ஆணவம் ஆகிய ஒரு மலம் உடைய விஞ்ஞானகலர்.

இவ்வாருக, ஆன்மாக்கள் மூவகையாக உண்டு. ஆணவமல சக்திகள், விஞ்ஞானகலரில் சூக்குமமாகவும், பிரளயாகலரில் தூலமாயும், சகலரில் தூலாதரமாயும் நிற்கின்றன.

மூவகை ஆன்மாக்களின் வேறுபாடு

13. மூன்று திறத்து உள்ளாரும் மூலமலத்து உள்ளார்கள்;
தோன்றலர், தொகுத்து உள்ளார் துணே.

தெளிவுரை:

சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்னும் மூவகை ஆன்மாக்களும், அநாதியே ஆணவமலத் தொடக்கு உள்ளவர்கள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இம்மூவகையினருள், சகலர் வகை ஆன்மாக்கள், அசுத்த மாயை என்னும் துணையினை உடையவர்; ஆதலின், அவர் மலத்தினுல் பிணிக்கப்பட்டிருக்கும் தமது அவல நிலையினை அறியாதவராய் இருக்கிறார்கள்.

அசுத்தமாயையால் பிணிக்கப்படாததால், மற்ற இருவகை ஆன்மாக்களும் ஆணவமலத்தில் பிணிக்கப்பட்டிருப்பதை அறிவார்கள்.

'அசுத்தமாயை' என்பது இருபத்தி நான்கு தத்துவங்களை மட்டுமே உடையது- சகலர் வகை ஆன்மாக்கள் ஆகிய நாம் வாழும் புவனம், அசுத்தமாயா புவனம் ஆகும்.

ஆன்மா தன்வயம் இல்லாதது

14. கண்டவற்றை நாளும் கனவில் கலங்கியிடும்
திண்திறலுக்கு என்னே செயல்?

தெளிவுரை:

நனவிலே நாள்தோறும் கண்ட பொருட்களை, கனவிலே மாறுபட்டுக் காண்கின்ற அற்பவலி உள்ள ஆன்மாக்களுக்குச் சுவதந்திரமானசெயல் எப்படி உண்டாக முடியும்? உண்டாகாது. எனவே, ஆன்மாக்கள் சுவதந்திரம் உடையன அல்ல.

சுவதந்திரம் என்பது, தாம் விரும்பியபடியே நடப்பதற்கும், எல்லாவற்றையும் ஆளுதற்கும் வேண்டிய வல்லமை ஆகும்.

நனவு நிலையில் முப்பத்தைந்து கருவிகளைக் கூடி நிற்கும் ஆன்மா, கனவு நிலையில் இருபத்தைந்து கருவிகளை மட்டுமே கூடி நிற்கும்; கனவிலும் முப்பத்தைந்து கருவிகளைக் கூடி நிற்க இயலாததால், தன் விருப்பப்படி நடப்பதற்கு ஆன்மாவால் முடியவில்லை. எனவே ஆன்மா சுவதந்திரம் (தன்வயம்) இல்லாதது.

ஆன்மா அறிவிக்க அறிவது

15. பொறிஇன்றி ஒன்றும் புணராத புந்திக்கு
அறிவுஎன்ற பேர்,நன்று அற.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

ஐம்பொறிகளில் ஏதாயினும் ஒன்று இல்லாமல், ஒரு விடயத்தையும் அறிய மாட்டாத ஆன்மாக்களுக்கு, அவை அறிவுடையன என்று உரைத்த பெயர் மிகவும் நன்ருக இருக்கிறது!

புந்தி, ஆகுபெயராய் ஆன்மாவை உணர்த்திற்று. சகல அவத்தையில் அஃதாவது பிறப்புக்கு உட்பட்ட நிலையில் பொறிகளின் துணைக்கொண்டே ஆன்மாக்கள் அறிகின்றன. ஆகவே, தாமே அறியும் அறிவு இல்லாதன. பொறிகளால் அறியப்படும் அறிவு; சிற்றறிவு. எனவே, ஆன்மாக்கள் அறிவித்தால் அன்றி, ஏதையும் அறியமாட்டா.

ஆன்மாவுக்கு இச்சா ஞானக் கிரியா சத்திகள் இயல்பாக உள்ளன.

16. ஒளியும் இருளும் உலகும் அவர்கண்
தெளிவில் எனில், என் செய.

தெளிவுரை:

சூரியன், நெருப்பு, முதலிய சுடர்களும், மயக்கத்தைத் தருவதும் ஆகிய இருளும், பலவகைப்பட்ட பொருள்களோடு சிறந்து நிற்கும் உலகமும் விழித்திருக்கும் கண்ணில் காணும் தன்மை இல்லாவிட்டால், என்ன பயனை உடையன?

அவைகள் இருந்தும், அவைகள் அறியப்படாமல் போய்விடும். அவ்வாறே, ஆன்மாக்கள் ஆகிய நமக்கு, இயல்பாகவே அறிவு இச்சை செயல்கள் இல்லையானுல் ஆணவத்தோடு நிற்கும்போது, நமக்கு மயக்கம் ஏற்படாது. சிவத்தோடு நிற்கும்போது, சிவானந்த உடைமையும் ஏற்படாது.

எனவே ஆன்மாவுக்கு இச்சா ஞானக் கிரியா சத்திகள் இயல்பாக உள்ளன என்பது பெறப்பட்டது.

ஆன்மா சதசத்து

17. சத்து, அசத்தைச் சாராது, அசத்து அறியாது அங்கண், இவை
உற்றசத சத்தாம் உயிர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

நிலைபெற்ற ஞானம் ஆகிய சிவம், நிலையற்றனவாகிய மாயைப் பொருட்களைப் புதிதாகச் சுட்டி அறிய வேண்டுவது இல்லை; ஏனெனில் சிவம் என்றும் அறிபவர்.

சடப்பொருள்கள் ஒன்றையும் அறியமாட்டா. அப்படி இருப்பதால், சிவத்தையும் சடப்பொருள்களையும் அறிவன, 'சத்து' ஆகாமலும் 'அசத்து' ஆகாமலும், 'சதசத்து' ஆக இருக்கும் ஆன்மாக்கள் என்க.

'சாராது என்பது, அறியப்படும் விடயமாகக் கொள்வது எனப்படும்.

அசத்தை அசத்தால் அசத்தின்கண் நின்றும், சத்தைச் சத்தால் சத்தின்கண் நின்றும் அறிகின்ற ஆன்மா. அசத்தும் அன்று; சத்தும் அன்று; இரண்டினும் வேறு ஆகிய 'சதசத்து' ஆகும்.

ஆன்மா சார்ந்ததன் வண்ணமாய் உள்ளது

18. இருளில் இருள்ஆகி எல்இடத்தில் எல்ஆம்
பொருள்கள் இலதோ புவி.

தெளிவுரை:

இருள் வந்த காலத்து, இருள் ஆகியும், ஒளி வந்தபோது, விளங்கியும் நிற்கும் பொருள்களைப், பூமி உடையது அல்லவா? அப்படிப்பட்ட பொருள்கள் பூமியில் உள்ளன. அவை, படிகம், கண், கண்ணாடி முதலியன.

ஆன்மாவும் இப்படிப்பட்ட பொருள்களைப் போன்றதே ஆகும். இருளாகிய ஆணவத்தோடு சேரும்போது, ஆன்மா இருள் ஆகிறது. ஒளி ஆகிய கடவுளின் திருவருளோடு சேரும்போது, ஒளி ஆகிறது. அவ்விரு நிலைகளிலும் ஆன்மா, தன் வடிவத்தைக் காட்டாமலே நிற்கிறது.

ஆன்மா, ஆணவத்தோடு சேரும்போது, அதன் அறிவு தடைப்பட்டு நிற்கிறது. சிவத்தோடு சேரும்போது, சிவமாய் விளங்கி நிற்கிறது. எனவே, ஆன்மா சார்ந்த பொருளின் வண்ணமாய் உள்ளது என்பது பெறப்பட்டது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆன்மா சிவத்தை காணுமைக்கு காரணம்

19. ஊமன்கண் போல ஒளியும் மிகஇருளே
யாமன்கண் காணு தவை.

தெளிவுரை:

கூகையின் கண்ணுக்குச் சூரியனது ஒளி தோன்றுமல் இருப்பது போல

சிவபெருமான் அருளுகின்ற ஞானத்தைக் கொண்டு காணு ஆன்மாக்களுக்குச் சிவமாகிய ஒளி தோன்றுமல் நிற்கும்.

'வாமன்' என்றும் பாடம் உண்டு.

வாமன் – சிவபெருமான்.

கூகையின் கண்ணில் உள்ள தசைத் திரள் காரணமாக கூகை, சூரி ஒளியைக் காண இயலாமல் இருக்கிறது.

அவ்வாறே, ஆன்மாவின் அறிவில் உள்ள ஆணவமலம் காரணமாக அறியாமைக்கு உட்பட்டு ஆன்மா இறையருளை அறியாமல் இருக்கிறது.

சூரிய ஒளி ஒரே தன்மையில் எங்கும் உள்ளது போல், இறையருளு எல்லா உயிர்கட்கும் ஒரே தன்மையிலேயே உதவுகிறது.

இறையருளைப் பெறுதற்கு ஆன்மா முயலவேண்டும்

20. அன்றுஅளவும் ஆற்றும்உயிர் அந்தோ அருள்தெரிவது
என்று? அளவுஒன்று இல்லா இடர்.

தெளிவுரை:

அநாதியாகவே பிறந்து பிறந்து, இறந்து இறந்து, அளவில்லாத துன்பங்களைத் தாங்கி நிற்கும் உயிர்கள்,

ஐயோ! ஆணவமலம் நீங்கித் திருவருள் ஆகிய ஞானத்தைப் பெற்று

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பேரின்பத்தைப் பெறுவது எக்காலம்?

பிறவிகள்தோறும், நாம்படும் துன்பத்திற்கு கணக்கில்லை. எனவே, அவற்றிலிருந்து நீங்குதற்கு முயலவேண்டும்.

அதன் பொருட்டுக் கடவுள் விதித்தபடி நடந்து, அவரிடம் உள்ள பற்றை வளர்க்க வேண்டும்.

இன்னும் காலம் கடத்துவது, பரிதாபத்திற்குரியது என்பது இக்குறள் வெண்பாவின் கருத்து.

மூன்ரும் அதிகாரம் – இருள் மல நிலை

அஃதாவது ஆன்மாவின் அறிவை மறைத்து இருள்போல நிற்கும் ஆணவமலத்தின் தன்மை.

ஆணவத்தை நீக்குதற்குக் கருவியாயுள்ள மாயையின் உண்மையும், ஆணவத்தால் உண்டாகும் கன்மத்தின் தன்மையும், தொடர்பு பற்றிக் கூறப்படுதலால், இந்த அதிகாரம் மும்மலங்களையும் விளக்குகின்றது,.

முப்பொருளும் இன்பமும் துன்பமும் உள் பொருள்கள்

21. துன்றும், பவத்துயரும் இன்பும் துணைப்பொருளும்
இன்று என்பது எவ்வாறும் இல்.

தெளிவுரை:

நெருங்கிய பிறவித் துன்பமும், முத்தியாகிய பேரின்பமும், பிறவித் துன்பத்திற்குக் காரணம் ஆகிய மும்மலங்களும், முத்திக்குக் காரணமாகிய சிவமும் இல்லாத பொருள்கள் என்று சொல்வது, சுருதி, யுத்தி, அனுபவம் என்னும் அளவைகள் எவற்ருலும் இல்லை.

சுருதியாவது, வேதாகமங்கள் ஆகிய கடவுள் வாக்கு, யுத்தியாவது, அனுபவ உணர்வை, அளவை நூற்படி பலவகையாகக் கலத்தலினுல் பெறப்படும் அறிவு. அனுபவம் ஆவது, இந்திரியங்களால் அறியப்படும் அறிவு, முத்தி அனுபவம் என்பது வேறு.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அனுபவம்	–	காண்டல் அளவை
யுத்தி	–	கருதல் அளவை
சுருதி	–	ஆகம அளவை

இக்குறள் வெண்பாவில், கடவுள், உயிர், ஆணவம், கன்மம், மாயை ஆகிய பொருள்களின் உண்மையும், அவற்றின் பயன்களாகிய பிறப்பு இறப்பு, இன்பம் துன்பம் மறுபிறப்பு, இறுதியில் பெறும் முத்தியின்பம் ஆகியவற்றின் உண்மையும் வலியுறுத்தப்படுகின்றன. இவற்றையெல்லாம் இல்லை இல்லை என்று கூறுவது அறியாமையே ஆகும்.

ஆணவ மலத்தின் உண்மை அனுமானத்தால் துணியப்படுதல்

22. இருள்ஆனது அன்றி இலது;எவையும் ஏகப்
பொருள்ஆகி நிற்கும் பொருள்

தெளிவுரை:

உலகத்தில் உள்ள பலவகைப்பட்ட பொருள்களும், அவைகளுடைய தன்மை தோன்றுமல், ஒருவகைப் பொருளாக மறைத்துத் தோற்றுவிக்கும் பொருள், இருள் உருவான பொருளன்றி வேறு பொருள் அன்று.

இருள் மிகுந்த இரவில், வழியிலே சுவர் இருந்தால், அது சுவராகத் தோன்றுது; கிணறு கிணருகத் தோன்றுது? இவற்றை மறைப்பது புற இருள் ஆகும்.

அதுபோல, பதி, பசு, பாசங்களின் தன்மை நமது அறிவுக்கு எட்டாமல் மறைக்கப்படுதற்குக் காரணம் அவற்றை மறைக்கும் இருள் போன்ற ஒரு பொருள் இருத்தல் வேண்டும். அப்பொருளே, அக இருளாகிய 'ஆணவமலம்' ஆகும்.

ஆணவம் இருளினும் கொடியது

23. ஒருபொருளும் காட்டாது இருள்;உருவம் காட்டும்;
இருபொருளும் காட்டாது இது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

உலகத்தில் உள்ள புற இருளானது, மற்றைய பொருள்களைக் காட்டாது. ஆயினும் தன்னுடைய உருவத்தைக் காட்டும்.

ஆனால், இந்த ஆணவ மலமானது, பிற பொருள்களின் தன்மையை மறைப்பதும் அல்லாமல் தனது இருப்பையும் மறைக்கின்றது. எனவே, இஃது இருளினும் கொடியது.

ஒருவன் தான் செய்யும் தீய செயல், தீயவை என்பதை அறியாமல், சாதுரியமானது என்று நினைத்து, அத்தீய செயலைச் செய்வது ஆணவமலமே ஆகும்.

தீயனவற்றை நல்லனபோல் காட்டித் தன்னை மறைத்து, அடுத்துக் கெடுக்கும் குணமே, ஆணவமலத்தில் உள்ள பெரும் பொல்லாப்பு.

ஆணவம் அநாதியாய் ஆன்மாவோடு உள்ளது.

24. அன்றுஅளவி உள்ஒளியோடு ஆவியிடை, அடங்கி
இன்றுஅளவும் நின்றது இருள்.

தெளிவுரை:

அநாதியே ஆன்மாவோடு உள்ளதாய், ஆன்மாவுக்கு உயிர்க்கு உயிராய், இருக்கும் சிவமும், அந்த ஆன்மாவோடு நிற்க, அந்த சிவத்தைச் சாராது. ஆணவமலமானது, ஆன்மாவிலே கலந்து, இன்றுவரைக்கும் நீங்காமல் நிற்கிறது.

சர்வ சங்கார காலத்தில், மாயாமலமும் கன்ம மலமும், ஆன்மாவை விட்டு ஒதுங்கி நின்று, மகா சிருஷ்டித் தொடக்கத்தில் ஆன்மாவைச் சாரும்.

ஆனால், ஆணவ மலமானது, சர்வசங்கார காலத்திலும், விட்டு நீங்காமல், ஆன்மாவோடு நிற்கும். எனவே, ஆணவம் அநாதியாய் ஆன்மாவோடு உள்ளது என்கிறோம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆணவம் அநந்த சக்திகளை உடையது

25. பலரைப் புணர்ந்தும்இருட் பாவைக்கு உண்டு என்றும்
கணவர்க்கும் தோன்ருத கற்பு.

தெளிவுரை:

எண்ணில்லாத ஆன்மாக்களைப் பொருந்திக் கலந்து நின்றும், ஆணவமலமாகிய பெண்ணுக்கு, தனது நாயகராகிய ஆன்மாக்களுக்குத் தன்னைக் காட்டாமல் இருக்கும் நியமம் உண்டு.

கற்புள்ள பெண்கள், பிற ஆடவர்களோடு சேராதவர்களாய்த் தம்முடைய சொந்தக் கணவர்களுக்குத் தம்மைக் காட்டி நிற்பர்.

இவர்களுடைய தன்மைக்கு முழுமாருக, ஓர் ஆன்மாவைப் பிடித்திருக்கும் ஆணவமே, பிற ஆன்மாக்களோடு சேர்ந்தும், அந்த ஆன்மாவுக்குத் தன்னைக் காட்டாமல் நிற்கின்றது.

ஆணவமலத்தைக் கற்புடைய நங்கை என்றது, அதன் இழிவான தன்மையைக் குறிப்பிட்டுக் காட்டும் பொருட்டே ஆகும். இது, புகழ்வார்போன்று பழித்தவாருயிற்று.

ஆணவம் மெய்யுணர்வைத் தடுப்பது

26. பன்மொழிகள் என்?உணரும் பான்மை தெரியாத
தன்மை,இரு ளார்,தந் தது.

தெளிவுரை:

நமது அறியாமைக்கு என்ன காரணம் என்பதைப் பற்பல வார்த்தைகளால் பேசி என்ன பயன்? ஒரு பயனும் இல்லை.

அறிய வேண்டுவனவற்றை நாம் அறிய முடியாமல் நிற்கும் மயக்க உணர்வு, நமக்கு ஆணவமலத்தாலேயே ஏற்பட்டது. வேறு காரணம் ஏதும் இல்லை.

நாம் அறியவேண்டிய உண்மைகள், பதி, பசு, பாசம் என்னும் மூவகைப் பொருள்களின் இயல்பும், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நால்வகை ஒழுக்கங்களுமே ஆகும். இவற்றை அறியவொட்டாமல், நமது அறிவைத் தடை செய்வது ஆணவமலம் என்பது வலியுறுத்தப்பட்டது.

ஆணவம் ஆன்மாவின் குணமன்று

**27. இருள்இன்றேல் துன்புஏன்? உயிர்இயல்பேல் போக்கும்
பொருள்உண்டேல் ஒன்றுகப் போம்.**

தெளிவுரை:

ஆணவம் என்ற பொருள் இல்லையானுல், ஆன்மாவுக்குப் பிறவித் துன்பம் ஏன் ஏற்படப்போகிறது? ஆணவமலமே அனைத்துத் துன்பங்களுக்கும் காரணமாகும்.

இந்த ஆணவம் ஆன்மாவின் குணமன்று; அஃது ஆன்மாவிற்குக் குணமாக இருக்குமானுல், முத்தியின்போது சிவஞானமானது, ஆணவமல காரியங்களை, ஆன்மாவிடமிருந்து போக்கும்போது, குணம் கெடுவதோடு குணத்தையுடைய பொருள் ஆகிய ஆன்மாவும் கெட்டுப் போகும், முத்தியும் பயனற்றுப் போகும்.

எனவே, ஆணவம் ஆன்மாவுக்குக் குணமன்று.

ஆணவம் அநாதியே உள்ளது

**28. ஆசு,ஆதி யேல்,அணைவ காரணம்என்? முத்திநிலை
பேசாது அகவும் பிணி.**

தெளிவுரை:

ஆணவமலம், ஆன்மாவை இடையிட்டுச் சேர்ந்ததாயின், அவ்வாறு அஃது இடையில் ஆன்மாவைச் சேர்வதற்கு என்ன காரணம் என்று சொல்லவேண்டும்.

மேலும், இடையில் ஆணவம் ஆன்மாவைச் சேர்ந்திருக்குமானுல், ஆன்மா சுத்தமாக இருக்கும் முத்தி நிலையிலும், ஒரு காரணமும் இல்லாமல், முன்பு இடையில் சேர்ந்தது போன்று, ஆணவமலம் ஆன்மாவைத் திரும்பவும் பிடிக்கக்கூடும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எனவே, ஆணவமலம் ஆன்மாவை அநாதியே பீடித்துள்ளது; அஃதாவது உயிர்க்கு முதற்பிறப்பு நிகழ்வதற்கு முன்பே, ஆணவம் ஆன்மாவின் அறிவிச்சை செயல்களை மறைத்து நிற்கின்றது என்பது தெளிவு.

ஆணவத்தைக் கெடுக்கும் ஒரு கருவி, மாயை

29. ஒன்று மிகினும் ஒளிகவரா தேல்,உள்ளம்
என்றும் அகலாது இருள்.

தெளிவுரை:

மாயையினுல் உண்டாகிய உடம்பு முதலியனவைகள் கிடைத்த காலத்திலும், ஆன்மா அறிவைப் பெற்றுக் கொள்ள மாட்டாது போனுல், ஆணவமலச் சேட்டைகளிலிருந்து அஃது ஒருபோதும் விடுபடப்போவதில்லை.

ஆணவமல மறைப்பினுல் உயிர்க்கு ஏற்பட்ட அறியாமையைப் போக்கும் பொருட்டே இறைவன், உயிர்க்குப் பிறவி வாய்ப்பைத் தந்துள்ளான்.

மாயா காரியங்களால் உயிர்க்கு வழங்கப்பட்ட இந்த உடம்பில் இருந்துகொண்டே, உயிர் ஆணவமலப் பிடியிலிருந்து விடுபட முயலுதல் வேண்டும்.

ஆணவம் இருள்; அவ்விருளைப் போக்கும் ஒளிப்பொருள், மாயை ஆகும்.

மாயா கன்மங்களின் இயல்பு

30. விடிவாம் அளவும் விளக்கனைய மாயை,
வடிவாதி கன்மத்து வந்து.

தெளிவுரை:

மாயையினுல் ஆகிய தனு, கரண, புவன, போகங்கள் ஆன்மாக்களுடைய புண்ணிய பாவங்களுக்குத் தக்கவைகளாகத் தோன்றுகின்றன.

அவ்வாறு தோன்றி, சிவஞானம் ஆகிய பேரொளியை ஆன்மாபெறும் முத்திநிலை வரையும் ஆணவ இருளை ஒருவாறு நீக்கக் கூடிய அறிவைக் கொடுக்கும் கருவிகளாக அவை நிற்கின்றன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விடியும்வரை, இருளை ஒருவாறு நீக்கக் கூடிய விளக்குப் போல, மாயா காரியங்கள் உயிர்க்கு உதவுகின்றன.

விளக்கு அனைய – விளக்குப் போல, தனு – உடம்பு; கரணம் – இந்திரியம் முதலிய புறக்கருவிகளும் உட்கருவிகளும்; புவனம் – வசிக்கும் உலகம், போகம் – அனுபவிக்கப்படும் பொருள்கள்.

நான்காம் அதிகாரம் – அருளது நிலை

அஃதாவது திருவருளினது தன்மை

அருளின் பெருமை

31. அருளில் பெரியது அகிலத்து வேண்டும்
பொருளில் தலையிலது போல்.

கொண்டுகூட்டு:

அகிலத்து வேண்டும் பொருளில், தலையிலது போல், அருளில் பெரியது இல்து.

தெளிவுரை:

உலகத்தில் ஆன்மாக்கள், அந்த அந்தக் காலத்தில், இன்றியமையாததாக விரும்பும் பொருளிலும் மேலான பொருள்கள் இல்லை;

அதுபோல, திருவருளுக்கு மேலானதும் ஒப்பானதும் ஆன பொருள் இல்லை.

இன்றியமையாததாக விரும்பும் பொருளாவது, தண்ணீர் அகப்படாத தனிவழியில் செல்லும் கோடீஸ்வரன் ஒருவனுக்குத் தாகம் ஏற்படுகிறது. அப்போது அவனுக்குத் தண்ணீரைவிட மேலான பொருள் இல்லை என்பது போன்றது ஆகும்.

திருவருளின் பயன்

32. பெருக்க நுகர்வினை பேரொளியாய் எங்கும்
அருக்கன் என நிற்கும் அருள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கொண்டு கூட்டு:

அருக்கன் என, அருள் பெருக்கமாய், நுகர்வினையாய், பேரொளியாய் எங்கும் நிற்கும்.

தெளிவுரை:

உலகத்தில் உள்ள உயிர்களுக்கு வேண்டிய ஆகாரம் முதலியவைகளைக் கொடுத்து, அவைகளை அனுபவிக்கச் செய்து, ஒளியைக் கொடுத்து நிற்பது சூரியன். அதுபோல,

திருவருளானது, உயிர்களுக்குள்ள கன்மங்களை வளர்ப்பதாய், அவைகளைத் தொலைத்தற்காக, இன்ப துன்பங்களை நுகரச் செய்வதாய், அந்த அனுபவத்தில் ஆணவத்தின் வலியைக் குறைத்து, ஆன்மாவின் ஞானசக்தி ஆகிய ஒளியை, மேலாக விளக்குவதாய், எல்லாஆன்மாக்களிடத்தும் நிற்கும்.

அருள் இன்றி அறிவு பெறப்படாது

33. ஊன் அறியாத ஒன்றும், உயிர்அறியாது ஒன்றும், இது தான்அறியாது ஆர்அறிவார் தான்?

தெளிவுரை:

அசேதனங்கள் ஆகிய தத்துவங்களால் ஆக்கப்பட்ட இந்த சரீரம், ஒரு காலமும் ஒன்றையும் அறியமாட்டாது; ஆன்மா, ஆணவத்தினுல் மூடப்பட்டிருத்தலால், ஒன்றையும் தானுக அறியமாட்டாது.

எனவே, திருவருள் அறிவித்தால் அன்றி, ஆன்மா தானுக, எதையும் அறியமாட்டாது என்பது வலியுறுத்தப்பட்டது.

ஊன் – உடம்பு (தத்துவத்தொகுதி).

ஆன்மாக்கள் அருளை அறியாமைக்குக் காரணம்

34. பால்ஆழி மீன்ஆளும் பான்மைத்து; அருள் உயிர்கள் மால்ஆழி ஆழும் மறித்து.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கொண்டுகூட்டு:

உயிர்கள், அருள்மறித்து, மால் ஆழி ஆழும்; பால் ஆழி மீன், ஆளும் பான்மைத்து.

தெளிவுரை:

உயிர்கள், தாம் வாழுதற்கு இடமாகிய அருளைப் பயன்படுத்திச் சிவாநந்தத்தை அடைவதை விட்டு மயக்கத்தைக் கொடுக்கும் உலக விஷயமாகிய சமுத்திரத்தில் ஆழ்ந்து நிற்கும்.

உயிர்கள், அவ்வாறு நிற்பது, பால் – சமுத்திரத்தில் இருக்கும் மீன்கள், அவற்றைச் சுற்றி நிறைந்திருக்கும், பாலைப் பருகாமல், இழிவான பிராணிகளைத் தேடித்தேடி உண்ணும் முறைமை போன்றது ஆகும்.

இதனால், உயிரின் உலகப்பற்றே, அருளை அறிய முடியாமைக்குக் காரணம் என்பது பெறப்பட்டது.

ஆன்மா அருளை அறியவில்லை

35. அணுகு துணைஅறியா ஆற்றேனில் ஐந்தின்
உணர்வை உணராது உயிர்.

தெளிவுரை:

தனக்குப் பின்னால் சமீபத்திலேயே, துணையாக வருபவனை அறியாத வழிப்போக்கனைப் போலவும்,

தம்முடைய காட்சிக்குத், துணையாக நிற்கும் ஆன்மாவை அறியாத ஐம்பொறிகளைப் போலவும்,

தனக்குத் துணையாக நிற்கும் ஞானமாகிய அருளை, ஆன்மா உணர்வதில்லை.

இறைவன், உயிர்களுக்குத் தோன்றாத் துணையாகவும், வாழ் முதலாகவும் உள்ள அருமையை உயிர்கள் அறியவில்லை என்பதை இரண்டு எடுத்துக் காட்டுக்களால், இக்குறள் வெண்பா தெளிவுபடுத்துகின்றது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உயிர்க்கு ஆதாரம் அருளே

36. தரையை அறியாது தாமே திரிவார்
புரையை உணரா புவி.

தெளிவுரை:

பூமியைத் தமக்கு ஆதாரம் என்று உணராமல், தாமே தமக்கு ஆதாரம் ஆனாற்போலப் போக்குவரவு செய்பவர்களுடைய அறிவீனத்தை ஆன்மாக்கள் அறியமாட்டா.

புரைய – போல என்னும் பாடம் உள்ளது.

புவி – உயிர்கள் மேல் நின்றது.

மற்றுமோர் உரை வருமாறு:

பூமியைத் தமக்கு ஆதாரம் என்று அறியாமல், தாமே தமக்கு ஆதாரமாகப் போக்குவரவு செய்வாரைப் போல, அருளினைத் தமக்கு ஆதாரம் என்று உயிர்கள் அறியமாட்டா.

உயிர்களின் அறிவீனமே அருளை அறியமாட்டாமைக்குக் காரணம் என்பது கருத்து.

அருளை நாடுபவன் எளிதில் அறிவன்

37. மலைகெடுத்தோர், மண் கெடுத்தோர், வான்கெடுத்தோர், ஞானம்
தலைகெடுத்தோர் தற்கேடர் தாம்.

தெளிவுரை:

மலையின்மேல் நின்றுகொண்டு மலையைத் தேடுபவரும், நிலத்திலே நிலத்தைத் தேடுபவரும் தாம் உலாவும் இடமாகிய ஆகாயத்தில் நின்று ஆகாயத்தைத் தேடுவோரும், ஞானம் ஆகிய அருளிலே தங்கி நின்று அருளைத் தேடுவோரும், தம்மைக் காணுமல் தம்மைத் தேடும் அறிவிலிகளை ஒப்பர்.

கெடுத்தோர் – இழந்தோர்; இழந்தவர் இழந்ததையே தேடுவர்; ஆதலால், கெடுத்தோர் தேடுவோர் மேல் நின்றது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நமது சரீரம், ஓர் அரிய தொழிற்சாலை. இதை நமக்குத் தந்து, இது தங்குதற்கு இந்நிலத்தைத் தந்து, நாம் உலாவுவதற்கு ஆகாயத்தைத் தந்து நமக்கு உதவியுள்ள இறையருளை நாம் தேடிப்போய் அறியத் தேவை இல்லை. அஃது இங்கேயே உள்ளது.

இறை அருள் எங்கும் உள்ளது

38. வெள்ளத்துள் நாவற்றி எங்கும் விடிந்துஇருளாம்
கள்ளத்து இறைவர் கடன்.

தெளிவுரை:

எங்கும் நிறைந்து நிற்கும் அருளோடு நாம் கலந்து இருந்தாலும் அதனால் வரும் பேரின்பத்தை நம்மால் அனுபவிக்க இயலவில்லை. பொய்வழியில் தலைமை ஏற்று நிற்கும் நமது தன்மையே, இத்தகு இயலாமைக்குக் காரணம்.

இஃது எதுபோன்று உள்ளது என்றால், நிறைந்த நல்ல நீரில் நின்றும், அதைப் பருகாமல் நா வரண்டு நிற்பதையும், எல்லா இடங்களிலும் இருள் நீங்கி விடிந்த பின்பும், கண்ணைப் பயன்படுத்தாது, தடுமாறி நிற்பதையும் போன்றது ஆகும்.

கடன் – தன்மை.

கள்ளத் தலைவர் – வஞ்சத் தலைமையுடைய ஆன்மா. வஞ்சத் தலைமையாவது, தான் ஒன்றிற்கும் கருத்தாவாக இல்லாதிருந்தும், 'யான் – எனது' என்று அகங்கரித்து திரிதல்.

அருளை அறியும் வழி

39. பரப்பு அமைந்து கேள்மின்; இது பால்கலன்மேல் பூனை
கரப்புஅருந்த நாடும் கடன்.

தெளிவுரை:

ஞான நூல்களைக் கேட்கும்போது பரபரப்பு இல்லாமல், நிறைந்த ஊக்கத்தோடும் நினைவாற்றலோடும் கேட்கவேண்டும். அவ்வாறு கேட்காமல், வேறு சிந்தனைகளில், மனதைத் திரியவிட்டால், பாடங்கள் மாறுபட்டு விளங்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மன ஒடுக்கம் இல்லாமல் பாடம் கேட்பது, உறியில் உள்ள பால் குடத்தின் மேலே நிற்கும் பூனே, பாலில் கவனத்தைச் செலுத்தாமல் கரப்பான் பூச்சியைத் தின்னுவதற்காகப் பால் குடத்தில் நின்றும் பாய்ந்து ஓடும் தன்மையைப் போன்றதாகும்.

திருவருளை அறியாதார் சிறுமை

40. இற்றை வரை,இயைந்தும் ஏதும் பழக்கம்இல்லா
வெற்றுயிர்க்கு வீடு மிகை.

தெளிவுரை:

இவ்வளவு காலமாகத் திருவருளோடு கலந்து நின்றபோதிலும், அதனைச் சற்றேனும் உணரமாட்டாத அறிவில்லாத ஆன்மாவுக்கு வீடு பெறுதற்குத் தகுதி இல்லை.

ஆன்மா அருளை அறியாமல் இருப்பதற்குக் காரணம், ஆன்மாவில் உள்ள ஆணவ காரியமாகிய அஞ்ஞானமே யாகும். அந்த அஞ்ஞானத்தை ஆன்மாவினின்று நீக்கும் பொருட்டே, அருள் எங்கும் நிறைந்து நின்று, ஆன்மாவுக்கு உதவுகின்றது.

அவ்வுதவியை உணர்ந்து, அருளைப் பெறுதற்கு முயற்சி செய்ய வேண்டுவது, ஆன்மாவின் கடமையாகும். இவ்வுண்மையை அறியாமல் இருப்பவர்கள் பரிதாபத்திற்குரியவர் ஆவர்.

ஐந்தாம் அதிகாரம் – அருள் உருநிலை

அஃதாவது ஞானவடிவாகிய குருவினது தன்மை.

'குரு' என்பவர், கு + ரு = பாசத்தை நீக்குபவர்.

குருவடிவாய் வருவது திருவருள்

41. அறியாமை உள்நின்று அளித்ததே, காணும்
குறி ஆகி நீங்காத கோ.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

கண்ணால் காணப்படாமல், ஆன்மாக்களில் நின்று, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் என்னும் நான்கு தொழில்களையும் செய்து, ஆன்மாக்களைக் காத்து வந்த அதுவே,

எஞ்சியதாகிய அருளையும் செய்வதற்கு, காணக்கூடிய குருவடிவைக் கொண்டுவரும்.

பெத்த நிலையிலும் முத்திநிலையிலும், ஆன்மாவை விட்டு நீங்காத திருவருள் ஆகும்.

பெத்தநிலை – பிறப்பு நிலை.

ஆணவத்தைப் போக்கத்தக்கது அருளே

42. அகத்துஉறு நோய்க்கு உள்ளினர் அன்றி அதனைச்
சகத்தவரும் கண்பரோ தான்.

தெளிவுரை:

ஒரு வீட்டில் இருப்பவனுக்கு வந்த பிணியை, அந்த வீட்டில் உள்ளவர்கள் அறிவார்களேயல்லாமல், அந்த வீட்டிற்கு வெகு தூரத்தில் உள்ளவர்கள் அந்த நோயை அறிவார்களா? அறிய மாட்டார்கள்.

அதுபோல, ஆன்மாவில் உள்ள ஆணவம் ஆகிய நோயை, ஆன்மாவோடு கலந்து நிற்கும் அருள் அறிவதன்றி, வேறொன்றும் அறிய மாட்டாது.

திருவருள் குருவாக வந்து போக்கினாலன்றி, ஆணவமாகிய வியாதி, வேறு வழியாகத் தீராது என்பது இக்குறள் வெண்பாவின் கருத்து.

குருவை, சீடனன்றிப் பிறர் அறியார்

43. அருளா வகையால் அருள்புரிய வந்த
பொருள்ஆர் அறிவார் புவி.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் என்னும் நான்கினையும் மறைந்து நின்று, செய்தது போலவே, மானுட வடிவத்தினாலே தன்னை மறைத்து, 'அருளல்' என்னும் தொழிலைச் செய்ய வந்த – குரு வடிவத்தை பக்குவம் வாய்ந்த மாணவனேயன்றிப் பூவுலகில் வேறு யார் அறியத்தக்கவர்? வேறெவரும் இலர்.

" பொருளா அறியா" என்றும் பாடம் உண்டு. இதன் பொருள், "மானுட வடிவு என்னும் சட்டையால் தன்னை மறைத்துக் கொண்டு வந்த உண்மைப் பொருளே இக்குருவடிவு என்பதை, உலகு அறியமாட்டாது" என்பதாகும்.

பக்குவமற்றவர் அறியாமைக்குக் காரணம்

44. பொய்இருண்ட சிந்தைப் பொறியிலார், போதமாம்
மெய்இரண்டும் காணார் மிக.

தெளிவுரை:

நிலையில்லாததாகிய உலக இன்பத்திலேயே கருத்து உடையவராய், ஆணவமலத்தினால் மறைக்கப்பட்ட அறிவினை உடையவராய், ஞானம் ஆகிய ஒளியினைப் பெறாதவர்கள்,

அறிவுமயமாகிய அருளையும், அவ்வருள் அதிட்டித்து நிற்கும் குருவடிவத்தையும் சிறிதும் அறியமாட்டார்கள்.

அருள்கொண்ட மனித வடிவை அறியமாட்டாதார், அருளின் இயற்கையான அகண்ட ஞான வடிவையும் உணரமாட்டார்.

அகண்ட – எல்லை இல்லாத, அருள்கொண்ட மனித வடிவு – நாம் காணும் பொருட்டுத் திருவருளே கொண்ட மனித வடிவு. அதிட்டித்தல் – நிலைக்களமாகக் கொண்டு செலுத்துதல்.

சகலருக்குக் குருவாய் வருவதன் நோக்கம்

45. பார்வைஎன மாக்களைமுன் பற்றிப் பிடித்தற்காம்
போர்வைஎனக் காணார் புவி.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

அந்த அந்த இனத்துப் பழக்கப்பட்ட விலங்குகளின் துணைக் கொண்டு, அந்த அந்த விலங்குகளைப் பிடிப்பது போல,

மனித உருவமாகிய குருவடிவத்தைத் திருவருள் எடுப்பது, நேர்நின்று மனிதரை வசப்படுத்தி ஆட்கொள்வதற்கே ஆகும்.

பக்குவம் இல்லாதவர்கள், அஃது அருள் போர்த்துக் கொண்ட குருவடிவம் என்பதை அறியமாட்டார்கள்.

புவி – புவியில் உள்ள ஆன்மாக்கள்; ஆகுபெயராய் மக்கள் உயிர்மேல் நின்றது.

சகலராகிய நாம், தெய்வ வடிவைக் கண்டு, அஞ்சிவிடாமலிருக்கும் பொருட்டு மானுடச் சட்டைதாங்கி, இறைவன் குருவடிவில் வருகிறுன். மக்கள் எளிதாகப் பற்றுவதற்கு மானிட வடிவே ஏற்றதாகும்.

குரு, சாத்திர தீட்சைக்கு இன்றியமையாதவர்

46. எமக்குஎன்? எவனுக்கு எவைதெரியும்? அவ்வத்
தமக்கு, அவனை வேண்டத் தவிர்.

தெளிவுரை:

குருவிஞல் எமக்கு என்ன பயன் என்று நீ கேட்பாயாஞல், அதற்கு பதில் வருமாறு காண்க.

ஞானநூற் பொருள்கள் எவனுக்கு உள்ளபடி தெரியுமோ, அந்நூற் பொருள்கள், அவனைத் தமக்குக் குருவாக வேண்டிட நிற்றலால், குருவின் தேவையை நீ உணர்வாய். ஆதலால், 'எமக்கு என்?' என்னும் கேள்வியை நீ விடுவாயாக.

அஃதாவது, ஞான நூல்களை ஞாஞசிரியன் அல்லாமல் கற்கும் போது, அவற்றின் பொருள் மாறுபாடாகத் தோன்றும்; அல்லது பொருளே தோன்ருமல் நிற்கும். அவற்றின் உள்ள உண்மைப் பொருளை நமக்கு உள்ளவாறு உணர்த்துதற்கு, ஞாஞசிரியர் இன்றியமையாதவர் என்பது கருத்து.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நயன தீட்சை

**47. விடம்,நகுலம் மேவினும்மெய்ப் பாவகனின் மீளும்
கடனில்இருள் போவதுஎவன் கண்.**

தெளிவுரை:

ஒருவன் விஷம் தீண்டப்பெற்ருல், அந்த விஷம் கீரி நேரே வந்து நின்ருலும் நீங்காது; கீரியாகத் தன்னைப் பாவிக்கும் மாந்திரிகனுல் நீங்கும். இவ்வாறே, திருவருள் நேரே நின்று மலங்களைப் போக்காது; தான் அதிட்டித்தற்கு ஒரு குரு வடிவத்தைக் கொண்டு, பார்வையாலும், பாவனையாலும், ஆணவத்தை நீக்கும். எனவே, மலத்தை நீக்குவது குருவின் நயன தீட்சையே ஆகும்.

குரு, தன்னைச் சிவமாகப் பாவித்துத் தன்னைச் சிவவசப்படுத்தியதனுல், அவருடைய பார்வையில் இருக்கும் மந்திரசத்தியினுல், சிஷ்யனிடம் உள்ள விஷமாகிய ஆணவவலி தடைப்படும்.

நயனதீட்சை – கண்ணினுல் சிஷ்யனின் பாசத்தைக் கெடுத்து, மோட்சத்தைக் கொடுத்தல்.

மூவகை ஆன்மாக்களுக்கும் அருள் செய்யும் முறை

**48. அகலத்து அரும்அருளை ஆக்கும்; வினைநீக்கும்
சகலர்க்கு வந்துஅருளும் தான்.**

தெளிவுரை:

விஞ்ஞானகலரில் பக்குவம் உடையவர்க்குச் சிவபெருமான் அவர்களது அறிவில் நின்று, அருள்செய்து, மலத்தை நீக்குவார். பிரளயாகலரில் பக்குவம் வாய்ந்தவருக்கு, அவர்களைப் போல முன்னிலையில் நின்று, ஆணவத்தோடு கன்மத்தையும் நீக்குவார், சகலரில் பக்குவம் வாய்க்கப் பெற்றவர்க்குக் குருவடிவாய் வந்து, மும்மலங்களையும் நீக்கி அருள்வார்.

அகலர் – கலை நீங்கின ஆன்மா.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிவபெருமானே குரு ஆதல் வேண்டும்

49. ஆர்அறிவார் எல்லாம் அகன்ற நெறியருளும்
பேரறிவாளன் வாராத பின்.

தெளிவுரை:

சொற்பிரபஞ்சத்தில் உள்ள மந்திரம் முதல் பொருட் பிரபஞ்சத்தில் உள்ள கலை ஈறாகிய, ஆறு அத்துவாக்களையும் கடந்த வீட்டு நெறியை வெளிப்படுத்தி அருளும் பேரறிவினராகிய சிவபெருமானே, குருமூர்த்தம் கொண்டு வராவிட்டால், வீட்டுநெறியை அறிய வல்லார் யார்? எவரும் இலர்.

ஆறு அத்துவா வருமாறு:

மந்திரம், பதம், வன்னம்	–	சொற்பிரபஞ்சம் மூன்று.
தத்துவம்,புவனம், கலை	–	பொருட்பிரபஞ்சம் மூன்று.
ஆக ஆறு, அத்துவா	–	வழி.

முப்பத்தாறு தத்துவங்களையும் அவற்றைச் சார்ந்த அத்துவாக்களையும் கடந்தே முத்தி அடையவேண்டும். ஆதலால், அவைகளைக் கடந்த சிவபெருமான் ஒருவனே நமக்கு முத்தியை வழங்க வல்லவன் என்பது கருத்து.

சிவபெருமானே முத்தி தருவான் என்றற்கு எடுத்துக்காட்டு

50. ஞானம் இவன்ஒழிய நண்ணியிடும், நற்கல்அனல்
பானு ஒழியப் படின்.

தெளிவுரை:

சூரிய ஒளி இல்லாமல் சூரியகாந்தக் கல்லில் அக்கினி தோன்றுது. அதுபோல அருட்குரு இன்றி, ஆன்மாவில் ஞானமும் தோன்றுது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சூரிய ஒளி ஒன்றினுலேயே, சூரிய காந்தக் கல்லில் அக்கினிதோன்றும்; அவ்வாறே சிவபெருமானின் திருவருள் வடிவாகிய குருவினுல் மட்டுமே, ஆன்மாவில் ஞானம் தோன்றும் என்பது கருத்து.

பானு – சூரியன்; நற்கல் – சூரியகாந்தக்கல்.

சூரியன் சிவத்துக்கும், சூரியனது ஒளி குருவடிவாய் வரும் திருவருளுக்கும், சூரியகாந்தக்கல் பக்குவமுள்ள ஆன்மாவுக்கும், அக்கினி ஞானத்துக்கும் உவமை ஆயின.

ஆரும் அதிகாரம் – அறியும் நெறி

அருள் உருவாகிய குருவினிடம் உண்மைப் பொருளைக் கேட்டு, உணரும் முறைமை.

இருவினை ஒப்பும் சத்திநிபாதமும்

51. நீடும் இருவினைகள் நேராக நேர் ஆதல்,
கூடும்இறை சத்தி கொளல்.

தெளிவுரை:

வளர்ந்து வருகின்ற நல்வினை, தீவினை ஆகிய இருவினைகளும், விலக்கப்பட வேண்டிய முறைமையால், ஒத்த தன்மை உடையவைகள் என்ற எண்ணம், ஆன்மாவுக்கு உண்டாகும்போது, சிவபெருமானுடைய அருள் ஆன்மாவில் பதியும்.

'ஒத்ததன்மை' யாவது, நல்வினைப் பயனுகிய இன்பத்தை விரும்புதலும் இன்றித், தீவினைப் பயனுகிய துன்பத்தை வெறுத்தலுமின்றி இருவினைப் பயன்களையும் சமமாகக் கருதுவது ஆகும். இஃதே, 'இருவினை ஒப்பு' எனப்படும்.

சத்தி – திருவருளாற்றல்; நிபாதம் – வீழ்தல்;

நீ – ஏற்றமாக. 'சத்தி நிபாதம்', திருவருளாற்றல் ஆகிய ஒளி ஆன்மாவில் வீழ்ந்து பதிதல் ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆறு பொருள்கள் அநாதி

52. ஏகன் அனேகன் இருள், கருமம், மாயைஇரண்டு
ஆகஇவை ஆறு,ஆதி இல்.

தெளிவுரை:

1. ஒருவர் ஆகிய கடவுள், 2. அளவில்லாதனவாகிய ஆன்மாக்கள். 3. ஆணவமலம், 4. கன்மமலம், 5. சுத்தமாயை 6. அசுத்தமாயை என்பனவாகிய இந்த ஆறு பொருள்களும் அநாதியான பொருள்கள்.

மாயை இரண்டு; இரண்டும் அநாதி எனக் கூறியதற்குக் காரணம் வருமாறு:

சுத்தமாயை, அநாதியிலிருந்தே, 'சகலர்' ஆகிய நமக்குத் தநு, காரணமாக வருவதில்லை; விஞ்ஞானகலர் வகை ஆன்மாக்களுக்கு மட்டுமே, சுத்தமாயை தநு காரணமாக வரும். எனவே, சுத்தமாயையினை 'ஒரு மாயை' ஆகவும், நமக்கு அநாதியிலிருந்தே பயன்படும் அசுத்தமாயையினை 'மற்றொரு மாயை' ஆகவும் வகுத்து இரண்டாக ஓதினர்.

அநாதியே பயன்படும் வகையை நோக்கி, அவ்வாறு இரண்டாகச் சொன்னர்; என்றாலும், மாயையின் தன்மையை நோக்க, மாயை பொருளால் ஒன்றே ஆகும்.

மலகன்மங்கள் விரவாத மாயையின் பகுதி, 'சுத்தமாயை' எனப்படும்; மலகன்மங்கள் விரவிய அதன் பகுதி, 'அசுத்தமாயை' எனப்படும்.

ஆறு பொருள்களுக்கும் உள்ள தொடர்பு

53. செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பவனும்
உய்வான் உளன்என்று உணர்.

தெளிவுரை:

கருமங்களைச் செய்யும் புருடனும், செய்யப்படும் நல்வினை — தீவினையும், அவற்றின் பயனாகிய இன்ப துன்பங்களும், அவற்றை அனுபவிக்கப் பண்ணும் கடவுளுடைய திருவருளும் ஆகிய இந்த நான்கையும், தன்னை ஈடேற்றுவதற்காகப் பொருந்துபவன் ஆன்மா என்று அறிவாயாக.

11

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்நான்கு பொருள்களும், ஆன்மாவை மலத்தினின்றும் நீக்கி அதனை ஈடேற்றுவன என்பது கருத்து.

இங்குப் 'புருடன்' என்பது, அசுத்தமாயையில் உள்ள புருட தத்துவம்.

செய்வான்	–	புருடன்.
செய்வினை	–	நல்வினை, தீவினைகள்.
சேர்பயன்	–	தனு கரண புவன போகங்கள் இவற்றால் உண்டாகும் இன்ப துன்பங்கள்.
உய்வான்	–	ஈடேறுகின்ற ஆன்மா.
சேர்ப்பவன்	–	வினைப்பயன்களை ஊட்டும் கடவுள்.
உளன்	–	ஆன்மா.

இவ்வாறு, முன் குறள் வெண்பாவில் கூறிய ஆறு பொருள்களுக்கும் உள்ள தொடர்பு இவ்வெண்பாவில் விளக்கப்பட்டது.

கடவுள், ஆன்மாவுக்கு உயிராய் நிற்றல்

54. ஊன்உயிரால் வாழும் ஒருமைத்தே, ஊனொடுஉயிர்
தான்உணர்வோடு ஒன்றும் தரம்.

தெளிவுரை:

உடம்போடு சேர்ந்த உயிர், ஞானத்தோடு கூடி ஒன்றுபட்டு நிற்கும் தன்மை, உடம்பானது உயிரோடு கூடி வாழும் ஒற்றுமையைப் போல்வது ஆகும்.

உயிர் இல்லையானால், உடம்பு இயங்கமாட்டாமல் கிடப்பது போலக் கடவுள் இல்லையானால், உயிரினால் எதுவுமே செய்ய இயலாது. உடம்போடு உயிர் வேறின்றி நிற்பது போன்று, உயிரோடு கடவுள் வேறின்றி நிற்கின்றார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கடவுள் உயிர்க்கு உயிராய் நின்று நடத்தும் முறைமை

55. தன்நிறமும் பல்நிறமும் தான்ஆம்கல் தன்மைதரும்,
பொன்நிறம்போல் மன்நிறம்இப் பூ.

கொண்டுகூட்டு:

பல் நிறமும் கல் தானும் தன்மை தன் நிறமும் தரும் பொன் நிறம் போல் மன் நிறம் இப் பூ.

தெளிவுரை:

பளிங்கோடு சேர்ந்த பொருள்களின் பலவகையான நிறங்களையும், பளிங்கினுடைய இயல்பான நிறத்தையும், தருவதாகிய பொலிகின்ற சூரியகிரணம் போல்,

மலங்களை முதிர்விக்கும் மறைப்பாற்றலின் ஒளியையும், மலங்கள் நீங்கியபின்பு ஆன்மாவை விளக்கும் அருளாற்றல் ஒளியையும் தந்து, இவற்றுக்கு அப்பால் தன்னுடைய ஒளியோடு நிற்கும் இறைவனின் திருவருள் ஆகிய பேரொளியை உடையது இப்பூவுலகம்.

ஆன்மாவின் பெத்த நிலையிலும் முத்தி நிலையிலும், அந்தந்த ஆன்மாவின் இயல்புக்கு ஏற்றாற்போல், ஆன்மாவை இரட்சித்து, கடவுள் அதனையும் கடந்து நிற்பர் என்பது கருத்து.

மெய்ப்பொருளைக் காணுதற்கு ஞானம் வேண்டும்

56. கண்டுஒல்லை காணும் நெறி கண்,உயிர் நாப்பண்ஒளி
உண்டுஇல்லை அல்லாது ஒளி.

கொண்டுகூட்டு:

கண் உயிர் நாப்பண் உண்டு, கண்டு ஒல்லை காணும் நெறி ஒளி உயிர் நாப்பண் உண்டு, கண்டு ஒல்லை காணும் நெறி, ஒளி அல்லாது இல்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

ஒளியை உடைய கண், பொருளுக்கும் உயிருக்கும் நடுவே உள்ளது. ஆகவே, ஒரு பொருளை உற்றுப் பார்த்து, அதை விரைவில் உணர முடிகிறது.

ஞான ஒளியானது, மெய்ப்பொருளுக்கும் உயிருக்கும் நடுவே உள்ளது. ஆகவே, மெய்ப்பொருளைக் கண்டு அதையும் விரைவில் உணர முடியும்.

கண் இல்லையானல் உயிர் பொருளைக் காண முடியாது; அதுபோலத் திருவருளாகிய ஞான ஒளி இல்லையானல், உயிர் மெய்ப்பொருளைக் காண முடியாது.

நாப்பண் – நடுவே; நெறி – போல எனும் உவம உருபு.

ஆன்மா தன் செயலைச் சிவன் செயலாகக் கருதவேண்டும்

57. புன்செயலின் ஓடும் புலன்செயல்போல் நின்செயலை
மன்செயலது ஆக மதி.

தெளிவுரை:

இழிவான செய்கைகளிலே செல்லும் இந்திரியங்களின் செய்கைகளை, உன்னுடைய செய்கைகளாக, நீ கருதியது போல,

உன்னுடைய செயலை, கடவுளுடைய செயலாற்றலின் வழியே நடப்பதாக எண்ணிக் கொள்.

ஆன்மா, தான் செய்யும் ஒரு செயலைத் தன் செயலாக நினைத்துச் செய்தால், அதில் அகந்தை, மமதை நிகழ்வதால், அஃது ஆகாமிய கன்மம் ஆகும். அதனையே சிவன் செயலாக நினைத்தால், அதில் ஆணவசம்பந்தம் இல்லாமையால் அஃது ஆகாமிய கன்மம் ஆவதில்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஞானத்தைக் காணும் முறைமை

58. ஓராதே, ஒன்றையும்உற்று உன்னுதே; நீமுந்திப்
பாராதே; பார்த்ததனைப் பார்.

தெளிவுரை:

ஞானம் எப்படி இருக்கும். எவ்வாறு வரும் என்று நீ ஆராயாதே; உலகப் பொருள்களைக் குறித்து நினைப்பது போல், அதைப்பற்றிச் சற்றேனும் நினையாதே.

அது வருவதற்கு முன், அஃது என்ன வடிவில் வரும் என்பது குறித்து ஆராய்ச்சி செய்யாதே;

ஞானம் உன்னை வந்து காணும்; அப்போது, அதனைக் கண்டு நீ அனுபவிப்பாய்.

ஞானத்தை, ஞானசக்தி ஒன்றினுலேயே காணமுடியும்; எனவே, நமது ஆற்றலைக் கொண்டு அதனைக் காண முயல்வது பயனற்றது என்பது கருத்து.

ஞானத்தை அணையும் முறைமை

59. களியே மிகுபுல னுக்கருதி ஞான
ஒளியே ஒளியா ஒளி.

தெளிவுரை:

ஞானத்தைப் பெற்ற பின்பு உண்டாகும் பேரானந்தத்தையே, நீ நினைக்கும் பொருளாகக் கொண்டு,

ஞானமாகிய பிரகாசத்தையே, பிரகாசமாகக் கொண்டு, அந்த ஒளிக்குள் புகுந்து, ஒளித்து நிற்பாயாக.

தண்ணீருக்குள் மூழ்கி நிற்பவனுக்கு, வெளியில் உள்ள பொருள்கள் தோன்ருமை போல, ஞானத்துள் மூழ்கி நிற்பவனுக்கு உலகப் பொருள்கள் தோன்றமாட்டா. அவற்ருல் இவன் கவரப்படவும் மாட்டான் என்பது கருத்து.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பிறபொருளைக் கருதாமல் ஞானவசமாய் நிற்றல்

60. கண்டபடி யே,கண்டு காணுமை காணுமை
கொண்டபடி யே,கொண்டு இரு.

தெளிவுரை:

ஞானம் உனக்கு எப்படி வெளிப்பட்டதோ, அப்படியே நீ அதனைக் கண்டு,

அறியாமை வந்து தோன்றுமல், அஃது உன்னை ஏற்றபடியே, நீ அதன் வசப்பட்டு இருப்பாயாக.

காணுமை – (முன்னையது வினைச்சம்) காணுமல்.

'அறியாமை வந்து தோன்றுமல் இரு' என்று சொன்னதற்குக் காரணம், தத்துவங்கள் எல்லாம் நீங்கும் போது, ஆணவமலப் பிடிப்புக்கு உட்பட்டு விட்டால், கேவல நிலை வந்துவிடும். எனவே பிறபொருளைக் கருதாமல், ஞானத்தினை விடாது பற்றி நிற்க வேண்டும் என்பது கருத்து.

ஏழாம் அதிகாரம் – உயிர் விளக்கம்

அஃதாவது, அறியும் நெறியில் கூறியபடி நின்று, ஆன்மாவானது, ஆணவமலம் நீங்கப் பெற்றுத் தன்செயல் இன்றித் திருவருள் வசப்பட்டு நிற்றல், இஃது 'ஆன்ம சுத்தி' எனவும்படும்.

அருளை அடைதற்கு ஏது

61. தூநிழல்,ஆர் தற்குஆரும் சொல்லார்; தொகும்இதுபோல்
தான்அதுவாய் நிற்கும் தரம்.

தெளிவுரை:

வெயிலில் வருந்தியவன், குளிர்ந்த நிழலைச் சேர்வதற்கு, 'அங்கு போ' என்று ஒருவரும் சொல்ல வேண்டியதில்லை; அவனுகவே விரைவாக ஓடிக் குளிர் நிழலைச் சேர்வான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அதுபோலவே, மலங்களினுல் உற்ற துன்பங்களால் வருந்தியவன் அருளைக் கண்டவுடன், தான் அந்த அருளோடு சேர்ந்து நிற்கும் இயல்பைப் பெறுவான்.

தாங்கள் படும் துன்பங்களுக்குக் காரணம் ஆணவமலச் சேட்டைகளால் வரும் உலக ஆசைகளே என்பதை அறியாததாலும்,

அவ்வாசைகளால் ஏற்படும் மலவெப்பத்தை, வெப்பம் என்று உணராமல் இருப்பதாலும்,

உலகில் பெரும்பாலோர் திருவருளைக் காணப் பெறுமல் இருக்கின்றுர்கள்.

இவ்வுண்மையை உணரத் தலைப்பட்டுவிட்டால், திருவருளைத் தேடி அவர்களாகவே செல்வார்கள்; யாரும் அவர்களைத் தூண்ட வேண்டுவதில்லை.

ஆன்மா அருளை அறியும் காலம்

62. தித்திக்கும் பால்தானும் கைக்கும்; திருந்திடும் நாப்
பித்தத்தின் தான்தவிர்ந்த பின்.

தெளிவுரை:

பித்தநோய் உடையவரது நாக்கிற்கு, மதுரமான பாலும் கசப்பாய் இருக்கும்; பித்த நோயிலிருந்து விடுபட்ட பிறகு, அவர்களது நாக்குக்கு, முன்பு கசப்பாக இருந்த பால், தித்திக்கத் தக்கதாகத் திருந்திவிடும்.

அதுபோல, ஆணவநோய் உள்ள காலத்தில் துன்பமாகத் தோன்றிய மறைப்பாற்றல் ஆணவம் நீங்கியபின்பு, ஆன்மாவுக்கு இன்பத்தைத் தரும் அருளாற்றலாக மாறும்.

நாக்கு ஆன்மாவுக்கும், பால் ஆற்றலுக்கும், பித்தநோய் மலத்திற்கும் உவமை ஆயின.

ஆன்மா அருளைத் தானுகக் காணமாட்டாது

63. காண்பான் ஒளி இருளில் காட்டிடவும் தான்கண்ட
வீண்பாவம் எந்நாள் விழும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

ஒளிவடிவாகிய ஞானம், ஆணவ இருளில் ஆன்மா கிடந்து மயங்கும்போது, தன்னைக் காட்டவும், அதனைக் காணும் ஆன்மா, தன் முயற்சியால் அதனைக் கண்டதாக நினைக்கிறது. அந்த நினைப்பால் வீணாக வரும் பாவம், எப்போது தீரும்?

'வீண்பாவம்' என்பது, ஆணவமலத்தின் காரணமாகத் தன்னை மதிக்கும் பெரும் பாவம் தன் முயற்சியால் ஞானம் பெற்றதாகக் கருதுவது 'யானே முதல்' என்னும் 'பசுஞானம்' ஆகும். அது மீளவும் பிறவிக்கே ஏது ஆகும்.

ஆன்மாவுக்குத் திருவருளால்தான், வியாபக ஞானம் ஏற்படும் என்பது கருத்து.

திருவருள் ஆணவத்தை ஒத்திருக்கும் வகை

64. ஒளியும் இருளும் ஒருமைத்துப் பன்மை
தெளிவு தெளியார் செயல்.

தெளிவுரை:

'ஒளி' ஆகிய திருவருளும் 'இருள்' ஆகிய ஆணவமலமும், தன்வகைப் பொருளைக் காட்டி, ஒழிந்ததை மறைக்கும் தன்மையில், ஒத்து இருக்கின்றன.

அவ்விரு பொருள்களுக்கும் உள்ள வேறுபாடு யாது என்றால்,

அருளானது தன்னை அடைந்தோர்க்கு உண்மைப் பொருளைக் காட்டும்; ஆணவமானது அதனை விட்டு நீங்காதார்க்கு பொய்ப் பொருளைக் காட்டும்.

அருள் சிவத்தைக் காட்டி, உலகை மறைக்கும்; ஆணவம் உலகைக் காட்டி, சிவத்தை மறைக்கும்.

திருவருளை அடைந்தோர்க்குக் கடவுள் வெளிப்படுதல் எளிது

65. கிடைக்கத் தகுமோ,நற் கேண்மையார்க்கு அல்லால்,
எடுத்துச் சுமப்பானை இன்று.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

அன்பு நிறைந்த சுற்றத்தவரை உடையவர்களுக்கு அல்லாமல் அவர்களுடைய சுமை எல்லாவற்றையும் எடுத்துச் சுமப்பவன் ஒருவனை, இப்போது பெற்றுக் கொள்ளுதல் கூடுமோ? கூடாது.

அதுபோல, பேரன்பாகிய திருவருளைச் சார்ந்தவர்களுக்கு, அவர்களுடைய வினைகளையும் வினைப்பயன்களையும் சுமப்பவராகிய கடவுள் எளிதில் தோன்றுவார்.

தன்னை அடைந்தாரின் வினைகளையும் வினைப் பயன்களையும் தீர்த்து அருளுவது தலைவனாகிய சிவபெருமானின் கடமையாகும் என்பது கருத்து.

திருவருளைச் சாராதார் கடவுளை அடையார்

66. வஞ்ச முடன்ஒருவன், வைத்த நிதிகவரத்
துஞ்சினனோ போயினனோ சொல்.

தெளிவுரை:

ஒருவன் வைத்திருந்த பொருளை, வேறொருவன் களவாக எடுத்துக்கொண்டு போய்விட்டான். அப்போது அந்தப் பொருளை உடையவன், உறங்கி விட்டானா? அல்லது அந்தப் பொருள் இருந்த இடத்தை விட்டு, வேறெங்கும் போயிருந்ததா? சொல்.

நிதி பேரின்பத்திற்கும், நிதியை உடையவன் திருவருளுக்கும், வஞ்சமுடன் கவர்வோன் திருவருளைச் சாராமல் பேரின்பத்தைப் பேணுவதற்கு முயற்சி செய்வோனுக்கும் உவமைகளாகும்.

திருவருளின் வழியில் நின்று ஒழுகினாலன்றி வேறு எந்த வழியாலும், பேரின்பத்தைப் பெற முடியாது என்பது கருத்து.

அருள் ஆன்மாவை வசப்படுத்துதல்

67. தனக்கு நிழல்இன்று ஒளிகவரும் தம்பம்
எனக்கவர நில்லாது இருள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

சூரியன் உச்சியில் நிற்கும்போது, பளிங்குத் தூண் தனக்கென ஓர் ஒ தோன்றாதபடி, சூரிய ஒளியையே முற்றிலும் கவர்ந்து நிற்கும்.

அதுபோல, ஆன்மா தன்னறிவு தோன்றப்பெறாமல், திருவருளா கவர்ந்து கொள்ளப்படுமானுல், அந்நிலையிலேயே மலவாதனை சிறிது நில்லாது போகும்.

சூரியன் உச்சியில் வரும்போது, தூணின் ஒளி சூரியப்பிரகாசத்தி மறைய, அது முழுவதும் சூரியகிரண மயமாக நிற்பது போல சிவபோத ஆன்மாவை முற்ருகக் கவர்ந்து, தன்னுள்ளே அடக்கும்போது, ஆன்ம சிவமயமாகிறது.

தம்பம் – தூண்.

அருளுக்குப் பின்னே ஆன்மா நிற்றல் அவசியம்

68. உற்கைதரும் பொற்கை உடையவர்போல் உண்மைப்பின்
நிற்க அருள்ஆர் நிலை.

தெளிவுரை:

தழல் – கொள்ளியைப் பிடித்திருக்கும் அழகிய கையை உடையவர்கள், தாம் வேண்டிய பொருளைக் காணும்பொருட்டு, அக்கொள்ளியை முன்னே இட்டுத் தாம் பின்னே நிற்பது போல,

ஒருவர் சிவத்தைக் காண விரும்பினுல் அருளைத் தமக்கு முன் ஆக்கித் தாம் அதன் பின்னே நிற்க வேண்டும்.

திருவருளோடு பொருந்தி நிற்கும் நிலை இஃதே ஆகும்.

தன் அறிவைக் கொண்டு, சிவத்தைக் காண முடியாது என்பது இக்குறள் வெண்பாவின் கருத்து.

உற்கை – தீவட்டி.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆன்மா அருளுக்கு முன்னே நிற்கும்போது சிவத்தைக் காணுமைக்குக் காரணம்

69. ஐம்புலனால் தான்கண்டு அகன்றால் அதுஒழிய
ஐம்புலன்ஆர் தாம்ஆர் அதற்கு.

தெளிவுரை:

மெய், வாய், கண், மூக்கு, செவிகளால் தாம் கண்ட பொருள்களுக்கு, அப்பாற்பட்ட பொருள் ஒன்று உண்டு என்றால், அஃது அருளே அன்றி வேறேதும் இல்லை.

பேரின்பப் பொருளான சிவத்தை அடைவதற்கு ஐம்பொறிகளுக்காவது உயிர்கள் ஆகிய நமக்காவது, இயலாத காரியம்.

அருளை மறந்து அதற்கு முன்னே நிற்கும் போது உயிர்கள் ஐம்புலன்களின் உதவியால் இறைவனை அடைய முடியாமைக்குக் காரணம், சிவபெருமான் பொறி புலன்களைக் கடந்து நிற்பவன் என்பதனாலேயே என்க.

திருவருளின் உதவி இன்றிச் சிவத்தைத் தன் முயற்சியால் அடைந்ததாகக் கூறுவது அநீதி

70. தாமே தரும்அவரைத் தம்வலியி னாற்கருத
லாமே இவன்ஆர் அதற்கு.

தெளிவுரை:

ஒருபொருளை ஒருவர்க்குத் தாமே விரும்பித் தருபவரை, தம்முடைய சாமர்த்தியத்தினால் அவரிடம் அதைப் பெற்றதாக நினைத்தால், அது நீதி ஆகுமா? ஆகாதல்லவா?

அதுபோல, திருவருளானது தானாக விரும்பி ஆன்மாவுக்குப் பேரின்பத்தைக் கொடுக்க, தன்னுடைய திறமையினால் அதைப் பெற்றதாக ஆன்மா நினைத்தல் ஆகாது.

திருவருளால் அன்றி, அப்பேரின்பத்தைப் பெறத்தக்க, உரிமை ஆன்மாவுக்குச் சிறிதேனும் இல்லை என்பதே கருத்து.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எட்டாம் அதிகாரம் – இன்புறு நிலே

ஆன்மசுத்தி அடைந்தபின் பேரானந்தத்தை அடையும் முறைமை, பேரின்பத்தைப் பெறுவோரும் பெருதோரும்

71. இன்புறுவார் துன்பார் இருளின் எழும்சுடரின்
பின்புகுவார் முன்,புகுவார் பின்.

கொண்டுகூட்டு:

இருளின் எழும் சுடரின் பின்புகுவார் இன்புறுவர், முன்புகுவார் பின் துன்பார்.

தெளிவுரை:

ஆணவமலத்தை நீக்கும் பொருட்டு, மேலாக விளங்குகின்ற ஞானத்தை முன் இட்டுத், தாம் பின்னே செல்பவர்கள் பேரின்பத்தை அடைவார்கள்; தாம் முன்னுகவும், அவ்வருள், பின்னுகவும் செல்பவர்கள் துன்பத்தை அடைவார்கள்.

தம்மை மறந்து, திருவருளேயே நினைந்து இருப்பவரே பேரானந்தத்தை அடைவர் என்பது கருத்து.

இன்பத்துக்குச் சிவானுபவம் வேண்டும்

72. இருவர் மடந்தையருக்கு என்பயன்? இன்பு உண்டாம்,
ஒருவன் ஒருத்தி உறின்.

தெளிவுரை:

ஆளப்படும் இயல்பு உடையவளாகிய ஒரு பெண், வேறொ பெண்ணுல் இரட்சிக்கப்படமாட்டாள்; அஃதாவது தேவையான பயனை அடை மாட்டாள். அதுபோல, ஆளப்படுவதாகிய ஆன்மா, பெண் ஆகிய அருளோ சேர்வதனுல் மட்டும் பேரின்பமாகிய பயனை அடையமாட்டாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection, TN

Digitization by eGangotri-South Center

ஒரு பெண், தன்னை ஆளும் தன்மையையுடைய ஆடவனை அடைந்தால், அவனால் இன்பத்தை அடைவாள்; அதுபோல, ஆன்மா சிவமாகிய தன்னுடைய தலைவனைச் சேர்ந்தே பேரின்பத்தை அடையும்.

அருளை ஆள்பவன் சிவன்; எனவே சிவனோடு சேர்வதே பயனுடையதாகும் என்பது கருத்து.

சிவம் இன்பத்தை அனுபவிப்பதில்லை

73. இன்புஅதனை எய்துவார்க்கு ஈயும்; அவர்க்குஉருவம்
இன்பகனம் ஆதலினால் இல்.

தெளிவுரை:

தன்னை அடையும் ஆன்மாக்களுக்குச் சிவபெருமான், பேரின்பத்தைக் கொடுத்தருள்வான். அவனுடைய திருமேனி, குறைவிலா நிறைவுடைய பேரின்பத்தை உடையது; ஆதலினால், ஆன்மாக்களிடமிருந்து அவன் ஆநந்தத்தை அனுபவிப்பதில்லை.

கனம் – நிறைவு.

முன்பு துன்பத்தை அனுபவித்தவர்களே இன்பத்தை அறியவும் அனுபவிக்கவும் தக்கவர்கள். சிவபெருமான் என்றும் துன்பத்தை அநுபவியாதவன் ஆதலின், ஆன்மாக்கள் அவனை வந்து அடைவதால், அவனுக்கு இன்ப அனுபவம் புதியதாக ஏற்படாது என்பது கருத்து.

முத்திநிலை அத்துவிதம்

74. தாடலைபோல் கூடியவை தான்நிகழா வேற்றுஇன்பக்
கூடலை,நீ ஏகம்எனக் கொள்.

தெளிவுரை:

தாள், தலை என்னும் இரண்டு சொற்களும் 'தாடலை' என்னும் ஒரு சொல் ஆவது போல், சிவனும் ஆன்மாவும் சேருவன.

பிரிக்கப்படாத பேரின்பமாகிய அந்தக் கலப்பை, அத்துவிதம் என்று நீ அறிந்துகொள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

'அத்துவிதம்' ஆவது, இரண்டு பொருள்கள், வேறு அற, ஒரு பொருள் போல் நிற்றல்.

'தாடலே' என்னும் சொல், 'தாள்', 'தலே' என்று பிரிக்கப்படக்கூடியது; அதைப்போல் ஆகாமல், சிவமும் ஆன்மாவும் பிரிக்கப்படத் தக்கன அல்ல என்பதைக் காட்டுதற்குத் 'தாடலே' என்ற சொல் வந்தது.

முத்தியில் அத்துவிதமாய் நிற்றற்குக் காரணம்

75. ஒன்றுலும் ஒன்றுது; இரண்டாலும் ஓசைஎழாது,
என்றுல்,ஒன்று அன்று;இரண்டும் இல்.

தெளிவுரை:

கடவுளும் ஆன்மாவும் ஒரே பொருளாக இருக்குமானுல் அவைகள் ஒன்றுக வேண்டியதில்லே. முத்தியில் அவ்விரண்டும் வேறு வேருக நிற்குமானுல், ஆன்மாவுக்குப் பேரின்பம் உண்டாகாது. எனவே, முத்திநிலேயில், அவை இரண்டும், வேறு அற நிற்பதால், ஒரு பொருளும் அல்ல; இரு பொருளும் அல்ல.

இக்குறள் வெண்பா, முத்திநிலேயை ஒருவாறு விளக்குகின்றது. இதனேக் குறித்துச் சிறிது விளக்கம் தேவைப்படுவதால், இங்கு சில வருமாறு:

ஆன்மா பெத்தநிலேயில், ஆணவத்தோடு அத்துவிதமாகி, அதன் வசப்பட்டு, அதுவாய் நிற்றலால், கடவுளின் கலப்பால் வரும் பயன் ஆகிய அத்துவித முத்தி இன்பத்தை அனுபவிப்பதில்லே.

முத்தி நிலேயில் ஆன்மா சிவத்தில் கலக்கும்போது, சிவத்தின் வேறு அற நின்று, சிவத்திற்கு அடிமையாகச் சிவமே ஆகி நிற்கும்.

பெத்தநிலேயில், ஆணவத்தோடு ஆன்மா அத்துவிதமாக நின்றுலும், பொருள் வகையால் ஆணவம் வேறு – ஆன்மா வேறுதாம்.

அவ்வாறே, முத்திநிலேயில், சிவத்தோடு ஆன்மா அத்துவிதமாக நின்றுலும், பொருள்வகையால், சிவம்வேறு – ஆன்மா வேறுதாம்.

பெத்தத்தில் ஆன்மா, ஆணவத்தைச் சார்ந்து ஆணவமயமாய் நின்றது; முத்தியில் ஆன்மா, சிவத்தைச் சார்ந்து, சிவமயமாய் நிற்கிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முத்தியில் சார்ச்சிச் சிறப்பால், சிவத்தைச் சார்ந்து நிற்பதால், ஆன்மாவுக்கு மல மறைப்பு நிகழவில்லை. எனவே, முத்தியில் சிவத்தோடுள்ள அத்துவித நிலை ஆன்மாவுக்கு அவசியம் ஆயிற்று.

இனிப் பிறவி எடாதார் வகை

76. உற்றாரும் பெற்றாரும் ஓவாது உரைஒழியப்
பற்றாரும் அற்றார் பவம்.

தெளிவுரை:

பரமுத்தியை அடைந்தோரும், அபர முத்தியைப் பெறுவதற்குக் காரணமாகிய சீவசமாதியை அடைந்தோரும், இடையறாத மௌன சமாதியை அடையாமல்,

கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்னும் ஞானநிலைகளை அடைந்தோரும் பிறவிப்பிணி அற்றவர் ஆவார்.

சிவாகமங்களில் சொல்லப்பட்ட நெறிமுறைகளைக் கடைப்பிடித்து ஒழுகுபவர்களுக்கு மறுபிறப்பு இல்லை என்பது கருத்து.

சமாதி நிலை ஆகும் முறைமை

77. பேய், ஒன்றும் தன்மை பிறக்கும் அளவுமே;
நீ,ஒன்றும் செய்யாமல் நில்.

தெளிவுரை:

ஒருவன், பேயால் பிடிக்கப்பட்டால், அவனுக்குத் தன் அறிவும் தன் செயலும் இல்லை; பேயினுடைய அறிவும் தொழிலுமே, அவனுடைய அறிவும் தொழிலும் ஆகிப் பேயாய் நிற்பான்.

அதுபோல, சிவத்தினால் ஆட்கொள்ளப்பட்டுச் சிவானுபூதி பெற்றவன், தன் அறிவும் தன் செயலும் இன்றிச் சிவஞானமும் சிவத்தொழிலும் பெற்றுச் சிவமாய் நிற்பான்.

இதுவே சீவசமாதி முறையாகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எனவே, பேய் பிடித்தவனுடைய தன்மை, உனக்கு உண்டாகும் வரை நீ ஒன்றுஞ் செய்யாமல், அசைவற்று நிற்பாயாக – என்று இக்குறள் வெண்பா கூறுகிறது.

சமய ஆசாரங்கள் நீங்கும் முறைமை

78. ஒண்பொருட்கண் உற்றார்க்கு உறுபயனே அல்லாது
கண்படுப்போர் கைப்பொருள்போல் காண்.

தெளிவுரை:

மெய்ப்பொருளாகிய ஞானத்தை அடைந்தவர்களுக்கு, முன்பு கடைப்பிடித்த சரியை, கிரியை, யோகங்களால் உண்டாகும் பயன் பேரின்பமே ஆகும். அஃதன்றி, சமய நடைமுறைகள் இன்றியமையாதன அல்ல.

உறங்குபவரது கையில் இருக்கும் பொருள், தானே நழுவுவது போல சமய நடைமுறைகள் அவர்களிடமிருந்து, தாமே நழுவிவிடும்.

ஆணவமுனைப்புக் காரணமாக, ஞானிகள் எனத் தம்மைக் கூறிக்கொள்ளும் சிலர் தமக்குச் சமயாசாரங்கள் தேவை இல்லை என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு இக்குறள் வெண்பாக்கருத்து பொருந்தாது.

முத்தியின்பம் இன்னதன்மையது எனக் கூறமுடியாது

79. மூன்றாய தன்மை, அவர்தம்மின் மிகமுயங்கித்
தோன்றாத இன்பம்,அதன் சொல்.

தெளிவுரை:

'முத்தி இன்பம்' என்பது, சிவமும் ஆன்மாவும் சிறிதும் பிரிப்பின்றி ஒன்றாய் நிற்கும் கலப்பினால், காண்பவன், காட்சி, காட்சிப்பொருள் என்ற மூவகைப்பட்ட தன்மையும், வேறாகத் தோன்றாத பேரின்பம் ஆகும். அத்தகைய இன்பத்தின் அதிசயம் சொல்லத் தக்கதன்று.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒருவன், ஒரு மாட்டைக் காணும்போது, காண்பவன் – அவன், காட்சிப்பொருள் – மாடு, அது மாடு என அறிதல் – காட்சி. இம் மூன்று பொருள்களும் வேறுவேறு பொருள்கள் ஆகும்.

முத்தி நிலையில், ஆன்மா சிவத்தைக் காணும்போது, காண்பவன் ஆகிய ஆன்மாவும் சிவம்; காட்சிப் பொருளும் சிவம்; காட்சியாகிய சிவஞானமும் சிவம்; என மூன்றையும் ஒன்றாகக் காணும். எனவே, காண்பான், காட்சிப்பொருள், காட்சி ஆகிய மூன்று தன்மையும் வேறாக நிற்கும் நிலை, பரமுத்தி அன்று. இம்மூன்று பொருள்களும் முறையே ஞாதுரு, ஞேயம், ஞானம் எனவும் சொல்லப்படும்.

பேரின்பம், பேரன்பினால் பெறத்தக்கது

80. இன்பில் இனிதுஎன்றல் இன்புஉண்டேல் இன்றுஉண்டாம்
அன்பு நிலையே அது.

தெளிவுரை:

இன்பங்களில் எல்லாம் இனிது என்று சொல்லப்படுவதாகிய முத்தியின்பம், ஒருவருக்குப் பேரன்பு உள்ளதாயின், இப்போதே பெறப்படும். அதற்குக் காரணம், அத்தகு பேரன்பு, பேரின்பத்தைத் தனக்கு நிலையாக உடையது என்பதே ஆகும்.

'பேரன்பு' என்பது, யான் எனது என்னும் செருக்கற்றுச் சிவபெருமான் திருவடியினையே பற்றி நிற்பது ஒன்றே ஆகும்.

'பேரின்பம்' என்பது, உலக இன்பங்களை எல்லாம், துன்பம் எனத் தோற்றுவிக்கும் இன்பம்; சிவபெருமான் ஒருவனாலன்றி, வேறெவராலும் வழங்கப்பட முடியாத ஓர் இன்பம்.

ஒன்பதாம் அதிகாரம்
ஐந்தெழுத்து அருள் நிலை

அஃதாவது, ஐந்தெழுத்தாகிய திருவருளின் இயல்பு. சமாதி கூடினோரது வாசனாமலத் தாக்கத்தைத் திருவைந்தெழுத்துத் தீர்த்தலினால், 'இன்புறுநிலை' யின் பின் இது விளக்கப்படுகிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வேதாகமங்கள் ஐந்தெழுத்தில் அடக்கம்

81. அருள்நூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின்
பொருள்நூல் தெரியப் புகும்.

தெளிவுரை:

சைவ ஆகமங்களும் வேதங்களும், உபாகமம் முதலிய மற்றைய ஞான நூல்களும், ஐந்தெழுத்தின் பொருளை உணர்த்தும் நூல்கள் ஆகும்.

இத்தகு ஐந்தெழுத்தை ஆராய்ந்து பார்த்தால், வேதாகமங்கள் அனைத்தும், அதன்கண் அடங்கியுள்ளன என்பது இனிதே புலப்படும்.

பிரணவத்துள் அடங்கும் பொருள்கள்

82. இறை, சக்தி, பாசம், எழில்மாயை ஆவி
உறநிற்கும் ஓங்காரத் துள்.

தெளிவுரை:

1. சிவம், 2. திருவருள், 3. மலம், 4. ஆன்மாவின் சிற்சத்தியை இறுதியில் பூரணமாக விளக்கும் சிறப்பினை உடைய திரோதான சத்தி, 5. ஆன்மா ஆகிய ஐந்து பொருள்களும் பிரணவத்தின் உள்ளே பொருந்தி நிற்கின்றன.

'எழில் மாயை' என்பது, திரோதான சத்தியாகிய மறைப்பாற்றலைக் குறித்து நின்றது. அவ்வாறு கூறுவதற்குக் காரணம் வருமாறு:

மலம் பரிபாகப்படும்போது, திரோதான சத்தியானது, அருட்சத்தி என்னும் பெயரோடு ஆன்மாவில் பதிந்து, அதனைச் சிவபெருமானுடைய திருவடிக்குச் செலுத்தி, ஆன்மாவிற்கு முற்றுணர்வைக் கொடுக்கும்.

எனவே, திரோதான சத்தி 'எழில்மாயை' எனப்பட்டது.

ஐந்தெழுத்துள் அடங்கும் பொருள்கள்

83. ஊன நடனம் ஒருபால்; ஒருபால்ஆம்
ஞானநடம்; தான்நடுவே நாடு.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

ஆன்மாக்களுக்குப் பிறப்பை விளைக்கும் திரோதானமும் மலமும், ஒரு பக்கத்தில் உள்ளன; மோட்சத்தை உதவும் சிவமும் சத்தியும் ஒரு பக்கத்தில் உள்ளன; ஆன்மாவாகிய தான் நடுவில் உள்ளது. ஐந்தெழுத்தில் இவைகள் இருப்பதைக் காண்பாயாக.

சிகாராதி பஞ்சாட்சரத்தில்,

'சி' எழுத்து – சிவத்தையும், 'வ' எழுத்து – அருட்சத்தியையும், 'ய' எழுத்து – ஆன்மாவையும், 'ந' எழுத்து – திரோதான சத்தியையும், 'ம' எழுத்து – மலத்தையும் குறிக்கின்றன.

சிவ – ஞான நடனத்தையும், நம – ஊன நடனத்தையும் குறிக்கின்றன.

ஆன்மாவின் பெத்த நிலையும், முத்தி நிலையும் ஐந்தெழுத்தில் அடங்குதல்

84. விரியமந மேவி,யவ்வை மீளவிடா; சித்தம்
பெரியவினை தீரப் பெறும்.

கொண்டு கூட்டு:

'ந' மேவி, 'ம' விரிய, 'ய' வ்வை மீளவிடா தம் பெரிய வினை தீர, 'சி' பெறும்.

தெளிவுரை:

திரோதான சத்தி மலத்தைச் சார, மலம் முயற்சி செய்ய, ஆன்மாவை அவ்விரண்டும் பிறவிகளில் அழுத்தும்; இது பெத்த நிலை.

ஆன்மாக்கள் தம்முடைய பெரிய பிணிகள் ஆகிய மலங்கள் தீரும் பொருட்டுத் திருவருட் சத்தியின் முயற்சியால், சிவத்தை அடையும், இது முத்தி நிலை.

இவ்வாறு ஆன்மாக்களின் பெத்த நிலையும் முத்தி நிலையும் ஐந்தெழுத்தில் அடங்கி உள்ளன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நகார பஞ்சாக்கரம் உபாயமார்க்கர்க்கு உரியது

85. மாலார் திரோதம் மலம்முதலா மாறுமோ
மேல்ஆசு மீளா விடின்.

தெளிவுரை:

ஆன்மாக்களைப் பிறவிப் பிணியிலே விடுவனவாகிய, திரோதானத்தையும் மலத்தையும் முதலாக வைத்து (நம) ஐந்தெழுத்து ஓதினால், மலம் நீங்குமோ? நீங்காது.

மேலான பொருளாகிய சிவம், ஊன நடனத்தைச் செய்விக்கின்ற இவ்விரு மலங்களின் இடத்தை எடுத்து, அவைகளைக் கீழ்ப்படுத்தி, ஞானநடனம் செய்யாவிட்டால் ஆன்மாக்களுக்கு பிறவிப்பிணி ஒரு போதும் நீங்காது.

மோட்ச ஆசை உடையார் நகாராதி பஞ்சாட்சரம் ஓதலாகாது

86. ஆராதி ஆதாரம்; அந்தோ அதுமீண்டு
பாராது மேல்ஓதும் பற்று.

தெளிவுரை:

உனக்கு ஆதாரமாயிருக்கின்ற சிவத்தை முன்னாக வைத்து, ஐந்தெழுத்தை ஓதி வழிபடு; உபாய மார்க்கத்தில் ஓதிய நகார பஞ்சாட்சரத்தின் இயல்பைத் திரும்பவும் விசாரியாமல், உண்மை மார்க்கத்தில் நிற்கும்போதும், 'ந' கார 'ம' காரங்களை முன்னாக ஓதும் தன்மை, கவலைப்பட வேண்டியதொன்று.

எனவே, ''நமச்சிவாய'' என்று ஓதினால், உலக இன்பங்களில் பற்று அறாது; அதனால் மீண்டும் பிறப்புக்கு உள்ளாக நேரிடும். மோட்சத்தைப் பெற விரும்புபவர்கள், ''சிவாயநம'' என்றே ஓத வேண்டும் என்பது கருத்து.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிகாராதி பஞ்சாட்சரமே மோட்ச ஆசை உடையவருக்கு உரியது

87. சிவம்,முதலே ஆமாறு சேருமேல், தீரும்
பவம்,இதுநீ ஓதும் படி.

தெளிவுரை:

'சி' கார 'வ' காரம் என்னும் இரண்டு எழுத்துக்களும் முதலிலே வரும்படி, உச்சரித்தல் கூடுமானல், பிறவிக்குக் காரணமாகிய மலங்கள் நீங்கும். முத்தியை விரும்பிய நீ, உச்சரிக்கும் முறை இஃதே ஆகும்.

இம்முறையில் செய்யும் அஞ்செழுத்து ஜெபம், ஆணவத்தின் வலியைக் கெடுத்து, ஆன்மாவைக் கடவுளோடு சேர்ப்பதற்கு முக்கிய சாதனம் ஆகும்.

எனவே, வீடுபேற்றில் விருப்பம் உடையவர்கள், 'சிவாயநம' என்ற கருத்து முறையிலேயே பஞ்சாட்சரத்தை ஓத வேண்டும் என்பது கருத்து.

'வ' காரம், ஆன்மாவைச் சிவமாக்குதல்

88. வா,சி அருளி,அதை வாழ்விக்கும் மற்றதுவே
ஆசுஇல் உருவமும்ஆம் அங்கு.

தெளிவுரை:

சிற்சத்தியானது, சிவத்தைக் காட்டி, ஆன்மாவை வீட்டின்பத்தில் இருத்தும்; அந்தத் திருவருளே, ஆன்மாவுக்கு முத்தியில் குற்றமற்ற மேனியாயும் இருக்கும்.

முத்தியில் ஆன்மாவுக்கு, எந்த உடலும் கிடையாது; ஆயினும் அந்நிலையில், ஆன்மாவானது திருவருளையே மேனியாகக் கொண்டு இருக்கும் என்பது இக்குறள் வெண்பாவில் கூறப்பட்டுள்ளது.

முத்தான்மாவைச் சிற்சத்தி, சிவத்தோடு சேர்ப்பதோடு மட்டுமல்லாமல், அவ்வான்மாவுக்கு சிவாநந்தத்தைக் கொடுத்து அதனைச் சிவமாக்கும் என்பது கருத்து.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முத்திநிலையை விளக்கும் ஐந்தெழுத்து

89. ஆசுஇல்ந,வா நாப்பண் அடையாது; அருளிஞல்
வாசியிடை நிற்கை வழக்கு.

தெளிவுரை:

முத்தியடைந்த ஆன்மா, குற்றமற்றதாகிய திரோதானத்துக்கும் சிற்சத்திக்கும் நடுவில், பெத்தான்மாவைப்போல் நில்லாது; திருவருளினுல், சிற்சத்திக்கும் சிவத்திற்கும் இடையில் நிற்பதுவே முறைமையாகும்.

திரோதான எழுத்து 'ந' காரம், சிற்சத்தி எழுத்து 'வ' காரம். இவற்றிற்கு இடையில் 'ய' காரம் இருந்தால்,அது 'சிவயநம' ஆகும். இந்த 'சிவயநம' மோட்சம் பெறும் பொருட்டு நாம் ஓத வேண்டிய அஞ்செழுத்து.

மோட்சம் பெற்ற பிறகு, முத்தியில் இருக்கும் ஆன்மா, சிற்சக்திக்கும் சிவத்திற்கும் இடையில் நிற்கும்போது உள்ள அஞ்செழுத்து; 'சிவயசிவ' என்பதாகும்; இஃது உச்சரிப்பதற்கு அன்று.

சாதனங்களுக்கு உயிராய் உள்ளது திருவருள்

90. எல்லா வகையும் இயம்பும், இவன்அகன்று
நில்லா வகையை நினைந்து.

தெளிவுரை:

ஆன்மா, சிவசத்தியினின்றும் ஒரு காலமும் நீங்கி நில்லாத தன்மையை அறிந்து, அது முத்தி அடைவதற்கு ஏதுவாகிய வழிகள் எல்லாவற்றையும், வேதாகமங்கள் சொல்கின்றன.

ஆற்றங்கரையிலிருந்து விளைநிலத்திற்கு வாய்க்கால் வெட்டிஞல் மட்டும் பயிர் உண்டாகிவிடாது. அந்த வாய்க்காலில் தண்ணீர் பாய்ந்தால்தான், பயிர் உண்டாகும்.

அதுபோல, வேதாகமங்களில் சொல்லப்பட்ட நெறிகளின்படி, சாதகன் வாழ்ந்தால் மட்டும் முத்தி கிட்டிவிடாது; திருவருளின் துணையும் வேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வாய்க்கால் வெட்டுவது	–	சாதனம்.
தண்ணீர் பாய்வது	–	திருவருள் உதவுவது.
பயிர் உண்டாவது	–	முத்தி கிட்டுவது.

பத்தாம் அதிகாரம் – அணைந்தோர் தன்மை
(அணைந்தோர் ஆவார் சீவன் முத்தர்)

சீவன் முத்தர் நிலை

**91. ஓங்குஉணர்வின் உள்அடங்கி உள்ளத்துள் இன்புஒடுங்கத்
தூங்குவர்மற்று ஏதுஉண்டு சொல்.**

தெளிவுரை:

சீவன் முத்தர்கள் நிறைந்த ஞானத்தின் உள்ளே அடங்கித் தம் அறிவினுள்ளே பேரின்பம் அடங்கும்படி, ஆனந்த நித்திரை செய்வர்; அவர்களுக்கு வேறு வேண்டுவது யாது? எதுவுமே இல்லை.

'தூங்குவர்' என்றதால், உலகியலால் ஏற்படும் எந்தவித இன்ப, துன்பங்களிலும் எந்த வகையான சலனங்களும் இல்லாது இருத்தல் ஆகும்.

திருவருளில் மூழ்கி, ஞானத்துள் அமிழ்ந்து இருப்பர் என்பது கருத்து.

பதியைப்போல் ஐந்தொழிலும் பசுவைப்போல் வினைகளும் செய்யார்

**92. ஐந்தொழிலும் காரணர்க ளாம்,தொழிலும் போகம்நுகர்
வெந்தொழிலும் மேவார் மிக.**

தெளிவுரை:

சிவபெருமானால் ஆற்றப்படும் ஐந்தொழில்களையேனும் திருவருளால் காரியப்படுத்தப்பட்டு நடைபெறும் படைத்தல் முதலிய தனித் தொழில்களையேனும் மாயாபோகத்தை அனுபவிக்கச் செய்யும் வெப்பம் தரும் வினைகளையேனும் சீவன் முத்தர்கள் சிறிதும் மேற்கொள்ள மாட்டார்கள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

காரணர்கள் – அயன், மால், உருத்திரன், மகேசன், சதாசிவன்.

பதிக்குரிய தொழிலாகிய பஞ்சக்கிருத்தியத்தை சீவன் முத்தர்கள் செய்யமாட்டார்கள்.

பசுக்குரிய ஆகாமிய கன்மங்களையும் செய்யார்.

சிவானுபவம் ஒன்றிற்கே உரியராகி இருப்பதே சீவன் முத்தர் நிலை ஆகும் என்பது கருத்து.

முத்தர்கள் எங்கும் சிவத்தையே காண்பர்

93. எல்லாம் அறியும் அறிவுறினும் இங்குஇவர்ஒன்று
அல்லாது அறியார் அற.

தெளிவுரை:

எல்லாவற்றையும் அறியக்கூடிய ஞானத்தில் கலந்து நின்றாலும், இப்பூவுலகில் உலாவும் சீவன் முத்தர்கள், ஞானம் ஒன்றை மட்டுமே அல்லாமல், வேறெதையும் சிறிதும் காணமாட்டார்கள்.

உலகியல் விடயங்களில் அவர்களுக்குப் பற்றில்லையாதலால், அவர்கள் அவதானிப்பதில்லை.

ஞானம் ஒன்றையே கண்டு நிற்பதால், எல்லாப் பொருள்களிலும் சிவம் விளங்குவதையே காண்பார்கள். ஞானசம்பந்தப் பெருமான் இயற்கைப் பொருள்களை வருணித்தெல்லாம், இத்தகைய இயல்பு உடைமைபற்றியே ஆகும்.

உலக விடயங்களை அவர்கள் காணாமைக்குக் காரணம்

94. புலன்அடக்கித் தம்முதற்கண் புக்குறுவர்; போதார்
தலம்நடக்கும் ஆமை தக.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

ஆமையானது, ஆரவாரம் உள்ள இடத்தில் செல்லும்போது, தன்னுடைய ஐந்து உறுப்புக்களையும் உள்ளுக்கு இழுத்து வைத்துக்கொண்டு, அசைவில்லாமல் கிடக்கும். ஆமையைப் போலவே, சீவன் முத்தர்களும் உலகில் வாழ்கின்ற காலத்தில், தமது பொறிகளை அடக்கி ஒழுகுவர். மேலும், அவர்கள் தமக்கு முதற்பொருளாகிய சிவத்தில் புகுந்து, அச்சிவத்தையே பொருந்தி நிற்பரே அன்றி, இவ்வுலக விடயங்களில் தலையிடமாட்டார்கள்.

ஆரவாரம் நீங்கியபின்பு, ஆமை தனது உறுப்புக்களை வெளியே நீட்டிவிடும்; ஆனால் சீவன் முத்தர்கள் என்றும் புலன்களை ஒடுக்கியே நிற்பர் என்பதைக் குறிக்கவே 'போதார்' என்றார்.

சீவன் முத்தர்கள் சர்வ வியாபகர்கள்

95. அவனைஅகன்று எங்குஇன்றாம்; ஆங்குஅவனும் எங்கும்
இவனைஒழிந்து உண்டாதல் இல்.

தெளிவுரை:

சிவத்தை நீங்கி எவ்வுலகமும் இல்லை; அஃதாவது சிவம் இல்லாத இடம் என்று எதுவும் இல்லை. அதுபோல்,

சிவமாம் தன்மை பெற்ற சீவன் முத்தர்களை நீங்கி, எந்த இடமும் உளதாய் நிற்றல் இல்லை.

சீவன் முத்தர்கள், ஆணவமலச் சார்பை அறவே விட்டவர்கள். சிவமாம் தன்மையை எய்தியவர்கள். எனவே, அவர்களுக்கு ஆணவமல மறைப்பு இல்லை. ஆன்மாவின் வியாபகத்தை தடுத்து நின்ற ஆணவமல மறைப்பு இல்லாமையாலும், சிவமானமையாலும், எங்கும் நிறைந்து நிற்கும் சர்வ வியாபகத்தை முத்தான்மா பெறுகிறது; எனவே சீவன் முத்தர்கள் முழு நிறைவுடையவர்கள் என்பது கருத்து.

சீவன் முத்தர்களுக்கு வெறுப்பு விருப்பு இல்லை

96. உள்ளும் புறம்பும் ஒருதன்மைக் காட்சியருக்கு,
எள்ளும் திறம்ஏதும்இல்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

உள் நோக்கும்போது விளங்கும் சிவத்தையும் புறத்தில் காணப்படும் உலகத்தையும், வேறு வேருகக் காணுமல், எல்லாம் சிவமயமாகக் காணும் ஞானத்தை நிலையாகப் பெற்ற சீவன் முத்தர்களுக்கு எந்த ஒன்றையும் இகழும் தன்மை இல்லை.

இகழ்தல் இல்லை எனவே, புகழ்தலும் இல்லை என்பது பெறப்படும்.

இவ்வுலகில் உள்ள அறிவுடைப் பொருள்களாகிய உயிர்களிடத்தும் அறிவில்லாத ஏனைய பொருள்களிடத்தும், அவர்களுக்கு விருப்பும் இல்லை; வெறுப்பும் இல்லை.

எல்லாப் பொருள்களும் அவர்களுக்குச் சிவமாகவே தோன்றுகின்றன. என்பது கருத்து.

சீவன் முத்தர்களது வினைப்பயன் சிவாநந்தமாகும்.

97. உறுந்தொழிற்குத் தக்க பயன்உலகம்; தத்தம்
வறுந்தொழிற்கு வாய்மை பயன்.

தெளிவுரை:

யான் – எனது என்னும் செருக்கோடு செய்யப்பட்ட வினைக்குத் தகுந்த பயன், துன்பங்கள் மிகுந்துள்ள உலக வாழ்க்கையே ஆகும்.

அத்தகைய செருக்கு நீங்கிய தொழிலுக்கு உரிய பலன், மெய்ப்பொருளாகிய முத்தி இன்பமேயாகும்.

சீவன் முத்தர்கள், எது செய்தாலும், அகந்தை மமதை இல்லாமல், சிவன் செயலாகவே யாவற்றையும் செய்வர். ஆதலால் அவர்கள் செய்வது எதுவும் ஆகாமியம் ஆகாது. ஆதலினுல் அவர்களுடைய செய்கைகள் எல்லாவற்றுக்கும், சிவாநந்தமே பலன் ஆகும்.

வறுந்தொழில் – பற்றின்றிச் செய்யப்படும் தொழில்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சீவன் முத்தர்களுக்குக் கருமம் தீரும் முறைமை

98. ஏன்ற வினை, உடலோடு ஏகும்; இடை யேறும் வினை
தோன்றில், அருளே சுடும்.

தெளிவுரை:

சீவன் முத்தர்களுக்கு உள்ள ஊழ், அவர்களது உடல் நீங்கும்போது நீங்கும். இதனை 'உடலூழாய்க் கழியும்' என்பார் சிவஞான சுவாமிகள்.

அவர்களுக்கு ஏற்படப்போகும் பரமுத்திக்கும் அவர்களது தேகத்தின் முடிவுக்கும் இடையில் ஏதேனும் வினை செய்யப்பட்டால், அவ்வினையைத் திருவருளே நீக்கும்.

சீவன் முத்தர்கள் செய்யும் தொழில்கள் அருட்செயலன்றி, அவர்கள் செயல்கள் அல்ல; ஆதலால், அவற்றின் பயன் அவர்களைச் சாராது.

ஏன்றவினை	–	உடலை ஏற்றுக் கொண்டு முகந்த வினை; அஃதாவது பிராரத்தம்.
இடைஏறும் வினை	–	பிராரத்த வாதனையால் ஏற்படும் ஆகாமியம்.

சீவன் முத்தர்நிலை பரமுத்தி நிலை

99. மும்மை தரும்வினைகள் மூளாவாம்; மூதறிவார்க்கு
அம்மையும் இம்மையே ஆம்.

தெளிவுரை:

இம்மை, மறுமை அம்மை என்னும் மூவகைப் பயன்களைத் தரும் வினைகள் ஏதும், சீவன் முத்தர்களைத் தாக்கமாட்டா.

ஆதலால், ஆணவமலம் நீங்கிப் பேரறிவைப் பெற்ற முத்தர்களுக்குச் சரீரம் இருக்கையிலேயே, பரமுத்தி உண்டாகும்.

ஆணவமல பந்தம் முற்றுக நீங்கிய பக்தர்கள், கன்மம் மாயைகளாலும் தாக்கப்படாமல் இருப்பதால், அவர்களுடைய நிலை பரமுத்தி நிலை ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இம்மை	–	இப்பிறப்பு
மறுமை	–	மறுபிறப்பு
அம்மை	–	மேல் உலகம் அடைதல்.

சீவன் முத்தர்களுக்கு அம்மை, பரமுத்தியே ஆகும்.

பெத்தான்மாக்களில் அருளுடையோரே சீவன் முத்தர்கள்

100. கள்ளத் தலைவர் துயர்கருதித் தம்கருணை
வெள்ளத்து அலைவர் மிக.

தெளிவுரை:

ஆணவமலம் பற்றுக் காரணமாக, 'யான் – எனது' என்னும் பொய்த்தலைமையினை உடைய ஆன்மாக்கள் படும் துன்பத்தை எண்ணி, சீவன் முத்தர்கள் தம்மிடமுள்ள கருணை காரணமாக அங்குமிங்கும் அருள்நோக்கும் அலைவார்கள்.

சிவபெருமான் உயிர்களிடத்து இரக்கம் காட்டுவதுபோல், இந்த அருளாளர்களும் நம் மீது எப்போதும் கருணை காட்டுவார்கள், ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்கு, அருளாளர்கள் இன்றியமையாதவர்கள்; ஆதலின் அவர்கள் திருவடிகளை நாம் எப்போதும் வழுத்துவோமாக.

திருவருட்பயன் தெளிவுரை முற்றும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

3. வினுவெண்பா

இருள் மல நிலை

நீடும் ஒளியும் நிறை இருளும் ஓரிடத்துக்
கூடல் அரிது; கொடுவினையேன் – பாடு இதன்முன்
ஒன்றவார் சோலை உயர்மருதச் சம்பந்தா
நின்றவாறு எவ்வாறு நீ. 1

தெளிவுரை:

அங்கு இங்கு எனாதபடி எங்கும் விரிந்து இலங்கும் வெளிச்சமும், முழு நிறைவினை உடைய இருட்டும் ஒரே இடத்தில் கூடி நிற்கமாட்டா. ஒன்றிற்கு ஒன்று மாறுபட்ட இயல்பினை உடையது ஆகலின், ஒன்று தோன்றும்போது, ஒன்று மறைந்து நிற்கும். இஃது இவ்வாறு இருக்கும்போது, கொடிய வினைகளை உடைய அடியேன், அநாதியே ஆணவமல மறைப்புக்கு உட்பட்டு நின்றபோது, இருள்மயமாய் இருந்தேனே? உயர்ந்து அழகிய சோலைகள் நிறைந்த மருத நகரில் எழுந்தருளியுள்ள மறைஞான சம்பந்தப் பெருமானே, அந்நிலையில் நீ என்னோடு பொருந்தி நின்றாய் அன்றோ?

இந்த வினுவிற்கு விடை வருமாறு:

படலம் படர்ந்த கண்ணுக்கு, மருத்துவம் பண்ணும் மருத்துவன், படலம் உரிக்கப்படும்போது, அந்த நோயாளியின் கூடவே இருப்பான். ஆயினும், அந்த நோயாளி அந்த மருத்துவனைக் காணமாட்டான். அதுபோல, அந்தந்தப் பொருளுக்கு அந்தந்தப் பொருளாய், அதுவதுவாய் நிற்கும் இறைவன் ஆணவமலம் ஆன்மாவை மறைத்து நின்ற நிலையிலும், ஆணவமலத்திற்கு ஆணவ மலமாயும் ஆன்மாவுக்கு ஆன்மாவாயுமாகவே நிற்கிறான். ஆணவமல மறைப்புக்கு உட்பட்டு நின்றமையால், அந்நிலையில் ஆன்மா இறைவனின் இருப்பை அறியாமல் இருந்திருக்கிறது.

சிவதருமோத்தரத்தில், ''மரத்தில் ஈரமும் இருக்கிறது; நெருப்பும் இருக்கிறது; ஈரம் அற்றதும் மரம் பற்றி எரிகிறது. எனவே, தட்பமும் வெப்பமும் ஓரிடத்தே இருந்தது போல், பரம்பொருளும் ஆணவமலமும் ஓர் இடத்தே பொருந்தி இருக்கும்'' எனக் கூறப்பட்டுள்ளது. இக்கருத்து ஈண்டுச் சிந்திக்கத்தக்கது ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கொடுவினையேன் "பாடு" என்பது, கொடியேன் உற்றநிலை என்பதைக் குறிக்கும். பாடு – படுதல் – உறுதல்.

கேவல, சகல, சுத்த இயல்பு

இருளில் ஒளிபுரையும் எய்தும் கலாதி
மருளில் நிலை அருளும் மானும் – கருவி இவை
நீங்கில் இருளாம், நிறைமருதச் சம்பந்தா
ஈங்குஉன் அருளால் என்பெற? 2

தெளிவுரை:

கேவல நிலையில், ஆணவமலத்தை மட்டும் உயிர் பற்றி நின்றபோது ஆணவமலம் மேலிட்டு நின்றது; அப்போது உயிர் திருவருளை அறியாது நின்றமையால், திருவருள் ஆணவம் மேலிட்டபோது, மறைந்து நின்றது.

கலாதிகள் கூடின உயிர்க்குள்ள சகல நிலையிலும், உயிர் ஆணவமலப் பற்றை விடவில்லை; கலாதிகளைப் பொருந்தின இடத்தும் உயிர், மயங்கிய உணர்வோடு நிற்கிறது. அதற்குக் காரணம், அந்நிலையிலும் உயிர் திருவருளைப் பற்றுமலிருப்பதுவே ஆகும்.

கருவி கரணங்கள் நீங்கின நிலையில் உயிர் மீண்டும் இருளிலே அழுந்திவிடும் என்று கூறுவோமாயின், இறையருளினுல் உயிர்க்கு என்ன பயன் உள்ளது?

நிறைந்த மருதநகரில் எழுந்தருளியுள்ள மறைஞான சம்பந்தப் பெருமானே, இவ்வினுவிற்கு விடை யாது?

இவ்வினுவிற்குள்ள விடை வருமாறு:

உடல் நோய் நீங்கும் பொருட்டு, மருத்துவன் மருந்து கொடுத்து, நோயாளியுடன் இருந்தாலும், நோய் நீங்கும்வரை, நோயாளி நோயினுல் ஏற்பட்ட துன்பம் நீங்கப் பெறுமலே இருப்பான். அதுபோல, உயிர் நோய் ஆகிய ஆணவமலப் பற்று, உயிர்க்கு நீங்கும் பொருட்டு இறைவன் தனு கரண புவன போகங்களை வழங்கிய பிறகும், உயிர் ஆணவமலப் பற்றினை விட்டு நீங்காமையால், உயிர்க்குள்ள அறியாமைத் துன்பம் நீங்காமலிருக்கிறது. எப்போது உயிர் ஆணவமலப் பற்றை விடுகிறதோ, அப்போது உடனுய் நிற்கும் திருவருளின் அருமை உயிர்க்குப் புலப்படும்; அந்நிலையில் உயிர் கருவி கரணங்களை இழந்தாலும், அருளைப் பற்றி ஒளியாய் விளங்கும். எனவே,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கருவி கரணங்கள் நீங்கிய நிலையில் உயிர் மீண்டும் ஆணவ இருளில் அழுந்தும்படி நேராது; மாறாகப் பேரின்ப அனுபவமே உயிர்க்குக் கிட்டும்.

ஞான தரிசனம்

புல்அறிவு நல்உணர்வது ஆகா; பொதுஞானம்
அல்லது இலது; உள்ளது எனில், அந்நியமாம்–தொல்லை இருள்
ஊனம் மலையாவாறு, உயர்மருதச் சம்பந்தா
ஞானமலை ஆவாய், நவில். 3

தெளிவுரை:

உயிர்கள் பெற்றிருக்கின்ற அறிவு, சிற்றறிவு; அஃதாவது சடப் பொருள்கள் ஆகிய மாயா கருவிகளின் துணையால் பெற்ற அறிவு ஆதலின், உயிர்க்குள்ள அறிவு, சட அறிவே ஆகும்; அவ்வறிவு எக்காலத்தும் முற்றறிவு ஆகாது.

புல்லறிவு – சிற்றறிவு; பாசஞானம்.

நல்லுணர்வு – பேரறிவு; பதிஞானம்.

மாயா கருவிகளை விட்டு நீங்கிய நிலையில், உயிர்க்கு என்று உள்ள அறிவு பசுஞானம் ஆகும், அதுவும் பதிஞானம் ஆகாது. (அல்லது – அது அல் – அது இல்லை) ஆக, பாச ஞானம், பசுஞானம், பதிஞானம் என்று ஞானம் மூவகைப்படும்.

உயிர் மலபரிபாகம் எய்தியபோது, சிவஞானம் ஆகிய பதிஞானம் ஏற்படும் என்று கூறுவது, முன்பு இல்லாத ஒன்று பின்பு ஏற்படும் என்று கூறுவதுபோல் உள்ளது; எனவே, இது சற்காரிய வாதத்திற்குப் பொருந்தாது. (இலது, உள்ளது எனில் அந்நியமாம் என்றவாறு).

அநாதியே ஆன்மாவைப் பற்றி அதன் அறிவிச்சை செயல்களை மறைத்து நிற்கும் ஆணவம் உயிர்க்குக் குற்றத்தை விளைவித்து விட்டது. அக்குற்றத்தினாலே மயங்கி நிற்கும் உயிர், மயங்காத முறையில், அதற்குப் பதிஞானம் எப்படி ஏற்பட்டது? உயர்ந்த மருதநகரில் எழுந்தருளியுள்ள மறைஞான சம்பந்தப் பெருமானே. மலைபோன்ற உயர்ந்த ஞானத்தை உடையவனே, சற்காரியவாதம் பிறழாமல் இவ்வினாவிற்கு விடை அளித்து உதவ வேண்டுகிறேன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இதற்கு விடை வருமாறு:

அநாதியே திருவருள், உயிரோடு உடனாய் நிற்பதை, உயிர் அறியாமல் இருந்ததே அன்றி, அப்போது 'பதிஞானம்' இல்லை என்று சொல்ல முடியாது. இறையருள் அன்றும் இன்றும் என்றும் ஆன்மாவோடு உடனாய் நிற்பதால் இல்லாத ஒன்று பின்னர்த் தோன்றி விடவில்லை. எனவே பதிஞானம் என்றும் உள்ள உள்பொருளே என்பது இதனால் பெறப்படும். பதிஞானம் அநாதியே இருப்பதை, ஆணவமலப் பற்றுக் காரணமாக உயிர்கள்தாம் அறியாமலிருந்திருக்கின்றன. எனவேதான் உயிரறிவைப் ''புல்லறிவு'' என்றார்.

ஆன்மாவுக்குள்ள ஞானத்தைப், பாசத்தோடு தொடர்புற்று இருந்தபோது ''பாசஞானம்'' என்றும், தன்னையே பிரமம் எனக் கருதும் நிலையில் ''பசுஞானம்'' என்றும், இறைவனோடு தொடர்புற்று இருக்கும் போது, ''பதிஞானம்'' என்றும் கூறுவர். ஒரே ஞானத்தைத்தான் மூவகைப்படுத்திக் கூறுகிறோம். இல்லாத ஒன்றுதோன்றியதாகக் கொள்வது தவறு ஆகும்.

ஐந்து அவத்தையே அறிவது

> கனவு கனவு என்று காண்பு அரிதாம்; காணில்
> நனவில் அவை சிறிதும் நண்ணா—முனைவன் அருள்
> தான் அவற்றில் ஒன்றா; தடமருதச் சம்பந்தா
> யான் அவத்தை காணுமாறு என்? 4

தெளிவுரை:

கனவு காணும்போது, அக்கனவு நனவு போலத் தோன்றும்; கனவு என்று தோன்றாது. ஆயினும், கனவிலே நின்று கனவைக் காண இயலாது.

நனவு நிலையில், கனவில் கண்டதை வெளிப்படுத்த நாம் முற்படும்போது கனவு நிலையில் நம்முடன் இருந்த கருவிகளின் துணைக் கொண்டு மட்டும், அதனை வெளிப்படுத்த முடியவில்லை.

கனவு நிலையில், திருவருளின் துணைக்கொண்டு கனவு கண்டேன் என்று சொல்வோமாயின், அது பொருந்தாது; ஏனெனில், திருவருள் இக்கருவிகளுடன் பொருந்தி தொழிற்படுவதில்லை.

தடாகம் பொருந்திய மருதநகரில் எழுந்தருளியுள்ள மறைஞான சம்பந்தப் பெருமானே, நனவு, கனவு முதலிய ஐந்து அவத்தைகளை நான் எப்படி அறிவது? விளக்கி அருள்வாயாக.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இவ்வினுவிற்கு விடை வருமாறு:

கனவில் கண்டவற்றை நனவில் உணர்த்தும்போது, நால்வகை வாக்குகளே உயிர்க்குத் துணையாக நிற்கின்றன. சாந்தியதீத கலையில் சூக்குமையாகவும், சாந்திகலையில் பைசந்தியாகவும், வித்தியாகலையில் மத்திமையாகவும், பிரதிட்டாகலையில் சூக்கும வைசரியாகவும், நிவர்த்தி கலையில் தூலவைகரியாகவும், நான்கு வாக்குகளும், ஐந்துகலைகளைச் சார்ந்து ஐவகைப்பட்டு நிற்கும்.

இந்நான்கு வாக்குகளும் சுத்த மாயா தத்தவத்திலிருந்து தொழிற்படுகின்றன. கனவில் கண்டதை நனவில் வெளிப்படுத்துவதற்குத் தேவையான வாக்கு, எதுவோ, அதனை இறைவன் சுத்தமாயையிலிருந்து செயற்படுத்துவன். எனவே, திருவருளின் உதவி இன்றி, உயிர்க்கு அவத்தைகள் நிகழமாட்டா.

சுத்த தத்தவங்கள் ஐந்திலுைம், உயிர்க்கு ஞானம் உண்டாகிறது. சிவசத்திகள் சுத்த தத்துவங்களைக் காரியப்படுத்த, அவை அசுத்த மாயையில் உள்ள கலை முதலியவற்றைத் தொழிற்படுத்தும், இவைகளாலே உயிர்க்கு அறிவு உண்டாகும். இதனுல் உயிர் அவத்தை வேறுபாடுகளை, அந்தந்த அவத்தையினின்றும் நீங்கியதும் அறிகிறது. எனவே, உயிரின் அறிவு தொழிற்பட்டு அவத்தைகளை அறிவதற்கு, இறையருள் இன்றியமையாததாகும்.

திருவருள் தரிசனம்

அறிவு அறிந்தது எல்லாம் அசத்து ஆகும் ஆயின்,
குறிஇறந்த நின் உணர்வில்கூடா –பொறிபுலன்கள்,
தாமாய் அறியா, தடமருதச் சம்பந்தா
யாம் ஆர் அறிவார் இனி? 5

தெளிவுரை:

என்னுடைய அறிவினுல் அறியப்பட்டன எல்லாம், நிலையற்றன ஆகி, அழிந்து போகின்றன. அவ்வாருயின், நினைவுக்கும் சொல்லுக்கும் எட்டாமல், குறியிறந்து நிற்கின்ற உன்னுடைய பேரருளில் எளியேன் பொருந்துமாறு இல்லை; என்னுடைய பொறிபுலன்கள் ஆகிய தத்துவங்கள் தாமாகவே இயங்குமாறு அறியமாட்டா, தடாகம் பொருந்திய மருதநகரில் எழுந்தருளியுள்ள மறைஞான சம்பந்தப் பெருமானே! இனிமேல் என்னுல் உன்னை எப்படி அறிய முடியும்?

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இத்தடைக்கு விடை வருமாறு:

சிவப்பிரகாசம் 55–ஆவது பாடலில்,

''அறிவினுல் அறிந்த யாவும் அசத்து ஆதல் அறிதி'' என்று அருளிச் செய்திருப்பது, இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. இங்கு 'அறிவு' என்றது, கருவிகள் வாயிலாக ஆன்மாவில் நிகழும் அறிவைக் குறிக்கும். இதனைச் சுட்டறிவு என்றும் பாச ஞானம் என்றும் கூறுவர்.

சத்து ஆகிய சிவம், வியாபக அறிவு ஆகலான், அசத்து ஆகிய பாசத்தைப் பகுத்து அறிந்து நிற்க வேண்டுவதில்லை. எனவே அது வாக்கு மனத்துக்கு எட்டாமல் நிற்கிறது.

அசத்து ஆகிய பாசத்துக்கும், சத்து ஆகிய சிவத்துக்கும் வேறு ஆகிய ஆன்மா, இவ்விரண்டையும் அறிந்து அனுபவிக்கும் இயல்பு உடையது. பாசம், சிவத்தை அறிந்து அனுபவிக்கும் இயல்புடையதன்று. எனவே, பாச அறிவால் ஆன்மா, சிவத்தை அறிந்து அனுபவிக்க மாட்டாது.

உண்கலத்தில் உணவு உண்பவன், உணவில் கருத்தைச் செலுத்தி உண்ணும்போது, உண்கலம் அவன் கண்ணுக்குத் தோன்ருது; உணவு உண்ணும்போது உணவை நோக்காது, உண்கலத்தை நோக்கி இருப்பவன் உணவை அனுபவிக்க முடியாது. அவ்வாறே, சிவத்தை அறிந்து அனுபவிக்க விரும்பும் ஆன்மா, பாசத்தை நோக்காது சிவத்தையே நோக்கி இருக்க வேண்டும். பாசத்தை நோக்கி இருப்பவன், சிவத்தை அனுபவிக்க முடியாது. எனவே, பாசப்பற்றை விட்டுச் சிவப்பற்றில் உறைத்து நிற்பவரே சிவனருளை அறிந்து சிவத்தை அனுபவிக்க முடியும்.

குறியிறந்த உணர்வு – வாக்கு மனத்திற்கு எட்டாத அனுபவம்.

மறைஞான சம்பந்தர், மருதூர், பெண்ணுகடம் என்னும் கடந்தை தில்லையை அடுத்த திருக்களாஞ்சேரி ஆகிய மூன்று ஊர்களிலும் வாழ்ந்தவர். எனவே, ஒன்பது பாடல்களில் ''மருதச்சம்பந்தா'' என்றும் மற்ற மூன்று பாடல்களில் ''கடந்தை'' யோடும் தொடர்புபடுத்தி ஆசிரியர் பாடுகிருர்.

பாச நீக்கம்

சிற்றறிவு முற்சிதையின் சேர்வார் இன்றும், சிறிது
மற்று அதனின் நிற்கில், அருள் மன்னுவாம்—துற்றமுகில்
மின்கொண்ட சோலை உரியன் மருதச் சம்பந்தா 6
என்கொண்டு காண்பேன் இனியான்?

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

கருவி கரணங்களோடு கூடி அறியும் ஆன்ம அறிவு, சிற்றறிவு எனப்படும். அந்தச் சிற்றறிவு முன்பே கெட்டுவிட்டால் அந்த ஆன்மா பின்பு, அருளைப் பொருந்த இயலாது, அந்தச் சிற்றறிவு ஆன்மாவினிடத்து, முழுமையாக இல்லாமல், கொஞ்சமாக நின்றாலும், அந்த ஆன்மா அருளைப் பெற முடியாது.

மேகங்கள் நெருங்கிய ஆகாயத்தை அளாவிய சோலைகள் சூழ்ந்த விசாலமான மருதநகரில் எழுந்தருளியுள்ள மறைஞான சம்பந்தப் பெருமானே, எனது சிற்றறிவு இவ்வாறு இருக்கையில், எளியேன் எதைக் கொண்டு திருவருளைக் காண்பேன்?

இவ்வினாவிற்கு விடை வருமாறு:

ஆன்மா அநாதியே ஆணவமலப் பற்றுக் கொண்டு, அறிவை இழந்து நின்றமையால் இறைவன் மாயா கருவிகளை ஆன்மாவுடன் பொருத்தி, அதற்கு அறிவு விளங்குமாறு செய்தருளினான். அந்நிலையில், ஆன்மா சிறிதும் அறிவு விளக்கம் பெற்றுத், தான் ஆணவமலப்பற்றுக் கொண்டு, அறியாமை வயப்பட்டிருந்ததை அறிகிறது. இதுவே சிற்றறிவு எனப்படும்.

தனது அறியாமையை அறிந்து அறிந்து, தன் அறிவு நிலையற்ற பொருள்களைப் பற்றியே நிற்கிறது என்னும் அறிவைப் பின்னர் ஆன்மா பெறுகிறது. அதன்பிறகு, என்றும் ஒரு படித்தாய் உள்ள இறைவன் திருவருளைப் பற்றும் பயிற்சியை ஆன்மா, இந்தச் சிற்றறிவைக் கொண்டே மேற்கொள்கிறது. எனவே, சிற்றறிவு கெட்டு விட்டாலோ, கொஞ்சமாக தொழிற்பட்டாலோ ஆன்மா, இறையருளைப் பெறுதல் இயலாது.

பாசத்தோடு கூடி இருக்கும் போதும் தான் ஆன்ம அறிவு, "சிற்றறிவு" எனப்படும். அஃதே இறையருளோடு கூடி நிற்கும்போது, "வியாபக அறிவு" எனப்படும். எனவே சிற்றறிவு கெடும் எனக் கூறுவதற்குச் சிறிதும் இடம் இல்லை.

அத்துவித அநுபவம்

உன்னரிய நின் உணர்வு அது ஓங்கியக்கால், ஒண்கருவி
தன் அளவும் நண்ணரியது தான் ஆகும் – என் அறிவு
தான் அறிய வாரா; தடமருதச் சம்பந்தா,
யான் அறிவது எவ்வாறு இனி?

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

நினைத்தற்கு அரிது ஆகிய பெருமானே, உன்னுடைய திருவருள் மேம்பட்டு நிற்கும் நிலையில் உயிர்க்குள்ள அறிவை விளங்கச் செய்யும் மாயா கருவிகளோடு பொருந்திய அறிவு பொருந்தாது, அக்கருவிகளை நீங்கி நிற்கும் நிலையில் ஏற்படும் பசுஞானம் ஆகிய என் அறிவைக் கொண்டும் திருவருளை.அறிய முடியாது.

தடாகம் பொருந்த மருத நகரில் எழுந்தருளிய மறைஞான சம்பந்தப் பெருமானே, இத்தகு சூழ்நிலையில் அடியேன், உன்னுடைய திருவருளை எப்படி அறிந்து கூடுவேன்?

இவ்வினாவிற்கு விடை வருமாறு:

ஆன்மா எதனை எதனைச் சார்ந்து நின்று அறிகிறதோ, அதனையே அறியும் இயல்பு உடையது.

உயிர், மாயாகருவிகளோடு கூடிநின்று அறியும்போது, ஏற்படும் அறிவு, பாச அறிவு ஆகும். அது 'பாசஞானம்' எனப்படும்.

மாயா கருவிகளை விட்டு நீங்கி, உயிர் தற்போதத்தால் அறியும் அறிவு, பசு அறிவு ஆகும். அது 'பசுஞானம்' எனப்படும்.

பாச ஞானம், பசுஞானம் ஆகிய இரண்டாலும் அறிவதை விட்டு, ஆன்மா திருவருளோடு கூடி நின்று அறியும் அறிவு அருளறிவு ஆகும். இது 'பதிஞானம்' எனப்படும். அருளைச்சார்ந்து நிற்கும் நிலையில், ஆன்மா செய்யும் செயல்கள் அனைத்தும், பசுகரணமாக ஆகாமல் பதிகரணமாய் நிற்கும். அப்போது, ஆன்மா கருவிகரணங்களோடு கூடி நின்றாலும் ஆன்ம அறிவு திருவருளில் அழுந்தி நிற்பதால், சார்ந்ததன் வண்ணமாம் தன்மை பற்றி, ஆன்மா அந்நிலையில் திருவருள் மயமாகவே ஆகிவிடும்.

உன்னுதல் – நினைத்தல்.

ஒண்கருவி – முப்பத்தாறு தத்தவங்கள் ''ஒண்தனை'' என்னும் சம்பந்தப் பெருமான் தேவாரத் தொடரும் இங்கு நினைவு கூர்தற்குரியது.

''யான் அறிவது'' என்பது, பசுகரணம் பதிகரணமாய் நின்று, ஆன்மா அருள்வயப்படுவதைக் குறிக்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இறைவன் திருமேனி

அருவேல் உரு அன்று; உருவேல் அரு அன்று;
இருவேறும் ஒன்றிற்கு இசையா – உருஓரில்
காணில் உயர்கடந்தைச் சம்பந்தா, கண்ட உடல்
பூணும் இறைக்கு என்னும் புகல்? 8

தெளிவுரை:

சிவபெருமானின் திருமேனி அருவம் என்று கூறினுல், அஃது உருவம் ஆகாது; அஃது உருவம் என்று கூறினுல், அருவம் ஆகாது. அத்திருமேனி, அருவும் உருவும் ஆகும் என்று கூறினுல், ஒரு பொருளில் இரண்டு வேறுபட்ட தன்மை இருக்க முடியாது.

உயர்ந்த கடந்தை நகரில் எழுந்தருளியுள்ள மறைஞான சம்பந்தப் பெருமானே, நினைத்த வடிவம் கொள்ள வல்ல இறைவனது திருமேனியை ஆராய்ந்து பார்க்கும்போது அஃது எத்தன்மையது என்பது புரியவில்லை. அவ்வுண்மையை எளியேனுக்கு அறிவுறுத்தியருளுமாறு வேண்டுகிறேன்.

இவ்வினுவிற்கு விடை வருமாறு:

இறைவன் முழுநிறைவு உடையவன். அவனது முழுநிறைவில் அனைத்து உயிர்களும் உலகங்களும் தங்குவதற்கு இடமளித்துள்ளான்; அந்தந்தப் பொருளுக்கு அந்தந்தப் பொருளாய் நிற்பவன். எனவே, மண், நீர் போன்ற பருப்பொருளுக்குப் பருப் பொருளாய் நின்று, உருவத் திருமேனி கொள்ள வேண்டுவது அவனுக்கு இன்றியமையாததாயிற்று; நெருப்புப் போன்ற நுண்மையும் பருமையும் கலந்த பொருளுக்கு அதுவதுவாய் நிற்கும் பொருட்டு, அருவுருவத் திருமேனி கொள்கிருன்; காற்று, வான் போன்ற நுண்பொருளுக்கு நுண்பொருளாய் நிற்றல் வேண்டி, அருவத் திருமேனியையும் கொள்கிருன்.

இறைவன் நிமித்த காரணன் ஆகலின், தனக்குத் திருமேனிகளைத் தோற்றுவிப்பதற்கு, வேறெரு வினைமுதலை வேண்டாதவன். ஆகவே, தன்னின் வேறல்லாத தன் ஆற்றல்ஆகிய திருவருளினுல் தாஞகவே, ஆன்மவர்க்கங்களின்பால் கொண்ட இரக்கம் காரணமாக இம்மூவகைத் திருமேனிகளை எடுக்கிருன்.

இவ்வுண்மையைச்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''செப்பிய மூன்றும் நம்தம் கருமேனி கழிக்க வந்த
கருணையின் வடிவு தானே'' (75).

என்னும் சிவஞான சித்தியார் வாக்கினால் உணரலாம்.

இறைவன் திருமேனி, அவன் திருவருட்சத்தியால் உண்டாவது ஆகும். அவன், ''குறித்தது ஒன்று ஆக மாட்டாக் குறைவு இலன்'' எனச் சிவஞான சித்தியார் (65) சொல்கிறபடி, எல்லாம் வல்ல அவன், தன் சத்தித் திருமேனியிலிருந்து, அருவம், உருவம் ஆகிய திருமேனிகளை எடுக்கிறான், அவை ஒன்றுக்கு ஒன்று முரணானவை அல்ல. ''அருவத்திற்கு உருவம் மறுதலை அன்று'' என்று சிவஞான சுவாமிகள், சிவஞானமாபாடியத்தில் அருளிச் செய்திருப்பது இங்குச் சிந்திக்கத் தக்கது.

விஞ்ஞானகலர், பிரளயாகலர் நிலை

இருமலத்தார்க்கு இல்லை உடல்வினை என்செய்யும்
ஒருமலத்தார்க்கு ஆராய் உரைப்பேன் – திரிமலத்தார்
ஒன்றாக உள்ளார், உயர்மருதச் சம்பந்தா,
அன்றாகில் ஆமாறு அருள். 9

தெளிவுரை:

ஆணவம், கன்மம் ஆகிய இரண்டு மலங்களை உடைய பிரளயாகலர் ஆன்மாக்களுக்கு மாயை இல்லாதபடியினாலே, உடம்பும் இல்லை என்று ஆகிறது; உடல் இல்லை ஆயின், அவர்கள் வினைப்பயனை எப்படி அனுபவிப்பார்கள்?

ஆணவம் மலம் மட்டும் உடைய ஒருமலக்காரர் ஆகிய விஞ்ஞானகலர் ஆன்மாவுக்கு உவமையாக யாரைக் கூறுவது?

ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களை உடைய சகலர்வகை ஆன்மாக்கள், இறைவனோடு ஒன்றுதலை நினைத்துப் பார்க்கவே இயலாது.

உயர்ந்த மருதநகரில் எழுந்தருளியுள்ள மறைஞான சம்பந்தப் பெருமானே, அவ்வாறாயின், சகலர்வகை ஆன்மாக்கள் முத்தியைப் பெற்றுத் திருவடியைக் கூடுமாறு எப்படி? கூறியருள வேண்டுகிறேன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இவ்வினாவிற்கு விடை வருமாறு:

விஞ்ஞானகலர் ஆன்மாக்கள், சுத்தமாயைக்கும் அசுத்தாமாயைக்கும் இடையே உள்ள புவனங்களில் வசிக்கின்றனர். இவர்களுக்கு மாயை இல்லை என்றது, பிரகிருதியின் காரியம் ஆகிய முக்குணங்களால் வரும் மயக்கம் இல்லை என்றபடி; ஆயினும் மயக்கம் செய்யாத சுத்தமாயா புவனத்தில் உள்ள தனு கரண புவன போகங்கள் இவர்களுக்கும் உண்டு. இவர்களுக்குக் கன்மம் இல்லை என்றது, ஆகாமிய கன்மம் இல்லை என்றபடியே ஆகும். கன்மம் இல்லாமையால் இவர்களுக்கு இருவினை ஒப்பு என்பது இல்லை; கன்மம் ஏறாமையால் இவர்கள் எடுத்த ஒரு பிறப்பிலேயே முத்தி அடைவர். எனவே, இவர்க்கு உவகையாக எவரையும் கூறமுடியாது.

பிரளயாகலர் ஆன்மாக்கள், அசுத்தமாயை முதல் அராகதத்துவம் ஈறாக உள்ள புவனங்களில் வசிக்கிறார்கள். இவர்களுக்கு மாயாமலம் இல்லை என்றது, முக்குணங்களின் மயக்கம் இல்லை என்றபடியாம். இவர்களுக்கு ஆகாமிய கன்மம் ஏறுவதால், சில பிறவிகளில் இவர்கள் முக்தி பெறுவர்.

சகலர் வகை ஆன்மாக்கள் மூலப்பகுதி முதல் பிருதிவி ஈறான புவனங்களில் வசிக்கிறார்கள். இவர்கள் மும்மல மயக்கத்தோடு கூடியவர். எனவே, எண்ணில்லாத காலம் பிறவிகளை எடுத்து, மேலும் மேலும் கன்மங்களை ஈட்டிப் பிறந்து இறந்து உழல்வர். இவர்களுக்கு இருவினை ஒப்பும் மலபரிபாகமும் எய்தியபோது, அதற்கு ஏற்ற சத்திநிபாதம் நோக்கி சிவபெருமான் குருவடிவாய் எழுந்தருளிவந்து, இவர்களுக்கு அருளைச் செய்வான். அப்பொழுது அவை வீடுபேறு எய்தும்.

ஆன்மா சிவமாம் தன்மை பெறுவது

ஒன்று இரண்டாய் நின்று ஒன்றில் ஓர்மையதாம்; ஒன்றாக
நின்று இரண்டாம் என்னில் உயிர் நேராகும்—துன்று இருந்தார்
தங்கியவாழ் தண்கடந்தைச் சம்பந்தா யானாகி
ஓங்கியவாறு எவ்வாறு உரை? 10

தெளிவுரை:

பிரமம் (கடவுள்) ஆகிய ஒரு பொருளே, பிரமமும் சீவர்களும் (உயிர்களும்) என்று கருதப்பட்டு இருந்து, முத்திநிலையில் அவ்விரண்டும் ஒன்றாகிவிடும் என்று கூறுவாராயின், கடவுளும் உயிர்களும் ஒரு தன்மை உடையராதல் வேண்டும். கடவுளும் உயிர்களும் அநாதியே ஒன்றாக இருந்து பின்பு பிறப்பு நிலையில் கடவுள் வேறு—உயிர் வேறு என்று இரண்டாக உள்ளன

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்று கூறினால், முத்தி நிலையில் ஒன்றில் ஒன்று அழிந்து போய்விடும்; அஃதாவது, முத்திநிலையில் கடவுள் மட்டும் இருந்து உயிர் அழிந்துபோய் விடும்.

நெருங்கிய பெரிய மாலையை அணிந்து, குளிர்ச்சியான கடந்தை நகரில் எழுந்தருளியுள்ள மறைஞான சம்பந்தப் பெருமானே, உயிர் ஆகிய அடியேன், சிவம் ஆம் தன்மை பெற்றுத் திகழும் முறைமை எத்தகையது என்பதை எளியேனுக்கு அருளிச் செய்தல் வேண்டும்.

இவ்வினாவிற்கு விடை வருமாறு:

கடவுளும் உயிர்களும் பிறப்பு நிலையில் மட்டும் அன்றி, தொன்று தொட்டே வெவ்வேறு பொருள்களே ஆகும். உயிர் அறிவித்தால், அன்றி அறியும் தன்மை உடையதன்று; இறைவன், எவராலும் அறிவிக்கப்படாமல், எல்லாவற்றையும் ஒரே சமயத்தில், தானே அறியும் தன்மை உடையவன். இத்தகைய இருவேறு பெருத்த இயல்பு வேறுபாடுகள் உள்ளமையால் எக்காலத்தும் இரண்டும் வெவ்வேறு பொருள்களே ஆகும்.

முத்திநிலையின்போது ஆன்மா சிவத்தோடு கூடி நின்று பேரின்பத்தை அனுபவிக்கும் நிலையில், சிவமாம் தன்மை பெற்றுத் திகழும் முறைமைக்கு உவமை கூறவேண்டுமானால்,

பிறப்புக்கு உட்படுவதற்கு முன்பு, உயிர் ஆணவமலத்தோடு கூடி நின்று, பெருந்துன்பத்தினை அனுபவிக்கும் நிலையில், மலமாம் தன்மை உற்று, மலமயமாய் நின்றதையே கூறவேண்டும்.

பெத்தநிலையில், மலமும் உயிரும் ஒன்றாகாமல் இரண்டாகாமல், ஒன்றுமிரண்டும் ஆகாமல் நிற்கும் தன்மை போலவே முத்திநிலையில் சிவமும் ஆன்மாவும் ஒன்றாகாமல் இரண்டாகாமல், ஒன்றுமிரண்டுமாகாமல் நிற்பதே, சைவசித்தாந்தம் கூறும் சுத்தாத்துவிதம் ஆகும்.

இரண்டும் ஒரேதன்மையுடையனவல்ல ஆகலின், ஒன்றாகாமல் நிற்கின்றன. சார்ந்ததன் வண்ணமாம் தன்மை உடையது உயிர் ஆகலின் உயிர் எந்தப் பொருளைச் சார்ந்திருக்கிறதோ அந்தப் பொருளின் தன்மையைப் பெறுவதால் இரண்டாகாமல் நிற்கின்றது. இறைவன் உடனாய் நின்று இயக்காவிட்டால் உயிர் இயங்காது. எனவே இரண்டும் வெவ்வேறாக இருப்பினும் ஒன்றினால் ஒன்று இயக்கப்பட்டமையால் ஒன்றுமிரண்டும் ஆகாமல் இருக்கின்றன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிவஞானப் பேறு

காண்பானும் காட்டுவதும் காண்பதுவும் நீத்து உண்மை
காண்பார்கள் நன்முத்தி காணுர்கள் – காண்பானும்
காட்டுவதும் காண்பதுவும் தண்கடந்தைச் சம்பந்தன்
வாட்டும் நெறி வாராதவர். 11

தெளிவுரை:

ஞாதுரு, ஞானம், ஞேயம், என்பன முறையே காண்பான், காட்சி, காட்சிப்பொருள் ஆகியோரைக் குறிக்கும். காண்பவன் ஆன்மா; காட்சி – காட்டும் அருள்; காணப்படும் பொருள் – சிவம்.

ஆன்மாவுக்குச் சிவத்தைக் காட்டுவது அருளே. ஆன்மா அவ்வாறு சிவத்தைக் காணும்போது, திருவருள் ஆன்மாவைச் சிவமாக்கி விடுவதால் அந்நிலையில் ஆன்மா தன்னையும் காணுது; காட்டிய அருளையும் காணுது; தான் சிவமாகிவிட்டதால் சிவத்தை வேருகப் பிரித்துக் காணுது. ஆகவே, திரிபுடி ஞானம் ஆகிய இந்த மூவகை நினைவும் நீங்கப்பெற்று நிற்கும் நிலையே, சிவஞானப்பேறு பெற்று நிற்கும் பேரின்பப் பெருநிலையாகும்.

முத்தி நிலையில் காண்பான், காட்சி, காட்சிப் பொருள் ஆகிய மூன்றும் உள என்பவர்கள், சைவ சித்தாந்த முத்தியைக் காணுதவர்கள் ஆவர்; மூன்றும் உள ஆயினும் ஆன்மா தன்னையும் தனது அறிவையும் அறியாது; சிவம் ஒன்றனையே அறிந்து நிற்கும் என்பவரே சைவ சித்தாந்த முத்தியைக் கண்டவர் ஆவர்.

முத்தியில் சிவம் ஒன்றே உள்பொருள் என்பவர் ஏகான்ம வாதிகள். அவர்கள் கூற்றை, மூன்றும் உண்டு என்பதன் மூலம் உமாபதி சிவம் மறுக்கிருர். முத்தியில் மூன்றும் உணரப்படும் என்பவர்கள், பேதவாத சைவர், சிவசமவாத சைவர் முதலியோர் ஆவர். ''மூன்றும் உள ஆயினும் சிவன் ஒன்றே அறியப்படும்'' என்பதன் மூலம், அவர்களை உமாபதி சிவம் மறுக்கிருர். இப்பாடலில் சைவ சித்தாந்த முத்தி நிலை தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

சிவபோகம்

ஒன்றி நுகர்வது இவன் ஊனும் உறுதொழிலும்
என்றும் இடையில் இடம் இல்லை – ஒன்றித்
தெரியா அருள்மருதச் சம்பந்தா, சேர்ந்து
பிரியாவாறு எவ்வாறு பேசு. 12

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

இவன் – உயிர்.

உயிர், தானே எதனையும் பெறவல்லதன்று. சிவபெருமான் ஊட்டினால் அன்றி, உயிர் எந்த இன்பத்தையும் போகத்தையும் நுகரப்போவதில்லை; துன்பத்தையும் அவ்வாறே. இறைவன், கருவிகரணங்களை வழங்கி உதவியிருக்காவிட்டால், உயிர் எந்த ஒரு செயலையும் செய்ய இயலாது.

இறைவன் முழுநிறைவு உடையவன் (சர்வவியாபி). அவன் இல்லாத இடம் இல்லை. எனவே, அவனைவிட்டு, ஆன்மா நீங்கி நிற்கிறது என்பது, எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லை. ஆக இறைவனுக்குத் தெரியாமல், உயிர் எதையும் அனுபவிக்கவும் முடியாது; செய்யவும் இயலாது என்பது தெளிவு.

அருளே வடிவாய் இலங்கும் மருதநகரில் எழுந்தருளியுள்ள மறைஞான சம்பந்தப் பெருமானே, உன்னைவிட்டுப் பிரியாமல் நின்று உலக போகங்களை நான் எவ்வாறு அனுபவிப்பது? இவ்வுண்மையை எளியேனுக்கு அறிவித்து அருள வேண்டுகிறேன்.

இதற்கு விடை வருமாறு:

உலக போகங்களையும் நமக்குப் புசிப்பிக்கிறவன் சிவபெருமானே என்பதை எக்காலத்தும் மறவாமல், நாம் அனுபவிக்கும் ஒவ்வொரு பொருளையும் அவனருளாலேயே அனுபவிக்கிறோம் என்னும் உணர்வோடு இம்மையில் வாழ்வதே அம்மையில் சிவபோகத்தைத் துய்த்து வாழ்வதற்கு அடிப்படை ஆகும்.

உலக போகத்தை இறைவன், திரோதான சத்தி மூலம், ஆன்மா நுகரும்படி செய்விக்கிறான்; சிவ போகத்தைத் திருவருட் சத்தி மூலம் நுகர்விக்கிறான். ஆகவே, ஆன்மா அவனை விட்டுப் பிரியாமலே, இரண்டையும் அனுபவிக்கும், வினைப்பயன்களை நுகருமாறு செய்வித்துப், படிப்படியாக முன்னேற்றி, இறுதியில் பேரின்பத்தை அனுபவிக்குமாறு, ஆன்மாக்களை இறைவன் செய்விப்பான்.

நூற் பயன்

அருளால் உணர்வார்க்கு அகலாத செம்மைப்
பொருளாகி நிற்கும்பொருந்தித் –தெருளா
வினா வெண்பா உண்மை வினாவாரேல், ஊமன்
கனாவின்பால் எய்துவிக்கும் காண்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

குருநாதர் அறிவித்தருளியபடி, திருவருள் வாய்க்கப் பெற்றவர்களுக்கே, அத்திருவருளை விட்டு நீங்காமையால், இந்நூலில் உள்ள நுண்பொருள் தெளிவாகப் புரியும். அத்தகு திருவருளின் துணைக்கொண்டு, இந்த வினாவெண்பா நூலில் உள்ள செய்திகளைக் கேட்டு அறியாதவர், ஊமையனாய் இருக்கும் ஒருவன், கனவில் பால் குடித்து அதனால் பெற்ற இன்பத்தை, எப்படி பிறர்க்குக் கூறமுடியாதோ, அவனைப் போன்றவர் ஆவர்.

எனவே சிவப்பிரகாசத்தின் பிழிவு ஆகிய, வினா வடிவில் காணப்படும் இவ்வினாவெண்பா என்னும் நூலின் நுண்பொருளைத் தக்க குருவின் வாயிலாகக் கேட்டுச் சிந்தித்துத் தெளிவு பெறவேண்டும் என்பது போதரும், அத்தகு வாய்ப்பு பெறாதவர், பொருள் உண்மை தேறாமல், இருளில் அழுந்திப் பிறந்து உழல்வர் என்பது கருத்து. ஆக இந்நூலின் நுண்பொருளைத் தக்க குரு மூலமாகக் கேட்டுப் பயன்பெறவேண்டும்.

வினா வெண்பா முற்றும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

4. போற்றிப் பஃறொடை

ஆனந்த நடன வணக்கம்

பூமன்னும் நான்முகத்தோன், புத்தேளிர் ஆங்கு அவர்கோன்
மாமன்னு சோதி மணிமார்பன் நாமன்னும் 1

வேதம், வேதாந்தம், விளக்கம்செய் விந்துவுடன்
நாதம், நாதாந்தம், நடுவேதம் – போதத்தால் 2

ஆமளவும் தேட, அளவு இறந்த அப்பாலைச்
சேமஒளி, எவரும் தேறும் வகை – மாமணிசூழ் 3

மன்றுள் நிறைந்து பிறவி வழக்கு அறுக்க
நின்ற நிருத்த நிலை போற்றி. 4

தெளிவுரை:

தாமரை மலரில் அமர்ந்துள்ள அயனும், தேவர்களும் தேவேந்திரனும், திருமகளுடன் பொருந்திய ஒளியை உடைய கௌத்துவமணியை அணிந்துள்ள மார்பினை உடைய மாலும், ஞானிகள் நாவில் விளங்கும் நான்மறைகளும், வேதங்களின் முடிவு ஆகிய உபநிடதங்களும், அறிவை விளக்கும் விந்து தத்துவமும், நாத தத்துவமும், அந்த நாதத் தத்துவத்தின் முடிபு ஆகிய குடிலையும் (பிரணவம்), தத்தம் உள்ளத்தில் தோன்றிய அறிவால் இயன்ற அளவு அடைவதற்கு முயற்சி செய்தும், அவர்களின் அறிவுக்கு எட்டாத அளவுக்கு அப்பால் நிற்பவன் சிவபெருமான்.

உயிர்களின் பிறவித் தொடர்பை அறுத்து எறியும் பொருட்டு, சிறந்த இரத்தினங்கள் சூழ்ந்துள்ள திருச்சிற்றம்பலத்துள், சிவபெருமான் தன்னை அனைத்து ஆன்மாக்களும், தெளிவு பெற்றுத் தரிசிக்குமாறு, உருவத்திருமேனி தாங்கி, தனது பேரொளி எங்கும் நிறைந்து விளங்குகின்ற ஆனந்த நடனக் காட்சி நம்மையெல்லாம் காத்து அருள்வதாக.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இப்பகுதியில் சிவபெருமானின் சொரூப நிலையும் தடத்த நிலையும் கூறப்பட்டுள்ளன. ''எவரும் தேறும்வகை அப்பாலைச் சேம ஒளி'' – சிவபெருமானின் சிறப்பு இயல்பு, ''மன்றுள் நின்ற நிருத்த நிலை'' – சிவபெருமானின் பொது இயல்பு. சொரூப நிலை சிறப்பு இயல்பு எனப்படும்; தடத்தநிலை, பொது இயல்பு எனப்படும்.

''பிறவி வழக்கு' என்பது உயிர்களின் பிறவிப்பிணியைக் குறிக்கும். ''கௌத்தமணி'' என்பது பதுமராகம் ஆகிய மாணிக்கத்தைக் குறிக்கும்.

வேதம் வேறு; வேதாந்தம் வேறு, வேதம் நால்வேதங்கள் ஆகிய ரிக், யசுர், சாம, அதர்வண ஆகியவற்றைக் குறிக்கும் வேதாந்தம், அவற்றின் முடிவுகள் ஆகிய உபநிடதங்களைக் குறிக்கும்.

நாதம் வேறு; நாதாந்தம் வேறு, 'நாதம்' என்பது முப்பத்தாறு தத்துவங்களுள் முதல் தத்துவம் ஆகிய நாதத் தத்துவத்தைக் குறிக்கும். 'நாதாந்தம்' என்பது அத்தத்துவத்திலிருந்து தோன்றும் பிரணவம் ஆகிய ஓங்காரத்தைக் குறிக்கும்.

ஐந்தெழுத்தின் இன்றியமையாமை

–குன்றாத

பல்உயிர் வெவ்வேறு படைத்தும், அவை காத்தும்,
எல்லை இளைப்பு ஒழிய இட்டு வைத்தும் – தொல்லை உறும். 5

அந்தம் அடிநடு என்று, எண்ண அளவு இறந்து
வந்த பெரிய வழிபோற்றி. 6

தெளிவுரை:

இதுவரை ஆன்மாக்கள் பல முத்தி அடைந்துள்ளன. ஆயினும் எண்ணில் அடங்காத பல்வேறு தன்மைகளை உடைய ஆன்மாக்களை, நால்வகைத் தோற்றத்திலே படைத்தும், அவைகளைக் காத்தும், அளவில் அடங்காத பிறப்பு இறப்புக்களால் ஆன்மாக்களுக்கு ஏற்பட்ட இளைப்பு நீங்கும் பொருட்டு, பேரூழிக் காலம் ஆகிய சங்காரத்தின் முடிவில், அந்த ஆன்மாக்களைக் காரண கேவல அவத்தையில் ஒடுக்கி வைத்தும் வருகிறான் சிவபெருமான்.

படைத்தல், காத்தல், அழித்தல் (ஒடுக்கி வைத்தல்) என்னும் தொழில்கள், தொடக்கமில் காலந்தொட்டு நிகழ்கின்றன என்று ஞானிகள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கருதும்படி, கணக்கில் அடங்காது நிகழ்கின்ற பஞ்சக் கிருத்திய முறை எங்களையெல்லாம் காத்து அருள்வதாக.

நால்வகைத் தோற்றங்கள் ஆவன; சராயுசம், அண்டசம், சுவேதசம், மற்றும் உத்பீசம். அவையாவன: கருப்பையில் தோன்றுவன, முட்டையில் தோன்றுவன, வியர்வையில் தோன்றுவன, வித்து மற்றும் கிழங்கில் தோன்றுவன.

'காரண கேவல அவத்தை' என்பது, சர்வ சங்கார காலத்தில், உயிர்கள் அசுத்த மாயா காரணத்தில் ஒடுங்கிப், படைப்புக் காலம்வரை, ஆணவ மலத்திஞல் மறைப்புண்டு ஏதும் அறியாமல் கிடக்கும் நிலையைக் குறிக்கும்.

'அநாதி' என்பது ஆதி அற்றது. அஃதாவது, இன்ன காலத்தில்தான் தொடக்கம் உற்றது என்று எவராலும் கூறமுடியாதது.

அநாதி இரு வகைப்படும். படைத்தல் முதலிய ஐந்தொழில்கள் 'பிரவாக அநாதி' எனப்படும். இத்தொழில்கள் என்று தொடங்கி என்று முடியும் என்பது எவருக்கும் தெரியாது.

மற்ருென்று 'சொரூப அநாதி' ஆகும். அஃதாவது, இறை உயிர் தளை ஆகிய முப்பொருள்களும் என்றிலிருந்து உள்ளன என்பதும் எவராலும் அறியமுடியாதது.

ஐந்தொழில்களில், மறைத்தல் தொழில் காத்தல் தொழிலிலும், அருளல் தொழில் அழித்தல் (ஒடுக்கல்) தொழிலிலும் அடங்கும். எனவே, இப்பகுதியில் முத்தொழில் கூறப்பட்டிருப்பினும், சிவபெருமானின் தொழில்கள் ஐந்து எனக் கொள்வதே பொருந்தும்.

''தொல்லையுறும் அந்தம் அடிநடு'' என்பது? ''தொல்லையுறும் அடி, நடு, அந்தம்'' என்று கொண்டு கூட்டிப் பொருள் உரைக்கப்பட்டது. அடி – படைத்தல்; நடு – காத்தல்; அந்தம் – ஒடுக்கல் (அழித்தல்).

எத்தனை உயிர்கள் முத்தி அடைந்தாலும், முத்தி அடைய வேண்டிய உயிர்கள் என்றும் இருக்கும் என்பதைக் ''குன்ருத'' என்ற சொல்லாலும், ''அந்தம் அடி நடு என்று எண்ண அளவு இறந்து'' என்னும் தொடராலும் ஆசிரியர் குறித்திருக்கிருர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முதல் உற்பாவம் வந்த வரலாறு

—முந்து உற்ற

நெல்லுக்கு உமி தவிடு, நீடுசெம்பில் காளிதமும்
தொல்லேக் கடல் தோன்றத் தோன்று உவரும்—எல்லாம் 7

ஒருபுடை ஒப்பாய்த் தான் உள்ளவாறு உண்டாய்
அருவமாய் எவ்வுயிரும் ஆர்த்தே—உருவுடைய 8

மாமணியை உள் அடக்கும் மாநாகம், வன்னிதன்னைத்
தான் அடக்கும் காட்டத் தகுதியும்போல்—ஞானத்தின் 9

கண்ணே மறைத்த கடிய தொழில் ஆணவத்தால்
எண்ணும் செயல் மாண்ட எவ்வுயிர்க்கும்—உள் நாடிக் 10

கட்புலனுல் காணுர்தம் கைக்கொடுத்த கோலே போல்
பொற்புடைய மாயைப் புணர்ப்பின்கண்—முற்பால் 11

தனுகரணமும் புவனமும் தந்து, அவற்ருல்
மனம் முதலால் வந்த விகாரத்தால்—வினை இரண்டும் 12

காட்டி அதனுல் பிறப்பு ஆக்கிக் கைக்கொண்டும்
மீட்டு அறிவு காட்டும் வினை போற்றி. 13

தெளிவுரை:

முன்பு உண்டான நெல்லுக்கு உமி, தவிடு முதலிய பந்தத்தை ஏற்படுத்தியிருப்பது போன்று, இயல்பாகவே ஒளியை உடைய செம்பில், களிம்பு ஏற்பட்டு செம்பின் ஒளியை மறைப்பது போன்று தொன்மையான கடல் வியாபித்து நிற்கும்போது அக்கடல் நீரில் உப்பு தோன்றியிருப்பது போன்று, உயிரை ஆணவமலம் அநாதியே பந்தித்துள்ளது.

சிவபெருமான் என்றும் ஒரே தன்மை உடையவனுக இருக்கையில் என்றும் உள்ளதாகிய அருவமாய் இருக்கும் ஆணவமலம் இவ்வாறு உயிர்களை ஒருபக்கம், உயிர்களின் பற்றுக்கு ஏற்ப (வியாத்தியாய்) மறைத்துள்ளது.

இஃது எதுபோல் எனின்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பெரிய பாம்பு, ஒளியை உடைய மாணிக்கத்தை தன் நச்சுப் பைக்குள் அடக்கி வைத்திருக்கும் தன்மையையும், விறகு அக்கினியைத் தனக்குள்ளே அடக்கி வைத்திருக்கும் தன்மையையும் போன்றது ஆகும்.

இவ்வாறு ஆன்மாவின் அறிவாற்றலைத் தன் 'ஆவாகரசத்தி' ஆகிய மறைப்பாற்றலால் மறைத்து வைத்திருக்கும் கொடும் தொழிலை உடைய ஆணவமலத்தினுல், அறிவும் செயலும் ஒழிந்த எல்லா உயிர்களுக்கும், அவ்வுயிர்களின் இச்சையை நுணுகி நோக்கி, இறைவன் பேருதவி புரிகிறுன். அவ்வுதவி வருமாறு:

கண்ணுல் காணமுடியாத பிறவிக்குருடனது கையில் கொடுக்கப்படும் ஊன்று கோலைப்போன்று, இறைவன் ஆணவமல மறைப்புக்கு உட்பட்டுக் கிடந்த உயிர்களுக்குப் பிறப்பை வழங்குகிறுன்.

முதன் முதலான இந்த பிறப்பு உயிர்களுக்கு எப்படி ஏற்பட்டது என்பதை இந்தப் பகுதியில் உமாபதி சிவம் விளக்குகிறுர். அது வருமாறு:

மாயா காரியங்கள் ஆகிய உடம்புகளை உயிர்களோடும் கூட்டும் நிலையில், முதன் முதலில் 'சூக்கும தேகம்' எனப்படும் நுண்ணுடலைக் கூட்டுவிக்கிறுன். இறைவன். பின்பு, 'தூல தேகம்' ஆகிய பருவுடலைக் கூட்டுவிக்கிறுன்.

'தனு' என்பது, சூக்கும உடம்பைக் குறிக்கும். 'கரணம்' என்பது, சூக்கும உடம்பில் அமைந்துள்ள மனம், புத்தி, அகங்காரம் என்னும் அந்தக் கரணங்கள் மூன்றையும் குறிக்கும். 'சூக்கும உடம்பு' என்பது, சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் தன் மாத்திரை ஐந்தும், மனம், புத்தி, அகங்காரம் என்னும் அந்தக் கரணம் மூன்றும் ஆகிய எட்டுத் தத்துவங்களால் ஆயது. 'புவனம்' என்பது உலகைக் குறிக்கும்.

முதலில் சூக்கும உடலைத் தந்து அதில் உள்ள மனத்திலிருந்து தோன்றும் விருப்பு வெறுப்புக்களை வினை ஆக்கிக் கொண்டு, தூல தேகத்தைக் கொடுத்து, உயிர்கள் இருவினைகளைப் புரியும்படி இறைவன் செய்கிறுன்.

மீண்டும் அவ்வினைப் பயன்களை நுகருமாறு, தத்துவக் கூட்டங்களோடு கூடிய ஞானத்தைத் தந்து உதவுகிறுன். இவ்வாறு உயிர்க்கு உதவும் சிவபெருமானின் சீரிய செயல் நம்மையெல்லாம் காத்து அருள்வதாக.

சிவபெருமானின் 'முழுநிறைவு' ஆகிய வியாபகத்துள் உயிர்கள் இருப்பினும், ஆணவமலம் சிவபெருமானைப் பந்திக்காமல், உயிர்களை மட்டும் பந்தித்தது என்பதை விளக்கவே, ''கடல், நீர், உப்பு'' உவமையைக் காட்டினுர். கடலின் வியாபகத்துள் நீர் இருப்பினும், கடலிலுள்ள் ஆகாயத்தில் உப்பு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கலக்காமல், கடலில் உள்ள நீரில் கலந்து உள்ளமை, ஒருபுடை உவமையாக கூறினார்.

ஆணவமல பந்தம் எய்திய ஆன்மாவின் விருப்பத்தை அறிந்து, அந்த விருப்பத்திற்கு ஏற்றபடி சிவபெருமான் உயிர்களுக்கு உடல்களை வழங்குவதால், ''உள்நாடி'' என்னும் தொடரால் அதனைக் குறிப்பிட்டார்.

(இச்சித்த புவனங்களிலே இச்சித்த வினைப் போகங்களைக் கூட்டி முடித்துப் புசிப்பிக்கை – என்பது பழைய உரை)

தாயின் கருப்பத்தில் உயிரைக் காக்கும் முறைமை

—நாட்டுகின்ற

எப்பிறப்பும் முற்செய் இருவினையால் நிச்சயித்துப்
பொற்புடைய தந்தைதாய் போகத்துள் –கர்ப்பம்ஆய் 14

புல்லில் பனிபோல் புகும் திவலைக்கு உட்படுங்கால்
எல்லைபடா உதரத்து ஈண்டியதீப் –பல்வகையால் 15

அங்கே கிடந்த அநாதி உயர் தம் பசியால்
எங்கேனும் ஆக எடுக்கும் என வெம்கும்பிக் 16

காயக் கருக்குழியில் காத்திருந்தும் காமியத்துக்கு
ஏயக், கை கால் முதலாம் எவ்வுறுப்பும்– ஆசு அறவே. 17

செய்து திருத்திப்பின்பு யோகு இருத்தி, முன்புக்க
ஐயவழியே கொண்டு அணைகின்ற – பொய்யாத
வல்லபமே போற்றி 18

தெளிவுரை:

சிவாகமங்களில் சொல்லப்படும் பல்வேறு பிறப்புகளுள், ஏதேனும் ஒரு பிறப்பை, முன் பிறப்புக்களில் செய்யப்பட்ட நல்வினை தீவினைகளுக்குத் தக்கபடி, உயிர்களுக்கு வழங்குவதற்கு இறைவன் தீர்மானிக்கிறான்.

அவற்றுள், சிறந்த மனிதப் பிறப்பைத் தரும் முறை வருமாறு:

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அழகு பொருந்திய தந்தையும் தாயும் செய்கின்ற சிற்றின்ப புணர்ச்சியில், கருத்தரிப்பதற்கு உரியதாய், புல்லின் நுனியில் காணப்படும் பனித்துளியின் அளவு, தாயின் கருக்குழியில் ஓர் உயிரோடு பாய்கின்ற தந்தையின் சிறிதளவு சுக்கிலத்தைத் தாயின் கருப்பையினுள் உள்ள சுரோணிதத்தோடு கலந்து, கருவாக உருவாகி இருக்கும்போது,

தாயின் வயிற்றில் உள்ள, உதராக்கினியும் (நெருப்பு) அங்கே கிடந்த பல புழுக்களும் அவற்றுக்குள்ள பசி காரணமாக, வெப்பத்தாலும், பசியாலும் முறையே எரித்தாவது தின்றாவது அக்கருவைத் தொலைத்துவிடும் என்று இறைவன் இரக்கப்பட்டு,

கொடிய நரகத்தை ஒத்த அருவருப்பான கருக்குழியில் அவ்வுயிர்க்குத் துணையாய்க் காவல் இருக்கிறான். பின்னர் அவ்வுயிரின் வினைப்பயனுக்கு ஏற்றபடி கை, கால் முதலிய அனைத்து உறுப்புக்களையும் குறைவின்றி அமைத்து, அழகுபடுத்தி, பின்பு அவ்வுடம்பை யோக நிலையில் எடுத்து நிறுத்துகிறான். அதன்பிறகு, இந்தச் சிறிய யோனித்துவாரம் வழியாக இந்தப் பெரிய உடம்பு எப்படி வெளிவருதல் கூடும் என்று சந்தேகிக்கத்தக்க சிறிய யோனியின் வழியைப் பெரிது ஆக்கி, அந்த வழியே கெட்டுவிடாமல் வெளியே இழுத்துக் கொண்டு வருகின்ற, என்றும் நிலைபேறுடைய எல்லாம் வல்ல சிவபெருமானின் பேராற்றல் எங்களையெல்லாம் காத்து அருள்வதாக.

''வெம் கும்பி'' என்பது, வெப்பம் நிறைந்த தாயின் வயிற்றைக் குறிக்கும்.

''உதராக்கினி'' என்பது வயிற்றில் உள்ள வெப்பத்தைக் குறிக்கும் வெப்பச் சூழ்நிலையிலேயே உடல் வளர்கிறது என்பதுஇங்கு நினைவில் கொள்வதற்குரியது.

இந்த இடத்தில், ''மாதா உதரத்து ஈனம் இல்கிருமிச் செருவினில் பிழைத்தும்'' (போற்றித் திருவகவல் – 13–14) என்னும் திருவாசகத் தொடர் நினைவு கூர்தற்குரியது.

குழந்தைப் பருவத்தில் உதவும் முறைமை

............அம்மாயைக்கால் தான் மறைப்ப
நல்ல அறிவு ஒழிந்து நன்குதீது – எல்லை உரு 19

அக்காலம் தன்னில், பசியை அறிவித்து, அழுவித்து
உக்குஆவி சோரத்தாய் உள்நடுங்கி – மிக்குஓங்கும் 20

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிந்தை உருக, முலைஉருகும் தீம்சுவைப் பால்
வந்து மடுப்பக் கண்டு வாழ்ந்து இருப்பப் –பந்தித்த 21

பாசப் பெருங்கயிற்றால் பல் உயிரும் பாலிக்க
நேசத்தை வைத்த நெறி போற்றி. 22

தெளிவுரை:

குழந்தை பூமியில் பிறந்தவுடன் அதன் அறிவை பிரபஞ்ச மயக்கம் ஆகிய சூறுவளி மறைக்கிறது. எனவே, பிறப்பை ஒழித்து விடல் வேண்டும் என்று கருப்பையில் யோக நிலையில் இருக்கும் போது அந்தக் குழந்தைக்கு ஏற்பட்டு இருந்த ஞானம் நீங்கி விடுகிறது. அதன் காரணமாக, இது நல்லது, இது கெட்டது என்னும் பகுத்தறிவைப் பொருந்தாத, அந்தக் குழந்தைப் பருவத்தில், அக்குழந்தைக்குப் பசி தெரியும்படி செய்து அதனால் அதனை அழும்படி செய்வித்து, அந்த அழுகையைக் கண்ட தாய், பயத்தினால் அவளது உயிர் தளரும்படி உள்ளம் நடுக்கம் எய்தி, அன்பு மீதூர்ந்து, மனம் இரங்குவதால், அவளது தனங்களிலிருந்து இனிய சுவையினை உடைய பால் சுரக்கின்றது.

அந்தக் குழந்தை அந்தப் பாலை வாய்வைத்துக் குடிப்பதைப் பார்த்து அந்தத் தாய் மகிழ்ந்து இருக்க, அவளை அந்தக் குழந்தையோடு சேர்த்துக் கட்டிய பிள்ளைப்பாசம் என்னும் வன்மைமிக்க கயிற்றினால் எல்லா உயிர்களையும் வளர்க்கும் பொருட்டு, தனது கருணைகடாட்சத்தை உயிர்களிடம் வைத்துள்ள சிவபெருமானது காப்பு முறைமை எங்களையெல்லாம் காத்து அருள்வதாக.

பிறந்தவுடன் குழந்தை ஏன் அழுகிறது என்பதற்கு, உமாபதி சிவம் காட்டும் காரணம், நயமாக உள்ளது. தாயின் கருப்பையில் யோக நிலையில் இருந்த குழந்தை, இந்த உலகில் பிறந்தவுடன், அந்தக் குழந்தையிடம் இருந்த ஞானம் ஒழிந்து விடுவதால், நிலையில்லாத உலகில் பிறந்ததும் ஆன்மாவுக்கு உரிய பகுத்தறிவை இழந்துவிட்டதால் குழந்தை அழுகிறது என்று அவர் கூறுகிறார்.

பசியையும் இறைவனே கூட்டுவிக்கிறான் என்னும் உண்மையினை இப்பகுதியில் தெளிவுறுத்துகிறார். அழுகிற குழந்தைக்குப் பால் ஊட்டுவதில் தாய் மகிழ்வதுபோல், துன்புறுகிற நமக்கு உதவி செய்வதில் இறைவன் மகிழ்கிறான் என்பதும் இங்குச் சிந்திக்கத்தக்கது.

''பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்து'' என்னும் திருவாசகப் பாட்டு இங்கு நினைவில் கொள்ளத் தக்கது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சகல நிலையில் உயிர்க்கு உதவியது

—ஆசுஅற்ற

பாளைப் பசும்பதத்தும், பாலனும் அப்பதத்தும்
நாளுக்கு நாள் சகல ஞானத்தும் —மூள்வித்துக் 23

கொண்டு ஆள, ஆளக்கருவி கொடுத்து, ஒக்கநின்று,
பண்டாரி ஆன படி போற்றி. 24

தெளிவுரை:

குற்றம் இல்லாத கருப்பையில் இருக்கும் காலம் ஆகிய மிகச் சிறிய பருவத்திலும் கருவிலிருந்து வெளிவந்த பின்புள்ள குழந்தைப் பருவத்திலும் உதவியதோடு அமையாமல் வாலிபப் பருவத்தும் வயோதிகப் பருவத்தும் ஆகிய எல்லாக் காலங்களிலும் இறைவன் உயிர்க்குப் பேருதவி புரிந்து வருகின்றான்.

இவ்வாறு உடம்போடு கூடியிருத்தல் ஆகிய சகல அவத்தையில் உயிரை நிறுத்தி கலாதி ஞானத்திலே வைத்து ஆளும் பொருட்டு அவ்வுயிர் அறிந்து பயன்படுவதற்காக முப்பதாறு தத்துவங்களையும் அதற்குக் கொடுத்து, தானும் உயிரோடு உடனாய் நின்று பேருபகாரம் செய்பவன் ஆகியுள்ள சிவபெருமானது பேரருள் நம்மை எல்லாம் காத்து அருள்வதாக.

சகலாவத்தை – ஆன்மா முப்பத்தாறு தத்துவங்களோடும் கூடி வாழும் நிலை.

கலாதி ஞானம் – கலை முதலிய தத்துவக் கூட்டங்களின் துணைக்கொண்டு உயிர் அறியும் அறிவு.

ஐந்து அவத்தைகளிலும் உயிர்க்கு உதவும் முறைமை

—தண்டாத

புன்புலால் போர்த்த புழுக்குறம்பை மாமனையில் 25
அன்பு சேர்கின்றன கட்டு ஐந்து ஆக்கி —முன்பு உள்ள

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உண்மை நிலைமை ஒருகால் அகலாது
திண்மை மலத்தால் சிறை ஆக்கிக் – கண்மறைத்து 26

மூலஅரும் கட்டில் உயிர் மூடமாய் உள்கிடப்பக்
காலம் நியதி அதுகாட்டி – மேல் ஓங்கும் 27

உந்திவியன் கட்டில், உயிர்க் கலை, வித்தை
அந்த அராகம் அவை முன்பு – தந்த 28

தொழில் அறிவு இச்சை துணையாக மானின்
எழில் உடைய முக்குணமும் எய்தி – மருளோடு 29

மன்னும் இதயத்தில் சித்தத்தால் கண்டபொருள்
இன்ன பொருள் என்று இயம்ப ஒண்ணு – அந்நிலைபோய்க் 30

கண்டவியன் கட்டில், கருவிகள் ஈர்ஐந்து ஒழியக்
கொண்டு நியமித்து, அற்றை நாள் கொடுப்பப் – பண்டை 31

இருவினையால் முன்புள்ள இன்பத் துன்பங்கள்
மருவும் வகை அங்கே மருவி – உருடவுன் நின்று 32

ஓங்கு நுதல் ஆய ஓலக்க மண்டபத்தில்
போம்கருவி எல்லாம் புகுந்து ஈண்டி – நீங்காத 33

முன்னை மலத்து இருள்உள் மூடாவகை-அகத்துள்
துன்னும் இருள் நீக்கும் சுடரேபோல் – அந்நிலையே 34

சூக்கம் சுடர் உருவில் பெய்து, தொழிற்கு உரியர் –
ஆக்கிப் பணித்த அறம் போற்றி. 35

தெளிவுரை:

இந்தப் பகுதியில், உயிர் நாள்தோறும் மாறி மாறி எய்தும் ஐவகை நிலைகள் கூறப்படுகின்றன. அவற்றைக் கீழிருந்து மேலே வரும் முறைமை இங்கு உணர்த்தப்படுகிறது. அவை வருமாறு: உயிர்ப்படக்கம், பேருறக்கம், உறக்கம், கனவு, நனவு என்பனவாகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உயிர்க்கு முதலில் கிடைக்கப்பெற்ற சகல நிலை, முத்திக்காலத்திற்கு இடையில், சிறிதளவு பொழுதாவது உயிரைவிட்டு நீங்காமல் இருக்கிறது. இழிவான இறைச்சியால் மூடப்பட்ட புழு நிறைந்த உடம்பு ஆகிய இந்தப் பெரிய வீட்டில், என்றும் நீங்காத இறை அருள் காரணமாக, ஐந்து அவத்தைகள் ஏற்படுத்தப்பட்டு அமைந்துள்ளன.

துரியாதீதம் (உயிர்ப்படக்கம்)

மூலாதாரம் ஆகிய அரிய அறையில், ஆன்மாவைப் புருடத் தத்துவத்தோடு கூட்டிப் பிணைந்து, பிற கருவிகளோடு கூடி விளங்காதபடி ஆன்ம அறிவைச் சுருக்குவதால், அவ்வான்மா மூலப்பிரகிருதியைத் தழுவிக்கொண்டு, தமோகுணமயமாய், அந்த அறைக்குள் இருக்கிறது. அப்போது உயிர், அவிச்சை எனப்படும் அறியாமையை மட்டும் நுகர்ந்துகொண்டு இருக்கும். அந்நிலையில் உயிர் இளைப்பாறும் வரை, இறைவன் காலத்தை நியதியினுல் நிறுத்துகிறுன்.

துரியம் (பேருறக்கம்)

அடுத்து விளங்கும் நாபித்தானம் ஆகிய பெரிய அறையில் உயிரைப் பிராணவாயுவுடன், புருடத்தத்துவத்தோடும் கூட்டிச் சேர்த்து வைக்கிறுன் இறைவன், அந்த இடத்தில் கலை, வித்தை, அராகம் ஆகிய மூன்று தத்துவங்களால் முறையே உயிரின் செயல், அறிவு, விருப்பம் ஆகிய மூன்றையும் எழுப்பி, உயிர்க்குத் துணையாக, பிரகிருதி மாயையில் உண்டான அழகு பொருந்திய சாத்துவிக, இராசத, தாமதம் என்னும் முக்குணங்களையும் சேர்த்து, இறைவன் அமைக்கிறுன்.

சுழுத்தி (உறக்கம்)

மயக்கத்தோடு பொருந்திய இருதயம் ஆகிய அறையில், புருடன் பிராணவாயு ஆகிய இரு தத்தவங்களுடன், சித்தம் என்னும் தத்துவத்தோடு கூட்டி, அப்போது சித்தத்தால் கண்ட பொருள் இன்னது என்று சொல்ல மாட்டாத நிலையில் உயிரை இருத்துகிறுன், இறைவன்.

சொப்பனம் (கனவு)

கண்டத் தானம் ஆகிய பெரிய வீட்டில், புற இந்திரியங்கள் ஆகிய வாக்காதி ஐந்தும் சப்தாதி ஐந்தும் ஆகிய பத்துக் கருவிகள் நீங்க, மற்ற இருபத்தைந்து கருவிகளைக் கூட்டி, முன்பு செய்த இருவினைக்கு ஈடாக, முன்னே சாக்கிரத்தில் இன்பத் துன்பத்தைப் புசிப்பித்த முறைமை போல சொப்பனத்திலும் இருவினைப் போகம் ஆகிய சுகதுக்கங்களைத் தீர்மானித்துப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

புசிப்பித்து, அந்நிலையில் அப்பயன்களை உயிர் அனுபவிக்கும்படி இறைவன் அருளிச் செய்கிறுன்.

சாக்கிரம் (நனவு)

அழகு பொருந்தி விளங்குகின்ற நெற்றித்தானம் ஆகிய அரசு அவை போன்ற அறையில் சொப்பனத்தில் தொழிற்படாமல் மடங்கிக் கிடந்த வாக்காதி, சத்தாதி கருவிகள் பத்தும், அப்போது தொழிற்பட்ட இருபத்தைந்து கருவிகளையும் கூட்டி, சாக்கிர அவத்தையில் முப்பத்தைந்து கருவிகளைத் தொழிற்படும்படி இறைவன் செய்கிறுன்.

இந்நிலையில், என்றும் கெடாத, துரியாதீத அவத்தையில் ஏற்பட்ட ஆணவமலத்தின் மயக்கம் உயிரைக் கவராதபடி நாம் குடியிருக்கும் வீட்டில் இருக்கும் இருளை விலக்குகின்ற விளக்குப் போல,

சூக்குமை முதலிய நான்கு வாக்குகளையும், ஆன்ம அறிவில் கூட்டி ஆன்மாக்களை வெவ்வேறு தொழில்களில் வல்லவர் ஆகும்படி செய்து, அந்தந்த தொழில்களில் செலுத்துகின்ற சிவபெருமானது திருவருள் ஆகிய அறம் எங்களையெல்லாம் காத்து அருள்வதாக. இந்த இடத்தில் ''பெருநூல் சொன்ன அறத்திறனுல் விளைவதாய்'' என்னும் சிவப்பிரகாசத் தொடர் 7 நினைவு கூர்தற்குரியது.

குறிப்பு: ஐந்து அவத்தைகளிலும் தொழிற்படும் கருவிகளைப் பற்றிய விளக்கத்தை ''சைவ சித்தாந்த அடிப்படைக் கொள்கைகள் தடைகளும் விடைகளும்'' என்னும் நூலின் பக்கம் 45–47ல் காண்க.

இறைவன் எழுதும் கணக்கு

—வேட்கை மிகும்

உண்டிப் பொருட்டால் ஒருகால் அவியாது
மண்டி எரியும் பெரும்தீ மாற்றுதற்குத்—திண்திறல்சேர் 36

வல்லார்கள் வல்ல வகையால், தொழில் புரிதல்
எல்லாம் உடனே ஒருங்கு இசைந்து —சொல்காலை 37

முட்டாமல் செய்வினைக்கும், முன்செய் வினைக்கும் செலவு
பட்டோலை தீட்டும்படி போற்றி. 38

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

மேலே விவரித்தபடி, சகலாவத்தையில் கருவிகளைக் கூட்டி இறைவன் செய்துவரும் பேருதவிகளை மறந்து, (செய்நன்றி கொன்று) உலகத்தில் உள்ள பேராசை மிகுதி காரணமாக, உயிர்கள் பல்வேறு செயல்களைச் செய்து வருகின்றன.

ஒருபோதும் நீக்க முடியாத மிகுந்து எரிகின்ற வயிற்றுப் பெரும் பசியைப் போக்குவதற்காக, பேராசையுடன் அவரவர் திறமைக்கு ஏற்றபடி வன்முறைகளைக் கையாண்டு பலவாறு தொழில்களைச் செய்கிறார்கள்.

அவர்கள் செய்யும் எல்லாச் செயல்களிலும் அவர்களோடு தானும் உடனாய் கூடி இருந்து, அவர்கள் அச்செயல்களைப் புரியும்படி செய்து, அச்செயல்கள் நடைபெறும் காலத்தில் அவர்களுக்கு இடையறாமல் ஏறுகின்ற ஆகாமிய வினைக்கும், சஞ்சித வினைக்கும் பிராரத்துவ வினைக்கும், அவ்வப்போது கணக்கு எழுதி வைத்துக் கொள்கின்ற சிவபெருமானின் திருவருள் எங்களையெல்லாம் காத்து அருள்வதாக.

ஆகாமியம் – புதியனவாகச் செய்யும் வினைகள்,

சஞ்சிதம் – முன்னமேயே செய்து இருப்புச் சரக்காக உள்ள வினைக்குவியல்.

பிராரத்தம் – அந்த இருப்புச் சரக்கிலிருந்து அனுபவிக்கும் பொருட்டு, எடுத்து ஊட்டப்படும் வினைப்பயன்கள் ஆகிய இன்பத் துன்பங்கள்.

மக்கள் செய்யும் புண்ணியச் செயல்களுக்கு மட்டுமல்லாமல் பாவச் செயல்களுக்கும் சிவபெருமான் உடனாகவே இருக்கிறான். அவ்வாறு அவன் உடனாக இருந்தாலும், அந்த இருவினைகளின் பயன்கள் உயிர்களையே சேர்கின்றன. இதற்குக் காரணம், வினை செய்யும் போது இறைவன் உடனாக இருக்கிறான் என்பதை உயிர்கள் உணராமல் தாமே செய்வதாக நினைந்து வினைகளைச் செய்வதனாலேயே ஆகும். நாம் செய்யும் வினைகளுக்கு இறைவன் உடனாகவே நிற்கிறான் என்னும் உணர்வு நமக்கு இருக்கும் ஆயின், அவ்வினைகளுக்குரிய பயன்கள் நம்மை வந்து அடையமாட்டா.

இத்தகைய உணர்வு நமக்கு இருக்க வேண்டும் என்னும் உண்மையை நமக்கு உணர்த்தும் பொருட்டே, சுந்தரர் பெருமான், ''யான் செய்யும் துரிசுகளுக்கு உடனாகி'' (7–51–70) என்று அருளிச் செய்துள்ளார்கள்.

நாம் செய்யும் வினைகள் எப்படி எப்படிச் செய்து வருகிறோம் என்பதற்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இறைவன் முறையான கணக்கு எழுதிக்கொண்டு இருக்கிறுன் என்னும் உண்மையை அப்பரடிகள்,

''தொழுது, தூமலர் தூவித், துதித்து நின்று,
அழுது, காமுற்று, அரற்று கின்றுரையும்,
பொழுது போக்கிப், புறக்கணிப் பாரையும்
எழுதும் கீழக் கணக்கு, இன்னம்பர் ஈசனே'' (5–21–8)

என்று அருளிச் செய்திருப்பது இங்கு நினைவு கூர்தற்குரியது.

''பட்டோலை'' என்பது, பொதுவாக அரசர் விடும் திருமுகத்தையே குறிக்கும். இங்குச் சிவலோக அரசன் ஆகிய சிவபெருமான் எழுதும் கணக்கு ஓலையைக் குறிக்கும். கணக்குப் புத்தகங்களில் 'பேரேடு' என்று ஒன்று உண்டு. ஒவ்வொருவரின் பெயருக்கு ஒவ்வொரு ஏடு போடுவதால், அதுபேரேடு (பெயரேடு) எனப்பட்டது. இங்குச் சிவபெருமான் எழுதும் பட்டோலையும் ஒருவகையான பேரேடு போன்றதே ஆகும்.

வினைப்பயனை ஊட்டும் முறைமை

—நட்டு ஓங்கும்

இந்நிலைமை மானுடருக்கே அன்றி எண் இலா
மன்உயிர்க்கும் இந்த வழக்கே ஆய் —முன்உடைய 39

நாள் நாள் வரையில் உடல்பிரித்து நல்வினைக்கண்
வாழ்நாளின் மால்ஆய் அயன்ஆகி —நீள்நாகர் 40

வான்நாடர் கோமுதல் ஆய் வந்த பெரும்பதத்து
நானு விதத்தால் நலம்பெறுநாள் —தான்மாள 41

வெற்றிக் கடும்தூதர் வேகத்துடன் வந்து
பற்றித்தம் வெம்குருவின் பால்காட்ட —இற்றைக்கும் 42

இல்லையோ பாவி பிறவாமை என்று எடுத்து
நல்லதோர் இன்சொல் நடுஆகச் —சொல்லி இவர் 43

செய்திக்கு தக்க செயல் உறுத்துவீர் என்று
வெய்துற்று உரைக்க விடைகொண்டு —மையல்தரும் 44

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

செக்கினிடைத் திரித்தும், தீவாயில் இட்டு எரித்தும்
தக்க நெருப்புத் தூண் தழுவித்தும், – மிக்கு ஓங்கும் 45

நாராசம் காய்ச்சிச் செவிமடுத்தும், நாஅரிந்தும்
'ஈராஉன் ஊனைத்தின்' என்று அடித்தும், – பேராமல் 46

அங்கு ஆழ் நரகத்து அழுத்துவித்தும், பின்னும்தம்
வெம்கோபம் மாருத வேட்கையர்ஆய் – இங்கு ஒருநாள் 47

எண்ணி முதல் காணுத இன்னல் கடுநரகம்
பல்நெடுநாள் செல்லும் பணிகொண்டு – முன்நாடிக் 48

கண்டு கடன்கழித்தல் காரியம் ஆம் என்று எண்ணிக்
கொண்டு வரும் நோயின் குறிப்பு அறிவார் – மண்டு எரியில் 49

காய்ச்சிச் சுட அறுக்கக் கண் உரிக்க நல்நிதியம்
ஈய்த்துத் ாய் தந்தைதமர் இன்பு உறுதல் –வாய்ந்த நெறி 50

ஓடிய தேரின் கீழ் உயிர்போன கன்ருலே
நீடுபெரும் பாவம் இன்றே நீங்கும் என – நாடித்தன் 51

மைந்தனையும் ஊர்ந்தோன் வழக்கே வழக்குஆக
நஞ்சுஅனைய சிந்தை நமன்தூதர் – வெம்சினத்தால் 52

அல்லல் உறுத்தும் அருநரகம் கண்டுநிற்க
வல்லகருணை மறம் போற்றி. 53

தெளிவுரை:

இறைவன், உயிர்கள் செய்த நல்வினை, தீவினைகளுக்குக் கணக்கு எழுதியவாறு, அவ்விரு வினைகளுக்குள்ள பயன்களை எப்படி உயிர்களுக்கு ஊட்டுகிருன் என்பதை இப்பகுதியில் உமாபதி சிவம் கூறியருள்கிருர்.

நாட்டப்பட்டு விளங்குகின்ற கணக்கு எழுதி, பயன் வழங்கும் தன்மை, மானுடர்களுக்கு மட்டும் அல்லாமல், எண்ணில் அடங்காத எல்லா உயிர்களுக்கும் இந்த முறையிலேயே வினைகளுக்குரிய பயன்களை இறைவன் வழங்குகிருன். அஃது எப்படி?

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முன்பு அமைந்த ஆயுள் முடிந்ததும், ஒவ்வொரு உயிரின் தூல உடல்களைப் பிரித்து, நல்வினைகளைச் செய்த உயிர்களையெல்லாம் பூதாசார சரீரம் ஆகிய திவ்விய சரீரத்துடன் நீண்ட நாட்கள் வாழ்ந்து இருக்கும்படி, விட்டுணு உலகத்தில் விஷ்ணுக்களாகவும், பிரமலோகத்தில் பிரமர்களாகவும், தேவலோகத்தில் தேவேந்திரர்களாகவும் பிற தேவர்களாகவும், முறையே அவரவர்களுக்கு என்று பல்வேறு வகையான இன்பங்களை அனுபவித்துக் கொண்டு இருக்கும்படி இறைவன் செய்கிறான்.

மேற்சொன்ன உலகத்தில் உள்ள இன்ப நுகர்ச்சி முடிந்த பிறகு, பூலோகத்தில் அரசர்க்குள்ள அனைத்து செல்வங்களுடன் வாழும்படி செய்கிறான். இவ்வாறு நல்வினைப் பயன்களை அனுபவித்து முடித்த உயிர்கள், தீவினைப் பயன்களை அனுபவிக்கும் பொருட்டு இறைவன் அமைத்துள்ள முறை வருமாறு:

மிகுந்த தீவினைகளைச் செய்த உயிர்களை எமதூதர்கள் விரைவாகச் சென்று பூலோகத்தில் உள்ள தூல உடலைப் போக்கி, அந்த உயிர்களுக்கு யாதனா சரீரத்தைக் கொடுத்து, அவ்வுயிர்களைப் பிடித்து இழுத்துக் கொண்டுபோய், தமது கொடிய எமதருமராசன் முன்பு நிறுத்துவார்கள்.

எமதருமராசன், அந்த உயிர்களைப் பார்த்து, "பாவிகளே, இவ்வளவு பிறப்பு வாய்ப்புக்களை இறைவ:ன் தந்த பிறகும், அவனது திருவடியை அடையும் பொருட்டு பிறவா நெறியைப் பெறவேண்டும் என்னும் எண்ணம் இதுநாள்வரை உங்களுக்கு ஏற்படவில்லையா?" என்று கேட்டு மிகவும் இரக்கத்தோடு இனிய சொற்கள் சிலவற்றைக் கூறிப் பின்பு நடுவுநிலைமையைக் காக்கும் பொருட்டு அவ்வுயிர்களைப் பார்த்து சினந்து, எமதூதர்களை நோக்கி, "இவ்வுயிரின் தீவினைக்குத் தக்க தண்டனைகளை வழங்குங்கள்" என்று கட்டளை இடுகிறான்.

எமதூதர்களும், எமதருமராசனின் கட்டளைப்படி, அந்த உயிர்களை இழுத்துக் கொண்டுபோய், மயக்கத்தைத் தரும் செக்கில் இட்டு ஆட்டியும் அக்கினிக் குழியில் தள்ளி எரித்தும் முரட்டுத் தனமாக அக்கினித் தம்பத்தைக் கட்டி அணைக்கும்படி செய்தும், இரும்பு ஆணியைக் (நாராசம்) காய்ச்சிக் காதில் செலுத்தியும், நாக்கை வாளால் அறுத்தும், "உனது உடம்பில் உள்ள மாமிசத்தை நீயே அறுத்துத் தின்" என்று கூறி உலக்கை முதலிய தடிகளைக் கொண்டு அடித்தும், அங்குள்ள ஆழ் நரகக் குழிக்குள் விட்டு, அக்குழியை விட்டு விலகாமலிருக்கும்படி அமுத்தியும், கொடிய தீவினை செய்த உயிர்களுக்குத் தண்டனை வழங்கினர்.

இவ்வாறெல்லாம் செய்த பிறகும்கூட தம் கொடிய கோபம் தீராத எமதூதர்கள், ஒருநாள், இருநாள் அல்லாமல் பல ஊழிக் காலமாக, அளவு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கடந்த துன்பத்தை உடைய கொடிய நரகத்தில் அந்த உயிர்களைத் தண்டித்து வருவதைக் கண்டு, கருணையே வடிவான சிவபெருமான், உயிர்கள் இவ்வாறு கொடுந்துன்பத்தில் இருப்பதை எப்படிப் பார்த்துக் கொண்டு இருக்கிறான் என்று நீங்கள் கேட்கலாம். அதற்குப் பதில் வருமாறு:

உலகத்தில் உள்ள தாய்மார்களும், தந்தையர்களும், தங்கள் பிள்ளைகள் உடல் நோயினால் வருந்துவதை அறிந்து, அந்நோயைத் தீர்க்கும் பொருட்டு, அதற்குரிய மருத்துவத்தைச் செய்வது தங்கள் கடமை எனக் கருதி, அந்நோயை அறிந்து அதற்கு ஏற்ற மருந்தைக் கொடுத்துத் தீர்க்கும் மருத்துவரிடம், தங்கள் பிள்ளைகளை ஒப்படைக்கிறார்கள். அந்த மருத்துவர் பல்வேறு அறுவைச் சிகிச்சைகளைச் செய்யும் பொருட்டு, அந்த நோயாளியின் உடலில் இரும்பு ஆணியைக் காய்ச்சிச் சுடுகிறார்; அவ்வுடலைக் கத்தியால் அறுக்கிறார்; படலம் உள்ள கண்ணினை உரிக்கிறார்; இப்படியெல்லாம் மருத்துவர் செய்யும் போது, நோயுற்ற பிள்ளைகள் வருந்துவதைக் கண்டும், தங்கள் பிள்ளைகளின் நோய் தீரும் பொருட்டு மருத்துவர் செய்வதை அமைதியாகப் பார்த்துக் கொண்டு இருப்பதோடு அல்லாமல், அந்த மருத்துவருக்குக் கூடுதலாகப் பொருள்களையும் வெகுமதிகளையும் கொடுத்து, மகிழ்கிறார்கள். அப்பெற்றோர்களைப் போலவே, சிவபெருமானும், கொடிய தீவினை செய்த உயிர்களின் ஆணவமல நோய் தீரும் பொருட்டு, அவ்வுயிர்கள் படும் கொடிய நரக வேதனைகளைக் கண்டும் வாளா இருக்கிறான்.

இவ்வுண்மையை ஓர் உவமை வாயிலாக உமாபதி சிவம் விளக்குகிறார். அது வருமாறு:

மனுச் சக்கரவர்த்தி என்னும் சோழ மன்னன், தான் அரிய தவம் செய்து பெற்ற ஒரு மகன், திருவாரூரில் தேரில் செல்லும்போது, அத்தேர்க் காலில் ஓர் இளம் பசுக்கன்று ஓடிவந்து வீழ்ந்து இறந்தது. அக்கன்றினைக் கொன்ற பாவத்தைப் போக்கும் பொருட்டு, அந்த மன்னன், மந்திரி பிரதானிகள் எவ்வளவு சொல்லித் தடுத்தும், அதனைச் செவிமடுக்காமல், பசுவின் கன்றினைத் தன் மகன் தேர்க்காலில் நசுக்கியபடி தன் மகனும் தேர்க்காலில் நசுங்கி இறக்க வேண்டும் எனக் கருதித் தேர்க்காலில் ஏற்றித் தன் மகனைக் கொன்றான். எமதருமராசன் அந்த அரசகுமாரனைப் பிடித்து நரகத்தில் வருத்தாமல் இருக்கும் பொருட்டு, அரசன் தன் மகனுக்குத் தண்டனை வழங்கியது போல், சிவபெருமானும் அதே நீதியையே, கொடிய தீவினை செய்த உயிர்களை நரகத்தில் இட்டு, இவை திருந்தும் பொருட்டும் மேற்கொண்டு தீவினைப் பயன் உயிர்களை வந்து சாராது இருக்கும் பொருட்டும், நரகத்தில் இட்டுத் துன்புறுமாறு செய்விக்கிறான்.

எனவேதான், நஞ்சினை ஒத்த நெஞ்சினை உடைய எமதூதர்கள், கடுங் கோபத்துடன், பாவம் செய்த உயிர்களைக் கொடிய நரகத்தில் இட்டுத்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

துன்புறுத்துவதை, அனைத்து உயிர்களுக்கும் தந்தையும் தாயுமாய் இருக்கின்ற சிவபெருமான் உயிர்களின் ஆணவமலம் தீர்ந்தால் போதும் என்று மகிழச்சியுடனே கண்டு நிற்கிறுன். இத்தகைய சிறப்பு மிக்க சிவபெருமானின் மறக்கருணை எங்களை யெல்லாம் காத்து அருள்வதாக.

'மறக்கருணை' என்பது, உயிர்களுக்குத் துன்பம் போல் காணப்பட்டு, இன்பம் பயக்கும் சிவச்செயல் ஆகும். 'அறக்கருணை' என்பது, இன்பமாகவே காணப்பட்டு இன்பத்தைத் தருவதாகும்.

சாதாரணமாகச் செய்யப்படும் நல்வினை தீவினைகளுக்கு உரிய இன்ப துன்பங்களை, இறைவன் இந்த உலகத்திலேயே நுகருமாறு செய்கிறுன்.

பெரும் புண்ணியத்துக்கு உரிய மிகுதியான இன்பத்தை உயிர்கள் நுகரும் பொருட்டு, இறைவன் அவ்வுயிர்களை சுவர்க்கலோகம் என்னும் தேவலோகத்திற்கு அனுப்புகிறுன்.

பெரும் பாவத்திற்கு உரிய கொடுந் துன்பங்களை உயிர்கள் அனுபவிக்கும் பொருட்டு, இறைவன் அவ்வுயிர்களைக் கடுமையான நரகத்திற்கு அனுப்புகிறுன்..

ஆன்மாக்களுக்குச் சத்திநிபாதம் வருவித்தல்

—பல் உயிர்க்கும்

இன்ன வகையால் இருவினைகண் நின்று அருத்தி
முன்னை முதல் என்ன முதல் இல்லோன் – நலவினைக்கண் **54**

எல்லா உலகும் எடுப்புண்டு எடுப்புண்டு
செல்காலம் பின்நரகம் சேராமே – நல்லநெறி **55**

எய்துவதோர் காலம் தன் அன்பரைக் கண்டு இன்புறுதல்,
உய்யும்நெறி சிறிதே உண்டாகிப் – பையவே **56**

மட்டாய் மதராய் வருநாளில் முன்னைநாள்
மொட்டாய் உருஆம் முறைபோலக் – கிட்டியதோர் **57**

நல்ல பிறப்பில் பிறப்பித்து நாடும் வினை
எல்லை இரண்டும் இடைஒப்பில் – பல்பிறவி **58**

அத்தம்அதில் அன்றே அளவு என்று பார்த்து இருந்து,
சத்தி பதிக்கும் தரம் போற்றி. **59**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

வேறு ஒருவரையும் தனக்கு முதல்வனுக இல்லாத சிவபெருமான் அனைத்து உயிர்களுக்கும் மேலே கூறியபடி, நன்மையையே செய்யும் நோக்கில், பிறப்பு நிலை முடிவதுவரை, உயிர்களுக்கு நல்வினை தீவினைப் பயன்களைக் கூட்டுவித்து நுகர்விக்கச் செய்கிறுன்.

அவ்வாறு செய்கையில், அந்த இருவினைகளுக்கு இருப்பிடம் ஆகிய மாயா உலகங்களை மாறி மாறி வரும்படி, தொன்றுதொட்டுப் படைத்தும் காத்தும், ஒடுக்கியும் மறைத்தும் அருளியும், பேரருள் உடைமை ஆகிய தனது அருளாற்றலைக் கொண்டு, ஐந்தொழில் ஆற்றிவருகின்றுன்.

அந்நிலையில் உயிர்களின் மலபரிபாகத்தை அறிந்து அதனுல் அவ்வுயிர்கள் நரக உலகத்திற்குச் செல்லும் பிறப்பு நிலையை மாற்றி, அத்தகைய ஆன்மாக்களுக்கு வீடுபேற்று நிலையை ஏற்படுத்தும் பொருட்டு, அவ்வுயிர்கள் சிவனடியார்களைக் கண்டவுடனே, சிவபெருமானையே கண்டதுபோல, இன்புற்று, அந்தச் சிவனடியார்கள் ஏவின பணிவிடைகளைக் கேட்டு உய்யும்படி, நல்வழியைச் சற்றே காட்டி உதவுகிறுன், சிவபெருமான்.

இவ்வுதவியைச் சிவபெருமான் செய்யும் முறை வருமாறு:

தேன் உண்டாகி, கொஞ்சம் கொஞ்சமாய் மலர் ஆக விரியும் பருவத்திற்கு முந்திய நிலையில் மொட்டாக இருந்து வளர்ந்து வருகின்ற மலரின் தன்மையைப் போன்று,

கீழ்ப் பிறவிகளிலிருந்து, தன்னலமற்ற நல்வினைப் பயனுல் படிப்படியாக உயர்ந்து, இறுதியில் உயர்ந்த சைவ சமயத்தில் அத்தகு ஆன்மாக்களைப் பிறப்பிக்கும்படி செய்து, நல்வினை தீவினை என்னும் இருவினைகளும் தம்முள் ஒத்துப்போகும் இருவினை ஒப்பு வாய்க்கப்பெற்ற நிலை.

இதுவரை எடுத்த எல்லாப் பிறப்புக்களிலும் செய்த எல்லா வினைகளும் முடியும்படி செய்து, அந்த ஆன்மாக்களிடத்து தனது தீவிர தரம் பொருந்திய அருட்சத்தியைப் பதியச் செய்கின்ற சிவபெருமானின் பேரருட்டிறம் எங்களையெல்லாம் காத்து அருள்வதாக.

''இருவினை ஒப்பு'' என்பது, நல்வினை தீவினைகளிலும் அவற்றின் பயன்கள் ஆகிய இன்ப துன்பங்களிலும் ஆன்மா ஒரே நோக்கில் உவர்ப்புக் கொள்ளுதல் ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''மலபரிபாகம்'' என்பது, மலம் தனது ஆற்றல் தேய்தற்கு உரிய துணைக் காரணங்கள் எல்லாவற்றோடும் கூடுதலே ஆகும்.

''சத்திநிபாதம்'' என்பது, மலம் பரிபாகம் அடைதல் பொருட்டு, அம்மலத்திற்கு அனுகூலமாய் நின்று ஆன்மாக்களை நடத்திவரும் மறைப்பாற்றல், மலபரிபாகம் அடைந்ததும், அருட்சத்தியாக விளங்கி, பக்குவப்பட்ட ஆன்மாக்களிடத்துப் பதிவதைக் குறிக்கும்.

சத்தி – சத்தியினது: நி – ஏற்றமான;
பாதம் – வீழ்ச்சி, அருளாற்றலின் பதிவு.

மூவகை ஆன்மாக்களுக்கும் அருளும் முறைமை

–முத்தித்தரும்
நன்னெறி விஞ்ஞானகலர் நாடு மலம் ஒன்றினையும்
அந்நிலையே உள்நின்று அறுத்து அருளிப்–பின் அன்பு 60

மேவா விளங்கும் பிரளயாகலருக்குத்
தேவாய் மலகன்மம் தீர்த்து அருளிப்–பூவலயம் 61

தன்னின்று நீங்காச் சகலர்க்கு அவர்போல
முன் நின்று மும்மலம் தீர்த்து ஆட்கொள்கை–அன்னவனுக்கு 62

ஆதி குணம் ஆதலினால் ஆடும் திருத்தொழிலும்
சோதி மணி மிடற்றுச் சுந்தரமும்–பாதியாம் 63

பச்சை இடமும் பவளத் திருச்சடைமேல்
வைச்ச நதியும் மதிக்கொழுந்தும்–அச்சம் அற 64

ஆடும் அரவும் அழகார் திருநுதல் மேல்
நீடுருவ வன்னி நெடும் கண்ணும்–கேடு இலயம் 65

கூட்டும் தமருகமும் கோல எரி அகலும்
பூட்டு அரவக் கச்சும் புலியதளும்–வீட்டு இன்ப 66

வெள்ளத்து அழுத்தி விடும் தாளினும் அடியார்
உள்ளத்தினும் பிரியா ஒண்சிலம்பும்–கள்ளவினை 67

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வென்று பிறப்பு அறுக்கச் சாத்திய வீரக் கழலும்
ஒன்றும் உருத் தோன்ருமல் உள்ளடக்கி – என்றும் 68

இறவாத இன்பத்து எமை இருத்த வேண்டிப்
பிறவா முதல்வன் பிறந்து – நறவு ஆரும் 69

தார் உலாவும் புயத்துச் சம்பந்த நாதன் என்று
போ இலா நாதன் ஒரு பேர் புனைந்து – பாரோர்தம் 70

உண்டி உறக்கம் பயம் இன்பம் ஒத்து ஒழுகிக்
கொண்டு மகிழ்ந்த குணம் போற்றி 71

தெளிவுரை:

இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் பெற்றுப் பக்குவம் வாய்ந்த ஆன்மாக்களுக்குச், சிவபெருமான் குருவடிவில் வந்து அருளிச் செய்யும் முறைமை பற்றி இப்பகுதியில் கூறப்படுகின்றது.

சிவபெருமான், நல்வழியை உடைய விஞ்ஞான கலர்க்கு முத்தியைக் கொடுக்கும் முறையாவது, அவர்கள் பற்றி இருக்கின்ற ஆணவமலம் ஒன்றினை நீக்கி, அவர்கள் அறிவுக்குள் பேரறிவாய் ஒளியுடன் தோன்றி, அவர்களை அருள்வடிவு ஆக்கி, சிவத்துள் அழுந்தும்படி அருள் செய்கிருன்.

பின்பு, அன்பு பொருந்தி விளங்குகின்ற பிரளயாகலர்க்குத் தன் திருவுருவைக் காணுமாறு, மானும், மழுவும், நான்கு தோளும் கறைமிடறும், முக்கண்ணும் உடைய திருமேனி கொண்டு இருந்து, அவர்களைப் பற்றி இருக்கின்ற ஆணவமலம், கன்ம மலம் ஆகிய இரண்டையும் நீக்கி, அவர்களை அருள் வடிவு ஆக்கி, சிவத்துள் அழுந்தும்படி அருள் செய்கிருன்.

அசுத்த மாயையின் காரியமாகிய இந்த உலகத்தை விட்டு நீங்காமல் இருக்கின்ற, நம் போன்ற சகலர்க்கு, நம்மைப் போல் மானுடச் சட்டை சாத்தி, மானைக் காட்டி மானைப் பிடிப்பார் போல் நம் முன்பு வந்து நின்று உபதேசம் செய்து, நம்மைப் பற்றி இருக்கின்ற ஆணவம் கன்மம் மாயை என்னும் மூன்று மலங்களையும் தீட்சை முறைகளில் தீர்த்து, நம்மை அருள் வடிவு ஆக்கி, சிவபெருமானுக்கு அடிமை ஆக்கிக் கொள்ளுதல், அவனுக்குத் தொன்று தொட்டே உள்ள பேரருட் குணமாகும்.

எனவே, திருச்சிற்றம்பலத்தில் நின்று திருநடனம் செய்கின்ற ஒளி மிகுந்த நீலமணி போன்ற கரிய கண்டத்தின் அழகும், திருமேனியில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பாதியாய்ப், பச்சை நிறத்தை வடிவமாகக் கொண்டு இலங்கும் சிவகாமசுந்தரி தங்கிய இடப்பாகமும், பவளக்கொடி படர்ந்து கிடப்பது போன்ற சிவந்த அழகிய சடாமுடியும், அச்சடா முடியின்மேல் தரித்திருக்கின்ற கங்கையும், பிறைச் சந்திரனும், கண்டவர் அஞ்சும்படி ஆடுகின்ற பாம்பும், அழகுமிக்க திருநெற்றியின்மேல் உள்ள மேல் நோக்கி எரியும் அக்கினி மயமான நீண்ட கண்ணும், வலக்கையில் குற்றம் அற்ற கூத்தை நிகழ்த்துகின்ற உடுக்கும், அழகு பொருந்திய இடக்கையில் அக்கினியும், அரையில் கட்டி இருக்கின்ற ஐந்தலைப் பாம்புக் கச்சும், புள்ளிகளை உடைய புலித்தோல் உடையும்,

பக்குவம் உள்ள ஆன்மாக்களை மோட்சம் என்னும் பேரின்ப வெள்ளத்தில் அழுத்துவதற்கு ஊன்றின பாதத்திலும், அடியார் உள்ளத்தில் கலந்து, இன்ப நிறைவினை உடைய ஞானம் ஆகிய தூக்கிய திருவடியிலும் பிரியாமல் தரித்திருக்கின்ற திருவருள் ஒளி பொருந்திய சிலம்பும்,

உயிர்களை வஞ்சத்தால் பிணித்து நிற்கின்ற இரண்டு வினைகளையும் தொலைத்து, அவற்றின் பிறவித் துன்பத்தை ஒழித்து விடுதற்கு ''நாமே வலியுடையோம்'' என்று முழந்தாளில் அணிந்து இருக்கின்ற வீரகண்டா மணியும் ஆகிய இவை ஒன்றும் தன் வடிவில் தோன்ருதபடி, உள்ளே அடக்கி ஒளித்துக் கொண்டு, என்றும் முடிவு இல்லாத பேரின்பப் பெருநிலையில், என்னைப் போன்ற சகல வர்க்கத்தில் இருக்கின்ற உயிர்களை வைப்பதற்குத் திருவுளம் கொண்டு,

யோனி வழியாக பிறவாதவன் ஆகிய முதல்வன், தன் இயல்பு முழுவதையும் விளக்கத் தக்க யாதொரு பெயரையும் தனக்கு இல்லாத ஞானமே வடிவு ஆகிய சிவபெருமான், குருவடிவாக வெளிப்பட்டு, தேன் நிறைந்த பூமாலை கிடந்துஅசையும் தோள்களை உடைய ''மறைஞான சம்பந்த சிவன்'' என்னும் ஒப்பற்ற திருப்பெயரைத் தாங்கி,

உலகத்தில் உள்ள உயிர்களைப் போன்று, உண்பதும், உறங்குவதும், அஞ்சுவதும், விடயபோகம் இன்புறுவதும் முதலானவற்றைத் தானும் அப்படியே செய்து, உயிர்களில் ஒருவனுக இருந்து கொண்டு, ஒத்து ஒழுகிக் ''கொண்டு மகிழும்'' அவனது உயர்ந்த குணம் எங்களையெல்லாம் காத்து அருள்வதாக.

தீட்சையால் ஆணவமலத்தை நீக்குதல்

–மிண்டாய

ஆறு சமயப் பொருளும் அறிவித்து அவற்றில்
பேறு இன்மை எங்களுக்கே பேறு ஆக்கித்–தேருத 72

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சித்தம் தெளியத் திருமேனி கொண்டு வரும்
அத்தகைமை தானே அமையாமல் – வித்தகமாம் 73

சைவ நெறியில் சமயம் முதலாக
எய்தும் அபிடேகம் எய்துவித்துச் – செய்யதிருக் 74

கண் அருளால் நோக்கிக் கூடிய பிறப்பால் பட்ட
புண்ணும் இருவினையும் போய் அகல – வண்ணமலர்க் 75

கைத்தலத்தை வைத்து அருளிக் கல்லாய நெஞ்சு உருக்கி
மெய்த்தகைமை எல்லாம் விரித்து ஓதி – ஒத்து ஒழுகும் 76

சேண் ஆர் இருள்வடிவும்செங்கதிரோன் பால் நிற்பக்
காணது ஒழியும் கணக்கே போல் – ஆணவத்தின் 77

ஆதி குறையாமல் என்பால் அணுகாமல்
நீதி நிறுத்தும் நிலை போற்றி 78

தெளிவுரை:

இவ்வாறு ஆசாரிய மூர்த்தியாய் வந்த சிவபெருமான், பெண்ணுகடத்தின்கண் எழுந்தருளி இருந்து அகங்காரத்தோடு பிழைபட்ட ஆறு புறச்சமயங்களின் கோட்பாடுகளை எல்லாம் அறிவித்து, அந்தச் சமயங்களில் யாதொரு நிலையான பயனும் இல்லை என்பதை எங்களைப் போன்ற அடியார்களுக்கு மட்டுமே உள்ளத்தில் நன்ருகப் பதியும்படி எடுத்துக் காட்டி,உண்மையை உணரமாட்டாத எங்களது சித்தம் தெளிவு பெறும்படி, எங்களுக்குக் காட்சி அளித்தது மட்டும் போதாது என்று திருவுளம் கொண்டு மெய்கண்ட சந்தானச் சுத்த சைவ நல் ஒழுக்கத்தில் சொல்லப்பட்ட சமய தீட்சை முதல் ஆசாரிய முழுக்கு வரை உள்ள நான்கு வகை தீட்சைகளையும் எங்களுக்குச் செய்து வைத்தனை.

கொடிய பிறவிகளால் ஏற்பட்ட துன்பங்களும் புண்ணிய, பாவங்களும் உயிரை விட்டு நீங்கும்படி, உனது சிவந்த திருக்கண்களிலிருந்து பொழி கின்ற கருணை கொண்டு பார்த்து, அழகு பொருந்திய தாமரை மலர் போன்ற உனது திருக்கரங்களை எங்கள் தலைமேல் வைத்தருளி, கல்லுப் போன்றிருந்த எங்கள் உள்ளத்தை, அக்கினியைச் சேர்ந்த மெழுகு போல உருக்கி, என்றும் உள்ள பொருள்கள் ஆகிய இறை, உயிர், தளை என்னும் முப் பொருளின் உண்மைகளை எல்லாம் தெளிவாக உபதேசித்து அருளிச் செய்தனை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆகாயத்தை மறைத்த பூத இருள் வடிவம், அந்த ஆகாயத்தில் சிவந்த சூரியன் உதயம் ஆனவுடன் அந்த இருள் மறைந்து நீங்க, அந்த ஆகாயம் சூரிய ஒளி வடிவு ஆகி நின்ற முறைமை போன்று, ஆணவ மலத்தின் அநாதி நித்தியம் என்னும் பொருட்டன்மை கெடாமலும், அது முன்போல் எங்களைப் பிணித்துத் தன் மயம் ஆக்காமலும், உண்மை இயல்பில் நிலைநிறுத்துகின்ற உனது பேரருள் உடைமை எங்களையெல்லாம் காத்து அருள்வதாக.

ஆகாயம், ஆன்மாவுக்கு உவமை;

இருள், ஆணவமலத்திற்கு உவமை;

சூரியஒளி திருவருளுக்கு உவமை.

''ஆணவத்தின் ஆதி குறையாமல்'' என்பது, ஆணவ மலத்தின் ஆற்றல் அன்றுள்ளதுபோல் என்றும் உள்ளமையால், அஃது என்றும் ஒரே நிலையிலேயே இருக்கும் என்பதைக் குறிக்கிறது. எனவே, ஆணவமலம் தன்னளவில் தன் வலி (சத்தி) மடங்கும் என்பது பொருந்தாது.

''என்பால் அணுகாமல் நிறுத்தும் நீதி'' என்பது, முத்தி நிலையில் ஆன்மா சிவத்தைப் பற்றி நிற்பதால், சிவத்தைப் பற்ற மாட்டாத ஆணவமலம் அந்த ஆன்மாவையும் பற்ற மாட்டாமல் நிற்கும் அந்நிலையில் ஆன்மா சிவமாம் தன்மை பெற்று நிற்பதால், அவ்வாறு நிற்பதே ஆன்மாவுக்கு உண்மை இயல்பாகும்; எனவே ஆன்மாவைச் சிவமாக்கித் தனக்கு அடிமையாகக் கொள்ளும் நியதியே இங்கு ''நிறுத்தும் நீதி'' எனப்பட்டது.

''மெய்த்தகைமை'' என்பது, பதி பசு பாசம் என்னும் முப்பொருள் உண்மையையே குறிக்கும். இவ்வுண்மை என்றும் மாறாத இயல்புடைமை ஆகலின், 'மெய்த்தகைமை' எனப்பட்டது.

சிவபெருமானின் உண்மை நிலையை ஆன்மாக்களுக்குக் காட்டிருளுதல்

—மேதக்கோர்

செய்யும் சரியை, திகழ் கிரியா யோகத்தால் 79
எய்தும் சீர் முத்திபதம் எய்துவித்து —மெய்அன்பால்

காணத் தகுவார்கள் கண்டால் தமைப்பின்பு 80
நாணத் தகும் ஞான நன்னெறியை —வீணே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எனக்குத் தரவேண்டி எல்லாப் பொருட்கும்
மனக்கும் மலர்அயன் மால்வானோர் – நினைப்பினுக்குத் 81

தூரம் போலவே அணிய சுந்தரத்தாள் என்தலைமேல்
ஆரும்படி தந்துஅருள்செய்த – பேராளன் 82

தந்த பொருள் ஏது என்னில், தான்வேறு நான்வேறாய்
வந்து புணரா வழக்கு ஆக்கி – முந்தி எந்தன் 83

உள்ளம் என்றும் நீங்காது ஒளித்து இருந்து தோன்றி நிற்கும்
கள்ளம் இன்று காட்டும் கழல் போற்றி 84

தெளிவுரை:

அகப்பற்று ஆகிய "யான்' என்பதையும், புறப்பற்று ஆகிய "எனது" என்பதையும் அறவே விட்டு ஒழித்த மேலான தகுதியை உடைய பெரியோர்களை, விதி தப்பாமல் அவர்கள் கடைப்பிடித்து வருகின்ற உண்மைச் சரியை, கிரியை, யோகங்களால் அவற்றின் பயன் ஆகிய சிறப்பு மிக்க பத முத்திகள் ஆகிய சாலோகம், சாமீபம், சாரூபங்களில் சேர்த்து உண்மையான அன்பின் வழியாக, அவர்கள் சிவபெருமானைத் தரிசிக்கும்படியான தகுதி உடையவர்களாகச் சிவபெருமான் செய்விக்கின்றான்.

அந்நிலையில் ஞானதாகம் உற்ற அடியார்கள், உன் அருளைப் பெற்று, உண்மையான அன்பு மீதூர்வதனாலே, சிவரூபத்தில் ஆன்ம தரிசனை செய்து, சிவதரிசனத்தில் ஆன்மாவின் தன் இயல்பை அறிந்து,

பிறப்பு நிலையிலும் முத்தி நிலையிலும் உயிர்க்கு உதவிவரும் இறைவனின் கருணையை மறந்து, "நாம் ஒரு தனி முதல் என்று இருந்தோமே என்று வெட்கப்பட்டு, சூரியன் முன்பு மின்மினிப் பூச்சிபோல் தமது சிறுமையைக் கண்டு பதைப்புற்று அருளில் அழுந்தி நிற்கிறார்கள்.

அந்நிலையில், இரண்டு அற்று அனுபவிக்கும் ஞானம் என்னும் நன்னெறி ஆகிய சன்மார்க்கத்தை, எந்தவித பிரதி உபகாரத்திற்கும் தகுதி இல்லாத எனக்குக், கைம்மாறு கருதாமல் கருணை காரணமாக வழங்க விரும்பிய பெருமானே, நீ உலகப் பொருள்கள் அனைத்தினுக்கும் எங்கள் மனதுக்கும், தாமரைப் பூவில் இருக்கும் அயன், மால், மற்றுள்ள தேவர்கள் முதலியவர்கள் நினைப்புக்கும் எட்டாதவனாய் இருந்தும், அவ்விடங்களில் எல்லாம் கலந்திருக்கின்ற அழகிய உன் திருவடிகளை அடியேனது சிரசின்மேல்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பொருந்தும்படி வைத்துத், திருவடி தீட்சை செய்தருளிய பெரிய பெயரை உடைய ''மாதேவன்'' ஆகிய மறைஞான சம்பந்த சிவனூர் எனக்கு உபதேசித்து அருளிய பொருள் என்ன என்றால்,

அவன் வேறு பொருள், நான் வேறு பொருள் என்னும்படி ஒருகாலத்தில், ஒருவரை ஒருவர் பிரிந்திருந்து, இடைக்காலத்தில் இருவரும் கூடிக் கலவாத உண்மையை விளக்கி, தொன்றுதொட்டு எனது அறிவை விட்டு, கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூன்று காலத்திலும், விலகாமலும் எனக்குத் தெரியாமல் மறைவாகவும் என்னோடு என்றும் கலந்து இருக்கும் தன்மையே ஆகும்.

அத்தன்மையை உடைய இறைவன் இப்போது, மறைஞான சம்பந்த சிவம் ஆகிய தேசிக மூர்த்தியாய் என்முன் வெளிப்பட்டு, அவ்வாறு கலந்து இருக்கும் மறைபொருளை (இரகசியத்தை) எனக்கு ஏற்பட்டு இருக்கும் இந்தச் சுத்த நிலையில் உயிர்க்கு உயிராய் நின்று வெளிப்படுத்துகின்ற அவனது திருவடி ஞானம் எங்களையெல்லாம் காத்து அருள்புரியுமாக.

''சிவரூபத்தில் ஆன்ம தரிசனம்' என்பது, சிவபெருமான் அறிவித்தால் அன்றி, நமக்கு அறியும் தன்மை இல்லை என்பதை உணர்ந்து, 'யான்' என்னும் சிற்றறிவும் 'எனது' என்னும் சுட்டறிவும் நீங்கி, எப்பொருளையும் சிவமே எனக் காண்பதைக் குறிக்கும். அந்நிலையில் தற்போத முனைப்பு அறும், அறவே, சிவ பரம்பொருளே மானுடச் சட்டை தாங்கி, குருவடிவாய் எழுந்தருளியுள்ள உண்மை தெளிவாகும்.

காரண நிலைகள் மூன்றையும் காட்டியருளியது

—வள்ளன்மையால்

தன்னைத் தெரிவித்துத் தன் தாளின் உட்கிடந்த
என்னைத் தெரிவித்த எல்லையின் கண் – மின்ஆரும் 85

வண்ண உருவம் மருவும் குணமயக்கம்
எண்ணும் கலைகாலம் எப்பொருளும் – முன்னம் எனக்கு 86

இல்லாமை காட்டிப் பின்பு எய்தியவா – காட்டி இனிச்
செல்லாமை காட்டும் செயல் போற்றி. 87

தெளிவுரை:

வளப்பம் மிகுந்த தனது பேரருளினால், தனது எண்குண இயல்பை எனக்குத் தெரிவித்து, தனது அருளமுதக் கடலினுள், பிரியாமல் என்றும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கிடந்த எனது ஆன்ம உண்மை இயல்பைக் காட்டியருளிய சமயத்தில், இறைவன் ஏன்க்கு அறிவித்த முறை வருமாறு:

மின்னலைப் போன்று தோன்றி அழிகின்ற இயல்பினை உடைய உடம்பும், அந்த உடலைப் பொருந்திய முக்குணங்களின் கூட்டமும் உயிர்க்கு அறிதற் கருவிகளாக உதவுகின்ற கலாதத்துவம் (கலை) கால தத்துவம் (காலம்) முதலிய எல்லா மாயாகாரியப் பொருள்களும் எளியேனும், முன்னுள்ள கேவல நிலையில் இல்லாதிருந்ததை அறிவித்து, பின்னுள்ள சகல நிலையில் அந்த மாயா காரியங்கள் எனக்குக் கிடைத்த விதத்தையும் அறிவித்து, இந்தச் சுத்தநிலையில் மாயா காரியங்களில் எல்லாம் அறிவு செல்லாமல், திருவருளை விட்டுச் செல்லாமை ஆகிய தூய நிலையினை இந்த அடிமைக்கு அறிவுறுத்தியருளும் சிவபெருமானது பேரருட் செயல் எங்களையெல்லாம் காத்து அருள்புரிவதாக.

சிவபெருமான் ஆன்மாக்களைத் தான் ஆக்கி அடிமை கொண்டு அருளுதல்

—எல்லாம் போய்த்

தம்மைத் தெளிந்தாராய்த் தாமே பொருளாகி
எம்மைப் புறம்கூறி இன்புற்றுச் – செம்மை 88

அவிகாரம் பேசும் அகம்பிரமக் காரர்
வெளியாம் இருளில் விடாதே – ஒளியாய் நீ 89

நின்ற நிலையே நிகழ்த்தி, ஒருபொருள் வேறு
இன்றியமையாமை எடுத்து ஓதி – ஒன்ருகச் 90

சாதித்துத் தம்மைச் சிவம் ஆக்கி, இப்பிறவிப்
பேதம் தனில்இன்பப் பேதம்உறுப் – பாதகரோடு 91

ஏகமாய்ப் போகாமல் எவ்விடத்தும் காட்சிதந்து
போகமாம் பொற்றுளின் உட்புணர்த்தி – ஆதியுடன் 92

நிற்க, அழியாநிலை இதுவே என்று அருளி
ஒக்க வியாபகம்தன் னுள்காட்டி – மிக்கு ஓங்கும் 93

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆனந்த மாக்கடலில் ஆரா அமுது அளித்துத்
தான்வந்து செய்யும் தகுதியினுல் – ஊன் உயிர்தான் 94

முன் கண்ட காலத்து நீங்காத முன்னேனை
என் கொண்டு போற்றி இசைப்பேன் யான்? 95

தெளிவுரை:

எல்லாத் தத்துவங்களையும், நிலையற்றவை எனக் கண்டு நீங்கி, தாமே ஆன்மாவின் உண்மை நிலையைத் தெளிவாகக் கண்டவர் போன்று, ''தாமே பிரமம்'' (தாமே கடவுள்) என்று கொண்டு,

முத்தி நிலையிலும் ஆன்மா சிவத்துக்கு அடிமையே என்று ஆண்டான் – அடிமைத்திறம் கூறுகின்ற எம்போன்ற சைவ சித்தாந்திகளை, நேரில் கண்டபோது புகழ்ந்தும், காணுத இடங்களில் பழித்தும் புறம்கூறித் தம் இன்பத்தைத் தாமே அனுபவித்து இருப்போம் என்று மகிழ்ச்சியுற்று, பிரமத்தை இன்பதுன்பம் அற்றது என்று பேசித்திரிகின்ற ''நான் பிரமம்'' என்னும் ஏகான்மவாதிகளின் வெட்ட வெளியான அறியாமை இருளில் மயங்கிவிடாமல் எம்மைக் காத்தருள்கின்ருய்.

ஞான சொரூப ஒளி வடிவாய் பதி ஆகிய நீ நிற்கின்ற உண்மையையும் இதற்குமேல் வேறொரு பொருள் ஆகிய ஆன்மா நிச்சயமாக உண்டு என்பதையும் எடுத்துப் பேசிவிட்டு,

முத்தியில் ஆன்மாக்களைச் சிவன்கள் ஆக ஆக்கிவிடுவதால், பிறவி பேதங்களில் ஒன்று ஆகிய இந்த மனிதப் பிறவியில், சீவன் முத்தி இன்பத்தையும் பரமுத்தி இன்பத்தையும் அனுபவிக்கக் கொடுத்து வைக்காத மாபாவிகளோடு, நான் நேசம் பண்ணி, நாசமாய்ப் போய்விடாமல் என்னைக் காத்தருள்கின்ருய்.

எல்லா இடங்களிலும் குருலிங்க சங்கமங்களாய் வெளிப்பட்டு எனக்குக் காட்சி கொடுத்து பேரின்பமயம் ஆகிய அழகிய திருவடி ஞானத்துள், என்னைப் பொருத்தியதால் சிவபெருமானேடு நான் அழுந்தி நிற்பது ஆகிய இந்நிலையே என்றும் அழியாத சாயுச்சிய முத்தி ஆகும் என்று எனக்கு அருளிச் செய்துள்ளாய்.

உன்னுடைய பரிபூரண வியாபகம் ஆகிய முழு நிறைவின் உள்ளே, நானும் உன்னைப் போன்று வியாபித்து நிற்கும் தன்மையை எனக்குக் காட்டியருளி, மிகுந்து விளங்குகின்ற பேரின்ப மயமான அருட் பெருங்கடலில், தெவிட்டாத அமிர்தத்தை நான் அனுபவிக்குபடி கொடுத்தருளியதோடு அமையாமல்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இத்தனையும் நீயே வலிய வந்து செய்கின்ற உனது பெருங்கருணைத் திறத்தினுல், உடம்போடு கூடி உயிர் இருத்தல் ஆகிய முன் இருந்த பிறப்பு நிலையிலும் என்னை விட்டு விலகாத சொற்பதம் கடந்த தொல்லோன் ஆகிய சிவபெருமான் ஆகிய உன்னை, அடியேன் என்ன சொற்களைச் சொல்லிப் புகழ்ந்து போற்ற வல்லேன்? எவ்வாற்ருனும் அஃது எனக்கு இயலாது.

''ஏகான்மவாதி'' எனப்படும் வேதாந்திகள் ''நானே பிரமம்'' என்று சொல்லி பிரமத்தைத் தவிர வேறு பொருள் முக்காலத்திலும் இல்லை என்பார்கள். இவ்வாறு கூறுவதால், அவர்களுக்கு ''முத்தி இன்பம்'' என்பது தன்னைத் தானே அனுபவித்தல் ஆகும். இஃது இயற்கைக்கு மாருன ஒன்று ஆகும். உலகில் உள்ள எவரும், பிற பொருள்களையே சார்ந்து அனுபவித்து இன்பம் பெறுகிருர்கள். தன்னைத் தானே அனுபவிப்பது இன்பம் ஆகாது. எனவே, ஏகான்மவாதம் எந்த வகையில் வைத்து நோக்கினுலும் நடைமுறைக்குப் பொருந்தாத ஒன்று என்பது புலனுகும்.

குரு வழிபாடு

போற்றி திருத்தில்லை; போற்றி சிவபோகம்
போற்றி அவன் மெய்ஞ்ஞானப் புண்ணியநூல் – போற்றி எங்கள்
வெம்பந்த வாழ்க்கைவிட, வேருய் வந்து உள்நின்ற
சம்பந்த மாமுனிபொற் ருள்.

தெளிவுரை:

திருத்தில்லையில் நடமாடுகின்ற சிவபெருமானின் திருநடனம் எங்களைக் காத்தருள்க. சிவபெருமானோடு இரண்டறக் கலந்து நிற்றல் ஆகிய சாயுச்சிய நிலை ஆகிய சுத்தாத்துவிதம் எங்களைக் காத்து அருள்க.

சிவபெருமானின் அடியவர்கள் அருளிச் செய்த பன்னிரு திருமுறைகளும் பதினுன்கு சாத்திரங்களும் ஆகிய அருள் நூல்கள் எங்களைக் காத்து அருள்க.

வெப்பம் மிகுந்த மும்மலங்களால் எங்களுக்கு ஏற்பட்ட உலக வாழ்வை நாங்கள் விட்டு ஒழியும் பொருட்டு, அவற்றிற்கும் எங்களுக்கும் வேருய் நின்று எங்கள் உயிர்க்கு உயிராய் உள்நின்று எங்களுக்கு உணர்த்தியருளிய மறைஞான சம்பந்த சிவத்தின் அழகிய திருவடிகள் எங்களைக் காத்து அருள்வதாக.

போற்றிப் பஃறெடை தெளிவுரை முற்றியது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

5. கொடிக்கவி

உயிரின் குறிக்கோள்

ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்; ஒன்று மேவிடில், ஒன்று
ஒளிக்கும்; எனினும் இருள் அடராது; உள் உயிர்க்கு உயிராய்த்
தெளிக்கும் அறிவு திகழ்ந்து உளதேனும் திரிமலத்தே
குளிக்கும் உயிர், அருள் கூடும்படி கொடி கட்டினனே. 1

தெளிவுரை:

திருவருளுக்கும் ஆணவமலத்துக்கும் தங்கும் இடம் ஒன்றே ஆகும். அந்த ஓர் இடம் உயிரே ஆகும். எனவே உயிரினிடத்துத் திருவருள் மிகுந்து இருக்கும்போது, ஆணவமலம் மறைந்து நிற்கும்; உயிரினிடத்து ஆணவமலம் மிகுந்து இருக்கும்போது, திருவருள் மறைந்து நிற்கும், என்றாலும், ஆணவமலம் திருவருளைப் பொருந்தாது; அஃதாவது பந்திக்காது.

திருவருள் எல்லா உயிர்களுக்கும் உயிராகி நிற்கிறது. உயிர்களின் அறிவு இச்சை செயல்களை விளக்குகின்றது. உயிர்கள் முற்பிறப்பில் செய்த நல்வினைகளின் பயனாகத் திருவருள் உயிர்களினிடத்து விளங்கினாலும், முற்பிறப்பில் உயிர்கள் செய்த தீவினைகளின் பயனாக, ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களிலே மூழ்கிப் பந்தப் பட்டுக் கொண்டுதான் இருக்கும்.

எனவே, உயிர் தீட்சைகளைப் பெற்றுக் குரு நாதரின் அருள் நோக்குக்கு இலக்காகி மல நீக்கம் பெற்றுத், திருவருளைப் பொருந்தி வாழும் பொருட்டு, அம்பலவாணனின் இந்த கொடியை நான் கட்டினேன்.

ஒளி – திருவருள் – சிவஞானம்.

இருள் – ஆணவ மலம்.

இந்தக் 'கொடிக்கவிப்' பாடல் சைவ சித்தாந்தம் கொள்ளும் முப்பொருள்களுக்கும் உள்ள வியாபக இலக்கணம் பற்றிப்பேசுகிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உயிரின் வியாபக இலக்கணத்தைக் குறித்துச் சிவஞான பாடியம் நான்காம் சூத்திரம் இரண்டாம் அதிகரணத்தில்,

''ஆன்மா அறிதல் குணம் உடைத்து என்பது பெறப்பட்டது. படவே, ஆன்மா தோற்றக்கேடு இன்றி நித்தமாய் வியாபகமாய் நிற்றலின், அதன் குணம் ஆகிய அறிவும் தோற்றக்கேடு இன்றி நித்தமாய், வியாபகமாய் நிற்கும் என்பது போந்தது. அறிவாவது ஒன்றனை விடயிப்பதே பிறிது அன்று ஆகலின்; அங்ஙனம் விடயிப்பதாகிய அறிவு ஒருகால் நிகழ்ந்தும், ஒருகால் நிகழாதும் காலத்தானும் இடத்தானும் ஏகதேசமாய் நிகழ்தலும் காண்டும்''

என்று சிவஞான சுவாமிகள் கூறியருளியதிலிருந்து உயிரறிவை ஆணவ மலம் மறைக்கிறது என்பது புலனாகும்.

ஆணவமலத்தின் வியாபக இலக்கணத்தைக் குறித்து, அதே சூத்திரம் அதே அதிகரணத்தில்,

''மலம் ஆவது, இவை அனைத்தினும் வேறாய் ஒன்றாய், நித்தமாய் வியாபகமாய், ஞானத் திரோதகம் ஆகிய திரவியம்'' என்றும்,

''குணம், குணி அளவினன்றி வேறிடத்துச் சென்று வியாபிக்கும் என்பது, குண குணிகளின் இயல்பு அறியாதார் கூற்றேயாம்'' என்றும்,

''குணி நிற்பக் குணம் தோன்றி அழிதல் யாண்டும் இன்மையானும் குணம் அழிவுழிக் குணியும் அழிவு எய்தும் ஆகலானும் இருளின் கண்ணது ஆகிய குடம், விளக்கு வந்துழி விளங்கியும், அல்லுழி விளங்காமை மாத்திரையே பற்றி அப்பொழுது குடம் தோன்றி அழிந்தது என்பார் யாரும் இல்லை''

என்றும் சிவஞான சுவாமிகள் அருளிச் செய்துள்ளார்கள். இவ்வருளுரைகளிலிருந்து ஓர் உண்மைப் புலப்படும். அது வருமாறு:

ஆணவமலம், வியாபகப் பொருள்; அதன் குணம் ஆன்ம அறிவை மறைத்தல் ஆகும். மலம், குணி; மறைத்தல், குணம், குணி ஆகிய ஆணவமலம் எந்த அளவு உயிரால் பற்றப் பட்டிருக்கிறதோ, அந்தஅளவு அதன் குணம் ஆகிய மறைப்பு நிகழும். இதனை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

சிவஞானபோதச் சிற்றுரை, பதினோராம் சூத்திரம், இரண்டாம் அதிகரணத்தில்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

"மலம் நசித்தல் ஆவது, தனது மறைத்தல் சத்தி மடங்கிக் கீழ்ப்படுதல் மாத்திரையே; பிறிது அன்று என்பதூஉம் உவமையால் பெறுதும்"

என்று சிவஞான சுவாமிகள் அருளிச் செய்திருப்பதால், முத்தியில் ஆணவ மலத்தின் ஆற்றல், முத்திபெற்ற ஆன்மாவினிடத்துப் பலிக்காமல் போகும் என்பது இனிதே பெறப்படும்.

அஃதன்றி, முத்தியில் ஆணவமலத்தின் ஆற்றல் ஆகிய மறைப்பு, முத்திபெற்ற ஆன்மாவை விட்டு நீங்கி, முத்தி பெறுமல் பெத்த நிலையில் உள்ள உயிர்களை மட்டும் மறைக்கும் என்று கூறுவது, ஆணவமலம் வியாபகப் பொருள் என்பதற்கு மாருக முடியும்.

சிவஞான போதச் சிற்றுரை, ஒன்பதாம் சூத்திரம், இ அதிகரணத்தில்,

"வியாபகப் பொருளுக்கு ஒருவுதல் ஆவது
உணர்ச்சி விசேடமேயாம்"

என்று சிவஞான சுவாமிகள் அருளிச் செய்திருப்பதும், இங்கு நுணுகி நோக்குதற்குரியது.

சுவாமிகளின் இந்த அருளுரைக்கு விளக்கம் எழுதிய, தூத்துக்குடி பொ.முத்தையாபிள்ளை அவர்கள்,

"ஆன்மா வியாபகப் பொருள் ஆதலானும் வியாபகப் பொருளுக்கு நீங்குதல் ஆவது, அறிதலே அன்றி வேறு இல்லாமையாலும், இப்பிரபஞ்சங்கள் நாமும் அல்ல. நம்முடையனவும் அல்ல என அறியும் அறிவின் விசேடமே அன்றிப், பொருளை விட்டு ஆன்மா நீங்குதல் இல்லை"

என்று தெளிவுபடுத்தியுள்ளார்கள். இவ்விளக்கத்திலிருந்து, உயிரின் அறிவு ஆணவமலத்திற்கு இடம் கொடுத்து நிற்கும்போது, திருவருள் அப்போது விளங்கித் தோன்ருது என்பதும், உயிரின் அறிவு திருவருளுக்கு இடம் கொடுத்து நிற்கும் போது, ஆணவமலம் அப்போது விளங்கித் தோன்ருது என்பதும் பெறப்படும்.

"ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்"

என்னும் 'கொடிக்கவி' அருளிச்செய்வதற்கு இவ்வாறு பொருள் கொள்வதே சற்காரியவாத அடிப்படையில் பொருள் கொள்வதாகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''ஒன்று மேலிடில் ஒன்று ஒளிக்கும்''

என்று அருளிச் செய்திருப்பதற்கு, இட அளவால் ஒன்றின் ஒன்று மேற்பட்டது எனக் கருதாமல், ஆற்றல் அளவால், ஒன்றை அடக்கி ஒன்று மேற்பட்டு நிற்கும் என்று பொருள் கொள்ள வேண்டும். சைவ சித்தாந்தம் கூறும் பொருள்களுக்குள்ள வியாபக இலக்கணத்தை இவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும்.

திருவருளாற்றலே ஆணவமல ஆற்றல் மறைக்க முடியாது, ஒளியை இருள் மறைக்க இயலாது. ஆனால், ஆன்மா பக்குவம் பெறும் பொருட்டுத் திருவருள்,மலத்துக்குள் மலமாக ஒளிந்து நின்று, மலத்தை மேலிடச் செய்கிறது– இவ்வாறு சட ஒளிகளால் செய்ய முடியாது. திருவருள் எல்லாம் வல்லது ஆதலால. அஃது ஒன்றுதான் இவ்வாறு நிற்க முடியும்.

உயிருக்கு அருளும் முறைமை

பொருளாம் பொருள் ஏது? போது ஏது? கண் ஏது?
இருளாம் வெளிஏது? இரவுஏது? –அருளாளா
நீ புரவா வையம்எலாம் நீ அறியக் கட்டினேன்
கோபுர வாசல் கொடி. 2

தெளிவுரை:

பொருள்கள் அனைத்தினும் என்றும் ஒரு படித்தாய் நிற்கின்ற பொருள் எது? அது சிவபரம் பொருள் ஒன்றே ஆகும்.

சூரியனுக்குக் கிரணம் (கதிர்) இருப்பது போல், சிவத்தை உயிர்க்குக் காட்டும் பொருள் எது? அது திருவருளே ஆகும்.

சூரியனின் கதிர்வழியாகக் காணும் கண் எது? அஃது உயிரேயாகும்.

உயிரின் அறியாமை காரணமாக, தான் அறிவுடையது என்று உயிரை எண்ணும்படி செய்வது எது? ஆணவமலத்தோடு கூடிய மாயா காரியங்களே அவை ஆகும். (இருள் ஆம் வெளி) இருளாம் வெளி சகல நிலை, இரவாக இருப்பது ஆணவமலம் ஆகும். இது கேவல நிலை.

ஆக, இறைவன், அருள், உயிர், ஆணவம், மாயை, கன்மம் என்னும் பொருள்களை இல்லை என்று கூறுகின்ற பொருந்தாத அறிவுடையவர்களுக்கு விளக்கும் பொருட்டு, அந்தப் பொருள்களின் உண்மையையும் அவற்றின் இயல்பினையும் எடுத்துக் கூறி,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

திருவருளை ஆள்கின்ற சிவபெருமானே, உன்னுடைய ஆளுகையின் கீழ் உள்ள உலகம் அனைத்தும் தெளிவாகப் புரிந்துகொள்ளும்படி, உன்னையே சாட்சியாக வைத்து, அம்பலவாணனின் திருக்கோபுர வாசலிலே, இந்தக் கொடியைக் கட்டினேன்.

பொருளாம் பொருள் – தோற்றக்கேடு இன்றி என்றும் ஒன்றுபோல் எங்கும் நிறைந்திருக்கும் சிவபரம்பொருள்.

இருளாம் வெளி – அறிவு முழுமையாக விளங்காத சகல நிலை.

இருளாம் இரவு – அறிவு அறவே விளங்காத கேவலநிலை.

புரவா வையம் – புரவு ஆம் வையம் – இறைவன் ஆளுகைக்கு உட்பட்ட உலகம்.

நீ அறிய – உன் சாட்சியாக. அஃதாவது உன் திருவருள் சாட்சியாக. நிற்கின்ற அளவிலே.

'கோபுர வாசல்' என்பது, சிவபெருமான் தூலலிங்க மூர்த்தமாய் நிற்கும் திருமுன்னிலையைக் குறிக்கும். கொடியை அங்கு கட்டுவதால், அவனையே சாட்சியாக வைத்துக் கட்டவதாகக் கூறுகிறார்.

திருவருளை வேண்டுதல்

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்கா உணர்வு அரிய தன்மையனை – நோக்கிப்
பிறித்து அறிவுதம்மில் பிரியாமை தானே
குறிக்கும் அருள் நல்கக் கொடி. 3

தெளிவுரை:

எந்தக் காலத்திலும், எந்த ஒரு சொல்லினாலும், அளப்பரிய சிந்தனையினாலும் சிவபெருமானின் தன்மையை அறிய முடியாது. அறிதற்கு அரிய உயிர் அறிவினாலும் அவனது இயல்பை உணர முடியாது. அத்தகைய சிவபெருமானின் உண்மை இயல்பை, பாசஞானத்தினின்றும் பசு ஞானத்தினின்றும் வேறாகப் பிரித்து, நுட்பமாக ஆராய்ந்து பார்த்து, பதிஞானம் கைவரப்பெற்ற ஞானிகளோடு கூடியிருந்து மட்டுமே எவரும் அறிந்துகொள்ள இயலும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இவ்வுண்மையை உலகில் உள்ளவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளும்படி, இறைவனது திருவருள் சுரக்கும் பொருட்டு, இந்தக் கொடி கட்டப்பட்டது. திருவருளின் உதவியின்றி எதையும் சாதிக்க முடியாது என்பது இதனுல் பெறப்பட்டது.

இவ்வுண்மையைப்,

''பாசமா ஞானத் தாலும் படர்பசு ஞானத்தாலும்
ஈசனே அறிய ஒண்ணுது'' 84

எனவரும் சிவப்பிரகாசப் பாடற் பகுதியால் உணரலாம்.

வாக்கு – சொல்.

தாக்குதல் – தட்டுப்படுதல்; தாக்கா – தட்டுப்படாமல். 'உணர்வரிய தன்மை' என்பது, பாச ஞானத்தாலும் பசுஞானத்தாலும் அறிதற்கரிய தன்மையைக் குறிக்கும்.

''சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்,
பவம் அதனே அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலேஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலேயில்'' 70

என்னும் சேக்கிழார் திருவாக்கு இங்குச் சிந்திப்பதற்குரியது.

''அறிவு தம்மில் பிரியாமை தானே குறிக்கும்''

என்பது சிவபெருமானின் அறிவு இச்சை செயல்கள், எப்போதும் எக்காலத்தும் ஆன்ம அறிவிச்சை செயல்களோடு பிரியாமல் ஒன்றுக் கலந்துதானே உள்ளன என்பதை யான் எனது என்னும் பற்றுக்கள் நீங்கிய நிலேயில் ஆன்மாக்கள் அறியும் என்பதைக் குறிக்கும். திருக்கோயில்களில் கொடி ஏற்றும்போது, இத்தகைய உணர்வோடு கொடி கட்டவேண்டும் என்பது குறிப்பு.

திருவைந்தெழுத்து விளக்கம்

அஞ்சு எழுத்தும் எட்டு எழுத்தும், ஆறு எழுத்தும் நாலு எழுத்தும்
பிஞ்சு எழுத்தும் மேலேப் பெரு எழுத்தும் – நெஞ்சு அழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்திேயும்
கூசாமல் காட்டக் கொடி. 4

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

"சி – வா – ய – ந – ம" என்னும் ஐந்து எழுத்துக்களையும், 'ஓம் – ஹாம் – ஹௌம் – சி – வா – ய – ந – ம' என்னும் எட்டு எழுத்துக்களையும், "ஓம் – ந – ம – சி – வா – ய" என்னும் ஆறு எழுத்துக்களையும், "ஓம் – சி – வா – ய" என்னும் நான்கு எழுத்துக்களையும், "வா" என்னும் பிஞ்சு எழுத்தையும், "சி" என்னும் மேன்மைதகு பெரிய எழுத்தையும், உள்ளத்தில் அழுத்தமாக நினைந்து தியானம் செய்ய வேண்டும்.

அந்நிலையில், "வா" என்னும் பேசும் எழுத்து ஆகிய திருவருள் "சி" என்னும் பேசுதற்கரிய சிவபெருமானை எளிதில் இரண்டறக் கலந்து இருக்கும்படி செய்தருளும். இந்த உண்மை நிலையை உலகுக்கு எடுத்துரைக்கும் பொருட்டு, இக்கொடி இங்குக் கட்டப்பட்டது.

அஞ்செழுத்தினை "சிவயநம" என்று வகாரத்தைக் குறிலாகவும் உச்சரிக்கலாம். வழக்குப் பற்றி, வகாரம் நெடிலாகக் காட்டப்பட்டது.

அஞ்செழுத்தில், 'சி' என்பது, சிவத்தைக் குறிக்கும்; 'வா' என்பது, அருளைக் குறிக்கும்; 'ய' என்பது, உயிரைக் குறிக்கும்; 'ந' என்பது, மறைப்பாற்றலைக் குறிக்கும்; 'ம' என்பது ஆணவமலத்தை மட்டுமே குறிக்கும்.

எட்டு எழுத்து மந்திரத்தில் வரும் "ஓம் – ஹாம் – ஹௌம்" என்னும் மூன்று எழுத்துக்களும், பீஜ எழுத்துக்களைக் குறிக்கும். பீஜம் (பீசம்) என்ற சொல்லுக்கு விந்து என்று பொருள். 'விந்து' என்பது? 'வீச்' என்னும் பொருளை உடையது. வீச்சு – சிதறுதல். பீச எழுத்துக்கள் அஞ்செழுத்தின் பெருமையைக், கதிரவனின் கதிர்கள் சிதறுவது போல், பரவலாகப் பரவும்படி செய்வன, பீச எழுத்துக்களில் உள்ள சொற்களைச் சரியாக உச்சரிக்க வேண்டும்; தவறினால் எதிர்பாராத தீய விளைவுகளை ஏற்படுத்தும். எனவே, எட்டெழுத்து மந்திரத்தை மிக மிக கவனமாக தியானிக்க வேண்டும்.

ஆறு எழுத்து மந்திரத்தில் உள்ள 'ஓம்' பீச எழுத்தாகும். மற்ற பீசங்களை உச்சரிக்கும்போது ஏற்படக்கூடிய பயம் இதற்கு இல்லை. இது 'நமசிவாய' என்னும் தூல பஞ்சாக்கரத்தை வலு[illegible]படுத்துகிறது. என[illegible] [illegible]தனை ஓது[illegible] சிறப்பாகும். இதனைப்

"போற்றி ஓம் நமசிவாய"

என்னும் திருவாசகத்தால் உணரலாம்.

நான்கு எழுத்து மந்திரத்தில் உள்ள "ஓம்" பீச [illegible]ழுத்தாகும்; இது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''சிவாய'' என்னும் சூக்கும பஞ்சாக்கரத்தை வலுப்படுத்துகிறது. ''சிவாய'' என்பது மூன்று எழுத்துக்களை மட்டும் உடையதாக உள்ளது; இஃது எப்படி அஞ்செழுத்தாகும்? எழுத்துக்கள் கூடினாலும் குறைந்தாலும், பஞ்சாக்கர பேதம் அனைத்தும் அஞ்செழுத்தே எனச் சிவஞான சுவாமிகள் சிவஞான சித்தியார் காப்புச் செய்யுள் உரையில் கூறியுள்ளார்கள். ''சிவாய சிவ'' என்னும் அஞ்செழுத்தின் சுருக்கமான அமைப்பே ''சிவாய'' என்றும் கொள்ளலாம். இதற்குப், பிரமாணமாகச்,

''சிவாய நம எனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமையது ஆக்கிச்
சிவாய சிவசிவ என்று என்றே சிந்தை
அவாயம் கெடநிற்க ஆனந்தம் ஆமே''

என்னும் திருமந்திரம் அருளிச் செய்யப்பட்டுள்ளது. இந்தத் திருமந்திரத்தில் உள்ள மூன்றாவது அடியில் 'சிவாய' ''சிவசிவ'' என வரும் மந்திரங்களை உச்சரிக்கும்போது, ''சிவாய'' என்றும் சிவ சிவ என்றும் ஓதலாம் என்பதை நுணுகி நோக்கினால் புரிந்து கொள்ளலாம். இந்தத் திருமந்திரம் ''அதிசூக்கும பஞ்சாக்கரம்'' என்னும் தலைப்பின் கீழ் அமைந்துள்ளதும் காணத் தக்கது. திருவாவடுதுறை ஆதீன வெளியீடு எண். 414/1993 – பக்கம் 64.

இந்த இடத்தில்,

''சித்தம் ஒருக்கிச் சிவாயநம என்று இருக்கின் அல்லால்''

(4–94–5)

என்னும் அப்பரடிகள் வாக்கும் சிந்திக்கத் தக்கது.

நான்கு எழுத்து மந்திரத்தைச் ''சிவ சிவ'' என்று கூறுவாரும் உளர். ''சிவாயசிவ'' என்பதில் உள்ள நடு எழுத்து ஆகிய ''ய'' காரம் நீங்கலாக, வரும் அதி சூக்கும மந்திரம் ''சிவசிவ'' என்று அமைந்துள்ளது. (கழக வெளியீடு எண் 1361/பக்கம்.30) மேற்கண்ட திருமந்திரத்தில் உள்ள எழுத்துக்களை ''சிவாய சிவ'' என்று அமைத்தும் நோக்கலாம். அப்போது அஃது அதிசூக்கும ஐந்தெழுத்தாக அமையும் சிவாய சிவ என்றும் ''சிவசிவ'' என்றும் சிந்திக்கலாம்.

பிஞ்சு எழுத்து ஆகிய ''உ'' காரம் திருவருளைக் குறிக்கும். ஆன்மாக்களின் எளிமையான இயல்புக்கு ஏற்ப எளிதில் பற்றுதற்கு உரிய மென்மை உடையது ஆகலின், அது பிஞ்சு எழுத்து எனப்பட்டது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பெரு எழுத்து ஆகிய ''சி'' காரம் சிவபெருமானைக் குறிக்கும். பெறுதற்கரிய பொருள்கள் எல்லாவற்றினும் பெரியதாக சிவபரம்பொருள் உள்ளமையால், அதனைக் குறிக்கும் எழுத்து பெரு எழுத்து எனப்பட்டது.

திருவருளின் உதவி இன்றிச் சிவனடியைக் கூடுதல் இயலாமை பற்றி, அருளைப் பிஞ்சாகக் காட்டி, அரனைப் பெரிய நிலையில் வைத்துக் காட்டினர்.

இதுவரை ''கொடிக்கவி'' என்னும் நூலில் உள்ள செய்திகளை ஒருவாறு கண்டோம். இனி, அஞ்செழுத்துப் பற்றிய அரிய விளக்கத்தைக் குறித்து ஓரளவு சிந்திப்போம்.

1. ''முந்தை முதல் மந்திரங்கள் எல்லாம் தோன்றும்
முதல் ஆகும், முதல்வனார் அஞ்செழுத்து''

(சம்பந்தர் புராணம் – 266)

என்று சேக்கிழார் பெருமான் அருளிச் செய்திருப்பதிலிருந்து, எல்லா மந்திரங்களுக்கும் தலையாய மந்திரம், அஞ்செழுத்து மந்திரமே என்பது பெறப்படும். எனவே இது ''மந்திர வேந்து'' எனப் போற்றப்படுகிறது.

2. அஞ்செழுத்து, திருவைந்தெழுத்து, பஞ்சாக்கரம் எனப்படுகிறது. இது தூலம், சூக்குமம், அதிசூக்குமம் என மூவகைப்படும்.

நமசிவாய	–	தூலம்
சிவாயநம	–	சூக்குமம்
சிவயசிவ	–	அதிசூக்குமம்.

3. அஞ்செழுத்து வடிவமாகவே இறைவன் உள்ளமையால், அஃது அவனுக்குப் பெயராகவும் அமைந்துள்ளது. இவ்வுண்மையை,

''நாதன் நாமம் நமச்சிவாயவே'' (3–49–1)

என்னும் சம்பந்தப் பெருமான் திருவாக்கினாலும்,

''படைக்கலம் ஆக உன் நாமத்து எழுத்து
அஞ்சு, என் நாவில் கொண்டேன்'' (4–81–8)

என்னும் அப்பர்மூர்த்திகளின் அருள்வாக்கினாலும் உணரலாம். ''நமசிவாய'' என்றால் மந்திரம்; ''நமச்சிவாய'' என்றால் நாமம் என்பது நினைவு கொள்ளத் தக்கது. ''ஓம்'' சேர்த்துவிட்டால் நாமமும் மந்திரமாகிவிடும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

4. அஞ்செழுத்து மந்திரத்தில் உள்ள ஒவ்வொரு எழுத்தும், ஒவ்வொரு சொல்லைக் குறிக்கும். இவ்வுண்மையை,

" பதத்து எழு மந்திரம் அஞ்சு எழுத்து ஓதி" (4–107–2)

என்று அப்பரடிகள் அருளிச் செய்துள்ளமையாலும்,

"அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லி" (7–83–1)

என்னும் சுந்தரர் பெருமானின் தூமொழியாலும் உணரலாம்.

5. அஞ்சு எழுத்துக்களுக்குள்ள சொல் வருமாறு:

சி	–	சிவன்
வ	–	அருள்
ய	–	உயிர்
ந	–	மறைப்பாற்றல்
ம	–	ஆணவமலம்

"ஈசன், அருள், ஆவி, எழிலார் திரோதம், மலம்
ஆசில் எழுத்து அஞ்சின் அடைவாம்"

என்னும்" உண்மைவிளக்கம்" இதற்குப் பிரமாணமாக உள்ளது.

6. உயிர்கள் உய்யும் பொருட்டு ஐந்தொழில் ஆற்றுபவனே "கடவுள்" என்னும் பெயருக்கு உரியன் ஆவன். சிவபெருமான் அஞ்செழுத்தின் வடிவமாக நின்றே ஐந்தொழில் ஆற்றுகின்றான். இவ்வுண்மையை,

"சேர்க்கும் துடி "சி" கரம்; சிக்கன "வ" வீசுகரம்;
ஆர்க்கும் "ய" கரம் அபயகரம்; பார்க்கில் இறைக்கு,
அங்கி "ந" கரம், அடிக்கீழ் முயலகனார்
தங்கு "ம" கரம் அதுதான்" 33

என்னும் " உண்மை விளக்கம்" வெண்பாவால் அறியலாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

7. உலகப்பற்றில் அழுந்தி நிற்கும் உயிர்களின் பொருட்டு ''நம'' என்னும் இரு எழுத்துக்களிலும் இறைப்பற்றில் அழுத்தி நிற்கும் உயிர்களை உய்விக்கும் பொருட்டு ''சி.வ'' என்னும் இரு எழுத்துக்களிலும் நின்று, சிவபெருமான் முறையே ஊன நடனத்தையும் ஞான நடனத்தையும் நிகழ்த்துகின்றான். இதனை,

''ஊன நடனம் ஒருபால்; ஒருபாலாம்
ஞான நடனம்; தான் நடுவே நாடு'' 83

என்னும் திருவருட் பயன் தெளிவுறுத்துகின்றது.

8. சிவபெருமான் எண்குணம் உடையவன்; அஃது அவனுக்குள்ள சிறப்பு இயல்பு. எண்குணங்களுள் ஒன்று ஆகிய ''அருளுடைமை'' என்னும் குணத்தைக் கொண்டே, இறைவன் உயிர்கள் உய்யும் பொருட்டு அநாதியே ஐந்தொழில் ஆற்றி வருகிறான். அஞ்செழுத்தின் வழியேநின்று இறைவன் ஐந்தொழில் ஆற்றுவதால், அஞ்செழுத்து அநாதியே உள்ளது. இவ்வுண்மையை,

''கூத்தாடும் குணம் உடையோன்'' (1–132–7)

என்னும் சம்பந்தப் பெருமான் திருவாக்கினால் உணரலாம்.

9. அநாதியே ஆணவமலத்தைப் பற்றி, அறிவு செயல்களை இழந்து கிடக்கும் உயிர்களிடத்து இறைவன் கொண்டுள்ள இரக்கம் ஒன்றே காரணமாக, மாயையிலிருந்து அவன் உலகத்தைப் படைத்து உயிர்களுக்கு உதவுகிறான்.

அவ்வாறு படைக்கத் தொடங்கும்போது, இறைவன் மாயையினைக் கலக்குகிறான். அவ்வாறு கலக்கும்போது ஓர் ஓசை எழுகிறது; அந்த ஓசை அஞ்செழுத்து வடிவில் எழுகிறது. எனவே எல்லா ஓசைகளுக்கும் ஒலிகளுக்கு மூலமாய் இருப்பது அஞ்செழுத்தே என்பது பெறப்படும். இவ்வுண்மையை,

''ஓசைதரும் அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க'' 294

என்று சிவஞான சித்தியாரில் அருளிச் செய்துள்ளவாற்றால் அறியலாம்.

10. இத்தகு பெருமைக்குரிய அஞ்செழுத்தை உலக இன்பங்களைப் பெரிதும் விரும்புபவர்கள், ''நமசிவாய'' என்றும், இறை இன்பத்தையும் உலக இன்பத்தையும் ஒருங்கே விரும்புபவர்கள், ''சிவாய நம'' என்றும் ஓத வேண்டும். இதனை,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''''ந'' ம் முதலா ஓதில் அருள் நாடாது நாடும் அருள்
''சி'' ம் முதலா ஓது நீ சென்று'' 41

என்று 'உண்மை விளக்கம்' தெளிவுறுத்துகிறது.

உலக இன்பத்தினை விரும்பி வாழ்பவர்கள் ''ஓம் நமசிவாய'' என்றும் ஓதலாம். இதற்குப்,

''போற்றி ஓம் நமசிவாய'' 66

எனத் தொடங்கும் திருவாசகப் பாடல் பரம பிரமாணமாக உள்ளது.

11. உலகத்தில் அளவோடு கூடிய இன்பத்தைத் துய்த்து, இறையருளைப் பெற விரும்புபவர்கள் ''சிவாய நம'' என்று ஓதுதல் வேண்டும். இதனை,

''வைத்த பொருள் நமக்கு ஆம் என்று சொல்லி மனத்து அடைத்துச்
சித்தம் ஒருக்கிச் ''சிவாயநம'' என்று இருக்கின் அல்லால்
மொய்த்த கதிர் மதி போல்வார் அவர், பாதிரிப்புலியூர்
அத்தன் அருள் பெறல் ஆமோ, அறிவிலாப் பேதை நெஞ்சே''
(4–94–5)

என்னும் அப்பர்மூர்த்திகளின் அருளிப்பாட்டினுல் தெளிவுறலாம். எனவே, ''சிவாய நம'' என்றே நம் போன்றோர் சித்தத்துள் வைத்து ஓத வேண்டும்.

12. அஞ்செழுத்து மந்திரத்தை விதிப்படி ஓதுவது எப்படி என்பதை அறிந்து கொள்வதற்குச் சிவதீக்கை வாயிலாக குருமூலம் உபதேசிக்கப்பட்டு ஓதுவது சிறப்பு ஆகும். இவ்வுண்மையை,

''நானேயோ தவம் செய்தேன்? ''சிவாயநம'' எனப்பெற்றேன்
தேனய் இன் அமுதமுமாய் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து எனது உள்ளம் புகுந்து, அடியேற்கு அருள் செய்தான்;
ஊனுரும் உயிர் வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே'' (553)

என்னும் மணிவாசகத்தினுல் உணரலாம்.

''சிவாயநம'' என்று ஓதிவருவோமாயின், இறைவன் நமக்குள்ள மறைப்பாற்றலைச் சிறிது சிறிதாக மாற்றி, அளவோடு கூடிய உலகியல் இன்பத்தை வழங்கி, இம்மையிலேயே வீடுபேற்றினையும் தந்தருள்வான்.

13. அதிசூக்கும மந்திரமாகிய ''சிவாயசிவ'' என்பதை முற்றும் துறந்த முனிவர்களே ஓதக்கடவர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

14. அஞ்செழுத்தை மூன்று வகைகளில் நின்று ஓதலாம். அவை உரை, மந்தம், மானதம் என மூவகைப்படும். தனக்கும் பிறருக்கும் கேட்கும் முறையில் உச்சரிப்பது ''உரை'' ஆகும். தனக்கு மட்டும் கேட்குமாறு ஓதுவது ''மந்தம்'' ஆகும். தன் செவிக்கும் கேட்காத அளவு, மனத்தில் வைத்து கணிப்பது (எண்ணுவது) ''மானதம்'' ஆகும். இவற்றுள் மானதமே சிறந்தது. இதனையே சிவஞான போதச் சூத்திரம் ஒன்பது,

''விதி எண்ணும் அஞ்செழுத்தே''

என்றருளிச் செய்துள்ளது.

15. அஞ்செழுத்தை ஒருமுறை கணிக்கும்போது, நூற்று எட்டு (108) தடவைகள் எண்ணவேண்டும். இதற்குக் காரணம் வருமாறு:

சராசரி மனிதன், நாள் ஒன்றுக்கு 21,600 தடவைகள் மூச்சு விடுகிறன் என்பது விஞ்ஞான அடிப்படையில் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை. பகலில் 10,800 தடவைகளும், இரவில் 10,800 தடவைகளும் மூச்சு நடனம் நமது இதயத் தானத்தில் நடைபெறுகிறது. இவற்றில் (100)–ல் ஒருபங்கு என வகுத்து (108) தடவைகள் ஓதும்படி விதிக்கப்பட்டுள்ளது.

காலையில் (108) தடவைகளும், மாலையில் (108) தடவைகளும் அஞ்செழுத்து மந்திரத்தை கணித்து வரவேண்டும். நூற்றெட்டு தடவைகளுக்குக் கூடியோ குறைந்தோ ஓதுவது ''விதி'' ஆகாது.

இரவு உறக்கத்தில் இருக்கும்போது, நாம் தன் நினைவு அற்றுக் கிடக்கிறோம். அப்போதும் இறை நினைவு நம் உள்ளத்தை விட்டு அகலவில்லை என்பதற்கு அடையாளமாக இரவு உறங்கத் தொடங்குவதற்கு முன்பு அஞ்செழுத்து மந்திரத்தை ஓதல் வேண்டும். காலை எழுந்ததும் அவ்வாறே செய்ய வேண்டும். இப்பயிற்சி நாளடைவில் இறையன்பை மிகுவித்து நம்மைத் திருவடியில் சேர்ப்பிக்கும். இவ்வுண்மையை நமக்கு உணர்த்தும் வகையில்,

''துஞ்சிருள் காலை மாலை தொடர்ச்சியை மறந்திராதே
அஞ்செழுத்து ஓதின் நாளும், அரனடிக்கு அன்பதாகும்''

(4–70–5)

என்று அப்பரடிகள் அருளிச் செய்துள்ளார்கள்.

கொடிக்கவி முற்றும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

சிவமயம்

6. நெஞ்சுவிடுதூது

இறை இயல்பு

பூமேவும் உந்திப் புயல் வண்ணன் பொன்பதுமம்
தார்மேவும் மார்பன் சதுர் முகத்தோன் – தாம்மேவிப் 1

பன்றியும் அன்னமுமாய் பார்இடந்தும் வான்பறந்தும்
என்றும் அறியா இயல்பினுன் – அன்றியும் 2

இந்திரனும் வானோரும் ஏனோரும் எப்புவியும்
மந்திர வெற்பும் மறிகடலும் – மந்திரமும் 3

வேதமும் வேத முடிவின் விளை விந்துவுடன்
நாதமும் காணு நலத்தினுன் – ஓத 4

அரியான் எளியான், அளவு இறந்து நின்ற
பெரியான், சிறியான் பெண்பாகன் – தெரியா 5

அருவான், உருவான், அருவுருவும் அல்லான்
மரியான், மரிப்பார் மனத்தான் – பரிவான 6

மெய்யர்க்கு மெய்யன், வினைக்கு வினை ஆயினுன்,
பொய்யர்க்குப் பொய் ஆய பொய்யினுன் – ஐயன் 7

படநாகம் பூண்ட பரமன், பசுவின்
இடமாய் நிறைந்த இறைவன். 8

தெளிவுரை:

பூவினைப் போன்ற கொப்பூழினை உடைய கருமையான மேகத்தின் நிறத்தை உடைய திருமாலும், தங்கத்தின் நிறத்தை உடைய தாமரை மாலையை அணிந்த புயத்தையும் நான்கு திருமுகத்தையும் உடைய நான்முகனும் ஆகிய இவர்கள் இருவரும் பகைமை பூண்டு, திருமால் பன்றி உருக் கொண்டும், நான்முகன் அன்னப் பட்சியின் வடிவத்தைக் கொண்டும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முறையே நிலத்தை அகழ்ந்தும் விண்ணில் பறந்தும் தேடிய போது, எக்காலத்தும் அவர்களால் அறியப்படாத இயல்பினை உடையவன் சிவபெருமான்.

இவர்கள் இருவரும் அல்லாமல், தேவேந்திரனும், தேவர்களும், பிறரும், எந்த உலகத்தில் இருப்பவரும், மந்திர மலையில் சஞ்சரிப்பவர்களும், மறித்து எழும் அலைகடல்களில் உள்ளோரும், சப்தகோடி மந்திரங்களை வடிவமாக உடையவர்களும், இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் பெயர் பெற்று, ஒலி வடிவில் உள்ள வேதங்களின் தலைவர்களும், அந்த வேதங்களுக்குக் காரணம் ஆகிய சுத்த மாயா சக்திகளும், ஓசையை உடைய நாதவடிவில் உள்ளவர்களும், விந்துத் தத்துவத்தில் உறைபவர்களும், எண்ணிறந்த ஆன்ம கோடிகளும் அறியமுடியாத பெருநன்மையினை உடையவன் சிவபெருமான்.

வாக்குகளுக்கு எட்டாதவன், அன்பர்களுக்கு எளியவன், தர்க்க வாதங்களால் அளந்து அறிதற்கு அரிய பெரியவன். அணுவுக்கு அணுவாய் நுணங்குவன் – ஆகலின் நுண்மையை உடையவன். இவ்வாறு மகத்திற்கு மகத்தாயும் அணுவுக்கு அணுவாயும் இருப்பினும் தன் அடியார்கள் நேரில் கண்டு மகிழும்படி, தன் அருளாற்றலை தன் இடப்பாகத்தில் கொண்டு, உமையொரு பாகமாகத் திகழ்பவன். வாயுபோல, ஆகாயம் போலத் தோன்றாத் திருமேனி ஆகிய அருவமே வடிவானவன். அன்றியும், அபரவிந்து அபர நாதம் பரவிந்து, பரநாதம் ஆகவுள்ள நான்கு அருவத் திருமேனியும் ஆனவன். அசுத்தமாயை, பிரகிருதி மாயைகளை அதிட்டித்து நின்று ஐந்தொழில் நடத்தும் போது, மகேசுரன், உருத்திரன், மால், அயன் என்னும் நான்கு உருவத் திருமேனியும் ஆயவன். அருஉருவத் திருமேனியை சதாசிவ மூர்த்தம் ஆகவும், அஃது அல்லாத பேரொளியாய் விளங்கும் சொரூபத்தையும் உடையவன். இந்த சொரூப நிலை எல்லாத் திருமேனிகளையும் கடந்த நிலை ஆகும்.

சிவபெருமான், நித்த முத்த சுத்தன் ஆகலின், என்றும் பிறப்பு–இறப்பு இல்லாதவன். ஆயினும், பிறப்பு–இறப்புக்கு உட்படும் ஆன்மகோடிகளின் உயிர்க்கு உயிராய் இருப்பவன்; அன்றியும் தன்னை நினைப்பவர் உள்ளத்தினின்று நீங்காதவன். தன்னிடத்து உண்மையான அன்பு உடையவர்க்கு உண்மையாய் இருப்பவன். சாருவாகன். புத்தன் முதலியவர்கள் இறை, உயிர், தளை என்னும் முப்பொருள் உண்மை கொள்ளாத பொய்யர்கள்; ஆகலின், அத்தகு பொய்யர்களுக்குப் பொய்யனாய் இருப்பவன்.

(வினைக்கு வினை ஆயினான்–) சரியை, கிரியை, யோகம் என்னும் சிவநெறியில் நிற்பவர்களுக்கு சுவதந்திரத்தனாய் நிற்பவன். (ஐயன்) அனைத்து உயிர்களுக்கும் தந்தையாய் இருப்பவன். தாருகாவனத்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முனிவர்களின் ஏவலால் வந்த பெரும்பாம்பைத் தனக்கு ஆபரணமாகத் தரித்து, அனைவரினும் வலுமிக்கவனுய் இருப்பவன், எல்லாம் வல்லவன். ஆன்மாக்கள் எண் இறந்து இருந்தாலும், தான் ஒருவனே ஆயினும், ஆன்ம கோடிகளிடத்து நிறைந்து, அவற்றுள் தங்கி இருக்கும் தலைவனுக இருப்பவன்.

உயிர் இயல்பு

—சுடர் ஒளியான்

என்றும் உளன், அன்று அளவும் யானும் உளன் ஆகி
நின்ற நிலையில் தரித்து நில்லாமல் — சென்று சென்று 9

தோற்றியிடும் அண்டம் சுவேதசங்கள் பாரின்மேல்
சாற்றும் உற்பீசம் சராயுசங்கட்கு — ஏற்ற பிறப்பு 10

எல்லாம் பிறந்தும் இறந்தும் இருவினையின்
பொல்லாங்கு துய்க்கும் பொறியிலியேன் — கல்லா 11

உணர்வின் மிசையோடு உலகாயதனைப்
புணர்வது ஒரு புல்லறிவு பூண்டு — கலையில் 12

கொடிது எனவே சென்று குடிப்பழியே செய்து
கடிய கொலைகளவு காமம் — படியின்மிசைத் 13

தேடி உழன்று தெரிவைத் தெரியாமல்
வாடி இடையும் மனம் தனக்கும் — நாடியது 14

போன வழியே போகும் புந்திக்கும், புந்தியுடன்
ஆன திறலார் அகந்தைக்கும் — மேனி 15

அயர அயர அழிய அழியும்
உயிரின் துயரம் உரையேன் 16

தெளிவுரை:

சோதியாய்ச் சுடராய்ச் சூழ் ஒளி விளக்காய் இலங்கும், அன்றும் இன்றும் என்றும் உள்ள இறைவனைப் போன்று, நானும் அநாதியே இருக்கிறேன். என்றாலும் அவன் அநாதியே ஆணவமலத் தொடக்கு அற்று இருப்பவன்;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நாமேறு ஆணவமலத்தைப் பற்றி இருப்பவன். எனவே, அவனுடன் அநாதியே கலப்புற்று இருந்தும் நான், எனது உண்மை நிலையில் நில்லாமல், அறிவு விளக்கம் பெறுமல் நிற்கிறேன்.

எனக்கு அறிவு விளக்கம் ஏற்பட வேண்டும் என்பதற்காக, இறைவனுல் தோற்றுவிக்கப்பட்ட நால்வகைப் பிறப்புக்களில் எண்பத்து நான்கு நூறுயிரம் யோனிகளிலும் பிறந்தும், இறந்தும், உழல்கிறேன். நால்வகைப் பிறப்புக்கள் ஆவன முட்டை, வியர்வை, வித்து, கருப்பை ஆகியன ஆகும்.

ஒவ்வொரு பிறப்பிலும் மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களின் வாயிலாக, நல்வினை தீவினைகளைப் பலவிதமாகச் செய்கிறேன். சிவாகமச் செய்திகளை உடைய நூல்களினுல் பெறத் தக்க அறிவைப் பெறுததால், ஆணவமலச் சார்பு காரணமாக, உலகாயதனைச் சேர்ந்து, புல்லறிவு (கிஞ்சிஞ்ஞ உணர்வு) உடையவனுகித் தீய உணர்வு மிகுதியால், வில்லிலிருந்து புறப்பட்டுச் செல்லும் அம்பின் வேகத்தைப் போல, முறை தவறிய செயல்களில் மிகவேகமாக ஈடுபடுகிறேன்.

அத்தீவினைகளால் ஏற்படும் விளைவுகளைச் சிறிதும் நோக்காமல், பிறர் மனைவியை விரும்பியும், நன்னெறி, நல்வழி முதலிய அற நூல்களில் கூறப்பட்ட நெறிகளிலிருந்து விலகி, பிறர்மீது இரக்கம் இல்லாமல் பெருந்தீமைகளைச் செய்து வருகிறேன். பிறர் பொருள்களைக் கவர்வது (அபகரிப்பது) தீங்கு என்பதைக் கருதாமல், அவற்றைக் கவர்வதற்கான வழிவகைகளைத் தேடி அபகரிக்கிறேன். காலம், இடம், வேளை (சமயம்) பாராமல், பிற மாதர்களை விரும்பி மயங்குகிறேன். இதுபோன்ற செயல்களில் இளைப்பு (முசுப்பு) இன்றித் திரிகிறேன்.

எல்லா உயிர்களின் செயல்களையும் அறிந்து, அந்தந்த உயிரின் வினைகளுக்கு ஏற்றபடி முறை பிறழாமல், வினைப்பயனை அந்தந்த உயிர்க்கு ஊட்டி, பாரபட்சம்(without partiality) இன்றி நடத்துகின்ற பேரறிவும் பேராற்றலும் மிகுந்த திருவருளை நாடாமல், அடிக்கடி வாடிச் சலித்துப் போகும் மனதிற்கும், மனம் பற்றிய விடயங்களை மறக்காமல், அதற்கு ஏற்றபடி நிச்சயம் பண்ணும் புத்திக்கும் அவ்வாறு நிச்சயிக்கப்பட்ட விடயத்தின்மேல் யான் – எனது என்னும் செருக்குடன் ஒருப்பட்டு எழும் ஆங்காரத்துக்கும், இம்மூன்று கருவிகளும் செய்யும் செயல்களின் விளைவுகளை அறியாமல், அந்த விடயத்திலே, வேறு ஒன்றும் சிந்தியாது, அழுந்தி நிற்கும் சித்தத்திற்கும் இந்த நான்கு கரணங்களுக்கும் தலைமை ஏற்று அவற்றின் அந்தரங்கத்தில் படும் துன்பத்தைச் சிறிதும் நோக்காமல் இந்த உடம்பில் மூப்புக் காரணமாகச் சோர்வு ஏற்பட்டபோது அயர்வு ஏற்பட்டு, உடல் தளர்வுறும்போது, துன்பக் கடலில் தத்தளிக்கும் என் நிலைமையைக் கூறுவதற்கு அளவே இல்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அண்டம் – முட்டை; சுவேதசம் – வேர்வை. உற்பீசம் – நிலத்தில் பிறப்பன (வித்து); சராயுசம் – கருப்பையில் பிறப்பன.

உலகாயதன் – உலக இன்பமே உயர்ந்தது என்னும் கொள்கையை உடையவன்; கடவுள் உண்மையை மறுக்கும் மதத்தைச் சார்ந்தவன். கணை – அம்பு; குடிப்பழி – பிறந்த குடிக்குக் குறையை ஏற்படுத்தும் செய்கை.

'படியின் மிசைத் தேடுதல்' என்பது, படிப்படியாகச் சோபான முறையில், மேலும் மேலும் சென்று அடைதற்கு முயற்சி மேற்கொள்ளுதலைக் குறிக்கும்.

பாச பந்த இயல்பு

—வயிரமே

கொண்டதொரு காமனுக்கும் கோபனுக்கும் மோகனுக்கும்
மண்டு மத மாச்சரியனுக்கும் – திண் திறல்சேர் 17

இந்திரியம் பத்துக்கும் ஈர்ஐந்து மாத்திரைக்கும்
அந்தம் இலாப் பூதங்கள் ஐந்துக்கும் – சிந்தைகவர் 18

மூன்று குற்றம், மூன்று குணம், மூன்று மலம், மூன்று அவத்தை
என்று நின்று செய்யும் இருவினைக்கும் – தோன்றுத 19

வாயு ஒரு பத்துக்கும், மாருத வல்வினையே
ஆயகிளைக்கும், அருநிதிக்கும் – நேயமாம் 20

இச்சை, கிரியை, இவைதரித்து அங்கு எண்ணிலா
அச்சம், கொடுமை அவை பூண்டு – கச்சுஅரவன் 21

சீரின்நிலை நில்லாது, திண்டாடும் பல்கருவி
வாரில் அகப்பட்டு, மயங்கினேன் 22

தெளிவுரை:

வன்மை மிகுந்த பேராசை, கோபம், மயக்கம் பொருந்திய தீயவற்றின்பால் அழுந்தி, மதம் என்னும் செருக்குக் கொண்டு, நண்பர் போலிருந்து பிறர்க்குத் தீங்கு செய்யும் மாச்சரியம் கொண்டு, நான் மயங்குகிறேன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மெய், வாய், கண், மூக்கு செவி என்னும் அறிகருவிகள் ஐந்தும், கை, கால், நாக்கு, எருவாய், கருவாய் என்னும் செயற்கருவிகள் ஐந்தும் ஆகிய பத்து இந்திரியங்களுக்கும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் தன் மாத்திரைகள் ஐந்துக்கும், மேற்கண்ட அறிகருவிகள் நுகருவதற்குப் புலன்களாக உள்ள கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புலன்களுக்கும் (ஈர்ஐந்து மாத்திரைகள்).

சித்தத்தை நல்ல வழியில் சிந்திக்க விடாமல் அதனைப் பற்றிக் கொண்டு அதற்கு நோக்காடு (துன்பம்) செய்யும் மூவகைக் குற்றங்களுக்கும் இலக்கு ஆகி மயங்குகின்றேன். அம் மூவகைக் குற்றங்கள் ஆவன, தெய்வத்தால் வருவன, பஞ்ச பூதங்களால் வருவன, தன்னாலும் பிற ஆன்மாக்களாலும் வருவன ஆகும். (காமம், வெகுளி, மயக்கம் ஆகியனவும் முக்குற்றம் எனக் கூறுவர்).

சத்துவம், இராசதம், தாமதம் என்னும் மூன்று குணங்கள், மூலமலம் ஆகிய ஆணவம், உலகுக்கு முதற்காரணம் ஆகிய மாயை, துணைக்காரணம் ஆகிய கன்மம் ஆகிய மும்மலங்கள், கேவலம் சகலம் சகல கேவலம் ஆகிய பற்றுவதும் விடுவதும் ஆகிய மத்தியம் என்னும் மூன்று அவத்தைகள் - ஆகியவற்றில் பொருந்தி நின்று நான் செய்கின்ற நல்வினை, தீவினைகளுக்கும் இரையாகி மயங்குகிறேன்.

கண்ணுக்குப் புலப்படாத பத்து வாயுக்களுக்கும் இடமாகி மயங்குகிறேன். பத்து வாயுக்கள் ஆவன, பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன் ஆகியன ஆகும்.

இவற்றிற்குத் தமிழ்ச் சொற்பொருள் வருமாறு:

பிராணன் – உயிர்க்காற்று; அபானன் – மலக்காற்று; உதானன் – மேல் மூச்சுக் காற்று, (தொழிற் காற்று); வியானன் – உடல் முழுவதும் வியாபித்து இருப்பது (ஒலிக்காற்று); சமானன் – உணவுச் சத்தை நாடியில் சமப்படுத்திச் சேர்ப்பது; நாகன் – இருமல் தும்மல்களைத் தோற்றுவிக்கும் காற்று; கூர்மன் – உரோமம் புளகிப்பித்து இமைப்பிக்கும் காற்று; கிரிகரன் - புருவத்தை மேலே உயர்த்தும் காற்று. தேவதத்தன் – ஓட்டமும் இளைப்பும் வியர்வையும் வருவிக்கும் காற்று. தனஞ்சயன் – உடலில் வீக்கத்தை ஏற்படுத்தும் காற்று.

பிறப்புதோறும் மாறாமல் தொடர்ந்து வரும் தாய்வழி உறவு, தந்தை வழி உறவு, மனைவி வழி உறவு ஆகிய மூஏழ் சுற்றத்தார்களுக்கும், பெரிதும் வருந்தித் தேடப்பட்ட பொருளின் பொருட்டும், இவற்றிற்காக எனது அறிவு இச்சை செயல்களில் நின்று அவற்றிற்கு ஏற்ற தொழில்களைச் செய்யும் போது, அளவற்ற பயத்துடனும், தயை தாட்சண்யம் (இரக்கம்) இல்லாமலும் இருந்து,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இவ்வாறு பல்வகைப்பட்ட தத்துவங்களின் சூழ்ச்சி ஆகிய புயலில் அகப்பட்டு மயங்குகிறேன்.

அரையில் மகா நாகத்தைக் கச்சையாக அணிந்தருளும் சிவபெருமான் அருளிச் செய்த திவ்ய ஆகமங்களில் உள்ள திருவார்த்தைகளின் வழி நில்லாமல், மயங்குகிறேன்.

நெஞ்சுக்கு உரைத்த நீதி

—தேருங்கால்

உன்னை ஒழிய உறவு இல்லை என்னும் அது
தன்னை அறிவை தனி அறிவை — முன்னம் 23

தலைப்பட்டார் தீரத் துறந்தார்; மயங்கி
வலைப்பட்டார் மற்றையவர் என்று — நிலைத் தமிழின் 24

தெய்வப் புலமைத் திருவள்ளுவர் உரைத்த
மெய்வைத்த சொல்லை விரும்பாமல் — ஐவர்க்கும் 25

ஆவனவே செய்து அங்கு அவர் வழியைத் தப்பாமல்
பாவம் எனும் பௌவப் பரப்பு அழுந்திப் — பூவையர்தம் 26

கண்வலையில் பட்டுக் கலவிக்கலை பயின்று அங்கு
உண்மை நிலை உணர்ச்சி ஓராமல் — திண்மையினுல் 27

நாவில் கொடுமை பல பிதற்றி, நாள்தோறும்
சாவில் பிறப்பில் தலைப்பட்டு இங்கு — ஆவிநிலை 28

நிற்கும் வகை பாராய், நிலையான நெஞ்சமே
பொற்புடனே யானே புகலக்கேள். 29

தெளிவுரை:

ஆராய்ந்து பார்க்கும்போது, தனிமுதல் தலைவன் ஆகிய உன்னைத் தவிர எனக்கு, வேறு துணை இல்லை. இவ்வுண்மையையும், உயிர் அறிவு ஆகிய பசு ஞானத்தையும் (பாச ஞானத்தையும்) போல் அல்லாத பதிஞானம் ஆகிய பேரறிவினை உடைய பரம்பொருளையும் எவர் முன்னதாகக் கைவரப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பெற்றுரோ அவரே முற்றத் துறந்தோர் ஆவர். முற்றத் துறந்தோர் என்பார் காணப்படும் பருவுடம்பைப் பற்றிய உணர்வும், கருதப்படும் நுண்ணுடம்பைப் பற்றிய உணர்வும் அற்றவர். இவ்விரு உடம்புகளில் ஏதேனும் ஒன்றில் சிறிதளவு பற்று இருந்தாலும் அவர்கள் பிறப்பு—இறப்பு என்னும் பந்தம் உற்றவர்கள்; அஃதாவது திரிபு உணர்ச்சி உடையவர் ஆகி உலக வலையில் பட்டவர் ஆவர். இவ்வுண்மையை என்றும் நிலைபேறுடைய தமிழ்மொழியின் தெய்வப் புலவர் ஆகிய திருவருள்ளுவர் கூறியருளிய,

''தலைப்பட்டார் தீரத் துறந்தார்; மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்'' (348)

என்னும் குறள் மொழியால் உணரலாம். இந்த உண்மையைப் பேணுமல் ஐம்பொறிகளின் வழியே தப்பாது ஒழுகி, அவற்றின் நுகர்விலேயே காலத்தைக் கழித்து, பாவப் பெருங்கடலில் அழுந்தித் தவிக்கிறேன்.

(பௌவம் – கடல்)

கரை காணுத வண்ணம் உள்ள பாவக் கடலில் அழுக்குண்டு மீண்டும் வெளிப்பட்ட பின்பும், மென்மையான பூவைப் போன்ற பெண்களின் கண்வலையில் பட்டு, பாசப்பிணிப்புக்கு உள்ளாகி, அம் மெல்லியலாருடன் கூடி மகிழ்தற்குரிய நூல்களைப் பயின்று, உயிர்க்கு உறுதி தரும் மெய்ந்நூலான நூல்களைப் பயில்வதற்கு விரும்பாமல், பெருக்குற்று, நாவினுல் தினமும் கொடிய சொற்களைக் கூறி, பிறப்பதுவும் இறப்பதுவுமே தொழிலாகக் கொண்டு திரிகிறேன்.

எனவே ஏ நெஞ்சமே! இவ்வாறு உயிர் சீரழிந்து நிற்கின்ற நிலையைச் சற்று உற்று நோக்குவாயாக. முறையாக நான் கூறும் வகையை நன்ருகக் கேட்பாயாக.

இறைவன் நிலை

—வெற்பின் மிசை

வந்து இருக்க வல்லான் மதியாதார் வல் அரணம் 30
செந்தழலில் மூழ்கச் சிரித்த பிரான்—அந்தம் இலா

வேத முடிவில் விளைவில் விளைவில் ஒளி 31
ஆதி அமலன், நிமலன் அருட்—போத

அறிவில் அறிவை அறியும் அவர்கள் 32
குறியுள் புகுதும் குணவன்—நெறிகொள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வெளியில் வெளியில் வெளியன் வெளியில்
ஒளியில் ஒளியில் ஒளியன் – ஒளியில் 33

அளியில் அளியில் அளியன் அளியில்
அளவில் அளவில் அளவன் – அளவு இறந்து 34

நின்ருன்; அனைத்தும் நிறைந்தான்; நினைப்பவர்பால்
சென்ருன்; தெரியத் தெரியாதான் – குன்ரு 35

விளக்காய் நிறைந்த விரிசுடரான், விண்மேல்
துளக்காமல் நின்ற பெரும்சோதி – உளக்கண்ணுக்கு 36

அல்லாது தோன்ரு அமலன்; அகிலமெலாம்
நில்லாமல் நின்ற நிலையினன்; சொல்லாரும் 37

ஈசன் பெருமை, இரு வினையேன் இன்று உனக்குப்
பேசும் தகைமை எல்லாம் பேணிக் கேள். 38

தெளிவுரை:

வெற்பு – மலை; கயிலைமலை.

வெள்ளி மயம் ஆகிய கயிலை மலையின் உச்சியிலே எழுந்தருளி இருக்கும் வல்லமை (தகுதி)யை உடையவன். தங்கள் தவம் மிகுதி காரணமாகக் கோட்டையின் பலத்தினுல் பிறரை மதிக்காத முப்புராதிகள் ஆகிய மூன்று அரக்கர்களின் கோட்டைகளை, நெருப்புக் கடலில் காணுமல் போகும்படி சிறுநகை செய்து அருளிய பெருந்தகைமை உடையவன்.

அனைத்து ஒலிகளையும் தனக்குள்ளே அடக்கி முடிவு இல்லாமல் நிற்கும் வேதப் பொருளாகவும் அதன் பயனுக விளங்கும் உபநிடதங்களின் (வேதாந்தம்) பொருளாகவும், விளங்குபவன், உயிர்க்குள்ள சத்துவம், இராசதம், தாமதம் என்னும் முக்குணங்களால் ஏற்படும் குற்றங்கள் அற்றவன் (அமலன்; தொடக்கமில் காலந்தொட்டு இயல்பாகவே பாசங்களின் நீங்கியவன்; நிமலன்), அருளின் உதவியால், அறியாமை நீங்கி, உண்மை அறிவை அறியும் ஞானிகளின் உள்ளத்தில் புகுந்து நிற்கும் எண்குணத்தை உடையவன். முறையாக எண்ணப்படுகின்ற ஐம்பூதங்களில் ஒன்று ஆகிய ஆகாயவெளிக்கும் வெளியாகிய பிரகிருதி வெளிக்கும், அதற்குக் காரணம் ஆகிய கலை வெளிக்கும் வெளியாய் (வியாபித்து) நிற்பவன்; அவ்வாறு நிற்பினும் அவற்றில் தோய்வு அற்று இருப்பவன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கலை வெளிக்கும் மேலாக விளங்கும் அசுத்த மாயை ஆகிய ஒளிக்கும், அதற்கு மேல் ஆகிய சுத்தவித்தை ஒளிக்கும், விளக்கம் தருபவன், சுத்த வித்தையில் தோன்றும் ஞானத்திற்கும் அதற்கு அப்பாற்பட்ட ஆதிவாக்கு ஆகிய சூக்குமைக்கும் அடிப்படையாகிய ஒளி வடிவினன். அதற்கும் மேலான அபரநாதத் தத்துவத்திற்கும் பரநாதத் தத்துவத்திற்கும் அப்பாற்பட்ட பராசத்தி வடிவினன்; பராசத்திக்குக் காரணமாய் நிற்கும் பரமசிவமாய் விளங்குபவன்.

அத்தகைய கருணை உடைய சிவபெருமான், காண்டல் கருதல் உரை அளவைகளால் அருளையே துணையாகக் கொண்டு காண்பவர்க்கு இரக்கப்பட்டுத் தோற்றம் அளிக்கிறான்; எத்தனை அளவைகளைக் கொண்டு அளந்தாலும், தன் முனைப்பால் தேடுபவர்க்கு அளந்து அறியப்படாதவனாகவும் இருக்கிறான். அவன் எங்கும் நீக்கம் அற நிறைந்து நிற்கிறான். அன்பால் நினைவாரது உள்ளத்தே விரைந்து செல்கிறான். பசுஞானம் எனப்படும் உயிரின் அறிவால் தெரிய முயன்றால், அவனை அறியமுடியாது. குறைவிலா நிறைவினை உடைய பேரொளிப் பிழம்பாக நின்று அனைத்தையும் விளக்கும் வியாபக அறிவினை உடையவன்.

வானத்தில் இயங்கும் கதிரவன், விண்மீன்கள் போன்றவற்றின் ஒளிபோல் அன்றி, என்றும் அசைவு இன்றி நின்று இலங்கும் அருட் பெருஞ்சோதி வடிவினன். அகத்தில் கண்கொண்டு காண்போர்க்கு அன்றி, ஊனக் கண்ணினால் காணமாட்டாத தூயவன், உலகில் உள்ள மற்றப் பொருள்களைக் காண்பது போல, புறக் கண்களுக்குத் தோன்றாத தன்மையை உடையவன். இத்தகைய பெருஞ்சிறப்புக்களை உடைய இறைவனது பெருமையை அருள் நூல்களில் உள்ளபடி, நல்வினை தீவினைகளுக்குரிய அடியேன் சொல்கிறபடி, ஏ நெஞ்சே! நீ விரும்பிக் கேட்பாயாக.

தசாங்கம்

இதுவரை இறைவனது புகழைப் பேசிய உமாபதிசிவம், இப்போது அவனது பெருமையினை பத்து உறுப்புகள் கொண்ட ''தசாங்கம்'' என்னும் பாட்டியலில் வைத்துக் கூறுகிறார். அந்தப் பத்து உறுப்புக்கள், மலை, நதி, நாடு, ஊர், மாலை, குதிரை, யானை, கொடி, முரசு, ஆணை என்பன ஆகும்.

அரசனுக்குரிய இந்தப் பத்து உறுப்புக்களைப் பேரரசன் ஆகிய சிவபெருமான் மீது ஏற்றிப் பாடுகிறார். முதல் உறுப்பு ஆகிய 'மலை' குறித்துப் பாடியது வருமாறு:

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மலை

—பாசம்

பலவும் கடந்து, பரிந்து அருள்சேர் பண்பால்
குலவி விளங்கும் குணக் குன்றேன். 39

தெளிவுரை:

ஆணவம் கன்மம் மாயை என்னும் பாசங்கள் பலவற்றையும் இயல்பாகவே கடந்து நின்று, உயிர்களிடத்துள்ள பெருங்கருணை காரணமாக, தன் எண்குணங்களுள் ஒரு குணம் ஆகிய ''பேரருள் உடைமை'' என்னும் பண்பைக் கொண்டு, உயிர்களோடு ஒன்றாய், வேறாய், உடனாய் நின்று உயிர்க்கு உதவி, உயிரின் அறிவு இச்சை செயல்களை விளங்கச் செய்யும் குணக்குன்றினை உடையவன்.

''குணக்குன்று'' என்பது பேரருள் உடைமை ஆகிய பெரிதும் உயர்ந்த மலையைக் குறிக்கும்.

நதி [ஆறு]

—இலகவே

செய்ய தருமச் செழுங்கிரியின் மீது இழிந்து
வையம் பரவ மகிழ்ந்து எழுந்து அங்கு—ஐயம், 40

களவு, பயம், காமம், கொலை, கோபம், காதி
அளவில் வினை எல்லாம் அழித்து, இங்கு—உளம் மகிழத் 41

தொம் எனவே எங்கும் முழங்கிச் சுருதிபயில்
செம்மைதரும் ஆகமங்கள் சேர்ந்து ஓடி மும்மலத்தின் 42

காடு அடங்க, வேர்பறித்துக் கல்விக்கரை கடந்து அங்கு
ஓடுபல் பூதத்து உணர்வு அழித்து—நீடு புகழ் 43

மெய் வாய்கண் மூக்குச் செவி எனப் பேர் பெற்ற
ஐவாய வேட்கை அவா அகற்றி—நையும் இயல் 44

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வாக்குப் பாதம் பாணி பாயுரு உபத்தம் பலவும்
நீக்கிச் செறிந்து நிறைந்து ஓடிப் – போக்கு அரிய 45

பந்தம் எனும்சோலை பறித்துப் பரந்து அலைக்கும்
அந்த மனம் புத்தியுடன் ஆங்காரம் – சிந்திவிழ 46

மோதி அருள் நீர்மை ஓங்கி, விறல் முக்குணமும்
காதி உரோமம் எலாம் கை கலந்து -- சீதப் 47

புளகம் அரும்பப், புலன் மயக்கம் போக்கி
விளைவில் புலன் முட்ட மேவிக் – களபதன 48

மாதர் மயக்கம் அறுத்து வளர் மண்டலத்ததுச்
சோதி ஒரு மூன்றினையும் சோதித்து – நீதியினால் 49

ஆதாரம் ஆறினும் சென்று ஆறி, அடல் வாயுக்கள்
மீதான பத்தும் மிகப் பரந்து – காதிப் 50

பிருதிவி அப்புத் தேயு வாயு ஆகாய
உறுதி நிலம் ஐந்தும் ஓடி – மறு இலா 51

நான்முகன் மால் ஈசன் மகேசன் நலம்சிறந்த 52
தான் முகம் ஐந்தாம் சதாசிவமும் – ஆனது ஒரு

வந்து நாதம் கடந்து சுத்த வெறு வெளியில் 53
அந்தம் இலாப் பாழ் அடங்கித் தேக்கியபின் முந்திவரும்

அவ்வறிவுக்கு அப்பாலும் சென்று, அகண்டம் உள் அடக்கிச்
செவ்வறிவே ஆகித் திகைப்பு ஒழிந்திட்டு – எவ்அறிவும் 54

தான் ஆய வீடு அளித்துத் தன்னில் பிரிவு இலா 55
ஊன் ஆகி எவ்வுயிர்க்கும் உள் புகுந்து மேனி இலா

அஞ்சு அவத்தையும் கடந்து, ஆய பெரும் பேர் ஒளிக்கே 56
தஞ்சம் எனச் சென்று, தலைப்பட்டு – வஞ்சம் அறத்

தான் அந்தம் இல்லாத தண்ணளியால் ஓங்கிவரும் 57
ஆனந்தம் என்பதோர் ஆறு உடையான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

இந்த ஆறு, சிவபுண்ணியம் என்னும் செழுமையான மலையிலிருந்து இறங்கி உயிர்களின் பொருட்டு என்னென்ன நன்மைகளைச் செய்கிறது என்பதை இப்பகுதியில் உமாபதி சிவம் கூறுகிறார். இஃது எழுச்சி மிக்கதொரு காட்டாறு. இந்த ஆற்றின் திறம் அளவிடற்கு அரியது. இதன் செயற்பாடுகள் வருமாறு:

உயிர்களுக்கு ஏற்படும் ஐயம், களவு, அச்சம், காமம், கொலை, சினம் ஆகியவற்றை அழிக்கிறது. அளவற்ற வினைகளை எல்லாம் வீழ்த்துகின்றது. அம்பலவாணனின் நடனத்தைக் காண்பவரின் உள்ளம் மகிழுமாறு, "ஓம்" என்னும் ஓங்கார ஒலியைய எழுப்பி வேதங்களின் தெளிவு ஆகிய, உயிர்க்கு அருளைத் தரும் ஆகமங்களின் வழியே, இந்த ஆறு ஓடுகிறது.

உயிர்களுக்குள்ள ஆணவம், கன்மம் , மாயை என்னும் பரந்து கிடக்கும் காடுகளை அறவே வேர் அறுக்கிறது. ஞானக் கல்வி ஆகிய இந்த ஆறு உலகக் கல்வியின் கரையைக் கடந்து ஓடுகிறது. பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்னும் ஐந்து பூதங்களின் சட இயல்புகளின் விரிவைப் போக்குகிறது. உயிர்களின் உடலில் உள்ள மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறிகளின் வழி வெளிப்படும் புலன்களையும் அவற்றின் பயனாக எழும் பேராசையையும் அகற்றுகிறது.

அன்றுடம் உயிர்க்கு நலிவை ஏற்படுத்திவரும் கை, கால், வாய், கருவாய், எருவாய் என்னும் ஐந்து செயற்கருவிகளின் தொழிற்பாடுகளை அடக்குகிறது. எளிதில் நீக்க முடியாத சுற்றத்தாரின் தொடர்பு என்னும் பெரும் தோட்டத்தைப் பெரும் வெள்ளமாகப் பரந்து ஓடி நீக்குகிறது.

மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் அகக் கருவிகள் நான்கும் ஒன்றுக்கு ஒன்று பொங்கி எழுவதைச் சிந்தும்படி செய்து வீழ்த்துகிறது. அவ்வாறே, தாமதம், இராசதம், சத்துவம் என்னும் உயிர்க் குணங்கள் மூன்றும் ஒன்றைவிட ஒன்று அருளால் ஓங்கி நின்று மோதுவதை ஒழிக்கிறது.

மனித உடலில் உள்ள மூன்றரைக் கோடி உரோமங்களும் சிலிர்த்து எழுமாறு விதிர்விதிப்பு எய்தி, ஆனந்தக் கண்ணீர் ததும்பும்படி உயிர் ஐம்புல நுகர்வில் மயங்கி நிற்பதைப் போக்குகிறது.

இவ்வாறு வினைகளுக்கு உட்படும் உயிர்களுக்கு வினை விளைவை ஏற்படுத்தாத பற்றின்மை என்னும் வயலினுள் இந்த ஆறு புகுந்து, நறுமணம் பூசிய மார்பினை உடைய பெண்களின் இன்பத்தை நாடிச் செல்லும் உயிரின் மயக்கத்தைப் போக்குகிறது. அக்கினி மண்டலம், சந்திர மண்டலம், சூரிய

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மண்டலம் என்னும் மூன்று மண்டலங்களையும் நெறிப்படுத்தி, மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்னும் ஆறு ஆதாரங்களிலும் பரந்து செல்கிறது.

ஒன்றோடு ஒன்று மாறுபட்டுப் பொருதும் பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்னும் பத்து வாயுக்களும் வேறுபட விளங்கி பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐம்பெரும் பூதங்களும் தம்முள் மாறுபடாமல் அண்டத்தும் பிண்டத்தும் ஒழுங்காக நிற்குமாறு, அவற்றின் வழி இந்த ஆறு ஓடுகிறது.

நிவர்த்திகலையின் அதிபர் ஆகிய பிரம்மாவின் படைப்பையும், பிரதிட்டா கலையினின்று காத்தல் தொழிலைச் செய்யும் விட்டுணுவையும், வித்தியா கலையிலிருந்து சங்காரத்தைச் செய்யும் உருத்திரனையும், சாந்தி கலையில் நிலை பெற்று மறைத்தலைச் செய்யும் மகேசனையும், சாந்தியாதீத கலைக்குக் காரணர் ஆகி அருளல் தொழிலைச் செய்யும் ஐந்து முகங்களை உடைய சதாசிவ மூர்த்தியையும் இவர்கள் உறையும் கலைகளுக்குக் காரணமாகிய சுத்தமாயையின் அதோமுகம் (கீழ்நோக்கியது) ஆகிய விந்துவான பராசத்தியையும், அந்த சுத்தமாயையில் ஊர்த்துவ முகமாய் (மேல் நோக்கியது) ஓசை வடிவாகிய அபர நாதத்திற்கும் மேல் சென்று, தூய வெட்ட வெளியில் (முப்பத்தாறு தத்துவங்களுக்கும் அப்பால் நின்று) பரவிந்து பரநாதம் ஆகிய இரண்டையும் தனக்குள் அடக்கி அதற்கு மேல் இடம் எல்லையைக் கடந்து, இந்த ஆறு ஓடுகிறது.

அனைத்துப் பொருள்களையும் தனக்குள் அடக்கி, எல்லா அறிவும் தன்னகத்தே பெற்ற பேரின்பப் பெருவீட்டினை நல்கி, உடலைவிட்டுப் பிரியாத உயிர்போல, எல்லா உயிர்களையும் தன் உடம்பாகப் பெற்று, உள்புகுந்து, உயிர்களின் உடம்பிற்குள்ள ஐந்து அவத்தைகளையும் கடந்து அப்பாற்பட்டு மேலாக விளங்கும் பேரொளிப் பிழம்பினிடத்தே, அடைக்கலம் எனப் போய் அடைந்து, முடிவில்லாத தண்ணருளால் வளர்ந்து ஓங்கும் தன்மையை உடையது இந்த ஆறு.

இந்த ஆறு மலையிலிருந்து இறங்கிவந்து உயிர்களின் பொருட்டு இத்தனைப் பேருதவிகளைச் செய்துவருவதைப் படிப்படியாக உமாபதி சிவம் தெளிவாக விளக்கியுள்ளார். அடுத்து வருவது நாடு.

நாடு

–ஆனந்தம்

பண்ணும் பயன் சுருதி ஆகமங்கள் பார்த்து உணர்ந்து
நண்ணரிய தொரு நாடு உடையான். 58

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

உயிர்களுக்குப் பேரின்பப் பயனை விளைவிக்கும் கருவிகள், நான் மறைகளும் இருபத்தெட்டு ஆகமங்களும் ஆகும். அவற்றைக் கற்றுத் தெளிந்த அளவில் பேரின்பப் பயனை உயிர்கள் பெற்றுவிட இயலாது; அவற்றில் விதிக்கப்பட்ட வழிமுறைகளில் நின்று ஒழுகினுலேயே உயிர்கள் பேரின்பப் பெருநிலை ஆகிய வீட்டைப் பெற முடியும். அத்தகைய பேரின்ப வீடே, இறைவனுக்கு 'நாடு' ஆகும்.

ஊர்

—எண் எண்

கலையால் உணர்ந்து, கருத்து அழிந்து, காமம்
நிலை ஆனது எல்லாமும் நீத்து, அங்கு – அலைவு அறவே 59

தேட்டு அற்ற சிந்தை சிவஞான மோனத்தால்
ஓட்டு அற்று வீற்றிருக்கும் ஊர் உடையான். 60

தெளிவுரை:

உயிர்களுக்கு உலக அனுபவங்களைத் தரவல்லன, அறுபத்து நான்கு கலைகள் ஆகும். அந்த அறுபத்து நான்கு கலைகளையும் கற்றுணர்ந்தாலும், அவற்றின் இயல்பும் பயனும் வேறு வேருய் இருப்பதால், எந்தக் கலையினைப் பற்றி எதன்படி நடந்தாலும், இது தான் முடிவான நெறி என்று தெளிவுபெற முடியாது. எல்லாக் கலைகளுமே நிலையற்ற தன்மையினை உடையன. எனவே உயிர்க்கு அவை பற்றிய தெளிவான நிலை ஏற்படாது. இவ்வுண்மையையே ''கருத்தழிந்து'' என்கிருர்.

இக்கலைகளில் எல்லாம் மனிதர்களைப் பெரிதும் அலைக்கழிக்கும் கலை, காமக் கலையே ஆகும். இந்தக் காமக்கலையில் பயின்ற மனிதன், ஒன்று விட்டு ஒன்று பற்றிய நிலையில்லாத நிலையினைப் பெறுகிருன். அதனுல் அவனுக்கு எதிலும் ஒருமை(concentration) ஏற்படுவதில்லை; அதன் பயனுகப் பெருமையை இழக்கிருன். எனவே, ஒருமையுணர்வைத் தரும் திருவருளையே பற்றி நிற்கப் பயிலுதல் வேண்டும். (மோனம் – ஒருமை உணர்வு).

அத்தகைய திருவருளும் தேடிப் பெறுவதன்று; அது நாடிப் பெறுவதொன்று ஆகும். அதனைத் தேடிப் பெற முடியாது என்று கூறுவதற்குக் காரணம், அஃது ஏதாவது ஓர் இடத்தில் இல்லை என்பதாலேயே ஆகும்;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

திருவருள் 'அங்கு இங்கு' எனுதபடி எங்கும் நிறைந்து இருக்கிறது. எனவே, அதனைப் பற்றி நின்றே பெற முடியும். 'நாடுதல்' என்பது விரும்புதலைக் குறிக்கும். திருவருளையே உயிர்கள் விரும்பி நிற்றல் ஒன்றினுலேயே அதனைப் பெற முடியும். அத்தகைய உயிர்கள் உள்ள இடமே இறைவனுக்கு ''ஊர்'' ஆகும்.

தார் [மாலை]

—நாட்டத்தால்

தெண்ணீர் அருவி விழச் சிந்தை மயக்கம் தெளிந்து
உள்நீர்மை எய்த உரோமம் எலாம் – நண்ணும் 61

புளகம் புனை மெய்யர் பொய்யில் கூடாமல்
உளகம்பம் கொண்டு உள்உருகி – அளவு இலா 62

மாலா இருக்கும் அவர் மனத்தை வாங்க அருள்
மேலாய் விளங்கு அலங்கல் மெய்யினுன். 63

தெளிவுரை:

திருவருளில் கொண்ட பற்று காரணமாக, சிந்தையில் மயக்கம் ஏதும் இன்றி, உயிர்களுக்குத் தெளிவு ஏற்பட்டுக் கண்களிலிருந்து கண்ணீர் பெருகுகிறது. இக்கண்ணீர் மலையின் உச்சியிலிருந்து இடைவிடாமல் விழும் ஆற்று நீரைப் போன்றது. அந்நிலையில் உள்ளத்தில் ஞானம் விளங்குகிறது. அதன் பயனுக மயிர்க்கால் தோறும் இன்ப உணர்வு பெருகுகிறது.

இத்தகைய உண்மையான அடியவர்கள் மீண்டும் உலகியல் இன்பத்தில் பற்று வைக்கமாட்டார்கள். திருவருளை நினைந்து உள்ளம் உருகி நிற்பர், எண்ணற்ற உலகப்பற்று கொண்டு உழலும் உயிர்களின் போக்கைத் தடுத்து நிறுத்தி, அவ்வுயிர்களின் மனத்தைத் தன் வயப்படுத்தும் அருளையே இறைவன் 'மாலை'' யாக அணிந்துள்ளான். அந்த மாலை அணிந்த திருமேனியையே தன் உடலாகக் கொண்டுள்ளான். (அலங்கல் – பூமாலை)

குதிரை

—தோலாத

வானம் புவனம் மலை கடல் ஏழ் பாதாளம் 64
ஊன் ஐந்து பூதத்து உயிர் உணர்ச்சி – ஞானமாய்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எல்லாமாய் அல்லவாய் எண்ணுவார் எண்ணத்து
நில்லாமல் நிற்கும் நீள் வாசியான். 65

தெளிவுரை:

தோலாத வான் – இருளுக்குத் தோல்வியுறாத வானம். சூரியனும் சந்திரனும் எப்போதும் வானில் விளங்குகின்றதால், விண்வெளியில் இருள் இல்லை எனப்பட்டது.

அத்தகு ஒளிமயமான வான் வெளியையும், இருநூற்று இருபத்து நான்கு புவனங்களையும், எட்டு வகையான மலைக் கூட்டத்தையும், ஏழு கடல்களையும் கீழ் உள்ள ஏழு பாதாள உலகங்களையும், உயிரினங்களுக்குள்ள உடல்களையும் அவ்வுடல்களுக்கு மூலமான பஞ்ச பூதங்களையும், உயிர்களையும் உயிர்களின் அழுந்தி அறியும் இயல்புகளுக்கு ஏற்ற அளவுகளையும் ஒற்றித்து நிற்கும் பேரறிவாயும் அவற்றின் வேறாகியும், தன் முனைப்பு கொண்டு எண்ணுபவர்களின் எண்ணத்திற்கு அகப்படாமலும் நிற்கும் தன்மையை உடையவன் இறைவன்.

இவ்வாறு, எல்லாவற்றிலும் தோய்ந்தும் தோயாமையும் ஆகிய விசித்திரமான தன் பேராற்றலையே இறைவன் ''குதிரை' யாக உடையவன்.

நீள் வாசியான் – விநோதமான குதிரையை உடையவன்.

வாசி – குதிரை.

யானை

–சொல் ஆரும்

பாதாளம் ஊடுருவிப் பார்ஏழும் விண்ஏழும் 66
ஆதாரம் ஆகி அகண்டம் நிறைந்து –ஓத

அரிதாய் எளிதாய் அருமறை ஆறு அங்கத்து 67
உருவாய் உயிராய் உணர்வாய்ப் –பெரிதுஆய

வெய்ய துயர்ப் பாசம் அறவீசியே, வெம் பிறவித் 68
துய்ய கடலைத் துகழ் எழுப்பி –ஐயம் உறும்

காமக் குரோத உலோப மோக மதம் காய்ந்து அடர்த்துச் 69
சாம் அத்தொழிலின் தலைமிதித்து –நாமத்தால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கத்தும் சமயக் கணக்கின் விறல் கட்டு அறுத்துத்
தத்தம் பயம் கொலைகள் ஆங்கு அழித்தே – தத்திவரும் 70

பாசக் குழாத்தைப் பட அடித்துப் பாவையர்தம்
ஆசைக் கருத்தை அறவீசி – நேசத்தால் 71

ஆனவேகம் கொண்டு அருள் மும்மதத்தினால்
ஊனையார் தத்துவங்களுள் புகுந்து – தேனைப் 72

பருகிக் களித்து உயர்ந்து பன்மறை நாற்கோட்டால்
மருவித் திகழ் ஞான ஆனையான். 73

தெளிவுரை:

அருள் நூல்களில் பேசப்படுகின்ற கீழ் உலகம் ஏழு, மேல் உலகம் ஏழு, நடுஉலகம் ஆகிய அனைத்து உலகங்களிலும் இடையீடு இன்றி நிறைந்தும் அவற்றிற்கு ஆதாரம் ஆகியும், அளவு இறந்த அருவாய் இருக்கும் சுத்தமாயா உலகம் முழுவதும் நிறைந்தும் இருக்கிறான் இறைவன். ஆயினும் அவனது அருளாக விளங்குகின்ற யானை, சுட்டிச் சொல்லும் அளவில் கண்ணினால் காண முடியாததாகும்.

ஆயினும் அருளால் உணர்வார்க்கு எளிதாயும், நான்மறைகளையும் ஆறு அங்கங்களையும் தனக்கு வடிவாகவும் உடையது. அவற்றை அறிதற்கு உரிய உயிர்களோடு உயிராய்க் கலந்து நின்று அவற்றின் உணர்வுகளோடு உணர்வாய் உடனாய் நின்று, பெரிய கொடிய துயர் விளைவிக்கும் பாசத்தை முற்றிலும் தொலைத்து நிற்கிறது. வெப்பம் மிகுந்த பிறவிப் பெருங்கடலைத் துகள் எழுமாறு கலக்கி, வற்றச் செய்து, (துகள் – புழுதி), உயிர்களை அலைக்கழிக்கும் காமம், சினம், பொருட்பற்று, பிடிவாதம், செருக்கு, ஆகியனவற்றை வெகுண்டு தாக்கிப் பிறப்பு இறப்புக்கு ஏதுவாகிய இச்செயல்களை இந்த யானை மிதித்து அடக்குகிறது.

தனித்தனிப் பெயர்களை வைத்துக் கொண்டு, உண்மை நெறி அறியாமல், பிதற்றுகின்ற பல்வேறு சமய வாதிகளின் வெற்றி முழக்கங்களின் கட்டுக்கோப்பைச் சின்னாபின்னப் படுத்தி, அவர்கள் பிறசமயிகளை அச்சுறுத்தியும், உயிர்க்கொலை செய்தும் வருகின்ற தீக்குணங்களை அழிக்கின்றது.

நாள்தோறும் செய்து வரும் வினைகளின் பயனாகப் பெருகிவரும் புத்திரபாசம் முதலாகிய உலகியல் தொடர்பின் வழி, உயிர்க்குள்ள பற்றினைச்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிறிதும் இன்றி அறுத்தும், மனைவி, மகளிர் வழிப்பட்டு வரும் பந்தத்தை வேர்அறப் பறித்தும், உயிர்கள் இந்தப் பிறப்பிலேயே வீடுபேறு அடைவதற்குரிய தகுதியைப் பெறவேண்டும் என்னும் கழிவிரக்கம் கொள்கின்றது அருளே வடிவாகிய இந்த யானை.

அருட்சத்தியாக விளங்கும் உமை, திரு, வாணி ஆகிய மூன்று சத்திகளை மும்மதமாகக் கொண்டுள்ள இந்த யானை, உயிர்களின் உடம்பாகப் பொருந்தி உள்ள தத்தவக் காட்டினுள் புகுந்து, ஆனந்தம் ஆகிய தேனைப் பருகி மகிழ்ந்து, அதனால் மிகவும் சல்லாபம் அடைந்து, வீறிட்டு மிகுந்த உன்னதமான நான்மறைகளைத் தனக்குக் கொம்புகளாகப் பொருந்தி, விளங்குகிறது. இந்த அருள் யானையை உடையவன், சிவபெருமான்.

கொடி

—இருமூச்

சமையம் கடந்து, தனக்கு ஒப்பு இலாது
சுமை துன்பம் நீக்கும் துவசன் 74

தெளிவுரை:

அறுவகைச் சமயத்தையும் கடந்து, தன் நிகர் இல்லாத் தலைமையால் உயிர்க்கு உற்ற துன்பங்களை நீக்குவதையே தமக்கு உரிய ''கொடி'' யாக உடையவன், சிவபெருமான்.

துவசம் – கொடி.

அறுவகைச் சமயங்கள் வருமாறு; – வாமம், வைரவம், மகா விரதம், காளாமுகம், பாசுபதம், சைவம் என்பன. இவை அகச் சமயம் எனப்படும்.

முரசு

—சுமை ஒன்றித்

தம்மை மறந்து தழல் ஒளியுள்ளே இருத்தி 75
இம்மை மறுமை இரண்டு அகற்றிச்—செம்மையே

வாயுவை ஓடாவகை நிறுத்தி வானத்து 76
வாயுவையும் அங்கே உற அமைத்துத்—தேயுவால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்றும் ஒரு தகைமையாய் இருக்கும் இன்பருளே
நின்று முழங்கும் நெடுமுரசோன். 77

தெளிவுரை:

புலன் அடக்கம் உற்றுத் தம்மை மறந்து, ஒளி வடிவாய் இருக்கும் இறைவனை இதயத்தின் உள்ளே எழுந்தருளச் செய்பவர்கள் யோகிகள். அவர்களது இம்மைத் துன்பமும் மறுமைத் துயரமும் அகற்றி, உள் இருக்கும் பிராணவாயுவை வெளியே விடாமல் நிறுத்தி வெளியில் இருக்கும் காற்றை உள்ளே விடாமல் யோக நிலையில் அமர்ந்து, சுழுமுனை (நடு நாடி) வாயிலாகச் செல்லும் மூலாதார நெருப்பு, நெற்றியில் உள்ள மதி மண்டலத்தைத் தாக்கி, அமுதம் பொழிவதால், அந்த அமுதத்தை நுகர்கிறார்கள். எனவே, எப்போதும் அசைவற்ற நிலையில், இறையருளோடு ஒன்றுபட்டு இருக்கும் இனிய யோகியரின் இதயத்தே நின்று முழங்கும்படியான நெடிய முரசினை உடையவன் சிவபெருமான்.

ஆணை

–அன்றியும்

மாலும் அயனும் வகுத்து அளித்த வையம் எலாம்
சாலும் அதற்கு அப்பாலும் எப்பாலும் – மேலை 78

உலகும், உலகால் உணர ஒண்ணா ஊரும்
இலகி நடக்கும் எழில் ஆணையான். 79

தெளிவுரை:

மேற்கண்ட ஒன்பது உறுப்புக்களை மட்டும் அல்லாமல், அயனால் படைக்கப்பட்டு, மாலால் காக்கப்படும் பிரகிருதி மாயையில் உள்ள அனைத்து உலகங்களிலும், பொருந்தியுள்ள அப்பிரகிருதி மாயா உலகத்திற்கு அப்பால் உள்ள அசுத்த மாயையில் உள்ள உலகங்களிலும் அசுத்த மாயா உலகத்திற்கும் மேல் உள்ள சுத்தமாயா புவனத்தில் உள்ள உலகங்களிலும் சுத்த மாயா புவனத்திற்கும் அப்பால் உள்ள, எந்த உயிரினாலும் உணர இயலாத அருள் வெளியிலும் விளங்கி நடத்தும் அழகுமிக்க ''ஆணை'' யை உடையவன் சிவபெருமான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இறைவன் பெருமை

—அழகு இறந்த

காட்சியான் காட்சிக்கும் காணுன் கலேஞான
ஆட்சியான் ஆட்சிக்கும் ஆயினுன் – சூட்சியான் 80

பாரும் திசையும் படர் ஒளியாலே நிறைந்தான்
தூரும் தலேயும் இலாத் தோன்றலான் —வேராகி 81

வித்துஆகி வித்தின் விளேவு ஆகி மேவுதனுச்
சத்தாகி பூதங்கள் தானுகிச் —சுத்த 82

வெறுவெளியாய்ப் பாழாய், வெறும் பாழுக்கு அப்பால்
உறுபொருளாய் நின்ற ஒருவன். 83

தெளிவுரை:

எண்ணிக்கையால் அளந்து அறியமுடியாத உயிர்களுக்கு, அவற்றின் பக்குவத்திற்கு ஏற்ப, காட்சி அளிக்கும் தன்மையை உடையவன் சிவபெருமான்; தன் முனைப்பால் அவனேக் காண்பதற்கு முயல்பவர்களின் காட்சிக்கு அரியவன். உலகில் உள்ள அனேத்துக் கலே உணர்வுகளேயும் ஆளும் தகைமை உடையவன்.

உயிர்கள் நுகரும் மாயா காரியங்கள் அனேத்தையும், மாயையிலிருந்து தோற்றுவித்தவன். மாயை சிவபெருமானின் வைப்பாற்றல் (பரிக்கிரகசத்தி) ஆகும். எனவே, உயிர்கள் நுகரும் பொருள்கள் அனேத்தையும் அவனே ஆட்சி செய்கிறுன் . அப்பொருள்களால் வாழும் உயிர்களேயும் அவனே ஆள்கிறுன். இவற்றையெல்லாம் ஆள்பவன் ஆயினும், இவற்றில் சிறிதேனும் தோய்வு இன்றி இருக்கும் சூழ்ச்சித்திறன் உடையவன்.

பூவுலகம் எங்கும், எட்டுத்திக்கும், கீழும் மேலும் சஞ்சரிக்கும் சூரியன், சந்திரன், நெருப்பு முதலிய ஒளிகளுக்குத் தான் ஒளியுமாய், அந்த ஒளி மூர்த்திகளுக்கு ஒளி கொடுத்து வருபவன். முதலும் நடுவும் முடிவும் இல்லாதவன்; பிறபொருள்களேத் தோன்றுமாறு செய்யும் சிவபெருமான், தான் தோற்றம் உருமலே அவற்றைச் செய்பவன்.

தாபரம் சங்கமம் என்னும் இயங்கு பொருள், இயங்காப்பொருள் ஆகிய இருவகைப் பொருள்களும் தோன்றுவதற்கு, வேர், வித்து விளேவு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆகியவற்றிற்கு நிமித்த காரணனாக இருப்பவன். (நிமித்த கரணம் – வினைமுதற் காரணன்). உயிர்களைப் பொருந்தியுள்ள உடல், கரணம், உலகம், போகப் பொருள்களுக்கு ஆதமாரமாயுள்ள பூதங்கள் முதலானவற்றைத் தோற்றுவித்து, அந்தந்தப் பொருளுக்கு அந்தந்தப் பொருளாய் இருப்பவன்.

சுத்தம் என்னும் அபர விந்துவையும், வெறு வெளி ஆகிய அபர நாதத்தையும், பாழ் ஆகிய பரவிந்துவையும், வெறும் பாழ் ஆகிய பர நாதத்தையும் கடந்து, இவற்றில் எதிலும் தோய்வு இன்றி நிற்கும் ஒப்பற்ற ஒருவனாய் இருப்பவன் சிவபெருமான்.

''பாழ்'' என்பது, எந்தப் பொருளிலும் இறைவன் சொரூப நிலையில் தோய்வு இன்றி இருப்பவன் என்பதைக் குறிக்கும். இன்மை என்னும் பொருள் குறித்தன்று என்பது கருதத்தக்கது.

ஞானாசிரியன்

–பொறியிலியேன்

வெம்பும் பிறவியலை வீழாமல், வீடுஅளித்த
சம்பந்த மாமுனி, என் தம்பிரான் – அம்புவியோர் 84

போற்றும் திருவடி, என் புன்தலை மேலே பொறித்தோன்
ஏற்றின் புறத்து அமைந்த எம்கோமான் – சாற்றுவார் 85

சாற்றும் பொருளான், தனிமுதல்வன், தான் அல்லான்
வேற்று இன்பம் இல்லா விளங்கு ஒளியான் – போற்றும் 86

குருவேடம் ஆகிக் குணம், குறி ஒன்று இல்லாப்
பெருவேடமாய் நிறைந்த பெம்மான் – கருவேடம் 87

கட்டும் உருக் கட்டு அறுத்தான், கற்றவர்வாழ் தில்லையான்
எட்டும் அவர்க்கு எட்டா இயல்பினான். 88

தெளிவுரை:

சிவபெருமான் அருளிச் செய்கின்றவற்றை எல்லாம் அனுபவிப்பதற்குரிய விதியற்றவன் ஆகிய நான், வெப்பம் மிகுந்த பிறவிக்கடலில் வீழ்ந்து அழுந்தாமல் இருக்கும் பொருட்டு, எனக்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வீடுபேற்றினை வழங்கிய அருளிய ''சம்பந்தமாமுனி'' என்னும் மகத்தான நாமத்தைப் புனைந்திருப்பவனே, என் தலைவன் ஆவான்.

(தம் குருநாதர் ஆகிய மறைஞானசம்பந்தரையே, உமாபதி சிவம் இவ்வாறு கூறுகிறார்; ஞானத்தைத் தரும் குருவைச் சிவமாகக் கொள்ளும் சைவ மரவு பற்றி இவ்வாறு கூறுகிறார்). உலகில் உள்ளவர்கள் போற்றிப் பரவும் தனது திருவடித் தாமரைகளை ஈனமான என்னுடைய சிரசின்மேல் ஒருகாலும் மறையாமல் விளங்க வைத்தவன். இடப நந்தி முதுகின்மேல் அமர்ந்திருக்கும் என் தலைவன், நூல் அறிவும் நுண் அறிவும் உடையவர்கள், அவனது திருவருள் வயப்பட்டுத் தத்தமக்கு இயலுமாறு சொல்லிச் சுவைக்கும் பொருளாக, விளங்குபவன், ஒப்புயர்வற்ற என் தலைவன்.

சிவபெருமானையே நினைந்து உருகும் அடியவர்களுக்கு, தன் உணர்வு அன்றி, வேறு இன்ப உணர்வு ஏற்படாத அளவு நிறைந்து விளங்கும் பேரொளி வடிவானவன். மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிர தரம் என்னும் நான்கு வகை சத்திநிபாதமும் பொருந்திய சகலர்வகை ஆன்மாக்களைக் காத்து அருளும் பொருட்டு, அவர்கள் அறிந்து வழிபடத்தக்க ஆசிரியத் திருமேனி கொண்டுளான்; ஆயினும் ஏனைய உயிர்களுக்குள்ள முக்குணங்களோ அவற்றிற்கேற்ற அடையாளங்களோ எவையும் இல்லாத அருளுருவம் தாங்கி எங்கும் நிறைந்திருக்கிறான் எங்கள் பெருந்தலைவன்.

உயிர்கள், நால்வகைத் தோற்றத்தின் ஏழ்வகைப் பிறப்பிலும் அவற்றிற்கு ஏற்ற யோனிகளில் உருவாவதற்குக் காரணமான கன்மமலம், ஆணவமலம் ஆகியவற்றின் பிணிப்பை அறவே அறுத்தவன். வேதாகமங்களை நன்கு உணர்ந்தவர்கள் வாழ்கின்ற சிதம்பரம் ஆகிய தில்லைவனமே தனக்கு இருக்கையாய்க் கொண்டவன். அயனுக்கும் மாலுக்கும் எட்டாத அவன், தற்போதத்தால் அறிய முயல்பவர்களுக்கு என்றும் அறிய இயலாத தன்மையை உடையவன்.

மலநீக்கும்

—மட்டு அவிழ்தார்

வானோேன் பவனி வரக்கண்டு வல்வினையேன் 89
ஏனோரும் ஏத்துதல் கண்டு ஏத்தினேன் — தான் என்னைப்

பார்த்தான்; பழையவினைப் பஞ்சமலக் கொத்தையெல்லாம் 90
நீத்தான்; நினைவு வேறு ஆக்கினான் — ஏத்து அரிய

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தொண்ணூற்று அறுவர் பயில் தொக்கில் துவக்கு அறுத்தான்!
கண் ஊறு தேன் அமுதம் காட்டினான் – வெண்ணீறும் 91

வேடமும் பூசையுமே மெய் என்றான்; பொய் என்றான்
மாடையும் வாழ்க்கை மனையுமே – நாடு அரிய 92

அஞ்செழுத்தின் உள்ளீடு அறிவித்தான்; அஞ்செழுத்தை
நெஞ்சு அழுத்தி நேய மயல் ஆக்கி – அஞ்செழுத்தை 93

உச்சரிக்கும் கேண்மை உணர்த்தி, அதன் உச்சரிப்பு
வைச்சிருக்கும் அந்த வழி ஆக்கி – அச்சம் அறச் 94

சென்று விளக்கை எழத் தூண்டிச் செஞ்சுடரின்
ஒன்றி ஒருவிளக்கின் உள் ஒளியாய் – நின்ற 95

பெரு விளக்கின் பேர் ஒளியாய் உள்ளே பிரசம்
மருவும் மலர்போல் மதித்து அங்கு – கருவின் உருக் 96

கொள்ளா அருளைக் கொளுத்திக் குணம் குறி ஒன்று
இல்லா இடத்தே இளைப்பு ஆற்றி – விள்ளாத 97

உள்ளம் முதலாக உள்ளது எலாம் வாங்க, அருள்
வெள்ள மயல் அளித்து மேவினான் – கள்ளம் 98

மறப்பித்தான்; மெய்ஞ்ஞானம் ஆக்கி, மனம் எல்லாம்
இறப்பித்தான்; என் பிறவி ஈர்த்தான் – விறல் சொல்லுக்கு 99

எட்டானை; யார்க்கும் எழுதா இயல்குணங்கள்
எட்டானை; ஆற்று எழுத்தினான் – மட்டாரும் 100

பாடலார், ஆடலார், பண்பலார், நண்பலார்
ஆடலார், ஆடல் அகன் பதியாம் – கூடலார் 101

காணக் கிடையாதான்; காண்பார்க்குக் காட்சியான்;
பாணர்க்கு இலகு பலகை இட்டான் – சேணில் 102

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிறந்த உருவான் திருமாலுக்கு எட்டான்;
நிறைந்த திருவுருவில் நிற்போன் – கறங்குடனே 103

சூறைசுழல் வண்டு சுழல் கொள்ளி வட்டம் எனும்
மாறுகருணையினால் மாற்றினான் – நீறு அணிந்த 104

மெய்யன்; நிமலன்; அமலன்; அருள் வீடு அளிக்கும்
ஐயன்; அறிவுக்கு அறிவு ஆயினான் – பொய்யர்பால் 105

பொய்மையாய் நின்றான்; புரிந்தவர்தம் நெஞ்சத்து
மெய்மையாய் நின்று விளங்கினான்; 106

தெளிவுரை:

தேன் ததும்பும் கொன்றை மாலை அணிந்து அப்பெருமான் உலாப் போதரக் கண்டு, எல்லோரும் ஏத்தி வழிபடக் கொடிய வினையை உடைய அடியேனும் போற்றி வழிபட்டேன். அவன் என்னை அருள் நோக்குச் செய்தான். அத்திரு நோக்கினால் என்னிடம் இருந்த பழைய வினை முதலிய ஐவகைப் பாசங்களையும் என்னிடமிருந்து அகற்றினான். (ஐவகைப் பாசங்கள் வருமாறு: ஆணவமலப் பற்று ஆகிய காரண கன்மம், மாயை, காரிய கன்மம், மாமாயை, திரோதான மலம் ஆகியன). என் முன்னைய உலகியல் நினைவுகளை வேறுபடுத்தினான்; அதன் பயனாக எனது பசுகரணத்தைச் சிவகரணம் ஆக்கி, இரச குளிகையைச் சேர்ந்த செம்பு போல, என்னைத் தன்வசம் ஆக்கினான்.

சொல்வதற்கு அரிய தத்துவக் குப்பைகள் ஆகிய தொண்ணூற்று அறுவரையும் கீழ்ப்படுத்தி உடல் பந்தம் முழுவதையும் அறுத்தான். (தொக்கு – உடல்; துவக்கு பந்தம்) இத்தகு மல நீக்கத்தை, நினைக்கும்போது, உளம் மகிழ்ச்சியுற்று, கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகுகிறது.

பராபரன் ஆகிய அப்பரம்பொருள், வெண்மையான திருநீறும் அகப்பற்று நீங்கிய அடியார்கள் திருவேடமும், சிவபூசையுமே என்றும் நிலைபேறுடையன என்றான்; செல்வமும் பிரபஞ்ச வாழ்க்கையும், அவற்றை நுகரச் செய்யும் மனைவாழ்க்கையும் நிலையற்றன என்றான்.

குருவழியால் அன்றி அறிதற்கு அரிய திருவைந்தெழுத்தின் உட்பொருள் ஆகிய சிவம், அருள், ஆன்மா, மறைப்பாற்றல், ஆணவம் என்பனவற்றைப் போதித்தான். அஃதன்றியும், அந்த மந்திரம் நெஞ்சிலே நீங்காதபடி வடுபடச் செய்து, அதில் உண்டாகும் அனுபவத்துக்கும் ஆர்வம் ஏற்படச் செய்து, அத்துடன் நெஞ்சினுள் நடுவாக உயிர் அடையாளம் நிறுத்தி, (அஃதாவது இதயத்தினுள்ளே ஞாதுருக்குறி நிறுத்தி) நா, நெற்றி ஆகிய இடங்களிலே, ஞான ஞேயங்களை நிறுத்தி (ஞானம் – அருள்; ஞேயம் – சிவம்) இவற்றைப் பொருந்தும் ஆர்வத்தை ஏற்படச் செய்தான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நெற்றி, கண்டம், இதயம், நாபி, மூலம் என்னும் ஐந்து இடங்களிலும் முறையே சிகாரம், வகாரம், யகாரம், நகாரம், மகாரம் அமைத்தபடியே ஐந்தெழுத்தை உச்சரிக்கும் முறையை அனுதியே உள்ளபடி அறிந்து ஓதும்படி உபதேசித்தார்.

அவ்வாறு குருநாதர் உபதேசித்தபடி ஓதிவருகையில், சீடனுக்கு, வல்வினை காரணமாக, சஞ்சலத்தோடு கூடிய ஒருவகை அச்சம் ஏற்படும். அந்த அச்சத்தைப் போக்கும் பொருட்டு, குருநாதர் ஓர் உபாயம் கூறுகிறார். (இந்தப் பகுதி அனுபவ அடிப்படையில் உணரவேண்டியது ஆகும்).

ஒரு சுடர் ஒளியில் மூன்று பகுதிகள் இருப்பதைக் காணலாம். ஒன்று மேல் ஒளி, மற்றொன்று அதனுள் இருக்கும் தீப ஒளி, மூன்றாவது பகுதி அந்த தீப ஒளியுள் இருக்கும் கனல்பொறி நிறஒளி ஆகும்.

பிரபை ஒளி ஆகிய திருவாசி என்னும் முதல் பகுதியைச் சிகாரமாகவும், அதனுள் உள்ள தீப ஒளியை வகாரமாகவும் அதனுள் இருக்கும் கனல்பொறி நிற ஒளியை யகாரமாகவும் அமையக் காட்டி அருள்வர் ஆசிரியர். அந்தச் சுடர் ஒளியை ஒரு கோல் கொண்டு தூண்டியபோது, இந்த மூன்று பகுதிகளும் மாணவர்க்கு விளங்கும். இதனையே அப்பரடிகள்,

“தூண்டு சுடர் அனைய சோதி கண்டாய்”

என்று அருளிச் செய்தார்கள்.

சுடர் ஒளியின் உள்ளிருக்கும் ஆன்ம ஒளியானது, (கனல்பொறி நிற ஒளி), அருள் ஒளியால் (தீப ஒளி) விழுங்கப்பட்டு இறை ஒளியில் (பிரபை ஒளி) இலயித்து நிற்றலே, அஞ்செழுத்து உபதேசத்தின் நுண்பொருள் ஆகும். இந்த நுட்பத்தை, உள்ளே தேனைக் கொண்ட பொகுட்டினை உடைய மலர்ந்த தாமரை மலருக்கு ஒப்பிடுகிறார் ஆசிரியர். (பொகுட்டு – தாமரைப் பூவினுள் இருக்கும் கொட்டை) (பிரசம் – தேன்). தாமரை மலர் சிவத்துக்கு உவமை. பொகுட்டு, அருளுக்கு உவமை. தேன் முத்திக்குரிய ஆன்மாவுக்கு உவமை. இவ்வாறு, அருட்காட்சியைக் காட்டும் குருநாதர், இதனை பாவனையில் செய்யாமல் யதார்த்தமாகவே (உண்மையிலேயே) மாணவனுக்கு அருள் பதியும் நிலையை உண்டாக்குகிறார். (அருவு – பாவனை; உருக்கொள்ளா – பாவனை வடிவில் செய்யாமல் என்றபடி) அந்நிலையில் மாணவனுக்குள்ள முக்குணத்தை நீக்கிச் சுட்டறிவைப் போக்கி என்னை ஆட்படுமாறு செய்கிறார்.

வாய்விட்டுச் சொல்லமுடியாதவாறு, எனது உடல், பொருள், ஆவி அனைத்தும் அவனால் தரப்பட்டவை என்னும் உணர்வை ஏற்படுத்தித், தன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அருள் வெள்ளத்துள் என்னை அழுத்தித் தன்னோடு என்னை இரண்டறக் கலக்குமாறு செய்தருள்கிறான்.

ஆணவமலப் பற்று காரணமாக எனக்குள்ள பொய் உணர்வுகளை எல்லாம் மறக்குமாறு செய்தான்; மெய் உணர்வு பெறுமாறு எனக்கு அருளிச் செய்து, கருவி கரணங்களால் எனக்கு ஏற்பட்ட உலகியல் உணர்வை மாற்றி தன் அருளுணர்வைக் கொள்ளுமாறு செய்தான். இதன் வாயிலாக, என் பிறவியை வேரறுத்தான்.

இவ்வளவு பேருதவிகளைச் செய்துவரும் என் தலைவனை, எல்லாச் சொற்களுக்கும் மூலமாக உள்ள வேதங்களாலும் அளந்து அறியமுடியாது. அவனது இயல்பினை எழுத்துக்களால் வடிக்க முடியாது.

"இவன் இறைவன் என்று எழுதிக் காட்டொணாதே"

என்னும் அப்பரடிகள் வாக்கு இங்குச் சிந்திக்கத்தக்கது. இயல்பாகவே உள்ள எண்குணங்களை உடையவன், எங்கள் சிவபெருமான்.

குறிப்பு: (இறைவன் எண்குணத்தான் என்னும் செய்தி, பதினான்கு சாத்திரங்களிலும், இந்த ஒரு சாத்திர நூலில் மட்டுமே கூறப்பட்டுள்ளது.)

அனைத்துப் பொருள்களின் உற்பத்திக்கும் காரணம் ஆகிய "ஓம்" என்னும் ஒலி தோன்றுவதற்கு நிமித்த காரணனாய் இருப்பவன்.

விரிவான நகரம் ஆகிய மதுரையிலே, நூற்று எட்டுத் தாண்டவத்தையும் சிவபெருமான் ஆடியருளினான். தேனினும் இனிய பாடல்களைப் பாடுபவரும், இசைக்கு ஏற்ப ஆடுபவரும், நற்குணம் இல்லாதவரோடு பயிலாதவரும் வாழும் மதுரைப் பதியில் எழுந்தருளியிருக்கும் ஆலயவாயண்ணல், ஊனக்கண் கொண்டு காண்பவர்க்குக் காணமாட்டாதவன்; ஞானக்கண் கொண்டு காண்பவர்க்கு விளங்கித் தோன்றுபவன். யாழ்ப்பாணரது இசைக் கருவிக்குக் குளிர்ச்சி தட்டாமல் இருக்கும் பொருட்டு, சங்கப்பலகை ஆசனத்தைப் போட்டு அருளிச் செய்தவன்.

அந்தி வானத்திலும் அழகிய செந்திரு மேனியன், திருமாலும் சென்று உணராச் சேவடியான். ஆயினும் அனைத்து அண்டங்களிலும் நிறைந்து நிற்பவன். சூறைக் காற்று, சுழற்காற்று, சுற்றும் வண்டு, சுழற்றும் கொள்ளிக் கட்டை முதலியவற்றின் தன்மையன ஆகிய எனது பிறவிச் சுழற்சியைத் தனது கைம்மாறு அற்ற பெருங் கருணையால் நீக்கி ஒழித்தான். திருநீறு அணிந்த திருமேனியன், அருளையே வடிவாக உடைய தூயவன், இயல்பாகவே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பாசங்களின் நீக்கியவன். உயிர்களுக்கு வீடுபேறு அளிப்பவன் இவன் ஒருவனே ஆவன். உயிர்களின் அறிவுக்கு அறிவாய் உடனாய் நின்று உதவுபவன்.

உலகியல் பொருள்களிடத்துப் பற்றுடையவரிடத்து மறைந்து நிற்பவன். தன்னை மெய்யுணர்வோடு புகழ்புரிந்தாரின் உள்ளத்தே உள்ளவாறு விளங்கித் தோன்றுபவன். (எனவே, மல நீக்கம் பெற வேண்டுவோர் சிவபெருமான் ஒருவனையே மெய்யுணர்வோடு நினைந்து போற்ற வேண்டும்).

சிவபெருமானைக் காணும் இடம்

—கைமழுவன்

அத்தன்பால் நீ சென்று அடையும் இடத்தை யெலாம்
சித்தம்சேர் நெஞ்சமே செப்பக்கேள் — நித்தலுமே 107

பூசி முடித்து உண்டு உடுத்துப் பூங்குழலார் தம்கலவி
ஆசைதனில் பட்டு இன்ப ஆர்கலிக்குள் — நேசம்உற 108

நின்று திளைக்கும் அதுமுத்தி அல்லதுவேறு
ஒன்று திளைக்கும் அது முத்தி — அன்று என்று 109

இலகா இருள் அலகை போல் இகலே பேசும்
உலகாயதன்பால் உறாதே — பலகாலும் 110

தாம் பிரமம் கண்டவர் போல் தம்மைக்கண்டு ஆங்குஅதுவே
நாம் பிரமம் என்பவர் பால் நண்ணாதே — ஊன் தனக்குக் 111

கொன்றிடுவது எல்லாம் கொலை அல்ல என்று குறித்து
என்றும் அறமே தெய்வம் என்றுஎன்று — வென்றிப் 112

பொறையே எனும் புத்தன் பொல்லாத புன்சொல்
மிறையே விரும்பி விழாதே — நிறைமேவி 113

வாழ்பவர்போல் மன்னுடம்பில் மன்னும் உரோமம் பறித்துத்
தாழ்வு நினையாது துகில்தான் அகற்றி — ஆழ்விக்கும் 114

அஞ்சும் அகற்றும் அதுமுத்தி என்று உரைக்கும்
வஞ்சமணன் பாழி மருவாதே — செஞ்சொல் புனை 115

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆதிமறை ஓதி அதன் பயன் ஒன்றும் அறியா
வேதியர் சொல் மெய் என்று மேவாதே – ஆதியின்மேல் 116

உற்ற திருநீறும் சிவாலயமும் உள்ளத்துச்
செற்ற புலையர்பால் செல்லாதே – நற்றவம்சேர் 117

வேடமுடன் பூசை அருள் மெய்ஞ்ஞானம் இல்லாத
மூடருடன் கூடி முயங்காதே – நீட 118

அழித்துப் பிறப்பது அறியாது அரனைப்
பழித்துத் திரிபவரைப் பாராதே. 119

தெளிவுரை:

தாருகாவனத்து இருடிகள் (முனிவர்கள்), யுத்தத்தில் கோபித்து விட்ட மழுவைத் தானே தனக்கு ஆயுதமாகக் கொண்டு இருப்பவன் என் தந்தையாக விளங்கும் சிவபெருமான். அவனிடத்து நீ செல்லும்போது நடுவே நடுவே உனக்குச் சில இடையூறுகள் ஏற்படும். அவற்றைத் தவிர்த்துச் செல்லுதற்கு உரிய நெறியையும், அப்போது கவனத்தில் கொள்ளவேண்டிய முறைகளையும், சிந்தனை செய்யும் என் நெஞ்சமே உனக்கு நான் கூறுவதைக் கேட்பாயாக.

ஒவ்வொரு நாளும் வாசனை மிகுந்த பொருள்களைப் பூசி, மலர் சூடி முடித்து, சுவையான உணவை உண்டு, பகட்டான ஆடைகளைத் தரித்து இருக்கும் அழகிய கூந்தலை உடைய மகளிரைச் சேரும் அவாவில் ஈடுபட்டுச் சிற்றின்பக் கடற்குள் அழுந்தும் செயலே முத்தியாகும் என்றும், (ஆர்கலி - கடல்). இதனை அன்றி இறையருள் வெள்ளத்தில் கலந்து இன்புறும் வீடுபேறு என்பது ஒன்று இல்லை என்றும் கூறி அறியாமையே குணமாகத் திரியும் பேய்களைப் போல், உண்மைக்குப் புறம்பானவற்றையே பேசுகின்ற உலகாயதனிடத்து, நீ சென்று விடாதே, (உலக ஆயதன் – உலகப் பற்று உடையவன்; ஆயதம் – பற்றுடைமை).

எந்த வேளையிலும் எந்தக் காலத்திலும் எந்த நிலையிலும், தாம் பரம்பொருளைக் கண்டவரைப் போல கூறி உண்மையில் தம்மை அல்லாமல் பரம்பொருளைக் காணுமல், ''நாமே பிரமம்'' எனப் பிதற்றுவாரிடத்துச் செல்லாதே.

தம் உடலை வளர்ப்பதற்காக, பிறரால் வதைக்கப்பட்டு கொல்லப்பட்டுப் பெற்ற ஊனைப் புசிப்பதால், அந்தக் கொலைப் பாவம் தம்மைச் சாராது என்றும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறமே தெய்வம் என்றும் எக்காலத்தும் பொறை உடைமையே வெற்றியைத் தரும் என்றும் புத்தன் கூறும் ஈன வார்த்தைகளைக் கேட்டு, அவற்றில் மயங்கித் தடுமாற்றம் உற்று நின்றுவிடாதே.

அருள் தன்மை நிறைந்தவராகத் தம்மை பிறர் மதிக்க விரும்பி, இரக்கமுடையவர் போல் நடித்து, தமது உடம்பில் தங்கும் உரோமங்களைப் பிடுங்கி, நீரினுல் உடம்பைத் தூய்மை செய்யாமல், அழுக்கு உடம்பு உடையவர் ஆகி, அவமானத்தை எண்ணுமல் உடையை அகற்றி உயிர்களின் பிறப்புக்குக் காரணமாகிய உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்னும் பஞ்சகந்தங்களை நீக்குவதே முத்தி என்று கூறும் வஞ்ச மனம் பொருந்திய சமணர்கள் வாழும் இடம் ஆகிய 'பாழி'யில் சென்று விடாதே.

செம்மையான சொற்களை உடையதும், 'கால எல்லைக்கு அப்பாற்பட்டதும் ஆகிய நான்மறைகளைக் கற்றும், அவற்றின் பயனை உணர்ந்து தெளியாத வேதியர்களின் சொற்களை மெய் என்று கேட்டு மயங்கி அவரிடம் சேர்ந்துவிடாதே.

மாதேவன் ஆகிய சிவபெருமானின் திருமேனியின் நின்று ஒளிரும் திருநீற்றையும், அப்பெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயில்களையும் உள்ளத்தில் உவகையோடு எண்ணி வழிபடாத 'நிந்தை செய் நெஞ்சர்' ஆகிய நீசரிடத்துச் செல்லாதே.

உயிர்க்கு உய்தி பயக்கும் சிறந்த தவத்தை உடைய அடியார்களது திருவேடமும், சிவபூசையும், இரக்க குணமும், மெய் உணர்வும் இல்லாத பாஷண்டியான அறிவிலிகளுடன் கூடித் திரியாதே. (பாஷண்டி – புறச்சமயத்தான்).

பேரூழிக் காலத்தில் எல்லா உயிர்களையும் உலகங்களையும் ஒடுக்கி, மீண்டும் பிறப்புட்படுத்தும் சிவபெருமானை அன்றி, மற்ற எல்லாச் சிறு தெய்வங்களும் பிறந்து பிறந்து, இறந்து இறந்து வருவனவே என்னும் உண்மையை அறியாமல், பிறவாயாக்கைப் பெரியோன் ஆகிய சிவபெருமானை வழிபட்டு உய்யும் நெறி அறியாமல், அவனைப் பழித்துத் திரிபவரை நீ கண் எடுத்தும் பார்க்காதே.

மேற்கூறப்பட்டவர்களைக் கூடாமல், எங்குச் சென்று எவரிடம் கூட வேண்டும் என்பதைத் தன் நெஞ்சுக்குத் தெரிவிக்கும் பகுதி ''தூது'' ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தூது

—விழித்து அருளைத்

தந்து எம்மை ஆண்டு அருளும் சம்பந்த மாமுனிவன்
அந்தம் கடந்து, அப்பாலாய் நின்றேன் — எந்தைபிரான் 120

வீற்றிருக்கும் ஓலக்கம் எய்தி, அடிவீழ்ந்து இறைஞ்சிப்
போற்றி, சயசய போற்றி என — ஆர்த்தகரி 121

அன்று உரித்தாய்; நின்பவனி ஆதரித்தார் எல்லாரும்
வென்றி தேன் அம்புபட வீழ்வாரோ — என்றும் 122

நில்லாத செல்வம் நிலைஎன்று உனை நீங்கிப்
பொல்லா நரகில் புகுவரோ — பல்லோரும் 123

கத்தும் சமயக் கணக்கில் படுவரோ
சித்தம் பலகால் திகைப்பரோ — முத்தம் 124

பொருத நகை மடவார் புன்கலவி இன்பம்
மருவி மயங்கி வருவரோ — இருபொழுதும் 125

நாள் இருபத்து ஏழும் நவக்கிரகமும் நலியும்
கோள் இது என்று எண்ணிக் குறிப்பரோ — வேளை 126

எரித்த விழியாய் நின் இன்பக் கடற்கே
தரித்து மதி மறந்ததையல் — வருத்தம் எலாம் 127

தீராய் என உரைத்துச் செங்கமலப் பூந்திருந்தாள்
தாராய் எனப் பலகால் தாழ்ந்து இறைஞ்சி — ஏர் ஆரும் 128

பூங்கொன்றை வாங்கிப் புகழ்ந்துபுரி நெஞ்சமே
ஈங்கொன்றை வாராய் இனி. 129

தெளிவுரை:

"மறைஞானசம்பந்தர்" ஆகிய சம்பந்த மாமுனிவன், பொல்லாத கருக்குழிக் கும்பியில், மீண்டும் அடியேன் வீழ்ந்து விடாதவாறு, அருள்கூர்ந்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

திருநோக்கம் பாலித்தான். அந்நிலையில், என்னைத் தனக்கு அடிமையாக்கித், தன்னைத் தந்து, தனது திருவடி நிழலின் கீழ் அடியேன் இரண்டறப் புணர்ந்து பொருந்தும்படி செய்தான். அத்தகைய பெருமுனிவன் வேதாகமங்களின் அளவை பிரமாணங்களைக் கடந்து, அளப்பரிதாய் குறியிறந்து அறியும் அறிவினுள் அறிவாய், அப்பாலுக்கு அப்பாலாய் இருந்தான்.

என் தந்தை ஆகிய தலைவன் எழுந்தருளி இருக்கும் சபாமண்டபம் (ஓலக்கம்) சென்று அடைந்து, அவனது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, வாழ்க, வெல்க என வாழ்த்தி, எளியேனைக் காத்தருளுமாறு வேண்டினேன்.

தாருகாவனத்து முனிவர்கள் வெகுண்டு அனுப்பிய, ஆங்காரத்துடன் பேரொலி எழுப்பிக்கொண்டு வந்த யானையைக் கொல்வதற்குக் கங்காள வேடத்துடன் வந்த தெய்வத்தை அனுப்பியபோது, அந்த யானை அந்த தெய்வத்தை விழுங்கியது. அது கண்டு உமையவள் அஞ்சினாள். அப்போது, அந்த யானையைத் தலைகீழாக மிதித்துக் கிழித்து அதன் தோலைப் போர்வையாகத் தரித்துக் கொண்டு நீ ஆனந்தத் தாண்டவம் செய்தாய்.

இரண்டாயிரம் தந்தங்களை உடைய ஐராவதத்தின் மேல் நீ எழுந்தருளி உலாப்போந்தருளியதைக் (பவனி) கண்டு வழிபட்டவர்கள், மன்மதனின் மாயையில் வீழ்வார்களோ?

என்றும் நிலை இல்லாத செல்வம் நிலையானது என்று கருதி, அதன் காரணமாக உன்னை விட்டுப் பிரிந்து, பெருந்துன்பம் தரும் நரகத்தில் புகுந்து உழல்வார்களோ? ''செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே'' என்றருளிச் செய்த சம்பந்தப் பெருமான் அருள்வாக்கு இங்குச் சிந்திக்கத் தக்கது.

தத்தம் மதங்களே அமைவதாக அரற்றி மலையும் புறச் சமயச்சார்பு உடையாரிடத்து 'சைவ சமயமே சமயம்' என்னும் தாயுமானவரின் திருவாக்கை அறிந்தவர்கள், செல்வார்களோ? பதி பசு பாசத்தின் உண்மையை விளக்கமாகக் கூறும் மெய்கண்ட சந்தானமே சந்தானம் என்பதைச் சிந்தையில் தெளிவாகக் கொண்டு இருப்பவர்கள், பலவாறாக மலைத்துத் திகைத்துத் திரிவார்களோ?

முத்துக்களை ஒத்த பற்களோடு கூடிய மாதுளம்பழ வித்தும் வெட்கி நாணும் இளம் பெண்களோடு கூடி, அவர்கள் இன்பம் பெரிது என எண்ணி மயங்கித் திரிவார்களோ?

இரவும் பகலும் இருபத்து ஏழு விண்மீன்களும் சூரியன் முதலான ஒன்பது கோள்களும் ஆகிய இவற்றினால் வரும் துன்பங்களை எண்ணி இந்த நேரம் இந்தக் கோள் ஏறியிருக்கும் சாரம் சரியன்று என்றும், இன்று தாராபலன் சாதகமாக இல்லை என்றும், எண்ணி அவற்றைக் குறித்து அலமருவரோ?

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(கோள் ஏறி இருக்கும் சாரம் – கோட்சாரம் எனப்படும். தம் நட்சத்திரத்திற்கு 2,4,6,8,9 ஆகிய நட்சத்திரங்கள் நன்மை செய்வன என்றும், பிற நட்சத்திரங்கள் தீமை செய்வன என்றும் கணக்கிடுவது தாரா பலன் ஆகும்)

''நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கே
ஆளாய அன்பு செய்வோம் – நம் கிளை கிளைக்கும்
கேடுபடாத் திறம் அருளிக் கோளாய நீக்கும் அவன்'' (1–62–1)

என்னும் சம்பந்தப் பெருமான் திருவாக்கு இங்குச் சிந்திக்கத் தக்கது. இறைப்பற்றில் உறைப்பு உள்ளவர்கள், சோதிடம் பார்க்கத் தேவையில்லை என்பது தெளிவு).

மன்மதனை எரித்த விழியை உடையவனே. உன்னைக் கண்டது முதல், உன்னை அணைந்து, நீ வழங்கியருளும் இன்பத்தைத் துய்ப்பதே இன்பம் எனக் கருதி, தன் அறிவு ஒழுக்கங்கள் அனைத்தையும் மறந்து, தன்நிலை இழந்து நிற்கும் கற்புடைய நங்கை ஒருத்தியின் வருத்தத்தை எல்லாம் தீர்த்து அருள் செய்வாய். செந்தாமரை மலர் அனைய அழகிய உன் திருவடிகளை இந்த ஏழைக்குத் தந்து அருள்வாய்.

இவ்வாறு பலவாருகப் பலமுறையும் வேண்டி,. தாழ்மையுடன் வணங்கி, அழகு பொருந்திய சிவகந்தம் கமழும் பூங்கொன்றை மாலையைப் பெற்று, என் தலைவனின் பொருள் சேர் புகழையே எந்நேரமும் விரும்பிச் சொல்லும், அருமை நெஞ்சமே, என்னோடு கலந்து இருக்க இப்பொழுதே இங்கு வருவாயாக.

நெஞ்சைத் தன் தலைவன் ஆகிய மறைஞான சம்பந்தரிடம் தூதாக அனுப்பி, ஒரு தலைவியைப் போன்று உமாபதிசிவம் தன்னைக் கருதிச் செய்தருளிய இந்தச் சாத்திரம் குருநாதரிடம் எத்துணை ஈடுபாடு கொண்டு இருக்கவேண்டும் என்பதை ஓர் உண்மை மாணவனுக்குப் புகட்டுவதாக அமைந்துள்ளது.

இந்த சாத்திரத்தின் அடியில் வெண்பா ஒன்று உள்ளது. அது வருமாறு:

வெம்பும் பிறவியலை வீழாமல் வீடுஅளித்த
சம்பந்த மாமுனிவன் தார்வாங்கி – அம்புந்தும்
வஞ்சமே வும்விழியார் வல்வினை எல் லாம் அகல
நெஞ்சமே வாராய் நினைந்து.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

நெஞ்சமே, கொடிய பிறவிக் கடலுக்குள் வீழ்ந்து விடாதபடி, எனக்கு வீட்டு இன்பத்தை வழங்கி அருளிய மறைஞான சம்பந்தன் என்னும் பெருந் தவம் உடையவரின் திருக்கொன்றை மாலையை, அம்பைவிடக் கொடிய விழிகளை உடைய பெண்களால் வரும் சங்கடங்கள் எல்லாம் நீங்குமாறு, அப்பெருந்தவம் உடையவரை வழிபட்டு, வாங்கி வருவாயாக.

குருவருள் அன்றித் திருவருளைப் பெறமுடியாது. திருவருளை அன்றிச் சிவத்தைப் பெற முடியாது. எனவே, குருவையே சிவமாகக் கருதி வழிபடும் மரபு, நம் சமயத்தில் உள்ளது. அந்த மரபுவழி அமைந்ததே இந்த சாத்திரம் ஆகும்.

நெஞ்சுவிடு தூது தெளிவுரை முற்றும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

7. உண்மைநெறி விளக்கம்

தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி

மண்முதல் சிவம் அது ஈறும்
வடிவு காண்பதுவே ரூபம்
மண்முதல் சிவம்அது ஈறும்
மலம், சடம் என்றல் காட்சி
மண்முதல் சிவம்அது ஈறும்
வகைதனில் தான் நிலாது,
கண்நுதல் அருளால் நீங்கல்,
சுத்தியாய்க் கருதும் அன்றே. 1

தெளிவுரை:

மண் தத்துவம் முதல், சிவம் எனப்படும் நாததத்துவம் ஈறாக வரும் முப்பத்தாறு தத்துவங்களின் இயல்பையும், அவற்றின் தோற்ற ஒடுக்கங்கள் எப்படி நிகழ்கின்றன என்பதையும், தன் அறிவுக்குப் பொருந்துமாறு சாத்திர வாயிலாக ஆராய்ந்துஅறிந்து கொள்வது, ''தத்துவ ரூபம்'' ஆகும்.

தத்துவங்கள் அனைத்தும் சடப் பொருள்களே என்றும் அவற்றை ஆன்மா கூடி அறியினல்லால், தாமாக எதனையும்,அறியமாட்டா என்பதையும் அறிவது, ''தத்துவ தரிசனம்'' ஆகும்.

தத்துவங்கள் அனைத்தும் மயக்கம் தருவன என்பதை அறிந்து, அவற்றில் அழுந்தி நில்லாமல், இறைவன் திருவருட்டுணையால், அவற்றை விட்டு நீங்கி நிற்பது, ''தத்துவசுத்தி'' ஆகும்.

ரூபம் – உருவம், இயல்பு.

காட்சி – தெரிசனம்; தெரிவது; அறிவது.

சுத்தி – தூய்மை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''மலம் சடம் என்றல்'' என்பது, ஆணவமலப் பற்றுக் காரணமாக, தத்துவத் தொடர்பு ஏற்பட்டுள்ளமையால், தத்துவக்கூட்டமும் மலம் எனப்பட்டது.

'நாததத்துவம்' சிவதத்துவம் என்றும் கூறப்படும். நாத தத்துவம் சிவதத்துவம் எனவும், விந்து தத்துவம் சத்தி தத்துவம் எனவும் கூறப்படும்.

முப்பத்தாறு தத்துவங்கள் எவை எவை என்னும் செய்தி, ''உண்மை விளக்கம்'' என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. இந்த தத்துவங்களின் தோற்ற ஒடுக்கங்களைக் குறித்து இந்த நூலில் இறுதியில் காணலாம்.

ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி

பாய் இருள் நீங்கி ஞானம்
　　தனைக்காண்டல் ஆன்மரூபம்
நீயும் நின்செயல் ஒன்று இன்றி
　　நிற்றலே தரிசனம் தான்;
போய் இவன் தன்மை கெட்டுப்
　　பொருளில் போய் அங்குத் தோன்றுது
ஆய்விடில் ஆன்மசுத்தி
　　அருள்நூலில் விதித்தவாறே. 2

தெளிவுரை:

பரவலாக மறைக்கும் இயல்பினை உடைய ஆணவமலச் சார்பு காரணமாக, தத்துவங்களைப் பெற்ற உயிர் அந்தத் தத்துவங்கள் அறிவற்ற சடப்பொருள்கள் என்பதையும், அவற்றை அவற்றின் வாயிலாக அறியும் தானே அறிவுடையவன் என்பதையும் அறிந்து சாத்திர நூல்களின் துணைக்கொண்டு, தன் இயல்புகளை அறிவதே ஆன்ம ரூபம் ஆகும். அஃதாவது ஆன்மா அறிவுடைப் பொருள்; ஆன்ம அறிவை விளக்கும் தத்துவங்கள் அறிவற்றவை; அவற்றின் துணை இன்றி ஆன்ம அறிவு விளங்காது; இவ்வுண்மைகளை அறிவதே ஆன்மரூபம் ஆகும்.

ஆன்மா, தான் அறிவதையும் தான் செய்வதையும் தன்னாலேயே நிகழ்வதாகக் கருதாமல், திருவருள் துணையாலேயே தனது அறிவும் செயலும் நிகழ்கின்றன என்று தெளிவதே, ஆன்ம தரிசனம் ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தனக்கு என எதையும் சாதித்துக் கொள்ள இயலாத ஆன்மா, ''என் செயலால் ஆவது ஒன்றும்இல்லை; எல்லாம் அவன் செயல்; அஃதாவது எல்லாம் சிவன் செயல்'' என்று தன் செயல் அற்றுத் திருவருளில் அழுந்தி நிற்கும் நிலையே, ஆன்ம சுத்தி ஆகும்.

இவ்வாறு சிவாகமங்களில் விதிக்கப்பட்டு உள்ளது என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

பாயிருள் – பாய் இருள் – ஆன்ம அறிவை மறைக்கும் ஆணவ மலம்.

''நீயும் நின் செயல் ஒன்று இன்றி நிற்றல்'' என்பது, எந்தச் செயலும் இன்றி வாளா இருத்தலைக் குறித்ததன்று; நாம் செய்யும் செயல்கள் அனைத்தும் திருவருள் துணை இன்றி நிகழ்வதில்லை என்னும் உணர்வோடு எதையும் செய்வதைக் குறிக்கும்.

''இவன் தன்மை கெட்டு'' என்பது, யான் எனது என்னும் செருக்கு இன்றி என்பதைக் குறிக்கும்.

சிவரூபம்

எவ்வடிவுகளும் தான் ஆம்
எழில்பரை வடிவுஅது ஆகிக்,
கவ்விய மலத்து ஆன்மாவைக்
கருதியே ஒடுக்கி ஆக்கிப்
பவ்வம்விண்டு அகலப் பண்ணிப்
பாரிப்பான் ஒருவன் என்று
செவ்வியே உயிருள் காண்டல்
சிவரூபம் ஆகும் அன்றே. 3

தெளிவுரை:

இறைவன், இரக்கம் அல்லது அருள் எனப்படும் மகிமை தங்கிய தனது சக்தியையே தனக்குத் திருமேனியாகக் கொண்டு உலகில் உள்ள அனைத்துப் பொருள்களோடு கலந்து ஒன்றாய் நிற்கிறான்.

இறைவன் இவ்வாறு நிற்பதற்குக் காரணம், அநாதியே ஆணவமலத்தைப் பற்றிப் பிடித்து, அதனால் அறிவிச்சை செயல்களை இழந்து நிற்கும் உயிர்களை உய்விக்கும் பொருட்டே ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆகவே, மாயையிலிருந்து தனு கரண புவன போகங்களைப் படைத்தும், நிலை நிறுத்தியும், மீண்டும் அவற்றை மாயையில் ஒடுக்கியும் மலபரிபாகம் வரும்படி இறைவன் செய்வான். அந்நிலையில் ஆன்மா தத்துவங்கள் அனைத்தையும் வேருகக் காணும். இறைவன் தனது அருட் சத்தியை அத்தகு ஆன்மாவினிடத்துப் பதிப்பிப்பான்.

இவ்வாறு சத்திநிபாதம் எய்தப்பெற்ற ஆன்மாவுக்கு, இதுவரை உள் நின்று உணர்த்திய இறைவன், முன்னின்று உணர்த்தும் பொருட்டு, குருவடிவாய் மானுடச் சட்டை தாங்கி எழுந்தருளி வருவான்; வந்து தான் உயிரினின்றும் வேறு அற நின்ற முறைமையினை உபதேச முகத்தால் விளக்குவன். விளக்கவே, அவ்வாறு விளக்குபவன் சிவபரம் பொருளே என்று, தன் உள்ளத்தின்கண் ஆன்மா, ஐயம், திரிபு இன்றி அறியும். இவ்வாறு சிவபெருமானே குருவாகத் திருமேனி கொண்டு வந்து தனக்கு உணர்த்துகிருன் என்பதை அறிவதே சிவரூபம் ஆகும். குருநாதர் உணர்த்திஞல் அன்றி இறைவன் இயல்பை ஆன்மா அறியமாட்டாது; எனவே, உணர்த்த உணரும் இயல்புடைய ஆன்மாவுக்குக், குருநாதர் உணர்த்த உணர்வதே சிவரூபம் எனப்படும்.

எழில்பரை	–	பெருமைக்குரிய பராசத்தி.
கவ்விய மலம்	–	ஆன்மாவை மறைத்துள்ள ஆணவமலம்.
பவ்வம்	–	கடல் – பிறவிப் பெருங்கடல்.
பாரிப்பான்	–	காத்தருள்வான்.
செவ்வி	–	தன்மை.

3

சிவதரிசனம்

பரை, உயிரில் யான் எனது ஒன்றற நின்றது அடியாம்;
பார்ப்பிடம் எங்கும் சிவமாய்த் தோன்றல், அதுமுகமாம்;
உரைஇறந்த சுகம்அதுவே முடிஆகும் என்று இவ்
உண்மையினை மிகத் தெளிந்து பொருள் வேறு ஒன்று இன்றித்
தரைமுதலில் போகாது, நிலையினில் நில்லாது
தற்பரையில் நின்று அழுந்தாது, அற்புதமே ஆகித்
தெரிவு அரிய பரம ஆனந்தத்தில் சேர்தல்
சிவன் உண்மைத் தரிசனமாய்ச் செப்பும் நூலே. 4

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

சிவரூபத்தில், ஞானகுருவை தரிசித்த ஆன்மா, சிவபெருமானுடைய அருவத் திருமேனியைத் தரிசிக்கும் முறைமை, சிவதரிசனத்தில் உணர்த்தப் படுகிறது.

மண்முதல் சிவதத்துவம் ஈறுய் உள்ள தத்துவங்கள், "எனது" என்றும், அவற்றுல் விளங்கும் தன்னை "யான்" என்றும் கருதிவந்த ஆன்மா, இறைவன் குருவடிவில் வந்து உணர்த்தியதும், தற்போதம் நீங்குகிறது. அந்நிலையில் குருவருள் விளங்குகிறது. ஆன்மா, அப்போது "யான் எனது" என்னும் உணர்வு அற்றுப் போக சிவபெருமானது திருவடியைக் காண்கிறது. இது திருவடி தரிசனம் ஆகும்.

ஆன்மா, தன்னைத் தாக்குவனவாகிய உலக போகங்களை, அவன் அவள் அது என்று சுட்டி அறியாமல், நோக்கும் இடமெல்லாம் சிவபெருமானின் திருவருளையே காண்பதல்லால் வேறு எதையும் காணுது, எல்லாம் சிவமாய்க் காண்டல், திருமுக தரிசனம் ஆகும்.

சிவபெருமானே குருவாய் எழுந்தருளி உபதேசிக்கப்பெற்ற ஆன்மா அவ்வருளினுல் திருவருளில் அழுந்தி நிற்கும்போது அஃது எத்தன்மையது என்று சொல்ல முடியாதபடி, அவ்வருளில் பரவசப்பட்டு நிற்றல் திருமுடி தரிசனம் ஆகும். "திருமுடி" என்பது அறியக்கூடியதென்றுலும்அறுதியிடக் கூடாதது என்னும் படியாக இருப்பதைக் குறிக்கும்.

சிவபெருமானின் திருவடி, திருமுகம், திருமுடி என்னும் இவற்றின் உண்மைப் பொருளை மேற்கண்டவாறு, மிகவும் தெளிவாக அறிந்து, இஃது அன்றி வேறு பொருள் ஏதும் இல்லை என்பதைத் தெளிந்து மண் முதல் நாதம் ஈருகக் கூறப்பட்ட சகல அவத்தையில் மீண்டும பொருந்தாமல் நிற்கும் நிலையில், அந்த ஆன்மாவுக்கு ஒருவகையான துறவுநிலை உணர்வு உண்டாகும்.

அந்நிலையில் பாசக்கூட்டங்களினின்றும் வேறுபட்டு நிற்கும். "நான் பிரமம்" என்னும் பசு ஞானம் தலைப்படும். தத்துவக் கொத்திலிருந்து விடுபட்ட நிலையிலும், தனித்து நிற்கும் இயல்பு ஆன்மாவுக்கு இல்லையாகலின் "நான் பிரமம்" என்னும் உணர்வும் தற்போதமே ஆகும்.

எனவே 'பசுஞானம்' ஆகிய தன்னிலையிலேயும் நில்லாமல், தான் அருளையுடையவன் என்னும் உணர்விலும் நின்று அழுந்தி அமையாமல் அதற்கு மேலும் அறிதற்கரிய சிவம் யாண்டும் நீக்கமற நிறைந்திருப்பதை அறிந்து, எல்லாம் சிவமாய்க் காண்டலே, சிவதரிசனம் ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிவயோகம்

எப்பொருள் வந்து உற்றிடினும், அப்பொருளைப் பார்த்து, அங்கு
எய்தும் உயிர்தனைக் கண்டு, இங்கு அவ்வுயிர்க்கு மேலாம்
ஒப்பில் அருள் கண்டு, சிவத்து உண்மைகண்டு, இங்கு
உற்றது எல்லாம் அதனாலே பற்றி நோக்கித்
தப்பினைச் செய்வதும் அதுவே, நினைப்பும் அதுதானே,
தரும் உணர்வும் பொசிப்பும் அதுதானே ஆகி,
எப்பொருளும் அசைவு இல்லை என அந்தப் பொருளோடு
இசைவதுவே சிவயோகம் எனும் இறைவன் மொழியே.

தெளிவுரை:

உலகப் பொருள்கள் அனைத்தையும் சிவமேயாகக் கண்டு நிற்கும் நிலையிலும், பிராரத்த வாசனை காரணமாக, அந்நிலை குலைந்து, உலகப் பொருள் பற்றிய உணர்வு, ஒரோவழி வந்து பொருந்தும். அந்நிலையிலும் உலகப் பொருளைச் சடம் எனக் கருதவேண்டும்; அப்பொருளைப் பற்றி நிற்க விழையும் உயிர் ஆகிய நமக்குச் சுவதந்திரமாக எதையும் செய்யும் திறம் கிடையாது என்பதைத் தெளிவாகக் கண்டு, நமக்கு மேல் ஒப்புயர்வற்ற அருள் ஒன்று இருந்து நம்மை நடத்துகிறது என்பதை அனுபவ வாயிலாக உணர்ந்து அந்த அருளே சிவபெருமானின் உண்மை இயல்பு என்பதை உள்ளத்தில் உறுதியாகக் கொள்ளவேண்டும்.

அந்நிலையில், நம்முடன் பொருந்தியுள்ள உலகப்பொருள் ஆகிய அவன், அவள், அது என்னும் சட சித்துக்கள் அனைத்தையும், சிவபெருமானது அருளின் துணைக்கொண்டே அறிந்துள்ளோம் என்பதை நுட்பமாக நோக்கி உணரவேண்டும்.

இவற்றையெல்லாம் நாம் பல நேரங்களில் மறந்துவிடும்படி நம்மைச் செய்விப்பதும், மீண்டும் மீண்டும் நினைக்கும்படி செய்விப்பதும், அறிவிக்க அறியும் நமக்கு அறிவை விளங்கும்படி செய்விப்பதும், நமது வினைகளுக்கு ஏற்ற பயன்களைத் தந்து நம்மை நுகரும்படி செய்விப்பதும், அந்தச் சிவபரம் பொருளே ஆகும் என்பதைத் தெளிவாக அறியவேண்டும்.

அவ்வாறு அறியும்போது, சிவபெருமானை அன்றி வேறு யாரும் நமக்குத் துணை இல்லை என்பதையும், அவன் உதவியின்றி நம்மால் ஓர் அணுக்கூட அசைய இயலாது என்பதையும் உள்ளத்தில் உறுதியாகப் பதிவு செய்து கொண்டு உள்ளும் புறமும் அந்தச் சிவத்துடனே கூடி நிற்றலே, 'சிவயோகம்' என்று சிவாகமங்கள் மொழிகின்றன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எனவே, தற்போதமும் தற்செயலும் அற்றுப் பழைய வாசனை தாக்கா வண்ணம், திருவருளைப் பற்றி அதனுடன் ஒன்றி நிற்பது எதுவோ, அதுவே சிவயோகம் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

சிவபோகம்

பாதகங்கள் செய்திடினும், கொலை, களவு, கள்ளுப்
பயின்றிடினும், நெறியல்லா நெறி பயிற்றிவரினும்,
சாதிநெறி தப்பிடினும், தவறுகள் வந்திடினும்,
தனக்குஎன ஓர்செயல் அற்றுத்தான் அதவாய் நிற்கில்,
நாதன் அவன் உடல் உயிராய், உண்டு உறங்கி, நடந்து,
நானு போகங்களையும் தானுகச் செய்து,
பேதம் அறநின்று, இவனைத்தான் ஆக்கிவிடுவன்;
பெருகு சிவபோகம் எனப் பேசும் நெறி இதுவே.

தெளிவுரை:

மேற்கூறியவாறு சிவபெருமானது திருவருளில் ஒன்றி நின்று, சிவயோகத்தில் ''சுகபிரபை'' ஆகிய அருள் விளக்கம் பெற்ற ஆன்மா, ''பரமசுகம்'' ஆகிய சிவாநந்தத்தை அனுபவிக்கும் முறை இங்குக் கூறப்படுகிறது.

தன் செயல் அற்று, எல்லாம் சிவன்செயல் எனத் தெளிந்து நிற்கும் ஆன்மா, காமம், கோபம், உலோபம், மோகம், முதலிய தகாதனவற்றைச் செய்தாலும், பஞ்சமா பாதகங்கள் ஆகிய கடும்கொலை பொய், களவு, கள் காமம் என்னும் பெரும் தீவினைகளைச் செய்தாலும் ''உற்றநோய் நோன்றல், உயிர்க்கு உறுகண் செய்யாமை'' ஆகிய தவநெறி அல்லாத அவநெறியைத் தவருது நடத்தி வந்தாலும், குல ஒழுக்கம் தவறி வழுவினுலும், அதனுல் பல தவறுகளுக்கு இடம் ஏற்படும்படி, நடந்தாலும் தன்னையறியாமல் ஓர் குற்றம் வந்து அடையும் ஆயினும்,

இவன் அவனுய் (சிவமாய்) ஏகன் ஆகி இறைபணி வழுவாமல், தனக்கு என ஒரு செயல் அற்றே நிற்பான் ஆயின்,

சிவபெருமான், இவன் உடலும் உயிருமாய் நின்று, உண்டு, உறங்கி, நடந்து இவன் அநுபவிக்க வேண்டிய நானுவித பிராரத்தம் ஆகிய விடய போகங்களையும், சிவபோகம் ஆகவே செய்து, இவனை வேருகக் கருதாமல் இவனேடு கலந்து நின்று, இவனைத் தான் ஆக்கி (சிவம் ஆக்கி) விடுவான். இதனையே, மேலான ''சிவபோகம்'' எனச் சிவாகமம் கூறுகிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிறுத்தொண்டர் பிள்ளைக்கறி சமைத்ததும், சண்டேசுவரர் தந்தை காலை வெட்டியதும் போன்ற செயல்களை இவ்விடத்தில் பொருத்திக் காணலாம். ஆனால் பொதுவாகப் "பாதகங்கள் செய்திடினும்" என வருவதின்கண் உள்ள உம்மையால், பாதகங்கள் செய்வது அருமை எனப் பொருள் கொள்ள வேண்டும்.

ஆக, திருவருளுடன் கூடிய ஆன்மா, சிவத்துடன் முழுமையாக ஒன்றிச் சிவானந்தத்தை த் துய்ப்பது சிவபோகம் ஆகும்.

"உண்மைநெறி விளக்கம்" என்னும் நூலில் உள்ள செய்திகளுக்கு ஏற்ப, இதுவரை "தசகாரிய விளக்கம்" கூறப்பட்டது. இது தசகாரியம் பற்றிய பொதுவிளக்கமே ஆகும். தசகாரியம் பற்றிய சிறப்பு விளக்கத்தை இனிக் காண்போம்.

தச காரிய அனுபவம்

தசம் – பத்து; காரியம் – செயற்பாடுகள். ஆன்மா ஞான சாதனையில் முன்னேறும்போது ஆன்ம அறிவில் நிகழும் செயற்பாடுகளைப் பத்துவகை ஞானப்படிகளாக வகுத்து, "தசகாரியம்" எனக் கூறுவது சைவ சித்தாந்த மரபு ஆகும். இவை, தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்ம சுத்தி; சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்பனவாகும்.

சரியை கிரியை யோகம் ஆகிய சிவநெறிகளைச் செய்துவரும் பொழுது ஞான சாத்திர ஆராய்ச்சிகளிலும் ஆன்மா ஈடுபடவேண்டும். இந்த ஆராய்ச்சி, ஆன்மாவுக்கு உலகப் பற்றும் உடல் பற்றும் அறுவதற்குப் பெரிதும் துணை செய்யும்; உலகமும் உடலும் சடம் என்னும் தெளிவான அறிவினை ஆன்மா சாத்திர ஆராய்ச்சியின் வாயிலாக எளிதில் பெற முடியும். இவ்வறிவு பெறுமல் செய்யும் எந்தச் சாதனையும் நிலைத்து நீடிப்பதில்லை, இடையில் சோர்வு மேலிட்டுச் சாதனையில் தொய்வு ஏற்படாமல் இருக்கும் பொருட்டும், சாதனையை உறுதியான உள்ளத்தோடு தொடர்ந்து பயன்பெறும் பொருட்டும், சைவசித்தாந்தம் பயில வேண்டுவது, இன்றியமையாததாகிறது. எனவேதான், இறை வழிபாடு செய்வதோடு அமையாமல், ஞான சாத்திர ஆராய்ச்சியும் செய்தால்தான், ஆன்மா உண்மை நெறியில் தலைப்படும். அது கொண்டே, இந்நூலுக்கு "உண்மைநெறி விளக்கம்" என்னும் பெயர் வழங்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சியும் அனுபவமும் எவ்வாறு இணைந்து தொழிற்படுகின்றன என்பதை இனிக் காண்போம். சைவ சித்தாந்த சாத்திர ஆராய்ச்சி வாயிலாக முப்பத்தாறு தத்துவங்களின் இயல்பை ஆராயும் தத்துவ ரூபமும் அவை சடம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

னை அறியும் தத்துவ தரிசனமும், ஆன்மாவின் இயல்பை அறியும் ஆன்ம ரூபமும், அபரஞானமே ஆயினும் இறை வழிபாட்டுடன் கூடி அவை நிகழும்போது, ஆன்மா பரஞானம் என்னும் அநுபவஞானம் பெறுதற்கு உரிய தகுதியை அடைகிறது.

சரியை, கிரியை, யோகம் ஆகிய சிவநெறிகளோடு கூடிய தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், ஆன்மரூபம் ஆகிய மூன்றும், ஆன்மாவினிடத்தே மலபரிபாகமும் இருவினை ஒப்பும் நிகழுமாறு செய்யும். இருவினை ஒப்பு என்பது, நல்வினைப் பயனாகிய இன்பத்தில் விருப்பும், தீவினைப் பயனாகிய துன்பத்தில் வெறுப்பும் இன்றி நிற்கும் நிலையாகும். இந்நிலை கைவந்துவிட்டால், ஆன்மா பக்குவ நிலையை அடைந்துவிட்டது என்று பொருள்.

பக்குவம் என்பது, உணர்த்தியதை உணர்த்தியவாறே உணர்த்தியபோதே உணரும் உணர்வு ஆகும். இத்தகு பக்குவம் பெற்றுவிட்ட ஆன்மாவுக்குப் பரஞானத்தை அநுபவ பூர்வமாக உணர்த்தும் பொருட்டு, இறைவன் மானுடச் சட்டை போர்த்தியோ, சீவன் முத்தரை ஆவேசித்தோ, குருநாதனாக வந்து காட்சி வழங்குகிறான். இறைவன் குருநாதனாக வருவதைத் தான் ‘‘உண்மைநெறி விளக்கம்’’ என்னும் நூல் சிவரூபம் என்று கூறுகிறது. இந்த இடத்தில்தான் ஆன்மாவுக்குப் பரஞானம் உண்டாகத் தொடங்குகிறது.

குருநாதன் ஞானத்தைப் பக்குவமடைந்த ஆன்மாவுக்கு உணர்த்தும்போது, அந்த ஆன்மா முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்த, தன் வியாபக நிலையை அநுபவபூர்வமாக உணர்கிறது. அந்நிலையில் அந்த ஆன்மா தத்துவங்களைக் கடந்து நிற்பதால் அதற்கு அவற்றின்கண் உள்ள பற்று அற்றுவிடுகிறது. அஃதாவது உலகப் பற்றும் உடற்பற்றும் அறவே நீங்கிவிடுகிறது. இதனையே ‘‘தத்துவ சுத்தி’’ என்று இந்நூல் கூறுகிறது. ஆன்மா, தான் ஒரு வியாபகன், திருவருளின் துணைகொண்டு இந்நிலையை உணரலாம் என்று அநுபவ அடிப்படையில் உணரும்போது அஃது ‘‘ஆன்ம தரிசனம்’’ எனப்படுகிறது. ஆக, இறைவன் குருநாதனாக வருகின்ற சிவரூபத்தில் தத்துவ சுத்தியும் ஆன்ம தரிசனமும் உடன் நிகழ்ச்சியாக நிகழும். ‘‘உடனிகழ்ச்சி என்பது ‘‘ஆடி வருதல்’’ என்று கூறும்போது, ஆடுதலும் வருதலும் ஒரு சேர ஒரே சமயத்தில் நிகழுமாறு போல்வதைக் குறிக்கும்.

தத்துவரூபமும், தத்துவ தரிசனமும், ஆன்ம ரூபமும், குருநாதன் ஆன்மாவுக்குக் காட்சிப்படுவதற்கு முன்பு உடனாக நிகழ்வன. தத்துவ சுத்தியும், ஆன்ம தரிசனமும், சிவரூபமும் குருநாதன் ஆன்மாவுக்குக் காட்சி தரும்போது உடனாக நிகழ்வன. காட்சிக்கு முன்பு நிகழ்வது அபரஞானம். காட்சியின்போது நிகழ்வது பரஞானம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

"அபரஞானம்" என்பது, சைவசித்தாந்த சாத்திரங்களைக் கற்பதால் வரும் ஞானம் ஆகும். "பரஞானம்" என்பது, ஆன்மாவின் ஆணவமல மறைப்பைப் போக்கும் திருவருளால் உண்டாகும் அனுபவ ஞானம் ஆகும். அதுவே "பதிஞானம்" எனவும் படும். அபரஞானம், அத்திருவருளைப் பெறுதற்கு உரிய நெறிமுறைகளை மயக்கமற உணர்த்தும் சைவ சித்தாந்தம் ஆகும். எனவே, சாத்திரம் கற்க வேண்டுவதன் இன்றியமையாமை இங்குத் தெள்ளிதின் உணரப்படும்.

குருநாதன் உணர்த்திய சிவஞானத்தைப் பெரிதும் போற்றி சிவோகம் பாவனை செய்தல், அந்தரியாக பூசை ஆகிய அகவழிபாடு செய்தல், திருவைந்தெழுத்தை கணித்தல் முதலிய சாதனைகளை ஆன்மா செய்துவரும். அந்நிலையில் மீண்டும் மீண்டும் சாதனைகளில் உறைப்பு (Conviction) மேலிட மேலிட, ஆன்மா திருவருள் தரிசனத்தைப் பெறும். திருவருளுக்கும் சிவனுக்கும் பேதம் இல்லையாதலின், இந்தத் திருவருள் தரிசனத்தையே, இந்நூல் "சிவ தரிசனம்" என்று பேசுகிறது.

சிவதரிசனத்தில் "எல்லாம் சிவமே" என்னும் உணர்வு ஆன்மாவுக்குத் தோன்றும். அந்நிலையில், ஆன்மாவுக்குத் தொன்று தொட்டு வந்த ஏகதேசப் பழக்க வாசனை அறுபடும். அவ்வாறு அறுபடும்போது, ஆன்மா தூய்மை அடைகிறது. அதனையே "ஆன்மசுத்தி" என்று இந்நூல் கூறுகிறது. சிவதரிசனத்தில் ஆன்மசுத்தி உடன் நிகழும். இதுவரை தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவதரிசனம் ஆகிய எட்டுப் படி நிலைகளை ஆன்மா எப்படி அடையும் என்பது பற்றிச் சிந்திக்கலாயிற்று. எஞ்சியுள்ள இருநிலைகளைக் குறித்து இனிக் காண்போம்.

சிவதரிசனம் பெற்ற ஆன்மா, திருவருளுடன் முழுமையாக ஒன்றி நிற்கும். தற்போதமும் தற்செயலும் அற்று, ஒன்றுகின்ற இந்நிலையையே சிவஞான போதம்,

"ஏகனாகி இறைபணி நிற்றல்"

என்று கூறுகிறது.

"ஏகன் ஆதல்" என்பது, எல்லாப் பொருள்களையும் ஒருசேர அறியும் தன்மை உயிர்க்கு இல்லை; எனவே உயிர்க்கு அறிவிக்கும் பொருள் ஆகிய சிவம் மட்டுமே உள்ளது என்று உயிர் காணும் நிலையில், சிவமே முற்பட்டுத் தோன்றும்; அந்நிலையில் உயிர் இருந்தும் இல்லை ஆகி, சிவ வியாபகத்துள் அடங்கி நிற்கும் என்பதைக் குறிக்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''இறைபணி நிற்றல்'' என்பது, சிவனருளால் அன்றி, ஒன்றையும் செய்யானாகி, அவனருள்வழி நிற்றலைக் குறிக்கும். இவ்வாறு திருவருளுடன் ஒன்றி நிற்பதையே இந்நூல் ''சிவயோகம்' 'என்று கூறுகிறது.

சிவயோகத்தில் நிலைத்து நிற்கும் ஆன்மாவின்கண், சிவபெருமான் தன் எண் குணங்களையும் பதிவிப்பான். அப்போது உயிர்க்குச் சிவானந்தம் தோன்றும். அந்நிலையில் ஆன்மா, சிவானந்தப் பெருக்கில் மூழ்கித் தன்னை மறந்து திளைக்கும். இப்பேரின்ப பெருநிலையைச் ''சிவபோகம்'' என்று உண்மைநெறி விளக்கம் என்னும் நூல் நுவல்கிறது. இதுவே சைவ சித்தாந்தத்தின் முடிந்த நிலை ஆகும். இனிச் சிவஞானபோதச் சூத்திர அமைப்புப்படி, தசகாரியத்திற்குப் பொருள் காண்போம்.

தசகாரியமும் சிவஞானபோதச் சூத்திர இயைபும்

தசகாரியங்கள் பத்தினையும், சிவஞானபோத சூத்திரங்கள் ஏழு முதல் பதினொன்று வரையுள்ள ஐந்து சூத்திரக் கருத்துக்களோடு இயைபுபடுத்திக் காணலாம். சூத்திரம் ஏழு முதல் ஒன்பது வரை சாதன இயலில் இடம் பெறுவதும், சூத்திரம் பத்தும் பதினொன்றும் பயனியலில் வருவதும் இங்குச் சிந்திக்கத்தக்கது.

ஏழாம் சூத்திரத்தில், தத்துவரூபம், தத்துவ தரிசனம், ஆன்ம ரூபம் ஆகிய மூன்றும்,

எட்டாம் சூத்திரத்தில், தத்துவ சுத்தி, ஆன்ம தரிசனம், சிவரூபம் ஆகிய மூன்றும்,

ஒன்பதாம் சூத்திரத்தில், ஆன்மசுத்தி, சிவதரிசனம் ஆகிய இரண்டும்,

பத்தாம் சூத்திரத்தில் சிவயோகம் ஒன்றும்,

பதினொன்றும் சூத்திரத்தில் சிவபோகம் ஒன்றும் ஆக, இவ்வாறு தசகாரியங்கள், சிவஞான போதத்தில் அடங்கியிருக்கின்றன.

ஏழாம் சூத்திரம் ஆன்ம இயல்பு பேசுகிறது. அவ்வாறே, ''ஆன்மரூபம்'' என்பது ஆன்ம இயல்பை சாத்திர வாயிலாக அறிந்து கொள்வதாகும்.

எட்டாம் சூத்திரம் குருநாதன் எழுந்தருளிவருவதைக் கூறுவது. ''சிவரூபம்'' என்பது, சிவபெருமான் குருநாதனாக வருவதை அறிவதே ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒன்பதாம் சூத்திரம், ஆன்மாவுக்குள்ள பாச பசுஞானங்களை நீக்கி, ஆன்ம சுத்தி செய்து சிவஞானத்தை உணர்த்துவதைக் கூறுவது. இதனைச் "சிவதரிசனம்'' என அறிதல் வேண்டும், சிவதரிசனம் நிகழும்போது ஆன்மசுத்தி தானே பெறப்படுகிறது.

பத்தாம் சூத்திரம், மும்மல நீக்கம் பற்றிப் பேசுகிறது. மலநீக்கம் நிகழ்ந்தால் அன்றி, ஆன்மா சிவபெருமானைக் கூடுதல் ஆகிய சிவயோகம் ஏற்படாது. எனவே, பாசநீக்கத்தின் உடன் நிகழ்வாக சிவயோகம் நிகழும் என்பது புலனாகும்.

பதினொன்றும் சூத்திரம் அயரா அன்பின் அரன்கழல் செல்வது பற்றிப் பேசுகிறது. சிவபெருமானின் திருவடியே ஆன்மாவுக்கு பேரின்பம் ஆகும். அந்தப் பேரின்ப அனுபவம் சிவபோகத்தால் நிகழ்கிறது. எனவே, பதினொன்றும் சூத்திரம் பேசும் சிவபோகத்தையே உண்மைநெறி விளக்கமும் கூறுகிறது.

அனுபவநிலையில் வைத்து தசகாரியங்களுக்கும் விளக்கம் காண்பதற்குச், சிவஞானபோதச் சூத்திரங்களைக் கொண்டே காணவேண்டும். ஏழாம் சூத்திரம் முதல் பதினோராம் சூத்திரம் வரை சிவஞான போதத்தைக் கற்கும்போது தசகாரிய விளக்கத்தை உள்ளத்தில்கொண்டு பொருள் காண்பதே சிறப்பு ஆகும். அந்நிலையிலேயே, சாதன இயலின் உண்மையும் பயனியலின் இன்றியமையாமையும் நமக்குப் புலப்படும்.

முன்பே தெரிவித்துள்ளபடி இனி, முப்பத்தாறு தத்துவங்களின் தோற்ற ஒடுக்கங்களைப் பற்றிக் காண்போம்.

தத்துவங்கள் முப்பத்தாறு வருமாறு:

சுத்தமாயா தத்துவங்கள் – ஐந்து:

சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுவரம், சுத்த வித்தை, (சிவத்தை நாதம் என்றும் சத்தியை விந்து என்றும் கூறுவர்).

அசுத்தமாயா தத்துவங்கள் – ஏழு:

காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை.

பிரகிருதி மாயா தத்துவங்கள் – இருபத்து நான்கு:

மனம், புத்தி, அகங்காரம், சித்தம் – அந்தக்கரணங்கள் நான்கு.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கை, கால், வாய், எருவாய், கருவாய் – கன்மேந்திரியங்கள் ஐந்து.

மெய், வாய், கண், மூக்கு, செவி – ஞானேந்திரியங்கள் ஐந்து.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் – தன்மாத்திரைகள் ஐந்து.

மண், நீர், நெருப்பு, காற்று, வான் – பூதங்கள் ஐந்து.

தத்துவங்கள் தோன்றும் முறைமை:

ஆன்மாக்களின் ஆணவமல நோயைத் தீர்த்தல் பொருட்டு, சிற்சத்தியோடு எக்காலத்தும் பிரிப்பின்றி நிற்கும் சிவபெருமான், சுத்த மாயையில் ஐந்தொழில் ஆற்றுவதற்குத் திருவுளம் கொண்ட நிலையில், சிவம் எனப்படுகிறான். உயிர்களின் துன்பத்தை நீக்குதல் பொருட்டு கொண்ட நிலை ஆகலின், இது "பரநாதம்" எனப்படுகிறது. அந்நிலையில் எவ்வாறு ஐந்தொழில் ஆற்றுவது என்று எண்ணிய நிலை, சத்தி எனப்படும். சத்தி என்பது, சிவத்துக்கு அடங்கி நிற்கும் ஆற்றலைக் குறிக்கும். எவ்வாறு தொழில் ஆற்றுவது என்னும் நிலை தோன்றாது நிற்றலின் சத்தி எனப்படுகிறது; அந்நிலையில் சிவத்திலிருந்து ஒரு குறிப்பு நிகழ்கிறது; எனவே, இந்த சத்தியைப் "பரவிந்து" என்பர்.

நாதம் என்பது ஒலியையும், விந்து என்பது குறியையும் உணர்த்தும். அதன்பிறகு, ஐந்தொழில் ஆற்றுவதற்குத் திருவுளம் கொண்டவாறு, சிவபெருமான் முதற்காரணமாய் தன்னுள் அடங்கியிருந்த சுத்தமாயையோடு கூடி நிற்கும் நிலை, "நாதம்" எனப்படும். அந்தச் சுத்தமாயையோடு கூடிச் செய்ய வேண்டுவனவற்றைச் செய்யத் திருவுளம் கொள்ளும் நிலை, "விந்து" எனப்படும். முன்னர்க் கூறிய நாதம், விந்து, சுத்தமாயையோடு கூடாதபோது உண்டானமையால், அவை பரநாதம், பரவிந்து எனப்பட்டன. பின்னர்க்கூறிய நாதம், விந்து சுத்தமாயையோடு கூடியபோது உண்டானமையால், இவை அபரநாதம், அபரவிந்து எனப்படும்.

அபரநாதம், அபரவிந்துவையும் சிவம் சத்தி எனக் கூறுதலும் உண்டு. அதன்பிறகு, இன்னின்னவாறு செய்யவேண்டும் என்று எண்ணிய நிலையில், சிவபெருமான் சத்தியோடு கூடிநிற்கிறான்; அப்போது "சதாசிவம்" எனப்படுகிறான். எண்ணும் முதன்மை சிவத்தையும், எண்ணுதற்குரிய ஆற்றல் சத்தியையும் குறித்து நிற்றலால், அது சதாசிவம் எனப்பட்டது.

சிவபெருமான் தான் எண்ணியவாறு செய்யும்போது, அவரவர் கன்மப் பயனை அனுபவிக்கச் செய்யும் முறையில், அனுபவிக்க வேண்டாத கன்மப் பலன்களையும், அனுபவிக்க வேண்டிய கன்மபலன்களில் உள்ள குண

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தோஷங்களை (நல்லவை கெட்டவைகளை) மறைத்தலைச் செய்யும் நிலையில் மகேசுவரன் எனப்படுகிறான். மகத்தான ஐசுவரியங்களை வழங்குவதால், அது மகேசுவரம் எனப்பட்டது. அனுபவிக்கவேண்டிய ஐசுவரியங்களை மறைத்தும் வைத்தலினால் அஃது அப்பெயர் பெற்றது.

அவ்வாறு அனுபவிக்கும்போது, இளைப்பு ஒழித்தல் பொருட்டும், வேறு உலகங்களில் இன்ப துன்பங்களை அனுபவித்தல் பொருட்டும், இந்த உலகத்தில் வேறு சரீர வாயிலாக இன்ப துன்பம் அனுபவித்தல் பொருட்டும் சங்கரித்தலைச் செய்யும் நிலையில், "உருத்திரன்" எனப்படுகிறான். அனுபவிக்க வேண்டியவைகளை அனுபவிப்பதற்காக உலகில் நிலைக்கச் செய்யும் நிலையில் "விட்டுணு" எனப்படுகிறான். அனுபவித்தற்கு உரிய உடல், கருவி, உலகம், பொருள் முதலியவற்றைத் தோற்றுவிக்கும் நிலையில் "பிரமன்" எனப்படுகிறான். இதற்குமேல் செய்யவேண்டுவது ஒன்றும் இல்லாமையால், சிவபெருமான் ஒருவனே இவ்வாறு ஒன்பது நிலைகளில் பேதப்பட்டு ஐந்தொழில் ஆற்றுகிறான்.

சுத்தமாயா புவனம், சிவபெருமான் ஐந்தொழில் ஆற்றுவதற்கு இடமாக இருக்கிறது. ஐந்தொழில் ஆற்றும்பொழுது, இலயம், போகம், அதிகாரம் என்னும் மூவகைத் திருமேனிகளில் நின்று, சிவபெருமான் தொழில் செய்கிறான். சிவபெருமான், இலயத் திருமேனியில், சிவம் சத்தி ஆகிய அருவ நிலையில் நிற்கிறான்; போகத் திருமேனியில், 'சதாசிவன்' ஆகிய அருவுருவ நிலையில் நின்று அருளல் தொழிலைச் செய்கிறான். அதிகாரத் திருமேனியில், ஈசுவரன், உருத்திரன், மால், அயன் என்னும் உருவ நிலையில் நின்று, முறையே மறைத்தல், அழித்தல், காத்தல், படைத்தல் ஆகிய நான்கு தொழில்களைச் செய்கிறான். இவ்வாறு சுத்தமாயா புவனத்தில், சிவபெருமான் ஐவராக நின்று, தானே நேரடியாக, அங்குள்ள ஆன்மாக்களின் பொருட்டு ஐந்தொழில் ஆற்றுகிறான்.

அசுத்த மாயை

அசுத்த மாயா புவனத்தில் உள்ள ஆன்மாக்களுக்கு விஞ்ஞானகலர் ஆன்மாக்களுள் சிறந்த வித்தியேசுவரர்கள் எண்மரில் ஒருவர் ஆகிய அநந்தேசுவரரைக் கொண்டு, சிவபெருமான் ஐந்தொழில் ஆற்றும்படி செய்கிறான். வித்தியேசுவரர், சுத்தமாயையில் தூய்மையாக இருக்கும் விந்துதத்துவத்தின் கீழ் உள்ள தூய்மையற்றுக் கிடக்கும் மலகன்மங்களோடு விரவியிருப்பது அசுத்தமாயை ஆகும். அதிலிருந்து அநந்தேசுவரர் காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்னும் ஏழு தத்துவங்களைத் தோற்றுவித்துத் தொழிற்படுத்துகிறார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அசுத்தமாயை தத்துவத்தைத் தோற்றுவிக்கத் தொடங்கும்போது, அதில் ஒரு பகுதியை அநந்தேசுவரர் கலக்குகிறுர், அப்போது 'மாயை' என்னும் தத்துவம் தோன்றுகிறது. இந்த மாயையே மேற்சொன்ன ஏழு தத்துவங்களில் உள்ள மாயை ஆகும்.

இந்த மாயையிலிருந்து காலம், நியதி, கலை என்னும் மூன்று தத்துவங்களைத் தோற்றுவிக்கிறுர்; அதன்பிறகு, 'கலை'யிலிருந்து வித்தையையும், வித்தையிலிருந்து அராக தத்துவத்தையும் தோற்றுவிக்கிறுர். காலம், நியதி, கலை, வித்தை, அராகம், என்னும் ஐந்து தத்துவங்களும் சேர்ந்த ஒரு கூட்டுத் தத்துவமே 'புருடன்' எனப்படுகிறது. புருடன் ஒரு தனிதத்துவம் அன்று. இவ்வாறு அநந்தேசுவரர் அசுத்தமாயா தத்துவம் என்னும் வித்தியா தத்துவத்தைத் தோற்றுவித்துத் தொழிற்படுத்துகிறுர்.

பிரகிருதி மாயை

பிரளயாகலர் ஆன்மாக்களுள் பக்குவம் வாய்ந்த ஸ்ரீகண்ட ருத்திரரை அதிட்டித்து நின்று, அவரைக் கொண்டு பிரகிருதி மாயா புவனத்தில் உள்ள தனு, கரண, புவன, போகங்களைச் சிவபெருமான் தோற்றுவிக்கிறுன். ஸ்ரீகண்ட ருத்திரர் என்பவர், மலபரிபாகம் வாய்க்கப்பெற்ற (118) உருத்திரர்களுள் பக்குவம் மிக்கவர் ஆவர். சகலர் வகை ஆன்மாக்கள் ஆகிய நமக்குச் சிவாகமச் செய்திகளை அறிவுறுத்துபவரும் இவரே ஆவர்.

பிரகிருதி மாயா புவனம் சகலர் வகை ஆன்ம வர்க்கத்துத் தலைவர் ஆகிய ஸ்ரீகண்ட ருத்திரரால் இயக்கப்படுவதால், இந்த பிரகிருதி மாயை, "ஆன்ம தத்துவம்" எனப்படுகிறது.

அசுத்தமாயா புவனத்தில் உள்ள 'கலை' தத்துவத்திலிருந்து பிரகிருதி மாயா தத்துவத்தை ஸ்ரீகண்ட ருத்திரர் தோற்றுவிக்கிறுர். இதுவே மூலப்பகுதி, மூலப்பிரகிருதி, மான் என்று கூறப்படுகிறது. இந்த மூலப்பகுதியில், சத்துவம், இராசதம், தாமதம் என்னும் முக்குணங்களும் வெளிப்படாமல் அடங்கி இருக்கும். இவ்வாறு முக்குணங்களும் அடங்கி இருக்கும் நிலையை "அவ்வியத்தம்" என்பர். வியத்தம் – வெளிப்பட்டு நிற்பது; அவ்வியத்தம் – வெளிப்படாமல் அடங்கி நிற்பது.

முக்குணங்களும் வெளிப்பட்டுத் தம்முள் சமமாக நிற்கும் நிலைக்கு "குணதத்துவம்" என்று பெயர். குணதத்தவம் என்றெரு தத்துவம் பட்டியலில் இல்லை.

"சித்தம் ஆம் அவ்வியத்தம்"

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்று சிவஞானசித்தியாரில் (148) அருணந்திசிவம் அருளிச் செய்திருப்பதால், ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கனுள் ஒன்று ஆகிய "சித்தம்" குணதத்துவமாகவும் உள்ளது என்று கூறுவாரும் உளர். சித்தத்தை மனத்துள் அடக்கி, குணதத்துவத்தைப் பிரகிருதி மாயையில் வைத்து, மூலப்பிரகிருதி ஆகிய முக்குணத்தை ஒரு தத்துவமாகச் சில ஆசிரியர்கள் கொள்கிறார்கள் என்பது, சிவஞான சுவாமிகள் கருத்து.

ஆன்ம தத்தவம், இருபத்து நான்கிலும் குணதத்துவம் கலந்து நிற்பதால், "உலகம் முக்குண மயம்" என்று கூறுகிறார்கள். குணதத்துவத்திலிருந்து 'புத்தி' தத்துவமும், புத்தி தத்துவத்திலிருந்து ஆங்கார தத்துவமும் தோன்றுகின்றன.

ஆங்கார தத்துவம் முக்குண வயப்பட்டு, சத்துவகுண வயப்பட்ட ஆங்காரம், தைசத ஆங்காரம் எனவும், இராசத குணவயப்பட்ட ஆங்காரம், வைகரி ஆங்காரம் எனவும், தாமச குணவயப்பட்ட ஆங்காரம், பூதாதி ஆங்காரம் எனவும் மூவகைப்பட்டுத் தொழிற்படுகிறது. தைசதம் – தேஜஸ் – ஒளி; வைகரி – விகாரப்படுவது.

தைசதை ஆங்காரத்திலிருந்து 'மனம்' என்னும் தத்துவமும், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஞானேந்திரியங்களும் தோன்றுகின்றன.

வைகரி ஆங்காரத்திலிருந்து, கை, கால், வாய், எருவாய், கருவாய் என்னும் கன்மேந்திரியங்கள் தோன்றுகின்றன. முன்பத்தியில் உள்ள 'வாய்' சுவை உணர்வது; இந்தப் பத்தியில் உள்ள 'வாய்' பேசும் கருவி.

பூதாதி ஆங்காரத்திலிருந்து, சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் தன் மாத்திரைகள் தோன்றும். தன்மாத்திரை என்பது பூதங்களின் சூக்குமநிலை ஆகிய குணம் ஆகும். குணங்கள் வெளிப்படாமல் தன் அளவில் நிற்பதால் அது தன்மாத்திரை எனப்பட்டது. சூக்குமத்திலிருந்து தூலம் தோன்றும். எனவே தன்மாத்திரைகளிலிருந்து பூதங்கள் தோன்றுகின்றன.

"ஓசை" தன் மாத்திரையிலிருந்து 'வான்' என்னும் ஆகாய தத்துவம் தோன்றுகிறது. 'ஊறு' தன்மாத்திரையிலிருந்து 'வாயு' தத்தவம் தோன்றும். 'ஒளி' தன்மாத்திரையிலிருந்து, 'தேயு' தத்துவம் தோன்றுகிறது. 'சுவை' தன்மாத்திரையிலிருந்து 'அப்பு' தத்துவம் தோன்றுகிறது. 'நாற்றம்' தன் மாத்திரையிலிருந்து 'பிருதிவி' தத்துவம் தோன்றும். பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆகியவற்றை முறையே மண், நீர், நெருப்பு, வளி, வான் என்று தமிழில் கூறுவர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தன்மாத்திரைகளிலிருந்து பஞ்ச பூதங்கள் தோன்றுகின்றன என்பது சைவசித்தாந்தக் கொள்கை. ஒருசிலர் ஆகாயத்திலிருந்துவாயுவும், வாயுவிலிருந்து தேயுவும், தேயுவுலிருந்து அப்பும், அப்பிலிருந்து பிருதிவியும் தோன்றுவதாகக் கூறுகின்றார்கள். அவ்வாறாயின் "ஆகாயம்" எந்த பூதத்திலிருந்து தோன்றியது என்பதை அவர்களால் கூற இயலாது. எனவே அக்கூற்று நடைமுறைக்கு மாறாக உள்ளதால் அது பொருந்தாது.

சிவத்திலிருந்து பிருதிவி வரை தோற்றும் முறை அமைவது போல், பிருதிவியிலிருந்து சிவம்வரை எண்ணுதல் ஒடுக்கும் முறையாகும்.

இந்த முப்பத்தாறு தத்துவங்களின் இயல்பை அறிவது தத்துவரூபம் என்று உண்மைநெறி விளக்கம் கூறுகிறது.

உண்மைநெறி விளக்கம் முற்றும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

8. சங்கற்ப நிராகரணம்

1. காப்பு

விநாயகர் வணக்கம்

திருந்திய அருந்தவம் பொருந்து பல் முனிவர்
கமையாக் காதல் அமையாது பழிச்சும்
நிகரில் செக்கர்ப் புகர் முகத்து எழுந்த
புனிற்று வெண்பிறைத் தனிப் பெருங் கோட்டுத்
தழை செவி மழை மதப் புழை நெடும் தடக்கை
வாட்டு அரும் மும்மை நாட்டம் நால்வாய்ப்
பாசம் அங்குசம் தேசுறு எயிறு ஒண்
கனியிவை தாங்கும் புனித நாற்கரத்து
அங்கதம் கடகம் பொங்கு இழை ஆரம்
நிறைமணிச் சுடிகைக் கறை அணல் கட்செவி
கொண்ட திண்பெரும் பண்டிக் குறும்தாள்
களிறு தன் இருகழல் கருதா
வெள்றிறு உரு துயரம் வீட்டினம் பெரிதே.

தெளிவுரை:

அருள் நூல்களில் விதிக்கப்பட்ட அரிய தவங்களோடு கூடிய, மாமுனிவர்கள் பலர் கூடி, என்றும் நிரம்பாத ஆர்வத்தோடு வழிபடப் படுகின்றது, யானையின் முகம்; அந்த யானை ஒப்பிட்டுக் கூற முடியாத செந்நிறத்தை உடையது; இளவெண்பிறை போன்ற ஒப்பற்ற கொம்பினை உடையது; மென்மையான செவியையும் மழைபோன்ற மதத்தையும் இரு துவாரத்தோடு கூடிய பருத்த துதிக்கையையும் உடையது.

ஒளியினை உடைய மூன்று கண்ணையும், நான்ற வாயினையும் உடையதாய், பாசம், தோட்டி, ஒளிர்கின்ற கொம்பு, அழகிய மாங்கனி ஆகியவற்றை உடைய தூய்மையான நான்கு கையினையும் உடையது, அந்த யானை; தோள்வளை, இரத்தினக் கடகம், நவரத்தினங்களால் ஆன ஆரம் ஆகியவற்றை நிறைவாக அணிந்து, இரத்தினத்தை உடைய தலையினையும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கறுத்த கண்டத்தையும் உடையது; கண்ணைச் செவியாக உடைய பாம்பினால் கட்டப்பட்டுச் சிக் என்று பெரியதாய் இருக்கும் வயிற்றினையும், குறுகிய காலினையும் உடையது அந்த ஆண்யானை. அதன் திருவடிகள் இரண்டையும் உளமார நினைந்து, அறியாமை காரணமாக ஏற்பட்ட துன்பங்களை நிச்சயமாக விடுவிப்போமாக.

2. பாயிரம்

பெருங்கடல் உதவும் கருங்கடு வாங்கிக்
கந்தரத்து அமைந்த அந்தமில் கடவுள்
பாலரை உணர்த்தும் மேலவர் போலக்
கேட்போர் அளவைக் கோட்படு பொருளால்
அருளிய கலைகள் அலகில; ஆல் அவை
பல பல சமயப் பான்மைத்து அன்றே;
அஃதால் அந்நூல் தன்மை உன்னியே
மாந்தர் இதுவே பொருள் என்று அதன்நிலை
அறைதலின் வேற்றோர் பனுவல் ஏற்றோர்க்கு
இசையா மாறுபாடு கூறுவர்;... ... ...

தெளிவுரை:

திருப்பாற்கடலில் எழுந்த கறுத்த நஞ்சினை, வாங்கித் தன் கண்டத்தில் தரித்துக் கொண்டவன், என்றும் தனக்கு முடிவில்லாத சிவபெருமான், தங்கள் பிள்ளைகளுக்கு, அந்தந்தப் பருவத்திற்கு ஏற்ற அறிவுரை செய்கின்ற பெற்றோரைப் போன்று, உலகில் உள்ள உயிர்கள் உய்யும் பொருட்டு, அந்தந்த உயிரின் அறிவு ஏற்கத்தக்க அளவில், பொருள் பொதிந்த வேதங்கள் பலவற்றை அருளிச் செய்திருக்கிறான்; அவற்றின் எண்ணிக்கை அளவில் அடங்கா. அவை அனைத்தும் உயிர்களுக்குப் பக்குவத்தை உணர்த்தும் சமய நூல்களே ஆகும்.

அவரவர் சமய நூல்களின் உண்மையை ஆராய்ந்து அறிந்த ஆன்மாக்கள், இஃதே இதற்குப் பொருள் என்று சொல்வார்கள். வேறு ஒரு சமய நூல் கருத்தை, ஆய்ந்து அறிந்தவர்க்கு, ஒருவர் கூறுவது ஏற்க முடியாமற்போய், ஒருவருக்கு ஒருவர் மாறுபட்டுப் பொருள் கூறுவர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

... ... அதனுல்,
புறச்சமயங்கள் சிறப்பு இல ஆகி
அருள் இல் மாந்தரை வெருள் உற மயக்கி
அலகைத் தேரின் நிலேயில் தீரும்;
ஈங்கு இவைநிற்க, நீங்காச் சமயம்
மூவிரு தகுதி மேவிய தாமும்
ஒன்றேடு ஒன்று சென்று உறும் நிலேயில்
ஆறு மாறு வீறு உடைத்து, இவற்றுள்
எவ்வம் இல்லா சைவ நல் சமயத்து
அலகு இல் ஆகமம் நிலவுதல் உள... ... ...

தெளிவுரை:

ஆகையினுல் உலகாயதன், புத்தன், சமணன், மீமாஞ்சகன், மாயாவாதி, பாஞ்சராத்திரி என்னும் புறச் சமயங்களில் உள்ள பொருள்கள், பக்குவம் உடைய ஆன்மாக்களுக்கு உண்மையை உணர்த்தமாட்டா. பக்குவம் இல்லாத உயிர்கள் வாழ்வின் எந்த நிலேயிலும் அஞ்சி அஞ்சியே வாழ்கிறுர்கள். அவர்கள் கானலேத் தண்ணீர் எனக் கருதி, அதனேக் குடித்துத் தாகம் தீரலாம் என எண்ணுகிறுர்கள். அவர்களுக்குத் தண்ணீர் பொய் ஆனது போன்று, அந்தப் புறச்சமயத்து நூல்களும், உண்மை உள்ளன போல் தோன்றிப் பொய்யாய் முடியும்.

எனவே, இங்குக் கூறப்படும் சமயங்களும் அவற்றின் செய்திகளும் நமக்குத் தேவை இல்லே. தம்மில் ஒன்றேடு ஒன்று கூடி இருக்கும் சைவம், பாசுபதம், மகாவிரதம், காளாமுகம், வாமம், வயிரவம் என்னும் உட்சமயங்கள் ஆறு ஆகும். இவை ஆறும் ஒன்றேடு ஒன்றினே நோக்குகையில் தனித்தனியே சிறப்புடையனவாக இருக்கும். இவற்றுள் சிறிதும் குற்றம் கூற முடியாத நல்ல சமயம் சைவம் ஒன்றே ஆகும். இந்தச் சைவ சமயத்தில் தான் சிவபெருமானுல் அருளிச் செய்யப்பட்ட ஆகமங்கள் உள்ளன. அவை அளவைகளால் அளந்து அறியமுடியாத சிறப்பினே உடையனவாகும்.

.... அவை
கனகம் இரணியம் காஞ்சனம் ஈழம்
தனம் நிதி ஆடகம் தமணியம் என்று இப்
பலபெயர் பயப்பதோர் பொருளே போலப்
பதி பசு பாச விதிமுறை கிளக்கும்
வாய்ந்த நூல்கள் ஆய்ந்தனர் ஆகி,
ஆசான் ஆகி வீசிய சமத்துடன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஏழ் அஞ்சு இருநூறு எடுத்த ஆயிரம்
வாழும் நல்சகனம் மருவா நிற்பப்
பொற் பொது மலிந்த அற்புதன், ஆனி
ஆறும் விழாவில் பொற்றேர் ஆலயத்து
ஏறு அறுவர் நிரையில் இருப்ப
மயங்கு வாத மாயா வாதி
முயங்கிட ஒரு தலை ... ...

தெளிவுரை:

ஒரு சமயத்திற்குப் பல ஆகமங்களை அருளிச் செய்ததன் நோக்கம், ஒரு பொன்னில் செய்யப்பட்ட ஒரு பொருள், கனகம், இரணியம், காஞ்சனம், ஈழம், தனம், நிதி ஆடகம், தமனியம் என்று இப்படிப் பல பெயர்களை உடையதாய் இருப்பது போல, அந்த சாத்திரங்களும் பதி இயல்பு, பசு இயல்பு, பாச இயல்பு ஆகியனவற்றைப் பலவாகக் கூறுதலினாலேயே ஆகும்.

இவ்வாறு அருளிச் செய்யப்பட்ட ஆகமங்களைக் கற்று ஆய்ந்த அறிஞர்கள், சமயம், விசேடம், நிருவாணம், ஆசாரிய அபிடேகம் என்னும் நால்வகைத் தீட்சைகளை உடையவர்கள் ஆவர்; விருப்பு வெறுப்பு அற்றவர்கள் ஆகிய இந்தச் சான்றோர்கள் சாலிவாகன சகாப்தம், ஆயிரத்து இருநூற்று முப்பத்து ஐந்தாவது ஆண்டிலே, பொன்னம்பலத்தில் எழுந்தருளியிருக்கின்ற அம்பலவாணனின் ஆனித் திங்கள் ஆறுவது நாள் திருவிழாவில், பொலிவு மிகுந்த திருத்தேர் மண்டபத்தில் ஏறி, ஆசிரியன்மார் ஆறுபேரும் வரிசையாக அமர்ந்திருக்கும் நிலையில், சற்காரிய வாதம் அறியாது மயங்கி வாதிடும் மாயாவதி ஒரு புறத்தே கூடி இருக்க

.... முதுவெதிர் மணிசேர்
பெண்ணை சூழ்ந்த வெண்ணெய்ம் பதி அதிகழ்
மெய்கண்டவன் அருள் கைகண் டவர்களில்
ஒருவர் ஒருதலை மருவி இருப்ப,
வஞ்சப் பிறவிக்கு அஞ்சி வந்து ஒருவன்
ஏது இறை அருள் என, இது எனும் மாயா
வாதியை அயலினர் மறுதலைத்து அருள்தர,
மற்றவர் அயலரில் அவரும் தொலைவுற்று,
இன்னே எழுவரும் முன்னே கழிவுழி
ஆங்கு அயல் இருந்த அருளினர் அழகு இது
நீங்கள் சங்கற்பம் நிராகரித்தமை என,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

முதிர்ந்த மூங்கிலில் உள்ள முத்துக்களோடு கூடிவரும் பெண்ணை ஆறு சூழ்ந்த திருவெண்ணெய்நல்லூரில் திரு அவதாரம் செய்தருளிய மெய்கண்ட தேவரின் அருளைப் பெற்ற அடியார் ஒருவர், அந்தக் குழுவில் ஒருபுறம் இருக்கும்போது, துன்பம் தரும் பிறவிக்கு அஞ்சிய ஒருவன் வந்து பணிந்து, ''இறைவன் திருவருள் எப்படி இருக்கும்?'' என்று கேட்டான்.

தன் நூலில் உள்ளபடி, ''அதுவே பொருள்'' என்று மாயாவாதி நாட்டினன்; அவனருகில் இருந்த ஒருவர், மாயாவாதி கூறியதை மறுத்து, "இதுவே பொருள்'' என்று அவர் நூலில் உள்ளபடி எடுத்துக் கூறினர். அவர் அருகில் இருந்த மற்றொருவர், அவரைக் கண்டித்துத் தமது நூலில் உள்ளபடி "இதுவே பொருள்'' என்றார். அவரருகில் இருந்தவராலே அவரும் கண்டிக்கப்பட்டார்.

இப்படி ஒருவரை ஒருவர் மறுத்து, ஏழுபேரும் தள்ளப்பட்டனர். அந்நிலையில், அவர்கள் அருகே எழுந்தருளியிருந்த ஆசாரியார் அவர்களைப் பார்த்து, ''நீங்கள் உங்கள் கொள்கைகளை மதித்து (சங்கல்பித்து) மற்றவர்களது மதத்தை மறுத்தது (நிராகரித்தது) மிகவும் நன்றாக இருந்தது என்று.

மற்றவர் உரைத்த சொல் தரு பொருள் கொடு
வாதம், செற்பை, விதண்டையும், ஏதுவும் 45
ஓது நால்வகை உவமையும் திகழ்தர
அருள்சேர் மாந்தர் வெருள் சேராமல்
தர்க்கமும் விடையமும் கற்க
நற்கவி மாந்தர் நக நவிற்றுவனே.

தெளிவுரை:

வாழ்த்தி, அவர் சொன்ன சொல்லில் உள்ள பொருளைக் கொண்டு, வாதம், செற்பை, விதண்டை, ஏது என்று சொல்லப்படும் நால்வகை உவமைகளைக் கூறி யான் விளக்கினேன்.

திருவருளுக்கு ஏதுவாய் உள்ள பக்குவ ஆன்மாக்களுக்குப் பொருள் மலைவு என்னும் அச்சம் ஏற்படாத நிலையில், முன் நூலில் உள்ள தர்க்கங்களையும் விடயங்களையும் கற்கத்தக்க வகையில், சிறந்த கவித்துவம் நிறைந்த புலவர்கள், இவனும் ஒரு நூல் செய்வதோ என்று நகைக்கத்தக்க நிலையில் ''சங்கற்ப நிராகரணம்'' என்னும் இந்நூலைச் சொல்கிறேன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நால்வகை உவமைகள் பற்றிய விளக்கம்

''வாதம்'' என்ற சொல், ''விதாரம்'' என்றும் ''விசியுழி'' என்றும் இரு வகைப்படும். இதில் விதாரம் என்பது குருவும் சீடனுமோ, அவரோடு ஒத்த நேசம் உடையவரோ, அல்லரோ ஆயினும், அவர்களிடம் மாறுபாடு இல்லாமல், பிரமாணங்களில் உள்ள வாதங்களை வாதித்து, அதில் உள்ள குற்றங்களை நீக்கி உண்மையான பொருளை நிலை நாட்டுவதைக் குறிக்கும்.

''விசியுழி'' என்னும் சொல், ''செற்பை'' என்றும், ''விதண்டை'' என்றும் இரண்டு வகைப்படும். இதில் ''செற்பை'' என்பது, பிறர் கூறும் பொருளை மறைத்துத், தன்னுடைய கருத்தை மலைவு இன்றி நிலை நாட்டுதலைக் குறிக்கும். ''விதண்டை'' என்பது, பிறர் கூறுவனவற்றை மறுத்துத் தனது கருத்தை வெளிப்படுத்தாமல், தான் மறுத்தையே சாதித்து நிற்பதைக் குறிக்கும். இதுவே ''விதண்டாவாதம்'' என்று உலக வழக்கில் பேசப்படுகிறது.

''ஏது'' என்பது, பிரமாணங்களில் விதிக்கப்பட்டுள்ள பல காரணங்களைக் குறிக்கும். இந்த நூலில், இத்தகைய ஏதுக்களும், வினை, பயன், மெய், உரு என்று சொல்லப்படும் நால்வகை உவமைகளும் மேற்கொள்ளப்பட்டுக் கொள்கைகள் விளக்கப்படும்.

3. மாயாவாதி சங்கற்பம்

நவிற்றிய நிரையில் அவித்தையினேன் உரை
நித்தன், அறிவன், சுத்தன், அகண்டிதன்
நிருவிகற்பன், நிர்த்தத்துவன், நிரஞ்சனன்,
சொல்வகை எவையும் தொடராத் தூய்மணி
வரம்பில் வேதச்சிரந்தரு பரம்பொருள்
சத்தாய் எவையும் தானாய் அவித்தை
தொத்தாது உயர்ந்த தொல்சுடர் மூவா
இன்ன தன்மையன், ஏகன், அநேகன்
கன்னல் பெரும்சுவை தன்னில் பிறவாப்
பெற்றியின் இருந்து, பொற்பணி இயல்பினின்;

தெளிவுரை:

முன் சொல்லப்பட்ட ஒழுங்கில், பரப்பிரமம் எவ்வாறு மயங்கி நிற்கும் என்று மாயாவாதி சொல்வது வருமாறு:—

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒருகாலும் அழியாதவன், எல்லாம் அறிந்தவன், நின்மலன், வியாபகம் உடையவன், வேறுபடாதவன் (நிருவிகற்பன்). தத்துவங்களைக் கடந்தவன், மயக்கம் அற்றவன். (அஞ்சனம் – மயக்கம்) என்னும் தன்மைகளை உடையவன் பரம்பொருள்; சொல்லும் பொருளுமாய் இருக்கின்ற எந்த சாத்திரங்களாலும் எளிதில் அணுகமுடியாத சுதந்திரம் உடையவன், எல்லையற்ற வேதங்களாலும் உணர முடியாத பரம்பொருள்.

தூய அறிவினை உடையவனாய், மாயையால் உண்டான தோற்றங்களை எல்லாம் தானே ஆகியும், அந்தத் தோற்றங்கள் தன்னைக் கட்டுப்படுத்தாத படி உயர்ந்து விளங்கும் பழம்பெரும் பேரொளியாய், ஆயினும் இவற்றோடு தொடர்புடையவனாய், ஒருவனுமாய் பல யோனிகளில் நிற்கிறவனுமாய் இருப்பவன். கரும்பில் இருக்கும் சுவை, கரும்புக்குத் தெரியாதது போல, தான் பேரின்ப வடிவினன் என்பதை அறியாமல் இருப்பது பரபிரமம். இத்தகைய பரபிரமம் உலகத்தில் திருவிளையாடல் செய்யும் நிலையில் தங்கம் தானே பல்வேறு அணிகலன்களாகத் தோன்றுவது போல.

வான் வளி அனல் நீர் மண் மருந்து அன்னம்
ஆன ஆறு ஐங்கோசத்
தொகுதி யாக்கைப் பகுதியது ஒருபுடை;
சுத்தி வெள்ளி ஒத்துஎன மித்தையில்
தான் எனல் ஆகும் தன்மைத்து, உலூதையில்
சின்நூல் தகையின் வேற்றுமை மரீஇயது
என்னப் பன்மையது எனின், இலை, பழம், பூத்
தோல், நார், வயிரம் தருத் தரும் தொன்மையில்
வான் நாரந் திரை நுரைதரு வாய்மையில்
கூடும், அசித்தைச் சித்து உதவாது எனின்,

தெளிவுரை:

பரபிரமம், தானே விண், வாயு, நெருப்பு, நீர், மண், மருந்துகள், உணவுகள் ஆகிய இவற்றால் ஏற்பட்ட தாதுக்கள் ஆறு, அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞான மயம், ஆனந்தமயம் என்னும் ஐந்து கோசங்கள் – இவையெல்லாம் கூடியிருக்கும் உடலின் பகுதியாக இருக்கும்.

இவ்வாறு தோன்றுகின்ற இந்த உலகம், நிலையானதா? நிலையற்றதா? நிலையற்றது என்றால், இது நிலையானதாகத் தோன்றுவதற்குக் காரணம், சிப்பி வெள்ளியைப் போல் தோன்றுகிறது; அதுபோல அறிவு மயக்கத்தினால், நிலையில்லாத உலகம், நிலையுள்ளதாகத் தோன்றுகின்றது. (மித்தை – அறிவு மயக்கம்) ஆனால், பிரமமும் உலகமும் தன்னில் வேறானதா என்று கேட்டால்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பிரமமே உலகம் என்று சொல்லும் தன்மையினை உடையதாய் இருக்கும். அப்படியானால் இந்த உலகம் பிரமத்தைப் போல் இராமல், வேறுபட்டு இருக்கிறதே என்று கேட்கலாம். அதற்குக் காரணம், சிலந்தியில் உண்டான சிறிய நூலினைப்போன்று பிரமமும் உலகமும் வேறு வேறாய் உள்ளது. சிலந்தியில் நூல் ஒரே தன்மை உடையதாய் இருக்கிறது; ஆனால் உலகம் பலவிதமாக இருக்கிறதே? இஃது ஏன்?

இலை, பழம், பூ, காய், தோல், நார், வயிரம் ஆகிய இவற்றையெல்லாம் மரம் தருவது போன்றும், திரை, நுரை, திவலை (துளி), குமிழி ஆகியன நீரில் உள்ளன போன்றும், உலகமும் பலவாக உள்ளது. அறிவற்ற சடமாயிருக்கும் உலகம் அறிவுடைப் பொருள் ஆகிய பிரமத்திலிருந்து எப்படித் தோன்ற முடியும் என்று கேட்டால்,

நெல் பதர் பலாலத்தில் பரம் தரும் இது
தன் இயல்பு என்றும், விளையாட்டு என்றும்,
முன் உள்ள மறைகள் மொழிதலின், ஒருநூல்
பன்மணி நிலையும்; பசுப்பால் எனவும்,
பல அகல் நீரில் அலர்கதிர் எனவும்,
கூவல் ஆழி குளம் சிறு குழி கால்
வாவி யானையும் வருபுனல் எனவும்
அவ்வவற்று அடங்கி, ஆடியுள் நிழல் எனத்
தோன்றி யாக்கை நல் காந்தத்து இரும்பும்
கனவில் தீங்கும், கங்குலில் கயிறும்,
புனலில் தோன்றும் பேய்த்தேர்ச் செய்தியும்

தெளிவுரை:

நெல், பதரையும் வைக்கோலையும் தருகிறது; அதுபோல, பிரமம், சடம் ஆகிய உலகைத் தருகின்றது. பிரமம் இப்படிச் செய்வதற்குக் காரணம், இது பிரமத்தின் இயல்பு என்பது ஒன்று; மற்றொரு காரணம், இவ்வாறு மாயா தோற்றம் உற்று நிற்பது, பிரமத்திற்கு விளையாட்டு என்பதாகும். இவ்வாறு திருவிளையாடல் புரிவது பிரமத்திற்கு இயல்பு என்று அநாதியே உள்ள வேதங்களில் சொல்லப்பட்டுள்ளது.

மாயா தோற்றங்கள் (உபாதிகள்) பலவாகக் காணப்படுவது போல, பிரமமும் பலவாகக் காணப்படுமோ என்று கேட்டால், அதற்கு விளக்கம் வருமாறு; மணிகள் பல நிறமாய் இருந்தாலும், அவை கோக்கப்பட்ட நூல் ஒன்றாய் இருக்கிறது; பசுக்கள் பல நிறங்களை உடையனவாக இருப்பினும், அவற்றின் பால் ஒரு நிறம் உடையதாய் இருக்கிறது; நீர் நிறைந்த

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பாத்திரங்கள் பலவாக இருப்பினும், அவற்றில் எதிர் உருவம் (பிரதிபிம்பம்) செய்யும் கதிரவன் ஒன்ருய் இருக்கிருன்; கிணறு, கடல், குளம், குட்டை (சிறுகுழி), வாய்க்கால், ஏரி ஆகிய இவையெல்லாம் பல்வேறு விதமாய் இருந்தாலும், அவற்றுள் உள்ள தண்ணீர் ஒன்ருய் இருக்கிறது; இவ்வாறு பிரமமும் உடல்கள் பல பெற்றிருப்பினும், அதன் அறிவு ஏகமாய் இருக்கும்.

உடல்கள் பல பெற்று, பிரமத்தின் அறிவு அவற்ரேடு கூடி இருந்தால், அஃது அந்த உடல்களால் பந்திக்கப்படாதோ என்று கேட்டால், அதற்கு விளக்கம் வருமாறு:

கண்ணுடியில் நிழல் தோன்றும் என்ருலும், அது கண்ணுடியில் தோய்வுருது நிற்கும், அதுபோல, பிரமத்தின் அறிவு உடல்களில் தோன்றினுலும், அஃது உடல்களில் தோய்வுருது நிற்கும். அவ்வாறு நின்ருல், அந்த உடல்கள் எப்படிக் காரியப்படும் என்ருல் காந்தத்தின் சந்நிதியில் நிற்கும் இரும்பு காரியப்படுகிறது; காந்தம் அந்நிலையில் இரும்பில் தோய்வற நிற்கிறது; அதுபோல, பிரமத்தின் அறிவு, உடல்கள் தோறும் தோய்வற நின்ருலும், உடல்கள் காரியப்படும்.

பிரமத்தின் அறிவு, உடல்களில் நின்று இன்ப துன்பங்களை அனுபவிக்கிறதே, உடலில் தோய்வுருத பிரமத்திற்கு இன்ப துன்பங்கள் எப்படி வரும் என்ருல், அதற்கு விளக்கம் வருமாறு:

ஒருவன் கனவு காண்கிருன். அந்தக் கனவில் அவனை ஓர் யானை துரத்திக்கொண்டு வருகிறது; அவன் ஓடுகிருன், அப்போது அங்கு ஒரு கிடங்கைக் காண்கிருன். அஃது ஆழமாய் இருக்கிறது; ஆகவே, அங்கும் போகமாட்டாமல் இங்கும் நிற்க மாட்டாமல் தவிக்கிருன்; இந்தக் கனவு கலைந்து விழித்துப் பார்த்தபோது, இவையெல்லாம் பொய் என்று தெளிவுறுகிருன்.

இரவு நேரத்தில், புற்று ஒன்றின் வாசலில் ஒரு கயிறு கிடப்பதைக் கண்ட ஒருவன் அதனை ஒரு பாம்பு என்று மயங்கி நிற்கிருன். விடிந்ததும் அது பாம்பு என்றது பொய் – அது கயிறு என்பதே மெய் என்பதை அறிகிருன்.

தண்ணீர்த் தாகம் உடைய ஒருவன், கானலைத் தண்ணீர் என்று எண்ணினுன்; பின்னர் நெருங்கியதும் தண்ணீர் என்றது பொய் – அது கானல் என்பதே மெய் என்று தீர்மானித்தான்.

இவ்வாறே, உடல்கள் தோறும் கூடி நின்று, இன்ப துன்பங்களை அனுபவிப்பதுபோல இருக்கும் இந்த பிரமம் அவ்வனுபவம் பொய் என்பதை உணர்ந்து, தன் உண்மையை நோக்கினுல், பிரமத்தின் அறிவுக்கு இன்ப துன்பங்கள் எவையும் தோன்றமாட்டா.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அன்னதும் பின்னர் நன்னிறப் பளிங்கு எனப்
பதினாற் கரணத்து ஒரு மூன்று அவத்தை
நாளும் நாளும் நயந்து உறும் இருபயன்
தன்னில் சாராத் தொன்மைத் தன்மை
தற்பண நிழல் கண் குற்றிப் பாய்ந்து அற்றே;
இவ்வியல் பந்தப் பவ்வம் அது அகல
விண் முதல் தந்த கொண்மூப் படலத்து
இருள் அற உதித்த கால் தக விவேகம்
தன்னில் தோன்றிச் சாதகம் அனைத்தையும்
மன் அகப் பிரிப்பும் மடி இழை வாங்கலும்
போல ஞாலம் பொய் அறக் கழீஇத்
தானே தானாய்த் தன்னில் தன்னைத்
தானே கண்டு தன் நலம் உற்று

தெளிவுரை:

ஆயினும் நடைமுறையில் கருவி கரணங்களோடு கூடி நின்று, பிரமம் தானே வினைப் பயன்களை அனுபவித்து வருகின்றதே என்று கேட்டால், அதற்கு விளக்கம் வருமாறு:

இந்திரியங்கள் அவ்வாறே தாமே நிற்பினும், அவற்றால் பிரமத்துக்கு அனுபவம் உண்டாவதில்லை. அஃது எது போல என்னில், படிகம் (நிலைக்கண்ணாடி) பல நிறங்களோடு கூடி இருந்தாலும் அந்நிறங்களோடு அதற்குத் தொடர்பு ஒரு சிறிதும் இல்லாததுபோல ஆகும். மேலும் ஞானேந்திரியங்கள் ஐந்து, கன்மேந்திரியங்கள் ஐந்து, அந்தக்கரணம் நான்கு ஆகிய பதினான்கு கருவி கரணங்களோடு கூடி நனவு, கனவு, உறக்கம் என்னும் மூன்று நிலைகளிலும், நாள்தோறும் பிரமம் பொருந்தி அனுபவித்து வருகிறது.

இவ்வாறு அவத்தைகட்கு உட்படும் பிரமத்திற்கு நல்வினை தீவினைத் தொடர்பு ஏற்படுமே என்றால், அதற்கு விளக்கம் வருமாறு:

இவ்வாறு அவத்தைகளோடு, பிரமம் கூடி நின்றாலும், அதற்கு அநாதியே நல்வினை தீவினைத் தொடர்பு இல்லை; அஃது எவ்வாறு எனில், ஒருவன் முகம் கண்ணாடியில், எதிர் உருவமாக (பிரதிபிம்பம்)த் தோன்றும்போது, அந்த எதிர் உருவத்தின் கண்ணில் பாரையைக் (குற்றி) கொண்டு தாக்கினால் அந்தக் கண்ணாடி உடையுமே அன்றி, அந்த கண்ணாடியில் முகம் பார்த்த மனிதனுக்கு எந்தக் கெடுதலும் நேர்வதில்லை அல்லவா? அதுபோல, பிரமம் பெத்தநிலையில் எந்த அவத்தையுட்பட்டாலும், நல்வினை தீவினைத் தொடர்புக்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உப்படுவதில்லை எனக் கொள்க. (இதுவரை பிரமத்தின் பிறப்பு நிலை பற்றிப் பேசப்பட்டது. இனி முத்தி நிலை பேசப்படுகிறது).

இதுவரை சொல்லி வந்த முறையில் மாயா கருவிகளின் தோற்றங்களால், பிரமத்திற்கு ஏற்பட்ட பிறவித்துயர் நீங்கும் பொருட்டு,

மேகம் ஆகாயத்தில் தோன்றி ஆகாயத்தையே மறைக்கிறது அல்லவா? அப்போது ஆகாயத்தில் தோன்றுகின்ற காற்று, அந்த மேகத்தை நீக்கி, ஆகாயத்தை நின்மலம் ஆக்குகிறது. அதுபோல பிரமத்திலிருந்து பகுத்தறிவு (விவேகம்) தோன்றி, பிரமத்துக்கு உண்டான மறைப்புக்கள் அனைத்தையும் நீக்குகிறது. அஃது எவ்வாறெனில்,

நிலைபெற்று நிற்கும் வீடு ஒன்றினை ஒருவன், அவ் வீட்டில் உள்ள வைக்கோல், கழி, மரம் முதலானவற்றை ஒவ்வொன்ருகப் பிடுங்கிப் பிடுங்கிப் போட்டதும், அந்த வீடு என்னும் உருவம் இல்லையாய்ப் போய்விடும்; புடவை ஒன்றினை ஒருவன், ஒவ்வொரு இழையாகப் பிடுங்கிப் போட்ட பின்பு, அந்தப் புடவை என்னும் உருவம் இல்லையாய்ப் போய்விடும்; உலகம் என்னும் பொய்யையும், மண் முதலாகக் கொண்டு, இது நான்அல்ல இது நான் அல்ல என்று எண்ணி நீங்கிக் கொண்டு வருகையில், மாயா தோற்றம் நீங்கும். அந்நிலையில் பிரமம் தானேயாய் தன்னிடத்தில் தன் சொரூபத்தைத் தானே கண்டு, தன்னிடத்தில் உள்ள இன்பத்தைத் தானே அனுபவிக்கின்றது.

வசையில் தத்துவமசி பதத் தெளிவால் 45
அகமே பிரமம் ஆயினன் என அறிந்து
அசலன் ஆகி நல் சல சல மதி எனக்
கண்டிடும்;...... ... ...

தெளிவுரை:

குற்றமற்ற ''தத்துவமசி'' என்னும் மகாவாக்கியத்தின் தெளிவைக் கொண்டு, அந்த ''பிரமம் நான் ஆனேன்'' என்னும் பகுத்தறிவு விளங்கப் பெற்று, அந்நிலையில் சிறிதும் அசையாமல், தூய தண்ணீர் அசையும்போது, அதனோடு கூடிய சந்திரனும் அசைதல் போல, சந்திரனின் உண்மையைக் கண்டு, அஃது அங்கு இல்லாமல் இருந்தாற்போல, இந்தப் பகுத்தறிவு என்னும் பிரமஞானம் காணப்படும். (இதுவரை கூறியது சீவன் முத்தர் இலக்கணம். இனி பரமுத்தி இலக்கணம் கூறப்படுகிறது).

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

... ...உடலம் விண்டு அகல் கடத்து
மங்குல் அது உடை தர, எங்குமாம் தகைத்தே;
இவ்வகை உணர்ந்து செய் தொழில் அருத
மடவோர் தாமும் கடறு இயற்றும்
கன்ம காண்டத் தொன்மைப் புரிவால்
தோற்றிய வித்தை மேற் கடை அரணியில்
எழுந்து எரி அவற்றை விழுங்கியது என்னத்
தான் ஒழிந்து உள்ள தானுய் ஒழியும்;
அந்நிலை அன்றி அழிவறி முத்தி
ஏயாது என்று தன் இயல்பை
மாயாவாதி வகுத்து உரைத்தனனே.

தெளிவுரை:

இந்த உடல் தொடர்பை விட்டதும், இந்த அறிவும் அந்த பிரமமும் தன்னில் ஒன்று பட்டுவிடுகிறது. அஃது எதுபோல என்றுல், அகன்ற இடத்தை உடைய குடத்திற்கு உள்ளே அகப்பட்டு நிற்கும் ஆகாயம், இந்தக் குடம் உடைந்த நிலையில், அந்தப் பராகாசமும் இந்த குடகாசமும் ஒன்று பட்டால் போல் ஆகும். (பராகாசம் – மேலே விரிந்திருக்கும் ஆகாயம்; குடாகாசம் – குடத்தினுள் அடங்கியிருக்கும் ஆகாயம்) இது பரமுத்தி.

அது நான் ஆனேன் என்னும் பிரமஞானத்தை அறிந்து, தான் முன்பு செய்துவந்த கன்மங்கள் அனைத்தையும் விட்டுவிட இயலாத அறிவில்லாதவர்களும், கடைப்பிடிக்கத் தக்க முறை ஒன்று உள்ளது; அது வருமாறு:

மேற் சொன்ன பிரமஞானம் ஏற்படும் பொருட்டு, அதற்கான கன்ம அனுட்டானங்களைச் செய்து வரவே, அவர்களுக்கு விவேக ஞானம் உண்டாகும். அப்படி உண்டாகும் விவேகம், தீயை உண்டாக்கக் கடையும் கோல் ஒன்றினை மேலே வைத்துக் கடைய, அப்போது உண்டாகும் நெருப்பு, அந்தக் கோலையும் அந்தக் கோலினைத் தாங்கி நின்ற கவசத்தையும் சுட்டு எரித்துவிடும். அத்தகைய முறையில் தான் ஒன்றும் ஒழிந்து, கன்மங்கள் அனைத்தும் அழிந்துபோகும். எனவே இந்த நெறியைக் கடைப்பிடிப்பது அன்றி, வேறு எந்த நெறியில் நின்றுலும் நிலையான முத்திப்பேறு சித்திக்காது.

இவ்வாறு தன்னுடைய பிறப்பு நிலையிலும் முத்தி நிலையிலும் உள்ள முறைகளை மாயாவாதி விளக்கிக் கூறினுன். (அவனை இனி ஐக்கியவாதி மறுக்கிறுன்).

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

4. மாயாவதி சங்கற்ப நிராகரணம்

உரைதரு பிரமம் ஒன்றுஎனும் உரைக்கண்
வரு பிரமாணம் மறை எனில், அருமறை
ஒன்று என்றது அன்றி, இருபொருள் உரைத்தல்
நன்று அன்று; அபேதம் நாடிய பொருளேல்
பேதமும் அபேதமும் ஓத வேண்டா;
பேதம் எனினும், அபேதம் எனினும்,
பேதாபேதம் எனினும், அமையும்; நின்
ஐயம்இல் உரையில் பையவந்து உளதாம்;
திகழ் பிரமாண இகழ்வு உண்டு அன்றிப்
பெத்தம் பேதம், முத்தி அபேதமேல்,
அனவத்திதமாம், அவை இருதிறனும்;

தெளிவுரை:

பிறப்பு நிலையிலும் முத்தி நிலையிலும், நீ கூறி உன்னுடைய மதத்தின் கருத்து – பிரமம் ஒன்றே உள் பொருள் என்று கொள்வதற்கு வேதமே பிரமாணம் என்கிறாய். அந்த வேதத்தில், பிரமம் ஒன்றே உள்ளது என்று சொல்வதோடு அமையாமல், சீவன் பரம் என்று இரண்டாகச் சொல்லப்படுகிறதே? எனவே நீ கூறிய வேதம், உன் கருத்துக்கு பிரமாணம் எனச் சொல்வது பொருந்தாது.

வேதம், அவ்வாறு இரண்டு என்றதும் அஃது அபேதக் கொள்கையைக் கூறுகிறது என்று கூறுவாய்; அவ்வாறாயின், நீ 'ஒன்று' என்பதற்குச் சொன்ன பிரமாணம், 'இரண்டு' என்றும், 'இரண்டு அல்ல என்றும்' சொல்ல வேண்டியதில்லை.

பேதம்	–	வேறாய் இருப்பது;
அபேதம்	–	வேற்றுமை இன்றி ஒன்றாய் இருப்பது.
பேதாபேதம்	–	வேறாயும் ஒன்றாயும் இருப்பது.

'பேதம்' என்றும், 'அபேதம்' என்றும், 'பேதாபேதம்' என்றும் வேதம் சொல்வது எல்லாம், அந்த பிரமம் ஒன்றையே குறிக்கும் என்று கூறுவாய்; அவ்வாறாயின், 'இரண்டு' என்றாலும், 'இரண்டு அல்ல' என்றாலும், 'இரண்டுமாய் இரண்டு அல்லவுமாய் இருக்கும்' என்றாலும் பொருந்தும் என்று நீ ஐயப்பாட்டுக்கு இடம் இன்றி கூறினால், அது பிரமாண விரோதம் ஆகும். (பிரமாணம் – உண்மை)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அவ்வாறு உண்மைக்கு மாருகக் கொள்ளாமல், பிறப்பு நிலையில் பிரமம் இரண்டாய் இருக்கும் என்றும், முத்தி நிலையில் பிரமம் ஒன்ருய் இருக்கும் என்றும் அந்த வேதம் உண்மையையே கூறுகிறது என்று நீ சொல்வாய் ஆயின், இவ்வாறு இரண்டு நிலைகளில் பிரமம் ஒன்றே இருக்கிறது என்று கூறுவது நூல் முறைக்கு முரணுகும். அவ்வாறு கூறுவது வரம்பு இன்றி, முடிவு பட்டு முடியாத கருத்தாகவே இருக்கும். (அந வத்திரம் – முடிவற்ற நிலை)

இனி அப்பழமொழி இரண்டல ஒன்றேல்
அன்றியும் பெத்தம் பேதத்து அறைதலும்
ஒன்றிய முத்தி அபேதத்து உரைத்தலும்
பழுதாம்; இத்திறன் பதையாது ஆய்க; மற்று
எழுதா மறை எனும் இப்பிரமாணம்
ஆர் உரை? தானே ஆயினதேல், உனது
ஏகம், அநேகம் உறும் இயம்பாமல்
சத்த ரூபம் தகாது எனில், வானத்து
ஒத்துஒலி உறழும் எனில், வறிது உதியாது;
அன்றியும் பதமும் பாழியும் அனைத்தும்
இன்றி ஓர் ஒலியாய் எழுந்திடும் அதனுக்கு
அறிவு இலது; உருவு இலது; அறியாது அறையாது;
அன்றியும் அவ்வகை அகண்டிதம்; அது இது
என்றது குறிப்பது எவ்வகை? ....

தெளிவுரை:

நான் இவ்வாறு கூறியதைக் கொண்டு, அந்தப் பழைய மொழி ஆகிய ''வேதம் இரண்டு என்று சொல்லாது; ஒன்று என்றே சொல்லும்'' என்று நீ இப்பொழுது கூறுவாய்; அவ்வாருயின், முன்னுக்குப் பின் முரணுகக் கூறுவது குற்றம்; என்ருலும், பிறப்பு நிலையில் சீவன், பரம் என்று இரண்டாய் இருக்கும் என்றும், முத்தி நிலையில் சீவன், பரம் இரண்டும் ஒன்ருய் இருக்கும் என்றும் கூறுவது குற்றம் ஆகும். இவ்வாறு நான் கூறுவதைப் பதருமல் ஆராய்ந்து பார்ப்பாயாக.

மேலும் எழுதப்படாத வேதம் ஆகிய இந்த பிரமாணம் யாரால் சொல்லப்பட்டது? அஃது ஒருவராலும் சொல்லப்பட்டது அன்று, சுயம்புவாக உள்ளது ஒன்று என்று கூறுவாய் ஆயின், (சுயம்பு – தாளுக இருப்பது) பிரமம் ஒன்று என்று நீ கூறியது போய், பிரமம் ஒரு முதல்; வேதம் ஒரு முதல் என்று ஆகி, நீ கூறிய ஏகம், அநேகமாக உள்ளது, மேலும், ஒருவர் சொல்லாமல் ஒலியின் வடிவம் தாளுகத் தோன்ருது. வானிலிருந்து வரும் ஒலியைப்போல (அசரீரி) வேதமும் ஒருவர் சொல்லாமல் தானே உண்டாகியிருக்கிறது என்று

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நீ கூறுவாய் ஆயின், அது பொருந்தாது. விண்ணில் வாயுவை ஏதுவாகக் கொண்டு, ஒலி உண்டாகிறதே அன்றிச் சும்மா ஒலி தோன்றுது.

மேலும், சொல், ஒழுங்கு, உரை (பாழி) ஆகியவற்றோடு மட்டுமன்றி வேதமானது முறையாக ஒலி வடிவில் அமைந்துள்ளதால், அஃது அறிவாய் இருப்பதாகும்; எனவே வேதத்தை எளிமையாகக் கருதிவிடக்கூடாது. அஃது அறிவற்றது என்பதும் பொருந்தாது. வேதம் அறிவாய் முறைப்படி அமைந்திருப்பதால், அதனைச் சொன்னவர் ஒருவர் இருக்க வேண்டும்.

அந்த ஒருவர் நம்மைப்போன்று மாயா உடலைப் பெற்றவராக இருந்து, அவரிடமிருந்து வேதம் வெளிப்பட்டதாய் இருந்தால், இவ்வளவு தூய ஒலியையும் அறிவையும் உடையதாக அஃது இருக்காது; வேதம் வரம்புக்கு உட்படாதது; கண்டிக்கப்படாதது; எனவே, சொல்லையும் பொருளையும் கூட்டிக் கூறுவது வேதம் என்று எவ்வாறு கூற முடியும்?

.... யாவும்
ஒன்றேனும் உரையும் ஒழிந்தனை அன்றே
அருமறை பிரம உரை எனில் அதற்குத்
தந்தம் தாலு முதல் நவில் பொறி இலது
என்னில் ஓர் உடற்கண் மன்னிய அலகை
அறைந்தற்று என்பது ஆர்சொல்? அமலத்
திறம்பெற்று இன்றே செய்தோர் பெயரால்
சுயம்பு என்று உலகு இயம்பும் என்று அறி; இனித்
தன்கீழ்த் தலைவரைத் தான் தொழுது உரைக்கும்
சொற்கேல், புரவலன் ஏவல் அமைச்சரை
அடியேம் மற்று எம் குடிமுழுது ஆள்மின் என்று
ஏத்தி இறைஞ்சிற் காப்பர்கள் என்று ஆங்கு
ஈசன் நாம் செயப் பேசினன் அன்றி
இனையவை பிறரில் கனவிலும் இலனே.

தெளிவுரை:

எனவே, எல்லாம் ஒன்றே என்று சொன்னதையும் விட்டுவிட்டாய் என்று கருதும்படியாக உள்ளது. அறிதற்கு அரிய வேதம் பரபிரமத்தினுலே சொல்லப்பட்டது என்றால், அந்த பிரமம் வியாபகம் உடையது ஆகலின், வேதத்தைச் சொல்வதற்குக் கருவியாக உதவும் பல், நாக்கு முதலியன பிரமத்திற்கு இல்லாததால், வேதம் பிரமத்தினுல் சொல்லப்படாமல், ஒருவன் உடலில் பேய் புகுந்து பேசுவதுபோல், பிரமமும் ஒருவர் உடலைச் சார்ந்து வேதம் சொன்னதாக ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அப்படி ஒருவர் உடலைச் சார்ந்து நின்று சொன்னால் , அஃது ஓர் உயிர் சொன்னது ஆகும்; ஆகவே, அந்தச் சொல் தூய்மையானது ஆகாது. அவ்வாறாயின், வேதத்தை உலகமெல்லாம் சுயம்பு என்று ஏன் கூறுகிறது என்பதற்கு விளக்கம் வருமாறு:

உருவம் இன்றி நிற்கும் பரம்பொருள், அணுபட்சத் திருமேனி தாங்கி அந்த ஆன்மாவில் தங்கி, வேதத்தை அவனால் உச்சரிக்கச் செய்கிறது. ஆக, வேதத்தைச் சொன்னவன் பரம்பொருள் ஆகலின், வேதம் சுயம்பு எனப்படுகிறது. இதனை இவ்வாறு இனி அறிவாயாக.

வேதம், தனக்குக் கீழ் உள்ள தேவதைகளை வணங்கி, பிரமம் சொன்னது என்று நீ கூறுவாயாகில். அது பொருந்தாது, அஃது எப்ப., இருக்கிறது என்றால், ஓர் அரசனுடைய குடிமக்கள், அந்த அரசனை அணுகாமல், வாயில் காப்போர்களை அணுகித் தங்கள் குறைபாடுகளைச் சொல்லி, அவற்றைத் தீர்த்துக்கொள்வது போல், கடவுளும் தன்கீழ் உள்ள தேவதைகளை வேண்டித் தன் செயற்பாடுகளை நிறைவேற்றிக்கொண்டது போல் இருக்கிறது. மேலும், கடவுள் பிற தெய்வங்களை வணங்கினான் என்பது கனவில் கூடக் கருதப்பட முடியாததாகும்.

தன்னை துதிக்கும் சொல் நலம் தானும்; அத்
துறைஅறி வாணர்க்கு அறைவது ஒன்று அன்றியும்
தனக்குத் தானே நன் நலம் பகராது;
அசத்துக்கு உரையாது; ஆர்க்குஉரை? உயிர்க்கு எனில்,
உரை பிரமாணம், இறை பிரமேயம்,
நீ பிரமாதா, நின் பிரிமிதி என
நால்வகை உளது; உனது ஏகம் நன்று அன்றே;
நற்பிரமாணம் நிற்பது ஒன்று அன்றாய்
அப்பிரமேயமும் அதன் இயல்பு அன்றே;
கன்னல் சுவையில் அன்னியம் இலதால்.
இனிமை தோன்றாத் தன்மைத்து என்றனை;
அறிவிற்கு உவமை அசத்தாம் கட்டி
பிறவித்து ஒட்டினும் அது உறாதே.

தெளிவுரை:

உன்னுடைய பிரமம் தன்னைத் தானே வழிபடுபவன் என்பது, பக்குவ ஆன்மாக்களாய் உள்ளவர்கள், தன்னை வழிபாடு செய்யத் தக்கதாகச் சொன்னதைக் குறிக்கும். மேலும், பிரமம் தன்னுடைய பெருமையைச் சொல்லும்பொழுது, வேறு ஒருவர் கேட்கும்படி சொல்லுமே அன்றித் தனக்குத்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தானே தன்னுடைய பெருமையைச் சொல்லிக்கொள்ளாது; அதுவும் உடல் சடம் ஆகலின், அந்த உடலை நோக்கிச் சொல்லாது; பின்பு யாரை நோக்கி, பரமா தன்னுடைய பெருமையைச் சொன்னது? அது பிறரை நோக்கிச் சொன்னுன் என்ருல், அது கீழ்க்காணும் நான்கு வகைகளைக் கருத்தில் கொண்டு சொல்ல வேண்டும்:

(1) வேதம் பிரமாணம்;
(2) பிரமம் பிரமேயம்;
(3) ஆன்மா பிரமாதா;
(4) ஆன்மாவின் அறிவு பிரமிதி.

எனவே, பிரமம் ஒன்றே உள்பொருள் என்று நீ சொன்னது மிக நன்ருய் இருக்கிறது!

('பிரமாணம்' என்பது, விளங்கும் கருவியால் விளங்குவது ஆகிய ஆன்ம ஞானம்; அஃதாவது ஆன்மாவின் சிற்சத்தி ஆகும்.

'பிரமேயம்' என்பது, ஆன்மாவினுல் அறியப்படுவதும் அனுபவிக்கப்படுவதும் ஆகிய பொருள் ஆகும்; இது ஞேயம் எனவும் கூறப்படும்.

'பிரமாதா' அறிகின்ற ஆன்மா; ஞாதுரு' எனப்படுவது

'பிரமிதி' என்பது, ஆன்மாவின் அறிதல் தொழில்

பிரமாணம் ஒருவாற்ருனும் பிரமேயம் ஆகாது; பிரமேயம் பிரமாணம் ஆகாது.

ஆதாரம்: சிவஞான மாபாடியம் சூத்திரம் ஆறு, அதிகரணம் இரண்டு.)

எனவே, இதற்குத் தக்கதொரு பிரமாணம் வேதமே என்று சொல்லி உன்னுல் நிலைநாட்ட முடியாது. பிரமம் ஆகிய பிரமேயம், வேதத்திஞல் அளக்க முடியாதது என்று தெளிவுபடுத்தப்பட்டு விட்டதால், வேதம் சுயம்பு என்று நீ சொன்னது பொருந்தாது என்பது இதனுல் மறுக்கப்படலாயிற்று.

இனி, பிரமேயத்தை மறுத்துக் கூறப்பட்டது;

கரும்பில் உள்ள இனிமை, தன்னில் வேறுபடாததால்; தன் இனிமை தனக்குத் தோன்ருமல் இருக்கிறது; அதுபோல பிரமமும் தன் இன்பத்தை தான் அறியாது என்று நீ உன் மதக் கொள்கையைக் கூறிஞய். அறிவாய்உள்ளதற்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உவமை சொல்லும்பொழுது, அறிவாய் உள்ளதைச் சொல்லாமல் கரும்பில் உள்ள இனிமை போலும் என்று சொன்ஞய்; அஃது அன்றியும், கரும்பில் உண்டாகும் கட்டியை அதனின் வேருக வைத்தபொழுது, இத்தனை நாளும் இந்த இனிமையை இழந்தோமே, இப்பொழுதாவது இதனைப் பெற்றேமே என்கிற எண்ணம், இந்தக் கட்டிக்கு ஏற்படாது; ஆகவே இது பிரமத்திற்கு உவமை ஆகாது.

தற்பர விரிவு பொற்பணி தகும் எனில்,
செய்வோர் இன்றிச் செய்வினை இன்மையின்,
பொன் பணி ஆகை, தன்பணி அன்றே?
செய்வோர் போலாச் செயப்படுபொருள் முதல்
செய்வோர் ஏயாச் செய்யவும் படுமே;
சுத்தி வெள்ளியில் தோன்றிற்று; ஆயினும்,
சத்துலகு ஏதும் தாரா தகும் எனில்,
உலகம் மித்தை என்று ஓராது உரைத்தனை;
நிலவும் நின்மரபு நினைந்திலையாம் கொல்?

தெளிவுரை:

பரப்பிரமம் உடல் முதலிய மாயா காரியங்களாய் இருக்கும் தன்மை பொன் பல அணிகலன்களாக இருக்கும் தன்மையைப் போன்றது என்று நீ சொல்கிருய்; அவ்வாருயின், இந்த உலகத்தில் செய்வோர் ஒருவர் இல்லாமல், செய்தொழில் காணப்படாதது போலப் பொன்னும் ஒருவன் பண்ணியதால், அணிகலன்கள் ஆயிற்று. பொன் சடம் ஆகலின், அதுதானே அணிகலன் ஆவதில்லை. அது போலவே உன் பிரமம் உலகமாக விரிந்தும், வேருெருவனுல் செய்யப்பட்டது ஆகவேண்டும்.

அப்படியில்லாமல், எல்லாவற்றையும் பிரமம் தானே செய்தது என்று நீ கூறுவாய் ஆயின், இந்த உலகத்தில் செய்யப்படும் பொருள்களுக்கு முதற்காரணமாய் இருக்கும் பொருள், அதனைச் செய்பவர்களது தன்மையை உடையதாக இல்லை. ஆகவே, இந்த உலகத் தோற்றத்திற்கு முதற்காரணமாக, பிரமத்தை அன்றி, வேருெரு பொருள் இருக்க வேண்டும் என்பது பெறப்படும்.

இப்போது நீ கூறுவாய், அந்த பிரமமே முதற்காரணம் என்று. முதற்காரணம் சடப் பொருள்; எனவே அது தாஞக, உலகாகத் தோன்ருது. சடப் பொருள் ஆகிய முதற்காரணத்தைச் செயற்படுத்துவதற்கு கர்த்தா வேண்டும். அஃது அன்றி உலகில் ஏதாவது ஒரு பொருள், செய்வார் ஒருவர் இன்றித் தானே செயல்படுமா?

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிப்பி, வெள்ளியாக தோன்றுவது போல, நிலையில்லாத இந்த உலகம், நிலையானது போலத் தோன்றினாலும், அறிவுடைப் பொருளாகிய பிரமம், சடமாய் உள்ள இந்த உலகத்தை, ஒரு தன்மையில் உண்டாக்காது(சிப்பி வெள்ளியாகத் தோன்றுவது ஒரே ஒரு தன்மையிலேயே ஆகும்) உலகம் பல்வேறு விதமாகத் தோன்றியுள்ளது.

நிலையில்லாத உலகம் பிரமத்தின் முன், நிலையானதாகத் தோன்றும் என்று கூறுவாயாயின், முன்பு இந்த உலகம் பொய் (மித்தை) என்று நீ சொன்னதை மறந்து இவ்வாறு பேசுகிறாய். உனக்கு இவ்வாறு மலைவு வருவதால், உன்னுடைய மதத்தின் கொள்கையை மறந்து விட்டாய் போலும்!

விவகாரத்தில் வேண்டுதும் உலகம்
பரமார்த்தத்தில் பகராம் என்னில்,
பரத்து உளதேல், இவையும் பரமார்த்தம்;
பரத்து இலதேல் ஒழி முன்பகர் மாற்றம்;
அதன் முதல் இது என உதவுக; அன்றியும்
விவரிக்கும் கால் திகழ் பரமார்த்த
நிலை அது தெரியின் இது நீ; நீயேல்
தெரியாதாயின், அஃதும் தெரியாது;
உரையார் அளவையும் ஒழிந்தனை அன்றே?
அளவை காண்டல், கருதல், உரை என
உளது; அவை மூன்றின் மொழிவழி நுழையின்,
நின் பிரமேயம் என்பது, எனும் கொல்?

தெளிவுரை:

துன்பத்தில் மூழ்குவதால், தன்னை உயிர் என்று பிரமாணம் பண்ணிக் கொண்டு உலக வழக்கில் நிற்கும் இந்த பிரமம் முத்தி நிலையில் ''நான் பிரமம்'' என்றும், உலக வழக்கில் உள்ளதெல்லாம் பொய் என்றும் சொல்லி, முத்தி நிலையில் உலகைப் பற்றிப் பேசக்கூடாது என்கிறாய்; அவ்வாறாயின், முத்திநிலையில் உள்ள பிரமத்திலிருந்து தோன்றியதாக உள்ள நிலையற்ற உலகம், நிலையாகவுள்ள பிரமம் ஆக வேண்டும்.

உலகம் பொய் ஆகலின், இது முத்தி நிலையில் உள்ள பிரமத்திலிருந்து தோன்றவில்லை என்று கூறுவாய்; அவ்வாறாயின், உலகம் பிரமத்தில் இருந்து தோன்றிற்று என்று, நீ முன்பு சொன்னது என்னாவது? இந்த உலகம் பிரமத்திலிருந்து தோன்றியதன்று என்றால், அது தோன்றுவதற்கான முதற்காரணம், உனக்குத் தெரியுமாயின் அஃது இன்னது என்று சொல்லுவாயாக.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மேலும், இதுபற்றி விளக்கப் புகுந்தால். பிரமம் இயல்பாகவே பாசங்களினின்று நீங்கிய பொருள்; எந்தவிதத்துன்ப அனுபவமும் இல்லாதது. அஃது என்றும் பேரின்ப நிலையில் நிற்பது. இன்னும் தெளிவாகச் சொன்னால், மாயா கருவிகளோடு தொடர்புற்று உள்ள நீ, பிரமம் அன்று; நீ தனி ஒரு முதல், நான் என்னை பிரமமாகவே காண்கிறேன் என்று கூறுவாய் ஆகில், பிரமம் முற்றறிவு உடையதாக இருக்கையில், நீ அறியாமை வயப்பட்டு இருப்பதற்கு என்ன காரணம்?

நீ மாயா காரியங்களின் வசப்பட்டு, இவ்வுண்மையை அறியாமல் இருக்கிறாய். நீயும் பிரமமும் ஒரே முதல், வெவ்வேறு பொருளல்ல என்று நீ கூறுவாய் ஆயின், நீ கூறும் அந்த பிரமம் உன்னைப்போல், அறியாமை உடையதே ஆகும்.

இந்த நிலையில், நீ உன் மதக் கொள்கையைப் பிரமாணத்தை விட்டு, நிலைநாட்ட முயல்கின்றாய்; பிரமாணம் ஒன்று சொல்ல, நீ ஏதேதோ பேசுகின்றாய். பிரமாணம் என்பது, பிரத்தியட்சம்(காண்டல்), அனுமானம்(கருதல்), ஆகமம் (உரை) என்று மூன்று வகைப்படும். இவ்வாறு சொல்லப்பட்ட மூவகைப் பிரமாணங்களின் வாயிலாகப் பொருளின் உண்மையை அறிய முற்படுவோம். ஆயின் மனோவாக்குக்கு எட்டாத உன்னுடைய ''பிரமேயம்'' என்னவாக முடியும்?–இது பிரமேயத்தை மறுத்தது.

இனி, சித்தினிடத்து அசித்து தோன்றும் என்றதனை மறுக்கிறார். சித்து–அறிவுடைப் பொருள்; அசித்து–அறிவற்ற பொருள்–சடம்.

பொற்பிதிர் பிதிர்ந்தும் பொன்னேயாம், நின்
தற்பரம் அசித்தைத் தருமாறு என் எனச்
சிலம்பி நூல்தரு நலம்போல் தோன்றும்
என்றனை; அதுவும் தன்தொழில் அன்றியும்
ஒன்று அதன் இயல்பு உலகு ஓர் இயல்பு அன்று எனப்
பலம்இலை பழம்பூப் பாதவம் தரும்நீர்
திரை நுரை திவலை சிலதரும் இவைபோல்
தானே பலவாம் என நீ சாற்றினை;
சத்து அசத்து ஆகவும், சத்தினில் அசத்தின்
கொத்து உளதாகவும், கூறினர் இலரால்,
வித்து இலை கனி நனி விழுதால் தருநெறி
சத்து அலது ஒன்று தான் தரவேண்டும்
நெற்பதர் பலாலத்திற்கு உபாதானம் என்?
காரணம் இன்றிக் காரியம் பிறவா;
பாரிடை ஒரு படம் பண்ணவும் படுமே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

பொன்னும் அதிலிருந்து தோன்றும் அணிகலன்களும்போல, பிரமமும் அதிலிருந்து தோன்றும் உலகமும் என்றாய். அணிகலன்கள் பின்பு பொன்னோடு சேர்ந்து, பொன்னாகி நிற்கிறது. அதுபோல, இந்த உலகமும் பின்பு பிரமத்தோடு சேர்ந்து பிரமமாய் நிற்பதை யாரும் கண்டதில்லை. ஆகவே, சத்தாக இருக்கும் பிரமம், அசத்தாக இருக்கும் உலகத்தை எப்படித் தன்னிலிருந்து தோற்றுவித்தது என்று முன்பே உன்னிடம் கேட்டோம்; அப்பொழுது, சித்தாக இருக்கும் சிலந்தி, சடமாக இருக்கும் நூலைத் தன்னிடமிருந்து தோற்றுவித்தது போல, சித்தாக உள்ள பிரமத்திலிருந்து அசித்தாக உள்ள உலகம் தோன்றிற்று, என்று சொன்னாய். (சத்து – நிலையாக உள்ளது; அசத்து – நிலையற்ற பொருள்; சித்து – அறிவுடைப் பொருள்; அசித்து – அறிவற்ற பொருள் – சடம்)

சிலந்தி எப்போதும் சடமாயுள்ள நூலைத் தோற்றுவித்துக்கொண்டே இருக்கிறது; அஃது அதன் தொழில்; உலகத்தை பிரமம் அவ்வாறு எப்போதும் தோற்றுவித்துக் கொண்டு இருப்பதில்லை; அஃது அன்றியும், சிலந்தியினிடமிருந்து தோன்றுகிற நூல் ஒரே தன்மை உடையதாக உள்ளது; பிரமத்தினிடத்திலிருந்து தோன்றியதாகக் கூறப்படும் உலகம், அவ்வாறு ஒரே தன்மை உடையதாக இல்லையே என்று முன்பு நாம் சொன்னபோது, காய், இலை, பழம், பூ ஆகிய பல்வேறு விதமான பொருள்களை மரம் வழங்குவது போலவும், திரை, நுரை, திவலை, குமிழி ஆகியன நீரில் தோன்றுவது போலவும், பிரமத்திலிருந்து பல விதமான, உலகங்கள் தோன்றுகின்றன என்று உனது மதக் கொள்கையை நீ சொன்னாய்.

அறிவுடையதாக இருப்பதை, அறியாமை உடையது என்றும், அறிவுடைப் பொருளிலிருந்தும் அறியாமைப் பொருள்கள் தோன்றும் என்றும் நீ சொன்னபடி, புத்தர், சமணர் முதலானவர்கள் கூட சொல்லமாட்டார்கள். எனவே உன் மதம் பொருந்தாது.

இந்த உலகம் எப்படித் தோன்றியது என்றால், நுண்ணிய நிலையில் இருக்கும் வித்திலிருந்து இலை, பழம் மிகுதியாகவுள்ள விழுதையும் உடைய பரு நிலையில், பெரிய ஆலமரம் தோன்றுவதுபோல், நுண்ணிய நிலையில் இருக்கும் சடப்பொருள் ஆகிய மாயையிலிருந்து பரு நிலையில் பலவாய் இருக்கும் உலகம் தோன்றியிருக்க வேண்டும். அவ்வாறு நோக்காமல், நெல்லிலிருந்து வைக்கோலும்(பலாலம்) பதரும் தோன்றியதுபோலச், சித்திலிருந்து சடமான உலகம் தோன்றும் என்று கூறினால், நெல் சடப் பொருள் ஆகலின், அதன் நுண்ணிலையிலிருந்து வைக்கோலும் பதரும் தோன்றுவதற்கு நெல் முதற்காரணமாக இருக்கிறது என்பதை அறிவாயாக.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எனவே, தனது ஆக உடைய முதற் காரணத்திலிருந்து காரியம் தோன்றுமே அன்றி, அன்னிய காரணம் ஆகிய நிமித்த காரணத்திலிருந்து காரியம் தோன்ருது; அப்படித் தோன்றும் என்று நீ கூறுவாய் ஆயின், பருத்தி காரணமாகப் புடவை உண்டாகாமல், அன்னியப் பொருள் ஆகிய மண் காரணமாகப் புடவை உண்டாக வேண்டும். ஆகவே, சடம் காரணமாகச் சடம் உண்டாகுமே அன்றிச், சித்துக் காரணமாகச் சடம் உண்டாகாது. நீ கூறும் கொள்கை இப்படிதான் இருக்கிறது.

அந்தமில் பிரமம் அவித்தை காரணம் எனத்
தந்தனை; அவித்தை தான் எய்து உறுதல்
தன் இயல்பு என்னில், வன்னிதன் வெம்மையில்
சத்தினது இயல்பும், சத்தே அசத்து எனில்,
வைத்ததன் இயல்பு எனும் வழக்கு ஒழி அன்றியும்,
இருள்பொதி விளக்கு எனவரும் இருவிளக்கில்,
கருமை பயந்த பெருகு ஒளிதகும் எனில்,
தன் இயல்பு அன்று, அதன் உபாதி வசத்தால்
மன்னியது அன்றி மைதான் தனில் மாயாது
ஒன்ருன சுத்தன் அன்ரும் அன்றே;
ஆங்கு ஒரு காலத்து ஓங்கியது ஆயின்,
அந்தம் இல் அவித்தை வந்து அணைவதற்கு ஓர்
ஏது வேண்டும்..... ... ...

தெளிவுரை:

அறிவுடைப் பொருளாயும், என்றும் ஒருபடித்தாயும் உள்ள பிரமம், சடப்பொருளாயும், அழிந்துபோவதாயும் உள்ள உலகத்துக்குக் காரணம் என்று நீ சொன்னுய்; அறிவுடைப் பொருளாய் உள்ள பிரமத்திலிருந்து; சடமாய் உள்ள உலகம் தோன்ற வேண்டியதன் காரணம் யாது? உலகம் பிரமத்திலிருந்து தோன்றுவது, பிரமத்திற்கு இயல்பாய் இருப்பது என்று நீ சொல்வாய் ஆயின், அது பொருந்தாது.

நெருப்புக்குச் சுடுதல் இயல்பு ஆயினுற்போல, சித்துக்கு இயல்பு என்று நீ சொன்ன உலகமும் சித்தே (அறிவுடைப் பொருளே) ஆகவேண்டும். இந்த உலகம் சடம் என்பாய் ஆயின், என்றும் ஒரு படித்தாய் உள்ள பிரமத்தின் இயல்பை உடையது இந்த உலகம் என்று நீ சொன்ன வழக்குப் பொருந்தாது; எனவே, அதனை விட்டு விடு, மேலும், அவ்வாறு நீ சொல்வது, ஒளியை உடைய விளக்கு இருளைப் பொதிந்துகொண்டு நிற்கும் என்று கூறுவதுபோல் இருக்கிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சித்தாக உள்ள பிரமத்திலிருந்து, சடமாக உள்ள உலகம் தோன்றிற்று என்று நீ சொல்வது. பெரிய விளக்கின் ஒளியிலிருந்து, கருப்பாயுள்ள இருள் தோன்றியது என்று கூறுவதுபோல் இருக்கிறது, அவ்வாறு நீ சொன்னால், அது விளக்கின் இயல்பு அன்று; திரி, நெய் முதலியவற்றின் காரணத்தால் அஃது ஏற்பட்டது என்பதை அறிந்துகொள். மேலும் பிரமத்தில் தோன்றிய உலகம், மீண்டும் பிரமத்திலே ஒடுங்கும்; விளக்கில் தோன்றிய மை, மீண்டும் அந்த விளக்கிற் சென்று ஒடுங்காது. பிரமம் என்றும் தூயவனாக இருப்பவன்; ஒருபோதும் அசுத்தனாவனல்லன்; அப்படியிருக்க, அவன் இந்த மாயா கருவிகளோடும் கூடி இருக்க வேண்டுவானேன்? மாயாகாரியங்கள் ஒரு நிலையில் இந்த பிரமத்திலே வந்து கூடினவாயின், அவை இந்த பிரமத்தை வந்து கூடுதற்கு ஒரு காரணம் வேண்டும். மாயா காரியங்களுக்கு முடிவு இல்லை; எனவே, அவை பிரமத்தை வந்து கூடினது எப்படி?

. . .   . புயல் இயல்பு எனின், வீடு
ஓத வேண்டா; ஒழிந்தோரினும் உறும்
களங்கம் அது அற உறும்; அவித்தைதன் கவித்தல்
விளங்கிய பிரம விளையாட்டு ஆயின்,
அவித்தை என்பது ஒன்று அன்னியம், தன்னில்
உதிக்கும் என்ற முன் உரையும் மறந்தனை;
நுண்ணூல் குடம்பை நுந்துழிபோல், உட்
படுநெறி அதனால் விடுநெறி இலதால்
தலைமையும் அறிவும் இலதுஎன்? அவித்தையை
விடுத்து எடுத்து ஆணரும் வேற்றோர் அன்றே;
ஒளிகொள் தாமிரம் குளிகை பெற்று ஆங்கு அதன்
அவித்தையை வித்தை தவிர்க்கும் என்று உரைக்கில்
நித்தன், அறிவன், சுத்தன் என்று உரைத்த
வித்தகம் என்? நீ வித்தையும் வேறு என்று
எம்மனோரில் ஒருவன் நின் இறை
அம்ம! சைவந்தவன் நீ அன்றே

தெளிவுரை:

நின்மலமாய் இருக்கின்ற வானத்தை, மேகம் வந்து மறைத்ததுபோல, தூய்மையாய் உள்ள பிரமத்தையும் மாயா காரியங்கள் இயல்பாக வந்து கூடுகின்றன; இதைத் தவிர இதற்கு வேறு ஒரு காரணம் வேண்டுவதில்லை என்று நீ கூறுவாயாயின், மோட்சம் என்று ஒன்று உண்டு என்று நீ கூறவேண்டுவதில்லை. ஏனென்றால், எல்லா மாயா காரியங்களையும் நீக்கி, பழைய தூய்மையைக் கூடினவர்கள் இடத்தும், இவை இயல்பாகவே வந்து பொருந்தும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''அப்படிக் கருதக்கூடாது; பிரமத்துக்கு ஞானம் ஏற்படத்தக்க மாயா சரீரம் கூடியது. பிரமத்தின் திருவிளையாடல்களில் ஒன்று'' என்று நீ கூறினால், அது பொருந்தாது. விளையாடுகிறவர்களுக்கு விளையாடப்பெறும் பொருள், வேறு ஆயினாற்போல, பிரமத்தின் விளையாட்டு ஆகிய மாயா சரீரமும் பிரமத்துக்கு வேறாய் இருப்பது ஒன்று ஆகலின், பிரமத்திலே மாயை தோன்றி, பிரமத்தை மறைக்கும் என்று நீ முன்பு சொன்னதை மறந்துவிட்டாய்.

பட்டுப் பூச்சி தன்னிடத்தில் தோன்றும் மெல்லிய நூலினாலே தனக்குக் கூடாகப் பண்ணித்தான், அதனுள் புகுந்து, பின்பு அதிலிருந்து வெளிவர முடியாமல், அக் கூட்டிற்குள்ளேயே இருந்து செத்துவிடுகிறது. அதுபோல, பிரமமும் மாயா சரீரத்திற்குள்ளே, விளையாட்டாக வந்து புகுந்து, அந்த சரீரத்தை விட்டு வெளியே வர இயலாமல் நிற்பதால், அந்த பிரமத்திற்கு எல்லா முதன்மையும் பேரறிவும் இல்லை என்று சொல்.

பாசக் கட்டு காரணமாக, மாயா சரீரத்தைத் தானாக விட்டு நீங்க இயலாத பிரமம், நம்மையெல்லாம் தனக்கு அடிமையாக ஆண்டு, பாவக்குழியிலிருந்து எடுத்துக்காக்கும் என்று சொல்வது எப்படிப் பொருந்தும்? மாயா சரீரத்தினுள் கிடக்கும் அது பிரமம் ஆகாது.

'அப்படி இல்லை ; ஒளியோடு கூடிய செம்பு, இரத குளிகையோடு கூடிய போது, அதன் களிம்பு நீங்கிப் பொன், ஆவது போல் பிரமத்திற்கு ஏற்பட்ட சரீரத் தொடர்பு, அதனிடத்தில் உள்ள பகுத்துணரும் அறிவினால் (விவேக் கியானம்) நீக்கியதும் அந்த பிரமம் தூய்மை ஆகும் என்று நீ கூறுவாய் ஆயின், இவ்வாறு அசுத்தமாய் இருக்கிற பிரமத்தை முன்பு நீ, என்றும் உள்ளவன், பேரறிவுடையவன், நின்மலன் என்று சாமர்த்தியமாகப் பேசினாயே, அஃது ஏன்?

நீ விவேகம் உடையது என்று சொன்ன அந்த பிரமம் வேறு; அவித்தையோடு(அறியாமை) கூடிய இந்த பிரமம் வேறு என்று சொல், அந்த பிரமமும் இந்த பிரமமும் ஒரே பொருள்தான், வேறன்று என்று நீ சொல்வாய் ஆயின், உன் கடவுள் பந்த பாசங்களுக்கு உட்பட்ட எங்களில் ஒருவனாக இருக்கவேண்டும். நாம் சொல்வதை கவனமாகக் கேள். ''சீ இவனா'' என்று பிறர் இகழும்படி பிரமத்தை அவித்தையோடு தொடர்பு படுத்திப் பேசுகின்ற நீயே, அவித்தைக்கு உட்பட்டிருப்பவன் என்பதை அறிவாயாக (சை வந்தவன் – 'சீ' என்று இகழப்படுபவன்) இதுவரை ''பிரிமிதி'' யை மறுத்துக் கூறப்பட்டது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பன்மணி பசுநற் பாத்திரம் எனவும்
நன்னூல் பால் நீர் நற்கதிர் எனவும்
உடலையும் உணர்வையும் உவமித்தனை யேல்
தடமணி சரடொடு தாம் கூடலவே
உணர்வு உணர்வு ஒழியின் உலகு உணர்வுறின், நின்
பாலும் பசுவும் சாலும் சாலக்
கலம்பல அன்றிச் சலம்பல இலதுஎனக்
காணுநர் இன்றி, வீண் நீ விளம்பினை
ஆடியுள் நிழல்போல் கூடுதல் கூறின்
தன் நிழல் கொண்டு தர்ப்பணம் சலிக்கின்,
மன்நிழல் கொண்டு உடல் வந்த அகன்றிடுமே;
மன்அயக் காந்தம் என உடல் பிரம
சந்நிதி அளவில் சலித்திடும் ஆயின்,
அகண்டிதம் சன்னதி அலது இலது எவையும்
நடந்திட வேண்டும் கிடந்திடப் பெறுவே.

தெளிவுரை:

இரத்தினங்கள் பலவாயிருப்பினும், அதில் கோக்கப்பட்ட சரடு ஒன்றாக உள்ளது; பசுக்கள் பலவாக இருப்பினும், அவற்றிலிருந்து பெறப்படும் பால் ஒரு தன்மை உடையதாகவுள்ளது; பாத்திரங்கள் பலவாக இருப்பினும், அவற்றில் பிரதிபிம்பம் செய்துகொண்டுஇருக்கும் கதிரவன் ஒன்றே; கூவல், ஆழி, குளம், சிறு குழி, வாய்க்கால் ஆகியன பலவாக இருப்பினும், அவற்றிலுள்ள தண்ணீர் ஒரு தன்மை உடையது; அவ்வாறே யோனி பேதங்களாக உள்ள உடல்கள் பலவாக இருப்பினும், அவை அனைத்திலும் உள்ள பிரமம் ஒன்றே என்று உடல்களுக்கும் பிரமத்திற்கும் உள்ள தொடர்பு பற்றி உவமை சொன்னாய்.

அப்படியானால், மணிகளைச் சரடோடு கோத்த ஒருவன் இருப்பதுபோல், உன் பிரமத்தையும் உடல்களோடு கூட்டிய ஒருவன் இருக்கவேண்டும்; அஃது அன்றியும் உனது பிரமம் அறிவற்றதாயும், அதுகூடி நின்ற உடல்கள் அறிவுடையனவாகவும் இருக்குமாயின் நீ, பாலையும் பசுக்களையும் உவமை சொன்னது பொருந்தும்!

மேலும், பாத்திரங்களில் தரம் வேறுபாடு உள்ளது. கதிரவனில் வேறுபாடு இல்லை என்றும், கூவல், ஆழி முதலியவற்றில்தாம் வேறுபாடு உள்ளது. நீரில் வேறுபாடு இல்லை, என்றும் ஒருசிலர் கூறுவதைக் கொண்டு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முரணான எடுத்துக்காட்டுக்களை நீ கூறினாய். எனவே, நீ சொன்னது பொருந்தாது.

கண்ணாடியில் நிழல் தோய்வற நிற்பதுபோல, உடம்பில் பரபிரமம் தோய்வு அற நிற்கும் என்று நீ கூறியவாறே நாம் சொல்லுபோது, கண்ணாடியில் நிற்கும் நிழல் உருவத்தை முக்கியமாகக் கொண்டு, கண்ணாடி அசைந்தால், பரபிரமத்தின் நிழல் உருவை (பிரதிபிம்பம்) முக்கியமாகக் கொண்டு, இந்த உடல் கூடியும் பிரிந்தும் நிற்கும். இவையெல்லாம் பொருந்தா ஆகலின், இவ்வாறு கூறுவதில் பொருள் இல்லை.

காந்தம் விகாரம் அற்று நிற்க, அதன் முன்பு நிலையான இரும்பு விகாரப்படுவதுபோல, பிரமம் விகாரம் அற்று நிற்க, அதன் சந்நிதியில் உடல் மட்டுமே பிறப்புக்கும் இறப்புக்கும் உட்படுகிறது என்று கூறுவாய் ஆயின், அது பொருந்தாது. பரபிரமம் வியாபகப் பொருள் ஆகலின், அதன் சந்நிதி இல்லாத இடம் ஓரிடமும் இல்லை. எனவே, அதன் சந்நிதியில் உள்ள குடம், துணி முதலியன அனைத்தும் பிறப்பு இறப்புக்கு உட்பட வேண்டும். அதனைக் குறித்துச் சிந்திக்காமல், உடல்கள் மட்டும் பிறப்பிறப்புட்படும், குடம், துணி முதலியன பிறப்பிறப்புட்படா என்று கூறுவது பொருந்தாது.

காந்தத்து இரும்பு காட்டுநர் பெறில், அயம்
சேர்ந்திடும் நீக்கும் செயல் அதற்கு இலதே
கனாத்துயர் கயிற்று அரவு எனாச்சில தொடுத்தனை;
கனவின் பயனும் நனவின் பயனும்
வினையின் பயன் அவை பொய் என வேண்டா;
உடல் மாறாட்டக் கடனது கருதுக
உற்ற புற்றும் மற்று அதில் கயிறும்
உடலும் கூடமுச் சடம்என அறிதி;
அறிவு கயிறு என்று அறியாது அன்றே
அச்சம் அது அடைதல் கொச்சமை உடைத்தே;
இன்னும் அக்கனவில் இருள் உறு கயிற்றில்
பின்னும் நின்பிரமம் பிரமித் திடுமே;
துன்னிய வினையில் செம்மலர்ப் பளிங்கு எனத்
தானும் தகைமை யானால் மலர் என
ஒருபயன் அன்றிப் பலபயன் மரீஇயது
இருவினை தருபயன் என நனி வேண்டில்
ஆண்ட வித்தையும் அவித்தைகொடு ஆக்கையும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஈண்டு இருவினையும் இயம்பினே; பரத்தைக்
கள்வரைப் பிணிக்கும் காவலர் என முயல்
தொல்வினைத் துடக்கில் தோன்று உடல் இறையிட்டு 150
இருவினை ஊட்டும் அருள் உறும் எம்மான்.

தெளிவுரை:

காந்தமும் இரும்பும் கூடி இருந்தாலும், அவை தாமாகத் தொழிற்பட மாட்டா. அவற்றை நேருக்கு நேர் அமையும்படி யாராவது செய்யும்போதே இரும்பு காந்தத்தைப் பொருந்தி நிற்கும். எனவே, உனது பிரமத்தையும் உடலையும் கூட்டி வைப்பதற்கு, வேறொரு கர்த்தா உண்டு என்பதைக் கொள்வாயாக. மேலும், காந்தம் இரும்பைத் தன்னுடன் இணைக்கத்தான் முடியுமே அன்றி, அதனைப் பிரிக்க அதனுல் இயலாது. எனவே, உனது இந்த இரும்பு எடுத்துக்காட்டு பொருந்தாது.

கனவில் அஞ்சத்தக்க நிகழ்ச்சிகளைக் கண்டவன் விழித்து எழுந்தபோது, அது பொய் என்பதை அறிகிறுன்; அதுபோல, இராப்பொழுது புற்றின் அருகே கயிறு கிடப்பதைக் கண்டு, அது பாம்பு என்று எண்ணி அஞ்சியவன், விடிந்ததும் அது பாம்பு என்று எண்ணியது பொய் என்பதை அறிகிறுன்; அவ்வாறே, இன்பதுன்பங்களால் ஏற்பட்ட அனுபவங்கள், அந்த பிரமத்திற்கு உண்டாகாது என்று சொன்னுய்.

கனவு நிலையில் நுண்ணுடலோடு கூடி ஒருவன் சத்தாதி விடயங்களை அனுபவிக்கிறுன்; நனவு நிலையிலும் பருவுடலோடு கூடி, சத்தாதி விடயங்களை அனுபவிக்கிறுன். இரண்டும் அவனது முன்வினைப் பயன் என்று எண்ணுமல், நனவு நிலையில் அனுபவித்தது மெய், கனவில் அனுபவித்தது பொய் என்றும் நீ சொல்ல வேண்டுவதில்லை. நனவு நிலையில் பருவுடலோடும், கனவில் நுண்ணுடலோடும் கூடி அனுபவிக்கும்; எனவே, இரண்டு நிலைகளிலும் உடல் வேறுபாடுகள் உள்ளது என்பதை அறிவாயாக.

புற்றரவு பற்றிய செய்தியில் வரும், இரவு நேரத்தில் இவன் சென்ற புற்று, அதனருகில் கிடந்த கயிறு, இவனது உடல் ஆகிய இம் மூன்றும் சடப்பொருள்கள் என்பதை நீ அறிவாய். அறிவுடைப் பொருள் ஆகிய பிரமம், கயிற்றைக் கயிறு என்று அறிய மாட்டாமல் பிரமிக்கும் ஆயின், அந்த பிரமத்தை அறிவுடைப் பொருள் என்று கூற முடியாது. கயிற்றைப் பாம்பு என்று அஞ்சும் ஆயின், அந்தப் பிரமத்தைக் கர்த்தா என்று சொல்ல முடியாது.

இன்னும் ஒன்று; கனவில் கண்ட தீமையான நிகழ்ச்சியைப் பொய் என்றும், இரவில் கண்ட கயிறு, பாம்பு அன்று என்றும் அறிந்த உனது பிரமம், மீண்டும் இவ்வாருன நிகழ்ச்சிகளைக் காணும் போதெல்லாம் அஞ்சுவது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பொருந்துமா? எனவே, இந்த உடம்போடு கூடி இப்படி மயங்கி மயங்கி நிற்பது பிரமம் அன்று.

மேலும், சிவந்த மலரோடு சேர்ந்திருக்கும் பளிங்கு, செந்நிறம் காட்டுகிறது; ஆயினும் அதன் தன்மையைப் பளிங்கு இழப்பதில்லை. அதுபோல, பிரமமும் வினைப் பயனை அனுபவித்தாலும், தன் தன்மை மாறாது இருக்கும் என்று நீ கூறுவாய் ஆயின், வினைப் பயன்கள் பலவாக இருப்பதால், பிரமமும் நல்வினை தீவினைப் பயன்கள் ஆகிய இன்ப துன்பங்கள் பலவற்றை அனுபவிக்க வேண்டும் என்பதாக முடியும்.

இந்நிலையில், பிரமத்தை அடிமையாக ஆண்டு, காத்து வருகின்றதொரு பகுத்தறிவும் அறியாமையோடும் கூடிய உடல் உண்டு என்கிறாய்; உன் பிரமத்திற்குப் பல்வேறு நல்வினை தீவினைகளும் உண்டு என்கிறாய், அவ்வாறாயின், களவு செய்த கள்ளர்களைச் சிறையில்அடைத்து, அக் களவுக்கு ஏற்ற தண்டனைகளை வழங்கும் மன்னனைப் போல, முற்பிறவிகளில் செய்த வினைகளால் ஏற்பட்ட உடல் ஆகிய சிறையில், உன்னுடைய பிரமத்தை இட்டு, நல்வினை தீவினைப் பயன்கள் ஆகிய இன்பத் துன்பங்களை அனுபவிக்குமாறு செய்பவன், எல்லா உயிர்களுக்கும் அருளைப் பொழியும் எம் கடவுள் என்பதை அறிவாயாக.

அருவினை உடற்கண் அவத்தைகள் உரைத்தனை
ஆர் உறுபவர் பரம் அகண்டிதம் அடங்காது
ஓர்விலது உடல் சடம் உறுநெறி யாது என
மன்னிய கரண மாறாட்டத்தில்
பன்னினம் என்னில் இவையோ பரமோ
முதலியது ஆயின், இவை பிறழ்வு எய்தாது;
இவை எனில் உனது மொழி பழுது உளதே;
உடல்படு பிரமம் உறுமேல் சாளரத்து
இடத்தகும் உறுவிரல் நுதி அளி எறிதுயர்
அங்குலிதானே அருந்திடில் உடற்கண்
தங்கிய அறிவு தனித்து உறும் அன்றே;
தற்பண நிழற்கண் குற்றி பாய்ந்து அற்றால்
நற்கணில் துயரம் நணுகாத் தகைத்து எனில்
நின்மொழி விரோதமும் காட்சி விரோதத்
தன்மையும் உறும்அவை தவறுஇல ஆகா
யாம் உடைப் பதிவகை யாவரும் பலகலை
சொல்லுதல் எளிது அரிது அத்தொழில் புரிவுஎனப்
புல்லிய பழமொழி புதுக்கினை அன்றே;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அக்கண்டிதம் என நீ பகர்ந்தமை தனக்குப் 170
பந்தம் இது எனத் தந்தமை கருதில்
வானில் நடக்கும் காலினைப் பிடித்துப்
பருவிலங்கு இட்ட ஒருவன் நீ அன்றே.

தெளிவுரை:

அரிய வினைக்கு ஈடாக எடுக்கப்பட்ட உடலில், மூன்று அவத்தைப்படும் என்று, நீ மேலும் கூறினாய். அந்த மூன்று அவத்தைகளையும் அனுபவிக்கிறவர் யார்? பரபிரமம் முழு நிறைவு உடையது ஆகலின், நனவு, கனவு, உறக்கம் என்னும் அவத்தைகளில் அஃது அடங்காது. உடல் சடம்; எனவே, அந்த அவத்தை எப்படி நிகழ்கிறது என்று நாம் கேட்டபோது நிலையான அந்தக் கரணங்கள் பிரிந்தபோது, ஏற்பட்ட மயக்கத்தையே அவத்தை என்று சொல்கிறேன் என்று நீ கூறுவாய் ஆயின், இந்த உடலுக்கு முதன்மை உடையது பரபிரமமோ அல்லது அந்தக்கரணமோ? பரபிரமம் முதன்மை உடையது ஆயின், அந்த பரபிரமம் நிற்கையில், இந்த அந்தக்கரணங்கள் நீங்க மாட்டா; அந்தக்கரணமே முதன்மை உடையது என்பாய் ஆயின், 'பரபிரமம் எல்லா முதன்மையும் உடையது' என்று வேதம் சொன்னது பழுது ஆகிவிடும்.

உடலுக்குள் அகப்பட்டு நிற்கும் பிரமமே அவத்தை உறுகிறது என்று கூறுவாய் ஆயின், அது பொருந்தாது. அதற்கு விளக்கம் வருமாறு:—

பலகணி (சன்னல்) வழியாக நீட்டிய விரலில், ஒரு வண்டு கொட்டியதும், அதனால் உண்டாகும் கடுப்பு, நீட்டிய பகுதி அளவிலே நின்று விடுமாயின், நீ கூறியது பொருந்தும். ஆனால் இந்தக் கடுப்பு உடல் முழுவதும் பரவுகிறது; ஆகவே, உடலில் படும் துன்பம் பிரமம் முழுவதும் பரவுதல் வேண்டும். அவ்வாறாயின் உடலில் நிற்கும் பிரமமே அவத்தை உறும் என்று நீ சொல்வது பொருந்தாது.

மேலும், கண்ணாடியில் தோன்றிய நிழலின் கண்ணில் ஒரு குச்சியைக் கொண்டு குத்தினால், கண்ணாடிக்குக் கேடு வருமே அன்றி, உண்மையான கண்ணுக்குக் கேடு வராது; அதுபோல, உடலில் தோன்றும் பிரமத்தின் பிம்பத்திற்கு வரும் இன்பதுன்பங்கள், உடலுக்கு ஏற்படுவனவே அன்றி, பிரமத்திற்கு இல்லை என்று நீ கூறுவாய் ஆயின், முன்பு இன்பதுன்பங்களை அனுபவிப்பது அறிவே என்று நீ சொன்னதற்கு மாறாக, இப்பொழுது உடலே அவற்றை அனுபவிக்கும் என்று பேசுகிறாய். இவ்வாறு நீ பேசுவது, சுருதிக்கும் அனுபவத்துக்கும் விரோதமாகும். எனவே, அது முற்றிலும் தவறு ஆகும்.

ஒரு பொருளை நிலைநாட்டும் பொருட்டுத் திருவள்ளுவப் பெருந்தகை கூறியருளிய

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்''

என்னும் திருக்குறளுக்கு நீ இப்போது, புதிய புதிய வடிவம் கொடுத்துவிட்டாய்!

பரபிரமம் முழு நிறைவு உடையது என்று முன்பு நீ சொன்ஞய்; அதற்கு மாருக பரபிரமத்திற்கு மாயா உபாதிகள் உண்டு என்று இப்போது கூறுகிருய். இது, விண்ணில் வீசும் காற்றைப் பிடித்து, அதற்குப் பெருத்ததொரு விலங்கு இட்டான் ஒருவன் என்று கூறுவது போல் இருக்கிறது. இது பிரமாதா வினை மறுத்தது; இஃது அவனது பெத்த நிலை ஆகும்.

பந்தம் அது அகல முந்து விவேகம்
வான்வளி எனத் தனில் தானே தோன்றின்,
முன்பு உளதாயின் மயங்காது, இலது எனில்
பின்பு உள்து ஆகாது; இலது உளது எனில், வெளி
மலரது தரும் அனல் மரக்கண் இன்று ஆகித்
தருவது தரும் எனில் தானே தோன்ரு
விறகின் உதித்த கனல் தகும் ஆயின்
அவித்தையின் உதித்த வித்தை அம்மரத்து
உதித்த விவேகம் வித்தை என்று உரைத்த
வெந்தழல் அனைய விவேகம் அது உதித்த
இந்தனம் அனைய இறையில் அன்று அற்றே;
இற்படப் பிரிப்பின் மெய்ப்படும் எவற்றையும்
இது அன்று, இது அன்று எனக் கழிகாலை
அதுவே தானே ஆயினது என்றனை;
வித்தை முன்னர் அவித்தையும் அவித்தைமுன்
வித்தையும் நில்லா வியன்ஒளி இருள்என
இருள் அல ஒளிக்கும் ஒளியல இருட்கும்
ஒருகாலத்தும் ஒரு பயன் இலதால்
இரண்டையும் நுகரும் முரண்தரு விழிஎன
வித்தையும் அவித்தையும் உய்த்தது ஒன்று உளதே.

தெளிவுரை:

(இந்த இடத்தில் மாயாவாதியின் முத்தி மறுக்கப்படுகிறது).

மாயா பந்தம் ஏற்பட்ட பிரமத்திற்கு, அது நீங்குவது என்பது வானில் உள்ள மேகங்களைக் காற்று தோன்றிச் சிதற அடிப்பது போல் ஆகும் என்ருய்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வானில் காற்று இருப்பதுபோல, பிரமத்திலே முன்பே சிறந்த அறிவு (விவேக்கியானம்) இருக்குமாயின், பிரமத்திற்கு இடையில் மயக்கம் ஏற்படுவதற்குக் காரணம் இல்லை. இந்தச் சிறந்த அறிவு பிரமத்திற்கு முன்பே உள்ளதன்று. இடையில் ஏற்பட்டது என்று நீ கூறினால், முன்பு இல்லாதது பின்பு ஒரு நிலையில் உண்டாகாது; முன்பு இல்லாத ஒன்று பின்பு உண்டாகும் என்பாய் ஆயின், அஃது ஆகாயத்தில் ஒரு மலர் உண்டாயிற்று என்று கூறுவதைப் போல் ஆகும்.

அவ்வாறின்றி, விறகில் முன்பு இல்லாத நெருப்பு, தீக்கடை கோலினால் கடைந்தபோது உண்டாவது போல், பிரமத்தில் சிறந்த அறிவு தோன்றும் என்று நீ கூறுகிறாய்; அவ்வாறாயின் விறகில் கோலை வைத்துக் கடைந்ததால் நெருப்பு உண்டானது போல, உனது பிரமத்திலும் வேறு ஒருவன், ஞானத்தைத் தோற்றுவிக்கவேண்டும்; எனவே பிரமஞானம் தானே தோன்றாது என்பதாக முடியும்.

அறியாமை (அவித்தை) ஆகிய பெத்த நிலையில் தோன்றிய விவேகம், விறகினில் தோன்றிய நெருப்புப் போன்றது என்று கூறுவாய் ஆயின், ஞானம் (வித்தை) தோன்றியது என்று நீ சொல்வது, அந்த விறகில் தோன்றிய நெருப்பைப் போன்றதே என்பதாகும்; ஞானம் தோன்றிய இடம் விறகினைப் போன்றது ஆகும். எனவே ஞானம் தோன்றியது பிரமத்திலே என்று சொன்னது, மயங்கிய நிலையிலேயே ஆகவேண்டும். இந்த எடுத்துக்காட்டு பொருந்தாது ஆகலின், நீ சொன்னது பொருளாகாது.

மேலும், வைக்கோல் வேய்ந்த ஒரு வீட்டின் வைக்கோல், கழி முதலிய அதன் உறுப்புக்களையெல்லாம் பிடுங்கி எறிந்தால் வீடு என்பது இல்லை ஆதல் போலவும், புடவை ஒன்றில் உள்ள ஒவ்வொரு இழையையும் பிய்த்து எறிந்தால், புடவை இல்லை ஆயினாற் போலவும், எல்லா உறுப்புக்களையும் இது நான் அல்லேன், இது நான் அல்லேன் என்று கழித்து வந்தால் பிரமம் தானே வேறாய் இருந்தது என்பது விளங்கும் என்று கூறினாய்.

அறிவு ஆகிய பிரமத்தின் முன் அறியாமை ஆகிய உலகம் நில்லாது; அறியாமையை உடைய உலகின் முன், அறிவு ஆகிய பிரமம் தோன்றி நில்லாது. அஃது எது போல எனின், கதிரவனது ஒளியின் முன் இருள் நில்லாதது போலவும், இருளின் முன் கதிரவனது ஒளி நில்லாதது போலவும் எனக் கொள்க. இருள் இல்லாத முழுமையான ஒளிக்கும், ஒளி இல்லாத முழுமையான இருளுக்கும், ஒரு காலத்திலும் இவற்றிற்கு ஒரு பயனும் உண்டாகாது.

அப்படி இருக்கும்போது இருளோடு கூடி இருளையும், ஒளியோடு கூடி ஒளியையும் அனுபவித்து இரண்டும் ஆகாத கண்போல ஒரு பொருள் உள்ளது; அறிவு ஆகிய பதியோடும் கூடி, இது பதி என்று அறிந்தும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறியாமையாய் உள்ள பாசத்தோடும் கூடி, இது பாசம் என்று அறிந்தும் அவை இரண்டும் அல்லாமல், பசு என்று தனியே உள்ள ஒரு பொருள் உண்டு என்பதை அறியாவாக.

தானே தானும் ஆனால் பயன் என்?
தன்னில் தன்னைத் தானே காணின்
கண்ணில் கண்ணைக் காணவும்படுமே?
தன் நலம் அதனைத் தானே நுகரும்
என்னின் முன் நலம் எய்தாது இருந்தது என்?
கட்டி போல் எனக் கதறினை; இன்பம் வந்து
ஒட்டியிடும் வித்தை உடையை ஆயிடினே
''தத்துவமசி'' என வைத்த முப்பதத்திற்கு
ஒன்றே பொருள் என்று, அன்றே பகர்வது
நீ புலி ஆயினை என்று ஆங்கு உணரில்,
ஆயினை என்றதும், ''ஆகு'' உவமைத்தால்
நோய் ஆயினம் எனல், ஆயாய் என்றால்
அகமே பிரமம் ஆயினது என்றால்
சகமே அறியத் தான் வேறு அன்றே
உண்மையில் சலம் இலம், உடல் சலம் சலம் உறும்
வெண்மதி போல விளங்கினம் என்றனை;
அசலன் ஆகிச் சஞ்சல சலத்துச்
சலனம் மேவினம் என மதி காண
வேண்டும் அது அன்றிக் காண்பவர் பிறரேல்
ஈண்டு உனது ஏகம் என் செய்தது? இயம்புக.

தெளிவுரை:

இந்த பிரமம் தானே, பிரமம் ஆனதால், இந்த பிரமத்துக்கு ஏற்பட்ட பயன்தான் என்ன? பிரமம், தன் இயல்பைத் தானே தன்னிடத்தில் காணுமாயின், கண் தனது வடிவத்தைத் தானே தன்னிடத்தில் காணும் என்று சொல்லவேண்டுமே? அது நடைமுறையில் இல்லையே? ஆதலால், பிரமம் தன்னில் தன்னைக் காணும் என்று நீ சொன்னதில் பொருள் இல்லை.

மேலும், பிரமம் தன்னிடத்தில் உண்டாகும் இன்பத்தைத், தானே அனுபவிக்கும் என்று நீ சொல்வாய் ஆயின், பிரமம் மாயாபந்தத்தோடு கூடுவதற்கு முன்பு தன் இன்பத்தைத் தானே அனுபவிக்கவில்லையா என்று நாம் கேட்டதற்கு, கரும்பு தன் சுவையைத் தான் அறியாதது போல பிரமமும் தன் நன்மையைத் தான் அறியவில்லை என்று கூறினாய். உண்மையிலேயே, நீ ''பசு''

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்னும் தனி ஒரு முதலாக இருந்து, உன்னைவிட்டுப் பாசம் நீங்கிய நிலையில் பதியோடு கூடுவதனாலேயே உனக்குப் பேரின்ப அனுபவம் ஏற்படுகிறது என்பதை அறிவாயாக.

"தத் – அது, துவம் – நீ, அசி – ஆகின்றாய்" என்னும் மூன்று சொற்களை உடைய மகா வாக்கியத்தின் கருத்து, "பொருள் ஒன்றே" என்பது அன்று; அதற்குப் பொருள் என்ன என்பதை விளக்குகிறோம்:– ஒருவன் மற்றொருவனது வீரத்தைக் கண்டு , 'நீ புலி ஆயினை' என்று சொன்னால் புலியின் வேறாக நீ இல்லை என்பது கருத்து ஆகாது; அஃதாவது, புலி வேறு, நீ வேறு; ஆயினும் புலியின் வீரம் உன்னிடம் உள்ளது என்பதே கருத்து. அந்த வாக்கியத்தில் "ஆயினை" என்று இருப்பது உவமையைக் குறிக்கும்.

மேலும், ஒருவன் "நான் நோயாய்க் கிடந்தேன், என்று சொன்னால் "அவன் நோயின் வேறு அல்லன்" என்பது கருத்தன்று. நோய் வேறு, அவன் வேறு என்பதுதானே உண்மை? அவ்வாறே "நானே பிரமம் ஆக நின்றேன்" என்று மகாவாக்கியம் சொல்கிறதால், ஒருவர் இருவர் மட்டும் அன்றி, இந்த உலகம் முழுவதும் அறியத்தக்க நிலையில் இவன் அந்தப் பிரமத்திற்கு வேறு என்பதை அறிவாயாக.

நீர் அசையும்பொழுது, சந்திரனும் அசைந்தாற்போல இருப்பினும், உண்மையில் சந்திரன் அசையவில்லை என்றாற்போல முத்தி நிலையில் அது விளங்கும் என்று நீ சொன்னாய். அசைவு இல்லாமல் இருக்கும் ஒருவன், ஆற்றில் ஓடுகின்ற நீரின் அசைவைக் கொண்டு, தானும் அசைவதுபோல இருந்ததை விட்டு தனக்கு அந்த அசைவு இல்லை என்று அந்தச் சந்திரன் காணவேண்டும்; அந்நிலையில் நீ சொன்ன எடுத்துக்காட்டு பொருந்தும்.

அதனை விடுத்து, இந்தச் சந்திரனுக்கு அசைதல் இல்லை, தண்ணீருக்கே அசைதல் என்று, அந்தச் சந்திரனைத் தவிர்த்து, வேறு ஒருவன் கண்டு சொன்னாற்போல, அந்த பிரமத்துக்குச் சலனம் இல்லை, உடலுக்கே சலனம் என்று. அந்த பிரமத்தைத் தவிர்த்து, வேறு ஒருவன் கண்டு சொல்ல வேண்டும். அப்படியானால், "பிரமம் ஒன்றே உள்ளது" என்று நீ சொன்னது என்ன வாயிற்று? இதற்குப் பதில் கூறு. (இஃது அவனது சீவன் முத்தியை மறுத்தது).

உடல் விடக் கடத்துள் படு வெளிபோல் எனில் 215
விட்டு என் பெற உடல் பட்டு என் படமற்று
இகல் அற ஒருவன் இவ்வகை தெளிய
அகிலமும் முத்தி அடைந்திட வேண்டும்
அறிந்தோர் முத்தி அடைந்தோர் ஆயின்,
பிறிந்தோர் உயிர் பல பேதத்து அன்றே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

குடத்திற்குள் இருந்த ஆகாயம், குடம் உடைந்த பொழுது, குடத்துக்கு வெளியே உள்ள பர ஆகாயத்தில் கலப்பது போல் உடலில் இருந்த பிரமம், உடலை விட்டு நீங்கியபொழுது, அகண்ட பிரமத்தோடு கலந்து ஒன்றுபட்டு நிற்கும். இதுவே பரமுத்தி என்று நீ சொன்னாய். அவ்வாறாயின் குட ஆகாயம், குடத்தில் இருந்தபோது எந்த ஒரு துன்பத்தையும் அனுபவிக்கவில்லை; குடம் உடைந்தபோது அது வெளிப்பட்டு பராகாயத்தோடு கலந்து ஒன்றுபட்டு நிற்கும்போது, எந்த ஒரு துன்பத்தையும் அனுபவிக்கவில்லை. உடலில் இருந்தபோது துன்பத்தையும், உடலை விட்டு வெளியேறியபோது இன்பத்தையும் அனுபவிக்கும் இவ்வுண்மை பொருந்துமாறு இல்லை. எனவே, உனது குடாகாய பராகாய உவமை ஏற்கத் தக்கதன்று.

மேலும், மாறுபாடு அற்ற நிலையில், ஒருவன் ''நான் பிரமம்'' என்று தெளிந்தபோது, எல்லா அறிவுகளும் ஒன்று என்று சொல்வதால், உலகில் உள்ள எல்லாரும் முத்தி இன்பம் அடையவேண்டும். பிரம ஞானம் உடையவர்கள் முத்தியை அடைவார்கள், அல்லாதவர்கள், முத்தியை அடையமாட்டார்கள் என்று கூறினால், அறிந்தவர்கள் என்றும், அறியாதவர்கள் என்றும் இருப்பதாகச் சொல்வதால், பிரமம் ஒன்று மட்டும் அன்றி, பிரமத்தின் வேறு ஆகிய உயிர்களும் பல்வேறு வகைப்பட்டு உள்ளன என்பதை நீ கொள்வாயாக. (இது பரமுத்தியை மறுத்தது)

கன்ம காண்டம் காரணமாக
மன்னும் விவேகம் என்னில், அவித்தைக்கு
எது காரணம்? ஓதினை இல்லை;
இதற்குக் காரணம் விதித்தல் வேண்டின்றே
அரணியில் உதித்த கனல் அவை கவர்வு என
விரதத்து உதித்த விவேகம் அது அழித்தல்,
வருந்தி ஆயினும் திருந்திய வேத
நீதி எல்லாம் நீத்துப் போதம் ஒன்று
அறியார் தாமும் இகழ் அவ்வழி நடத்தல்
பொறியோ? போத நெறியோ? இதுபவம்
நீங்கிடும் நெறிதரு பாங்கினைப் பழித்தல்
நன்றி கொன்றல் அன்றே? அன்றியும்
ஞால நீதியும் நான்மறை நீதியும்
பாலர் உன்மத்தர் பசாசரில் எனவும்
உறங்கினோன் கை வெறும் பாக்கு எனவும்
தானே தவிராது; ஆனால் புரியாது;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒழிந்திடின் நிரயத்து அழுந்துதல் திடமே
உய்த்தோன் இன்றி, முத்தி உரைத்தல்
பித்தோ பிரமம் செத்தோ பெறுவது
உடலையும் நீயே சடம் எனச் சாற்றினே

தெளிவுரை:

இனி, சாதனங்களினுலே பிரம ஞானம் உண்டாகும் என்பதை மறுக்கிறுர்.

மேற்சொன்னபடி பரமுத்தி கூடாதவர்கள், யாகம் முதலியன கூறும் வேதத்தின் கன்ம காண்டத்தில் உள்ள விதிகளைக் கடைப்பிடித்து வந்தால் அவர்களுக்குப் பின்பு பிரமஞானம் உண்டாகும் என்று நீ கூறுகிறுய். அவ்வாறுயின், பிரமத்தை மாயா பந்தம் கூடி மயக்கியதற்குக் காரணம் என்ன என்று இதுவரை நீ சொன்னுய் இல்லை.

முன்பே பிரமத்திற்கு இப்படி ஒரு மாயா பந்தம் ஆகிய குற்றம் உண்டு என்பதை நீ தெளிவு படுத்தவேண்டியது அவசியம் ஆகும். தீக்கடை கோலினை மரத்தில் வைத்துக் கடைந்தால், அதனுல் ஏற்படும் நெருப்பு அந்த இரண்டு பொருளையும் (கோல் மற்றும் மரம்) எரித்துவிடும். ஆகக், கன்மங்களைச் செய்வதால் உண்டாகும் விவேகம், அந்தக் கன்மங்களையே அழித்துவிடும். ஒழுகவேண்டிய முறைகளைக் கூறும் வேத நெறிகளை வருந்தியும் கைவிட்டு விட்டு, பிரமஞானம் என்பது குறித்து ஓரளவு கூட அறியாதவர்கள், 'பிரமஞானம் உண்டாயிற்று; எங்களுக்கு ஆசாரம் தேவை இல்லை' என்று அனுசாரங்களைச் செய்துகொண்டு திரிகிறுர்கள். இது இவர்களது தலை எழுத்தா? அல்லது அறிவீனமா?

இவனை விட்டு ஒரு காலத்திலும் நீங்காமல் இருக்கும் பிறவித் துன்பங்களைப் போக்குவதற்குக் காரணமாய் இருக்கும் இந்தக் கன்மப் பகுதிகளை, இஃது எனக்கு ஆகாது என்று புறக்கணிக்கும் இச்செயல்,

"எந்நன்றி கொன்றுர்க்கும் உய்வு உண்டாம்; உய்வுஇல்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்று திருவள்ளுவப் பெருந்தகை அருளிச் செய்தவாறு, செய்ந்நன்றி கொன்ற குற்றம் ஆகும் – மேலும் உலகியல் வழக்கிலும், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்மறைகளிலும் சொல்லப்பட்ட ஒழுக்கங்கள் ஆகிய இவற்றைக் கடைப்பிடிக்காமல் இருப்பது பெரும் பாவம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒருபாவமும் அறியாத குழந்தைகள், குடிகாரர், ஆகாரம், நித்திரை பயம், மைதூனம் என்னும் நான்கு செயல்களும் இல்லாத பேய்கள் ஆகியோரைப் போன்றும், உறங்குகிறவன் கையில் பிடித்திருக்கும் பாக்கு போன்றும், உனக்கு பிரமஞானம் இல்லாததால், அந்தஆசாரங்கள் உனக்கு ஏற்படா. அவற்றின் பெருமையை அறியாமல், நீயே அவற்றைக் கைவிட்டு விட்டதால், உடலைவிட்டு உன் உயிர் நீங்கும்போது, மீளா நரகில் போய்க் கிடந்து, கொடிய துன்பங்களை நீ அனுபவிக்க இருப்பது தப்பாது.

வேத ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்காததால், உனக்கு பிரமஞானம் ஏற்படாமல் இருக்கையில், ''நான் முத்தன்'' என்று நீ கூறுவது, உனக்குப் பித்துப் பிடித்து விட்டதனுலோ? இவன் இப்படியே இருந்து; பிரமஞானம் உண்டாகாமலே, செத்துவிடப் போகிருன்; செத்தபிறகு இவன் பிரமஞானத்தைப் பெறப் போவதில்லை. ஏனெனில், இந்த உடலை நீதானே சடம் என்று சொல்லி வைத்தாய். சடம் எப்படி பிரமஞானத்தைப் பெறும்?

வையினும் வாழ்த்தினும் கொய்யினும் கொளுத்தினும்
வணங்கினும் உதைப்பினும் பிணங்குதல் செய்யாய்
பிரமத் தன்மை பெறுவது எக்காலம்?
இருக்கு நாள் சில எண்ணில், நூல் கதறித்
தருக்கம் பேசித் தலை பறி உற்றுக்
கண்டோர் ஈந்த பிண்டம் உண்டு அலறிப்
பல்நோய் யாக்கை தன் நோய் உற்று உடல்
விடவரும் என்று நடு நடு நடுங்கி
விட்டோர் தெய்வத் தொட்டின்று அறியும்
யானே எவரும் ஆனேன் என்றலின்
அவ்வவர் சீறி அவ்வவர் வாழ்நாள்
செவ்விதின் நிரயம் சேர்த்துவர்; அதனுல்
மாயா வாதப் பேயா உனக்குத்
தேவரில் ஒருவர் உண்டாக
மேவரு நரகம் விடுதலோ அரிதே.

தெளிவுரை:

ஒருவன் இவனை வைதாலும், வாழ்த்திஞலும், கை கால்களைத் தறித்தாலும், இவனை நெருப்பிலிட்டுக் கொளுத்திஞலும், வணங்கிஞலும், காலால் உதைத்தாலும், நல்வினை தீவினைக் குட்படாத பிரமஞானம் இவனுக்கு வரப்போவதில்லை. அதனை இனி இவன் எக்காலத்தில் பெறப்போகிருன்? இந்த உடலில் ஆயுளோடு இருக்கும் நாட்கள் இன்னும் சிலவே ஆகும். இதற்கு நடுவில், எண்ணற்ற சாத்திரங்களைக் கற்று, அது கொண்டு கண்டோர்

CC-0. In Public Domain. Cuddalore Collection, TN.

Digitization by eGangotri-South Center

நின்றோரிடம் எல்லாம் தருக்கம்பேசி, அதனால் மண்டையைக் குழப்பிக் கொண்டு இவனை மற்றவர்கள் சிறந்த அறிஞர் என்று கண்டோர் இடும் அன்னத்தை உண்டு, பிரம ஞானம் பேசுவதாகச் சிலவற்றைச் சத்தம் இட்டுக் கத்தி, பல உடல்களில் வரும் நோய்கள் எல்லாம் இவன் உடலைப் பற்றி நோக்காடு வரும் நிலையில், தனக்குச் சாக்காடு வந்து விடுமே என்று பலவாற்றால் பதைபதைத்து உடலை விட்டு விட்டுப் போகும் காலத்தில், "அஞ்சாதே, உன்னை நான் காப்பாற்றுகிறேன்'' என்று கூறித் தேற்றுவதற்கு ஒரு தெய்வத் தொடர்பு கூட இவனுக்கு இல்லை.

இதற்குக் காரணம், நான்தானே பிரம்மா, விட்டுணு, உருத்திரன், இந்திரன், இமராசன் என்று இவன் ''நானே பிரமம்'' என்று சொல்லித் திரிந்ததனாலேயே ஆகும். அந்தந்த தேவர்களும் நம்மை எல்லாம், இவன் "தானே'' என்று சொன்னான் என்று உன்னிடம் கோபம் கொண்டு, அவரவரது ஆயுட்காலம் முழுவதும் கொடிய நரகத்தில் தள்ளிவிடுவார்கள், எனவே, "மாயாவாதம்''என்னும்பேய்ச் சமயத்தை உடையவனே, எல்லாரும் இறந்து, தேவர்களில் ஒருவர் இருந்தாலும், நரகத்திலிருந்துநீங்குவது என்பது என்றால் எப்போதுமே இயலாது என்பதை அறிவாயாக.

5. ஐக்கியவாதி சங்கற்பம்

அரி தேர்ந்து உணராப் பெரியோன் உரைத்த
பதி, பசு, பாசம் விதிமுறை கிளக்கில்,
ஈசன் ஏகன், எண்ணிலி பசுக்கள்,
பாசம் இருவகைப் பரிசினது; உலகத்
தாயவன், உயிர்க்கு மாயையின் அருளால்,
இருவினைத் தகையின் உருவினைத் தரும் ஆல்;
கருமுகில் அடர இரிதரு கதிர்போன்று
அறிவாம் உயிரில் பிறியாது ஏயும்
ஈட்டும் இருபயன் ஊட்டிடும் நியதி
ஒருபோது இருபயன் நுகர்வுற மருவுதல்
இன்மை ஆதல் முன்னிய காலைச்
சத்திநிபாதம் உற்று இறை அருளால்,
உருவு கொடு உலகு தெரிவுற மருவி
மாசுறு தூசு தேசுற விளக்கும்
தன்மையின் உணர்த்தும் புன்மைகள் நீங்கி
நீரும் நீரும் சேரும் தகைமையின்
அறிவினோடு அறிவு செறிவுறப் பொருந்தி
ஒன்றும் என்பதை உலகோர்
நன்று முத்தி எனநவிற் றினரே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

இனி ஐக்கியவாதி தன் கொள்கையைக் கூறுகிறான்:—

திருமால் பூவுலகு அனைத்தையும் தோண்டிப் பார்த்தபொழுது, அவனால் அறியமுடியாத பேரருட் பெரும் பொருள் என்று சொல்லப்படும் சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்ட பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மையை உள்ளபடி சொல்லுகையில், எல்லா முதன்மையும் உடைய இறைவன் ஒருவனே ஆவன்; உயிர்கள் பலவாக உள்ளன; பாசம் என்பது மாயை, கன்மம் என்று இருவகைப்பட்டுள்ளது.

உலகுக்கு தாயாய் இருக்கும் சிவபெருமான், தன் கருணை காரணமாக, உயிர்களின் நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப, மாயையிலிருந்து உடல்களைத் தோற்றுவித்து உயிர்களுக்கு வழங்குவான். (ஆல்—அசை) கறுத்த மேகம், ஒளியை உடைய கதிரவனை அடைந்து, அவனது கதிர்களை எல்லாம் மறைப்பது போல, இயல்பாகவே அறிவினை உடைய உயிர்களை, அந்த மாயா உடல் பொருந்தி, ஒரு போதும் அவற்றைவிட்டு நீங்காமல் நிற்கும்.

முன்பு செய்த நல்வினை தீவினைப் பயன்களை இறைவன் உயிர்க்குள்ள இந்த உடலில் நாள்தோறும் அனுபவிக்குமாறு செய்கிறான். அவ்வாறு இருவினைப் பயன்களை அனுபவித்து வரும்பொழுது, எல்லா வினைப் பயன்களையும் அனுபவித்து முடிக்கத் தக்க நிலையில், ஒரு பிறவியில் ஏதேனும் ஒரு சிவபுண்ணியம் முற்பட்டு நிற்கையில், உயிர்க்கு சத்திநிபாதம் உண்டாகிறது.

அந்நிலையில், சிவபெருமான், அருளையே திருமேனியாகக் கொண்டு, உலகில் உள்ளோர் காணத் தக்க முறையில் ஆசாரியனாக எழுந்தருளி வருகிறான். வந்து, உடையில் உள்ள அழுக்கைப் போக்குவது போல, உயிரினிடத்து உள்ள பாசங்களைத் தீக்கை பண்ணி முறைப்படி நீக்கும் பொருட்டு, உபதேசித்து அருள்கிறான். அந்நிலையில் உயிரினிடத்து உள்ள குற்றங்கள் எல்லாம் நீங்கி, உயிர் தூய்மையாகிறது; அப்போது தண்ணீரும் தண்ணீரும் தன்னில் கூடி, ஐக்கியமாய் ஒன்றுபட்டு நிற்பதுபோல, சிவபெருமானுடைய அறிவோடு உயிரின் அறிவும் கூடி ஐக்கியம் ஏற்பட்டு நிற்கும். இதனையே உயர்ந்தோர் நல்ல முத்தி என்று கூறுவர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

6. ஐக்கியவாதி நிராகரணம்

முத்தி என்பதை எவனோ சுத்த
அறிவு எனில் பாசம் செறியா மாயை
உரு இரு வினையால் வரும்; இருவினையும்
உருவால் அன்றி மருவாது; இவற்றின்
முந்தியது ஏதோ? வந்து அணைவதற்கு ஓர்
ஏது வேண்டும். தான் இயல்பு என்னின்,
வீடு உற்றவரினும் கூடக் கூடும்;
ஈங்கு இவை நிற்க, நீங்காக் கருவிகள்
கொண்டு, அறிவு அறியக் கண்டதும் அன்றி
மருவிய உருவு துயில் பெருங் காலைச்
சிறுபொறித் தறுகண் கறையணல் சுடிகைத்
துத்திக் கடுவுள் துளை எயிற்று உரகக்
கொத்து அயல் கிடப்பினும் குவைதரு நவமணி
ஒருபால் துதையினும் பெருகு ஆர்வத்தினோடு
அச்சமும் அணுகாக் கொச்சமை என்னோ
கருவி யாவும் பிரிவுறு நிலையேல்
பொறி புலன் ஆதி குறைவற நிறைந்து
காட்சியது அளிக்கும் மூட்சியின் முன்னாக்
கொடுத்து ஓர் ஆழி விடுத்தவன் நாடிக்
கொள்வோர்க் காணாது உள்கி மீண்டுழித்
தந்தவன் கண்டு ஆங்கு அந்தமில் அதனைத்
தருக என்னும் பெருமதி பிறங்கும்; அது
அறிவிலாமை என்றதனை அது மலமாக்
குறிக்கொளார் அறைகுவர் அன்றே
அறிவிற்கு அறிவு செறிய வேண்டின்றே
உண்மையில் இருமையும் ஒளியே எனில், ஒரு
தன்மையாக முன் சாற்றினர் இலரே;
முன்பு நன்றுடன் ஒன்றிய காலை
இன்பம் எய்துதற்கு இலது உயிர்; ஆதலின்
நீயலை பொருத மாயா வாதி
ஆயினை அமையும்; அருள் நிலைகேள் மதி.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

ஐக்கியவாதியைப் பாடாணவாதி மறுக்கிறான்:—

நீ முத்தி என்று எதனைச் சொல்கிறாய்? அநாதியே ஆன்மா தூயவனாகவும் அறிவுள்ளவனாகவும் இருக்கிறான் என்று சொல்வாய் ஆயின், இடையில் ஒரு சமயம் அந்த ஆன்மாவைப் பாசம் கூடியது என்று கூறுவது பொருந்தாது; இவன் முன் செய்த நல்வினை தீவினைகளுக்கு ஈடாகவே, இவனை மாயாவுடல் வந்து பொருந்தியதே அன்றி, அது தானாக வந்து கூடாது. மாயா உடலைப் பெற்றதனாலேயே, இவனுக்கு இருவினைகளும் ஏற்படலாயின.

மாயை, கன்மம் ஆகிய இரண்டிலும் ஆன்மாவை முந்தி வந்து கூடிய பாசம் எது? இந்த இரு பாசங்களும் நடுவில் வந்து இவனைக் கூடுதற்கு, ஒரு காரணம் வேண்டும். அநாதியே ஆன்மாவுக்கு மலம் என்னும் ஒரு பாசம் உண்டாகி, அது காரணமாக மாயை, கன்மம் என்னும் இரு பாசங்களும் கூடின என்று கூறவேண்டும்.

மலம் என்பது ஒன்று இல்லை, இந்த இரு பாசங்கள் தாம் இடையே வந்து, இவனைக் கூடின, இது வெள்ளைப் புடவைக்கு அழுக்கு ஏறினால் போல இயல்பாக வந்து கூடும் என்று நீ கூறினால் இவ்விரு பாசங்களும் நீங்கி, முத்தி பெற்ற ஆன்மாக்களிடத்திலும் இவை இயல்பாக வந்து கூடும். உன்னால் இதற்குப் பதில் கூற முடியாது.

அநாதியே உன்னைவிட்டு நீங்காமல் நிற்கின்ற ஆணவமலத்தோடு உனக்குத் தொடர்பு ஏற்பட்டது. அந்தத் தொடர்பை இந்த மாயா கருவிகள் வந்து நீக்கின. அந்தக் கருவிகளைக் கொண்டு, உன் அறிவு சத்தாதி விடயங்களை அறிந்து வருவதை நடைமுறையில் நீ காண்கிறாய். அப்படி இருந்தும் ஆணவமலம் என்பது ஒன்று இல்லை என்கிறாய்.

இந்தஉடம்பு உறக்கத்தில் இருக்கும் நிலையில், உடம்பில் சிறிய பொறிகளையும், தறுகண்மையினையும், (அஞ்சாமையையும்) கறுத்த கண்டத்தையும், தலையில் துத்தியினையும் (படத்தையும்) உடையதாய், உள்ளேயிருக்கும் துளையோடு கூடிய பல்லில் நஞ்சினை உடைய பாம்புக் கூட்டங்கள் ஒரு புறம் கிடக்கின்றன. மற்றொரு புறம் மிகுந்த நவரத்தினக் குவியல் கிடக்கிறது. அப்போது உனக்கு பாம்பைக் கண்டு அச்சமோ, இரத்தினத்தைக் கண்டு மகிழ்ச்சியோ ஏற்படாமல் இருந்ததற்கு என்ன காரணம்? அஃது உறங்கும் போது உனக்கு ஏற்பட்டிருந்த அறியாமை காரணமாகத் தானே?

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எல்லாக் கருவிகளும் நீங்கிய நிலையில் உனக்கு விருப்பு வெறுப்பு ஏற்பட்டதில்லையாயின் பொறி புலன்களாய் இருக்கும் கருவிகள் ஒன்றும் குறையாமல் உனக்கு அறிவைக் கொடுக்கையில், உன் அறிவு சத்தாதி விடயங்களில் மூண்டு செயல்படுகிறது. அந்நிலையில் அரை நாழிகைக்கு முன்பு, ஒருவன் கையில் நீ ஒரு மோதிரத்தைக் கொடுத்து, 'இந்த மோதிரத்தை விற்று வா' என்று அவனிடம் சொன்னாய். அதனை வாங்குவதற்கு ஒருவரும் இல்லாததால், அவன் அந்த மோதிரத்தை உன்னிடம் திரும்பத் தந்து விடுகிறான்; நீயும் அதை வாங்கி உன்னிடத்தில் வைத்துக் கொண்டாய். பிறகு ஒரு அரை நாழிகை கழித்து, மோதிரத்தைத் திருப்பி உன்னிடம் தந்தவனைக் கண்டு, "நான் முன்பு விற்கத் தந்த மோதிரத்தைக் கொடு" என்று நீ அவனிடம் கேட்கிறாய். இப்படிப்பட்ட உன் அறிவை 'பெருமையுடையது' என்றே கூறவேண்டும்! (பெருமதி – புத்திப் பெருமை)

இவ்வாறு ஆன்மாவுக்கு மயக்கம் ஏற்பட்டதற்குக் காரணம் அறியாமையே என்று கூறினால் அறியாமை என்று நீ இப்போது சொல்கிறாய் அல்லவா? அதைத்தான் 'ஆணவமலம்' என்று 'முப்பொருள் உண்மை நிச்சயம்' அறிந்த பெரியவர்கள் கூறுவார்கள். (அன்று – ஆம் என்றது) இஃது ஐக்கியவாதியினுடைய பெத்த நிலையை மறுத்தது.

இனி முத்தி நிலையை மறுக்கிறான்:–

ஆன்மா அறிவுடையதாக இருக்கும் பொழுது, வேறு ஓர் அறிவுடைப் பொருளோடு, சென்று கூட வேண்டுவதில்லை. மேலும் முத்தியில் நீரும் நீரும் கூடியிருப்பது போல, சிவனும் ஆன்மாவும் இணைந்து ஒளிமயமாய் இருக்கும் என்று நீ கூறினால், அது பொருந்தாது. ஏனெனில், சிவன் பேரறிவு உடையவன். அவன் முழு நிறைவுடையவன்; இவன் சார்ந்துள்ள பொருளின் தன்மையை உடையவன். அவன் நின்மலன்; இவன் மலசகசன். அவன் பதி; இவன் பசு. இவ்வாறு இருவருக்கும் வேறுபாடுகள் உள்ளமையால், சிவனையும் ஆன்மாவையும் ஒரு தன்மை உடையவர்கள் என்று இதற்கு முன்பு ஒருவரும் சொன்னவர்கள் இல்லை.

அநாதியே தூய்மையுடன் இருந்த ஆன்மா, பின்பு கூடிய அசுத்தங்கள் நீங்கி, முத்தியில் சிவனோடு கூடி, இன்பத்தை அனுபவிக்கும் என்றாய். அவ்வாறாயின், இந்த மாயா கன்மங்கள் ஆன்மாவைக் கூடுவதற்கு முன்பே, ஆன்மா சிவனோடு கூடிநின்று இன்பத்தைஅனுபவித்து இருக்கவேண்டும். ஆன்மா அப்படி அநாதியே பேரின்பம் பெற்றிருந்தது என்பதை எவரும் கண்டார் இல்லை. ஆகவே, "பிரமம் தானே" குடாகாசமாகாசம்' போல் நின்று, இந்த உடல் நீங்கும்போது, இரண்டு பிரமமும் ஒன்றாய் நிற்கும்" என்று உன்னோடு வழக்கிட மாயாவாதியாகவே நீயும் ஆகிவிட்டாய். எனவே, நீ சொன்னதெல்லாம் அமையும், மேல் திருவருளின் உண்மையை உனக்குக் கூறுகிறேன்; கேட்பாயாக.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

7. பாடாணவாதி சங்கற்பம்

மூல மலத்தால் சாலும் மாயை;
கருமத்து அளவில் தரும் உரு இறைவன்
செறிந்து இரு பயனும் நுகர்ந்திடும் உயிர்கள்;
இருள் உறுமலத்தில் பருவரல் படுதலின்,
இடைஇரு நோக்கும் தடைப் பட்டோரில்
துயர்உறும் அதனுல் செயிர்உறு துன்பம்
கொத்தை மாந்தர் உய்த்து உறும் துயில்போல்
காட்சி என்னக் காணுத் துயர
மாட்சியை முத்தி என வகுத்தனரே.

தெளிவுரை:

மேல், பாடாணவாதி தன் கொள்கையைக் கூறுகிறுன்:—

அநாதியே ஆன்மாவுக்கு ஆணவமலம் என்பது ஒன்று உண்டு. அந்த மலத்தைப் போக்கும் பொருட்டு, மாயை அவனை வந்து கூடும். ஆன்மா முன்பு செய்த கன்மங்களுக்கு ஈடான, உடல்களை இறைவன் கொடுப்பன். அந்த உடல்களோடு கூடி, ஆன்மாக்கள் தத்தமக்கு உண்டான நல்வினை தீவினைப் பயன்களை அனுபவித்து வரும். ஆணவமலத்திஞல் ஆன்மாவுக்கு மறைப்பு ஏற்பட்டதனுலேயே, இறைவன் ஆன்மாக்களை இப்படி அனுபவித்து வரும்படி செய்கிறுன்.

முன்பு பொருள்களைக் கண்டுவந்த கண், இடையில் திரை விழுந்து மறைப்புக்கு உட்பட்டதனுல், கண் தெரியாமல் துன்புறுபவர்களைப் போல், இயல்பாகவே அறிவுடைய ஆன்மா, ஆணவமல மறைப்பு அனுதியே ஏற்பட்டுத் துன்புறும் அந்நிலையில், ஆன்மாவுக்குப் பிறவித் துன்பம் மேலும் மேலும் ஏற்படுகிறது. இது பிறப்பு நிலை.

அஞ்ஞானிகளாக இருக்கின்ற ஆன்மாக்கள், அனைத்து நான்கு அவத்தைகளும் நீங்கித் துரியாதீத அவத்தையிலே அழுந்திக் கிடக்கும் தன்மைபோல, அந்நிலையில் சுட்டி அறிவதற்கு ஒன்றும் இல்லையாய், இன்பதுன்பங்களின் அனுபவங்களும் இல்லாமலிருக்கின்ற நிலையையே, பேரின்பப் பெருநிலை ஆகிய முத்தி என்று நல்லவர்கள் சொல்வார்கள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

8. பாடாணவாதி நிராகரணம்

வகுத்து உரை பெருகத் தொகுத்திடு முத்தி
நன்று நன்று இருள் ஒன்றிய மலத்தாம்
உளத்திற்கு உறுபொறி செறிபுனல் நுகர்தல்
விளக்கில் திகழும் மேன்மையது அன்றே;
கருவிகள் அகல்வுழி மருவிய துயரமும்
நன்று எனல் ஆகும்; துன்றிய படலத்து
இடை, தடைப்பட்ட சுடர்விழி மாந்தர்
படலம் நீங்குதல் கடன் ஆதலினே
காட்சி என்னக் காணாத் துயர
மாட்சியை முத்தி என வகுத்து உரைக்கில்
காணா பாவம் மரணம் கருமரம்
ஏய்ந்தவர் முத்தி சேர்ந்தவர் அன்றே;
இனைய கதிக்கு ஓர் முனைவரும் வேண்டா;
தனிதகு துயரம் எனும்இது திடனே
பாடாணத்தின் கூடா முத்தி

தெளிவுரை:

சொல்லைப் பலவாக வகுத்துச் சில மேற்கோள்களையும் காட்டி, முடிவில் ஆணவமலத்தோடும் கூடி, நிற்கின்ற கேவலத்தில் கிடப்பதை, முத்தி என்று நீ சொன்னது மிக நன்றாயிருக்கிறது! இப்படி ஒருவரும் சொன்னவர் இல்லை. சகல நிலையில் ஆன்மாவுக்குக் கூட்டப்பட்ட இந்திரியங்கள் காட்டவும், ஆன்மா சத்தாதி விடயங்களை அனுபவித்து வருவது, கண்ணுக்கு விளக்குக் காட்டக் கண் கண்டு வருவதற்கு ஒப்பாகும்; ஆகவே சகலநிலை பற்றிக் குற்றம் அறச் சொன்னாய்.

கண்ணுக்கு விளக்குப் போல, ஆன்மாவுக்குக் காட்டும் கருவிகள் நீங்கியபொழுது, ஆன்மா ஆணவமலத்தில் அழுந்திக் கிடக்கிற கேவலமும் முன்பு சொன்ன சகலம் போல, நன்று என்று சொல்லலாம். ஏனெனில், கண்ணில் உள்ள படலம் காரணமாக இடையே காட்சி தடைப்பட்ட கண்ணினை உடைய ஆன்மாக்களுக்குப் பின்பு ஒரு நிலையில், மருந்து பயன்படுத்தியதால் கண்ணின் படலம் நீங்குகிறது. இந்த முறையிலேயே அமைந்துள்ளது(இது பெத்தத்தை மறுத்தது)

சுட்டிக் காணுவதற்கு ஒரு காட்சியும் இன்றி, துன்ப அனுபவமும் இன்றி இருக்கின்ற நிலையை, நீ முத்தி என்று பலவாக வகுத்துக் கூறினாய்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அப்படியானுல் மரணத்தின்போது கரணங்களினின்றும் நீங்கியவர்கள் கருவில் பொருந்தினவர்கள், மரங்களே அடைந்தவர்கள் ஆகியவர்கள் அனைவரும் முத்தியைப் பெற்றவர்கள் ஆகவேண்டும்.

இப்படிப்பட்ட முத்தியைப் பெறுவதற்கு ஓர் ஆசாரியரும் வேண்டுவதுஇல்லை; இத்தகைய முத்தியில், எல்லாக் கருவிகளும் நீங்கி, ஆன்மா ஆணவமலத்தோடும் கூடி, ஒன்றும் அறியாமல் கிடக்கின்ற கேவலத் துயரம் உறும் என்பது நிச்சயம். ஆகையால், கல்லுப் போல (பாடாணம் போல்) ஒன்றும் அறியாமல் கிடப்பது முத்தி அன்று; இது பாடாண முத்தியை மறுத்தது.

9. பேதவாதி சங்கற்பம்

ஈசனது அருளால், பாசத் தொகுதி
செறிவுறு செம்பில், கறையுறு களிம்பு
குளிகை தாக்க, ஒளிபெற்றுங்கு
நித்த சுத்த முத்தராக
வைத்தனர் உலகில் மறை வல்லோரே.

தெளிவுரை:

குகைக்குள்ளே நிறைந்திருக்கும் செம்பில் உள்ள கருமை பொருந்திய காளிதம் (களிம்பு), இரதகுளிகை (மருந்து) சேர்ந்த பொழுது, அந்தக் களிம்பு நீங்கி, அந்தச் செம்பு, பொன் போலாகும். அதுபோல், பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கு, இறைவன் கருணையினுல், ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களின் கூட்டம் கெட்டுவிடும்.

அந்நிலையில், அழிவற்ற தூய்மை உடைய முத்தியைப் பெற்றுப், பெறுவானும் பேறுமாய் இருப்பர்கள் என்று வேதங்களைக் கற்றுத் தெளிந்த பெரியவர்கள் சொன்னுர்கள்.

10. பேதவாதி நிராகரணம்

மறைகள், ஆகமத் துறைகள், மற்று எவையும்,
நாசம் இல் பதி பசு பாசம் என்று உரைத்தல்;
அயர்த்து ஓர் குளிகைச் சயத்தால், தாமிரக்
காளித நாசம், பாசத்து ஏய்த்தல்
கூடாது; அன்றியும் குளிகை சேருணம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நீடாது அழித்த நிலை இலை ஆதலின்,
பேதவாதம் ஓதுதல் பிழையே;
இன்னும் இன் உயிர் ஏமம், குளிகை
தன்னில் அன்னியம் தருவது திடமே;
வீடு இத்திறத்தினில் கூடக் கூடா.

தெளிவுரை:

நான்மறைகள், ஆகமங்கள், அவற்றின் வழியில் அமைந்த தோத்திரங்கள், சாத்திரங்கள், புராணங்கள் முதலியன எல்லாம் இறைவன், உயிர்கள், தளைகள் ஆகியவற்றிற்கு என்றும் அழிவில்லை என்றே பேசுகின்றன.

இவ்வுண்மையை மறந்துவிட்டு, நீ இப்பொழுது ஓர் இரத குளிகையின் திறமையினுல் செம்பில் உள்ள களிம்பு கெட்டுவிடுகிறது என்று உவமையாகக் கூறியது, சாத்திர விரோதம் ஆகும்; அஃதாவது ஆகமபிரமாணத்திற்கு முரண் ஆகும். ஆகவே, பாசம் கெடும் என்று நீ சொன்னது குற்றம். அதுவுமன்றி, இரத குளிகை செம்பை நிலைநிற்க ஒட்டாமல், அதை அழித்துப் பொன் ஆக்கும் என்று நீ எடுத்துக் காட்டிய உவமையும் பொருந்தாது.

எனவே, ''உயிர் அழியாது; பெறுவானும் பேறுமாய் இருக்கும்'' என்று நீ சொன்ன பேதவாதம் பழுதுடையது. இன்னும் ஒரு குற்றமும் உள்ளது . அது வருமாறு:

செம்பு, தன்னைத் தூய்மைப் படுத்திய குளிகையும் ஆகாமல் தன்னுடைய தன்மை கெட்டு, இடையிலே பொன் ஆனது போல, ஆன்மாவும் தன்னைத் தூயவன் ஆக்கிய சிவனுடைய சொரூபமும் ஆகாமல் தன் தன்மையும் கெட்டு, வேறு ஒரு சொரூபம் ஆகவேண்டி வரும். இது குற்றம். வீடுபேறு என்பது, 'செம்பும் இரத குளிகையும் போல' என்று நீ சொன்னவாறு கூடுவது என்பது உண்டாகாது.

11. *சிவசமவாதி சங்கற்பம்*

பாசமும் பசுவும் ஈசனும் என்று இம்
மூவகை உணர்வு தாம் முதன்மையவாய்ப்
பாசம் ஐம்புலன் தேசுற உணர்த்தப்
பசுத் தனி ஞானம் பொசித்திடும் அன்றே;
இனைய ஞானம் பிரிவுற எரியாச்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

செந்தழல் தகும் நெறி அந்தம் இல் உயிரும்
அறிவாய் ஒன்றும் அறியா தன்றே
இவ்வாறு ஒழுகும் ஏனைய உயிர்க்கு
முன்னேன் தனது முதிர்ஒளி ஞானம்
அறியாப் பச்சை சிறுபுழுக் கவர்ந்த
வண்டு என உயிரைக் கொண்டிடும் உயிர் அது
தன்னை நோக்கித் தான் அது ஆகி
ஐவகைத் தொழிலும் மெய்வகை உணர்வும்
பிரியா வாறு பெற்றுத்
திரியாப் பெரியோர் திரட்சிசேர்ந் திடுமே.

தெளிவுரை:

பாசம், பசு, பதி என்று கூறப்படும் மூன்று முதலுக்கும், பாசஞானம், பசுஞானம், பதிஞானம் என்று கூறப்படும் மூவகை ஞானமும் அநாதியே உள்ளது. ஆக, ''பாசஞானம்'' என்பது, இந்திரியங்களைப் புலன் ஆகிய சத்தாதி விடயங்கள் மயக்கம் அற அறிவிக்கப், பசுவுக்கு உண்டாகும் ஒப்பில்லாத ஞானம் ஆகும். உயிர் அந்த விடயங்களை நுகரும். ''பசுஞானம்'' என்பது, புலன்களாலும் பொறிகளாலும் உண்டாகும் இருவகை ஞானங்களும் நீங்கிய நிலையில் கொழுந்து விட்டு எரியாமல், சும்மா கிடக்கும் சிவந்த தழலைப் போன்று, அழிவற்ற ஆன்மா, அறிவுடையதாக இருக்கும் தன்மையது ஆயினும், இஃது என்று ஒன்றைச் சுட்டி அறியாமல் இருப்பதே ஆகும். இது பெத்தநிலை பற்றிப் பேசுவது. மேல் முத்தி நிலை.

இப்படியே நாள்தோறும் கேவல நிலையிலும் சகல நிலையிலும் உழன்று வரும் உயிருக்கு, மூன்று முதல்களுள் முதன்மை ஆகிய சிவபெருமானின் பேரொளியாய் இருக்கும் பதிஞானம், ஒன்றும் அறியாமல் கிடக்கும் பச்சை நிறச் சிறிய புழுவை வந்து எடுத்துக்கொண்ட வேட்டு வாளியைப் போல், ஒன்றும் அறியாத ஆன்மாவை வந்து சேரும்.

அஃது எப்படியெனில், புழு தன்னை எடுத்து வந்த வேட்டு வாளியையே நினைத்துக் கொண்டிருந்தது அந்த வேட்டுவாளியானதைப் போன்று, சிவஞானம் கைவரப் பெற இருக்கும் ஆன்மாவும், அந்தச் சிவனையே நினைந்திருந்து தான் சிவசொரூபம் உடையவன் ஆவன்.

வேட்டுவாளி ஆன புழு, வேட்டுவாளி செய்து வந்த தொழிலை எல்லாம் தானும் செய்து, வேட்டுவாளியின் சொரூபம் நீங்காமல், அந்த வேட்டு வாளிகளின் கூட்டத்தோடும் கூடியிருக்கிறது. அதுபோல, இந்த ஆன்மாவும் சிவபெருமானுடைய ஐந்தொழிலையும் பேரறிவையும் தன்னை விட்டு நீங்காதவாறு பெற்று, முன்பே முத்தி பெற்று இவ்விரு தன்மைகளையும் பெற்ற பெரியோர்களது கூட்டத்தில் சென்று கூடி நிற்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

12. சிவ சமவாதி நிராகரணம்

சேர்ந்த மும்மை வாய்ந்த ஞானமும்
ஒரு கால் அன்றித் திரிவுற நிற்கில்
ஒண்பொருள் காணும் பண்பினுக்கு ஒருகால்
பரிதியும் மதியும் எரிதரு விளக்கும்
வேண்டல் இன்றே காண்தகு காலை
ஒன்று ஒன்றாக நின்று அறிவுறும் எனில்
அன்னியம் அறியா மன் உயிர் பொறிபுலன்
தானே அறியா, தலைவர்க்கு உலகினை
ஆனா அறிவால் அறிய வேண்டின்றே
கொழுந் தழல் தகுமேல் அழுந்திடும் அவத்தையில்
திரியாத் தலைவன் தெரியாத் தன்மை வந்து
எய்தல் ஆகா;... ... ...

தெளிவுரை:

சிவ சமவாதியைச் சங்கிராந்தவாதி மறுக்கிறான் இவ்வாறு கூடிவரும் பதி பசு பாசம் என்னும் மூன்றினுக்கும் ஏற்பட்ட மூவகை ஞானமும், ஒவ்வொரு நிலையில் ஒன்று ஒன்றாகக் காரியப்படாமல் ஒருங்கே கூடி நின்றே காரியப்பட வேண்டுமாயின் அது பொருந்தாது. அதற்கு விளக்கம் வருமாறு:—

கண் ஒரு பொருளைக் காணவேண்டுமாயின், சூரியனோ சந்திரனோ ஒரு விளக்கோ, ஆகிய இம்மூன்றில் ஏதேனும் ஒன்று காட்டினால் போதும்; கண் அப்பொருளைக் காணும்; அஃதன்றி, இந்த மூன்று பொருள்களின் ஒளியும் சேர்ந்து நின்று, கண்ணுக்குப் பொருளைக் காட்ட, கண் காணவேண்டும் என்பது இல்லை. அதுபோல பாசஞானம், பசுஞானம், பதி ஞானம் என்னும் மூவகை ஞானமும் கூடிநின்றே ஆன்மா, ஒன்றை அறியவேண்டும் என்பது இல்லை. எனவே நீ கொண்ட பொருள் பொருந்தாது.

அப்படியானால் ஆன்மா ஒவ்வொன்றாகத் தனித்தனியே நின்று நின்று, ஒவ்வொரு செய்தியையும்அறியும் என்று நீ கூறுவாய் ஆயின், அதுவும் பொருந்தாது. நிலையான உயிர்க்குள்ள கருவி கரணங்கள், உயிர்க்கு வேறாய் இருப்பதால், பசு ஞானம் தானாக எதையும் அறியாது; பொறிபுலன்கள் சடமாய் இருப்பதால், பாசஞானம் தானாக ஒன்றை அறியாது; இறைவன் எதையும் சுட்டியறிய வேண்டுவதில்லை; எனவே பதிஞானம் அனாதியே பேரறிவுடையதாய் இருக்கிறது. எனவே பதிஞானம் ஒன்றையும் புதிதாக அறியவேண்டுவதில்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கருவிகள் எல்லாம் நீங்கி ஆணவமல மறைப்புக்கு உட்பட்டிருக்கும் நிலையில் கொழுந்து விட்டு எரியாமல் கிடக்கும் கொழுவிய தழலைப்போல, ஆன்மா இருக்குமாயின், ஒரு காலத்திலும் இவனைவிட்டு நீங்காமல் எப்போதும் இவனோடு கூடி நிற்கும் கர்த்தாவை இவன் (ஆன்மா) தெரியாமல் இருக்கும் தன்மை ஆன்மாவுக்கு ஏற்படக்கூடாது. (இது சிவசமவாதியின் பெத்த நிலையை மறுத்தது).

.... மெய்யுறு பொருட்கு
முன்னர்க் கீடம் தன் என எடுத்த
வேட்டுவன் இயல்பு கூட்டல் பெறுதே
வண்டு இறும்பு எடா உட்கொண்டு, அது தனக்கு
மந்திர வாதம் தந்ததும் இலதே;
எடுத்திடும் அதனால் அடுத்தது என்று அறையில்
கருமயிர்க் குட்டி இருசிறைப் பறவை
ஆயினது எடுத்த தாயர் சாற்றிலரே
பிறவிப் பேதத் துறை இவை கிடக்க.
ஏயும் இத்திறன் ஆயும் காலை
யோகத் தகுதியாகத் தகுமே
ஞானம் இன்மை என்று ஓதுவது எவன் எனில்,
உயிரும் உணர்வும் பயிலுதல் இன்றி
வேட்டுவன் உருவம் மென்புழு உணர்வு
கூட்டுதலால், உருக் கூடுதலானும்
முத்தியில் இறையில் பயிற்றுதல் இன்றித்
தன் உரு அணைந்த பின் அதன், நினைவு
மாறுதலானும் ஊறு உடைத்து அன்றே

தெளிவுரை:

நீ சிவனோடு கூடி ஒன்றுபட்டு இருக்கும் முத்தி இயல்புக்கு, முன்பு ஒன்றும் அறியாது கிடந்த பச்சைப் புழுவைத் தன் சொரூபம் ஆகவேண்டும் என்று எடுத்த வேட்டுவாளியின் இயல்பை உவமையாகச் சொல்வது பொருந்தாது.

சிவபெருமான் ஆன்மாக்களுக்கு மந்திர உபதேசம் செய்து தன் சொரூபம் ஆக்கினாற்போல, வேட்டுவாளி புழுவுக்கு மந்திர உபதேசம் செய்யவில்லை. ஆகவே, வேட்டுவாளியையும் புழுவையும் முத்திக்கு உவமையாகச் சொன்னது பொருளன்று.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அப்படியன்று, அந்த வேட்டுவாளி அந்தப் புழுவுக்கு உபதேசித்ததால் தான் அந்தப் புழு தன் சொரூபம் ஆனது என்று நீ கூறினல், கருமையான மயிர்க்குட்டிப் புழு, பெரிய சிறகு முளைத்ததும் பறவையாய்ப் பறந்து போய்விடும்; அப்படிச் சென்ற பறவைக்கு அதன் தாயார் உபதேசித்த பறவை இஃது என்று ஒருவரும் சொல்வார் இல்லை. எனவே, புழு வேட்டுவாளியானதும், மயிர்க்குட்டி பறவையானதும் கன்மத்துக்கு ஈடாக அச்சு மாறி சென்றது. இது முத்திக்கு உவமை ஆகாது. எனவே இதனை விட்டுவிடு.

புழு வேட்டுவாளி ஆனற்போல, ஆன்மாவும் சிவசொரூபம் ஆனதை ஆராயும்பொழுது, அதனை யோகத்துக்குச் சொல்லலாமே அன்றி, அது ஞானத்திற்குப் பொருந்தாது, ஏனெனில், ஆன்மாவும் சிவனும் கூடி ஒன்றுபட்டு இருப்பதே முத்தி என்று இருப்பதால், ஆன்மாவும் சிவமும் வேறுபட்டு இருக்கும் என்று நீ சொன்னது குற்றம்.

மேலும், வேட்டுவாளியின் சொரூபத்தை மெல்லிய புழுவின் நினைவு கூட்டுதலால், உனக்கு முத்தியில் ஓர் உடல் கூடுதலாலும், முத்தி நிலையில் நீ ஒரு சொரூபத்தை எடுத்தும் சிவனோடு கூடி இருத்தல் இன்றி, வேருய் இருக்கும் என்று கூறுதலாலும் அது முத்தி அன்று.

வேட்டுவாளியின் சொரூபத்தைப் பெற்ற புழு, அதன் பிறகு இந்தத் தொழில்களைச் செய்யப் பெற்றேமே என்னும் நினைவு அப்புழுவிற்கு இல்லை. எனவே, இதை ஞானத்தால் உண்டான முத்தி என்று சொல்வது குற்றம் ஆகும். இது, முத்தி நிலையில் ஆன்மா, ஓர் உடலோடு கூடி இருக்கும் என்பதை மறுத்தது. சைவ சித்தாந்த முத்தியில் ஆன்மாவுக்கு கருவி கரணங்கள் ஏதும் இல்லாததால், உடல் கிடையாது.

ஈசனது இயல்பு அருள் எய்து உயிர் இயற்றல்,
பேசுதல் தவறு எனப் பெருமறை அறைய,
ஐந்தொழில் உயிரும் தந்திடல் தகுமே;
ஆவது என் முன் நாள் நாவலர் பெருமான்
பண்டு ஒரு முதலை உண்ட மைந்தனை
வரவழைத்தனன் என்ருய்; பிழைப்பிலது அதூஉம்
தந்திட வேண்டும் என்றனர் அன்றே
இன்னவை கிடக்க முன்னவன் தன்மை
எய்தினர் எல்லாச் செய்தியும் செய்வர்
இரும்பு எரி எய்தித் தரும்செயல் தகவு எனில்
பொருள் நிலை கிடக்க ஒரு திட்டாந்தப்
பேறே ஆயின் சீருக் கதுவிய
புனல் ஒரு புடைசேர் கனல் தகும் ஆயினும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வேறொரு பொருளை நீறு ஆக்கிலதே
நெருப்பு எனும் இதனின் உருத்தனி காட்டுக;
அங்கியும் ஒன்றைத் தங்கி நின்று அல்லது,
தன் தொழில் நடத்தாது என்று அறி இனி நீ;
இரும்பு அனல் செய்தி தரும் பரிசு உளதே;
அது என் ஓர் அலகை பொதி தரும் காலை,
அதன் செயல் அனைத்தும் இவன் செயல் ஆமால்;
அவன் இவன் ஆகில், இவன் அவன் செய்திக்கு
என் அவை என்னில், பின் உறு செயலும்
அதன் செயல் அன்றி, இவன் செயல் ஆகில்,
இவன் செயல் பேயின் தன் செயல் ஆகி
இருந்தவா எனத் தெரிந்திட வேண்டும்;
தெரியாதாயின், புரியில் கடுங் கனல்
எரிந்தது என்னும் இது தகும்; அன்றியும்
அவன் இவன் ஆகில் இவன் அவன் செய்தி
என்று செய்வான்? ஒன்றிய மதத்தாய்

தெளிவுரை:

இறைவனுக்கு உள்ள ஐந்தொழிலைத் திருவருள் பெற்ற ஆன்மாக்கள் செய்யும் என்று சொல்வது குற்றம் என்று வேதங்கள் கூறுகின்றன. எனவே, சிவபெருமானால் செய்யப்படும் ஐந்தொழில், ஆன்மாவினால் செய்யப்படும் என்பது பொருந்தாது.

அப்படி நீ என்னதான் சொல்கிறாய்? முற்காலத்தில் நம்பியாரூரர் திரு அவிநாசியில் முதலை உண்ட பிள்ளையை, அதன் வாயிலிருந்து வருக என்று அழைத்ததைக் கூறுகிறாய். அதனை நீ சொன்னதில் குற்றம் இல்லை. அப்பொழுது, சுந்தரர் பெருமான் சிவபெருமானை விண்ணப்பித்துப், பிள்ளையைத் தந்தருளவேண்டும் என்று சொன்னாரே அன்றித், தாமாக அந்தப் பிள்ளையை அழைக்கவில்லை. ஆகவே திருவருளைப் பெற்ற ஆன்மா ஐந்தொழில் செய்யும் என்று நீ சொன்னதில் பொருள் இல்லை.

இவை எல்லாம் இருக்கட்டும்; சிவபெருமானின் திருவருளைப் பெற்றவர்கள், அவன் செய்தருளும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் தொழில்கள் அனைத்தையும் செய்வதுஎப்படி என்று நீ கேட்கிறாய். அதற்கு விளக்கம் வருமாறு:—

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இரும்பு நெருப்புடன் கூடி, நெருப்பின் வடிவத்தைப் பெறும்; அப்போது அந்த நெருப்பு செய்யும் தொழில்கள் அனைத்தையும் இரும்பு செய்வதைப் போல என்று நீ சொல்வாய் ஆயின், திருவருளைப் பெற்ற சுந்தரர் பெருமானால் ஐந்தொழில் செய்யப்பட்டது இல்லை என்று நீயே நடைமுறையில் கண்டபின்பு, அந்தச் செய்தியை இரும்பும் நெருப்பும் போன்று என்று உவமையினால் உன் கருத்தைச் சாதிக்க எண்ணுகிறாய்.

அவ்வாறாயின், சீறிச் செல்லும் தண்ணீர், ஒருபுறம் சென்று, நெருப்போடு கூடி ஒற்றுமைப்பட்டு இருந்ததாயினும், நெருப்பைச் சேர்ந்த இரும்பு போல, இந்தச் சுடுநீர், வைக்கோல் முதலானவற்றைச் சுட்டுப் பொடி ஆக்க மாட்டாது.

நெருப்பு தண்ணீரோடு கூடி நிற்கையில், வைக்கோல் முதலானவற்றைச் சுடாது. தனியே நின்றதாயின் சுடும் என்று நீ கூறுவாய்; அப்படியானால், நெருப்பு என்னும் இந்த பூதத்தின் வடிவம் தனியே நின்று தொழிற்படுவது உண்டு ஆயின் காட்டுக. நெருப்பு ஒரு விறகை அல்லது இரும்பைச் சார்ந்து நின்று, அதன் தொழிலைச் செய்யுமே அன்றித் தனியே ஒருமுதலாக நின்று, தன் தொழிலைச் செய்யாது என்பதை அறிவாயாக.

ஆகவே, நெருப்பு இரும்பைச் சார்ந்து நின்று தன் தொழிலைச் செய்யுமே அன்றி, இரும்பு நெருப்பின் தொழிலைச் செய்யும் இயல்பு அதற்கு இல்லை. எனவே, திருவருளைப் பெற்ற ஆன்மாக்கள், ஐந்தொழில் செய்வர் என்று நீ சொல்வதில் பொருள் இல்லை.

அஃது எப்படி? ஒரு பேய் ஒருவனைப் பிடித்தபோது அந்தப் பேயின் செயல் எல்லாம், இவன் செயலாகக் காணப்படுகிறது. ஆகவே அருளைப் பெற்ற ஆன்மாக்கள் ஐந்தொழில் செய்வர், என்று நீ சொல்கிறாய். அவ்வாறாயின், சிவன் ஆன்மாவாய் இருந்து தன் தொழிலைச் செய்வானாகில், ஆன்மா சிவனது தொழிலைச் செய்யும் என்று கொள்வதா?

சிவனது தொழிலைச் செய்வதற்கு ஆன்மாவுக்கு உரிமை உண்டு என்று நீ சொல்வாய் ஆயின், ஒருவனைப் பேய் பிடித்து, அவனை அந்தப் பேய் விட்டு விட்ட நிலையில், பின்பு நிகழும் செயல்கள் எல்லாம் இவன் செயலா அல்லது அந்தப் பேயின் செயலா? இவை இவன் செயல் ஆயின், அந்தப் பேய் பிடித்தபோது, இவன் செய்தது அனைத்தும் அந்தப் பேயின் செயல்களாக இருக்கவேண்டும் என்பதை அறிதல் வேண்டும்.

அவை பேயின் செயல்கள் என்பதை அறியமுடியாவிட்டால், கடிதாக உள்ள நெருப்பு விறகு, இரும்பு முதலிய பொருள்களில் பதிந்து எரிவது போலச், சிவபெருமானும் அருள்பெற்ற ஆன்மாவில் பதிந்து, ஐந்தொழிலினைச் செய்கிறான். அஃதன்றி, ஆன்மா சிவனது தொழிலைச் செய்யாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மேலும் சிவபெருமான் என்றும் அழிவின்றி இருப்பவன்; ஆன்மாவின் உடம்பு கணப்பொழுதில் அழிந்துவிடும் தன்மையது. இப்படிப்பட்ட ஆன்மா அப்படிப்பட்ட சிவனதுதொழிலைச் செய்தானுகில் எந்தக் காலத்தில் செய்து நிறைவேற்றுவான்? உன் கொள்கையே உயர்ந்தது எனக் கொள்ளும் உன்மத்தனே, இதற்குப் பதில் கூறமுடியுமானுல் சொல். இஃது உயிர் பஞ்சக்கிருத்தியம் செய்யும் என்பதை மறுத்தது.

எல்லாம் அறிதல் செல்லாது உயிர்கள்
சிற்றறிவு எனும் இச்சொல் தவறு ஆகும்
என்பது என்? அலகைதன் பதம் அடைந்தோர்
கொண்டவாறு கண்டனம் என்னில்
மூங்கை அந்தர் உற்று ஓங்கிய குணம் குறி
செய்தது என்? இன்னும் பவ்வம் உற்று அழுந்தினும்
நாழி கொள்ளாது ஆழியில் அலைபுனல்
அதனுல் கருத்து முதல் உளது ஆக
வேண்டும் அன்றே ஈண்டு இனி அமையும்
எல்லாம் எனும் இச்சொல்லால் படும்பொருள்
அனைத்தும் தாக்காத் தனிப்பரத்து உற்றவர்க்கு
எவ்வகை உணர்வு செய்வதுஎன் செப்புக.

தெளிவுரை:

முத்தியில் ஆன்மா ஐந்தொழில் செய்யும் என்று சொன்னது மட்டும் அன்றி, அஃது எல்லாவற்றையும் அறியும் என்றும் நீ சொன்னுய், ஆன்மா எல்லாவற்றையும் அறியாது; எல்லாம் அறிந்திருக்கும் திருவருள், ஆன்மா விடத்தில் பதிவதால், இவன் எல்லாவற்றையும் அறிவன் என்று நீ சொன்னுல், வேதாகம புராண சாத்திரங்கள் ஆன்மாவைச் சிற்றறிவுடையவன் என்று சொல்வதுகுற்றம் ஆகும், என்று சொல்வதற்கு என்ன காரணம்?

பேயின் பதவியைப் பெற்றவர்கள், அந்தப் பேய்க்கு உள்ள வருங்கால நிகழ்ச்சிகளை எல்லாம், அவர்களிடத்தில் சொன்னவாறு எல்லாம் காண்கிறேமே என்றுல், ஊமையாயும் கண் இரண்டும் தெரியாதவனுமாய் இருக்கிற ஒருவனிடம், இவையெல்லாம் குறைவு அற்று இருக்கும் பேய் ஒன்று வந்து சேர்ந்தபோது, ஊமையாய் இருக்கும் அவன் நாவினுல் எதையும் சொன்னதும் இல்லை; கண் தெரியாத அவன் எதையும் கண்டதும் இல்லை. எனவே பேயின் தன்மை அனைத்தும், பேயினுல் பிடியுண்ட ஒருவனுக்கு உண்டாகாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மேலும், சமுத்திரத்தில் ஆழமாக முகந்து எடுத்தாலும் நாழியானது அந்தச் சமுத்திர நீர் முழுவதையும் கொள்ளாது; அதுபோலவே, பேரறிவுடைப் பொருளாகிய இறைவனோடு கூடி இருந்தாலும், உயிர்க்கு உள்ள அறிவு உண்டாகுமே அன்றி, இறைவனுக்கு உள்ள அறிவு முழுவதும் ஆன்மாவுக்கு உண்டாகாது. அநாதியே இந்நிலை தொடர்ந்து வருவதால், அருளோடு கூடிய நிலையிலும், ஆன்மா எல்லாவற்றையும் அறியும் என்று சொல்வதை இனி விட்டுவிடு.

எனவே, எல்லாவற்றிற்கும் மேலாய் இருக்கும் சிவபெருமானோடு கூடினவர்களுக்கு, 'எல்லாம்' என்று சொல்லப்படும் சொல்லினால் ஏற்படும் பயன்கள் அனைத்தும் உண்டாகாது. மேலும், பிறப்பு நிலை நீங்கி முத்தி நிலை அடைந்து விட்டதனாலே, பழைய தன்மை உள்ளது என்று கூறவும் கூடாது. ஆகையால், திருவருளைப் பெற்றவர்களது அறிவு எப்படி இருக்கும். தொழில் எப்படி இருக்கும் என்பதைச் சொல்வாய் ஆக (இது சிவனைப் பெற்ற ஆன்மாக்களுக்குப் பேரறிவு உண்டாகும் என்பதை மறுத்தது).

குறிப்பு: முத்தி நிலையில் ஆன்மா சிவமாம் தன்மை பெறுகிறது என்றாலும், எல்லா ஆன்மாக்களும், ஒரே தன்மை உடையனவாக இல்லாமையால் அந்தந்த ஆன்மாவின் இயல்புவேறுபாடு உடைமை பற்றி ஒவ்வொரு ஆன்மாவுக்கும் வெவ்வேறு விதமான அனுபவ உணர்வு, சிவமாம் தன்மையையே பெறும் என்க.

ஒன்றின் ஒன்றும் ஒன்றாது உலகில்
நின்றபோது உயிர் நேராம் அன்றே.
முத்தி உற்ற நற்றவர் அவையிடைச்
சேர்வர் என்றனை; சார்தரு முத்தி
சாலோக்கியமோ சாயுச்சியம் எனில்
பந்தம் உற்ற கந்து அலக்கழித்த
அறிவினோடு அறிவு பிறியாப் பெற்றி
வேண்டும் என்பதற்கு, ஈண்டு இவர் இவ்வாறு
இருப்பர் என்பதற்கு உருத்தான் வேண்டும்;
அண்ணலது அருளின் நண்ணினர் இருப்பினும்
சீவன் முத்தர் என்று ஓதினர் அகன்று
நீங்கியும், உருவம் நீங்கா தாயின்,
ஓங்கிய முத்தியாவதுஎன் உரைக்க
செடி உடல் அணுகாக் குடிலைக் கொடுக்கும் என்று
ஓதினை நீயே, பேதாய் பகட்டுரல்,
ஒளிர்சினை முச்சித் தளிர்எனும் இதுதகும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இச்சா ரூபம் நச்சினர் என்னின்
மும்மலத்து ஏதும் இன்மையது அன்றே
இது வளர் முத்திப் பதம் என இயம்புவர்
ஈங்கு இவை நிற்க.

தெளிவுரை:

முத்தியில் ஆன்மாவும் சிவமும் ஒன்றுகும் என்றால், ஆன்மா இல்லை ஆகும். அப்படிப் பரமுத்தி அடையாமல், உடலோடு கூடி சீவன் முத்தனும் நின்றது என்றால், அப்படி நின்ற ஆன்மா, சிவனுக்குச் சமம் ஆகும். ஆகவே, இது பொருள் ஆகாது.

மேலும் திருவருளைப்பெற்றவர்கள், முன்பே முத்தியைப் பெற்ற பெரியவர்கள் கூட்டத்தின் நடுவே சென்று, கூடி இருப்பார்கள் என்று நீ சொன்னாய். இப்படிப் பொருந்திய முத்தி சாலோக முத்தியைச் சொன்னயா? அஃதன்றிச் சாயுச்சிய முத்தியைச் சொன்னேன் என்று நீ கூறினால், உடலோடு கூடி நிற்கும் ஆணவ மலத்தினால் மறைக்கப்பட்டுள்ள சிற்றறிவு, பேரறிவினோடு கூடியபோது, இரண்டும் பிரியாமல் ஒன்றுபட்டு நிற்கவேண்டும்; அதற்கு இங்குப் பரமுத்தியைப் பெற்றவர்கள், முன்பே முத்தி பெற்ற பெரியவர்களோடு கூடி இருப்பதற்கு இவர்களுக்கு ஓர் உடல் ஏற்படவேண்டும்.

மேலும், சிவபெருமானின் திருவருளோடு கூடினவர்கள், பரமுத்தியை அடையாமல், உடலோடு கூடி இருந்தார்களாயினும், அவர்களுக்கு உடல் தொடர்பு இல்லை. அவர்களைச் சீவன் முத்தர் என்று நல்லவர்கள் சொன்னார்கள். அவ்வாறு இருப்பினும், உடற் தொடர்பு நீங்காமல் இருந்தால், அவர்கள் பரமுத்தியை எப்படிக் காண்பர்? சொல்.

அவ்வாறின்றி, அந்த முத்தி இந்த அசுத்த மாயா சரீரம் பொருந்தாது. சுத்த மாயா சரீரத்தோடும் கூடி அவர்கள் இருப்பார்கள் என்று நீ சொன்னாய். அறிவு இல்லாதவனே, பல தலைமுறையாக அரிசி, நெல்லு குத்தி வரும் உரலில், கொம்பு முளைத்து, அதன் நுனியில் இளந்தளிர் உண்டானது என்று நீ சொல்வது, எது போல உள்ளது என்றால் மும்மலங்களும் நீங்கிப் பரமுத்தியைப் பெற்றபொழுது ஆன்மாவுக்கு உடல் உண்டு என்று சொல்வதைப் போல் உள்ளது.

இஃது அன்றியும், சுயேச்சையினால் எடுக்கப்பட்டிருக்கும் சரீரத்தொடு கூடிப் பிரியப்பட்டு இருந்தனர் என்று நீ சொல்வாய் ஆயின், ஒருவனுக்கு ஓர் உடல் உண்டாகும்போது, கன்மத்தால் அன்றி உண்டாகாது. அந்தக் கன்மமும் ஆணவமலத்தால் அன்றி உண்டாகாது. ஆகவே, முத்தியில் ஆணவம், கன்மம்,

CC-0. In Public Domain. Cuddalore Collection, TN.

Digitization by eGangotri-South Center

மாயை என்னும் மும்மலங்களுள் ஒரு மலமும் உனக்கு நீங்கியது இல்லை ஆகும்.

இப்படி ஒரு சரீரத்தோடு கூடிக் கொண்டு இருக்கும் முத்தியைச் சாயுச்சியத்திற்கு ஏதுவாய் இருக்கின்ற சாலோகம் முதலிய பத முத்திகள் என்று நல்லோர்கள் சொல்வார்கள். இங்கு நீ தவறாகச் சொல்லி வந்த பெத்தம் முத்திகளை விட்டு விட்டு, நான் சொல்வதைக் கூர்ந்து கேட்பாயாக.

13. *சங்கிராந்தவாதி சங்கற்பம்*

நீங்காது ஒளிர் உயிர்
விளக்கு என நிற்கும் அளப்பு உறும் அறிவு இன்று;
இறைவற்கு ஏதும் அறிய வேண்டின்றே;
மன்னும் ஆன்ம சன்னதி அளவில்
காந்த பசாசத்து ஏய்ப்ப வாய்ந்த
உயிர் உடல் இயக்கும் செயல்உறு பூட்டைப்
பலவகை உறுப்பும் இலகிய தொழில் போல்
ஐம்பொறி புலன்கள் இன்புறும் அன்றே;
இனைய வாயிலின் நிகழ்தரு பயன் அவை,
அந்தக் கரணம் முந்தி உணர்ந்திடும்
இவை அகல்வுழி ஐம்பொறி புலன் நிகழாது
உயிர் நீங்கிடில் உடல் செயல் இலது அன்றே
இவ்வகை வினையின் செவ்விதின் நடத்தும்
பழமலம் நீங்க நிகழும் காலை,
ஏற்றோர் முக ஒளி தோற்றும் கலன் எனத்
தலைவனது அருள், உயிர் நிலவிடும்; நிலவக்
காட்டத்து ஆங்கி மாட்டத் தங்கிய
தன்மையும் அளத்துப் புல்வையின் நீப்பும்
போன்று, அதுவாகித் தோன்றிடும்; அதனால்
பசுகரணங்கள் சிவகரணங்கள்
ஆக மாறி, அறிவும்
ஏகமாம் உயிர் யான் எனது இன்றே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

ஆன்மா நீங்காத ஒளியோடு கூடியிருக்கும் விளக்கைப் போல, சுட்டு அற்று நிற்கும்; அஃது இஃது என்று அளவிட்டுச் சுட்டி அறியும் அறிவு ஆன்மாவுக்கில்லை, இறைவன் மாறுபாடு இல்லாதவன் ஆகலின், அவனுக்கு ஒன்றையும் அறியவேண்டியது இல்லை.

என்றும் உள்ள ஆன்மாவின் சந்நிதியில் காந்தம் அசைவற்று நிற்கும் நிலையில், இரும்பு காரியப்படுவது போல, ஆன்மா மாறுபாடு இன்றி நிற்க, பிராணவாயு உடலைக் காரியப்படுத்தும். சமைக்கப்பட்ட பூட்டைகள் (நீர் ஏற்றும் கருவி) இடத்துப் பட்டடை, கதிர், முதலிய பல உறுப்புக்கள் வருவது போல, இந்திரியங்கள் சத்தாதி விடயங்களை அனுபவிக்கும்.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் இந்திரியங்களால், சத்தாதி விடயங்களை, மனம், புத்தி, அகங்காரம் என்னும் உட்கரணங்கள் அறியும். இந்த அந்தக்கரணங்கள் நீங்கியபோது, ஐம்பொறிகளோடு பஞ்ச விடயங்கள் சேர மாட்டா. இஃது உயிர்க்குள்ள சகல நிலை.

பிராண வாயு நீங்குமாயின், உடல் சேட்டை இன்றி நிலைப்பட்டுக் கிடக்கும். இது கேவல நிலை. இப்படி ஆன்மாவின் சந்நிதியிலே பிராணவாயு பிராரத்தத்தை நுகர்ந்து கொண்டு வரும். இது பெத்த நிலை. மேற்கொண்டு முத்திநிலை பற்றிச் சங்கிராந்தவாதி பேசுகிறான்.

இவ்வாறு பிராரத்தம் அனுபவித்து வருகையில், ஆன்மாவுக்குள்ள ஆணவமலம் நீங்கத் தக்கதாக, இருவினை ஒப்பும் சத்திநிபாதமும் உண்டாகின்றன; அந்நிலையில், கண்ணாடியை எடுத்துப் பார்த்தவர்கள் முகத்தின் எதிர் ஒளி (பிரதிபிம்பம்) அந்தக் கண்ணாடியில் தோன்றுவது போல, இறைவனது திருவருளும் ஆன்மாவினிடத்தில் கூடும்.

அப்படிப்பட்ட நிலையில் விறகில் நெருப்பைக் கொளுத்தியபோது, அந்த விறகுக்கு ஏற்பட்ட தன்மை போலவும், உப்பளத்தில் இட்ட, புல், வைக்கோல் முதலானவற்றின் தன்மை கெட்டு, உப்புத் தன்மை ஏற்படுவது போலவும், ஆன்மாவும் தன் தன்மை கெட்டு அருள் வடிவாய்த் தோன்றும்.

இவ்வாறு இந்த ஆத்மா, பசுத்துவம் கெட்டுச் சிவத்துவம் ஆனதனால் பசுகரணங்களாய் உள்ள தன் தன்மை கெட்டுச் சிவகரணங்களாக மாறி, அதன் அறிவும்இரண்டாக நில்லாமல், அருளோடு கூடி ஒன்றாகும். அதன்பிறகு, ஆன்மாவுக்கு 'யான் எனது' என்னும் உணர்வு இல்லாது ஆகிவிடும். இவனை ஈசுவர அவிகாரவாதி மறுக்கிறான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

14. சங்கிராந்தவாதி நிராகரணம்

இன்று உனது உரையின் நன்றி உயிர் ஒளித்
தீபம் போலத் தாபம் தரில், இருள்
செறியும் தன்மை என்? அறிவு இலது ஆகில்,
ஒளி என உரைத்த தெளிவு அதற்கு ஏதாம்?
சன்னதி அளவில் மன்னும் செயல் உடல்
காந்தம் போல வாய்ந்தது என்ற
தன்மையும் உணராப் புன்மையை யன்றே
உயிர் உடல் இயக்கில், துயில் பெறும் காலைச்
செய்தது என்? மருதி எய்து உயிர் பொறி புலன்
நடத்த ஆவியும் சடத்தன ஆயின்,
பூட்டையில் பூணி கூட்டல் பெருதே;
புலன், ஐம்பொறியில் நிலவிடும் என்றனே;
அஞ்சும் ஒருகால் துஞ்சாது அறிதற்கு
அழிவுஏன்? நற்றருச் செழுமலர் இலைபலம்
கனி தருவதுபோல் இனையவை ஐந்தும்
ஒன்று ஒன்ருக நின்று அறிவுறும் எனில்
ஒன்றின் பயன் நனி ஒன்று அறியாது ஆல்;
இதுவே அல்லது கதும் என இருசெவி
இருகூற்று ஒருகால் தெரியாத் தன்மை வந்து
எய்தும்; மருதியும் மெய்யில் செயலும்
தனக்கு இலை ஒருவர்க்கு எனத் தெளிகிலையே.

தெளிவுரை:

இப்பொழுது நீ பலவாகச் சொல்லிவந்த பெத்தம் முத்தியின் நன்மையைச் சிந்திக்கையில், ஒளியினையுடைய விளக்குப் போல் ஆன்மா இருக்குமாயின், அந்த ஆன்மாவுக்கு அஞ்ஞானம் ஆகிய இருள் எப்படி ஏற்பட்டது? ஆன்மாவுக்கு அறிவு இல்லாமையினுல் அஞ்ஞானம் ஏற்பட்டது என்ருல், ஆன்மா ஒளியுடையது என்று சொல்லிவிட்டு, அஃது அறிவற்றதாயிருப்பதால் அஞ்ஞானம் ஏற்பட்டது என்று நீ சொல்வது எப்படிப் பொருந்தும்.

ஆன்மாவினிடத்தில் பொருந்தியுள்ள பிராணவாயு இயக்கினுல்தான் உடல் செயல்படும். அது காந்தத்தின் முன் உள்ள இரும்பு செயல்படுவதைப் போன்றது என்று நீ முன்பு சொன்னதை, இப்போது சிந்திக்கத் தவறிவிட்டாய். அவ்வாருயின், உடலை இயக்கும் பிராணவாயு, உறங்கும்போது அந்த அந்த

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உடலோடுதானே உள்ளது? அப்போது உடல் இயங்கவில்லையா? எனவே உடலை இயக்குவது ஆன்மாவே அன்றி , பிராணவாயு அன்று.

ஆன்மா, மாறுதல் அடையாமல் இருந்தால் அன்றி, இவற்றை இயக்காது என்று நீ கூறினால், மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் அந்தக் கரணங்கள், பிராணவாயு பொறி புலன்கள் முதலிய அனைத்தையும் இயக்குவதற்கு, ஆன்மா சடமாய் இருக்குமாயின், செக்கில் – (பூட்டையில்) எருதுவினால் (பூணியினாலே) எல்லாம் செயல்பட்டு வருவதால், நீ பூணியை ஆன்மாவுக்கு உவமையாகச் சொன்னது பொருந்தாது.

சத்தாதி விடயங்கள் ஐந்தும், இந்திரியங்கள் ஐந்திலும் வந்து சேரும் என்று நீ சொன்னாய்; ஐந்து விடயங்களையும் ஐந்து இந்திரியங்களும் கொள்ளுமாயின் ஐந்தும் ஏக காலத்தில் அறியவேண்டும். விடயங்கள் ஐந்தில், ஒன்று இயங்கி மற்றை நான்கும் இயங்காமல் இருப்பதற்கு என்ன காரணம்?

நல்லதொரு மரம் ஒரு காலத்தில் இலைகளைத் தோற்றுவிக்கிறது; ஒரு காலத்தில் செழித்த மலர்களைத் தோற்றுவிக்கிறது; பிறிதொரு காலத்தில் காய்களைத் தோற்றுவிக்கிறது; மற்றொரு காலத்தில் கனிகளைத் தோற்றுவிக்கிறது; இந்த மரத்தின் தன்மைபோல் இந்திரியங்கள் ஐந்தும் ஒவ்வொரு விடயங்களாக செயல்படுகின்றன என்று நீ சொல்வாய் ஆயின் ஒரு கொம்பில் ஒரு காலத்தில் இலையும் பிறிதொரு காலத்தில் பூவும் உண்டாவது போல, ஓர் இந்திரியத்தின் விடயத்தை மற்றோர் இந்திரியம் அறிவதில்லை என்பது தெளிவு.

இந்தக் குற்றம் அன்றி, மற்றொன்றும் உண்டு. ஓர் இந்திரியமாய் இருக்கும் இரண்டு செவியிலும் 'சடக்' என இரண்டு ஒலி ஒரு காலத்தில் கேட்கும் நிலையில் ஒருவன் சொன்னதை அறிந்தும் மற்றொருவர் சொன்னதை அறியாமலும் இருக்கிறது. மேலும், அந்த இந்திரியங்களின் தொழில் தனக்கு இன்றி ஆன்மாவுக்கு ஆயினாற்போல அந்தக் கரணங்களுக்கு உண்டான தொழிலும் உடலுக்கு உண்டான தொழிலும் இவற்றிற்கு உள்ளதல்ல; ஆன்மாவுக்கு உள்ளது என்று தெளிவாயாக. எனவே ஆன்மா மாறுதல் அடையாததன்று; அது மாறுதல் அடைவதே ஆகும். இது பிறப்பு நிலையை மறுத்தது.

நோக்கும் முக ஒளி நீக்காத் தான் எனக்
கவரும் தன்மை முகுரம் போலக்
கொடுத்தது கோடற்கு அடுத்தது உண்டு அன்றே;
காட்டத்து அங்கி கூட்டக்கூடும் 25
இந்தனத்து இயற்கை வெந்தழல் தாங்கா;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உப்பளத்து அடுத்த புற்பலாலங்கள்
சடத்த வேனும், கொடுத்தது கொள்ளும்
தன்மை உண்டு, உனக்கு இன்மையது அன்றே?
அவம்உறு கருவி சிவமயமாம் எனக்
கூறினை; தாகம் வேறு உருக்கவராது
என்பது என் அவை முன் துன்பம் துடைக்கும்
திருவருள் மருவ உரியன் என்னில்,
சத்தப் பரிசரூப ரச கெந்தம் என்று
எத்திறத்தினது அருள் இயம்புக; அன்றியும்
நிறைந்து நீயாய் நின்றனை யேனும்
மறைந்து ஐம்புலனால் வாராய் என்றும்,
கரணம் எல்லாம் கடந்தனை என்றும்,
மரணம் ஐயைந்தின் அப்புறத்து என்றும்
முன் அருள்தலைவர் பன்னினர் எனவும்
இனையவை ஒழிய அறிகுவது எவ்வாறு
என்ற நிற்கு, அலிக்கு ஒன்றியம் இன்ப
கூறுதல் தரும்; மருட் பேறினை யன்றே
ஏகம் உயிர் அறிவாக மொழிந்தனை;
இருபொருள் ஒருமை மருவியது இலதே;
இவ்வகை கிடக்க மெய்வகை கேள்மதி

தெளிவுரை:

முத்தியின் இயல்பைக் குறித்து நீ சொன்னபோது, கண்ணாடியில் பார்ப்பவரின் முகத்து ஒளி அந்தக் கண்ணாடியில் தெரிவது போல, சிவபெருமானின் திருவருளும் ஆன்மாவில் ஒளிரும் என்று கூறினாய், கண்ணாடியைப் பார்ப்பவரின் ஒளியை விட்டு நீங்காமல், கண்ணாடி இருப்பதால் தான் கண்ணாடியில் அந்த முக ஒளி தெரிகிறது. கண்ணாடிக்கு ஒளியைக் கொடுக்கும் முக ஒளியைப் போல், இறைவனுக்கு நீயே ஒளியைத் தருகிறாய் என்று கூறுவதுஅடுக்காது. மேலும், விறகில் உண்டாகும் நெருப்பை ஆன்மாவுக்கு உவமை சொன்னாய். நெருப்பு விறகை எரித்துவிடுவதால் அது பொருந்தாது.

உப்பளத்தில் போட்ட புல்லும் வைக்கோலும் சடமே ஆயினும், உப்பின் தன்மையைப் பெறுமே அன்றி, கெடுவதில்லை; அவற்றிற்குக் கொடுத்ததைக் கொள்ளும் தன்மை உண்டு. அவ்வாறு கொடுப்பதைக் கொள்ளும் இயல்பு உயிர்க்கு இல்லை. மேலும், அசுத்த மாயையிலிருந்து தோன்றும் கருவி கரணங்கள் திரிபுணர்ச்சியைத் தருவன; அவற்றைத் திருவருள் வடிவம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்று கூறினுய். அஃது எப்படிப் பொருந்தும்? மாயா வடிவம் வேறு; அருளுருவம் வேறு. மாயா வடிவம் மல சம்பந்தம் உடையது; எனவே அருளுருவம் மாயா வடிவமாகாது.

மாயா கருவிகள் தொன்றுதொட்டு (அநாதியே) உயிர்களுக்கு உள்ளமையால், அவற்றின் உதவியின்றி உயிர் திருவருளை அறியாது என்று நீ சொன்னுல், அது பொருந்தாது. அவ்வாறெனில், திருவருளும் மாயையில் தோன்றிய இருள் வடிவங்களில் ஒன்ருக வேண்டும். சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் ஆகியவற்றுடன் கூடி இவற்றை அறிந்துவரும் மாயா கருவிகளுக்கும் திருவருளுக்கும் எவ்வளவு தூரம் உள்ளது! இதற்குப் பதில் சொல்.

மேலும்,

''நிறைந்து எங்கும் நீ யேயாய் நின்ருலும் ஒன்றி
மறைந்து ஐம் புலன் காண வாராய் – சிறந்த
கணியாரும் தண்சோலைக் காளத்தி ஆள்வாய்
பணியாயல் என்னும் பரிசு''

என்று ''கயிலை பாதி காளத்தி பாதி'' (48) – யில் அருளிச் செய்தவாறும்,

''கரணங்கள் எல்லாம் கடந்து நின்ற கறைமிடற்றன்
சரணங்களே சென்று சார்தலுமே தான் எனக்கு
மரணம் பிறப்பு என்று இவை இரண்டின் மயக்கு அறுத்த
கருணைக் கடலுக்கே சென்று ஊதாய் கோத்தும்பீ''

என்று திருவாசகத்தில் அருளியவாறும்,

''பையஞ்சுடர் விடு நாகப் பள்ளிகொள்வான் உளத்தானும்
கையஞ்சு நான்குடை யானைக் கால் விரலால் அடர்த்தானும்
பொய் அஞ்சி வாய்மைகள் பேசிப் புகழ் புரிந்தார்க்கு அருள் செய்யும்
ஐயைஞ்சின் அப்புறத்தானும் ஆரூர் அமர்ந்த அம்மானே''

4–4–10

என்று அப்பர் மூர்த்திகள் அருளிச் செய்தவாறும், திருவருளின் பொருளை உற்று நோக்குக.

இந்திரியங்களை விட்டால், உயிரின் அறிவு நிலைக்காது என்று கருதி, இந்திரியங்களை அன்றித் திருவருளை அறிவது எப்படி என்று நீ கேட்கிருய்? ஒருவனும் ஒருத்தியும் கூடி அனுபவிக்கும் உடலின்பத்தைக் குறித்து அலியாக இருக்கும் ஒருவனுக்குச் சொன்னுல் , அந்த அலி அதை எப்படிப் புரிந்து கொள்ளமாட்டானே, அப்படியே திருவருள் இன்பத்தைக் குறித்து உனக்குச் சொல்வதை நீயும் புரிந்து கொள்ளவில்லை. மாயையில் மயங்கிப் பொருளை அறிவதே பேறு என நீ கருதுகிருய்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அருளும் ஆன்மாவும் கூடிய நிலையில் இரண்டும் ஒன்றாய் விடும் என்று நீ சொன்னாய்; இந்த உலகத்தில் ஒரு மூலப் பொருள் அழிந்து வேறு ஒரு மூலப்பொருளாக மாறுவதோ அல்லது இரண்டு மூலப்பொருள்கள் கூடி ஒரு மூலப்பொருளாய் நிற்பதோ நிகழ்வது இல்லை. எனவே, அருளும் ஆன்மாவும் தனித்தனி மூலப் பொருள்கள் ஆகலின், இரண்டும் கூடி ஒன்றாய் நிற்கும் என்பது பொருந்தாது. இதுகாறும் நீ கேட்டவற்றிற்கு நான் சொன்ன உவமைகளை நன்றாகக் கேட்டுச் சிந்திப்பாயாக.

15. ஈச்வர அவிகாரவாதி சங்கற்பம்

பல்துளைக் கடத்தினுள் விளக்கு ஏய்ப்ப
அறிவு உளதாகும் உருவுறும் உயிர்கள்
கண்ணால் ஓசையும் கரணமும் கருத
ஒண்ணாது என்னும் உணர்வு உடைமையினால்
அவ்வவ் புலன்கட்கு அவ்வவ் பொறிகள்
செவ்விதின் நிறுவிச் சேர்ந்தவை நுகரும்;
மூலமலத்தின் பாகம் வந்து உதவுழி
இருள் தரும் இயல்புக்கு ஒரு பொருள் கவரத்
தீபம் வேண்டு மானவா போல
மோக மாமலம் போக ஞான
விளக்கு அரன் அருளால் துளக்கறப் பெற்று
நீர் நிழல் அனைய சீர் பெறுகடவுளை
சலம் இலன் ஆகிச் சார்ந்தவர்க்கு என்றும்
நலம்மிக நல்கும் நாதனை அணைந்து
பூழி வெம்மை பொருந்தாது உயர்ந்த
நீழல் வாழும் நினைவினர் போலத்
திருவடி நீழல் சேர்ந்து
கருவுறு துயரம் களைந்து இருந்திடுமே

தெளிவுரை:

பல துவாரங்களை உடைய குடத்தினுள் இருக்கும் விளக்குப் போல, ஒன்பது வாசல்களை உடைய உடம்பில் உயிர் அறிவேயாய் இருக்கும். உடலில் உள்ள ஒன்பது வாயில்கள் வருமாறு:– கண் இரண்டு, காது இரண்டு, மூக்குத் துளை இரண்டு, வாய், எருவாய் மற்றும் கருவாய்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கண்ணைக் கொண்டு வடிவத்தைக் காண்பது அன்றி, ஒலியையோ, ஊறையோ, நாற்றத்தையோ, சுவையையோ, ஆன்மா அறிய முடியாது; அத்தகைய அறிவு இந்த உயிர்க்கு உள்ளமையால் உயிர் தனக்குக் கொள்ள வேண்டிய அந்தந்த விடயங்களை, அந்தந்தப் பொறிகளில் கலந்து பொறிகளின் வாயிலாகவே விடயங்களை நுகரும்.

இந்நிலையில், ஆணவமல பரிபாகம் வரும் போது இறைவன் அருளால் ஞானத்தைப் பெறும். எப்படிப் பெறும் என்றால், இருள் நிறைந்த வீட்டின் உள்ளே சென்று, ஒரு பொருளை எடுக்கும் பொருட்டு, ஒரு விளக்கு தேவைப்படுவதைப் போல இந்த ஆன்மா தனக்குள்ள அஞ்ஞான இருள் ஆகிய ஆணவமலம் நீங்கும் பொருட்டு, ஞானம் ஆகிய ஒளியைப் பெறும்.

ஆன்மா அவ்வாறு அருளைப் பெற்று, நீர் நிழல் போல ஒருவரிடத்திலும் சார்பு இன்றி நிற்கும் சிவபரம் பொருளை, தன் அடைந்தார்க்கு இன்பங்கள் தரும் தலைவனை, வெயிலில் சென்றவர் அதன் சூடு தாங்காமல், மரத்தின் நிழலை அடைதல் போல அவனது திருவடி நிழலை அடைந்து, பிறவித் துன்பம் நீங்கப் பெறுவர். (பூழி – புழுதி).

16. ஈசுவர அவிகாரவாதி நிராகரணம்

இருந்ததுஉன் கேள்வி, திருந்திடும் உயிர்கள்
அறிவின ஆயின் பொறி புலன் என்னை?
மற்று அவை பற்றி உற்று அறிந்திடுதலின்,
அறிவு என வழங்கும் உயிர் என உரைத்தல்
காணும் கண்ணினன் கைகொடு தடவிப்
பூணும் பொருளின் பெயர்பல புகறல்
என்னும் கிளவி தன்னொடு தகுமே.
அவ்வவ் புலன்கட்குஅவ்வவ் பொறிகளைச்
செவ்விதின் நிறுவலின் அறிவு எனச் செப்பினை
அறிவு இலாமை கண்டனம்; அணைபுலற்குப்
பொறிகள் ஏவலின் அறிவொடு பொருந்தில்
கண்டதோர் பொறியால் கொண்டிட வேண்டும்;
உதவியது ஒன்றால் கதும் என இயற்றினர்
உண்டோ என்னில் கண்டது மேல் நாள்
கடவுளின் கடிமலர் முடுகிய மதனன்
அங்கம் அனங்கம் தங்கிடக் கிடந்தது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வையின் திரனில் செய்ய சிறுபொறி
மாட்டி மூட்டியது அன்றே; மீட்டும்
தேன் அமர் தவிசில் நான்முகன் உச்சி
அறுத்ததும் கருவி பொறுத்தோ அன்றே;
ஈசனது இயல்பு பேசுதல் தவிர்க
காழி மா நகர்க் கவுணியர்கடவுள்
ஞானம் ஆகிய நற் பதிகங்கள்
எழுதுறும் அன்பர்தம் இன்புறு மொழியால்
களிறு என அணைந்த கல் மனப் புத்தன்
முருட்டுச் சிரம் ஒன்று உருட்டினர் அன்றி,
வாய்ந்த வாள் ஒன்று ஏந்தினர் இலரே;
என்றதும் ஈர்வாள் கொன்றது என்பதுபோல்
தனித்துணை அருளால் துணித்தனர் என்பர்;
ஆதலின் வாயில் அளவிளில் அறிதலின்
ஏததும்இல் அறிவு உயிர்க்கு எய்துதல் இலதே.

தெளிவுரை:

ஈசுவர அவிகார வாதியை, பரிணுமவாதி மறுக்கிருன்: நீ கேட்ட கேள்வி இப்படி இருந்தது; நான் சொன்னதில் என்ன தவறு? உயிர்கள்அறிவோடு கூடியிருக்குமாயின், பொருள்களை அறிவதற்கு பொறிகளின்உதவி அவற்றிற்கு எதற்கு? அறிவு தானே விளங்கப் பெற்ற உயிர். பொறிகளின் உதவியால் பொருள்களை அறியும் என்று நீ சொல்வது, கண்ணுல் காணும் ஒருவன் கையால் தடவிப் பொருள்களின் தன்மையை அறிந்து, அவற்றின் பெயர்கள் பலவற்றைக் கூறினுன் என்று சொல்வதோடு ஒக்கும். இதிலிருந்து, உயிர்கட்கு அறிவு இல்லை என்பது கண்டோம். ஏனெனில், அறிவுடையதாயிருந்தால், அஃது ஏன் பொறிகளை ஏவவேண்டும்?

மேலும் சடமாய் இருக்கும் ஒன்று, பொறிகளைக் கொண்டு ஒன்றை அறிந்ததைக் கண்டோம் இல்லை. எனவே, தன்னேடு தொடர்புபடுத்துதற்கு தேவையான பொருளுக்கு ஏற்ற பொறிகளை ஆன்மா ஏவுதலால்,அஃது அறிவுடையது என்று நீ கூறினுல், அந்நிலையில் கிடைத்த பொறியைக் கொண்டு, தனக்குத் தேவையானவற்றை ஆன்மா அனுபவிக்கவேண்டும். அஃது இல்லாததால், ஆன்மா அறிவுஅன்று.

காதினுல் ஒலியை அறிதலை அன்றி, கிடைத்த பொறிகளைக் கொண்டு 'சடக்' என ஒரு செயலைச் செய்தவர் இந்த உலகத்தில் உண்டோ என்றுல், அப்படிக் கண்டது உண்டு. அது எவ்வாறு காணப்பட்டது என்றுல், அது வருமாறு:

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முன் ஒரு காலத்தில் பரமேசுவரன் யோகத்தில் இருந்தபோது, அந்த யோகத்தைக் கலைக்கக் கருதி மன்மதன் மணமுள்ள மலர் அம்பைத் தொடுத்தான். அப்போது அவனது உடம்பு சாம்பலாகியது. இறைவன் வைக்கோலை மன்மதன் மீது போட்டு அவனை எரிக்கவில்லை. ஈசன் கண்ணால் பார்த்த அளவிலேயே மன்மதன் எரிந்தான். அவ்வாறே நான்முகனின் தலையை பரமேசுவரன் கையில் உள்ள நகத்தினால் கிள்ளிப் போட்டானே அன்றி வாள்கொண்டு வெட்டவில்லை.

நான் ஆன்மாக்களுக்குச் சொல்ல, நீர் கர்த்தாவின் இயல்பு பேசுகிறீர். அதனை விடுத்து, ஆன்மாக்களின் இயல்பைக் கூறும்; ஆன்மாவின் இயல்பு அத்தகையதன்று; ஆன்மாவும் இறைவனது அருளைக் கொண்டே அருஞ்செயல் ஆற்றவல்லது.

சீகாழி நகரில்தோன்றிய திருஞானசம்பந்தப் பெருமானது திருப்பதிகங்களைச் சம்பந்த சரணாலயர் என்னும் அன்பர், கையினால் எழுதி வந்தார்; ஒரு சமயம் அவரைவாதில் எதிர்த்துவந்த புத்தன் ஒருவனின் தலை உருண்டு விழும்படி, அந்தப் பதிகத்தைப் பாடியே செய்தான்; அதற்காக அவர் வாள் எடுத்து வீசவில்லை. ஆகவே, ஆன்மா ஒன்றினை அறிவது இறைவன் திருவருள் துணைக்கொண்டே என்பதை அறிவாயாக. மேலும், பொறிகளின் துணைக்கொண்டு அறியும்அறிவு, அவற்றின் எல்லைக்கு உட்பட்டதே ஆகும். குற்றம் அற்ற வியாபக அறிவு திருவருளின் துணை இன்றி, ஆன்மாவுக்கு அமைவதில்லை.

இருட்டு விளக்கு ஒன்று ஏந்தினர் போல
மருட்டு ஞானம் மன்னுதல் உன்னும்
என்றனை; கருவிகள் யாவும் அசேதனம்;
துன்றிய உயிரும் துரியத்து அண்மையன்;
ஆதலின் அந்தர் அனைவரும் கூடித்
தீது அற அருநெறி தெரியும் என்றற்றே;
நீர் நிழல் அனைய சீர்பெறு கடவுளைச்
சேர்ந்தவர்க்கு இன்பம் வாய்ந்திடும் என்றனை;
பாதவம் என்றும் சேதனம் இன்மையின்,
இளைத்தோர் வம்மின் என்பது, துன்பம்
விளைத்தோர் தம் வயின் வெறுப்பும் ஒன்று இலதே;
பொடித்திடு பொடித்திடு கொப்புள் வெடித்திடு பாதம்
வெய்ய பூழியின் உள்ளூற அழுங்கி
ஆற்றுதல் இன்றி ஆறு இயங்குநர் முன்
தோற்றிடும் என்று சொல்லவும் இலாதல்,
இவ்வகை கடவுட்கு இயம்புதல் தவறே;
பாச அஞ்ஞானப் பழி வழி ஒழிக
ஈசனது அருள்வழி இயம்புவன் கேள் மதி,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

இருட்டில் ஒரு பொருளை எடுக்க வேண்டியவர், கையில் ஒரு விளக்கை பிடித்துக்கொண்டு போய், அந்தப் பொருளை எடுப்பதுபோல, ஒருவனது அஞ்ஞான இருள் நீங்குவதற்கு, ஞான விளக்கினைக் கொண்டு, அவன்தானே உண்மையை உணர்வான் என்று நீ கூறினாய்; அது பொருந்தாது.

கருவிகரணங்கள் அனைத்தும் சடம்; அவற்றை நீங்கிய நிலையில் ஆன்மா துரிய நிலையில் நிற்கும்; அந்நிலையில் ஆன்மா தானே, இறைஞானத்தை அறிந்து பயன்படுத்தும் என்றாய். அதுவும் பொருந்தாது. குருடர் பலர் கூடி, கதிரவனின் ஒளியைக் கொண்டு, பெருவழியில் சென்றார்கள் என்று கூறுவதைப் போல் இஃது உள்ளது.

மேலும், நீரையும் நிழலையும் போல, பாரபட்சம் இன்றி இறைவன், தன்னை வந்து கூடின பக்குவ ஆன்மாக்களுக்குப் பேரின்பத்தை வழங்குவான் என்று நீ கூறினாய்; அது பொருந்தாது. மரம் எப்போதும் சடமாய் உள்ளது; வெயிலில் சோர்ந்துஇருப்பவர்களைத் தன்னிடத்து வாருங்கள் என்று மரம் சொல்வதில்லை. தன்னை அடியோடு வெட்டிச் சாய்த்து போடுபவரிடத்து வெறுப்பு அடைவதும் இல்லை. உள்ளங்காலில் வெடிப்பு ஏற்பட்டு புழுதியில் பட்டு அழுந்தி, அதனால் ஆற்றமாட்டாமல், வழியில் நடந்து வருபவரது முன்பு சென்று, மரம் உமது துன்பத்தைப் போக்குகிறேன் என்று சொல்லாது, இறைவன் பக்குவ ஆன்மாக்களுக்குத் தானே சென்று பேரின்பம் வழங்குவான் என்று நீ கூறுவதும் இதனைப்போன்றதே ஆகும்.

உடல் தொடர்பு நீங்காமல், இறைவனையும் அவிகாரவாதம் சொன்னாய். இந்தக் குற்றத்தை உடைய முத்தி நெறியை விட்டு, இறையருள் வழியினைச் சொல்கிறேன்; கேள். (மதி – அசை)

17. நிமித்த காரண பரிணாமவாதி சங்கற்பம்

புவனம் யாவையும் புனிதனது உருவாம்
சிவமும் சத்தியும் எனத்தெளி; அவற்றுள்
அசேதனம் என்று ஒன்று அறைதற்கு இலது; அது
சேதனன் நுகர்பொழுது இரண்டும் ஒரு திறத்தே;
இது எனும் ஒன்றை அதுவாய்ப் படுத்துப்
பொதுமையில் நிற்கும் போதம் என்று அறிக;
பொற்பணிப் பேதம் புரைவழி ஒருவழி
நற்பொனில் திகழ்வு என் நயப்பது ஒன்று அன்றால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆவதும் ஆகாது ஒழிவதும் என்று இப்
பாவகம் உண்மை பாராதோர்க்கே;
பாராதோர் எனப் பகர்தலில், பல்லுயிர்
ஆராய்ந்து உரைக்கின், அவை பிற அல்ல;
பல பல பேதம் இல என்போரும் இல்;
கண்ணினது ஒளி அக் கண்ணினது எனில், அது
திண்ணிய இருளில் செறிபொருள் தெரித்தலும்
இன்மை, மின்மினி என இரு கண்மணித்
தன்மை தானும் தாவிலது; அதனால்
கண்ணினது உருவும் அதில் கதிர் ஒளியும்
நண்ணரும் சக்தி சத்தர்கள் நடிப்பே;
உலகு ஏழ் எனத் திசை பத்து என ஒருவன்,
பலவாய் நின்றபடி இது என்றும்
ஊனாய் உயிராய் உணர்வாம் என்றும்
மானக் கண்ணே மணியே என்றும்
தாமே தானாச் செய்தனன் என்றும்
நாமே சிவமாய் நண்ணினம் என்றும்
காயாய்ப் பழமாய்ச் சுவையாய் நுகர்வும்
ஓயாது உண்போன் தானே என்றும்
அறிவோன் தானும் அறிவிப்போனும்
அறிவாய் அறிகின்றோனும், அறிவுறு
மெய்ப்பொருள் தானும் வியந்து இது எனப்படும்
அப்பொருள் யாவும் அவனே என்றும்
தாய்தலைப் பட்டு அங்கு ஒன்றாய்த்து என்றும்
ஏதம் அற நான் கெட்டேன் என்றும்
இன்னும் இன்னும் இறையோர் அளித்தவை
பன்னில் எண்ணரும் பான்மைத்து ஆதலின்
தருபொருள், கொள்பொருள், தருவோன், கொள்வோன்,
ஒரு பொருள் இவ்வியல் உவப்பு என உணர்க;
நுகர்பொருள் சத்து இது, நுகர்வோன் சத்தன் என்று,
இகல் அறும் உணர்வு வந்து எய்துதல் அரிதே.

தெளிவுரை:

இந்த உலகம் முழுவதும் சிவ வடிவமாய் இருப்பது. இதில் உருவமாய் உள்ளதெல்லாம் சத்தி வடிவம்; அருவமாயிருப்பது எல்லாம் சிவ வடிவம் என்பதைத் தெளிவாயாக. அவற்றுள் சடம் என்று கூறுவதற்கு ஒன்றும் இல்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அருவாயும் அறிவாயும் இருக்கும் உயிர், அனுபவிக்கும் நிலேயில், அந்த இரண்டு வகையும், ஒரு பகுதியாகவே இருக்கும்.

இஃது என்று சுட்டப்படும் ஒன்றை நுகரும்போது, அப்பொருள் தானே ஆய் நிற்கும்; அந்நிலேயில் அறிவில் பொருள் என்றும் பகுக்கப்படாமல் பொதுமையில் நிற்கும் என்று அறிக. பொன் ஒரு பொருள் ஆயினும், பொன்னுக்கும் அணிகலனுக்கும் வேறுபாடு இருப்பது போல, அறிவுக்கும் உலகத்திற்கும் வேற்றுமை ஒருவேளே இப்படிக் கூறலாம்.

நல்ல பொன்னில் உள்ள மாற்று (Quality) அணிகலனிலும் காணப்படுவதால், பொன்னும் அணிகலனும் ஒரு தன்மை உடையது என்கிறேம்; அதுபோலவே, அறிவும் உலகமும் ஒரு தன்மை உடையதே.

இஃது எப்படி ஆகும் என்று கேட்டால், ஆவது, ஆகாதது என்று கூறுவதெல்லாம் உண்மையினே உணர்ந்தவர்க்கே புரியும்; இதன் தன்மை (பாவகம்) உண்மை உணராதவர்க்குப் புரியாது. உண்மை தெரியாதோர் என்று கூறியதால், உயிர்கள் பல என்று தோன்றும்; ஆயினும் அவை சிவனுக்கு வேருக இருப்பன அல்ல; எல்லாம் சிவமுதல் என்று அறிவாயாக.

சிவம் வேறு, உயிர் வேறு, உலகம் வேறு என்று பலவாகக் கூறுபவர்கள் உண்டு; அஃது உண்மை அன்று. கண்ணின் ஒளியைக் கண்ணிற்கு உரியது என்று கூறிஞல், நெருக்கமான இருளில் உள்ள பொருளே இன்னது என்று கண்ணிஞல் காட்ட முடியாது. ஒரு மின்மினி இருளேப் போக்கியது போல கூடக், கண்களின் இரு மணிகள் கூடியும் இருளே நீக்க முடியவில்லேயே?

எனவே கண்ணின் வடிவும், அதில் படுகின்ற கதிரவன் ஒளியும், சிவ சத்திகளின் நாடகமே என்று அறிவாயாக. இதனே எப்படி அறிவது என்ருல் கூறுகிறேன், கேள்.

திருவாசகம், ''உலகு ஏழ் எனத் திசை பத்து எனத் தான் ஒருத்தனுமே பலவாகி நின்றவா, தோணேக்கம் ஆடாமோ'' என்றும்,

அப்பர் தேவாரம், ''ஊனுகி உயிராகி அதனுள் நின்ற உணர்வாகிப் பிற அனேத்தும் நீயே ஆனுய்'' என்றும் ''திருவே, என் செல்வமே......... கண்ணே, கண்ணில் கருமணியே, மணியாடு பாவாய்'' என்றும்,

சம்பந்தர் தேவாரம், ''பத்திப்பேர் வித்திட்டு... ... ... பரம்பொருள் சேர்வார்தாமே தாமாகச் செய்யுர் அவன்'' என்றும்,

திருவாசகம், ''அவமா'' தேவா ... [illegible]ம் ஒழிந்து சிவமானவா பாடித் தெள்ளேன [illegible] டாமே!'' என்றும

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அப்பர் தேவாரம், ''தீயாகி, நீராகி... ... ... காயாகிப் பழமாகிப் பழத்தில் நின்ற இரதங்கள் நுகர்வானும் தானே ஆகி'' என்றும்,

அற்புதத் திருவந்தாதி, ''அறிவானும் தானே, அறிவிப்பான் தானே, அறிவாய் அறிகின்ருன் தானே, அறிகின்ற மெய்ப்பொருளும் தானே, விரிசுடர், பார், ஆகாசம் அப்பொருளும் தானே அவன்'' என்றும்,

கருவூர்த் தேவர் திருவிசைப்பா, ''மோதலைப்பட்ட... ... ... தாய் தலைப்பட்டு அங்கு உருகி ஒன்ருய தன்மையில், என்றும்,

திருவாசகம், ''வான்கெட்டு மாருத .... நான் கெட்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ'' என்றும், இவ்வாறு திருவாக்குகள் பலவாகும். மேலும் இது போன்று அருள்பெற்ற அடியார்கள் அருளிச் செய்த செயற்பாடுகளைச் சொன்னுல், அவை எண்ணற்றவைகள் ஆகும்.

எனவே, கொடுக்கும் பொருள், கொள்ளும் பொருள், கொடுப்போன், கொள்வான் ஆகிய எல்லாம், ஒரு பொருளின் இருவேறு இயல்பு என்பதை உணர்க. ஒன்றை நுகரும்போது, எல்லாம் சிவம், நுகர்பொருளும் சிவம், நுகர்பவனும் சிவனே என்பதால், இரண்டும் வேறு அல்ல. இத்தகைய அறிவு ஒருவனுக்கு உண்டாவது, மிகவும் அரிதாகும்.

நான் அவன் எனும் இது நவைவழி நல்வழி
தான் அவன் ஆகை, இது சாயுச்சியம்;
இத்திறன் தெளிய உய்த்திடும் அளவும்,
யாதொரு வகையால் நீதியதாகத்
தான் அறிவழியே தலைநின்று, என்றும்
ஊன்உயிர் சிவத்தில் ஒடுங்கிட நடத்தி,
மூடு முழுமலம் வீடும் காலைக்
கருவிகள் அளவில் புரிதரும் அறிவு
சாக்கிரம் கனவு நீக்கமில் சுழுமுனை
துரியம் என்று இவை பயில்தரும் அறிவு
துரியாதீதம் திரியாத் தன்மையில்
இறையருள் உதவும் கறையற மாறி
அறிவே யாகும் பிரியாக் கருவிகள்
நிறைமுதல் அவத்தையில் அறிவிலதாகத்
துரியாதீதம் தோற்றத்
திரியாதது நற்சிவகதித் திறனே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

ஆன்மாவும் சிவனும் என்று வேறாக நினைத்து இருத்தல் குற்றம் ஆகும். தான் என்று ஒரு முதல் அறச் சிவமே முதலாய் நின்று வருவதே சாயுச்சியம் ஆகும். இவ்வாறு நான் கூறும் இந்த உண்மை இவனுக்கு உறுதிப்படும் வரை, மக்கள் தாம் வாழ்வதே நியதியானது என்று எண்ணிக்கொண்டு, தம் அறிவுக்கு எட்டிய வழியில் சென்று, தம் உடலும் உயிரும் சிவத்தில் ஒடுங்கத்தக்க முறையில் நடந்து வரக்கடவர்.

அந்நிலையில் அவர்களது அறிவைப் பொதிந்துகொண்டு நிற்கும் ஆணவமலம் நீங்கும்; அப்போது நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம் என்னும் நான்கு நிலையிலும், கருவிகள் ஏறியும் இறங்கியும் நிற்கும். பின்பு கருவிகள் எல்லாம் ஒடுங்கி, ஒன்றும் அறியாமல் கிடக்கும் உயிர்ப்படக்க நிலை வரும். இது கேவலநிலை.

உயிர்ப்படக்கம் நீங்காமல் நிற்கும் நிலையில், இறையருள் இவனுக்கு உதவும்; அந்நிலையில் ஆணவமலம் நீங்கி, கருவிகளோடுகூடி அறிவாகவே நிற்கும்: இது சகலநிலை. இவனை விட்டு நீங்காமல் நின்ற முப்பத்தாறு கருவிகளும் கூடியிருக்கும் சாக்கிர அவத்தையில், எல்லாக் கருவிகளும் கழன்றுவிடும்; துரியாதீதம் தோன்றும்; அப்போது, அந்த நிலை நீங்காமல் நிலைபெற்று இருப்பதுவே சிவப்பேறு ஆகும். இது சுத்தநிலை, நிமித்த காரண பரிணாம வாதியின் கொள்கையினைச் சைவவாதி மறுக்கிறான்.

18. நிமித்தகாரண பரிணாமவாதி நிராகரணம்

திறம் பெற நீ இங்கு அறைந்தமை கருதில்
புவனம் யாவையும் புனிதனது உரு எனில்
அவன் முதற் காரணம் அன்றாம் என்னில்,
நிமித்த காரணம் இனி நிகழ்த்து என, நீ
அவனே காரணம் அனைத்தும் என்று அறைந்தனை;
மண்தனிக் குலாலன் தண்ட சக்கராதி
காரணம் மூன்றும் ஓர் பேர் அணைந்தது, இத்
தாரணி அதனில் கண்டது சாற்றுக;
அத்தன் இயற்றும் இத்தொழில் பிறர்க்கோ
தனக்கோ வீறோ எனக்கு ஈது இயம்புக;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வீண்எனில், பித்தர் மாண் உறு தொழில்போல்
தலைமையும் அறிவும் இலது என இகழ்வர்;
தனக்கு எனில், அஃதும் இசைப்பது ஒன்று அன்றே;
தன்போல் அறிஞரும் தலைவரும் இலரால்,
மின்போல் நிலைமையை வேண்டலும் பழுதே;
பிறர்க்கு எனில், பிறரும் பிறர்க்காம் பொருளும்,
பொருட்டு அமை கருவியும், அதற்கு உபாதானமும்,
செய்கையும் என்று ஓர் ஐவகைத் தானொடு
மாறாச் சைவர் கூறார் என்றால்,
நின் சித்தாந்தம் அவசித்தாந்தம்;
என் சித்து ஆன்ற அசித்தை மற்று ஈனுது,
அசித்து இலது என்னில், வசித்தது என் உலகில்?
உலகாயதனும் பூதக் கூட்டமும்
சலமேல் கொப்புள் தகும் எனச் சாற்றினன்;

தெளிவுரை:

நீ இங்குத் திறமையுடன் சொன்ன உன் கொள்கைகளை ஆராய்ந்ததில், இந்த உலகம் முழுவதும் சிவ வடிவம் என்றாய்; அவ்வாறாயின், உலகுக்கு அப்பாற்பட்ட சிவன், முதற்காரணம் ஆகவேண்டும். அவன் முதற்காரணம் அல்ல என்று நீ சொல்வாய் ஆயின், அவனை நிமித்த காரணம் என்று சொல் என்று நான் சொன்னபோது, நீ அவனே நிமித்த காரணம், துணைக்காரணம், முதற்காரணம் ஆகியன அனைத்தும் ஆவன் என்று சொன்னாய்.

மண் முதற்காரணம், குயவன் நிமித்த காரணம், தண்ட சக்கரங்கள் துணைக்காரணம் என்று மூன்று காரணங்கள் உள்ளன; அவ்வாறு இருக்கும்போது, மூன்றும் ஒரு காரணம் என்று உலகில் யாராவது சொல்லக் கேட்டிருக்கிறாயா? சொல். நிமித்த காரணம் சிவன், துணைக் காரணம் சத்திகள், முதற்காரணம் விந்து, மோகினி, மான் என்னும் கருவிகள் என்பனவே.

இறைவன் ஆற்றும் ஐந்தொழில், பிறர் பொருட்டா, அல்லது தன் பொருட்டா, இவை இரண்டும் இன்றி, பயன் அற்றதாகவா என்பதை எனக்குச் சொல்; இல்லையேல், நான் சொல்வதைக் கேட்பாயாக.

ஐந்தொழில் பயன் அற்றதாக வீணாகச் செய்தானாகில், அது பைத்தியக்காரர்கள் செய்வதைப்போல இருப்பதால் இறைவன் எல்லா முதன்மையும் பேரறிவும் உடையவன் அல்லன் எனக் கூறிப் பெரியவர்கள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அச்செயலை இகழ்வார்கள். இறைவன் தன் பொருட்டு ஐந்தொழில் செய்தான் என்றால் அதுவும் பெருமைக்குரியதன்று, தன்னைப் போலப் பேரறிவுடைமையும் எல்லா முதன்மையும் பிறர் ஒருவருக்கும் இல்லாமையால், இறைவன், மின்போல் தோன்றிமறையும் உலகத்தைத் தன் பொருட்டுச் செய்தான் எனக்கூறுவது இழுக்கு ஆகும்.

இறைவன் ஐந்தொழிலைப் பிறர் பொருட்டுச் செய்தான் என்றால், பிறர் என்று (1) ஒரு முதலும், அவர்க்கு வேண்டிய (2) பொருளும், அந்தப் பொருள்களை அவர்கள் அனுபவிக்கத் தக்க (3) கருவிகளும், அந்தக் கருவிகள் தோன்றுவதற்கு ஓர் (4) அடிப்படையும், அந்த அடிப்படையில் இருந்து (5) தோற்றுவித்தலும் செய்கின்ற சிவனோடும் கூட இந்த ஐந்து வகைக்கும் மாறாகச் சைவர்கள் சொல்ல மாட்டார்கள்; ஆதலால், நீ கொள்கின்ற சித்தாந்தம் சித்தாந்தமன்று என்று நீயே சொல்.

உலகம் முழுவதும், சிவனிடத்திலிருந்து தோன்றும் என்றாய்; சித்தாக உள்ள சிவம், அசித்தாக உள்ள உலகத்தைத் தன்னிடத்திலிருந்து தோற்றுவிக்காது. உலகம் அறிவற்றது என்று சொல்வதற்கு இல்லை, எல்லாம் அறிவுடைப் பொருளே என்று கூறுவாய் ஆயின், இந்த உலகத்தில் சடமாய் இருப்பதும் உள்ளது என்று நூல்கள் ஏன் கூறுகின்றன? உலகாயதன் கூட, இந்த உடல் முதலிய உலகத்தை, நீர்க்குமிழி போல நிலையற்றது என்று சொன்னான். அப்படியிருக்கையில், நீ இந்த உலகம் அறிவே வடிவானது என்று சொல்வது பொருந்தாது.

தீய கருமச் சீனர், சாவகர், பிறர்
நேயம் இல் என நிகழ்த்தினர் இலரே;
காண்டல் விரோதம், நிற்பிறர் கதித்திலர்;
ஈண்டுஉனது உரைக்கு மற்று யார் கரி? உடலும்
சித்தோ? சித்தின் சேர்வால் சித்து என்னில்,
கடபடாதியும் உடற்கண் சிதைவு என்?
தாவர உயிர்போல், தனு ஒழித்தவற்றுள்,
மேவிய உணர்வு விரவிடும் என்னில்,
சடத்து உயிர்போல் எனச் சாற்றினை; ஆகலின்,
உடற்கு உயிர் இறையை ஒழிந்து உண்டு அன்றே
தரு திட்டாந்தமும் தாட்டாந்திகமும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒருபொருள் ஆகில் உவமை பெறாதே.
ஒன்றே ஆகில் உடற்கு இறை தாபரத்து
ஒன்றிய நிலையில் விசேடம் என்உரைக்க,
பூதச் சேர்வைப் பேதம் என்று அறையில்
சேர்வைப் பேதம் என்கொடு செப்புக,
கருமத்து அளவில் வரும் எனில், பித்தர்
உரையில் திகழும் உணர்வு ஒழிந்தனையே;
கருமம் செய்வோன் கடவுள் அன்று; உடலும்
மருவி நின்று, இருவினை வாளா நுகரா;
கடவுளும் உடலின்கண் படல், துஞ்சல்
இடர், நலம் உறுதல், இறங்குதல், ஏறுதல்
எவ்வகையேனும் செய்கை இன்றாதலும்
பலகலை உலகில் நிலவுதலானும்
எண்ணரும் பொருளும் இரவியும் ஒழியக்
கண்என ஒன்று காண்கையினாலும்
பாசப் பகுதியும் ஈசனும் ஒழியப்
பசுவும் உண்டு என்று இசைய வேண்டின்றே

தெளிவுரை:

பொல்லாத் தொழில் செய்யும் புத்தர்கள், சமணர்கள், மற்றும் உள்ள பிற சமயிகள் அனைவரும், உடலில் அறிவு உண்டு என்று கூறுவர்; ஆனால் உன்னைப்போன்று உயிர் இல்லை என்று சொல்வார் எவரும் இலர். நடைமுறைக்கு மாறாக, நீ கூறுவதுபோல, புறச்சமயத்தவர்கள் கூட சொல்லவில்லை. இவ்வாறு ஆன்மா இல்லை என்று நீ சொல்வதற்கு, உனக்கு எவருடைய பிரமாணம் உள்ளது?

இந்த உடல் அறிவுடையதா? அறிவற்றதா? அறிவோடு கூடி துன்புறுதலினால், இந்த உடல் அறிவுடையது என்று நீ கூறினால், குடம், சட்டி, புடவை முதலியனவும் இந்த உடலைப்போல், அசைவு இன்றி கிடப்பதற்கு என்ன காரணம்? இறைவன் உடலில் செறிந்து இருப்பதுபோல், குடம், புடவை முதலியவற்றில் இல்லை என்று நீ கூறுவாய் ஆயின், உயிர் நிற்கும் உடம்புக்கும் உயிர் நில்லாத பிற பொருள்களுக்கும் உள்ள வேறுபாட்டைக் கூறி, உடலின் வேறாக உயிர் உண்டு என்பதை நீ ஒப்புக் கொண்டவன் ஆகிறாய்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மேலும், ஒன்றுக்கு உவமையாகக் கூறிய உவமானமும், அந்த உவமை பற்றி நின்ற உவமேயமும். ஒரு பொருளாய் இருக்குமாயின், 'பொன் போன்றது கொன்றை' என்று கூறப்படுவதைப்போல் உள்ளது. இதனை உலகம் ஏற்காது.(திட்டாந்தம் – உவமானம் – உவமிக்கும் பொருள்; தட்டாந்தம் – உவமேயம் – உவமிக்கப்படும் பொருள்.)

நீ கூறுவதுபோல், பரம்பொருள் எங்கும் நிறைந்து நிற்கையில், மரம் முதலிய தாவரங்களைக் காட்டிலும், மனித உடலில் மட்டும் சிறப்பாக உள்ளது என்று நீ கூறுவதற்கு என்ன காரணம்? இந்த உட்லில் பல்வேறு பூதங்கள் கூடி நிற்பதால், பரம்பொருள் இந்த மனித உடலில் மட்டும் சிறப்பாக உள்ளது என்று நீ சொல்வாய், ஆயின், பூதங்களின் கூட்டம் காரணமாக இந்த உடலில் பேதம் ஏற்பட்டது என்பாயாயின், அந்த வேறுபாடு இந்த உடலில் ஏன் வந்தது என்பதைக் கூறுவாயாக. பூத பேதத்திற்குக் காரணம் உடல் செய்யும் கன்மமே என்று கூறுவாய் ஆயின், நீ கூறுவது பித்துப் பிடித்துப் பேசுபவர் சொல்வதுபோல் உனது அறிவும் கெட்டுவிட்டது.

வினை செய்வது யார்? இறைவன் வினைசெய்வான் என்று கூறக் கூடாது; இந்த உடல் சடம்; எனவே காரணம் இன்றி உடல் ஊழ்வினையை நுகராது. இறைவன் மனவாக்குகளுக்கு எட்டாதவன்; எனவே அவன் கன்மத்துக்கு ஈடாக ஓர் உடலில் வந்து பொருந்தி ஊழை அனுபவித்துப் பின்பு அந்த உடலை விட்டு விடுவான், ஐந்தவத்தை உறுவான் என்று கூறுவது பொருந்தாது.

இந்த உலகத்தில் பல்வேறு கலைகள் எண்ணில்லாத பொருள்கள் இருக்கின்றன. இவற்றால் இறைவனுக்கு எந்தப் பயனும் இல்லை. உலகம் சடம்; எனவே அதற்கு இவை தேவை இல்லை. இந்த உலகப்பொருள்களை விளக்கிக் கொண்டு இருக்கும் சூரியனும் இந்த உலகில் இருக்கிறான். இந்தப்பொருள்களுக்கும் சூரியனுக்கும் நடுவே 'கண்' என்று ஒரு பொருள் இருந்து, இப்பொருள்களைக் கண்டு வருகிறது. இவ்வுவமையிலிருந்து, இறைவனும் உலகும் ஆகிய இரண்டு மட்டும் அன்றி, 'உயிர்' என்று ஒரு பொருள் உண்டு என்பதை அறிவாயாக.

இது எனும் ஒன்றை, அதுவாய்ப் படுத்து அது
பொதுமையில் நிற்கும் மாயையின் பொற்பு எனப்
பொற்பணி யாவும், பொன்ஆம் தன்மையின்
நிட்கள சகளத் திருவுரு நிலையும்
ஈசனே எனப் பேசுவர்; அன்றி
அருஉரு ஆகி வரும் உலகு; என்னில்,
அனைத்தும் மாயை எனத் தெளிகிலையே;
ஆவதும் ஆகாது ஒழிவதும் இலது எனும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பாவகம் உலகாயதனது பான்மை;
கள், கொலை, வெகுளி, காமம், களவுகள்,
உட்படும் இவைவிட மொழியாதார் இலர்;
சோமபானம், சுரா பானங்கள்,
ஆம்என மறைகள் ஆர்செவிப் பறைந்தன?
மறையோன் புலைச்சியை மருவும் என்பது
முறையோ எனில், அது புனைமொழி; என்னில்,
சாதி பேதம் நீ இனித் தவிரினும்,
மேதியை ஏறு விழையா; விரும்பும்
கண்ணினது உருவும் அதில்கதிர் ஒளியும்
நண்ணரும் சத்தின் நாடகம் எனில், அதற்கு
ஏதுவும் பயனும் ஓத வேண்டும்;
நின்மொழி விரோதம்; நீடுலகு இயற்கையும்
தன்ம சாத்திரமும் சகலமும் என்செயும்?

தெளிவுரை:

இஃது என்று சுட்டப்படுகின்ற ஒரு பொருளை, ஆன்மா அனுபவிக்கும் பொழுது அந்தப் பொருளேயாய்ப் பொதுவில் நிற்கும்; அவ்வாறு நிற்பது, மயக்கும் மாயையின் பெருமை என்று அறிவாயாக. பொன்னிலிருந்து உண்டாகும் அணிகலன்கள் அனைத்தும் அந்தப் பொன்னாகவே இருப்பதுபோல, இறைவனின் அருவ நிலையிலிருந்தே உருவநிலைகள் ஆகிய இச்சா ஞான கிரியா வடிவங்கள் தோன்றின என்று பெரியோர்கள் சொல்வார்கள்.

அதனை விடுத்து, அருவாய் உள்ள சிவம், உருவாய் உள்ள உலகமாய் இருக்கும் என்று நீ சொல்வாய் ஆயின், அது பொருந்தாது. உலகிற்கு முதற்காரணம் மாயை, சிவம் அன்று என்பதை நீ தெளிவாயில்லை. மேலும் இஃது ஆகும். இஃது ஆகாது என்னும் இவை இரண்டும் சைவர்களது கொள்கை அன்று; இஃது உலகாயதனின் கொள்கையாகும்.

மது அருந்துதல், கொல்வது, கோபித்துப் பேசுவது, பிறன்மனை நயத்தல், பிறர் பொருளைத் திருடுதல் முதலானவற்றையெல்லாம் ஆகாது, விட்டுவிடுங்கள் என்று சொல்லாமல் இருப்பவர் எவரும் இல்லை. மதுபானம்(சோமபானம்) வாசனை நீர்(சுராபானம்) அருந்துவது நல்லது என்று நூலிலும் சொன்னதாக யாரும் கேட்டதில்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வேதியன் ஒருவன், தாழ்குலத்தில் உள்ள ஒரு பெண்ணின் மீது ஆசைப்பட்டுக் கூடுவது முறையாகுமா? அப்பெண்ணைத் தீண்டுதல் ஆகாது என்று சொல்வதை விட்டு, அப்பெண்ணிடத்தில் அவன் இன்பம் துய்க்கவில்லையா? என்று நீ கேட்கிறாய். நீ சாதி, நீதி கொள்ளாவிடினும் இயற்கை விதிகளுக்கு உட்பட்டாய் ஆயினும், எருமையைக் காளை விரும்பாது. எனவே, ஞானிகள் அனைவரும் இயல்பாகவே தீயனவற்றை விரும்ப மாட்டார்கள் என்பதை அறிவாயாக.

கண்ணில் உருவும், அதில் தோன்றும் சூரிய ஒளியும் பெறுதற்கு அரிய சத்து ஆகிய சிவத்தின் நடிப்பாய் இருக்கும் என்று நீ சொன்னால், அவ்வாறு நீ கூறுவதற்குக் காரணம் கூற வேண்டும்; அதனால் சிவனுக்கு ஏதேனும் பயன் உண்டா என்பதையும் நீ கூறவேண்டும். உலகிற்கு அப்பாற்பட்ட சிவன் உலகை அனுபவிக்கிறான் என்று நீ கூறுவது பொருந்தாது. நிலை பேறுடைய இந்த உலகத்தில் இது நல்வினை இது தீவினை என்று ஞான நூல்களில் கூறியிருக்கும் நிலையில், ''ஆன்மா என்று ஒன்று இல்லை'' என்று நீ சொல்வாய் ஆயின் இவ்வாறு அந்நூல்களில் கூறியிருப்பதன் நோக்கம் யாது?

உலகு ஏழ் என இறை பலவாம் தன்மை
கடமொடு சராவம் கலசம் ஆதிகள்
அடல்உறு குயவன் ஆயினன் என்றால்,
தாமே ஆகா; அவைதான் ஆகான்;
ஆயினன் என்பது ஆக்கினன்; எனவே
ஆனாய் என்பது அனைத்தும் அவ்வவை
தான் ஆகாமையைச் சாற்றிடும் என்க;
தாமே எனும் இத்தனி ஏகாரம்
அழிந்திலர்; அதுவே ஆய்ந்திலர்; அதுவிட்டு
ஒழிந்திலர் பிறவிலர் எனும் இவை உணர்த்தும்;
காயும் பழமும் சுவையும் நுகர்வ
தாயவன் தானும் அவன் முதற்று என்னும்
அகிலமும் தெளிய அறிவோன் தானும்
அகிலமும் அறிஞரை அறிவிப்போனும்
அறிஞர்க்கு அறிவாய் அறிகின்றோனும்
அறிவிற்கு அறிபொருள் ஆவோன்தானும்
அகிலமும் மேனி ஆனவன் என்னும்
தருபொருள், கொள் பொருள், தருவோன், கொள்வோன்
ஒருபொருள் ஆயின், உவப்பு உண்டு என்க;
நுகர்வோன் தனக்கு நுகர்பொருள் வேண்டில்
இகல் அறுக்கிடை யாது ஒழிந்தது என்? நிரயமும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வேண்டார் ஆயினும் மெய்உறு வியாதிகள்
ஈண்டாது ஒழியாது; இறைக்கு இவை ஈடு அல
சத்தியும் சிவமும் தாமே நுகரும் என்று
இத்திறன் உணர்வு வந்து எய்துவது எவர்க்கே?
தமக்கே என்னில், தாம் உணராமையும், 100
அமைப்பு அற உணர்தலும் அவர்க்கு அடைவு அன்றே;

மேலும், 'உலகு ஏழு எனத் திசை பத்து எனத் தான் ஒருத்தனுமே பலவாகி நின்றவா'' என்ற திருவாக்கின் தன்மை குடத்தோடு கூடிய சட்டி, கலசம் முதலிய பாத்திரங்கள் எல்லாம் குயவன் ஆயினன் என்று சொன்னால், அது பொருந்தாது. குயவன் பாத்திரங்கள் ஆகினனல்லன்; பாத்திரங்களும் குயவனாகிறதல்ல.

''ஆயினன் என்பது ஆக்கினன் எனவே' என்று இலக்கணச் சூத்திரம் சொல்லுவதால், ''வானானாய், மண்ணானாய்'' என்று இப்படி 'ஆனாய்' 'ஆனாய்' என்று சொல்லப்படுவது எல்லாம், அந்தச் சிவன்தான் அந்த வானும் மண்ணும் ஆகான் என்பதைச் சொல்லுகிறது என்று அறிவாயாக.

தாமே தாமாய்ச் செய்யும் என்னும் ஒப்பற்ற 'ஏ' காரத்தோடும் கூடியிருக்கும் திருவாக்கு, தாங்கள் அழிந்தார்களும் இல்லை, அந்தச் சிவம் ஆனார்களும் இல்லை, அந்தச் சிவத்தை இன்றிச் செயற்பட்டார்களும் இல்லை, அந்தச் சிவத்திற்கு வேறாய் இருந்தார்களும் இல்லை என்று இவ்வாறாக உணர்த்துகிறது.

''காயாகிப் பழமாகிப் பழத்துள் நின்ற இரதங்கள் நுகர்வானும் தானே ஆகி'' என்னும் திருவாக்கு, காயும் பழமும் பழத்தின் இரதமும் அவனாலே உண்டாகியது. அந்த இரதங்களை உணர்வானும் அவனாலே உண்டானவன். ஆகையினால் அவை எல்லாம் சிவனாக உண்டானது என்று சொல்லும்.

எல்லாவற்றையும் தெளிவாக அறிபவனும் அவற்றை அறியத் தக்கவர்களுக்கு அறிவிப்பவனும் அறிகின்றவர்களுக்கு அறிவாய் நின்று அறிபவனும், அவர்களறிவுக்கு அறியப்படும் பொருளாய் இருப்பவனும், என்னும் திருவாக்கு சிவபெருமான் அனைத்தையும் தன் திருமேனியாக உடையவன் என்பதைக் கூறுகிறது.

ஒருவன் பிறர்க்குக் கொடுத்த பொருள், தான் கொண்ட பொருள், பொருளைக் கொடுப்பவன், கொள்பவன் ஆகியன எல்லாம் ஒரு பெ ாருளாய் இருக்குமாயின் மகிழ்ச்சியாகத்தான் இருக்கும். ஆனால் அது நடைமுறைக்குப் பொருந்துவதில்லை. அனுபவிக்கின்ற ஒருவனுக்கு, அனுபவிக்க வேண்டிய நேரத்தில் ஒரு பொருள், தட்டாமல் கிடைப்பதில்லை. எல்லாப் பொருளும் ஒரு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பொருளாய் இருந்தால் அவன் நினைத்தபோது அனுபவிக்க வேண்டாமோ? அஃது இயலவில்லையே? எனவே எல்லாம் ஒன்று என்பது பொருந்தாது; அவ்வாறுயின் நரக துன்பமே ஏற்படாது. எப்படி என்றுல், குன்மம், சூலை முதலிய நோய்களை அனுபவிக்க வேண்டா என்று இருந்தாலும், உடலில் பொருந்தி அந்த நோய்கள் அனுபவிக்கப்படாமல் நீங்கா, எனவே, எல்லாம் ஒன்று என்று நீ சொன்னதில் பொருள் இல்லை.

உயிர் என்று ஒன்று இல்லை. எல்லாம் சிவமே அனுபவிக்கிறது என்கிருய். வேண்டிய பொருள் கிட்டாமலும் வேண்டாத நோய்கள் வந்து வருத்துவதும் ஆன்மாவுக்கு ஏற்படுகிறதே அன்றி, இவையெல்லாம் சிவத்துக்கு உண்டாக மாட்டா. ஆன்மா இல்லை. எல்லா இன்ப துன்பங்களையும் சத்தி சிவங்களே அனுபவிக்கும் என்று நீ சொன்ன இந்தப் பேரறிவு இந்த உலகத்தில் எவர்க்கும் தோன்றுத ஒன்று!

இந்த அனுபவங்கள் எல்லாம், சத்தி சிவங்களுக்கே என்று நீ கூறினுல், அந்தச் சத்தி சிவங்கள் இந்த உலகத்தை அறியாததனுலும், அறியும்போது சுட்டி அறியாமல் தடையின்றி எல்லாவற்றையும் ஒருசேர அறிவதனுலும், இன்ப துன்ப அனுபவம் அந்தச் சத்தி சிவங்களுக்கு உண்டாவதில்லை என்பதை அறிவாயாக; இந்த இன்ப துன்ப அனுபவம் உயிர்களுக்கு மட்டுமே உண்டு என்பதையும் தெளிவாக அறிவாயாக. இது பிறப்பு நிலையை மறுத்தது.

நானும் அவனும் நவையும் நலனும்
தான்அவன் ஆகையும் நின் சாதனத்து இல்;
சகயோகத்தைச் சாயுச்சியம் எனப்
பகர்வது பதிபசு பாசத் தவர்க்கே;
யாதொரு வகைஎன ஓதியது இறைநூல்
சொன்னவற்று ஒன்று அன்று என்னில் வீடு எளிதே
தான்அறி வழியே தலைப்பொருள் பிடிக்கின்
மேல்நிகழ் பலமும் வீடு அளித்திடுமே;
நிலையாக் கருவியை நிலையாக் கருதிப்
புலை ஆடுதலும் உலகாயதன் பொருள்;
குட்டியம் இன்றி நற்கோலம் எழுதுதல்
இட்டம்அது ஆயின், கருவியும் இடங்களும்
கருத்துற உரைக்கத் தெரித்திடும் மதித்தது;
அறிவு ஒன்று இல்லோர்க்கு இறையருள் உதவுதல்
பிறவு அறிவு அரிய செறி இருள் இடத்து, ஓர்
அந்தகர் காண வந்தோர் எம்மை
நீவிரும் காணவேணும் என்று ஆங்கு
எடுத்து ஒருதீபம் கொடுத்ததை ஒக்கும்;
இச்செயற்கை இறைவன் கொச்சையன் அன்றே;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

எல்லாம் ஒன்று எனக் கூறும் உனக்கு, நான் என்னும் உயிரும், அவன் என்னும் சிவமும், நவை என்னும் குற்றமும், நலன் என்னும் நன்மையும், உயிர் சிவன் ஆக வேண்டும் என்பதும் இல்லை. சிவனோடு ஆன்மா கலந்து நிற்றல் என்பதைச் சாயுச்சியம் என்று சொல்வது முப்பொருள் உண்மை கொள்வோருக்கே பொருந்தும். தனக்குத் தெரிந்த வழியில் நிற்பதே முத்திக்கு ஏது. சிவாகமம் சொன்னவற்றுள் முத்திக்குரிய வழி ஒன்று அன்று என்று சொன்னால் எல்லோரும் எளிதில் முத்தி பெற்று விடலாமே! ஓர் ஆசாரியன் கற்பித்த வழியில் ஒழுகி வராமல் தன் அறிவுக்கு எட்டிய வழியே சிறந்தது என்று பிடிவாதமாக நின்றால், அந்த வழியிலும் முத்தி பெற்று விடலாமே!

நிலையில்லாத இந்தஉடலை, நிலையானது என்று எண்ணிச் செய்யக் கூடாதனவற்றையெல்லாம் செய்து கொண்டு வருகின்ற உலகாயதன் கொள்ளும் பொருளையெல்லாம் கூறிக் கொண்டு வருவது, சைவராக உள்ளவர்களுக்குக் கொள்ளத் தக்க பொருள் அன்று.

சுவர் (குட்டியம்) இல்லாமல் யாராலும் சித்திரம் எழுத முடியாது; உனக்கு விருப்பம் ஆயின், தனு கரண புவன போகங்கள் அனைத்தும் உயிர்களுக்காகவே என்று ஆகமம் கூறுவதை மதித்துத் தெளிவு பெறுவாயாக, தத்துவாதீதன் ஆகிய சிவனுக்கு இவை தேவை இல்லை என்பதை அறிவாயாக.

மேலும் ஏகதேச அறிவுகூட இல்லாத ஆன்மாக்களுக்கு, இறை அருள் அறிவைக் கொடுக்கும் என்று கூறினாய். அப்படி நீ சொல்வது எப்படி இருக்கிறது, என்றால், நீங்காத இருளில் இருக்கும் குருடன் ஒருவனைக் காணவந்தவன் ஒருவன், விளக்கைக் கொண்டுவந்து, அந்த விளக்கை அந்தக் குருடன் கையில் கொடுத்து, 'என்னை நீ காணவேண்டும்' என்று சொன்னபோது அவனைக் குருடன் கண்டான் என்று கூறுவது போல் இருக்கிறது. அறிவில்லாத ஆன்மாவுக்குத் தன் அருளைக் கொண்டு அறிவைக் கொடுத்த இறைவனும், அந்த ஆன்மாவைப் போல அறிவற்றவனாகவே இருக்கவேண்டும். (கொச்சையன் – அறிவற்றவன்).

கருவி வசத்தில் தெரிவுறக் காண
வேண்டுநர் இலரால் ஈண்டு அறிவு யாவும்
சிவமே என்று செப்பினை; அவம்உறு
பொறிபுலன் அறியா; அறிவது பிரமம்
என்றோர்க்கு, உன்போல் இடர்ப்படல் இலதே; 125
ஏற்றம் கருவி இருபதோடு இரண்டும்,
போற்றும் ஓர் அவத்தையும், புகல்திரி மலமும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஈசனும் உயிரும் பேசினே; அஃது ஒழிந்து
ஒன்றே ஆகும் என்ற நின் இயல்பு
தாயர், மனேவியர், தாதியர், தவ்வையர்
ஆயவர் எவரையும் ஓர்மையில் காணும்
கோகழி தூர்த்தர் கொடும் தொழில் தகுமே
ஆகமற்று அதன் அருள் நிலே, தன்நிலே
ஏக நாயகன் ஆகிய இறைநிலே
நாசம்இல் பாசம் வீசிய வியன்நிலே;
இனேயவை ஒன்றும் நினேவினும் இன்றி,
உண்டு எனும் உணர்வில் கண்டது கருதில்,
இழுக்கு எனும் புலன்வழி ஒழுக்கமும் அதுவாய்க்
கொண்டு பண்டையில் எண்தரு மடங்கு
வந்தவா செய்யத் தந்ததை அன்றே;
புன்மைகள் நீங்க, உண்மை கேள்மதி

தெளிவுரை:

கருவிகள் சடமாயிருப்பதால், இவற்றைக் கொண்டு, உடல் முதலிய உலகத்தைக் காண்பதற்குச் சிவஞானிகளாக இருப்பவர்களுக்குத் தேவை இல்லே. இங்கு இதனே அறிகின்ற அறிவு எல்லாம் சிவமே என்று நீ சொன்னுய்.

பொறி புலன்கள் சடம் ஆகலின், தாமாக எதையும் அறியமாட்டா. அவற்றை அறிவது பரபிரமம் என்று சொன்ன மாயாவாதிக்கு உன்னேப் போல இடர்ப்பாடு ஏற்படுவதில்லே. ஏனெனில், அவன் பிரமத்தை அறிவு என்றும் உலகத்தைச் சடம் என்றும் சொன்னுன்; நீயோ எல்லாவற்றையும் சித்து (அறிவுடையது) என்கிருய்.

அந்த மாயாவாதி பதினுலு கருவியும் நாலு அவத்தையும் சொன்னுன்; நீ அவனேவிட மேலாக, இருபத்திரண்டு கருவியும், சைவர்கள் கூறும் ஓர் அவத்தையும், மூன்று மலமும், கர்த்தாவும், ஆன்மாவும் உண்டு என்று சொன்னுய். அவற்றை எல்லாம் விட்டு, இப்பொழுது எல்லாம் அந்தச் சிவம் ஒன்றுமே என்று சொல்கிருய்; இவ்வாறு நீ கூறும் தன்மை எப்படி இருக்கிறது என்ருல், கூறுகிறேன், கேள்.

தன்னுடைய தாய், சிறிய தாய், பெரிய தாய் ஆகியவர்கள், தன் மனேவி, தமையன் மனேவி, தம்பி மனேவி ஆகியவர்கள், தன் வேலேக்காரி, தன் தங்கைமார், தமக்கைமார் ஆகிய இவர்கள் அனேவரையும் தன் மனேவியைப் பார்ப்பதுபோல, ஒரே தன்மையில் பார்க்கும் வரம்பு கடந்த (கோகழி) துன்மார்க்கனின் கொடிய செயலைப் போன்றதாகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நீ சொன்ன அறிவின் தன்மை இப்படி இருக்கையில், திருவருள் எல்லாவற்றையும் செயற்படுத்திவரும் முறைமை, ஆன்மா தனக்கு என சுவதந்திரம் இன்றி நிற்கும் முறைமை, இறைவன் எல்லாப் பொருளிலும் கலந்து நிற்பன் ஆயினும் தான் ஒன்றிலும் பற்று அற்று நிற்கும் முறைமை, அழிவில்லாத பாசம் அனைத்து உயிர்களின் அறிவையும் மறைத்து நிற்கும் முறைமை என்று இவ்வாறு சொல்லப்பட்டவை ஒன்றும் உன் நினைவில் இல்லாமல், ஆன்மாவுக்கு அறிவு இல்லை, சிவனே எல்லாவற்றையும் அறிகிறான் என்று உன் அறிவில் தோன்றியதை சிந்தித்துப் பார்த்ததில் ஒன்று புலனாகிறது. அது வருமாறு:

பொறி, புலன்களின் வழிச் செல்வது பொல்லாதது என்பதை விடுத்து, அவற்றின் வழிச் சிந்திப்பதே ஞான ஒழுக்கமாகக் கொண்டு, நீ பிறப்பு நிலையில் நடந்த ஒழுக்கமற்ற முறைகளைவிட இந்த முத்திநிலையிலே எண் மடங்கு ஒழுக்கமற்று நடப்பதை எண்ணி, உனக்கு இந்த மயக்கத்தைத் தந்த அஞ்ஞானத்தை வெறுப்பதன்றி, உன்னை வெறுப்பதற்கு வழக்கு இல்லை. இப்படிப்பட்ட அஞ்ஞானத்திலிருந்து நீ நீங்கத் தக்க முறையில், உனக்கு உண்மைகளைக் கூறுகிறேன் கேள்.

19. *சைவவாதி சங்கற்பம்*

அறிவாய் அறியும் அறிவுயர், கேவலத்து
அறிவிலன், இருளொடும் பிறிவு இலன்; அண்ணல்
கலைமுதலாக நிலவிய கருவிகள்
விளக்குஎன உதவும், துளக்கு அறப் பொருந்தி
இருவினை நுகர்வில் வருவினை செய்து
மாறிப் பிறந்து வருநெடும் காலத்து
இருள்மல பாகமும் சத்திநி பாதமும்
மருவுழி, அருள்உரு மன்னவன் அணைந்து,
செல்கதி ஆய்ந்து, பல்பிணிப் படுத்திக்
கருவியும் மலமும் பிரிவுறப் பிரியா
ஞானம் நல்கலும் தான் அது நோக்கித்
தன்னையும் அதனையும் தன்முதற் பொருளையும்
இன்ன என்று அறியா இருவரும் முயங்கி
ஒன்றாய் உறுபயன் உவப்பும்
இன்றாய் நிற்கும் இதுசிவ கதியே;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

அநாதியே அறிவாய் அறிந்துகொண்டு வருகிற அறிவாய் இருப்பதே ஆன்மா ஆகும். இத்தகைய ஆன்மாவிற்குக் கேவல அவத்தையில் சற்றும் அறிவு இல்லை. அந்நிலையில் ஆணவமலத்தோடு கூடி, நீக்கம் இன்றி நிற்கும்.

இப்படிக் கேவல நிலையில் கிடந்த ஆன்மாவுக்கு இறைவன், கலை முதலாக உள்ள கருவிகள் முப்பத்து ஒன்றையும் கண்ணுக்கு விளக்கிக் காட்டும் தன்மை போல் ஆன்மாவுக்குக் காட்டும்படி கூட்டினன். அந்தக் கருவிகளோடு கூடி பிராரத்த கன்மம் ஆகிய நல்வினை தீவினைப் பயன்களை நுகர்கின்ற நிலையில் ஆகாமிய கன்மத்தை ஆன்மா செய்தது.

இந்தக் கன்மத்துக்கு ஈடாக, அச்சுமாறிப் பிறந்து உழன்றது; இப்படி ஆன்மா நெடுங்காலம் பிறந்தும் இறந்தும் வந்தது. சிவபுண்ணியம் உண்டானதனால், ஆணவமலத்துக்குப் பாகமும், சத்திநிபாதமும் கூடிய நிலையில் இறைவன் அருளே திருமேனியாகக் கொண்டு, ஆசாரிய மூர்த்தமாக எழுந்தருளி வந்து ஆன்மா செல்லவேண்டிய நிலையை ஆராய்ந்து, சரியை, கிரியை, யோகங்களில் நிறுத்தினன்.

சரியை முதலிய சிவப்பணிகளில் ஆன்மாவை முற்றச் செய்து, கேவலம் சகலம் என்னும் இரு நிலைகளையும் நீக்கி, அநாதியே இவனை விட்டு நீங்காமல் உதவி வருகின்ற உண்மை ஞானத்தை இறைவன் ஆன்மாவுக்கு வழங்குகிறன்.

அந்நிலையில் ஆன்மா, ஞாதுரு ஆகிய தன்னையும், ஞானம் ஆகிய உண்மை ஞானத்தையும், அந்த ஞானத்திற்கு முதலாக உள்ள சிவத்தையும் சுட்டி அறியாமல், ஆன்மாவும் சிவமும் தன்னில் கூடி, இரண்டும் ஒரு முதலாய் உற்றதொரு பயனும் பிரியமும் ஆகிய இரண்டும் இன்றி, நிற்கும் நிலையே சிவசாயுச்சியம் என்று சொல்லப்படுவதாகும். இந்தச் சைவ வாதியைச் சைவ சித்தாந்தியார் மறுக்கிறார்.

20. சைவவாதி நிராகரணம்

இது கதியாக முதல் அறிவு உயிரேல்
பொறிபுலன் நீங்க அறிவு உயிர் அன்றே;
அடைகாய் நூறின் இடைசேர் சிவப்புஎன
இந்தியத் தொகையின் வந்தறிவு ஒன்று நின்று
இன்றும் என்றல் அன்றே எந்தை
அறிவிலன் அதீதச் செறிவில் என்று உரைத்த

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நின்மொழி விரோதமும் பின்முன் மலேவும்
மன்வயின் நிகழா; மலம் இருள்; இறைஒளி
தான்; அமர் விளக்கில் தகும் மருட்கலாதிகள்
ஈனம்இல் இவனிடத்து எவ்வாறு இசைந்தன?
இசைந்தது ஆயினும், இசையாது ஆயினும்
அசைந்திடும் முத்தி சாதனம் அவமே.

தெளிவுரை:

நீ இதுவரை சொன்னது முத்தி ஆயினும், நாம் கூறுவதைக் கேள் என்று சித்தாந்த சைவர் சைவவாதியை மறுத்துப் பேசுகிருர்.

ஆன்மா அநாதியே அறிவாய் இருப்பது என்ருய்; அவ்வாருயின், பொறி புலன்கள் நீங்கிய நிலேயில் உயிர்க்கு அறியும் இயல்பு இருக்கவேண்டும். பொறிபுலன்கள் கூடியபோது ஆன்மா அறிகிறது. அவை நீங்கும்போது ஆன்மா அறியாமை வயப்படுகிறது என்று நீ சொல்வாய் ஆயின், அஃது எப்படி இருக்கிறது என்ருல் பாக்கு, வெற்றிலே, சுண்ணும்பு ஆகியவற்றைக் கூட்டி இடித்ததும், அந்தக் கூட்டுப் பொருளின் ஊடே ஒரு சிவப்பு நிறம் தோன்றும்; அதுபோல, சடமாய் இருக்கும் பொறி புலன்களின் நடுவே ஓர் அறிவு தோன்றி உடனே அழியும் என்று ''கணபங்கம்'' சொன்ன புத்தனேப் போல் பேசுகிருய். (நூறு – சுண்ணும்பு)

மேலும், அறிவாய் அறிந்து வரும் ஆன்மாவுக்கு, மலத்தோடு கூடிய நிலேயில் அறிவு இல்லே என்று சொல்கிருய்; இது பேச்சுக்கு அழகன்று. ஆன்மாவை, ஒரு சமயம் அறிவு என்றும், பிறிதொரு சமயம் அறிவு இல்லாதது என்றும் முன்னுக்குப் பின் முரணுகக் கூறுவது நல்லவர்கள் குழுவில் கொள்ளத் தக்கதன்று.

ஆணவம் என்பது, முழு இருளாய் இருப்பது; இறைவன் என்பவன், பேரொளிப் பிழம்பாய் இருப்பவன்; உயிர்களுக்குக் கூட்டப்பட்ட விளக்குப் போன்ற கலே முதலிய முப்பத்தொரு தத்துவமும் மாயா கருவிகள், ஆகலின் மயக்கமாய் இருப்பன ஆகும். எனவே, இந்தக் கருவிகள், இருளாய் இருக்கும் கேவல நிலேயில், உயிர் அழிவின்றி நிற்கையில், உயிரினிடத்தில் இந்த மாயா கருவிகள் எப்படிப் பொருந்தின? கருவிகள் கூடி உயிரின் அறிவு விளங்கும் ஆயினும், கருவிகள் கூடாமல் உயிர் கேவலத்தில் கிடக்கும் ஆயினும், நீ கூறும் முத்தி சாதனம் பொருந்துமாறு இல்லே. இது பிறப்பு நிலேயை மறுத்தது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சத்திநி பாதமோ, தகுமல பாகமோ,
உய்த்த காரண காரியம் ஓதுக;
பாகம் காரணமாகில், மற்றது
காலாவதியில், காயாவதியில்,
மேலாம் என்னும் வினை உறும் அவதியில்
துயர் என உயிர்க்குத் தோன்றிடும் அவதியில்,
நயம்மிகும் இறையவன் நல்கிடும் அவதியில்
ஏதில் கூடும்? ஓதுக; இருவினை
ஒத்த எல்லையில் வைத்தனர் என்னில்
அருவினை தூக்க உருவினை நில்லாது;
ஒருவினை புரிகால் இருவினை ஆகா;
ஒப்புமாறு செப்புக; தேசிகன்
அருளுரு என்ற பொருளினை ஆயின்;
மாயா உருவினன், மாயா உருவினை
ஏயான்; ஏய்ந்தவா எம்மனோரே;

தெளிவுரை:

முன்பு, இருள்மல பாகமும் சத்திநிபாதமும் வாய்க்கும் போது என்றீர்; இதில் சத்திநிபாதம் காரணமாக மலபாகம் ஏற்பட்டதா? அல்லது மலபாகம் காரணமாகச் சத்திநிபாதம் ஏற்பட்டதா? இவை நிகழ்வதற்கான காரண காரியத்தை யாது என்று சொல்லும். மலபாகம் காரணமாகச் சத்திநிபாதம் ஏற்பட்டது என்றால், அந்த மலபாகம் ஏதாவது ஒரு காலத்தின் எல்லையில் உடம்பு நீங்கிய எல்லையில் (காயம் – உடம்பு; காயாவதி – காய அவதி – உடம்பு நீங்கிய எல்லை) முத்தி என்று இருக்குமே அது, எந்தக் காலத்தின் எல்லையில், எந்த உடம்பு நீங்கிய எல்லையில் ஒன்றுக்கு ஒன்று மேலாய் வரும் நல்வினை தீவினைகள் இரண்டும் ஒத்து, வினையொப்பு வரும் எல்லையிலா? அல்லது எத்தனையோ பிறப்புப் பிறந்து இப்பிறப்புத் துன்பம் என உயிர்க்குத் தோன்றும் எல்லையிலா? அல்லது அருளே வடிவாகிய இறைவன் இந்த உயிருக்கு இனிப் பிறவி தேவை இல்லை என்று அருள்வானே, அந்த எல்லையிலா? இவற்றில் எந்த எல்லையில் கூடும் என்று கூறுவீராக.

நல்வினை தீவினைகள் ஆகிய இருவினைகளும் ஒத்த நிலையில் மலபாகம் உண்டாகும் என்று பெரியோர்கள் சொல்வார்கள் என்று நீ சொன்னால், கன்மம் அருவமாக இருப்பதால், நல்வினையை ஒரு தட்டிலும் தீவினையை ஒரு தட்டிலும் போட்டு, இரண்டும் ஒத்ததோ என்று தூக்கிப் பார்ப்பதற்கு, அவை உருவமாகக் காணப்படுவதில்லை.

Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மேலும், ஒரு நல்வினை செய்கையில், அதில் தீவினை பாதியாகவும் நல்வினை பாதியாகவும் பகுத்து நில்லாது; ஒரு தீவினை செய்கையில், நல்வினை பாதியாகவும் தீவினை பாதியாகவும் பகுத்து நில்லாது; நல்வினை நல்வினையாகவே வரும்; தீவினை தீவினையாகவே வரும். எனவே, இருவினை ஒப்பு நிகழ்வது எப்படி என்று நீர் சொல்லவேண்டும்.

இஃது அன்றியும், ஆசாரியனுடைய வடிவு, அருள் வடிவாய் இருக்கும் என்று நீர் சொன்னதில் உள்ள பொருளை ஆய்ந்து பார்க்கும் பொழுது, இறைவனே என்றால் ஒருகாலும் அழியாத திருமேனியை உடையவன்; அவன் அழிந்து போகும் இந்த மாயா உடலைக் கொண்டு வரமாட்டான்; அப்படியில்லை, ஆன்மாக்களுக்கு அருளும் பொருட்டு இந்த மாயா உடலைத் தாங்கி வருவான் என்று நீர் கூறுவீராயின், அது பொருந்தாது. எவர் ஒருத்தர் இந்த மாயா உடலை உடையவரோ, அவர் நம்மைப் போன்று உயிர் இனத்தைச் சேர்ந்தவரே அன்றி, வேறு அன்று.

பல்பணி ஞான காரணம் என்னில்
தொல்பணி தொறும் பயன் தொடுப்பதனாலும்
ஒருபணி செய்யாச் சிரபுரச் சிறுவரும்
அரசர் ஆகிய தருணத் தலைவரும்
முதிர்பர சமயத்து இதம் உறும் அரசரும்
ஞானம் பெற்ற நன்மையினாலும்
ஈனம் இல்பணி அருட்கு ஏது அன்று என்றால்,
ஞான உற்பத்தி நிமித்தம் இத்தொழில் என
ஏனோர்க்கு இறைநூல் இயம்பிற்று என்னும்?
கருவியும் மலமும் பிரிவுற அருள்தரும்
என்றனை; கேவலத்து ஏதும் அறிவிலன்,
துன்றிய சகலத்து அருள்நிலை தோன்றாது;
எவ் அவத்தையில் இறைஅருள் பெருகுவம்?

தெளிவுரை:

பலவாறாகப் பேசப்படும் சரியை, கிரியை, யோகங்களைச் செய்தால் ஞானம் உண்டாகும் என்றால் பண்டு சொல்லப்பட்ட சரியா கிரியா யோகங்களைச் செய்து அது காரணமாகச் சாலோகம், சாமீபம், சாரூபம் என்னும் பதங்கள் கிட்டும் என்று திருவாக்குகள் கூறுகின்றன. "இவற்றுள் எந்த ஒரு தவமும் செய்யாத திருஞானசம்பந்தரும், வாலிபவயதிலேயே அரசராய் இருந்த சேரமான் பெருமாள் நாயனாரும், (தருணம் – வாலிபம்) வன்மையான அமண் சமயத்திலிருந்து நன்மையைத் தரும் சைவ சமயத்திற்கு வந்த திருநாவுக்கரசரும் ஆகிய இவர்கள், ஒரு பணியும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

செய்யாமல் ஞானத்தைப் பெற்ருர்கள். ஆகவே, குற்றமற்ற சரியா கிரியா யோகங்கள் ஞானத்துக்கு ஏது என்று சொல்லக்கூடாது என்று நீர் சொல்வீர் ஆயின், அது பொருந்தாது.

ஞானம் உண்டாவதற்குக் காரணமாய் இருக்கும் இந்தத் தொழில்களை இவை ஞானத்துக்குக் காரணம் அன்று என்று உம்மை அன்றி வேறு எவரும் கூறமாட்டார்; அவ்வாருயின் அருள் நூல்களில் அருளிச் செய்தன எல்லாம் என்னவாக முடியும்? எனவே சரியா கிரியா யோக சாதனங்களே ஞானத்திற்குக் காரணம் என்பதை அறிவீராக.

மேலும் அறிவாய் உள்ள கருவிகளும் அறியாமையாய் உள்ள மலமும் நீங்கிஞல் அருள் ஒளி உண்டாகும் என்று நீ சொன்ஞய். மலத்தொடக்கு உள்ள கேவல நிலையில் ஆன்மா ஒன்றையும் அறியாது; எனவே, அந்நிலையில் அருள் ஒளி உண்டாகாது. கருவிகளோடும் கூடி நிற்கும் சகல நிலையிலும் ஆன்மாவுக்கு அருள் ஒளி உண்டாகாது. ஆக, எந்த நிலையில் நிற்கும்பொழுது நமக்குத் திருவருள் கிட்டும்?

செவ்விய ஞான தெரிசனம் ஆவது,
நால்வகை மாயைப் பால் வருஞானம்;
பண்டை ஞானம் இது பறி தர வரக்
கண்ட ஞானம் இதுவாக் காணில்,
ஈனம் இல் ஞானிகள் என்போர் யாரும் இல்;
ஞான வேற்றுமை நாடலும் அரிதே
தானும் ஞானமும் தலைவனும் என்றனே;
ஆனபின் சிவனும் இவனது ஞானமும்
பாசமும் பாச ஞானமும் என்று இவை,
பேசுவர் ஒன்ருப் பெற்றிய ஆகலின்,
மும்மைப் பொருட்கும் மும்மைத் தன்மை
செம்மைத்து என்னில், செலவுகள் எழுதுக;
இருவரும் கூடி ஒருபயன் ஆய்த்து என்று
அருளினை இவ்வாறு அபேதிகள் நிலையே

தெளிவுரை:

மயக்கம் அற்று நீர் கண்ட ஞானம் ஆவது, தனுகரண புவன போகம் என்னும் நால்வகை மாயாகருவிகளோடு கூடி நின்று அறிந்து வருகின்ற ஞானம் ஆகும். இந்த ஞானம் எப்போதும் உள்ள ஞானம்; இந்த மாயா ஞானம் நீங்கத் தக்க முறையில் மேற்கொண்டு காணப்படும் ஞானம் இதுவேதான் என்று நீர் கூறுவீர் ஆயின், நீர் கூறுகிறபடி சொல்லும் ஞானவான்கள் மூன்று உலகத்திலும் இல்லை!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஞானத்தின் வேறுபாடு அறிவதற்கு எத்தனை பெருந்தவம் செய்திருக்க வேண்டும்? அஃது எளிதில் உண்டாகாது. மேலும் ஆன்மா, சிவஞானம், சிவன் என்று மூன்றாகச் சொன்னாய்; சிவனும் சிவனுடைய ஞானமும் என்று நீ சொன்னபடியே, ஆன்மாவும் ஆன்மாவினுடைய ஞானமும், பாசமும் பாசத்தினுடைய ஞானமும் என்று ஒன்றாகக் கூட்டிப் பெரியோர்கள் சொல்கிறார்கள்.

எனவே, இந்த மூன்று முதலுக்கும், மூன்று ஞானமும் உள்ளது; ஆக, அந்தப்பசு ஞானமும், பாச ஞானமும் எப்படிப் போயிற்று என்பதைச் சொல்லவேண்டும். இது தவிர, ஆன்மாவும் சிவனும் கூடி ஒரு முதல் ஆயிற்று என்று நீ சொன்னாய்; இவ்வாறு பிறப்பு நிலையில் இரண்டாய் இருக்கும் முதல்கள் முத்தி நிலையில் ஒன்றாய் இருக்கும் என்று சொல்லும் கொள்கை, மாயாவாதிகளது மதம் ஆகும்.

பதிபசு பாசம் முதிர் அறிவுகளுடன்
ஆறு முன்னர்க் கூறப் பின்னர்
இருபொருள் நீத்து மற்றொரு நால் வகையையும்
ஈனம் இல் ஞாதுரு, ஞானம், ஞேயம் என்று
இசைய மூன்றாய்ப் பசுபதி என்று அவற்று
இரண்டாய் இரண்டும் ஒன்றின் ஒன்றாகத்
திரண்டாம் பயன்எனும் திருவருள் தெளியில்
சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றும்
என்று இறை இயற்கை இயம்புதல் தகுமே;
ஒன்றும் என்றல் அன்றியும் உவப்பும்
இன்றாம் என்றால் என்பயன் இயம்புக;
என்றனை வினவும் யாவும் விளங்க
வென்றிகொள் கருத்தில் வேண்டினை ஆயின்
நதிக்கரை ஆன்எனக் கொதித்தல் மறந்து,
வெண்ணெய் அம்பதி திகழ் மெய்கண்டவன் அருள்
உள்நிலை உடையோன் ஒருவன் உரைத்த
தவப்பிரகாசத் தன்மையில் விரித்த
சிவப்பிரகாசச் செழுந்தமிழ் உண்மையை
அருளுடன் ஆய்ந்து கொள்ளத்
திருவருள் வினவல் திருந்திடும் அன்றே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

பதி, பசு, பாசம், பதிஞானம், பசுஞானம்,பாசஞானம் என்னும் ஆறுவகையாக முன்பு கூறி, பின்பு இந்த ஆறிலும் பசுஞானம், பாசஞானம் என்னும் இரண்டு பொருள்களை நீக்கி, நாலு ஆக்கி அந்த நாலு வகையையும், இதில் பாசம் ஒன்றையும் விட்டுக் குற்றமற்ற ஞாதுரு, ஞானம், ஞேயம் என்னும் பொருந்தத்தக்க மூன்று ஆக்கி, அவற்றுள் ஞானத்தை நீக்கிப் பசு, பதி என்னும் இரண்டு ஆக்கி, இந்த இரண்டும் ஒன்றில் ஒன்று சென்று கூடி, இரண்டும் ஒரு பயனாய் நிற்கும் என்று நீ சொல்கின்ற திருவருளைத் தெளியும் நிலையில்,

''இன்று எனக்கு அருளி இருள் கடிந்து
உள்ளத்து எழுகின்ற ஞாயிறே போன்று,
நின்ற நின் தன்மை நினைப்பு அற
நினைந்தேன்; நீ அலால் பிறிதுமற்று இன்மை,
சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து
தேய்ந்து ஒன்றும் திருப்பெருந்துறையுறை சிவனே,
ஒன்று நீ அல்லை, அன்றி ஒன்று இல்லை;
யார் உன்னை அறியகிற் பாரே''

என்று மணிவாசகர் இறைவனின் தன்மையை அருளிச் செய்தது, நீர் சொன்ன பொருளுக்கு இயைபு உடையதாகுமா? உமது கருத்துக்கு இது பொருந்தாது.

இஃது அன்றியும், பசுவும் பதியும் இரண்டு முதலாக இருக்கின்றன. இந்நிலையில் இரண்டும் கூடி, ஒரு முதல் ஆகும் என்று நீ சொன்னது குற்றம் மட்டும் அன்று; அவ்வாறு கூடுவதால் எந்தவித இன்பமும் இல்லை; பயனும் இல்லை; அவ்வாறாயின் இரண்டும் ஏன் கூடவேண்டும் என்பதற்கு நீர் என்னபதில் கூறுவீர்? சொல்லும்.

இந்த வினாவிற்குப் பதிலை நான் உமக்கு விளங்கும்படி கூறுகிறேன். உமது கருத்தில் இதைக் கொள்ள விரும்பினால் கேளும். காவேரிக் கரையில் உள்ள பசுவைப் போல, அங்கோ இங்கோ என்று பதறிக் கொண்டு திரிவதை விட்டு நான் கூறுவதைக் கேட்பீராக.

திருவெண்ணெய்நல்லூர் என்னும் திருப்படை வீட்டில், திருவவதாரம் செய்தருளிய மெய்கண்டதேவ தம்பிரானுடைய கருணையினால், உண்மையைப் பெற்ற மறைஞான சம்பந்த நாயனார் எனக்கு அருளிச் செய்த பொருளைக் கொண்டு, முற்பிறப்பில் செய்த தவத்தினால், நான் செய்த சிவப்பிரகாசம் என்னும் செழுந்தமிழ் நூலில் உள்ள பொருளை, குருநாதரின்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அருளோடு கூடி ஆராய்ந்தால், இந்தத் திருவருள் எப்படி இருக்கும் என்று நீ கேட்ட ஐயங்களுக்கு எல்லாம் உனக்கு விளக்கம் கிட்டும்.

வெண்பா

தராவலயத்து உள்ளோர்கள் தந்த சங்கற்ப
நிராகரணம் என்னுல் நிகழ்த்தும் – பிரானை இனி
வெம்பந்தம் நீங்கத் தொழுமின், வியன் மருதச்
சம்பந்தன் வந்து அருளும் தான்.

தெளிவுரை:

இந்த பூவுலகில் உள்ள சமயிகளாலே சொல்லப்பட்ட சங்கற் நிராகரணம் என்னும் சாத்திரத்தை, ஒன்றும் அறியாத என்னைக் கொண்(சொல்லுவிக்கும் என்னை உடையானுய் உள்ள என் ஆசாரியனை, இவ உங்களது பிறவித் துன்பம் நீங்குமாறு, தெண்டனிட்டு வழிபடுங்கள், சிறப் மிக்க மருதத்து ஊர்க்குத் தலைவனுய் உள்ள மறை ஞான சம்பந்த எழுந்தருளி வந்து உங்களுக்கு அருளை வழங்குவான்.

சங்கற்ப நிராகரணம்
தெளிவுரை முற்றும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.